www.pustaka.co.in

# இது காதலென்றால்...



இன்பா அலோசியஸ்


www.pustaka.co.in
இது
காதலென்றால்...
இன்பா
அலோசியஸ்

http://www.pustaka.co.in

# இது காதலென்றால்...

# Idhu Kaadhalendral...

Author:

இன்பா அலோசியஸ்

Infaa Alocious

For more books

http://www.pustaka.co.in/home/author/infaa-alocious

Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.

All other copyright © by Author.

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

## பொருளடக்கம்

அத்தியாயம் 1

அத்தியாயம் 2

அத்தியாயம் 3

அத்தியாயம் 4

அத்தியாயம் 5

அத்தியாயம் 6

அத்தியாயம் 7

அத்தியாயம் 8

அத்தியாயம் 9

அத்தியாயம் 10

அத்தியாயம் 11

அத்தியாயம் 12

அத்தியாயம் 13

அத்தியாயம் 14

அத்தியாயம் 15

அத்தியாயம் 16

அத்தியாயம் 17

அத்தியாயம் 18

அத்தியாயம் 19

அத்தியாயம் 20

அத்தியாயம் 21

அத்தியாயம் 22

அத்தியாயம் 23

அத்தியாயம் 24

அத்தியாயம் 25

அத்தியாயம் 26

அத்தியாயம் 27

அத்தியாயம் 28
அத்தியாயம் 29
அத்தியாயம் 30
அத்தியாயம் 31
அத்தியாயம் 32
அத்தியாயம் 33
அத்தியாயம் 34
அத்தியாயம் 35
அத்தியாயம் 36
அத்தியாயம் 37
அத்தியாயம் 38
அத்தியாயம் 39
அத்தியாயம் 40
அத்தியாயம் 41
அத்தியாயம் 42
அத்தியாயம் 43
அத்தியாயம் 44
அத்தியாயம் 45
அத்தியாயம் 46
அத்தியாயம் 47
அத்தியாயம் 48

[அத்தியாயம் 49](#)

[அத்தியாயம் 50](#)

[அத்தியாயம் 51](#)

[அத்தியாயம் 52](#)

[அத்தியாயம் 53](#)

# 1

உன்னை பார்த்ததும் என் இமைகள்

வண்ணத்துப் பூச்சியின் சிறகாய்

மாறுகின்றதே

இது காதலென்றால்....................

ஆலய மணியின் ஓசையில் துயில் கலைந்து எழுந்தான் நம் கதையின் நாயகன் சுஷின்(சுஷின் தேவ் ) . காலை நேர பரபரப்பு தொற்றிக் கொண்டது அவனை . வேகமாக எழுந்து ப்ரெஷ் செய்துவிட்டு ஜாகிங் போக தயாராகி கிழே இறங்கி வந்தான் . அவனது அப்பா அவனுக்கு முன்பாகவே தயாராகி இருந்தார்.

"குட் மோர்னிங் டாட் நானும் டெய்லி உங்களுக்கு முன்னாடி கிளம்பணும்னு பார்க்கிறேன் முடியவே மாட்டிங்கே ஹம் " போலியாக அலுத்துக்கொண்டான் .

"குட் மோர்னிங் மை சன் . உனக்கு ஜாகிங் ஆறு வருட பழக்கம் . ஆனால் எனக்கு .................." தன் மகனை பெருமை பொங்க பார்த்து சிரித்தார் சுந்தரம். இவர்களின் உரையாடலை கேட்டபடி வந்தார் சுலோச்சனா.

"போதுமே உங்க பெருமை. பெத்த பையன் கிட்ட பேசுற மாதிரியா பேசுறிங்க என்னமோ கம்பெனி மீட்டிங்ல பேசுறமாதிரி பெருமையப் பாரு"

"ஏன் சுலோ நான் பெருமையா பேசுனா உனக்கு பொறுக்காதே. அதைவிட நான் உன் பையன் கிட்ட பேசுனா உடனே உனக்கு மூக்குல வேர்க்குமே."

"அதுக்குதான் உங்க செல்ல பொண்ணு இருக்காளே உங்களுக்கு".

"என்ன காலைலயே என் தலை உருளுது". அம்மா உன் புருஷன ஏதாவது சொல்லுறதா இருந்தா டிரெக்டா சொல்லு அதவிட்டுட்டு என்ன ஏன் இழுக்குற".

"வாடி என்ன ஒரு டிக்கெட் குறையுதேன்னு பார்த்தேன். வந்துட்டியா"

"அம்மா நீ டீச்சரா இல்ல கண்டெக்டரா "

"உனக்கு எதுக்குடி இப்படி ஒரு சந்தேகம்"

"இல்ல என்னை டிக்கெட்ன்னு சொன்னிங்களே அதுதான்"

"என்னங்க உங்க பொண்ண பார்த்திங்களா.............." அவர் திரும்பி பார்க்கும் போது சுஷினும் சுந்தரமும் அங்கு இல்லை.

ஷிஜி வாயை மூடி சிரிப்பை அடக்கி கொண்டிருந்தாள். "என்னடி சிரிப்பு பேசிட்டு இருக்கும் போதே சொல்லாம போறது. வரட்டும் இன்னைக்கு ரெண்டு பேருக்கும் சாப்பாடு கிடையாது". " நீ அவங்க கூட போகலையா".

"நானும் போகணும்னு தாம்மா வந்தேன் ஆனா பாருங்க உங்களுக்கு கம்பெனி குடுக்க சொல்லி கண்ஜாடை காமிச்சுட்டு அவங்க எஸ் ஆயிட்டாங்க".

"ஓ பேசும்போதே இந்த வேலை எல்லாம் நடக்குதா".

"அம்மா நீங்க டீச்சர் வேலையை விட்டு எத்தனை வருஷம் இருக்கும்".

"ஏண்டி பேசிட்டு இருக்கும் போதே இப்படி ஒரு கேள்வி".

"சொல்லுங்கம்மா"

"என்ன ஒரு பதினைந்து வருஷம் இருக்கும்".

ஷிஜி கொஞ்சம் தூரமாக போய் நின்று கொண்டு "ஆனாலும் உன் டீச்சர் புத்தி உன்ன விட்டு போகலையேம்மா . நடு வீட்டில் எல்லோரையும் நிற்க வச்சு கேள்வி கேட்ப்பது. பதில் சொல்லலைன்னா தொரத்தி தொரத்தி அடிக்கிறது."

"ஷிஜி என்கிட்டே வராமலா போய்டுவ உன்னை அப்போ வச்சுக்கறேன்".

சரி நாம இவர்களை விட்டுட்டு நம்ம ஹீரோவை பார்ப்போம்.

சுஷின் 26 வயது இளம் தொழில் அதிபன். 6 அடி 2 அங்குலம் வளர்த்தி. அடர்ந்த புருவங்கள், கூர்மையான நாசி. கண்கள் பார்ப்பவர்களை துளைத்துவிடும். புருவத்துக்கு ஏற்றபடி அடர்த்தியான மீசை. நிறம் மாநிறம்தான் ஆனாலும் உடுத்தும் உடை அதை ஈடு கட்டிவிடும்.

தந்தையின் கிரானைட் எக்ஸ்போட் பிசினஸ் ஐ 3 வருடமாக எடுத்து நடத்தி வருகிறான். தந்தை இந்தியாவில் மட்டும் செய்ததை இவன் வெளி நாட்டிற்க்கும் ஏற்றுமதி செய்கிறான். இந்த வருடம் இளம் தொழில் அதிபர் விருது இவனுக்குதான் கிடைக்கும் என்று பேசிக்கொள்கிறார்கள்.

பெண்களிடம் எப்பொழுதும் ஒரு கண்ணியதுடனே பழகுவான். பார்வையில் கூட அது வெளிப்படும். அதனாலோ என்னவோ பெண்கள் இவனிடம் தங்கள் காதலை விட நட்பையே அதிகம் யாசித்தனர்.

இவனுக்கு ஒரு பெண்ணின் மீது காதல் வந்தால்.................. பார்ப்போம்..................

## 2

உன் பார்வையை சந்திக்கும்

உணர்வை விட

உன் பார்வை என்னை தொடரும்

உணர்வு சிலிர்க்கவைக்கிறதே

இது காதலென்றால்..................

அம்மா, நான் உங்கள எவ்வளவு நேரமா கூப்பிட்டு இருக்கேன். நீங்க என்னன்னு கேக்காம இருக்கீங்க". நம் கதையின் நாயகி மினி (மினிலா )தாங்க அவ அம்மாவை கூப்பிட்டு இருக்கா. வாங்க நாம என்னன்னு கேட்க்கலாம்.

"மினி என்னடா நானும் என்னன்னு கேட்டு ரொம்ப நேரம் ஆச்சு பதில் சொல்லாமல்..........." மினியின் அறைக்கு சென்ற மீனாட்சி தன் மகள் நின்ற கோலத்தை பார்த்து அதிர்ந்து போனாள்.

"மினி, என்ன இது டவல் மட்டும் கட்டிக்கிட்டு நடு ரூம்ல நிக்கிற. ஹையோ உனக்கு செல்லம் குடுத்து ரொம்பதான் நான் கெடுத்து வச்சுட்டேன். போய் முதல்ல டிரஸ்ஸ போடுடி.

"அதுக்கு தான்மா உங்கள கூப்பிட்டேன்".

"எதுக்கு உனக்கு டிரஸ் மாத்தி விடவா. நீ என்ன பாப்பாவா. கொஞ்சம் கூட வெட்க்கம் இல்லாம என்னடி இது". கட்டி குடுத்தா ரெண்டு புள்ள பெத்துஇருப்ப. இன்னும் சின்ன புள்ளன்னு நினைப்பு.

"போம்மா உனக்கு எப்போ பார்த்தாலும் கிண்டல்தான்".

"யாரு நான் கிண்டல் பண்ணுறனா. அட ராமா...................."

"இப்போ எதுக்கும்மா பக்கத்துக்கு வீட்டு ராம கூப்பிடுற"

"ம்............ நீ நிக்க கோலத்துக்கு அவன குப்பிட்டு..............." மீனாட்சி தன் தலையில் அடித்துக் கொண்டாள்."சரி நீ எதுக்கு கூப்பிட்ட அத சொல்லு முதல்ல".

"இத வந்த உடனே கேக்காம............ என்னோட பிங்க் சுடிய காணோம். அதை தேடி தரத்தான் உங்களை கூப்பிட்டேன்".

"உன்கிட்ட வேற சுடியே இல்லையா.............. ஏதாவது ஒண்ண போட வேண்டியது தானே".

"இன்னைக்கு எனக்கு எக்ஸாம் அது என்னோட செண்டி மென்ட் சுடி அதுதான் கேட்டேன்".

மகள் நின்ற கோலத்தை பார்த்து வேகமாக உள்ளே சென்று பீரோ வில் இருந்து அந்த சுடிதாரை எடுத்து கொடுத்து விட்டு மகளை நினைத்து கலக்கத்துடனே சென்றாள் மீனாட்சி.

மீனாட்சியின் கணவர் ராம் இறந்து 15 வருடம் ஓடிவிட்டது. தனி ஒரு மனுசியாக இருந்து மினியை வளர்த்து ஆளாக்கி விட்டார். தாயின் அரவணைப்பை கொடுக்க முடிந்த அவரால் தந்தையின் கண்டிப்பை காட்டமுடியவில்லை. தன வாழ்வின் ஆதாரம், தனக்கு இருக்கும் ஒரே சொந்தம், தந்தை இல்லாதவள் என்ற நினைப்பே அவளிடம் கண்டிப்பை காட்ட முடியாமல் செய்து விட்டது.

மீனாட்சிக்கு ஓர் தம்பி பெயர் விவேக். பேருக்கும் ஆளுக்கும் சம்பந்தமே கிடையாது. இவன் பண்ணுற வேலைக்கு நித்யானந்தான்னு வச்சு இருக்கணும். அவ்வளவு நல்லவன் பெண்கள் விஷயத்தில். இவன் பாதிநாள் இருப்பது ஜெயிலில் தான், ஆகவே இவன் தம்பி என்று இருந்தும் எந்த உபயோகமும் இல்லை. இவனைப் பற்றி ஏன் இவ்வளவு சொல்லுறேன்னா நம்ம மினிக்கு ஷாக் குடுக்கப்போறதே இவன்தான்.

மினி தவறான வழிக்கு செல்பவள் அல்ல ஆனால் அவளது விளையாட்டு குணம், பிடிவாதம் மீனாட்சியின் வயிற்றில் புளியை கரைத்தது.

மினி ரெடி ஆகி வர முன்னாடி அவளை பற்றி பார்ப்போமா. மினி B.Sc கணிதம் இரண்டாம் வருடம் படிக்கும் கல்லூரி மாணவி. அழகு என்றால் என்னவென்று இவளை பார்த்து

தெரிந்து கொள்ளலாம். கொஞ்சம் இல்லை ரொம்பவே வெகுளி. பிடிவாதம் ரொம்ப ஜாஸ்தி. என்ன சொன்னாலும் கொஞ்சம் மாற்றி புரிந்து கொள்வாள்.

"அம்மா சீக்கிரம் வாங்களேன்". மினியின் குரல் எட்டு வீட்டிற்கு கேட்பதுபோல் ஒலித்தது. இவளது அலறலைக் கேட்டு மறுபடியும் மீனாட்சி வேகமாக வந்தார்.

"எதுக்குடி இப்படி கத்தி கூப்பாடு போடுற".

"நான் உன்கிட்ட டிரஸ் எடுத்துத்தரச் சொல்லும்போது நீ ராம ஏன் கூப்பிட்ட". இது இப்போ ரொம்ப அவசியமா என்பதுபோல் மீனாட்சி பார்க்க, இதுக்கெல்லாம் மசிவேனா நான் என்பதுபோல் பார்த்தாள் மினி.

"ம்ம்ம்ம்ம்ம்................ உனக்கு டிரஸ் எடுத்து தரச் சொல்லலாமேன்னுதான்".

"போங்கம்மா கொஞ்சம்கூட விவரமே பத்தாது உங்களுக்கு".

மகளுக்கு தான் சொல்லவந்தது புரிந்து விட்டதோ என அவர் பார்க்க. உன்னை அவ்வளவு சீக்கிரம் சந்தோசப்பட விட்டேனா பார் என்பது போல், "என் கபொட்ல பிங்க் கலர் சுடிதார் எங்க இருக்கும்னு அவனுக்கு எப்படிம்மா தெரியும்". எனக் கேட்கவும் மீனாட்சி தன் தலையிலேயே அடித்துக் கொண்டார்.

"ஏண்டி, எக்ஸாம்க்கு அவசரமா கிளம்பிகிட்டு இருக்கும்பொது வரவேண்டிய சந்தேகமாடி இது. நான் அடுப்பு வேலைய விட்டுட்டு என்னமோ ஏதோன்னு வந்தா, உன்ன என்ன சொல்லிடி திருத்த.

"போங்கம்மா நீங்க திருத்த நான் என்ன பரீட்சை பேப்பரா"

"இதுமட்டும் சரியா சொல்லிடு".

"வேற எதை நான் சரியா சொல்லல".

"மினி, இப்போ நீ ஒழுங்கா வாயை மூடிட்டு கிளம்பி வரல என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது". மீனாட்சி சமையல் அறைக்குள் புகுந்து கொண்டார்.

ஜாகிங் முடித்து சுஷினும் சுந்தரமும் வீட்டிற்குள் வரும்போதே வீடு அமைதியாக இருந்தது.

"சுஷி என்னடா வீடே ரொம்ப அமைதியா இருக்கு.

"என்னப்பா நானும் உங்க கூட தானே வாரேன். எனக்கு என்னமோ எல்லாம் தெரியும்ங்கற மாதிரி என்கிட்டயே கேக்கறிங்க".

"அதுவும் சரிதான்".

இவர்களை பார்த்து ஷிஜி வேகமாக வெளியே வந்து " என்ன ரெண்டு பேரும் இப்படி முழிக்கிறிங்க. புயல் இன்னும் கரையை கடக்கலை உள்ளேதான் மையம் கொண்டு இருக்கு".

"ஓ............ அப்பா நான் முதல்ல போறேன் அப்புறமா நீங்க வாங்க சரியா இல்லன்னா எனக்கும் சேர்த்து காபி கிடைக்காது"

"அட போடா நீவேற நான் வந்தா மட்டும் எனக்கு காபி தந்துடுவாளா. சர்க்கரை போடாம சுடுதண்ணி தருவா எனக்கு இன்னைக்கு சுடு தண்ணி வேண்டாம்".

ஷிஜி,"அப்பா இதை அப்படியே அம்மாகிட்ட சொல்லவா".

"இல்லன்னா ஒண்ணு பண்ணலாம். எல்லோரும் போய் நேரா பெஞ்ச் மேல ஏறி நின்னுடலாமா". சுஷினும் , ஷிஜியும் இதெல்லாம் ஒரு பேச்சா என்பதுபோல் பார்க்க உடனே..............."உங்க அம்மாவை சமாதானப் படுத்தான்................." என்று இழுக்க.

"ஏம்ப்பா உங்களுக்கு போயும் போயும் ஒரு டீச்சர் தான் கிடைச்சாளா கல்யாணம் பண்ண. இப்ப பாருங்க உங்க கூட சேர்ந்து நாங்களும் கஷ்டப்படுறோம்".

"இத உங்க அம்மா காதுல விழுற மாதிரி சொல்லிடாத. அப்புறம் சாப்பாட நாம எல்லோரும் மறந்துட வேண்டியதுதான்".

"பேசாம நீங்க அம்மாவை டிவோஸ் பண்ணிடுங்க. உங்களுக்கும் நல்ல காபி கிடைக்கும். எங்களுக்கும் நல்ல அம்மா கிடைப்பாங்க". என்ன நான் சொல்லுறது".

"அப்பா................" சுஷின்.

"டேய், நீ சும்மா இருடா. அதும்மா நானும் பண்ணிடலாம்னுதான் பார்த்தேன்.................. ஆனா.......... அப்படி தெரியாத்தனமா உங்க அம்மாகிட்ட சொல்லிட்டேன். அவ அதுக்கு என்ன பண்ணுனா தெரியுமா".

"என்னப்பா குச்சிய வச்சி அடி பின்னிட்டாங்களா.........................." ஷிஜி வயிற்றை பிடித்துக்கொண்டு சிரித்தாள்.

"ஷிஜி, ரொம்ப சிரிக்கிற பின்விளைவுகளை யோசிச்சு பார்" சுஷின்.

"போண்ணா............. அப்பா நீங்க கண்டினியு பண்ணுங்க............ அப்படிதான் செஞ்சாங்களா".

அப்படி செஞ்சு இருந்தாதான் பரவா இல்லையே என்ன உட்க்காரவச்சு குடும்பம்னா என்ன அதோட அருமை, பெருமை பத்தி ஒரு நாள் புல்லா கிளாஸ் எடுத்தா............. "

ஹா.........ஹா............ ஷிஜி சிரித்துக் கொண்டே திரும்பினால். அவளது சிரிப்பு பாதியிலேயே நின்றது. பரிதாபமாக தனது அண்ணனை பார்த்துக் கொண்டு அவனது முதுகின் பின்னால் மறைந்து கொண்டாள்.

சுந்தரம் இன்னும் பேசிக்கொண்டே இருந்தார். நிலைமை கை மீறி போய் விட்டதை அறிந்து ..............

"அப்பாஆஆஆ.................." சுஷின்.

"டேய் பேசிட்டு இருக்கும் போது கீறல் விழுந்த ரெகார்ட் மாதிரி..................." சுஷினின் பார்வை சென்ற இடத்தை பார்த்த சுந்தரத்துக்கு மயக்கம் வரும்போல் இருந்தது.

அங்கே சுலோச்சனா பெரிய மூச்சுகளை விட்டு தனது கோபத்தை அடக்கிக் கொண்டு நின்று கொண்டிருந்தாள்.

சுஷின் நிலைமையை சம்மளிக்கும் பொருட்டு ," அம்மா இன்னைக்கு என்ன டிபன் மா............. வாசனை இங்க வரைக்கும் வருது. பூரி குருமாவா".

சுலோச்சனா எதுவும் சொல்லாமல் வீட்டிற்க்குள் சென்று தனது ரூமை பூட்டிக் கொண்டாள்.

சுந்தரம்,"என்னடா இது இன்னைக்கு முளிச்ச முழியே சரி இல்லபோல".

"அப்பா செய்யிறதெல்லாம் நீங்க செஞ்சுட்டு இப்போ முழிய குறை சொல்லுங்க.............."

ஷிஜி," என்னண்ணா இப்படி ஆயிடுச்சு இப்போ என்ன பண்ண. ஏற்க்கனவே நாம எல்லோரும் சேர்ந்து அவங்கள ஒதுக்கறோம்னு சொல்லுவாங்க. நீயாவது அவங்க வந்த உடனே சொல்லி இருக்கலாம் இல்ல.............."

சுஷின்," சொல்லி இருக்கலாம் இல்லவா.............. நானும் அப்பா அப்பான்னு சிக்னல் குடுக்குறேன் கண்டுக்காம பேசிட்டு என்ன குறை சொல்லுறியா ".

ஷிஜி," நீ அப்பா அப்பான்னு சொன்னதுக்கு பதிலா அம்மான்னு ஒருதடவ சொல்லி இருந்தா போதும் இந்த பேசும் நடந்து இருக்காது. அம்மாவும் மூட் ஆப் ஆயிருக்க மாட்டாங்க ".

சுஷின்," நடந்தத மாத்த முடியாது. இனிமேல் என்ன பண்ணலாம்னு யோசிப்போம். அப்பா என்ன சொல்லுரிங்க".

"நீங்கதான் சின்ன புள்ளைங்க நான். சே........ இதுவரை நான் அவளை இப்படி கஷ்டப்பட விட்டதில்ல. என்ன ஆனாலும் சரி நான் முதல்ல போய் அவள பார்க்கிறேன் . நீங்க அப்புறமா வாங்க".

அருமையா தொடங்குன காலை வேளை இப்படியா ஆகணும்.

"அண்ணா வா நாமளும் போகலாம் அம்மா பாவம். ரொம்ப கஷ்டப்படுவாங்க".

"இப்போ சொல்லு கஷ்டப்படுவாங்கன்னு பேச முன்னாடி யோசிச்சு இருக்கணும். சரி வா ".

ரூமில் சேரில் தலை கவிழ்ந்து அமர்ந்திருந்தாள் சுலோ. மூவரும் வந்து நின்றனர்.

"சுலோ........... "

சுந்தரம் அழைத்தார். அந்த அழைப்பை கேட்டு தலை நிமிர்ந்து பார்த்தார். அவளது கண்கள் கலங்கி இருந்தன. இவ்வளவு நாளும் என்னதான் கேலி செய்தாலும் அவர் இவ்வளவு கலங்கி பார்த்ததில்லை. கொஞ்ச நேரம் யாரிடமும் பேசமாட்டார். பிறகு எதுவும் நடவாததுபோல இருந்து விடுவார். ஆனால் இன்று அவரது விழிகள் கலங்கி இருந்ததை பார்த்ததும் மூவரும் ஆடித்தான் போய் விட்டனர்.

"சுலோ..........." "அம்மா..............." அனைவரும் ஒரே நேரத்தில் அழைத்தனர்.

# 3

இதழை இதழால் தீண்டும்

இன்பத்தை விட

உன் பார்வை தீண்டும் இன்பம்

என் இதயத்தை அதன்

இயக்கத்தை உறையவைக்கிறதே

இது காதலென்றால்.............

சுஷின்,"அம்மா............ என்ன இது சின்ன புள்ள மாதிரி கண்ணெல்லாம் கலங்கிகிட்டு"

சுலோ,"ஏன்டா உங்க எல்லோர் சந்தோசத்தையும் நான் கெடுக்கிறேனா? அதுவும் ஷிஜி சொன்னா பாரு............என்ன டிவோஸ் பண்ண சொல்லி. நான் ஏன் இவ்வளவு கண்டிப்பா இருக்கேன்னு உன் அப்பாவுக்கே தெரியாத போது.............. உங்கள சொல்லி என்ன செய்ய. நான் இருக்குறது உங்களுக்கு பிடிக்கலன்னா நான் ஏதாவது ஒரு ஆஷ்ரமத்துக்கு போய்டுறேன். நீங்க மட்டும் இருங்க போதுமா.

ஷிஜி,"அம்மா........... நான் சும்மாதாம்மா சொன்னேன். ஒரு ஜாலிக்குதாம்மா".

சுலோ," எதுடி ஜாலி என்ன டிவோஸ் பண்ண சொல்லுறதா. நான் ஏன் உன்கிட்ட கண்டிப்பா இருக்கேன்னு உனக்கு தெரியாதா?".

சுஷின்,"அம்மா எங்க எல்லோருக்குமே தெரியும்மா. அப்பா கண்டிப்பு கிடையாது செல்லம் கொடுத்து எங்கள கெடுத்து வச்சுடுவார்.சோ........... நீங்க எங்கள நல்வழி படுத்த வேண்டி கண்டிப்பா இருக்கீங்க(இருக்கிற மாதிரி நடிக்கறிங்க. இத நான் சத்தம்மா சொன்னா ஒதுக்க மாட்டாங்க)." அப்படிதானேம்மா............

சுலோ,"போடா போக்கிரி..............." சிரிப்பு முகத்தில் எட்டிப் பார்த்தது.

ஹப்பா எப்படியோ மலை இறங்கிட்டாங்க.

ஷிஜி தன் தாயை இறுக்க கட்டிக் கொண்டாள்."சாரிம்மா இனிமேல் விளையாட்டுக்கு கூட அப்படி சொல்ல மாட்டேன்

சரியா. நீங்க என் செல்ல அம்மா இல்ல". தன் தாயின் கன்னத்தை ஈரம் பண்ணினாள்.

சுலோ,"என்னடி இது வயசு பொண்ணு மாதிரி நடந்துக்கோ கட்டி புடிக்கிறது கன்னத்தை ஈரம் பண்ணுறது".

ஷிஜி,"நம்ம அம்மா திரும்ப வந்தாச்சு".

சுஷின்,"இப்படியே பேசிட்டு இருந்தா நீ இன்னைக்கு எக்ஸாம் வீட்டில் தான் எழுதணும்".

"ஹையோ.......... அம்மா டைம் ஆச்சு சீக்கிரம் பிரேக் பாஸ்ட் ரெடி பண்ணுங்கம்மா. குளிச்சுட்டு இப்போ வந்துடுறேன்". ஷிஜி தன் அறைக்கு ஓடினாள்.

சுஷின்,"அம்மா காபி வேணுமே............ டைம் எட்டு ஆச்சு இன்னும் நீங்க தரவே இல்ல............... அப்படியே அப்பாவுக்கும் சரியா............"

"என்னடா சிபாரிசா............" சிரித்துக்கொண்டே கிச்சனுக்கு சென்றார்.

மீனாட்சி பூஜை அறையில் பூஜை செய்வதை பார்த்துக்கொண்டே வேகமாக தாயின் அருகில் சென்றாள். மீனாட்சி குங்குமத்தை எடுத்து மினியின் நெற்றியில் வைத்துவிட்டு "நல்ல படியா பரீட்சை எழுதும்மா........... எக்ஸாம் முடிஞ்சதும் நேரா வீட்டுக்கு வா நீ பாட்டுக்கு ப்ரண்ட்ஸ் கூட நேரம் காலம் இல்லாம பேசிட்டு இருக்காத சரியா".

"சரிம்மா ஆனா இன்னைக்கு கடைசி எக்ஸாம் சோ கொஞ்ச நேரம் ப்ரண்ட்ஸ் கூட பேசிட்டு ஷாப்பிங் போயிட்டு தான் வருவேன். அதுக்குள்ளே என் ப்ரண்ட்ஸ் வீட்டுக்கு போன் பண்ணி என் பொண்ண காணலைன்னு டமாரம் அடிச்சுடாதிங்க".

"அதுசரி இந்த துப்பட்டாவ ஏன் இப்படி போட்டு இருக்க பின் பண்ண வேண்டியது தானே".

"இது எம்பிராய்டு சுடிம்மா துப்பட்டா போட்டா வொர்க் தெரியாது".

"சரிடி ஒருசைடுலயாவது பின் பண்ணுடி".

"போம்மா உனக்கு ஒண்ணும் தெரியாது. இப்படி போட்டாதான் ஸ்டைல்".

"டிரஸ் போடுறது மானத்த மறைக்க நீ என்னமோ ஸ்டைல் பண்ணங்குற மாதிரி பேசுற".

இவ்வளவு பேச்சின் நடுவிலும் தாய் தன் மகளுக்கு இட்லி யை ஊட்டி விட்டாள்."இட்லி போதும்மா அப்புறம் படிச்சது எல்லாம் மறந்துடும். வந்து மீதியை சாப்பிடுறேன்.பாய் மாம்".

மினி தனது ஸ்கூட்டி எடுத்துக் கொண்டு கிளம்பினாள். துப்பட்டாவினால் இன்று தான் சந்திக்கப் போகும் விளைவுகளை அறியாமல் சென்றாள்.

ஷிஜி கிளம்பி வரும்போதே அனைவரும் டைனிங் டேபிள் முன்பு ஆஜராகி இருந்தனர்.

"சீக்கிரம் டிபன் தாங்கம்மா காலேஜ்க்கு டைம் ஆச்சு".

"காலைல எழுந்தோமா படிச்சோமா கிளம்புனோமான்னு இருக்காம வம்பு வளக்க வேண்டியது. கடைசியா இங்க வந்து என்தலையை உருட்ட வேண்டியது. சொன்னா உடனே நான் கிளாஸ் எடுக்கறேன்னு சொல்ல வேண்டியது உன்ன".

"அண்ணா அம்மா இதைக்கூட பாயிண்ட் பாயிண்ட்டா சொல்லுறாங்க பாரு".

தனது அண்ணனின் காதில் முணுமுணுத்தாள்."ஹேய் வாலு ஒழுங்கா சாப்பிடு இல்ல இன்னைக்கு எக்ஸாம்ல கஷ்டமான கேள்வியா வரட்டும்னு சாபம் விட்டுடுவேன்".

"நீ என்ன விட்டாலும் பலிக்காது. நான் காலேஜ் பஸ்ட் வருவேன்பாரு".

"அங்க என்னடா பேச்சு எனக்கும் சொல்லுங்கடா. எனக்கு தெரியாம ஏதாவது பிளான் பண்ணுறிங்களா. அம்மாவுக்கு தெரியாமலா எங்கடா போறீங்க நானும் வரேண்டா ".

"அப்பா நானே ஷிஜியை பேசாம சாப்பிட சொல்லி கேட்டுட்டு இருக்கேன் நீங்க வேற. காலைல அம்மாகிட்ட வாங்கினது உங்களுக்குப் பத்தல. இருங்க அம்மா வரட்டும் என்ன ப்ளான்னு அவங்களே சொல்லுவாங்க".

"அம்மாஆஆஅ............." பொய்யாக கூப்பிடவும் இருவரும் வேகமாக சாப்பிட்டு கிளம்பினர்.

ஷிஜி, தனது ஸ்கூட்டி பெப் ஐ எடுத்துக்கொண்டு காலேஜ் நோக்கி சென்றாள்.

சுஷின் தனது i-10லும்............... சுந்தரம் போர்ட் ikon காரிலும் ஆபீஸ் நோக்கி பயணப் பட்டனர்.

காலேஜில் மரத்து அடியில் நின்று கடைசி நேர பரபரப்பான நிமிடத்தில் இருந்தனர் மாணவிகள்.

"ஹேய் மினி எல்லா சம் எல்லாம் போட்டு பாத்துட்டியா நான் நேத்து புல்லா போட்டு போட்டு பாக்குறேன் வரவே இல்ல",ஹேமா.

"உனக்கு ஆன்சர் வந்தாதாண்டி ஆச்சரியம். முதல்ல அது நம்ம புக் தானா. நீ பாட்டுக்கு அன்னைக்கு எக்ஸாம் ஹால் குள்ள உக்காந்துட்டு எனக்கு கொஸ்ட்டீன் பேப்பரை மாத்தி தந்துட்டிங்கன்னு புலம்புன மாதிரி இருக்க போகுது " வினோதினி.

"இது எப்போடி நடந்துது எனக்கு தெரியாதே",மினி.

"ஏய் அவகிட்ட சொல்லாதடி ப்ளீஸ்.............."

"டி வினோ நீ இப்போ சொல்லல உனக்கு எக்ஸாம் ஹால் குள்ள பேப்பர் காட்ட மாட்டேன்".

"மினி அப்படி மட்டும் பண்ணிராதடி நான் உன்ன நம்பித்தான் வந்து இருக்கேன் கை விட்டுடாதே".

"அப்போ ஒழுங்கா என்னனு சொல்லு".

தலைக்கு மேல் வெள்ளம் போய் விட்டதை அறிந்தாள் ஹேமா. அதுதாங்க நம்ம வினோவ மினி கிளீன் போல்ட் ஆகிட்டாளே.

"அது ஒண்ணும் இல்ல மினி அடுத்த நாள் எக்ஸாம் க்கு உள்ளத முந்துன நாள் படிச்சுட்டு வந்துட்டு எக்ஸாம் ஹால்ல நம்ம மேம் தான் கொஸ்ட்டீன் பேப்பரை மாத்தி குடுத்துட்டாங்கன்னு ஒரே அலறல்".

"அப்போ அந்த பேப்பர் புட்டுகிச்சா".

"அதுதான் இல்ல".

"அப்போ இவ எல்லா எக்ஸாமுக்கும் சேர்த்து படிசுடுவாளா".

ஹேமா உனக்கு இது தேவையா என்பதுபோல் வினியை பார்க்க வினி அவளை பார்ப்பதை தவிர்த்தாள்.

"மினி அவ எல்லா பாடத்தையும் படிச்சு இருந்தான்னா எதுக்குடி அலறப்போறா".

"அட ஆமா அப்புறம் எப்படி பாஸ் ஆனா அந்த செமெஸ்டரை.............."

"அது செமெஸ்டர் எக்ஸாம் இல்ல மினி. மாடல் எக்ஸாம் சோ............. தப்பிச்சுட்டா".

இவர்களின் பேச்சு சுவாரசியத்தில் மினியின் துப்பட்டா பறந்து போனதை யாரும் கவனிக்க வில்லை.

(எந்த ஜீவன் விழுந்து வாரப்போகுதோ.......................)

# 4

உன் மூச்சுக் காற்றின் வெப்பத்தில்

என் மூளை வேலை நிறுத்தம் செய்கிறதே

இது காதலென்றால்.................

எக்ஸாம்-க்கு நேரமாகி விட்டதால் வேகமாக வந்த ஷிஜி யின் முகத்தில் ஒரு துப்பட்டா வேகமாக வந்து விழுந்ததால் தடுமாறி கீழே விழுந்தாள். அவள் கீழே விழுந்த சப்தம் கேட்டு கூட்டம் கூடியது.

"சே.... யார் இது துப்பட்டா காற்றில் பறந்தது கூட தெரியாம............ பாவம் இப்போ இவளுக்கு அடி பட்டுடுச்சே............." கூட்டத்தில் யாரோ ஒருத்தி சொன்னாள்.

"பேசிட்டு இருக்காம முதல்ல அவள எழுப்பி விடுங்க. யாராவது தண்ணி கொண்டு வாங்க". ஷிஜி வலி பொறுக்காமல் கண்களை மூடி வலியை அடக்கிக்கொண்டிருந்தாள். அவளது காலின் கட்டை விரலில் நகம் பிய்த்து ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. குட்டி விரல் இசகு பிசகாக அடிபட்டு வீங்கி போயிற்று. கண்களை இருட்டிக் கொண்டு மயக்கம் வரும் போல் இருந்தது.

"இதுங்க எல்லாம் ஏன்தான் டிரஸ் போட்டுட்டு அலையிதுகளோ பின் பண்ணினா என்ன செய்யும். பார் வாய தொறக்குதுகளா". கூட்டத்தை பார்த்து மினி டீம்,"ஹேமா அங்க என்னடி கும்பலா இருக்கு வா என்னன்னு பாக்கலாம்".

கும்பலை விலக்கி விட்டு பார்த்த மினி அதிர்ந்தாள். அவசரமாக தனது துப்பட்டாவை தோளில் தேடினாள். நிலைமையின் தீவிரத்தை உடனே புரிந்து கொண்டு , வேகமாக தண்ணீர் பாட்டில் எடுத்துக் கொண்டு ஷிஜி யின் அருகில் சென்றாள்.

"ஐ’ம் சாரி, இது என்னோட துப்பட்டாதான். எனக்கே தெரியாம காத்துல பறந்து வந்துடுச்சு போல" தண்ணீர் பாட்டிலை அவளுக்கு குடிக்க கொடுத்தாள்.

கூட்டத்தில் அனைவரும் மினியை அர்ச்சனை செய்ய துவங்கவும் எக்ஸாம்க்கு மணி அடிக்கவும் சரியாக இருந்தது. நிகழ் காலத்துக்கு திரும்பி அனைவரும் ஹாலை நோக்கி சென்றனர்.

மினி,"ஹேமா வினோ நீங்க போங்க நான் இவங்கள கூட்டிட்டு வாறேன்".

"மினி அவங்க கால்ல ரத்தம் வருது பாரு முதல்ல அத கவனி எக்ஸாம்க்கு பத்து நிமிஷம் லேட்டா போனா ஒண்ணும் ஆயிடாது", ஹேமா சொல்லிக்கொண்டே அவளது கர்சீப்பை தண்ணீரில் நனைத்து ஷிஜியின் கட்டை விரலில் கட்டி விட்டாள்.

"குட்டி விரல் கூட வீங்கி இருக்குடி ஹோச்பிடல் போனாதான் சரிவரும்போல. நான் இவங்கள கூப்பிட்டு போறேன் நீங்க ஹால்க்கு போங்க", மினி.

மினி ஹால்க்கு போக சொன்னதும் தான் ஷிஜிக்கு சுய உணர்வு வந்தது."இல்லை நான் எக்ஸாம் எழுத போயே ஆகணும். எக்ஸாம் முடிச்சு வந்து மீதியை பார்த்துக்கலாம்".

"என்ன நீங்க விளையாடுறீங்களா? கால் வீங்கி இருக்கு இப்போ போய்", மினி.

"மினி,.........என்ன அப்படி பார்க்குறிங்க. உங்க பிரண்ட்ஸ் உங்கள அப்படிதானே குப்பிட்டாங்க. மினி தானே உங்க பேரு. இன்னைக்கு லாஸ்ட் எக்ஸாம் இது ஈவென் செமஸ்ட்டர் வேற. இப்போ விட்டா எழுதுறது கஷ்டம்.சோ எக்ஸாம் முடிச்சு வந்து நீங்க எங்க கூப்ட்டாலும் வாறேன். இப்போ என்ன விட்டுடுங்களேன் ப்ளீஸ்".

"உங்களால நடக்க முடியுமா. நீங்க எந்த ஹால் நான் கூட்டி போய் விடுறேன்".

"எனக்கு B block ரூம் no.12 உங்களுக்கு "

"எனக்கு F block..............". "மினி ஏற்க்கனவே லேட் ஆயிடுச்சு. 2 block-ம் எதிர் எதிர் சைடு ல இருக்கு. நீங்க போங்க நான் போய்க்கறேன்".

"வினோ, ஹேமா எங்கடி ஆள காணோம் போயிட்டாளா "."சாரி உங்க நேம் நான் கேக்கவே இல்ல நீங்க............" "ஐ'ம் ஷிஜி செகண்ட் இயர் கம்ப்யூட்டர் சயின்ஸ் ஓகே "

"அவ ஷிஜியோட ஸ்கூட்டியை ஸ்டாண்ட்ல போட போய் இருக்கா அதோ வாறா" அனைவரும் விடை பெற்று கிளம்பும் போது அவர்களை நோக்கி லதா வந்து கொண்டிருந்தாள்.

"ஷிஜி, எக்ஸாம் எழுத போகலையா ஆமா இவங்க எல்லாம் யாரு. நீ ஏன் இப்படி நடக்குற".

ரத்தம் தோய்ந்து இருந்த அவளது விரலை பார்த்து ," கால் புல்லா ரத்தம். என்ன ஆச்சு சொல்லுடி".

"லதா முதல்ல எக்ஸாம் எழுதுவோம். அப்புறம் விவரமா சொல்லுறேன். நீங்க எல்லோரும் கிளம்புங்க".

"ஓகே பார்த்து போங்க லதா அவங்கள கை தாங்கலா கூட்டிட்டு போங்க. எக்ஸாம் முடிச்சு உங்களை வந்து பார்க்குறேன்".

மினி, ஹேமா,வினோ F block குக்கும்............. ஷிஜி, லதா B block கும் சென்று எக்ஸாம் எழுதினர்.

ஷிஜி, வலி பொறுக்க முடியாமல் ஹாலில் முனங்கவும், மேம் வந்து என்வென்று கேட்க அவளது நிலைமையை பார்த்து காலை தூக்கி வைத்துக் கொள்ள ஒரு ஸ்டூல் கொடுத்தார்கள்.

இங்கு மினியோ மிகவும் பதட்டத்தில் இருந்தாள். கணக்குக்கு விடை வருவேனா என்று அடம் பிடித்தது.அம்மா சொன்னதை கேட்டு பின் பண்ணி

இருந்தா இப்படி நடந்தே இருக்காது எல்லாம் என் தப்பு.வர வர ஒரு பொறுப்பே இல்லாம போயிட்டு எனக்கு. சே.... அவ அங்க என்ன கஷ்டப் படுறாளோ எப்படி எக்ஸாம் எழுதுறாளோ. தலையை பிடித்துக் கொண்டு அமர்ந்து இருந்தாள். அவளது தவிப்பை பார்த்து வினோ ஜாடையில் என்ன என்று கேட்டு............. பதட்டப் படாமல் எழுதுமாறு சொன்னாள். அதன் பிறகு எழுத துவங்கினாள் மினி.

ஒரு வழியாக மூன்று மணி நேரத்தை கடத்தி விட்டு பெல் அடித்தது. முதல் ஆளாக பேப்பரை கொடுத்துவிட்டு ஷிஜியை தேடி ஓடினாள் மினி. அங்கு போய் சேர இருபது நொடிகள் தான் ஆயிற்று. காற்று வேகத்தில் சென்று ஷிஜியின் முன்னால் மூச்சிரைக்க நின்றாள்.

சுஷினின் கார் அந்த 12 மாடி கட்டிடத்தின் முன் நின்றது. காரை விட்டு இறங்கியதும் செக்யூரிட்டி வந்து சாவியை வாங்கிக் கொண்டார். "என்ன முத்து நீங்க வாரிங்க, எங்க டிரைவர்".

"தம்பி, இன்னைக்கு அவனோட குழந்தைக்கு உடம்பு சரி இல்லையாம். காலையிலேயே வந்து சொல்லிட்டு போனான். உங்களுக்கு போன் போட்டானாம் லைன் கிடைக்கலையாம் இரண்டுமணி நேரத்தில் வந்துடுறதா சொன்னான்".

"அப்போ நானே காரை பார்க் பண்ணிடுறேன் கீயை தாங்க".

இவர்களை பார்த்த படியே வந்தான் பிரகாஷ். "குட் மோர்னிங் சார், மே ஐ..................."

சுஷின் ஏதோ சொல்ல வந்து பிறகு எதுவும் சொல்லாமல் கீயை அவனிடம் கொடுத்து விட்டு லிப்டை நோக்கி சென்றான். இந்த 12 மாடி கட்டிடத்தில் அவனது அலுவலகம் ஐந்தாவது மாடியில் இருந்தது. மின்தூக்கியில் (லிப்ட்) சென்று ஐந்தாவது மாடியில் வெளியே வந்தான். அவனது துரித நடையே அவன் வருவதை உணர்த்த அனைவரும்

காலை வணக்கம் சொல்ல, அனைவரின் வாழ்த்துக்கும் ஒரு தலை அசைப்பையே தந்து விட்டு குளிரூட்டப்பட்ட தனது அறையின் உள் சென்று சுழல் நாற்காலியில் சென்று அமர்ந்தான்.

அவனது கையொப்பத்துக்காக இருந்த பைல் களை ஒன்று ஒன்றாக பார்த்துக் கொண்டிருந்தான். அறையின் கதவு மெலிதாக தட்டும் ஓசை கேட்டது."எஸ் கம் இன்". அனுமதி கிடைத்ததும் பிரகாஷ் உள்ளே வந்தான்.

"சொல்லுங்க பிரகாஷ் ஏதாவது ப்ரோப்ளமா இல்ல என்கிட்டே ஏதாவது சொல்லணுமா".

"என்னசார்................ என்ன போய் நீங்க வாங்கன்னு சொல்லிட்டு இருக்கீங்க".

"நீங்கதானே காலைல எனக்கு சொன்னிங்க மரியாதை குடுக்க சொல்லி. நான் அதை மீற முடியுமா".

காலையில் தான் அவனை குட் மோர்னிங் 'சார்' என்று சொன்னதைத் தான் அவன் குறிப்பிடுகிறான் என்பதை அறிந்து புன்னகைதான்.

"ஓ....... அப்படியா அப்போசரி நீ என்ன அப்படியே சொல்லு நானும் உன்ன சார்னே சொல்லுறேன் ஓகே".

"பின்ன என்னடா வந்த சார்ன்னு சொன்ன நீபாட்டுக்கு டிரைவர் வேலை பார்க்குற. நான் உன்னை என்றைக்காவது குறைச்சலா சொல்லி இருக்கேனா. நீ தான் விலகி விலகி போற. மரியாதை எல்லாம் குடுக்குற. என்ன உன் பிரெண்டாவே நினைக்க தோணாதா. இல்லைன்னா நான் தான் உன்னை அப்படி நடத்த வில்லையா ம்ம்...... . பதில் சொல்லுடா".

"சுஷின் இதுல இவ்வளவு வருத்தப் படுற அளவுக்கு என்ன நடந்தது. ஆபீஸ் ஸ்டாப்ஸ் முன்னாடி உன்ன நான் அப்படி குப்பிட மாட்டேன்னு உனக்கே தெரியும். நீ என்னதான் சொன்னாலும் நான் இந்த விஷயத்துல கேட்க்கப் போவது

இல்லை சரியா.இந்த ஆபீஸ விட்டு வெளியே உன்னை சார்ன்னு சொன்னா நீ கேளு ஓகே ".

"சரி விடு என்ன நீ பேர் சொல்லி கூப்பிடுற நேரம் வராமலா போய்டும், உன்னை அப்போ வச்சுக்கறேன்".

"அதை அப்போ பார்த்துக்கலாம்". "இப்போ உன்கிட்ட ஒரு முக்கியமான விஷயம் சொல்லத்தான் வந்தேன்". அவனது குரலில் இருந்த மாறுதல் சுஷினை அலுவலக பணிக்கு இழுத்து வந்தது.

சொல்லு பிரகாஷ் ஏதாவது முக்கியமான விஷயமா".

"ஆமா நாம கிரானைட் லாரி ஒண்ணு ஆந்திரா கிட்ட விபத்து ஆயிடுச்சு. லோட் புல்லா டேமேஜ் ஆயிடுச்சு நமக்கு நஷ்டம் கொஞ்சம் தான் ஆனா..............."

"ஆனா என்னடா சொல்லு ஏதாவது நம்ம டிரைவருக்கு.............."

"சே... சே .... அந்த லாரில கஞ்சா இருந்து இருக்குடா................."

"வாட், பிரகாஷ் இது எவ்வளவு பெரிய விஷயம் நீ இவ்வளவு நிதானமா சொல்லிட்டு இருக்க. அப்பாவுக்கு தெரியுமா? இது யாரோட வேலைன்னு எனக்கு தெரியும் விடு நான் பார்த்துக்கறேன். ஆனா இந்த விஷயம் மீடியாவுக்கு தெரிஞ்சா, இந்த கம்பெனி பேரே கெட்டு போய்டும்டா வெளிநாட்டு கம்பெனி எல்லாம் ஆடர்ஸ திரும்ப கேக்க ஆரம்பிசுடுவாங்க". எதற்கும் அவ்வளவு சீக்கிரம் கலங்காத சுஷின் கலங்குவதை பார்த்த பிரகாஷ் வேகமாக சொன்னான்.

"நானே இது வெளியே வராத மாதிரி செஞ்சுட்டேண்டா. ஆனாலும் உனக்கு சொல்லணுமேன்னுதான்..............."

தனது சேரில் இருந்து எழுந்து ஓடி வந்து நண்பனை தழுவிக் கொண்டான். இருவரது கண்களும் கலங்கின.

"பிரகாஷ் நீ எனக்கு செஞ்சது சின்ன உதவி இல்லடா என் குடும்ப மானம் சம்பந்தப் பட்டது. உனக்கு எப்படி நன்றி சொல்லுறதுன்னே தெரியலடா".

"நீ எனக்கு வாழ்க்கையவே தந்து இருக்கும் போது இது சாதாரணம்டா. ஆனாலும் இத பண்ணினவங்க யாருன்னு உனக்கு தெரியும் னு சொன்னியே அது ......................"

சுஷின் தலையை மெதுவாக ஆம் என்பதற்கு அடையாளமாக அசைத்தான். "என் பெரியப்பா குடும்பம்தான் இதை பண்ணி இருப்பாங்க. குடும்பப் பகையை தீர்த்துக்க சமையம் பார்த்துட்டு இருக்காங்க. இதுக்கு உடனேயே ஒரு முடிவு கட்டணும். நீ அப்பா கிட்ட இதைப்பற்றி எதுவும் சொல்லாதே சரியா".

சுஷின் தனது கோபத்தை அடக்க முயற்சி செய்தான். "சே என்ன மனுஷங்கடா குடும்பத்துல பகைன்னா அத பெரியவங்களே முடிச்சுக்கணும் அதைவிட்டு தொழில்ல காட்டுறது என்னால மன்னிக்கவே முடியலடா. இது அப்பாவுக்கோ இல்ல அம்மாவுக்கோ தெரிஞ்சா மனசு ரொம்ப கஷ்டப்படுவாங்க. அதுசரி நீ எப்படிடா............. அதைவிட உனக்கு எப்படித் தெரியும்".

"லாரி ஆக்சிடென்ட் ஆனதும் டிரைவர் வண்டியை விட்டுட்டு ஓடிட்டான். அதைவிட நம்ம லோட் எல்லாம் யாரோ வேணும்னு ஒடச்ச மாதிரி இருந்து இருக்கு. ஆனா கஞ்சா மட்டும் நல்ல வெளியே தெரியிற மாதிரி இருந்து இருக்கு. இதைப் பார்த்துட்டு அந்த இன்ஸ்பெக்டருக்கே கொஞ்சம் டவுட் வந்து இருக்கு. எல்லா பேப்பர்ஸ்சும் கரெக்டா இருந்து இருக்கு. அவர் வேற நேர்மையான ஆளு போல நேர ஆபீஸ்க்கு கால் பண்ணி இருக்காரு நம்ம செக்யூரிட்டி எனக்கு போன் பண்ணி விஷயத்த சொன்னார். நான் உடனே வினோத்தை போய் பார்க்க சொல்லி கொஞ்சம் எக்ஸ்ப்ளைன் பண்ணி வெளியே வராம பார்த்துட்டோம்".

"ஓ............ எப்படியோ அவர்க்கு மனசாட்சி இருக்கப் போய் இதோட போச்சு இல்லன்னா.............. நினைக்கவே............."

"அதுதான் எதுவும் ஆகலையே அப்புறம் நீ ஏன் டென்ஷன் ஆகற. வந்து ரொம்ப நேரம் ஆச்சு நான் போய் என் வேலையைப் பார்க்குறேன். உன்னை மாதிரியா உட்க்கார்ந்த இடத்துல இருந்தா எனக்கு வேலை முடியுமா. நான் என் சீட்டுக்குப் போறேன்". சூழ் நிலையின் இறுக்கத்தை தளர்த்த சகஜமாக பேசினான் . அதற்குப் பலன் இருந்தது.

"உன்னை யாருடா அலையச் சொன்னது இந்த கம்பெனியோட GM நீ உன் வேலைய மட்டும் பாக்காம மார்க்கெட்டிங் வேலைய யாரு பார்க்க சொன்னது. கேட்டா நாமளும் ஒரு கண் வைக்கணும்னு கதை விடுவ. ஆனாலும் நீ இருக்குற தைரியத்தில் தாண்டா நான் இந்த சீட்ல MD-யா உட்க்கார்ந்து இருக்கேன்", நண்பனை நெகிழ்ச்சியுடன் கட்டிக் கொண்டான்.

"சரி சரி ரொம்ப ஐஸ் வைக்காத பிறகு ஜலதோஷம், காய்ச்சல் எல்லாம் வந்தா என்னால சம்மாளிக்க முடியாதுடா".

"அதுக்குதான் உன்னை கல்யாணம் பண்ணிக்க சொல்லி கெஞ்சிகிட்டு இருக்கேன். நீதான் கேக்கவே மாடிக்க. எனக்காவது என் தங்கச்சிக்கு முடிச்சதுக்கு அப்புறம்தான்...............".

"இந்த கதைய என்கிட்டே விடாதேடா. உனக்கு பொண்ணு பார்க்க ஆரம்பிச்சு இரண்டு வருஷம் ஆகுது. நீதான் எந்த பொண்ணோட போட்டோ காமிச்சாலும் இந்த பொண்ண பார்த்தா கட்டிக்கணும்னு தோணலைன்னு ஒரே டயலாக்க திரும்பத் திரும்ப சொல்லிட்டு இருக்க. ஒரு பொண்ண பார்த்தா அழகா இல்ல, கண்ணு பெருசா இருக்கு, காது நீளமா இருக்கு, மூக்கு சப்பையா இருக்கு இப்படி ஏதாவது குறை சொல்லி ஒதுக்குனாலும் பரவாயில்லை. எனக்கு என்னமோ நீ ஒரு பொண்ண மனசுல வச்சுகிட்டு அந்த மாதிரிப் பொண்ண தேடுற மாதிரி இருக்கு. ஆனா எந்தப் பொண்ணுன்னுதான் தெரியல. நீயே சொல்லிடுடா".

"அப்படி எந்தப் பொண்ணாவது என் மனசுல இருந்தா உனக்குத் தெரியாம இருக்குமாடா. அம்மா காட்டுற பொண்ணுங்க எல்லாமே அழகாதான் இருக்குறாங்க ஆனா அந்தப் பொண்ணுங்களைப் பார்த்தா என் தங்கச்சிங்க மாதிரி, ப்ரெண்ட் மாதிரிதான் இருக்கே தவிர, அதுக்கும் மேல அவ கூடவே இருக்கணும், அவள வச்சக் கண்ணு வாங்காம பார்க்கணும் பாத்தா உடனேயே கட்டிக்கணும், இப்படி தோணவே மாட்டிக்கிடா. எந்தப் பொண்ணப் பார்த்து எனக்கு இந்த பீல் எல்லாம் வருதோ அவளை உடனே கட்டிப் பேன்டா.

"நீ அப்படி ஒருத்திய சீக்கிரம் கண்டு பிடிக்க என் வாழ்த்துக்கள்டா".

இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே டெலிபோன் அதன் வேலையை சரியாய் செய்தது. அது சுஷினின் பர்சனல் லைன் ஆதலால் சுஷின் போனை எடுத்தான். மறுபுறம் பேசியவளின் குரலைக் கேட்டதும் ஒருநொடி அவனது முகம் யோசனையில் சுருங்கியது. ஆனால் பேசிய விஷயத்தை கேட்டதும் பதட்டமாக ஆனால் உறுதியான குரலில் "நீ அங்கேயே இரும்மா நான் உடனே ஹோச்பிடல்க்கு வாறேன். அதுவரை நீ எதுவும் யார்கிட்டயும் சொல்லாதே. டாக்டர்கிட்ட போனை குடு நான் பேசுறேன்".

போன் கை மாறியதும். டாக்டர் நான் சுந்தரத்தோட பையன் சுஷின் அவ என் தங்கச்சி உடனே அவளுக்கு வேண்டிய ட்ரீட்மென்ட் செய்ங்க நான் இப்பவே அங்கே கிளம்பி வாறேன்".

சுஷின் தங்கை என்று சொன்னதும் அவனை விட பிரகாஷ் அதிகப் பதட்டம் அடைந்தான். ஆனால் அது சுஷினுக்கு தெரியாமல் மறைத்தான். "சுஷின் உன் தங்கைக்கு என்னடா ஆச்சு. ஏதாவது ப்ரோப்ளமா நானும் கூட வரவா". சாதாரணமான குரலில் வினவியதால் அவனது உள்ளத்தின் தவிப்பு சுஷினுக்கு தெரியவில்லை.

"ஷிஜிக்கு ஒண்ணும் இல்லடா, சுமாவுக்குத் தான் பிரச்சனை. நான் உடனே போகணும் வந்து விஷயத்தை சொல்லுறேன் ஓகே".

பிரகாஷின் முகம் மட்டுமல்ல மனமும் அமைதி அடைந்தது. சுஷின் கவனித்து இருந்தால் தெரிந்து இருக்கும் பிரகாஷின் முக மாறுதல்கள். அவன்தான் சுமாவைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தானே.

ஹோாச்பிடல் நோக்கி அவனது i 10 பறந்தது...................அங்கே தனது கனவு தேவதையை சந்திக்கப் போவது தெரியாமலேயே.....................

## 5

மினி ஓடி வந்த வேகத்தை பார்த்து ஷிஜி," மினி எதுக்கு இப்படி ஓடி வாறிங்க நான்தான் அங்க வாரேன்னு சொல்லி இருந்தேனே".

ஷிஜி, எதுவும் பேச வேண்டாம் உடனே வாங்க ஹோாச்பிடல் போகலாம். எக்ஸாம் எப்படி எழுதினிங்க".

"அவளும் ஒழுங்கா எழுதலை எங்களையும் எழுத விடலை" லதா.

"நீங்க என்ன சொல்லுறிங்க".

"ம்ம்ம்..........." "லதா சும்மா இருடி அவ சும்மா ஏதோ உளறுறா மினி நீங்க வாங்க நாம போகலாம்"

"மினி, எதுக்குடி இப்படி ஓடி வந்த நாங்களும் தானே வாறோம். இந்த ஓட்டத்த ஒலிம்பிக்ல ஓடி இருந்த ரெகார்ட்டையே பிரேக் பண்ணி இருப்ப", ஹேமா.

"சும்மாஇருடி நீவேற ஷிஜி எக்ஸாம் ஒழுங்காவே எழுதலையாம். என்னால்தானே இப்படி ஆச்சு. சே...... எல்லாம் என் கேர்லெஸ்சால வந்தது. அட்லீஸ்ட் இவங்கள ஹோாச்பிடலாவது கூட்டி போகலாம்னு தான் வந்தேன்".

லதா,"இவ கால உடைச்ச ஆளு நீங்க தானா. வண்டி ஓட்டிட்டு வந்தா உங்களுக்கு கண்ணு தெரியாதா? இப்படியா கண்ணு மண்ணு தெரியாம ஓட்டுவிங்க".

லதாவின் பேச்சை கேட்டு அனைவரும் ஒரு மார்க்கமாக அவளைப் பார்த்தனர். "ஷிஜி , எதுக்குடி எல்லோரும் என்னை ஒரு மாதிரி பார்க்கிங்க. நான் ஏதாவது தப்பா சொல்லிட்டனா. நீயாதான் போய் கால ஓடச்சுக்கிட்டியா. அப்புறம் இவங்க எதுக்கு உன்கிட்ட மன்னிப்பு கேட்டாங்க".

"அம்மா தாயே உன் கற்ப்பனை குதிரையை கொஞ்சம் அடக்கு. அது தறிகெட்டு இங்கேயும் அங்கேயும் ஓடுது. நான் சொல்லுறேன்", ஷிஜி.

"சரி வாங்க நடந்துட்டே பேசலாம். உங்களால நடக்க முடியும்மா. நான் வேண்ணா உங்கள கை தாங்கலா கூட்டி போகவா", மினி.

"மினி உன்னோட ஸ்கூட்டி கீ-தா நான் போய் வண்டிய எடுத்துட்டு வாறேன். நீங்க எல்லோரும் ஸ்லோவா வாங்க. ஷிஜியோட வண்டி கீ என்கிட்டதான் இருக்கு. நாம வண்டியிலேயே போய்டலாம்", ஹேமா.

"எல்லோரும் வண்டில போக முடியாது. நான் கால் டாக்ஸிக்கு சொல்லுறேன்".

"ஹையோ மினி நீங்க எல்லோரும் போங்க நான் எங்க பாமிலி டாக்டர் கிட்ட போய் ஊசி போட்டுக்கறேன். லதா கிளம்பட்டும் அவளுக்கு லேட் ஆனா அவங்க வீட்டில் தேடுவாங்க".

ஹோச்பிடல் போனால் லேட் ஆகுமே வீட்டில் இருப்பவர்களுக்கு என்ன காரணம் சொல்லுவது சொன்னாலும் நம்புவார்களா என்று யோசித்துக் கொண்டிருந்தவள் ஷிஜியின் பேச்சை கேட்டு முகம் மலர்ந்தாள்.

ஆனாலும் ஆபத்துக்கு உதவாதது வருத்தமாகத்தான் இருந்தது. அவளது மனநிலையை புரிந்து "ஒரு சின்ன அடிக்கு இத்தனை பேரா ஹோச்பிடல்ல இருக்குறவங்க எல்லாம் பயந்துட போறாங்க. நான் பார்த்துக்கரேன் நீ போ லதா".

"தேங்க்ஸ் டி............." இன்னும் என்ன சொல்லி இருப்பாளோ அதற்க்கு முன்னால், "உனக்கு பஸ்க்கு லேட் ஆகல பிறகு பல்லவன் விட்டுட்டு போய்ட போறான்"

அனைவரும் லதா வை பார்க்க. "இப்போ பல்லவன் இல்லை சென்னை போக்குவரத்துக்கழகம். எல்லோரும் என்னை சந்தேகமா பார்க்குறாங்க பாரு. ஓகே பிரன்ட்ஸ் நான் கிளம்பறேன் ஷிஜியை பார்த்து பத்திரமா கூட்டி போங்க. ஷிஜி பிறகு எனக்கு லேன்ட்லைன்க்கு கால் பண்ணி சொல்லு சரியா".

"வாங்க போகலாம் ஷிஜி". "ஒரு நிமிஷம் மினி நாம ஒரு முடிவுக்கு வரலாம். என்ன நீ வா போ ன்னே சொல்லு okya".

"நீங்க ரெண்டு பேரும் இங்கேயே வெயிட் பண்ணுங்க நாங்க ரெண்டு பேரும் போய் வண்டிய எடுத்துட்டு வாறோம்" வா வினோ நாம போகலாம்.

ஹேமா என்னடி இது லாஸ்ட் எக்ஸாம் முடிஞ்சதும் கொஞ்ச நேரம் ஊர் சுத்தலாம்னு பார்த்தா இப்படி ஆயிடுச்சே".

"இப்போ மட்டும் என்ன வினோ ஹோச்பிடல சுத்தி பார்க்க போறதா நினைச்சுக்கோ".

ஹேமா வினோ ஷிஜியின் வண்டியிலும், மினி ஷிஜி மினியின் வண்டியிலும் கிளம்பினர். இப்போ மினி தன்னோட ஆளை மீட் பண்ணுவாளா............. வாங்க பார்க்கலாம்.

## 6

என் அலை பேசியில் வரும் எண் அழைப்புகள் எல்லாம்

உன் அழைப்பாய் இருக்குமோவென தவிக்கின்றேனே

இது காதலென்றால்.................

ஹோச்பிடலில்...................

தனது காரை வேகமாக பார்க் செய்துவிட்டு டாக்டரின் அறையை நோக்கி வேகமாக சென்றான். ஒரு விரலை மடக்கி அவரது அறையின் கதவை மெதுவாக தட்டினான் . அவரது அனுமதி கிடைத்ததும் அவரது முன் மூச்சு வாங்க நின்றான்.சுஷினை பார்த்ததும் Dr.சுதர்சனம் "என்ன சுஷின் இவ்வளவு மூச்சு வாங்குது. அப்படி என்ன அவசரம் நான் தான் பார்த்துக்கறேன்னு சொன்னேனே".

"நீங்க சொன்னிங்க டாக்டர் ஆனா எனக்குதான் மனசு கேட்க்கலை. அவளை உடனே பார்க்கவேண்டும் என்று கிளம்பி வந்துட்டேன்".

"நீ இப்படி சொல்லுற ஆனா அவங்க எல்லோரும் உ*/ ங்களை விரோதியாதான் பார்க்கறாங்க. இந்த சுபா மட்டும் விலக்கு போல இருக்கு. யாராவது வந்தா தான் ட்ரீட்மென்ட் பண்ணுவேன்னு சொன்ன உடனே உனக்கு போன் பண்ணி வரச் சொன்னா. அப்புறம்தான் சுபா கிட்ட நீ யாருன்னு கேட்டா சுந்தரத்தோட அண்ணன் பொண்ணுன்னு சொல்லுது".

"எனக்கும் பெரியப்பா மேல எவ்வளவு கோபம் இருந்தாலும்...................... சுபாவும் எனக்கு ஷிஜி மாதிரி இன்னொரு தங்கச்சிதான்".

சுஷின் வேறு ஏதோ சொல்ல வந்து பின்பு அதை மாற்றியது தெரிந்தாலும் எதுவும் கேட்க்காமல், "ஓகே, வா உன் தங்கச்சியை பார்ப்போம்". எனக் கூட்டிக் கொண்டு வார்டு நோக்கி சென்றார்.

போகும் போதே"சுஷின் அவளுக்கு எப்படி ஆசிட் பட்டுதுன்னு கேட்டா, லேப்ல வொர்க் பண்ணும் போது தெரியாம சிந்திடுச்சுன்னு சொன்னா. ஆனா அப்படி சிந்தி

இருந்தா கையில மேல் பாகம் பட சான்ஸ் இல்ல. அதே மாதிரி கழுத்துலயும் சில துளி பட்டு இருக்கு. கேட்டா கீழ குனிஞ்சு பாட்டிலைப் பிடிக்கப் போனேன் அப்போ தெறிச்சுடுச்சுன்னு கதை சொல்லுறா. உன்னோட தங்கச்சின்னு சொன்னதால மட்டும் தான் போலீஸ்ல புகார் குடுக்கல".

"நீயே அவ கிட்ட பக்குவமா கேளு சரியா".

"நான் பார்த்துக்கறேன் டாக்டர். சிலநேரம் அவ சொல்லுறதே உண்மையா இருந்தால்". ஆனால் அவனது குரலே அது உண்மை அல்ல என்பதை அவருக்கு சொல்லிற்று. அவனுக்கு சொல்லுவதிலும், தனக்கு தெரியப்படுத்தவும் விரும்பவில்லை என்பதை புரிந்து கொண்டு அமைதியாக இருந்தார்.

ஒரு அறையின் உள் சென்றார். அங்கு பெட்டில் கண்களை மூடி பதுமை போல் படுத்திருந்தாள் சுபா. இவர்களைப் பார்த்ததும் நர்ஸ் வேகமாக சேரில் இருந்து எழுந்துநின்றாள். அவளை கண்டுகொள்ளாமல் நேராக சுபாவிடம் சென்று அவளது கையையும் கழுத்தையும் சோதித்தார். சுஷின் அவரது செய்கையை பார்த்துக் கொண்டு பேசாமல் இருந்தான்.

"ஏன் டாக்டர் சுபா மயக்கமா இருக்காளா?"

"ஆமா சுஷின் கொஞ்சம் எரிச்சல் அதிகமா இருக்கும் அதான் ஒரு தூக்க மாத்திரை கொடுத்து தூங்க வச்சுஇருக்கேன். ஆனா இன்னும் இரண்டுமணி நேரத்தில் கண் முளிச்சுடுவா. கை தான் கொஞ்சம் வெந்துடுச்சு வேற இடம் எல்லாம் பரவாயில்லை. இரண்டு நாள்ல வீட்டுக்குப் போய்டலாம்".

"இரண்டு நாள் இங்கே இருக்க முடியாது டாக்டர். அவளோட அப்பா அண்ணங்க எல்லாம் இவளை அடிச்சே ஒருவழி பண்ணிடுவாங்க. எதுக்கும் இன்னைக்கு சாயங்காலம்

வரைக்கும் இருக்கட்டும். நான் டெய்லி இவள கூட்டிக் கொண்டு வருகிறேன்".

இதற்குமேல் இவனிடம் பேசி ஆகப்போவது ஒன்றும் இல்லை என்பதுபோல் பேசாமல் இருந்தார்.

"சரி நீ இங்க இருக்குறதா இருந்தாலும் பரவாயில்லை, போயிட்டு பிறகு வர்றதா இருந்தாலும் சரிதான். எப்படியும் கண் முழிக்க கொஞ்ச நேரமாகும்".

"இல்ல டாக்டர் வெயிட் பண்ணுறேன். அங்க போனாலும் வேலையும் ஓடாது. அதுவும் இவளை இங்கே தனியா விட்டுட்டு ஹெல்ப்-க்கு யாரும் இல்லாம கஷ்டம். நான் இங்கேயே இருக்கேன்". அங்கே இருந்த சேரில் அமர்ந்து கொண்டான்.

"ஓகே சுஷின் ஏதாவது தேவை என்றால் என்ன காண்டக்ட் பண்ணு.நான் வேற நோயாளிகளை பாக்க வேண்டி இருக்கு" .

"நீங்க உங்க வேலையைப் பாருங்க நான் ஏதாவது வேணும்னா உங்களை வந்து பார்க்கிறேன்". அவனது மனம் ஒரு நிலையில் இல்லாமல் கொந்தளித்துக் கொண்டு இருந்தது. சுபா ஏன் இப்படி எல்லாவற்றையும் மறைக்கிறா? இந்த பெரியப்பவாவது ஒழுங்கா இருக்கலாம். பொண்ணை புரிந்து கொள்வதை விட அவர்களோட வரட்டுப் பிடிவாதம் ஜாஸ்த்தியா இருக்கு.

அவளோட தேவை என்ன. அவளுக்கு என்ன பிரச்சனை ஏன் இப்படி தனியா தவிக்கிறா. கொஞ்சநேரம் பக்கத்துல உக்காந்து கேட்டா பசங்க மறைக்காம உண்மையை வீட்டில் சொல்லுவாங்க. அதை விட்டு நான் சொல்லுறதுதான் சரி, நீ அதைத்தான் கேட்க்க வேண்டும் என்று கட்டாயப் படுத்துறது. என்ன சொல்லவாறோங்குரதையே கவனிக்காம இவ தப்பு மட்டுமே செய்வான்னு முத்திரை குத்தி, பசங்களை பார்த்தா இப்படித்தான், தனியா கஷ்ட்டப் பட வேண்டிவரும்.

பார்ப்போம் என்ன சொல்லுறான்னு. பழைய பிரச்சனை திரும்ப வந்துருச்சான்னு தெரியலையே. இப்படி யோசித்துக் கொண்டிருக்கும்போதே நர்ஸ் வேகமாக வந்தாள்.

"சார்.............. சார்................" சுஷின் சிறிது கண்ணயர்ந்து விட்டான் போல, நர்ஸ் அழைத்தது அவனுக்கு கேட்க்கவில்லை.

"சார்............." உரக்க அழைத்ததும் கனவிலிருந்து விழிப்பவன் போல கண்களைத் திறந்து பார்த்தான். தான் இருக்கும் இடம் நினைவில் வந்தவன்போல,"சாரி என்னையும் அறியாமல்................ சொல்லுங்க, எதுக்கு கூப்பிட்டிங்க".

"சார் அவங்க கண் முழிச்சுட்டங்க. உங்களைத்தான் தேடுறாங்கன்னு நினைக்கிறேன். சுஷி அண்ணன் எங்கன்னு கேட்டாங்க, நான்தான் வெளிய இருக்காங்க கூட்டிட்டு வாரேன்னு சொன்னேன்".

"ஒ..... டைம் என்ன இப்போ............."

"1.30 ஆகுது சார்".

சுஷின் திடுக்கிட்டான் இவ்வளவு நேரமா தூங்கி விட்டோம்.

சுபாவின் அறைக்குள் சென்றதும் நர்ஸ்சை போகச் சொன்னான். அவள் சென்றதும் சுபாவின் அருகில் சென்று அமர்ந்தான். எப்படி ஆரம்பிப்பது என்பதில் தயக்கமாக இருந்தது. அவளாக சொல்வாளோ என்று பேசாமல் இருந்தான். சுபாவும் எப்படி சுஷினிடம் சொல்வது என்று மௌனமாக இருந்தாள். கடைசியில் சுஷினே மௌனத்தை உடைத்தான்.

"சுபா, எப்படிம்மா இருக்க".

"நல்லா இருக்கேண்ணா , அங்க சித்தி, சித்தப்பா, ஷிஜி எல்லோரும் எப்படிண்ணா இருக்காங்க".

"நாங்க எல்லோரும் நல்லாத்தாம்மா இருக்கோம்................... உனக்கு எப்படி இந்த காயம்............. இல்ல இல்ல ஆசிட் பட்டுச்சு. எனக்கு உண்மையான காரணம் வேணும். டாக்டர்ட்ட சொன்ன காரணத்தை அவரே நம்பாதபோது நான் நம்புவேன்னு நினைக்காத சரியா".அவனது குரல் இரும்பின் உறுதியுடன் ஒலித்தது.

"அண்ணா..................." சுபாவிடம் இருந்து அழுகை மட்டுமே பதிலாகக் கிடைத்தது.

## 7

இங்கே இப்பொழுது மினி, ஷிஜி , ஹேமா, .வினோ நால்வரும் டாக்டரின் அறையை நோக்கி வந்து கொண்டிருந்தனர். ஷிஜி வலியினால் முனகியபடி மெதுவாக நடந்து வந்தாள். மினி அவளை கைத்தாங்கலாக அழைத்து வந்தாள்.

"ஷிஜி, டாக்டரோட ரூம்க்கு எப்படி போகணும். ஏதாவது டோக்கன் எடுக்கணுமா", மினி.

"இல்ல மினி அவர் எங்க பேமிலி டாக்டர். சோ பேர் சொன்னா போதும் உடனே அலொவ் பண்ணிடுவாங்க. இந்த ரைட் சைடு தான் அவரோட ரூம்".

"நீங்க 2 பெரும் இங்கேயே இருங்க நாங்க நர்ஸ்ஸ பார்த்து சொல்லிட்டு வந்து உங்கள கூட்டி போறோம் சரியா. வா மனோ". ஹேமா மனோவை அழைத்துக் கொண்டு நர்ஸ் இருந்த இடம் நோக்கிச் சென்றாள்.

"சிஸ்டர், டாக்டர பார்க்கணும். ஷிஜி வந்து இருக்கான்னு கொஞ்சம் சொல்ல முடியுமா. கால்ல அடி பட்டு இருக்கு . கொஞ்சம் அவசரம்".

"டாக்டர் இப்போதான் சாப்பிட போய் இருக்கார். வர எப்படியும் அரைமணிநேரம் ஆகும். நீங்க வெயிட் பண்ணுங்க அவர் வந்ததும் உங்களை முதலில் அனுப்புறேன் சரியா".

"சிஸ்டர் என் பிரண்ட்-க்கு அடிபட்டு ரொம்ப நேரம் ஆகுது கால்வேற வீங்கிட்டே வருது. பெயின் வேற ரொம்ப இருக்குபோல முனகிக்கொண்டே இருக்கா. நடக்கவும் முடியலை. அவரோட பாமிலி ப்ரண்ட்தான் இவங்க, சோ முடிஞ்சா அவர்க்கு கால் பண்ணி பாருங்களேன். அவர் கண்டிப்பா வருவாருன்னுதான் நினைக்கிறேன்".

"நீங்க சொல்லுறது எனக்கு புரியுது ஆனா............... . சரி எதுக்கும் கால் பண்ணி பார்க்கிறேன்".

அவரது தொலைப்பேசிக்கு அழைத்தாள். அவர் அந்தப்பக்கம் எடுக்கவும் விஷயத்தைக் கேட்டுவிட்டு XXXX இந்த மருந்து அப்புறம் xray எடுக்கவும் , bandaid ம் வாங்கி வைக்கச் சொன்னார். தான் சாப்பிட்டுவிட்டு உடனே வருவதாகவும் சொல்லி வைத்துவிட்டார்.

நர்ஸ் ஹேமாவிடம்,"இந்த பேப்பர்ல எழுதி இருக்க மருந்து எல்லாம் வாங்கிட்டுவாங்க, டாக்டர் இப்போ வந்துடுறதா சொன்னார்".

நன்றி சொல்லி அதைப் பெற்றுக்கொண்டு மினியை நோக்கி சென்றனர். "மினி இந்த மருந்து எல்லாம் வாங்கி வைக்கச் சொன்னாங்க. அவர் சாப்பிட்டு இப்போ வந்துடுவாராம். நான் போய் வாங்கிட்டு வரவா".

"நானே போய் வாங்கிட்டு வாறேன்டி. நீங்க ஷிஜியை பாத்துக்கோங்க சரியா".

"ஆமா இந்த மருந்துல்லாம் எங்ககிடைக்கும்".

"ம்ம்ம்ம்ம்ம்ம்ம் மீன் மார்க்கட்ல. கேக்குறாபாரு இதெல்லாம் ஒரு கேள்வின்னு. அம்மா தாயே நீ ஆணியே புடுங்கவேண்டாம் நானே போய் வாங்கிட்டு வாறேன்", வினோ.

ஷிஜி உடனே "வினோ ஏன் இப்படி அவள ஓட்டுறிங்க................ மினி கீழே பார்மசி இருக்கு நீங்க போக வேண்டாம் வேற யாராவது போகட்டும்".

"ஏன் ஷிஜி நான் போனா என்ன நான் என்ன சின்ன குழந்தையா காணாமல் போக".

"அது இல்லடி நீ காணாம போகமாட்ட அவங்க காலு போகாம தப்பிக்கணுமில்ல அதான் சொல்லி இருப்பாங்க", ஹேமா.

"நான் மருந்து வாங்கிட்டு வந்தா அவங்க காலு எப்படிடி காணாமல் போகும் நான் என்ன அவங்க காலை எடுத்துட்டா போறேன். அவங்க காலை அவங்கபாத்துப்பாங்க", மினி.

"அது இல்லடா செல்லம்..................." இன்னும் என்ன சொல்லி இருப்பாளோ ஷிஜி அவளைத் தடுத்தாள்.

"நீங்களே போயிட்டுவாங்க மினி. அவ ஏதோ உளறுறா", ஷிஜி.

"நான் உளறுறேன், மினி தெளிவா பேசுறாளா ஷிஜி நீங்க நார்மலா தானே இருக்கீங்க. தேவுடா இந்த பொண்ணுங்க கிட்ட இருந்து என்னை காப்பாத்து", ஹேமா.

"ஏண்டி ஹேமா இப்போ எதுக்குடி அந்த தேவ்டு மாமாவை கூப்பிடுற, அவர் இங்க வந்து இருக்காரா என்ன".

"எதுக்கு கூப்பிட்டனா................. உனக்கு பதிலா அவரை மருந்து வாங்க போக சொல்லலாமேன்னுதான்", ஹேமா.

"ஓ............... அப்படியா................. நானும் எதுக்கோன்னு நினைச்சேன்", மினி.

திரும்பவும் தேவுடா என்று சொல்லப் போனவள் ஷிஜி, மனோவின் பார்வையை பார்த்து அடக்கிக் கொண்டாள். மூவரும் தங்களது சிரிப்பை மினியின் கேள்விகளுக்குப் பயந்து அடக்கிக் கொண்டனர்.

"மினி, உன் வீட்டில் எப்படி சம்மாளிக்கிறாங்க உன்னை", ஷிஜி.

"இப்போ அந்த ஆராய்ச்சி ரொம்ப முக்கியமா, தெய்வமே நீ போய் முதல்ல மருந்தை வாங்கிட்டுவா அப்புறம் டாக்டர் வந்துட்டா உன் துப்பட்டாவை வைத்தா கட்டு போடுவாரு, மனோ நீயும் இவகூட போ இவளை தனியா அனுப்பிட்டு என்னால நிம்மதியா இங்க இருக்க முடியாது".

"என்னடி வயசுப் பொண்ண வெளிய அனுப்பிட்டு காத்திருக்குற அம்மா மாதிரி பேசுற", மனோ.

"அதானே இங்க யாரு வயசுப் பொண்ணு..................",மினி.

"எங்க அம்மாடி", ஹேமா.

"ஓஓஓஓஓ................ சரி நாங்க போயிட்டு வாரோம். வா மனோ".

மனோ ஏதோ சொல்ல வாயை திறக்கவும் ஹேமா அவளை பார்த்த பார்வையில் தொண்டைக் குழியிலேயே சிக்கிக் கொண்டது வார்த்தை.

மினி போகவும் அவளை தொடர்ந்தாள் மனோ. அவர்கள் கிளம்பவும் வாய்விட்டுச் சிரித்தாள் ஷிஜி. ஹேமா அவளிடம் "இப்போ எதுக்கு இப்படி சிரிக்கிற, மினி எப்பவுமே இப்படித்தான். நாம என்ன சொல்லவாறோம் என்றே புரிந்து கொள்ளாமல் பேசிடுவா. பார்க்கத்தான் இப்படி ஏதாவது ஒரு முடிவு பண்ணிட்டா அவளை யாராலயும் மாத்தவே முடியாது. அவ்வளவு அடம். அவளே புரிந்து கொண்டால்தான் உண்டு.

"அவங்க அம்மாவுக்கு வேற இதுல ரொம்ப வருத்தம்".

ஹேமா அம்மாவைப் பற்றி பேசவும் ஷிஜிக்கு அவளது அம்மாவின் ஞாபகம் வந்ததும் கலவரமானாள். 'இன்னைக்கு அம்மாகிட்ட நல்லா வாங்கி கட்டிக்கப் போறேன். போன் பண்ணலாம்னா அவங்களை சம்மாளிக்கவே ரெண்டு பேர் வேணும். ஆண்டவா இன்னைக்கு அம்மா நல்ல மூட்ல இருக்கணுமே. அண்ணாக்கு கால் பண்ணலாம். அவன்கிட்ட சொல்லி

விஷயத்தை முடிச்சாதான் உண்டு'.ம்ம்ம்.............. அவளது பெருமூச்சு கண்டு அவளது கவனம் தனது பேச்சில் இல்லை என்பதை கண்டுகொண்டாள் ஹேமா.

"என்ன ஷிஜி திடீர்னு இவ்வளவு பெரிய மூச்சு விடுற மினியைப் பற்றியா இல்லை............"

"மினியைப் பற்றி இல்ல, வீட்டில் என் அம்மாவை எப்படி சம்மாளிப்பது என்றுதான்"

"டோன்ட் வொரி நாங்க வீட்டில்வந்து சொல்லி விடுறோம் ஓகே".

"அதெல்லாம் எதுவும் வேண்டாம் என் அண்ணாக்கு கால் பண்ணி விஷயத்தை சொன்னா போதும் அவனே பாத்துப்பான்".

(இவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது மினி சுபா இருந்த அறையை நோக்கி சென்று கொண்டிருந்தாள்)

"மினி மெடிசின் ஸ்லிப் உன்கிட்ட தானே இருக்கு",மனோ.

"ஆமாடி இன்னைக்குபோய் இப்படி ஆகும்னு நான் நினைக்கவே இல்லை. பாவம் ஷிஜி அவள் வீட்டில்வேறு என்ன சொல்லுவார்களோ".

பேசிக் கொண்டே போகும்போது பக்கத்து அறையில் இருந்து அழும் சத்தம் கேட்டது. பேசிக் கொண்டே தலையை திருப்பிப் பார்த்தாள். ஒரு பெண் பக்கத்தில் இருந்தவனின் தோளில் படுத்து அழுது கொண்டிருந்தாள்.

அவன்(சுஷின்) அந்தப் பெண்ணின்(சுபா) கன்னத்தில் கைவைத்து முகத்தை நிமிர்த்தி சொன்னான் "என் கண்ணைப் பாருடா எதுக்கு இப்படி அழுற உனக்கு நான் இருக்கேன். உனக்கு எந்த கஷ்டமும் வராமல் நான் பார்த்துக்கறேன். உன் அழுகைக்குக் காரணம் அந்த விஷயம் தானா.

சுபா ஆமாம் என்பதாக தலையை ஆட்டினாள். அவளது கண்களில் இருந்து கண்ணீர் இமைகளைத் தாண்டி வழிந்தது. அவளது துன்பம் பொறுக்காமல் தனது இதழ்களை அவளது நெற்றியில் பதித்து தோளோடு அணைத்துக் கொண்டான்.

## 8

தன்னுடன் வந்த மினியை காணாமல் மனோ திரும்பி வந்து அவளை அழைத்தாள். "இங்க என்னடி பண்ணிக்கிட்டு இருக்க. உன்னை காணாமல் நான் திரும்ப வந்து பார்த்தா ஒரே இடத்தில் நின்று வெறித்து பார்த்துக் கொண்டு இருக்க".

மினிக்கு தான் அங்கேயே நின்றுவிட்டது அப்பொழுதுதான் உறைத்தது. "ஒண்ணும் இல்லைமனோ ஏதோ யோசனையில் நின்று விட்டேன் வா போகலாம்".

மனோ நினைத்துக் கொண்டாள்.'இவள் ஆளே சரி இல்லையே ஒரு மார்கமா இருக்கா. எதுக்கும் விசாரிப்போம்'.

"மினி எதுக்கு இப்படி சைலண்ட்டா வாற. ஏதாவது பிரச்சனையா சொல்லு".

"பிரச்சனை எல்லாம் ஒண்ணுமில்லை மனோ. இந்த ஆம்பளைங்க எல்லாம் ஏன் இப்படி இருக்குறாங்க".

"ம்ம்ம்ம்.......... என்னடி எப்பவும் எங்களை மண்டை காய விடணும்னு ஒரு முடிவோடதான் இருப்பாயா. முன்னெல்லாம் நாங்க பேசுவதை வைத்துதான் குழப்புவ இன்னைக்கு அதுவும் இப்போ நீயே குழம்பிக்கிற என்னவிஷயம்".

"போ மனோ நான் கேட்டா தெளிவா பதில் சொல்லுறத விட்டுட்டு இப்படி குறுக்கு விசாரணை செய்யிற".

"அதுசரி, நீ தெளிவா கேக்கணும் அதை விட்டு நான் குறுக்கு விசாரணை பண்ணுறேனா. இந்த ஹேமாவை சொல்லணும் உன்கூட என்னை தள்ளிவிட்டுட்டு இப்போ எனக்கு நாக்கு தள்ளுது".

"போதும்வாடி பார்மசி வந்துடுச்சு".

'ஹப்பா நான் தப்பிச்சேன்'. மனோ மனசுக்குள்ளேயே சந்தோசப் பட்டுக்கொண்டாள்.

மருந்தை வாங்கிக் கொண்டு கிளம்பினர். வழியிலேயே மினி சொன்னாள்," ஹையோ மனோ மீதி காசு வாங்க மறந்துட்டேண்டி. நீ போயிட்டே இரு நான் வாங்கிட்டு வந்துடுறேன்".

"மினி கரெக்ட்டா வந்துடு பிறகு உன்னை தேடிட்டு அலைய முடியாது. ஏற்க்கனவே டைம் ஆச்சு சரியா".

"அதெல்லாம் நான் வந்துடுறேன் நீ போ முதல்ல".

மினி பார்மசி நோக்கியும், மனோ ஹேமா, ஷிஜியிடம் சென்றாள்.

அறையில்...................

"சுபா, நீ இப்படியே அழுதுட்டே இருந்தால் பிரச்சனை தீராது. நீ தைரியமா எதிர்கொள்ள கத்துக்கோ. அதை விட்டுட்டு மறைப்பதால் எந்த பிரயோஜனமும் இல்லை".

"அது இல்லைண்ணா அப்பாக்கு தெரிஞ்சா என்னைத்தான் வீட்டில் வச்சு பூட்டுவார், அதுக்கு பயந்தே நான் அவர்கிட்ட எதுவும் சொல்லாம மறைக்கிறேன். இனிமேல் ஏதாவது நடந்தால் உடனே உங்களுக்கு சொல்லுறேன் சரியா".

"அப்போ இப்போ நடந்ததுக்கு என்ன சொல்ல போற. இப்படியே விட்டா............... . இப்போவாவது அவன் வீசினது கையோட போச்சு. முகத்துல பட்டு உன் உயிருக்கு ஏதாவது ஆபத்துவந்திருந்தா".

“அப்படி எதுவும் இல்லை அண்ணா”.

“என்னடா செய்யிறது. இதை நான் டீல் பண்ணிக்கிறேன். நீ எந்த சமாதானமும் செய்யவேண்டாம் புரியுதா".

"அண்ணா, உனக்கு............. அவன்தான் செஞ்சான்னு................".

"இதைக் கண்டுபிடிக்க டிடேக்டிவ்வா வைப்பாங்க. நீ மறைக்கிறதுலையே தெரியல, பிரச்சனை அந்த ஒண்ணாதான் இருக்கும்னு".

"அண்ணா இதை இதோட விட்டுடு, பெருசாக்காதே. நான் சம்மாளிச்சுக்குவேன்”.

இவள் சம்மாளிக்க முடியாத நிலைமை கூடிய சீக்கிரம் வரப் போவது தெரியாமலே இருக்காளே. தெரிந்து இருந்தால் சுஷினை தடுத்து இருக்க மாட்டாளோ .

“அதுமட்டும் இல்லை அவங்க அப்பா பெரிய அரசியல்வாதி நமக்குதான் பிரச்சனை சோ................".

"அதனால தான் நானும் இவ்வளவு பொறுமையா போறேன், அடுத்த முறை இப்படியே இருக்காது சரியா. சரி நேரம் ரொம்ப ஆச்சு நான் சாப்பிட ஏதாவது வாங்கிட்டு வாரேன். உனக்கு என்னம்மா வேணும்".

"எனக்கு எதுவும் வேண்டாண்ணா.............. . வீட்டுக்குப் போகணும். என்னை கொஞ்சம் ட்ராப் பண்ணிடுறீங்களா. அப்பா வீட்டுக்கு வந்துட்டால் கஷ்டம்தான்".

"இப்போ நீ காலேஜ் டைம் தானே அப்புறம் என்ன............ஓஓஓஓஓ................ இன்னைக்கு எக்ஸாம் இல்ல............ நீ எக்ஸாமும் எழுதவில்லையாடா".

இல்லை என தலை ஆட்டினாள். அவளது முகத்தை ஒருநிமிடம் ஆழ்ந்து நோக்கிவிட்டு.

"சரி எதுக்கும் சாப்பிட்டதுக்கு அப்புறம் போகலாம். நீ இங்கயே இரு பத்து நிமிடத்தில் வந்துவிடுகிறேன். வேகமாக வெளியேறினான். படிகளில் இறங்க கால் வைக்கும்முன் கீழே இருந்த தண்ணீரை கவனிக்காததால் கால் வழுக்கி படிகளில் சரியப் போனவன் பிடிமானமாக பக்கத்தல் படிகளில் ஏறி வந்துகொண்டிருந்த மினியை பற்றினான்.

சுஷினின் வேகத்தையும் பாரத்தையும் தாங்க முடியாமல் மினியும் தடுமாற இருவரும் படிகளில் உருண்டனர். உருளும் போதுதான் சுஷினுக்கு தெரிந்தது தான் ஒரு பெண்ணை பிடித்துக் கொண்டு உருள்கிறோம் என்பது. அவனால் பார்க்க முடியவில்லை. ஏனென்றால் மினியின் துப்பட்டா அவனது முகத்தில் விழுந்து பார்வையை மறைத்து விட்டது.

மொத்தப் படிகளையும் கடந்த பின்பும் இருவராலும் விலகவும் முடியவில்லை. எழும்பவும் முடியவில்லை. மினியின் துப்பட்டா இருவரையும் பிணைத்துக் கொண்டது.

சுதாரித்துக் கொண்டு மினியையும் தூக்கிக் கொண்டு, அணைத்த மாதிரியே எழுந்து நின்றான். மினியோ சொல்ல முடியாத அளவு அதிர்ச்சியில் இருந்தாள். ஒரு ஆணுடன் இப்படி உருண்டு விட்டோமே, அவனது மேலில் தனது துப்பட்டா விழுந்து முகத்தை சுற்றி கிடக்கிறதே என யோசித்துக் கொண்டிருந்தாள்.

அவளும் நிதானத்துக்கு வந்து வேகமாக விலகப் பார்த்து முடியாமல் அதே வேகத்துடன் மீண்டும் அவன் மேல் விழுந்தாள். சுஷின் தடுக்கும் முன்பே இது நிகழ்ந்து விட்டது. தனது மேனியில் பூக் குவியலாய் உரசிக் கொண்டும், அடுத்து தன்மீது மீண்டும் மோதி விட்டதால் புரியாத உணர்வு அவனுள் எழுந்தது. வேகமாக சொன்னான் "கொஞ்சம் ஆடாமல் நிக்கீங்களா?".

அவனது கத்தலில் ஆடாமல் நின்றுகொண்டாள் மினி. முதலில் தனது முகத்தில் இருந்து துப்பட்டாவை

விளக்கினான். மினியின் மதி முகம் அவனது முகத்துக்கு வெகு அருகில். அவனது பார்வையில் விழுந்த வேகத்தில் இதயத்தில் சிறைவைக்கப் பட்டாள் மினி. அவள் அவனது முகத்தை பார்க்காமல் துப்பாட்டாவை ஆராய்ந்து கொண்டிருந்தாள். அவளது உடலிலும் ஹார்மோன்களின் மாற்றம். ஏதோ ஒரு இனிமையான அவஸ்த்தை அது என்னவென்று ஆராயும் நிலையில் அவள் இல்லை.

சுஷின் இன்னும் அவளை நெருங்கி அவளது காதுக்கு அருகில் சொன்னான். "நானே எடுத்துவிடுறேன் நீங்க........... உங்களுக்கு ஆட்சேபனை இல்லையே..........." .

மகுடிக்கு கட்டுப் படும் பாம்புபோல் அவளது தலை இட வலமாக ஆடியது. இதுவே போதும் என்பதுபோல் தன்னை சுற்றியும் அவளை சுற்றியும் இருந்த அவளது துப்பட்டாவை எவ்வளவு முடியுமோ அவ்வளவு நிதானமாக எடுத்து விட்டான். துப்பட்டாவை எடுத்த பின்பும் இருவரும் விலகாமல் தங்களது உலகில் இருந்தனர்.

இந்த நிலையில் ஒரு குரல் கேட்டது. "பார்க்கு, பீச், தியேட்டர் இங்கதான் இந்த லவர்சுங்க தொந்தரவுன்னா இப்போ ஹோச்பிடல்ல நடு வழியில இப்படி நிக்கிதுங்கபாரு". ஒரு வயதான பெண்மணி புலம்பிக் கொண்டு சென்றார்.

இதைக் கேட்டதும் சுஷின் வேகமாக மினியை விட்டு விலகி நின்றான். மினி இவர் யாரைச் சொல்லுகிறார் என்று திரும்பிப் பார்த்தாள். அங்கே வேறு யாரும் இல்லாததைக் கண்டவுடன்தான் அவர் தங்களைச் சொல்லுகிறார் என்பது புரிந்தது .

நிலைமையை சம்மாளிக்கும் பொருட்டு சுஷின் சொன்னான் "ஐ’ம் சாரி. கீழே தண்ணி இருந்ததை கவனிக்காமல் விழப் பார்த்தேன். சோ உங்களையும் சேர்த்து விழ வைத்துவிட்டேன்".

இந்த குரலைக் கேட்டதும் வேகமாக அவனைப் பார்த்தாள்.

# 9

சுஷினின் முகத்தைப் பார்த்ததும் மினி அவன் வேண்டும் என்றே தன்மீது விழுந்து இருக்கிறான் என நினைத்தாள். அவளுக்கு அவனது தோளில் படுத்து அழுத சுபாவின் நினைவு வந்தது.

"வேண்டும் என்றே வந்து விழுந்துவிட்டு இப்போ என்ன கதை சொல்லிட்டு இருக்கீங்க. எந்தப் பொண்ணைப் பார்த்தாலும் உடனே அணைக்க வேண்டும் என்று தோணுமோ. அதுதான் பார்த்தேனே கொஞ்சம் முன்னாடி. உங்களைப் பற்றி தெரியாது.எப்போடா பொண்ணுங்க மாட்டும் அவங்களை மயக்கலாம்னு காத்துகிட்டு அலையிறது . ச்சே.... நீங்க எல்லாம் அக்கா தங்கச்சி கூட பொறக்கலை. உங்களை பெற்றதும் ஒரு பொண்ணுதானே. மனசாட்சின்னு ஒண்ணு இருந்தால் இனிமேல் இப்படி ஒரு தப்பை திரும்ப பண்ணாதீங்க ".

'என்னடா இது என்னமோ என்னைப் பற்றி முழுசாத் தெரிஞ்சவமாதிரி பேசுறா' அவன் அவள் பேசுவதையே பார்த்துக் கொண்டிருந்தான். அவள் கொஞ்சம் முன்னாடி என்று சுபாவின் விஷயத்தை சொன்னாள். ஆனால் அவள் படிகளில் உருண்டதைத் தான் சொல்லுகிறாள் என சுஷின் நினைத்தான்.

"ஹல்லோ மேடம் தெரியாமல் நடந்த தப்புக்கு நான் மன்னிப்பு கூட கேட்டாச்சு இதுக்கும் மேல என்ன செய்யட்டும். உங்களுக்கு ஏதாவது அடி பட்டுடுச்சா நான் வேண்ணா டாக்டர் கிட்ட கூட்டிட்டு போறேன் இதுக்கு எதுக்கு என் அம்மா தங்கச்சி எல்லாம் இழுக்கறிங்க".

"ஓஹோ உங்க அம்மா தங்கச்சியைப் பற்றி நான் எதுவும் சொல்லாமலே இவ்வளவு கோபம் வருதே அடுத்த வீட்டுப் பொண்ணும் அவங்களை மாதிரின்னு ஏன் உங்களுக்கு புரிய மாட்டேங்குது".

அவனுக்கு புரிய வைத்துவிடும் வேட்க்கை அவளது பேச்சில் தெரிந்தது. ஆனால் பாவம் அவன்தான் ஒரு தப்பும் செய்யவில்லையே. பிறகு எப்படி இவள் சொல்லுவது புரியும்.

"அதுதான் நான் வேண்டும் என்று எதுவும் செய்யவில்லையே. என்னை மீறி நடந்த ஒன்றுக்கு நான் எப்படி பொறுப்பாவேன்.

"இப்படி சொல்ல உங்களுக்கு வெக்கமா இல்லை. உடம்பும் மனசும் உங்க கண்ட்ரோல இருந்தா எப்படி தப்பு நடக்கும்" .

சுஷின் பொறுமை இழக்கத் துவங்கினான் ஆனாலும் அவளது பெயரை அறிந்து கொள்ளும் ஆவல் அவனுள் எழுந்தது. அவளது கழுத்தில் கிடந்த ஐடி கார்டு அவனது பார்வையில் பட்டதும் முகத்தில் புன்னகை அரும்பியது.

பேசிக் கொண்டிருக்கும் போதே அவன் சிரித்தது அவளது எரிச்சலை இன்னும் தூண்டியது.

அவள் இன்னும் என்ன என்ன சொன்னாளோ எதுவும் அவனது கருத்தில் பதியவில்லை. அவளது துப்பட்டா ஐடி கார்டை மறைத்து இருந்தது. அவனது பார்வை சென்ற இடத்தைப் பார்த்ததும் அவளது பேச்சு பாதியில் நின்றது. தனது துப்பட்டாவை வேகமாக சரியாகப் போட்டாள்.

ஆனால் இதை கவனிக்கும் நிலையில் சுஷின் இல்லை. அவனது கவனம் முழுவதும் அவளது ஐடியை பார்ப்பதிலேயே இருந்தது. முடிவில் அவளது பெயரைத் தெரிந்து கொண்டான். அவளது பெயரை முணுமுணுத்தான் மினிலா...........

அவனது பார்வை அகலாததைக் கண்ட மினி "உங்க புத்தி தெரிந்தும் உங்களிடம் பேசியது என் தப்பு. நான் போகிறேன்" என சொல்லிக் கொண்டே அவனது பதிலை எதிர் பார்க்காமல் சென்றாள்.

ஆனால் அவள் கொஞ்சம் கவனித்து இருந்தாலும் தெரிந்து இருக்கும் அவன் பார்த்தது தனது ஐடி கார்டைத் தான் என்பது. மினிதான் அவனை திருத்துவதிலேயே இருந்தாளே.

அவள் சென்றதற்க்குப் பின்பும் அங்கேயே நின்றான். பிறகு சுபாவுக்கு சாப்பாடு வாங்க வேண்டும் என்ற நினைப்பு வந்ததும் மினியை விட்டு ஹோட்டல் நோக்கிச் சென்றான்.

மினி கோபமாக ஷிஜி இருக்கும் இடத்துக்குச் சென்றாள். மினி போன வேகத்தில் தனது துப்பட்டாவை எடுத்து ஹேமாவின் மீது வீசினாள். ஏற்க்கனவே அங்கு மனோ ஹேமாவிடம் மண்டகப்படி வாங்கிக் கொண்டிருக்க, இவளது செயலைக் கண்டு ஹேமா மனோவை கோபப் பார்வை பார்க்க அந்தப் பார்வையின் அர்த்தம் புரிந்தும் பேசாமல் இருந்தாள்.

பார்வையாலேயே என்னவென்று கேள் என்பதுபோல் செய்கை செய்ய, நான் மாட்டேன் என்று வேகமாக தலையை ஆட்டினாள் மனோ. இவர்களின் தவிப்பைப் பார்த்து ஷிஜி, "என்ன மினி எதுக்கு இவ்வளவு கோபம். அதுவும் துப்பட்டாவை தூக்கி வீசுகிற அளவுக்கு".

"எல்லாம் இந்த துப்பட்டாவால் வந்தது இதை காலையிலேயே போடாமல் வந்து இருந்தால் உனக்கும் அடி பட்டு இருக்காது. இந்த ஹோச்பிடலுக்கும் வந்து இருக்க வேண்டாம், அவனையும் பார்த்து இருக்க வேண்டாம், அவன் என் மேல் விழுந்தும் இருக்க மாட்டான் , நானும் அவன் மேல் விழுந்து இருக்க மாட்டேன். அவன் பார்வை..................." , இன்னும் என்ன சொல்லி இருப்பாளோ, தன் சுய உணர்வுக்கு வந்து மேலே எதுவும் பேசாமல் இருந்தாள்.

இவர்கள் அனைவரும் அவளிடம் விசாரிக்கும் முன்னர் நர்ஸ் வந்து டாக்டர் அழைப்பதாகக் கூறவும் ஷிஜியை அழைத்துக் கொண்டு அவரது அறையை நோக்கிச் சென்றனர்.

டாக்டர் அவளை பரிசோதித்துவிட்டு "காலில் எலும்பு முறிவு எதுவும் இல்லை ஆனால் சுளிக்கி இருக்கு. இந்த XXXX மருந்து எடுத்துக்கோ ஒரு இரண்டு நாள் நடப்பதை அவாய்ட் பண்ணு சரியா"

"பயப்படுற மாதிரி எதுவும் இல்லையே டாக்டர். கால் வீக்கம் வேற வச்சுட்டே வருது அதனாலதான் கேட்கிறேன்" ,ஹேமா.

"அதெல்லாம் ஒன்றும் ஆகாது காலை தொங்கப் போடாமல், நடக்காமல்,ஸ்ட்ரெயின் பண்ணாமல் இருந்தால் போதும் டூ வீக்ஸ்ல சரி ஆயிடும். பெயின் தெரியாமல் இருக்கத்தான் மருந்து குடுத்து இருக்கேன் சரியா".

அடுத்து ஷிஜியைப் பார்த்துக் கேட்டார் "இவங்க எல்லாம் உன்னோட பிரண்ட்ஸா. ஆமா எப்படி அடி பட்டுச்சு வண்டியில் இருந்து விழுந்துட்டியாம்மா. இவங்கதான் உன்னை கூட்டிட்டு வந்தாங்களா".

மினி ஏதோ சொல்லத் துவங்கவும் ஷிஜி வேகமாக "ஆமா அங்கிள் வண்டியில் இருந்து ஸ்லிப் ஆகி விழுந்துட்டேன். நாங்க கிளம்புறோம் டைம் ஆச்சு வீட்டில் அம்மா தேடுவாங்க வருகிறோம்". அவரது பதிலை எதிர்பார்க்காமல் கிளம்பினர்.

அவர்கள் செல்லவும் நினைவு வந்தவராக, ஷிஜி சுஷின் இங்கதான் இருக்கான். நீ கால் பண்ணிப் பாரு அவனோட பிரண்டைப் பார்க்கவந்தான்.

சுபாவைப் பற்றி யாரிடமும் சொல்லவேண்டாம் என்று சுஷின் கேட்டுக் கொண்டதாலேயே அவ்வாறு சொன்னார்.

"அப்படியா அப்போ நான் அவன் கூடவே வீட்டுக்கு போய்டலாம். தாங்க்ஸ் போர் யுவர் ஹெல்ப் அங்கிள் ".

வெளியே வந்ததும் சுஷினுக்கு கால் செய்தாள். சுஷின் போனை எடுக்கவும் " அண்ணா நான் தான் நீ இப்போ எங்க இருக்க. நான் நம்ம டாக்டர் ஹோச்பிடல்ல தான் இருக்கேன்".

"நீ காலேஜிக்கு போகாமல் அங்க என்ன பண்ணுற. உடம்பு சரி இல்லையாடா. அம்மாவும் கூட வந்து இருக்காங்களா. ஏதாவது ஹெல்ப் வேணுமா சொல்லு".

ஆமா ஹெல்ப் வேணும் அது வந்து நான் வண்டியில் இருந்து கீழே விழுந்துட்டேன் காலில் கொஞ்சம் அடி நடக்கக் கூடாதுன்னு டாக்டர் சொல்லிட்டார். என் ஸ்கூட்டில வர முடியாது அதான்................".

"நான் அங்கேதாண்டா இருந்தேன். இப்போதான் ஒரு அவசர வேலையா கிளம்புனேன் நான் என் பிரண்டை வரச்சொல்லுகிறேன். நீ அங்கேயே இரு. இன்னும் கொஞ்ச நேரத்தில் அவன் அங்கே இருப்பான்" .

அவன் ப்ரண்ட் எனச் சொன்னதும் யார் என்று வாய்வரை வந்த கேள்வியை அடக்கினாள். ஆனாலும் அவளையும் மீறி அவளது உதடுகள் கேட்டே விட்டது." யாருண்ணா வருவா" .

"பிரகாஷ் தாண்டா எனக்கு வேற ப்ரண்ட் யார் இருக்கா புதுசா கேக்க ".

அவனது பதிலிலேயே படபடக்கத் துவங்கிய மனதை அடக்கி சுஷினின் பேச்சில் கவனமானாள்.

"பிராக்ச்சர் ஏதாவது ஆயிருக்காடா. நீ வேண்ணா அங்கேயே ரெஸ்ட் எடேன் நான் அம்மாவிடம் பேசி அனுப்பி வைக்கிறேன்" .

"ஐயோ அண்ணா நான் இன்னும் அம்மாகிட்ட சொல்லவே இல்லை. உன்கூட வந்ததா நீ சம்மாளிப்பியேன்னு பார்த்தேன். நீ இப்படி சொல்லுற".

"இப்படிவேண்ணா பண்ணலாம் நீங்க போங்க நான் அப்படியே வீட்டுக்கு வரமுடியுமான்னு பார்க்குறேன். ஓகே" .

"கண்டிப்பா வா நீ".

"சரி சரி வைக்கிறேன்". சுஷின் பேசி முடித்ததும் சுபா கேட்டாள். ஷிஜிக்கு என்ன ஆச்சு. நீங்க என்னை இங்கேயே

ட்ரோப் பண்ணிட்டு போங்கண்ணா நான் போய்க்கிறேன். எப்படியும் நீங்க வீடுவரை வரமுடியாதே".

அவளது பேச்சை கவனிக்காமல் பிரகாஷுக்கு போன் செய்து அவனை ஹோச்பிடல்க்கு போகச் சொன்னான். பேசி வைத்துவிட்டு ,"சுபா அவளை கூப்பிட நான் போகணும்னாலும் இப்போ லேட் ஆயிடும். அதுவும் இல்லாமல் உன்னை தனியா அனுப்ப முடியாதுடா. எனக்கு நீவேற அவவேற இல்லை புரியுதா இனிமேல் இப்படி பேசுவதை நிறுத்து".

பிறகு அவளது தெரு கோடியில் அவளை இறக்கிவிட்டு தனது வீட்டை நோக்கிச் சென்றான். மின்னல் கீற்றாய் மினியின் நினைவு அவனை தொற்றிக் கொண்டது. மினிலா, மினி, மிலா சே......... நிலா ம்ம்ம்.......... இது அழகா இருக்கு. அவளுக்கு இந்தப் பேருதான் பொருத்தமா இருக்கு.

சுஷினின் போன் வந்ததும் ஆபீஸ் காரை எடுத்துக் கொண்டு ஹோச்பிடல் சென்றான் பிரகாஷ். அவனது சிந்தனை ஷிஜியை சுற்றியே வந்தது. அவனது மன ஓட்டத்துக்கு ஏற்ப கார் சாலையில் சீறியது. பதினைந்து நிமிடங்களில் ஷிஜியின் முன்னால் சென்று நின்றான்.

போன வேகத்தில் ஷிஜியை தலை முதல் கால்வரை ஆராய்ந்தான். அவனது பார்வையை உணர்ந்து சிவக்கத் துவங்கிய முகத்தையும், அவனை பார்வையாலேயே வருடத் துடித்த கண்களையும் அடக்கி மினியிடம் சொன்னாள்.

"இவர்தான் பிரகாஷ் எங்க GM, என் அண்ணாவோட ப்ரண்ட். என்னை கூட்டிட்டு போக வந்து இருக்கார்" .

இவ்வளவு நேரமும் இதைத் தானே சொல்லிட்டு இருந்தா புதுசா சொல்லுற மாதிரி இப்போ என்ன என்பதுபோல் ஹேமாவும், மனோவும் பார்க்க, மினி "ஓ......... அப்போ நாங்க கிளம்பட்டுமா".

"என்ன மினி கிளம்பட்டுமான்னு சுலபமா கேட்டுட்ட, அவளோட ஸ்கூட்டி நான் ஓட்டிட்டு வந்தது ஞாபகம் இருக்கா. அதை என்ன பண்ணுறது",ஹேமா.

"அது இங்கேயே இருக்கட்டும் நாங்க பிறகு எடுத்துக்கறோம். டைம் ஆச்சு உங்க வீட்டில் தேடப் போறாங்க".

"இல்லை ஷிஜி உன் வீட்டிலேயே உன்னை விட்டுட்டு உன் அம்மாவிடம் சொல்லிவிட்டு கிளம்புறேன் இல்லாமல் என் மனசே கேட்க்காது ",மினி.

"நீ எப்படிடி ரெண்டு ஸ்கூட்டியும் ஓட்டிட்டு போவ ", மனோ.

"நீங்களும்தானே வாரிங்க அப்புறம் என்ன",மினி.

"என்னது நாங்களுமா............" ஒரே நேரத்தில் அலறினர் ஹேமாவும், மனோவும்.

"மினி சொன்னா கேளுங்க, நீங்க எல்லோரும் போங்க நான் பார்த்துக்கறேன்".

எல்லோர் சொல்லியும் கேட்க்காமல் ஷிஜியின் ஸ்கூட்டியை தானே கொண்டுபோய் கொடுப்பதாக சொல்லிவிட்டாள். அனைவரும் கிளம்பினர். ஹேமாவும் மனோவும் சென்று விட்டனர்.

ஷிஜி பிரகாஷுடன் காரில் ஏறிக் கொண்டாள். பின் சீட்டில் காலை நீட்டி அமர்ந்து கொண்டாள்.

காரின் கண்ணாடி வழியாக பிரகாஷ் பின்னாடி பார்த்தான். அப்பொழுது ஷிஜியும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். இருவரும் உடனே பார்வையை திருப்பிக் கொண்டனர். பார்வைதான் திரும்பியதே தவிர மனம் அடுத்தவரைச் சுற்றியே வந்து கொண்டிருந்தது. இருவருமே ஒருவரது அருகாமையை மற்றவர் விரும்பினர்.

கார் சீராக சென்று கொண்டிருந்தது................ .

மினி அவர்களை பின்தொடர்ந்தாள்.

## 10

நிமிடங்கள் கூட நீங்காமல்

உன்னைப் பார்க்கும்

நொடிகளுக்கான என் தேடல்

இது காதலென்றால்.............

கா ருக்குள்ளே கனமான மௌனம் நிலவியது. பிரகாஷ் பேசட்டும் என்று ஷுஜியும் ஷிஜி பேசட்டும் என்று பிரகாஷும் பேசாமல் இருந்தனர். பார்வைகள் மட்டும் ஒருவரைத் தெரியாமல் ஒருவர் தொட்டு மீட்டுக் கொண்டனர்.

இருவரது நினைவும் பின்னோக்கிச் சென்றது. அப்பொழுது ஷிஜி பத்தாவது முடித்து இருந்தாள். சின்னப் பெண். அவளையும் அழைத்துக் கொண்டு பிரகாஷைப் பார்க்க சுஷின் சென்றிருந்த போது அவனுக்கு நல்ல காய்ச்சல். சுஷினைப் பார்த்ததும் " வாடா என்ன சொல்லாமல் வந்து இருக்க ஏதாவது விசேஷமா. எதுக்கு ஷிஜியையும் கூட்டிட்டு வந்திருக்க".

நான் இங்கே பக்கத்துல ஒரு ரிலேடிவ்வை பார்க்க வந்தேன் உன்வீடும் கிட்டேதானே உன்னையும் அப்படியே பார்த்துட்டு போகலாம் என்று வந்தேன். ஆனா நீ........... உனக்கு உடம்பு சரி இல்லையாடா. கண்ணெல்லாம் சிவந்து போய் ............. என்னமோ ஒருமாதிரி இருக்க".

"கொஞ்சம் காய்ச்சலா இருக்குடா மருந்து சாப்பிட்டேன் இப்போ பரவாயில்லை. நீ என்ன சாப்பிடுற காபி , கூல்ட்ரிங்க்ஸ் எது வேணும்".

"நான் உனக்கு உடம்பு சரி இல்லையேன்னு கவலை பட்டா நீ என்னமோ உபசரிக்கிற. நீ இரு நான் போய் என்ன

இருக்குன்னு பாத்துட்டு வரேன்".

கிச்சென் நோக்கி சென்றான். அங்கு சென்று காபி, பிரட் எடுத்துக் கொண்டு வந்து அவனுக்கு சாப்பிடக் கொடுத்து தங்களுக்கும் எடுத்துக் கொண்டான்.

பிரகாஷ் சொன்னான், " என் அம்மாவோட ஞாபகம் எனக்கு உடம்பு சரி இல்லாத அப்போ ரொம்ப வருதுடா. நான் சின்னப் பையனா இருந்தப்போ எனக்கு காய்ச்சல் வந்தா என் கிட்டயே உக்காந்து இருப்பாங்க. என்னை அவங்க மார்போட அணைச்சு வச்சுப்பாங்க. அவங்க இருக்காங்கங்குற நினைப்பிலேயே எனக்கு காய்ச்சல் பற்றிய கவலை வரவே வராது. ஆனா இப்போ................ . சின்ன வயசுலேயே அவங்க என்னை விட்டுப் போனது நான் அனாதையா நின்னது முடியலடா.................".

அவன் கலங்குவது கண்டு முதல் முறையாக ஷிஜி அவனை கூர்ந்து பார்த்தாள். அவளது மனம் இனம் புரியாத தவிப்பிற்க்கு உள்ளானது. அது இன்னதென்று அவளால் உணர முடியவில்லை.

சுஷின் அவனது கரத்தை ஆதரவாக பற்றிக் கொண்டான். "நீ அனாதைன்னு யாருடா சொன்னது. நாங்க இருக்குற வரைக்கும் எப்படிடா இப்படி சொல்லுவாய் இப்போவே கிளம்பு எங்க வீட்டுக்கு ".

"நான் ஏதோ உணர்ச்சிவசப்பட்டு சொல்லிட்டேண்டா. சரி விடு அப்புறம் எப்போ உன் ஆபீசுக்கு போகப் போற".

அவன் பேச்சை மாற்றுவது புரிந்து குடித்து முடித்து வைத்திருந்த கப்களை எடுத்துக் கொண்டு சென்றான். அவன் சென்றதும் ஷிஜி வேகமாக பிரகாஷ் அருகில் சென்று, அவன் என்ன என்று கேட்க்கும் முன்னால், "நான் வேண்ணா உங்க அம்மாவை மாதிரி உங்களை மார்போட கட்டிக்கவா அப்போ உங்களுக்கு கஷ்ட்டமாவே இருக்காது " .

அவனது அதிர்ந்த முகத்தை பார்த்த பின்புதான் தான் அவனிடம் என்ன சொன்னோம் என்பதே அவளுக்கு புரிந்தது. இருவரும் மேலும் என்ன பேசி இருப்பார்களோ சுஷினின் " என்னடா சொல்லுறா என் தங்கச்சி" என்ற குரலில் திடுக்கிட்டுத் திரும்பினர்.

"ஏதாவது ஹெல்ப் வேணுமான்னு கேட்டுட்டு இருந்தாடா வேற ஒண்ணும் இல்லை".

அவன் சொல்லுவதற்கு எந்த எதிர்ப்பையும் வெளிப் படுத்தாமல் மௌனமாக இருந்தாள். ஆனால் அவளது பார்வை அவனது முகத்தை விட்டு அகலவில்லை.

"இவ ஹெல்ப் நல்ல பண்ணுவாடா, நீ சமைச்சு வச்சா சாப்பிடுவா, நீ துணி தொவைச்சு அயன் பண்ணி குடுத்தா நல்லா நீட்டா டிரஸ் பண்ணிப்பா, நீ ப்ரீயா இருந்தா உன்னை கூட்டு போய் உன் பர்ஸ்சை காலி பண்ணுவா. இப்படி நல்ல ஹெல்ப் பண்ணுவாடா".

"அண்ணா........... ஏன் இப்படி சொல்லுற. நான் உன்கிட்ட பேசவே மாட்டேன் போ".

அவளது குழந்தை தனமான சிணுங்கலை இருவரும் ரசித்தனர், சிரித்தனர். இரண்டுக்கும் நிறைய வித்தியாசம் இருந்தது. பிரகாஷ் தனது தலையை வேகமாக ஆட்டிக் கொண்டான்.

சுஷின் அவனது நிலையை கவனிக்காமல் தங்கையை சமாதானம் செய்து கொண்டிருந்தான். ஆனால் ஷிஜி பிரகாஷின் செய்கையை புரியாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

பிறகு விடை பெற்றுக் கிளம்பினர். சுஷின் வேகமாக சென்றுவிட, ஷிஜி பின்தங்கினாள். பிரகாஷ் அவளிடம் "ஷிஜி நீ சின்னப் பொண்ணு உனக்கு நீ என்ன சொன்னன்னே நான் இப்போ கேட்டா தெரியாது. முதல்ல நல்லா படி இங்கே பேசியதை இத்தோட மறந்துடு சரியா. போ உன் அண்ணன் காரை ஸ்டார்ட் பண்ணிட்டான்".

ஷிஜி எதுவும் சொல்லாமல் அவனை பார்த்துக் கொண்டே சென்றாள். அன்று முதல் இருவருமே தங்கள் மனதில் ரகசியமாக மற்றவரை விரும்பத் துவங்கினர். ஆனால் அதற்கும் மேல்..................... .

கார் சுஷினின் வீட்டின் முன்னால் நின்றது.

கார் சத்தம் கேட்டு சுலோ வெளியே வந்தார். "அட பிரகாஷா வாப்பா என்ன இந்த நேரத்துல சுஷின் ஏதாவது பயில் எடுத்துட்டு வரச் சொன்னானா. உள்ள வா எதுக்கு வெளியவே நிற்க்கிற ".

"அதுவந்து ஆன்ட்டி.............." . அவன் சொல்லிக் கொண்டு இருக்கும் போதே மினி ஷிஜியின் ஸ்கூட்டியை ஓட்டிக் கொண்டு கேட்டின் உள் நுழைந்தாள். வண்டியை நிப்பாட்டிவிட்டு கீயை எடுத்துக் கொண்டு சுலோவிடம் சென்றாள். இவளைப் பார்த்ததும் ஷிஜியும் காரில் இருந்து மெதுவாக இறங்கினாள்.

ஷிஜியின் தடு மாற்றத்தைப் பார்த்து அவளிடம் செல்லத் துடித்த காலை கட்டுப் படுத்திக் கொண்டு பிரகாஷ் நிற்க, மினி வேகமாகச் சென்று அவளைத் தாங்கிக் கொண்டாள். அவளை நன்றிப் பார்வை பிரகாஷ் பார்க்க, இவன் ஏன் இப்படிப் பார்க்கிறான் என நினைத்துக் கொண்டு அவளை கைத்தாங்கலாக அழைத்துக் கொண்டு சுலோவிடம் சென்றாள் .

சுலோ பேசத் துவங்கும் போது சுஷினின் கார் அங்கு வந்து சேர்ந்தது. காரை நிறுத்திவிட்டு வேகமாக ஷிஜியிடம் சென்றான். சென்றவன் இனிமையாக அதிர்ந்தான். நம்ம நிலா எங்கே இங்க............... அவன் அவளையே பார்த்துக் கொண்டு வந்தான்.

சுஷினைப் பார்த்ததும் மினியின் மனம் இவன் ஏன் இங்க வந்து இருக்கான். என்னை பாலோ பண்ணுறானோ. அதுவும் பார்க்குறதைப் பாரு இத்தனை பேர் இருக்காங்களேன்னு ஒரு இது வேண்டாம் . அவன்

பார்ப்பதாக சொல்லிக் கொண்டு அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் பார்ப்பதை கண்கொண்டு அவனது மனம் றெக்கை கட்டிக் கொண்டு பறந்தது. இந்த நினைப்பிலேயே அவன் அவளைப் பார்த்து கண்களை சிமிட்டினான். அவளது மனம் அதிர்ந்தது. இவள் அதிர்ந்ததை விட பிரகாஷ் இன்னும் இன்பமாக அதிர்ந்தான். கடைசியா சுஷின் ஒரு பொண்ணு கிட்ட விழுந்துட்டானே.

நண்பனின் மனமாற்றம் அவனுக்கு மகிழ்ச்சியை கொடுத்தது. மினி திரும்பி இருந்ததால் அவளை பார்க்க முடியவில்லை அவனால்.

மினி மனதுக்குள்ளேயே சுஷினை அர்ச்சனை செய்து கொண்டிருந்தாள். 'இவன் இத்தனை பேர் முன்னாடியே இப்படி செய்யிறானே அப்போ அங்கே தனியா அவளிடம் எப்படி நடந்து இருப்பான். என்கிட்டே வந்தால் தெரியும் கன்னம் பழுக்குறது. பொறுக்கி பார்வையைப் பாரு.................'

இன்னும் என்னவெல்லாம் நினைத்து இருப்பாளோ , சுலோவின் குரல் அனைவரையும் நடப்பிற்கு கொண்டு வந்தது.

"ஷிஜி என்ன ஆச்சு எக்ஸாமுக்கு போயிட்டு நேரா வீட்டுக்கு வராமல் எங்கேயோ போய் ஊர் சுத்திவிட்டு இப்படி விழுந்து வாரிட்டு வந்து இருக்கியா. சொன்ன பேச்சை கேட்கக் கூடாதுன்னு முடிவோடதான் இருக்கியா".

"ஹையோ ஆன்ட்டி ஷிஜிமேல எந்த தப்பும் இல்லை. எல்லாம் என்................." .

"அம்மா மினி தெரியாமல் வண்டிக்கு குறுக்க வந்துட்டாங்க நான் அவங்க மேல மோதாமல் இருக்க வண்டியை திருப்பினேனா ஸ்லிப் ஆகிடுச்சு". அப்படித்தானே மினி அவள் கேட்ட தோரணையிலேயே “அப்படியா ஷிஜி” என்று கேட்டு விட்டிருந்தாள் மினி.

சுலோ புரியாமல் பார்க்கவும் "ஆமா ஆன்ட்டி நான் ஓடி குறுக்கே ஷிஜி வந்து.............. ".

ஷிஜி மனதுக்குள்ளே இவ தேரை இழுத்து தெருவில் விடாமல் அடங்கமாட்டா போல இருக்கே. இவ வாயை இப்போ மூடலை இவளும் டேமேஜ் ஆகி என்னையும் டேமேஜ் பண்ணிடுவா.

"அம்மா உள்ள விடப் போறீங்களா இல்ல................. நான் விளக்கம் குடுத்து உங்களுக்கு திருப்தி ஆனாதான் விடுவீங்களா.

'மனசுக்குள்ளேயே இந்த டீச்சர் புத்தி எப்போதான் போகுமோ ஆண்டவா..................' என எண்ணிக்கொண்டே வெளியே, “அம்மா.....

பசிக்குதும்மா, அதை விட கால்வலி உயிர் போகுது. நான் சாப்பிட்டதுக்கு அப்புறம் தான் மருந்து சாப்பிட வேண்டுமென்று டாக்டர் சொன்னார். நீங்க என்னன்னா அடிபட்டு வந்த என்னை நிக்கவச்சு கேள்வி கேக்குறிங்க" .

ஷிஜியின் பேச்சைக் கேட்டு அனைவருமே அசந்து விட்டனர். மினி இமைக்கக் கூட மறந்து அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள். சுஷின் தனது சிரிப்பை வாய்க்குள்ளேயே அடக்கிக் கொண்டான். பிரகாஷ் ஷிஜியை புதிதாக பார்ப்பதுபோல் பார்த்துக் கொண்டிருந்தான்.

சுலோ, அவளுக்கு பசிக்கிறது என்று சொன்னவுடன் வேறு எதைப் பற்றியும் கேட்க்காமல் அவளது பசியை முதலில் கவனிக்கலாம் என்ற முடிவுக்கு வந்தார்.

"சரி முதல்ல உள்ள வந்து எல்லோரும் சாப்பிடுங்க வாங்க".

"நான் ஆபீஸ் போகணும் ஆன்ட்டி இன்னொருநாள் வந்து சாப்பிடுறேன்".

அவன் இவ்வாறு சொன்னதும் ஷிஜி எதுவும் சொல்லாமல் அவனை திரும்பிப் பார்த்தாள். அவளது பார்வை என்ன சொன்னதோ எதுவும் பேசாமல் உள்ளேவந்தான். மினி உள்ளே வராமல் நிற்க்கவும் அவளை தன்னை உள்ளே கூடிச் செல்லுமாறு சொல்ல, சுலோ ஒரு பார்வை பார்த்துவிட்டு உள்ளே சென்றார்.

மினிக்கு சுஷின் பற்றி தெரியவேண்டும்போல் இருந்தது. இவனை யாரும் எதுவும் சொல்லவில்லை கேட்க்கவும் இல்லையே என எண்ணிக் கொண்டிருக்கும்போதே கேள்வியின் நாயகனே வந்தான். வந்தவன் ஷிஜியின் காதில் "நான் வராமல் இருந்தாலும் சம்மாளிச்சு இருப்பியேடா அப்புறம் ஏன் என்னை கூப்பிட்ட. அம்மாவை பாரு ஒருவார்த்தை சொல்லாமல் உள்ளே கூட்டிட்டு போய்ட்டாங்க".

"ஹையோ அண்ணா நீ வந்ததால்தான் அவங்க உன்னை பாக்குற கேப்புல இவளை சம்மாளிக்க முடிஞ்சுது இல்ல.............என் பாடு அப்போ தெரிஞ்சு இருக்கும் .

அவள் அண்ணா என்று சொன்னதும்தான் மினிக்கு புரிந்தது இவன் இந்த வீட்டுக்கு சொந்தக் காரனென்று. பேசாமல் திரும்பி சென்றுவிடலாம் என்று நினைக்கும்போது சுலோ அவளிடம் கேட்டாள்.

"வாம்மா உன்பெயர் என்ன? ஏன் தயங்கி தயங்கி வாற தைரியமா வா உன்னை யாரும் எதுவும் சொல்ல மாட்டோம்".

அவளது பெயரைக் கேட்டதும் மினியும், சுஷினும் ஒரே நேரத்தில் சொன்னார்கள் .

"மினி.............. , நிலா.............." .

# 11

யாருக்கும் அடிமை ஆகாத என்மனம்

உன் காலடியில் விழத் துடிக்கிறதே

இது காதலென்றால்...................

சுலோ வேகமாக திரும்பி சுஷினைப் பார்த்தார். அவரது பார்வையை சந்திக்க முடியாமல் தலை கவிழ்ந்தான் சுஷின். பிரகாஷ் கூட அவனது அம்மா இப்பொழுது என்ன சொல்லப் போறார்களோ என்று கலவரமாகப் பார்த்தான்.

மினி அவனை எரித்து விடுவதுபோல் பார்த்துக் கொண்டிருந்தாள். ஷிஜி நிலைமையை சம்மாளிக்கும் பொருட்டு , " இவளோட பேரு மினிலாம்மா எல்லோரும் மினின்னு சொல்லுவாங்க. நான் மட்டும் நிலான்னு சொல்லுவேன் அண்ணனனுக்கு போன் பண்ணும்போது நிலாவும் கூட வாறதா சொன்னேனா அதான் அண்ணா நிலான்னு சொல்லிட்டான்".

தனது அண்ணனைப் பார்த்து கண்ணைச் சிம்மிட்டினாள், மினியின் கரத்தை அதிகமாக அழுத்தி எதுவும் சொல்லி விடாதே என்று சொல்லாமல் சொன்னாள். எப்பவுமே புரிந்து கொள்ளாத மினிகூட அவள் செய்கையை புரிந்து கொண்டு பேசாமல் இருந்தாள். ஆனால் அவளது எரிக்கும் பார்வை மட்டும் சுஷினைத் தொடர்ந்தது.

சுஷின் தனக்குள்ளேயே புலம்பிக் கொண்டான், சும்மாவே இவ சாமி ஆடுவா இதுல நான் வேற இப்படி சொதப்பிட்டேனே. அவ பார்க்குறதைப் பாத்தாலே செம கடுப்புல இருக்குறது புரியுது. இப்போ நாம எதுவும் செய்ய முடியாது , நாம பேசாமல் இருக்குறதுதான் நல்லது. அவளைப் பார்த்து ஒரு அசட்டுச் சிரிப்பு சிரித்து வைத்தான்.

அவனையே பார்த்துக் கொண்டிருந்த ஷிஜிக்கு சுஷினின் பார்வை மினியையே சுற்றுவது புரிந்தது. அது மட்டும் அல்ல மினி ஹோச்பிடலில் புலம்பியபடி துப்பட்டாவை வீசியதன் காரணம் அண்ணனாக இருக்குமோ என்பதும் தோன்றியது. 'மினியை எனக்கே இன்றைக்கு

காலையில்தான் தெரியும், இதுல இவன் அதுக்குள்ளே செல்லப் பேர் வேற வச்சுட்டானே.

இவன் மூஞ்சி வேற பல்பு போட்ட மாதிரி எரியுது. அப்படின்னா அண்ணன் மினியை.................' .

இவள் யோசனையிலேயே இருந்தாலும் கால்கள் தானாக டைனிங் டேபிள் சென்றது. அனிச்சை செயல் போல மினியையும் அருகில் அமர வைத்தது. மினி அமர்ந்ததும் வேகமாக அவளுக்கு எதிர் இருக்கையில் அமர்ந்து கொண்டான் சுஷின். வேறு வழி இல்லாததால் ஷிஜியின் எதிர் இருக்கையில் பிரகாஷ் அமர்ந்தான்.

இதுவரை சுஷினைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தவள் பிரகாஷ் எதிரில் அமர்ந்ததும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். பிரகாஷ் சுஷினிடம் ஆபீஸ் விஷயம் பேசத் துவங்கினான் .

ஆனால் சுஷினின் கவனம் முழுவதும் மினியிடம் இருந்ததால் பிரகாஷ் சொன்னதை கொஞ்சம் கூட கவனிக்க வில்லை. சுஷின் ஒழுங்காக பதில் சொல்லாததால் அவனை நிமிர்ந்து பார்த்தான். பார்த்தவன் அவன் மினியையே பார்வையாலேயே பருகுவதைப் பார்த்து பேச்சை நிறுத்தினான்.

ஷிஜியைப் பார்த்தான் அவள் சிரிப்பை அடக்க போராடுவது அவனது கண்களில் பட்டது. அவளது இந்த செய்கை அவனையும் அறியாமல் டேபிளின் அடியில் இருந்த அவளது காலை வேகமாக தட்டினான்.

அது அவளது அடிபட்ட கால் ஆகையால் வலியில் அம்மா என்று அலறினாள். அவளது அலறலில்தான் தான் செய்த செய்கை அவனுக்கு உறைத்தது.

அவள் வலியில் அலறிவிட்டாலும் பிரகாஷின் அந்த செய்கை அவளை படபடப்பாக உணர வைத்தது. ஒரு நிமிடம் என்ன சொல்வது என்றே தெரியவில்லை. இதுவரை பிரகாஷ் இதைப் போல் உணர்ச்சிவசப்

பட்டதில்லை. அவளை அவளது வீட்டில் பார்த்தாலும் ஓரப் பார்வையாய் பார்த்துவிட்டு அகன்று விடுவான். ஆனால் இன்று ஏன்................ . அவளது யோசனையை கலைத்தது சுஷினின் குரல்.

அவளது அலறனினால் சுஷின் அவனது கனவில் இருந்து மீண்டான். "என்னடா ரொம்ப வலிக்குதா நீ ரூமுக்கு போ நான் சாப்பாடு அங்க எடுத்துட்டு வாறேன்".

"இல்லைண்ணா தெரியாமல் காலை ஊன்றிவிட்டேன் அதுதான்............... நீ சாப்பிடுண்ணா............." .

மினி அவளது இருக்கையில் இருந்து எழுந்து ஷிஜியிடம் " ரொம்ப வலிக்குதா நான் வேண்ணா ஊட்டி விடவா" எனக் கேட்கவும், சுலோ வந்து, “அவளுக்கு காலில் தானே அடி பட்டு இருக்கு கைக்கு என்ன, நீ சாப்பிடுமா” , என்று சொல்லிவிட்டு கூட்டு இன்னும் கொஞ்சம் பரிமாறினார்.

"என்ன ஆச்சு ஷிஜி . எதுக்கு இப்படி அலறுற. கால் ரொம்ப வலிக்குதா. வண்டி வாங்கிக் குடுத்தா பார்த்து போயிட்டு வரணும் இப்படியா விழுந்து வாரிட்டு வருவ, சரி இவ்வளவு வளர்ந்து இருக்கியே வலியையாவது பொறுத்துக்கணும். சீக்கிரம் சாப்பிட்டு ரூம்க்கு போ. மருந்தாவது மறக்காம போட்டுடுவியா இல்லை நான் வரணுமா".

"சுஷின் அவ என்ன குழந்தையா சாப்பாடு கொண்டு போறேன்னு சொல்லுற. அவளுக்கும் பொறுப்பு வேண்டாம் எல்லாம் நீ குடுக்குற இடம். முதல்ல உன்னை ஒதைக்கணும் சாப்பிடுடா", சுலோ சுஷினிடம் காய்ந்தார்.

"அதுக்கில்லம்மா அவளே வலியில துடிக்கிறா ரெஸ்ட் எடுத்தா கொஞ்சம் நல்லா இருக்கும் அதுதாம்மா சொன்னேன். இதுல என்ன இருக்கு அவ எனக்கு இன்னும் குழந்தை மாதிரிதான்ம்மா. உங்களுக்கு பொறாமை இப்படி ஒரு அண்ணன் இல்லையேன்னு".

அவனது பேச்சைக் கேட்டு மினி விழி விரித்தாள். 'இவனுக்கு ஷிஜி மேல இவ்வளவு பாசமா?தங்கச்சி மேல

இவ்வளவு பாசம் வச்சு இருக்குறவன் எப்படி..................' அவள் யோசித்தபடியே சுஷினை இமைக்க மறந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

பிரகாஷ் சாப்பிட முடியாமல் அவளது வேதனையை கூட்டி விட்டோமே என்ற குற்ற உணர்ச்சியில் அமைதியாக இருந்தான். இதைப் பார்த்த ஷிஜிக்கும் சாப்பிடவே முடியவில்லை.

அவன் சாபிடாமல் இருப்பதைப் பார்த்த சுஷின் " என்ன பிரகாஷ் சாப்பிடாமல் தட்டில் கோலம் போட்டுட்டு இருக்க. நல்லா இல்லையா என்ன............ இல்லன்னா பிடிக்கலையா ஒழுங்கா சாப்பிடு இல்லை ஊட்டி விடவேண்டியதா இருக்கும் " என்றான் சொன்ன அவனுக்கு மட்டும் அல்ல இதைக் கேட்ட மினிக்குமே புரிந்தது அவன் தன்னைத்தான் சொல்லுகிறான் என்று.

பிரகாஷும் ஷிஜியை ஒரு பார்வை பார்த்துவிட்டு பேசாமல் சாப்பிடத் துவங்கினான்.

மினி பார்வையை வேகமாக தாழ்த்திக் கொண்டாள்.எங்கே இவன் சொன்னதுபோல் செய்துவிடுவானோ என்ற பயத்தில் மினியும் தனது சாப்பாட்டை விழுங்கத் துவங்கினாள் தண்ணீரைக் குடித்தபடி. அவளது செய்கையைப் பார்த்து சுஷின் புன்னகைத்துக் கொண்டான்.

இவர்களின் செய்கைகளை பார்த்தும் பாராததுபோல பரிமாறிக் கொண்டிருந்தார் சுலோ.

## 12

என் வாழ்வு உன்னோடுமுழுமையாகும்- என்ற

என் நினைவு உன் தேவையை உணர்த்துகிறதே

இது காதலென்றால்..........................

சுலோவின் பார்வை அனைவரையும் தொடர்ந்தது. ஆனால் எதுவும் சொல்லாமல் சாப்பாடு பரிமாறினார். பேசிக் கொண்டே மினியிடம்," மினி உன் வீடு எங்கேம்மா இருக்கு".

சாப்பிட்டுக் கொண்டிருந்தவள் சுலோவின் கேள்வியில் புரை ஏறியது. "பார்த்தும்மா என்ன அவ்வளவு பெரிய கேள்வியா கேட்டேன்.ஏன் இப்படி பதட்டப்படுற. சரி சாப்பிட்டு முடி பிறகு பேசிக்கலாம்".

ஷிஜியும் சுஷினும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். சுஷின் சுலோவை நிமிர்ந்து பார்த்தான்." என்னடா சாப்பாடை பார்த்து சாப்பிடு என்னையே ஏன் பார்க்குற". அவரது பேச்சே இப்பொழுது எதுவும் பேசாதே என்று சொன்னது. சுஷின் பேசாமல் சாப்பாட்டை முடித்துக் கொண்டு எழுந்து சென்றான்.

ஷிஜியும் மினியும் ஏதோ பேசிக் கொண்டே இருந்தனர். பிரகாஷும் சாப்பிட்டு முடித்தான். அனைவரும் ஹாலுக்கு வந்ததும் மினி தான் கிளம்புவதாக சொன்னாள். பிரகாஷும் கிளம்புவதாக சொல்லி கிளம்பிச் சென்றான். அவன் விடைபெறும்போது ஷிஜியின் கண்களில் தெரிந்த தவிப்பு பிரகாஷின் பார்வையில் மட்டுமல்ல சுலோவின் பார்வையிலும் பட்டது.

ஆனால் ப்ரகாஷ் அவளை வேண்டுமென்றே தவிர்ப்பதுபோல் தோன்றியது அவருக்கு. ஒரு பெண்ணின் தாயாக அவருக்கு கவலை தோன்றியது. சுஷினைப் பார்த்தார் அவன் மினியை பார்ப்பதும் பிறகு ஷிஜியிடம் பேசுவதுமாக இருந்தான்.

சுலோவின் பார்வை ஆராய்வதை சுஷின் புரிந்து கொண்டான். தாயிடம் பேசவேண்டும் என்று முடிவு செய்தான். ஆனால் அதற்கு இது நேரமல்ல என்பதை புரிந்து கொண்டு பேசாமல் இருந்தான்.

"சரி ஷிஜி நான் கிளம்புறேன். அம்மா தேடிட்டே இருப்பாங்க ஹேமா அம்மாவுக்கு போன் செய்து இருப்பா. ஆனாலும் நான் போகிறவரைக்கும் வாசலையே பார்த்துட்டு இருப்பாங்க. சோ............." .

"எப்படி போவ மினி உன் ஸ்கூட்டி வேற ஹோச்பிடல்ல நிற்க்கிறதே “,ஷிஜி.

"போகலாம்மா, உன்வீடு எங்க இருக்கு. வீட்டில் யாரெல்லாம் இருக்காங்க. நீ என்னம்மா படிக்கிற???????".

"அம்மா இவ்வளவு கேள்வியை ஒரேடியா கேட்டா அவ என்ன செய்வா ஒரு ஒரு கேள்வியா கேளுங்கம்மா. ஏற்க்கனவே பயந்து போய் இருக்கா அப்புறம் பின்னங்கால் பிடரியில்பட ஓடிடப்போறா", ஷிஜி.

அவளது பேச்சில் அனைவரும் சிரித்தனர். "நீ சும்மா இருந்தாலே போதும் வேற எல்லாம் நான் பார்த்துக்கறேன். பேச்சைப் பாரு நீ சொல்லு மினி" , சுலோ.

"என் வீட்டில் நானும் அம்மாவும் மட்டும்தான் ஆன்ட்டி".

"அப்பா............." , ஷிஜி .

"ஷிஜி பேசாம இருக்குறியா அவ சொல்லுவதிலேயே புரியல நீ சொல்லும்மா" , சுலோ.

"பரவாயில்லை ஆன்ட்டி, அப்பா நான் சின்னப் பிள்ளையா இருக்கும்போதே தவறிட்டாங்க. என் அப்பாவோட முகம் கூட எனக்கு போட்டோவில் பார்த்துதான் தெரியும். அப்புறம் ஒரு மாமா அம்மாவோட தம்பி அவர் எப்பவாவது தான் வருவார். அவ்வளவுதான் ஆன்ட்டி", அவள் பேசப் பேச அதில் இருந்த விரக்தியா, ஏக்கமா, ஏமாற்றமா ஏதோ ஒன்று சுஷினை இளக்கியது.

சுலோவுமே கொஞ்சம் உருகித்தான் போனார். ஷிஜி அவளை கட்டிக் கொண்டாள், கட்டிக் கொண்டு சொன்னாள் "இதுக்கு ஏன் இவ்வளவு பீல் பண்ணுற எங்க அப்பாவை

உன் அப்பாவா நினைச்சுக்கோ", சொல்லி முடித்துவிட்டு நாக்கை கடித்துக் கொண்டாள்.

சுஷினைப் பார்த்தாள் அவன் உன்னைப் போய் நம்பினேன் பாரு என்னும் குற்றச் சாட்டு தொங்கி நின்றது அவனது பார்வையில். உடனே நிலைமையை சம்மாளிக்கும் பொருட்டு , " இப்படி வேண்ணா வச்சுக்கலாம் அதாவது.................".

"நீ ஒண்ணுமே சொல்லவேணாம். நீயும் இந்த வீட்டு பொண்ணு மாதிரிதான். இனிமேல் அடிக்கடி வாம்மா. சரி இப்போ நேரமாச்சு நீ கிளம்பு. சுஷின் உன்னை வீட்டில் ட்ராப் பண்ணுவான்".

அவள் ஏதோ சொல்ல வரவும் " நீ ஒண்ணும் சொல்ல வேணாம், உன் ஸ்கூட்டியை எங்க டிரைவர் கொண்டுவந்து நிப்பாட்டுவான்.

அவரது பேச்சை மீற மனம் இல்லாமல் அமைதியாக இருந்தாள் மினி.

"சுஷின் மினியை கூட்டிட்டு போய் அவ வீட்டில் விட்டுட்டு வா. மினி நீ உன் ரூம்முக்கு போ". அவரது பேச்சைக் கேட்டு இருவரும் மாட்டிக் கொண்ட உணர்வில் விழித்தனர். அதுவும் இருவருக்குமே சுலோ ஒரு முடிவுக்கு வந்துவிட்டதாகவே தோன்றியது.

ஏனென்றால் சுலோ அவ்வளவு சுலபத்தில் உணர்வுகளை தனது விருப்பு,வெறுப்புகளை வெளியிட மாட்டார்.ஆனால் இன்று மினியிடம் அவளைப் பற்றி அதிகப்படியாக விசாரித்ததாகவே தோன்றியது சுஷினுக்கு அதுமட்டும் அல்ல அவனையே அவளை வீட்டில் விட்டுவரச் சொன்னதும் அதிகமாக அதிர்ச்சியே அடைந்தான். ஆனாலும் எதுவும் சொல்லாமல் காரை நோக்கி நடந்தான்.

மினி இருவரிடமும் விடைபெற்றுக் கொண்டு காரில் ஏறிக் கொண்டாள். ஏறியவுடன் அவனிடம் சொன்னாள் " என்னை

பஸ் ஸ்டாப்ல இறக்கி விட்டுடுங்க நான் போய்க்கிறேன். நீங்க சிரமப் பட வேண்டாம்".

"உன்னை இறக்கி விடுறதுதான் எனக்கு சிரமமே ஒழிய இறக்குவது இல்லை சோ பேசாமல் வீட்டுக்கு வழியை காட்டு ", அவனது முகம் புன்னகையில் விரிந்தது.

சுஷின் சொன்னதன் அர்த்தம் புரியாமல் விழித்தாள் மினி.

மினி வழிகாட்ட சுஷின் அவளது வீட்டிற்கு காரை விரட்டினான்.

சுஷினின் வீட்டில் அவர்கள் கிளம்பியதும் சுலோ சிஜியை பிடித்துக் கொண்டார்.

அவளை ரூமிற்கு அழைத்துச் சென்று மருந்தை சாப்பிட வைத்ததுமே ஷிஜி புரிந்து கொண்டாள் ,' அம்மா ஏன் இப்படி ரூம் வரைக்கும் வந்து பாசத்தைப் பிளியிறாங்க ஏதோ விசாரணை நடக்கும்போல இருக்கே. இந்த அண்ணா வேற அவன் ஆளைப் பாத்ததும் உலகமே அவளை சுத்திதான் இயங்குறமாதிரி அவளை கூட்டிட்டு போய்ட்டான்.

இப்போ விசாரணையை நான் மட்டும் சந்திக்கணுமா ஆண்டவா என்னை இப்போ மட்டும் காப்பாத்து இனிமேல் உன்னை தொந்தரவே செய்ய மாட்டேன்' விண்ணப்பத்தை அவள் போட்டுக் கொண்டிருக்கும்போதே அவளை அவளது விண்ணப்பம் நிராகரிக்கப் பட்டது அவளுக்கு புரிந்தது.

ஏனென்றால் விசாரணையை துவங்கி விட்டிருந்தார் சுலோ. அவரது முதல் கேள்வியிலேயே ஷிஜி தடுமாறித்தான் போனாள்.

"ஷிஜி உனக்கு மினியை எவ்வளவு நாளாய் தெரியும்", அவரது கேள்வியிலேயே நீ இதற்கு முன்னர் அவளைப் பற்றி எதுவும் சொன்னது இல்லையே என்ற கேள்வி தொங்கி நின்றது.

"எனக்கு அவளை காலையில் தாம்மா தெரியும். அதுவும் நான் அடிபட்ட பிறகுதான் தெரியும். ஆனால் அவ எங்க காலேஜ் தான்", அவர் கேட்க்காததையும் சேர்த்தே சொன்னாள்.

"அது போகட்டும் சுஷினுக்கு எவ்வளவு நாளா தெரியும்".

"ஹையோ அம்மா அண்ணாக்கு எவ்வளவு நாளா தெரியும்ங்குறது சத்தியமா எனக்கு தெரியாது. அவன் வீட்டுக்கு வந்ததுக்கு அப்புறம்தான் எனக்கே............." பேச்சை பாதியிலேயே நிப்பாட்டி சுலோவை பார்த்தாள் ஷிஜி.

"இல்லம்மா நான் அவகூட வருவதாகத்தான் சொல்லி இருந்தேன் மற்றபடி எனக்கு ஒண்ணுமே தெரியாதும்மா" அவளது முழியிலேயே சுலோ சிரித்து விட்டார். “அவனோட தங்கச்சியாச்சே நீ அவன் வரட்டும் நான் அவன்கிட்டே கேட்டுக்கறேன்".

அவர் கிளம்பிவிட்டார் என்று நினைத்து இழுத்து வைத்திருந்த மூச்சை விடும் போது அடுத்த வெடியை வீசினார். "அடுத்த வருஷம் படிப்பு முடிஞ்சதும் மேல படிக்கப் போறியா........... இல்லை.............." .

"அதுக்கு இன்னும் ஒருவருஷம் இருக்கேம்மா, அதுக்குள்ளே ஏன் இப்படி கேக்குறிங்க".

"உனக்கு கல்யாணம் பண்ணிக்க ஆசை வந்துட்ட மாதிரி எனக்கு தோணிச்சு................".

மேலே எதுவும் சொல்லாமல் அவர் சென்று விட்டார். ஆனால் ஷிஜியின் நிலைமை............ தலையில் இடியே விழுந்ததுபோல் நிலை குலைந்து போனாள்.

## 13

என் பயணங்கள் எதுவாக இருந்தாலும்

முடியும் இடம் நீயாக இருக்கவேண்டும்

என்ற என் ஏக்கம்

இது காதலென்றால்.......................

மினியின் வீட்டிற்கு சென்று சேரும்போது மீனாட்சி வாசலிலேயே காத்துக் கொண்டிருந்தார். வீட்டின் முன்னால் கார் நிற்கவும் நம்ம வீட்டுக்கு கார்ல யார் வாராங்க என்று கேட்டை திறப்பதற்காக சென்றார்.

காரில் இருந்து மினி இறங்குவதை கண்டதும்,"மினி நீ ஏன் கார்ல வார, உன் ஸ்கூட்டி என்ன ஆச்சு. ஆமா இது யாரோட கார். சொல்லுடி ஏன் இப்படி நிக்கிற".

"ஹையோ அம்மா கொஞ்சம் பேசாமல் இரேன் இப்போ எதுக்கு இவ்வளவு ரியாக்சன் முதல்ல வீட்டுக்குள்ள வா சொல்லுறேன்".

அவளது தாயைப் பார்த்ததும் காரில் இருந்து இறங்கி அவரிடம் வந்து, ஆன்ட்டி நான் இவ கூட காலேஜ்ல படிக்கிற ஷிஜியோட அண்ணன் நீங்க பயப்படுறமாதிரி எதுவும் இல்லை. வீட்டுக்குள்ள முதல்ல போவோம் வெளியே வீணா ஒரு சீன் கிரியேட் பண்ண வேண்டாமே".

அவனது பேச்சில் இருந்த உண்மை அவரை மேலும் எதுவும் பேச விடாமல் செய்தது. அவனையும் அழைத்துக் கொண்டு வீட்டுக்குள் சென்றார். மினியை தண்ணீர் கொண்டுவர சொல்லிவிட்டு சுஷினிடம் என்னவென்று கேட்டார்.

"என் பேர் சுஷின், ஷிஜியோட அண்ணன்............. இன்னைக்கு காலேஜ் ல மினியால என் தங்கச்சிக்கு ஒரு சின்ன விபத்து அது எப்படி ஆச்சுன்னு எனக்கு தெரியாது. நீங்கதான் மினிகிட்ட கேட்க்கணும். சோ அவளை ஹோச்பிடல் கூட்டி போயிட்டு எங்கவீட்டில் அவளை விட்டுவர அவளுக்கு இவ்வளவு நேரம் ஆயிடுச்சு".

"மினியோட ஸ்கூட்டி ஹோச்பிடல்ல தான் நிற்க்கிறது நானே நாளைக்கு கொண்டுவந்து இங்க விடுறேன் . நீங்க தப்பா நினைக்காதிங்க", மினியை அவர் தவறாக நினைக்கக் கூடாதே என்ற தவிப்பு அதில் தெரிந்தது.

"நான் தப்பா எதுவும் நினைக்கலை தம்பி அவளுக்கு ரொம்ப கோபம்வரும் அதான் ஆத்திரத்தில் ஏதாவது செய்து மாட்டிக் கொள்ளக் கூடாதே என்ற கவலைதான்". மினி கிச்சனில் நின்று இவர்கள் பேசுவதை ஆத்திரத்துடன் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"இந்த அம்மாவுக்கு அறிவே கிடையாது இந்த பனைமரம் கிட்ட அவங்களுக்கு என்ன பேச்சு வேண்டிக் கிடக்கு. அவனைப் பாரு என்னமோ விருந்து சாப்பிடவந்த மாப்பிள்ளை மாதிரி உட்க்கார்ந்து இருக்குறதை..............." .

அங்கே என்னடான்னா ஒருத்தன் நான் பார்ப்பதைக் கூட கண்டுக்காம என்னை இவன்கூட தள்ளி விட்டுட்டு போய்ட்டான். (அது வேற யாரும் இல்லைங்க பிரகாஷ் தான்) .

இவன்வேற என்னென்னமோ சொல்லுறான். ஒரு மார்க்கமா வேற பார்த்து வைக்கிறான். என்னமோ பொண்ணுங்களையே பார்த்தது இல்லைங்கிறமாதிரி............. .

இந்த அம்மாவுக்கு கொஞ்சம்கூட நாசூக்கே பத்தாது. நான் இன்னும் போகலையே அவனை அனுப்பி விடுவோம்ன்னு பார்க்குதா. மறு வீட்டுக்கு வந்த மாப்பிளையை உட்க்காரவைத்து விசாரிக்கிற மாதிரி என்ன பேச்சு வேண்டிக் கிடக்கு, மனதுக்குள் பொருமினாள்.

இவளைக் காணாததால் கிச்சனுக்கு வந்த மீனாட்சி மினி புலம்பியபடி நிற்பதைப் பார்த்து அவளை கண்டிக்க இது நேரமல்ல என்பதை புரிந்துகொண்டு தண்ணீரை எடுத்துக் கொண்டு ஹாலுக்குச் சென்றார்.

"இந்தாங்க தம்பி தண்ணி குடிங்க. நீங்க என்ன வேலை................" .

அவர் இதைக் கேட்கவும் புயலென ஹாலுக்கு வந்த மினி," அம்மா அவர் என்னை விட்டுட்டு போகத்தான் வந்தார் . நீங்க என்னமோ விசாரணை பண்ணிக்கிட்டு இருக்கீங்க. அவருக்கு எவ்வளவோ வேலை இருக்கும்............".

மினியின் பேச்சைக் கேட்டு இருக்கையில் இருந்து எழுந்து, "ஆமா ஆன்ட்டி நான் கிளம்புறேன். மினியோட வண்டியை நாளைக்கு கொண்டுவந்து விடுறேன்".

அவன் நாளைக்கும் வருவதை உறுதி செய்தவன் புன்னகையுடன் கிளம்பிச் சென்றான். மினியின் பேச்சில் அவன் கோபப்பட்டு விட்டானோ என கவலைப் பட்டவர், அவன் நாளையும் வருவதாகச் சொல்லவும் நிம்மதிப் பெருமூச்சை வெளியிட்டார். அவனது முன்னால் மினியை கண்டிக்கவும் முடியாமல், அவளை விட்டுக் கொடுக்கவும் முடியாமல் அவனைப் பார்த்து முறுவலித்துக் கொண்டே மினியை முறைத்தார்.

அவன் செல்லும் முன்னால் மினியை ஒரு பார்வை பார்த்துவிட்டு சென்றான். அவன் சென்றதும் மினியை பிடித்துக் கொண்டார். "மினி இன்னைக்கு காலேஜ்ல என்னதான்டி நடந்தது. ஷிஜிக்கு எப்படி அடி பட்டுச்சு. ம்ம்ம்............ . வந்தவன் உன்னாலதான் அடி பட்டுச்சுன்னு சொல்லிட்டு போறான் இப்போ சொல்லப் போறியா இல்லையா".

“அது ஒண்ணும் இல்லம்மா என் துப்பட்டா அவ மூஞ்சில விழுந்து ஸ்லிப் ஆகி விழுந்துட்டா. அதனாலதான் லேட் ஆச்சு போதுமா”.

“இன்னைக்கு காலைலேயே சொன்னேன் பின் வச்சுட்டு போன்னு நீதான் கேட்க்காம போயிட்டு இப்படி வம்பு வளத்துட்டு வந்து இருக்கியே உன்னை என்ன செஞ்சால் தகும் . சரி இனி என்ன செய்யிறதா இருக்க”.

"அதும்மா இனிமேல் துப்பாட்டா போட்டா பின் பண்ணலாம்னு இருக்கேன். நீங்க என்ன நினைக்கிங்க" .

மீனாட்சி தலையிலேயே அடித்துக் கொண்டார். "மினி நான் என்ன சொல்லவாறேன்னு புரிஞ்சுக்காம..............".

"சரி புரியிறமாதிரி சொல்லுங்கம்மா".

"அவளை வீட்டுக்குபோய் பாக்கணுமா இல்ல............."

"அதுதாம்மா எனக்கு ஒரே குழப்பமா இருக்கு. அவளால இன்னும் இரண்டு வாரத்துக்கு நடக்க கூட முடியாது . நடக்கக் கூடாதுன்னு டாக்டர் சொல்லிட்டார். அப்படியே விட்டுட்டா அவள் என்னைப் பத்தி என்ன நினைப்பா. அதுக்காகன்னு மட்டும் இல்லை, என்னால அடி பட்டுச்சு சோ அவளுக்கு சரி ஆகுறவரைக்கும் போய் பார்க்கணும் . நீங்க என்னம்மா சொல்லுறிங்க போகவா வேண்டாமா".

"நானே அதை சொல்லத்தான் வந்தேன் எப்படியோ இதுவாவது உனக்கே தோணிச்சே சந்தோஷம்தான். சரி கை கால் எல்லாம் கழுவிட்டு வா காபி தாரேன். சீக்கிரம் வா சரியா. அங்கே போய் கனவு கண்டுட்டு இருக்காதே".

"சரி நான் போயிட்டு சீக்கிரம் வாறேன் ". அவள் கிளம்பும் நேரம் நினைவு வந்தவராக, "ஒரு நிமிஷம் மினி, இன்னைக்கு உன்னை வீட்டுக்கு கூட்டிட்டு வந்த பிள்ளையை கழுத்தை பிடிச்சு வெளியே தள்ளாத குறையா அனுப்பி விட்டியே உனக்கே இது நல்லா இருக்கா. வீட்டுக்கு வந்தவங்களை அதுவும் உபகாரம் பண்ணனும்னு வந்தவங்களை இப்படியா பேசி அனுப்பி விடுவ".

"நானே கேக்கணும்னு நினைச்சேன், அவன் வந்ததும் உட்க்காரவச்சு பேசுறியே உங்களுக்கு கொஞ்சம்கூட இதே கிடையாதும்மா. அவனும் அவன் பார்வையும் அவன் பேச்சும். சரியான பொறுக்கிம்மா . இனிமேல் நான் இல்லாதப்போ வீட்டுக்கு வந்தா வீட்டில சேர்க்காதிங்க சரியா".

மினியின் பேச்சைக் கேட்டதும் மீனாட்சிக்கு வாயடைத்துப் போயிற்று, அந்த தம்பியைப் பார்த்தா நல்ல பிள்ளையாத்தான் தெரியுது. இவ ஏன் இப்படி சொல்லுறா. அதுவும் நான் சொல்லவேண்டியதை இவ சொல்லுறா. இதுக்கும் மேல இவகிட்ட பேசுனா என்னையவே அந்த பிள்ளையை கெட்டவன்னு நம்ப வச்சுடுவா.

ஏன் தான் இப்படி இருக்காளோ. நாம சொன்னாலும் புரிஞ்சுக்காம அவசொல்லுறதுதான் சரின்னு நினைக்கிறதை எப்போ விடப் போறாளோ. ஆண்டவா என வேண்டிக் கொண்டு சமையற்கட்டை பார்த்துச் சென்றார்.

இங்கே காரில் ஆபீஸ் வந்து சேர்ந்த பிரகாஷிக்கு குழப்பமாக இருந்தது. சுஷின் மினியை விரும்புறமாதிரி இருக்கு, ஆனா மினி என்னை எதுக்கு நான் கிளம்பும்போது அப்படிப் பார்த்தாள். ஆனா கண்ணுல காதல் இல்லை வேற ஏதோ என்னன்னுதான் புரியலை. இந்த சுஷின் வரட்டும் அவன் கிட்டேயே கேட்டுடலாம்.

அவன் எண்ணி முடித்ததும் சுஷின் ஆபீசில் நுழைவது தெரிந்தது. அவன் அவனது அறைக்கு உள்ளே செல்லும் வரை பொறுக்க முடியாமல் வாசலுக்கே சென்று அவனை இழுத்து வந்தான்.

அவன் இழுத்துவந்த வேகத்தைப் பார்த்து ஆபீஸ் ஸ்டாப் எல்லோரும் அவர்களை விசித்திரமாகப் பார்த்தனர்.

"பிரகாஷ் எதுக்கு இப்போ என்னை இவ்வளவு வேகமா இழுத்துட்டு வாற, பாரு வெளிய ஸ்டாப் எல்லோரும் என்னமோ உள்ள தள்ளி , என்ன பண்ணப் போறங்குற மாதிரியே பார்க்குறாங்க. இங்கேதானே வந்துட்டு இருக்கேன் அப்புறம் ஏன் இப்படி. சரி உனக்கு என்ன தெரியணும் ".

"அப்போ என் கிட்ட சொல்ல உனக்கு ஏதோ விஷயம் இருக்கு அப்படித்தானே ".

"டேய் இருந்தாலும் நீ ஓவர் ஸ்மாட்டா, என் வாயவே பிடுங்குறியே என்னன்னு முதல்ல நீ சொல்லு, இல்ல இல்ல கேளு அப்புறமா நான் சொல்லுறேன் ".

"அப்படியா அப்போ கேக்குறேன் எப்போடா கல்யாண சாப்பாடு போடப் போற. பொண்ணு பார்த்துட்ட போல, வீட்டுக்கெல்லாம் கூட்டி போற அளவுக்கு ஆயிருக்கு , ஆனா பாரு எனக்கு இப்போதான் தெரியுது. ம்ம்ம்............ ". பொய்யாக அலுத்துக் கொண்டான். அவனது பேச்சில் கிண்டல் தெறித்தது .

அவனது பேச்சைக் கேட்டு வாய்விட்டு சிரித்தான். சிரித்துவிட்டு சொன்னான். " நீதானேடா பொண்ணை வீட்டுக்கு கூட்டிவந்த உனக்கு தெரியாமல் போகுமா???" என்று சொல்லி அவனது ஒப்புதலை அளித்துவிட்டு .

"உனக்கு எப்படிடா தெரிஞ்சுது " .

"எனக்குமட்டுமா ஷிஜிக்கு ஏன் உன் அம்மாவுக்கே தெரிஞ்சு இருக்கும். அப்படி ஒரு பிரகாசம் மூஞ்சியில் அதை விட கிட்ட யார் இருக்கா என்ன பேசுறா எதுவுமே உன் காதில் விழலை".

"அவ்வளவு தெரியிற மாதிரியா நடந்துகிட்டேன். நீ சொல்லுறது சரிதான் அம்மாக்கு சந்தேகம் வந்துடுச்சுபோல. என் கணக்கு சரின்னா ஷிஜிகிட்ட விசாரணை முடிச்சு. என் அப்பா காதுக்கு விஷயம் போய் இருக்கும். வீட்டில் அம்மாகிட்ட என்னசொல்லி சம்மாளிக்க போறேன்னே தெரியலடா".

" நீ சொல்லுறது சரிதான் . உன் அப்பா வீட்டுக்கு கிளம்பிபோய் அரைமணி நேரம் ஆகுது".

அவன் சொன்னதைக் கேட்டதும் சுஷின் அவனது சீட்டில் இருந்து எழுந்து பிரகாஷிடம் வேகமாக கேட்டான் " நிஜம்மாவடா சொல்லுற. என் அம்மா கிட்ட நான் என்னன்னுசொல்லுறது. அதைவிட இன்னைக்கு பார்த்த பொண்ணை அதுவும் என்மேல கோபமா இருக்குற

ஒருத்தியை நான் லவ் பண்ணுறேன்னு எப்படிடா சொல்லுறது".

"உன்மேல கோபமா மினிக்கா என்னடா சொல்லுற". அன்று காலை நடந்து முடிந்ததை ஒன்று விடாமல் பிரகாஷிடம் சொன்னான்.

"ஓ........... அதனாலதான் உன்னைப் பாத்ததும் அம்மணி அப்படி முளிச்சுதா. நான் கூட நான் கிளம்பும்போது எதுக்கு என்னை அப்படி பார்க்குறான்னு மண்டையை உடைச்சுகிட்டேன் அதைக் கேட்க்கத்தான் உன்னையவே தேடினேன் . இப்போதானே புரியுது இந்த வில்லன் கிட்ட என்னை மாட்டிவிட்டுட்டு போறியேடா அண்ணான்னு பார்வையாலேயே கேட்டு இருக்கான்னு ".

சிரிப்பை அடக்கமுடியாமல் சிரித்தான். சுஷின் கேட்டான் ," நீ அவளுக்கு அண்ணனா............ ".

"பின்ன இல்லையா நண்பனோட மனைவி எனக்கு தங்கச்சிதானேடா ".

அவனது பேச்சில் சிரித்தாலும். சுலோவின் விசாரணையை நினைத்து கலங்கித்தான் போனான் சுஷின்.

ஷிஜி சுலோவின் பேச்சில் தவித்துதான் போனாள்.

அம்மாவின் கவனம் அண்ணனிடம்தான் இருக்கிறது என்று தான் நினைத்தது எவ்வளவுபெரிய தவறு............... அம்மா தன்னை இரண்டு அடி அடித்தால் கூட இவ்வளவு வலித்திருக்காதே.

என்னசொல்லி அம்மாவை நம்ப வைக்கப் போகிறேன்.......... அதைவிட என்னசொல்லி நம்ப வைக்க, நான் பிரகாஷை விரும்பவே இல்லை என்றா, இல்லன்னா விரும்புறேன் என்று சொல்லியா?

இதை நான் அண்ணன்கிட்ட கூட சொல்லலியே. நான் எப்படி அவன்கிட்டே சொல்லுறது, இப்படியே யோசித்துக்

கொண்டு மருந்தின் வீரியத்தில் கண்ணயர்ந்தாள் .

சுஷினும் ஷிஜியும் வருவதை எப்படி எதிர்கொள்வது என்ற தவிப்புடன் இரவிற்காக காத்திருந்தனர்.

சுலோவும் காத்திருந்தார்......................

## 14

உன்னை இழந்து விடுவேனோ என்ற

என் மனப் போராட்டத்தின்

அந்தநொடி நான் உணரும் உணர்வு

இது காதலென்றால்..................

இரவும் வந்தது , வீட்டின் அங்கத்தினர் எல்லோரும் சாப்பாட்டு அறையின் மௌனம், அந்த வீட்டு பல்லிக்கு கூட புதிதாக இருந்ததோ. ச் ச் என்ற சப்தம் மட்டுமே அங்கே கேட்டுக் கொண்டிருந்தது.

சுலோவே அந்த மௌனத்தை உடைத்தார். "இன்றைக்கு என்ன எல்லோரும் மௌன விரதமா. ஷிஜி நீ வாயில் கம் வச்சு ஒட்டினாகூட அதையும் முழுங்கிட்டு வாய் ஓயாமல் பேசுவ. சுஷின் அவ சும்மா இருந்தா கூட சீண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பாய் இன்னைக்கு என்னமோ தப்பு செஞ்சு மாட்டி கிட்ட மாதிரி பேசாமல் இருக்க. என்ன விஷயம் ".

சுலோவின் பேச்சிலேயே நீயாக சொல்லிவிடு என்ற கண்டிப்பு ஒளிந்து இருந்தது. அவர்களை காக்கும் பொறுப்பு இப்பொழுது சுந்தரத்திடம் சென்றது, அவர் மெதுவாக " நீ ஏன் இப்படி நினைக்கிற சுலோ அவனுக்கு ஆபீஸ் டென்ஷனா இருக்கலாம். ஷிஜிக்கு கால்ல அடி பட்டுருக்கு அல்லவா அதான் பேசாமல் இருக்காங்கபோல நீ என்னமோ ஸ்கூல் பசங்களை விசாரிக்கிறமாதிரி இவங்களை விசாரிக்கிற ".

"இப்போ நான் என்ன கேட்டேன்னு நீங்க அவங்களுக்கு வக்காலத்துக்கு வாறிங்க. ஏன் பேசாமல் இருக்காங்கன்னு எதார்த்தமாதான் கேட்டேன். இவங்க பேசாமல் இருந்து நீங்க பார்த்து இருக்கீங்களா. ம்ம்.......... . அதை கேட்க்காமல் என்னை வாயை மூட வைப்பதிலேயே இருங்க".

"ஏதாவது விஷயம் இருந்தா அவங்களே சொல்ல மாட்டாங்களா என்ன. அந்த சுதந்திரம் நாம அவங்களுக்கு குடுத்திருக்கோம். அப்படி நம்மகிட்ட சொல்ல முடியாததை அவங்க செய்ய மாட்டாங்க. நீ ஏன் மனசை போட்டு குழப்பிக்கிற. சரி எல்லோரும் சாப்பிட்டு போய் தூங்குங்க".

அவரது பேச்சைக் கேட்டதுமே ஏற்க்கனவே தவிப்பில் இருந்தவர்கள் மேலும் குற்ற உணர்வுக்கு உள்ளாளனர். அதுவும் ஷிஜிக்கு வேர்க்கவே ஆரம்பித்தது. எப்பொழுதும் ஷிஜியின் முக மாறுதலிலேயே என்னவென்று கண்டுபிடித்துவிடும் சுஷின் இன்று அவனது கவலையில் மூழ்கி இருந்ததால் கண்டுபிடிக்கவில்லை.

ஆனால் சுலோ அவளது தவிப்பை சரியாக புரிந்து கொண்டார். அவள் குழப்பத்தில் இருப்பது அவளது கருவிழியின் ஓட்டத்திலேயே அவருக்கு புரிந்தது.

ஆனால் சுஷின் ஒரு முடிவுடன் இருப்பது அவனது இறுகிய முகத்திலேயே புரிந்தது. சுலோவிடம் இன்னும் மறைப்பது தவறாக தோன்ற தொண்டையை செருமிக் கொண்டு பேச ஆரம்பித்தான்."அம்மா........... அதுவந்து.............".

"சுஷின் சாப்பிட்டு போய் தூங்க சொன்னேன் நீ என்ன சொல்லுறதா இருந்தாலும் காலையில சொல்லிக்கலாம்", சுலோ அறையில் சொன்னதே அவரை இவ்வாறு சொல்ல வைத்தது.

"நான் இதை இப்பவே சொல்லி ஆகணும்பா , இப்போ சொல்லலைன்னா நிலைமை இன்னும் மோசமாகலாம் சோ நான் சொல்லிடுறேன் ".

என்ன சொல்லப் போகிறான் என்பதுபோல் அனைவரும் பார்க்க. அவன் " அம்மா எனக்கு இன்னைக்கு மதியம் நம்ம வீட்டுக்கு வந்த மினியை பிடிச்சு இருக்கு அவளை இன்னைக்கு மதியம் ஹோச்பிடல்ல தான் முதலில் பார்த்தேன் . இது காதலான்னு கேட்டா சொல்லத் தெரியலை . ஆனா இதுவரை நான் பழகிய , பார்த்த பொண்ணுங்ககிட்ட தோணாத ஒண்ணு இவளை பார்த்ததும் தோணிச்சு. அவளையே எனக்கு கல்யாணம் பண்ணி வச்சிங்கன்னா சந்தோஷப் படுவேன்மா. இல்லை நான் பார்க்குற பெண்ணைத் தான் கட்டிக்கணும்னு சொன்னிங்கன்னா அதுக்கும் நான் ரெடிதாம்மா............" .

கடைசி வார்த்தையை சொல்லும்போது அவனது குரல் இயல்பாய் பேச முயன்று தோற்றுப்போய் இருந்தது.

சுலோ பேசத் துவங்கும் முன்னர் ஷிஜி வேகமாக, " எனக்கு மேல படிக்கணும்மா B.Sc முடிச்சுட்டு MBA பண்ணனும் . நம்ம கம்பெனி லையே வேலை பார்க்கணும்மா வேற எண்ணம் இப்போதைக்கு இல்லை" .

அவளது பேச்சில் எந்தவிதமான தயக்கமும் இப்பொழுது இல்லை. ஆனால் ஒரு இறுக்கம் இருந்ததுபோல் சுலோவிற்கு தோன்றியது. அதை ஆராயாமல் சுஷினிடம் , " அப்போ நான் பார்க்குற பொண்ணு உனக்கு ஓகேயா . இன்னும் இரண்டு நாளில் ஒரு பொண்ணை பார்க்கப் போகிறோம் நான் முடிவு பண்ணிட்டேன் அவதான் இந்த வீட்டு மருமகள் இப்போ நீங்க போய் தூங்குங்க".

ஏதோ சொல்லத் துவங்கிய சுந்தரத்தையும் பார்வையாலேயே அடக்கிவிட்டு சென்று விட்டார். அனைவரும் கை கழுவிவிட்டு அறைகளுக்குச் சென்றனர் . யாரின் மனதிலும் மகிழ்ச்சி இல்லை.

ஷிஜி ஒரு முடிவுக்கு வந்த பின்பும், பிரகாஷின் அன்றைய தோற்றம் வந்து நெஞ்சை கசக்கிப் பிழிந்தது. கண்களை இறுக்க மூடிக் கொண்டாள் . இன்று காலையில் கார் கண்ணாடி வழியாக பார்த்த அவனது முகமே மின்னி

மறைந்தது. தலையை உலுக்கிக் கொண்டு மருந்தை சாப்பிட்டுவிட்டு கண்களை மூடிப் படுத்தாள். இதயத்தின் இடி கண்களில் மழையை உருவாக்கியது .

தனக்குத் தானே கேட்டுக் கொண்டாள், இதுவரை அவனும் பேசியதில்லை. தானும் பேசியதில்லை. காதல் சொன்னதில்லை பின் ஏன் இப்படி அவனை ஏமாற்றி விட்டதுபோல் ஒரு வருத்தம். இதயம் பிளக்கும் இந்த வலி இது காதலா............ . இல்லையா..............
புரியவில்லையே............. மனதோடு போராடிக் கொண்டிருந்தாள் அந்த சின்னப் பெண்.

அறைக்குச் செல்ல திரும்பிய சுஷினை அழைத்தார் சுலோ. ஏதோ சொன்னார். அவர் சொன்னதைக் கேட்டவனின் முகத்தில் சந்தோஷமும் துக்கமும் மாறி மாறி எழுந்தது.

இத்தனைக்கும் அவர் அவனைப் பற்றி எதுவும் சொல்லவில்லை. கடைசியாக அவனிடம் சொன்னார்.

"நீ தூங்கப் போக முன்னாடி ஷிஜியை பார்த்து குட் நைட் சொல்லிட்டு போடா ".

அம்மா எதுக்கு தீடீர்ன்னு ஷிஜியை பார்த்து குட் நைட் சொல்லச் சொல்லுறாங்க என்ற யோசனையிலேயே ஷிஜியின் அறைக்குச் சென்றவனை வரவேற்றது அவளது விசும்பல் ஒலி.

ஓ அம்மா இதுக்குதான் இங்கே வரச் சொன்னாங்களா? இப்பொழுது இதை ஆராய நேரமில்லை என்று உணர்ந்து ஷிஜியை நோக்கி வேகமாகச் சென்றான்.

"ஷிஜி அழறியா என்ன எதுக்குடா அழற . எந்திரி முதல்ல இப்போ என்ன நடந்துதுன்னு நீ அழற எனக்கு தெரிஞ்சே ஆகணும்".

இந்த நேரத்தில் யாரும் வரமாட்டார்கள் என்று நினைத்து கதவை பூட்டாமல் வந்த தனது முட்டாள் தனத்தை எண்ணிக்கொண்டு இப்பொழுது என்னசொல்லி

சம்மாளிக்க என்பதை நொடியில் யோசித்து பதில் சொன்னாள், " உன் லவ் மொட்டுலையே கருகிடுச்சே அண்ணா அதை நினைச்சால் தான் எனக்கு ரொம்ப வருத்தமா இருக்கு. அது மட்டும் இல்லை கால் வலியும் சேர்ந்து கண்ணு எனக்கு தெரியாமலேயே கலங்கிடுச்சு , வேற ஒண்ணும் இல்லை. சரி நீ இங்க என்ன பண்ணுற. தூங்கப் போகலையா".

அவளது பேச்சிலேயே அவள் சொல்லுவது பொய் என்பதை கண்டு கொண்டவன் அதை மறைத்து அவளுக்கு புரியும்படி சொன்னான்.

"இங்கபார் ஷிஜி இதை நினைச்சு நீ வருத்தப் படாதே எனக்கு கொஞ்சம் வருத்தம் தான் அம்மா சொன்னது அதுக்காக இப்படி நானும் உட்க்கார்ந்து உன்கூட அழுதால் நல்லாவா இருக்கும் சொல்லு.

இப்போ உன்னோட கவனம் எல்லாம் படிப்புலதான் இருக்கணும். அப்புறமா உனக்குப் புடிச்சவனா, தெரிஞ்சவனா பார்த்து இந்த அண்ணன் உனக்கு கல்யாணம் பண்ணி வைக்கிறேன் சரியா.

எனக்கு இப்படி ஒரு பாசமலர் தங்கச்சி இருக்குறது எவ்வளவு வசதி பாரு எனக்கு பதிலா நீ அழுற. நீ அழுவதைப் பார்த்தால்தான் எனக்கு கண் கலங்குது பாருடா".

அவனது பாவனையில் சிரித்தவள் நன்றாக கவனித்து இருந்தால் தெரிந்திருக்கும் அண்ணன் தன் வாழ்க்கையை அவளுக்கு பிடித்தவனோடு அமைத்துத் தருகிறேன் என்று சொன்னது.

அவள்தான் அவனது பேச்சை முழு மனதோடு கேட்க்கவில்லையே. அதன் விளைவு அவளது மனக் கவலை இன்றோடு முடியவேண்டியது தொடர்கதை ஆனது .

தனது தங்கை கவனிக்கவில்லை என்பதை அறிந்து இருந்தால் அவன் இன்னும் அழுத்தி சொல்லி இருப்பானோ.

ஷிஜி சிரித்ததும் "குட் இதுதான் என் தங்கச்சி கொஞ்சநேரம் முன்னாடி பக்கத்து வீட்டு பொண்ணு மாதிரி இருந்தது உர்ர்ர்ர்ர்ர் -ன்னு . இந்த அண்ணன் எதுக்கு இருக்கேன் எல்லாத்தையும் நான் பாத்துக்கறேன் . நீ நிம்மதியா தூங்கு குட் நைட் ".

சுஷினுக்கு அவளது கவலையை துடைத்துவிட்டோம் என்ற நிம்மதியில் அவனது அறைக்குச் சென்றான். அவனது படுக்கையில் விழுந்ததும் மினியின் நினைவு தண்ணிக்கு அடியில் அமிழ்ந்து கிடந்த காற்றுப் பந்து மேலே எழும்பி வருவதுபோல் வந்தது.

உதடுகள் இனிமையாக முணுமுணுத்தன 'நிலா............ நிலா............ அந்த வானத்தில் இருக்கும் நிலாவைப் போலவே என்னோட நிலாவையும் நான் பார்க்க, ரசிக்க மட்டுமே முடியும் அதுவும் நான் வேற பொண்ணு கழுத்தில் தாலி கட்டுற வரைக்கும்தான் .

அப்புறம்................ நீ என் பார்வையில் படாமலே இருந்துருக்கலாமே நிலா . நானும் ஏதோ ஒரு பொண்ணை கல்யாணம் செய்துகொண்டு நிம்மதியா இருந்து இருப்பேன்.

இப்போ பாரு உன்னை நினைக்கவும் முடியாமல் மறக்கவும் முடியாமல் நரக வேதனையா இருக்கே.

இந்த காதல் என்னை தீண்டாமலே போய் இருக்கலாம் .

அந்த இரவு எப்பொழுது விடியும் என்று காத்திருக்கத் துவங்கின அந்த ஜீவன்கள் . விடிவு நல்ல மாதிரி அமையுமா. (விதி வலியது).

வாழ்வின் இன்பத்தை வாழ்வின் துன்பத்தை

உன்அருகாமையில் தொலைக்க விரும்பும்

என் தேடல்.............

இது காதலென்றால்.............

கா லையில் எழுந்ததுமே மினி தனது தாயை தேடிச் சென்றாள்.

"அம்மா நான் போய் ஷிஜியை பார்த்துவ்ட்டு வரட்டுமா. வீட்டுக்கு வந்ததுக்கு அப்புறம் ஒரு கால் பண்ணிகூட கேக்கலை ".

"எப்படி மினி போவ உன் ஸ்கூட்டி கூட இல்லை. வேண்ணா ஒண்ணு செய் ஹேமாவுக்கு போன் பண்ணி வரச் சொல்லு ரெண்டு பேரும் சேர்ந்து போயிட்டு வாங்க".

"நான் போன் பண்ணி பாக்குறேம்மா அவ வெளியே எங்கேயும் போகாமல் இருக்கணும் இல்லைன்னா நான் தனியாத்தான் போகவேண்டி இருக்கும்".

"நீ கூப்பிட்டு அவ வரமாட்டேன்னு சொல்லுவாளா சரி நான் வேண்ணா போன் பண்ணவா".

"எதுக்கு என் பொண்ணை பத்திரமா கூட்டி போயிட்டு வாம்மான்னா. ஏம்மா இப்படி செய்யிறீங்க என்னமோ எனக்கு ஒண்ணுமே தெரியாத மாதிரி அவளுங்க ட்ரீட் பண்ணுவாளுங்க. நானே கால் பண்ணிக்கிறேன். நீங்க சும்மா இருந்தாலே போதும்".

"எப்படியோ என்னை நிம்மதியா வீட்டில இருக்கவிடக் கூடாதுங்குற முடிவோட நீ இருக்க. எதுக்கும் பார்த்து போயிட்டுவாங்க சரியா".

ஹேமா வந்ததும் இருவரும் ஹேமாவின் வண்டியில் ஷிஜியின் வீட்டிற்கு சென்றனர். அங்கே சுலோ அவர்களை வரவேற்றார்.

"வாங்கம்மா ஷிஜியை பாக்க வந்திங்களா . அவ ரூம்ல இருக்கா போய் பாருங்க".

எப்படி போவது என தயங்கி நிற்கவும் சுலோ, "ஏன் இப்படி தயங்கிட்டே நிக்கிங்க , சரி நான் ஷிஜியை கூப்பிடுறேன். ஷிஜி............ இங்க வா உன்னோட ப்ரண்ட்ஸ் வந்து இருக்காங்க பாரு".

"யாரா இருந்தாலும் ரூமுக்கு வரச் சொல்லுங்கம்மா. என்னால நடக்க முடியலை", ரூமில் இருந்தவாறே ஷிஜி குரல் கொடுக்கவும் வேறு வழி இல்லாமல் அவளது அறைக்குச் செல்ல படிகளில் ஏறினர்.

அந்த நேரம் சுஷினும் தனது அறையில் இருந்து வெளியே வந்தான் . மினியைப் பார்த்ததும் சந்தோஷத்தில் குதிக்கத் துவங்கிய மனது, நேற்று அம்மாவிடம் சொன்ன வார்த்தை ஞாபகம் வந்து அதை அடக்கியது.

அவளது முகத்தைப் பார்க்க துடித்த பார்வையை வலுக் கட்டாயமாக ஹேமாவின் புறம் திருப்பி "ஷிஜியோட ரூம் அதோ அதுதான் நீங்க உள்ளே போங்க அவ இருக்கா".

"ஒ தாங்க்ஸ் அண்ணா நாங்க பாத்துக்குறோம் நீங்க ஆபீஸ் கிளம்பிட்டிங்களா".

அவளது அண்ணா என்ற அழைப்பில் மினியும் சுஷினும் அதிர்ந்து தான் போயினர். ஆனால் இருவரின் அதிர்ச்சியும் வெவ்வேறாக இருந்தது.

மினி ' இவளுக்கு இவன் அண்ணனா இவனைப் பாத்து அண்ணான்னு கூப்பிட எப்படி மனசு வந்தது இவளுக்கு. எப்படியும் ஆறு அடிக்கு குறையாத வளர்த்தி, முடியைப் பாரு அடங்காமல் நெற்றியில் புரண்டு விளையாடுது, பாத்தாலே கலைச்சு விடத் தோணுது, பார்வை அப்படியே ஆளைமயக்குது, மீசையைப் பாத்தாலே பிடிச்சு........... ' மினி ஒருநிமிடம் உறைந்துதான் போனாள்.

நானா இப்படியெல்லாம் நினைக்கிறேன். அதுவும் இவனைப் பற்றி தெரிந்தும். இவனுக்கு ஏதோ ஒரு சக்தி இருக்கு பொண்ணுங்களை மயக்குறதுக்கு அதான் நானே இப்படி எல்லாம் நினைக்கிறேன். மினி கொஞ்சம் யோசித்து இருந்தாலும் தெரிந்து இருக்கும் ஹேமா கொஞ்சம் முன்னாடி அவனை அண்ணான்னு கூப்பிட்டதுக்குத்தான் அவள் அவனைப் பற்றி இவ்வளவுதூரம் யோசித்தோம் என்பது.

அவள்தான் இப்பொழுது சுபா சுஷினை கட்டிப் பிடித்து அழுததை நினைத்துக் கொண்டாளே .

சுஷினோ வேறு விதமான அதிர்ச்சியில் இருந்தான். எங்கே மினியும் அண்ணாவென்று அழைத்துவிடுவாளோ என்ற தவிப்புடனே ஹேமாவிடம் பேசிக்கொண்டே மினியை ஓரவிழியில் பார்க்க, அவளோ அவனை அங்குலம் அங்குலமாக ரசித்துக் கொண்டிருப்பது பார்வையில் பட்டது.

சுஷினுக்கு தான் ஆணாக இருப்பதின் பயனை அடைந்ததுபோல் இருந்தது. அவனை இதுவரை எந்தப் பெண்ணும் இவ்வளவுதூரம் பாதித்தது ,பார்த்தது இல்லை. அதேபோல் தானும் எந்தப் பெண்ணின் பார்வையிலும் இவ்வளவு கர்வப் பட்டதுபோல் தோன்றவில்லை என்றே எண்ணிக் கொண்டான்.

இருவருமே ஒருவருக்காக ஒருவர் பிறந்ததுபோல் தோன்றியது.

ஹேமாவும் சுஷினும் பேசிக் கொண்டிருப்பதை பார்த்தவளுக்கு கோபம் உச்சத்தை அடைந்தது. அவள் ஹேமாவிடம், " ஏண்டி ஹேமா நாம சிஜியை பார்க்க வந்து இருக்கோம் நீ என்னமோ இவரைப் பார்க்க வந்தவ மாதிரி கதை அளந்துட்டு இருக்க. வா போகலாம்".

ஹேமா மினியை விளங்காத பார்வை பார்த்தாள். பார்த்துக் கொண்டே கேட்டாள் ," நாங்க என்ன பேசிகிட்டு இருக்கோம்னே உன் காதில் விழவில்லையா.......".

"ஆமா உங்க பேச்சை கேட்க்கத்தானே நான் இங்க வந்தேன்”

"எதுக்குடீ இப்படி தேவை இல்லாமல் கோபப்படுற............" .

ஷிஜி இன்னும் இவர்கள் வராமல் என்ன செய்கிறார்கள் என்று பார்க்க வெளியில் வந்தவள் அங்கே மூவரும் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தாள். அவளைப் பார்த்ததும் சுஷின் " சரி நான் கிளம்புறேன் ஹேமா கண்டிப்பா உன் அண்ணனை என் ஆபீஸ்-ல் வந்து பாக்கச் சொல்லு", என்று சொல்லிவிட்டு மினியைப் பார்க்காமல் ஹெமாவிடமும் , ஷிஜியிடமும் விடை பெற்றுச் சென்றுவிட்டான்.

மினி அவனது இந்த செயலை எதிர் பார்க்காததால், அவனது முதுகை வெறித்துப் பார்த்தாள். முதுகைத் தொடரும் மினியின் பார்வையை உணர்ந்தும் திரும்பிப் பார்க்காமல் சென்றான்.

"மினி, ஹேமா வாங்க என்ன அங்கேயே நின்னுட்டிங்க , என்ன சாப்பிடுரிங்க காபி, ஜூஸ்".

"இப்போ எதுவுமே வேண்டாம் ஷிஜி, வீட்டில் இருந்து வரும்போது சாப்பிட்டுதான் வாரோம். உனக்கு கால்வலி எப்படி இருக்கு நடக்க முடியுதா. சாரி நேற்று போய் ஒரு போன் கூட பண்ணலை".

"என்ன மினி வரும்போதே மனப்பாடம் பண்ணிட்டு வந்தியா. இப்படி வந்த உடனே மூச்சு விடாமல் பேசுற . எதுவுமே சாப்பிடாம போக முடியாது, ஜஸ்ட் ஜூஸ் சாவது குடி ஓகே" .

அவள் சொல்லி முடிக்கவும் சுலோ ஒரு ட்ரே யில் ஜூஸ் ஸ்நாக்ஸ் எல்லாம் கொண்டுவந்து வைத்துவிட்டு சென்றார் . செல்லும் முன்னர் மினியிடம் அவள் வீட்டு விலாசத்தை வாங்கி விட்டே சென்றார்.

ஷிஜியும் , ஹேமாவும் பேசிக் கொண்டிருந்ததால் இதை கவனிக்கவில்லை.

பின்னர் மூவரும் அரட்டை அடித்து முடித்ததும் கிளம்பிச் சென்றனர்.

வீட்டிற்கு வந்த மினிக்கு தாய் மீனாட்சி ஏதோ பரபரப்பாக இருப்பதுபோல் தோன்றியது. என்னவென்று கேட்டதற்கும் அவர் சரியாக பதில் சொல்லவில்லை.

ஆனால் மறுநாள் அதற்க்கான விடை கிடைத்தபிறகு மினி நெற்றிக் கண்ணை திறந்து தாயை எரித்துவிடும் அளவுக்கு கோபத்துடன் மீனாட்சியை முறைத்துக் கொண்டிருந்தாள்.

"அம்மா உனக்கு கொஞ்சமாவது என் மேல பாசம் இருக்காம்மா . எவனோ ஒருத்தன் என்னை பொண்ணு பார்க்க நாளைக்கு வாரான்னு சொல்லுறிங்களே , நான் இன்னும் காலேஜ் கூட முடிக்கலை , எனக்கு 20 வயசுதாம்மா ஆகுது , எனக்கு விவரமே பத்தாதுன்னு நீங்கதானே சொல்லுவிங்க இப்போ நீங்களே , சரி அதைவிட நான் படிச்சு பெரிய வேலைக்குப் போகணும், கை நிறைய சம்பாதிச்சு சொந்தக் காலில் நிக்கணும்னு பக்கம் பக்கமா டயலாக் பேசுவிங்க இப்போ நீங்களே................"

"என்னால முடியாதும்மா எவனோ ஒருத்தன் முன்னாடி போய் நின்னு காபி குடுத்து, நமஸ்க்காரம் பண்ணி, கடைசியா அவன் பஜ்ஜி , சொஜ்ஜி எல்லாம் சாப்பிட்டு இந்த பொண்ணை எனக்கு புடிக்கலன்னு சொல்லிட்டு போய்டுவான் . இந்த விளையாட்டுக்கே நான் இல்லை ".

பேசிக் கொண்டே போன மினியை அடக்கும் வழி தெரியாமல் கைகளை பிசைந்தார் மீனாட்சி . " மினி நான் சொல்லுவதை கொஞ்சம் கேளு , நீ காபி குடுக்க வேண்டாம், அவங்க காலில் எல்லாம் விழ வேண்டாம், அதெல்லாம் நானே பாத்துக்கறேன்".

"என்ன நீங்க பார்த்துப் பிங்க ம்ம்ம் ".

"காபி குடுக்குறது, அந்த காலில் விழுற விஷயத்தை அவாய்ட் பண்ணுறது இது எல்லாத்தையும்தான் ".

"அப்படியே இன்னொரு ஹெல்ப் பும் பண்ணிருங்கம்மா ".

"இதுக்கும் மேல என்னடி செய்யணும்".

"அப்படியே அந்த மாப்பிள்ளைய நீயே கல்யாணமும் பண்ணி கிட்டிங்கன்னா எனக்கு ப்ரீயா இருக்காது".

"மினி நானும் பொறுமையா சொல்லிக்கிட்டு இருக்கேன் நீ எதில்தான் விளையாடுவதுன்னு இல்ல. இப்போ பொண்ணுதானே பார்க்க வாராங்க கல்யாணமே முடிஞ்ச மாதிரி இப்படி குதிக்கிற. நான் அவங்களை வர சொல்லிட்டேன் நீ இதுக்கு ஒத்துக் கொள்ளவில்லை என்றாலும் அவங்களை நான் வர வேண்டாம்னு சொல்ல மாட்டேன். என் பேச்சை மதிக்கிறதா இருந்தா நாளைக்கு அவங்க முன்னாடி வா இல்லை என் மானத்தை வாங்குறதா இருந்தா உன் இஷ்ட்டப்படி என்னமோ பண்ணிக்கோ".

"அப்பன் இல்லாத பொண்ணு ஆத்தா வளர்த்து வச்சுருக்க லட்ச்சணத்தைப் பாருன்னு எல்லோரையும் சொல்ல வச்சுடாதடா. அம்மாவோட வார்த்தைக்காக என் செல்லப் பொண்ணு இல்லடா . சும்மா அவங்க முன்னாடி வந்துட்டு போய்டு வேற எதுவுமே நீ செய்யவேண்டாம்".

"தாயின் முகத்தைப் பார்த்து இதுக்குமேல் ஏதாவது மறுத்துச் சொன்னால் எங்கே அவர் அழுது விடுவாரோ என்ற பயம் தோன்ற மெதுவாக தலையை ஆட்டிவிட்டு சென்றுவிட்டாள்.

இவளை பொண்ணுபாக்க வாராங்கன்னு சொன்னதுக்கே இப்படி குதிக்கிறாளே இதுல யார் வாராங்கன்னு சொல்லி இருந்தா என்ன சொல்லி இருப்பாளோ .

அப்பொழுது முதல் கலவரத்துடனே நடமாடினார் மீனாட்சி.

# 16

உன்னை சந்திக்கும் நேரங்களைவிட

உன்னை பிரியும் நேரம் அனுபவிக்கும் தவிப்பு

இது காதலென்றால்..................

ஆபீஸ்க்கு வந்த சுஷின் எதையோ பறிகொடுத்ததைப் போல் இல்லை என்றாலும் அவனது மூளையில் ஏதோ குடைகிறது என்பதை அறிந்த பிரகாஷ் அவனிடம் வந்து தோளை அழுத்தினான் . அவனது ஸ்பரிசத்தில் தூக்கத்தில் இருந்து விழிப்பவன்போல் விழித்து அவனைப் பார்த்தான்.

"சுஷின் நீ இந்த உலகத்துலேயே இல்லையே. நான் என் கேபின்ல இருந்து கிளம்புனாலே உனக்குதெரிந்துவிடும் இன்றைக்கு நான் உள்ளே வந்ததுகூட தெரியாமல் அப்படி எந்த மலையை புரட்ட யோசனை பண்ணிக்கிட்டு இருக்க".

"ஹாஹா பிரகாஷ் எல்லோரும் எந்த கோட்டையை பிடிக்க யோசனை பண்ணுறன்னு கேட்ப்பாங்க . நீ என்னடா எந்த மலையை புரட்ட யோசனை பண்ணுறேன்னு கேக்க".

"அவங்கெல்லாம் சாதாரண மனுஷங்களைப் பார்த்து கேட்டு இருப்பாங்க. நீதான் கிரானைட் பிசினஸ் பண்ணுறவன் ஆச்சே . நீ எந்த மலையை உடைக்கலாம், புரட்டலாம், வெட்டலாம் இப்படித்தானே யோசிப்பாய் அதைத்தான் சொன்னேன். நான் சொன்னது சரிதானே".

"நீ சொல்லி நான் இல்லைஎன்று சொல்ல முடியுமா............. ஆனா...............".

"அதேதான் நானும் கேட்கிறேன். மலையை புரட்ட இவ்வளவு யோசிக்க மாட்டியே இப்போ யோசனை எதைப்பற்றி உன்னையவே குழப்புற விஷயம் என்ன, சொன்னா என்னால முடிஞ்ச ஹெல்ப்பை செய்வேன்”.

“இதுல நீ எந்த ஹெல்ப்புமே செய்ய முடியாது பிரகாஷ் , இன்னும் இரண்டு நாளில் பொண்ணு பார்க்க போகிறோம் ".

"கன்க்ராட்ஸ்டா இதை போய் இவ்வளவு சோகமா சொல்லுற . அதுக்குள்ளே மினியைப் பற்றி சொல்லி பொண்ணு பார்க்கவே போற, சந்தோஷப் படாமல் சோகப் படுறியேடா . நீ பிசினஸ் மேன் தான் அதுக்காக ஓவர் சந்தோஷத்தையும் முகத்துல காட்டாமல் கல்லு மாதிரியா வச்சுப்ப".

"பிரகாஷ் என் மனநிலைமை புரியாம.............." , அவனது குரலில் இருந்த விரக்தி அவனை மேலே பேச விடாமல் தடுத்தது. சுஷின் அவ்வளவு சீக்கிரம் எதற்கும் கலங்குபவன் அல்ல பிறகு ஏன், ஏதோ சரி இல்லை என்று பிரகாஷிற்கு புரிந்தது.

"என்ன ஆச்சு சொல்லுடா, எதுக்கு இப்போ இவ்வளவு விரக்தி சொன்னாதானே புரியும் . எதுவும் சொல்லாமல் இப்படி இருந்தா. நீ இருக்குறதைப் பார்த்தா மினியை பார்க்கப் போகலையாடா. வேற பொண்ணையா பார்க்கப் போற. நீ இதுக்கு எப்படி சம்மதிச்ச".

"அம்மாவுக்கு விஷயம் புரிஞ்சுடுச்சு அவங்க மனசு வருத்தப் படுத்திவிட்ட மாதிரி இருந்தது , அது மட்டும் இல்லை ஒரே நாளில்..............".

"என்னடா பேசுற நீ அவங்க வருத்தப் பட்டாங்க ன்னு சொல்லுற, ஒரே நாளில்ன்னு ஏதோ கதை விடுற. ஒரே நாளில் இல்லடா ஒரு நிமிஷத்துல ஒரு பொண்ணைப் பார்த்து, வாழ்ந்தா இவ கூட வாழணும்னு தோணினாலும் அதுக்குப் பேரு காதல்தான். நீ உனக்கு உன் லைப்க்கு யார் உன் மனைவியா வரணும்னு நீதான் முடிவு பண்ணனும். எனக்கு உன்னைப் பற்றி நல்லா தெரியும்டா உன்னால மினியைத் தவிர யார்கூடவும் வாழ முடியாதுடா".

"எனக்கும் அது புரியுதுடா ஆனா இதுவரை அம்மா வார்த்தையை மீறியது இல்லை. அதைவிட மீறி நடக்குற மாதிரி நானும் நடந்து கிட்டது இல்லை ஆனா இப்போ அவங்க பேச்சை கேட்க்கவும் முடியாமல், மீறவும் முடியாமல்,

அவளை மறக்கவும் முடியாமல், நினைக்கவும் முடியாமல்,..................."

"ஒரு பொண்ணு என்னை இந்த அளவுக்கு பாதிப்பான்னு நான் நினைக்கவே இல்லைடா . இப்போ உடனே அடுத்த பொண்ணை பார்ப்பது அதைவிட கஷ்டமா இருக்கு அம்மாகிட்ட கொஞ்ச நாள் போகட்டும்னு சொன்னா அவளைமனதில் வச்சுகிட்டுதான் மறுக்கிறேன்னு நினைச்சுடுவாங்களோன்னு அதையும் சொல்ல பயமா இருக்கு. மனசை என்னமோ பிசையிறமாதிரி இருக்குடா. எப்போ இது முடியும்னும் தெரியலை".

சுஷினின் பேச்சை கேட்ட பிரகாஷிற்கே அவனது நிலையை நினைத்து கவலையாக இருந்தது. இந்த காதல் வந்துவிட்டால் ஒரே நேரத்தில் சொர்க்கத்தையும், நரகத்தையும் அனுபவிக்கும் உணர்வு வந்துவிடும் என்பது எவ்வளவு உண்மை. ஆனால் இவனுக்கு நரகம் மட்டுமே பரிசாக கிடைத்ததுபோல் தோன்றியது அவனுக்கு.

இது ஆறுதல் சொல்லி தேற்றும் கஷ்டம் இல்லையே. இதை அவன் மட்டுமே அனுபவித்து தீர்க்க வேண்டியதுதான் . அவனது தோளை ஆறுதலாக அழுத்தி கொடுத்தான்.

சுஷினுக்குமே அந்த அழுத்தம் தேவையாக இருந்தது. முழுதாக 10 நிமிடம் சென்ற பிறகு தனது உணர்வுகளை கட்டுக்குள் கொண்டுவந்துவிட்டு நிமிர்ந்தான். அவனது பார்வையிலேயே சுஷின் ஒரு தெளிவுக்கு வந்துவிட்டான் என்பதை புரிந்துகொண்டான். சுஷின் இப்பொழுது தெளிவாக சொன்னான்.

"ஓகே லீவிட் பிரகாஷ் என் வாழ்க்கை இப்போ விதிவசம் போய்டுச்சுன்னு நான் நினைச்சுக்கிறேன். நாம இப்போ கொஞ்சம் வேலையை பாக்கலாம். ஷிப் ல அனுப்பின லோட் டிலே ஆகாம சரியான நேரத்துக்கு போய் சேர்ந்துடுமா . ஏதோ புயல் அடிக்கிறதா சொல்லிட்டு இருந்த".

"அதெல்லாம் மேனேஜ் பண்ணிக்கலாம் சுஷின் . நீ இப்போ வேற ஏதாவது வேலை இருந்தா பாரு. நான் அதை பாலோ பண்ணிட்டுதான் இருக்கேன்".

பிரகாஷ் மறுபடியும் சுஷினிடம் , "நான் வேண்ணா அம்மாகிட்ட பேசிப் பாக்கவா".

"இந்த பேச்சை இதோட விடு பிரகாஷ் எனக்கு என்ன வேணும்னு அம்மாவைத் தவிர வேற யாருக்கு தெரியப் போகுது. நீ போய் வேலையை பாரு. எனக்கு கஷ்டமா இருந்தது இப்போ உன்கிட்ட மனசுவிட்டு பேசியதற்குப் பிறகு பரவா இல்லை ".

பிரகாஷ் சென்றதும் ,'இவனை சமாதானப் படுத்தி அனுப்பி வச்சுட்டேன். என் மனசை எப்படி சமாதானப் படுத்தப் போகிறேன்'. கண்களை ஒருமுறை இறுக்க மூடி மூச்சை உள்ளிழுத்து விட்டான். இப்பொழுது சுவாசிப்பதுகூட பாரமாக இருப்பதுபோல் உணர்ந்தான்.

இவனது பிரச்சனையில் அவன் மறந்த இன்னொரு விஷயம் சுபாவுடையது . சுபாவின் நினைப்பு இருந்து இருந்தால் சுபாவிற்கு நேரவிருந்த மிகப்பெரிய அவப்பெயரை தடுத்திருப்பான். அவனது மினியிடம் மேலும் சந்தேகத்தை விதைக்காமல் இருந்து இருப்பான். விதியின் வசம் அவன் விட்டது அவனது வாழ்க்கையை மட்டுமல்லவோ.

மறுநாளின் விடியல் சுஷினுக்கு வெறுமையாகவும், மினிக்கு கடு கடுப்புடனும் , மீனாட்சிக்கு பதட்டமாகவும், ஷிஜிக்கு கவலையாகவும் வேறு அனைவருக்கும் வழக்கமாகவே விடிந்தது.

"சுஷின் இன்னைக்கு ஆபீஸ்சில் இருந்து சீக்கிரமா வந்துவிடு. என்னங்க நீங்களும்தான் ".

"சுலோ வாழப் போற அவன் பார்க்கணும் சரி , அவகூட இருக்கபோற நீ பார்க்கணும் சரி , இதுல நடுவுல நான் எதுக்கு".

"என்னங்க பொண்ணு பார்க்கப் போறது உங்க பையனுக்கு. பையனோட அப்பாவை அவங்க பார்க்கவேண்டும் என்று நினைக்கலாமில்ல".

"அம்மா, அப்புறம் பொண்ணுக்கு அண்ணனுக்கு பதிலா அப்பாவை பிடிச்சுடுச்சுன்னா, அதான் அப்பா யோசிக்கிறாங்கபோல இல்லப்பா", ஷிஜி.

"ஷிஜி நாம பார்க்கப் போற பொண்ணுக்கு கண்ணு நல்லா தெரியும். நீ என்னமோ குருட்டு பொண்ண பார்க்கபோற மாதிரி சொல்லிட்டு இருக்க".

"அம்மா, அப்பா இப்போ தனியா போனா கூட பொண்ணுங்க க்யுல வந்து அவரை பிடிச்சுப்பாங்க".

"எதுக்கு கீழ விழுந்துடாம இருக்கவா".

இன்னும் என்ன பேசி இருப்பார்களோ அதற்குள் சுந்தரம் குறுக்கிட்டார்,"ஷிஜி உங்க அம்மாகிட்ட என்னை தனியா அடிவாங்க வைக்கிறதுல உனக்கு என்ன அவ்வளவு சந்தோஷம். என் பின்னாடி ஒரு பொண்ணு வருவான்னு சொன்னாலே ஒருநாள் புல்லா கிளாஸ் எடுப்பா.இதுல வரிசையா வருவாங்கன்னு சொல்லி இப்படி மாட்டி விடுறியே".

"அப்பா இன்னுமா நீங்க அம்மாவுக்கு பயப்படுறிங்க . அண்ணனுக்கே கல்யாணம் ஆகப் போகுது. வீட்டுக்கு மருமகள் வந்து பேரப் பசங்க வந்தா கூட நீங்க மாறவே மாட்டிங்களா".

"வீட்டுக்கு மருமகள் வந்தாலும், பேரப் பசங்க வந்தாலும். உங்க அம்மா எனக்கு புருஷன் தானேம்மா".

அவரது பேச்சைக் கேட்டு ஷிஜி மட்டுமல்ல , சுஷினும் அடக்கமுடியாமல் சிரித்தனர். சுலோ அவர்களை முறைத்துக் கொண்டு சொன்னார். " வயசுப் பிள்ளைங்ககிட்ட பேசுறமாதிரி பேசுங்க. என்னமோ சின்ன பசங்க கூட சரிக்கி சரி என்ன பேச்சு இது. வயசானா அறிவு

மழுங்கும்னு தெரியும். ஆனா இவ்வளவு மழுங்கும்னு தெரியாமப் போச்சு".

" நீ பேசுறதுலையே தெரியலை யாரு வீட்டு தலைவர்ன்னு".

"அப்பா இன்னைக்கு சனி உங்க வாயில வந்து உக்காந்து இருக்கார் போல, எதுக்கும் வாயை மூடியே வச்சுக்கோங்க. தொறந்தா இன்னும் என்ன என்ன வம்பு வருமோ", ஷிஜி.

"நீ சொல்லுறதால வாயை மூடிக்கிறேன்", சுந்தரம்.

"எல்லோரும் சாப்பிட்டு விட்டு இப்போ ஆபீஸ் போறிங்களா இல்ல............. இப்பவே பொண்ணு பார்க்க போகலாமா".

சுலோ இவ்வாறு சொன்னதும் அனைவரும் கலைந்து சென்றனர்.

"மினி இந்த புடவையை கட்டிக்கோ. காலையில் இருந்து நானும் ஒண்ணு ஒண்ணா சொல்லிட்டு இருக்கேன். பிடிச்சு வச்ச புள்ளையார் மாதிரி உட்க்கார்ந்த இடத்திலேயே இருக்கியே. காபி முதற்கொண்டு சாப்பாடு தண்ணி எல்லாத்தையும் உட்க்கார்ந்த இடத்துக்கே கொண்டுவந்து குடுத்துட்டு இருக்கேன். உன்னை கிளம்பி இரு என்று மட்டும்தான் சொல்லுகிறேன்".

"என்னமோ கார்கில் போருக்கு போகச் சொன்ன மாதிரி இவ்வளவு சோகமா இருக்க".

"இப்போதைக்கு போருக்கு போகக்கூட நான் தயார் ஆனா இந்த வேலை. அம்மா திரும்பவும் நான் சொல்லுறேன் இன்னைக்கு வேண்டாம்மா இன்னொருநாள்...........".

"இந்த 2 நாள் உன்கிட்ட பட்டபாடு போதாதா இன்னொருநாளா. இங்க பார் மினி உனக்குமே இந்த டென்ஷன் இன்னொரு நாள் பட வேண்டாமே . அவங்க வாற நேரம் ஆச்சுடா. சீக்கிரம் கிளம்பு".

மீனாட்சி சொல்லிக் கொண்டிருக்கும்போதே வாசலில் கார் வரும் சத்தம் கேட்டது. அவர் அவசரமாக வாசலுக்கு

விரைந்தார். ஆனால் அதற்கு முன் பக்கத்து வீட்டு மாமி அவர்களை வரவேற்று ஆசனத்தில் அமர வைத்தார்.

சுஷின் இதுவரை கூட, வந்த வீட்டை பார்க்கவே இல்லை. ஷிஜி வந்தது கிடையாது என்பதால் அவளுக்கும் தெரியவில்லை. சுஷின் குனிந்த தலை நிமிராமல் வரப் போகும் பெண்ணை எப்படி எதிர் கொள்வது என்ற தவிப்பில் அமர்ந்து இருந்தான்.

அறையின் உள்ளே மினி, ' வந்துட்டாங்களா எப்படி இருப்பான் அவன் எனக்கு இந்த பொண்ணு பார்க்குற விஷயம் பிடிக்கலையா இல்ல பொண்ணு பாக்க வாரவங்களையே பிடிக்கலையா. மனசுக்குள்ளே ஏன் இவ்வளவு தவிப்பா இருக்கு. அப்போ எனக்கு வேற யாரையாவது பிடிச்சு இருக்கா. அப்படியும் யாரும் இல்லையே.............' இவ்வாறு நினைக்கும்போதே சுஷினின் முகம் மிக அருகில் மின்னி மறைந்தது.

அவள் ஒருவித தவிப்புடன் இந்த உணர்வை ஆராய்வதற்கு முன்னால் மீனாட்சி மினியை கிளப்புவதில் ஆயத்தமானார். அவள் கிளம்பியதும் அவர் அவள் காதில் சொன்னார், " உன்னைப் பார்க்க ஷிஜியும் அவளோட வீட்டில் உள்ளவங்களும் வந்து இருக்காங்க. வெளிய போய் அவங்க கிட்ட கொஞ்சம் பேசிட்டு வாறியாடா".

மீனாட்சி இவ்வாறு சொன்னதும் மினி " ஷிஜியும் அவ வீட்டுல உள்ளவங்களும்னா............ அவளோட அம்மா அப்பா அண்ணா............" அண்ணனை கேட்கும் போதே அவளது குரல் நடுங்கியது. வேறு ஒருத்தன் வரும்போது இவனை எப்படி எதிர் கொள்வது. என்னால சுஷின் முன்னாடி போய் சாதாரணமா நின்று பேச முடியுமா. அதுவும் இப்போ என்னால முடியவே முடியாது.

அவளது இதயம் பந்தயக் குதிரை ஆனது . ஒருவித தவிப்புடனே தாயிடம் சொன்னாள்," அம்மா இப்போ அவங்க முன்னாடி வர ஒருமாதிரி இருக்கும்மா, ஷிஜியை மட்டும் உள்ளே கூப்பிடுறீங்களா".

மீனாட்சி மனதில் நினைத்துக் கொண்டார். 'கெட்டது குடி இவளை எப்படியாவது கிளப்பி கூட்டிட்டு போகலாம்னு பார்த்தா. இவ இப்படி சொல்லுறாளே'.

"மினி அவங்க எல்லோரும் வந்து இருக்கும்போது ஷிஜியை மட்டும் கூப்பிட்டு பேசுவது மரியாதையா இருக்குமாடா. நீயே சொல்லு அதனால எனக்காக வாடா".

தாயின் பேச்சில் இருந்த நியாயம் மினியை அவருடன் போக வைத்தது. அவள் அறையில் இருந்து வெளியேறும் முன்னர் காபி ட்ரே யை கையில் கொடுத்தார்.

பதட்டத்தில் இருந்ததால் இதை கவனிக்கும் நிலையில் அவள் இல்லை. வெளியில் வந்து ஹாலில் இருந்த அவர்களை நோக்கிச் சென்றாள். மினியைப் பார்த்ததும் ஷிஜி உற்ச்சாகமாக குரல் கொடுத்தாள்," மினி................. மினி.................. நீயா................".

ஷிஜியின் குரலைக் கேட்டு வேகமாக நிமிர்ந்து பார்த்தான் சுஷின். மினியின் பார்வையும் , சுஷினின் பார்வையும் கவ்விக் கொண்டது. சுற்றுப் புறத்தை மறந்து இருவரும் பார்வையாலேயே தழுவிக் கொண்டனர்.

"மினி எல்லோருக்கும் காபி குடும்மா", மீனாட்சியின் குரலில் இருவரும் கலைந்தனர். ஆனாலும் சுஷின் தன் பார்வையை விலக்கிக் கொள்ளவில்லை. மினிக்கு இப்பொழுது அடுத்துவரப் போகும் மாப்பிள்ளையை எப்படி தவிர்ப்பது என்றே சிந்தித்துக் கொண்டிருந்தாள். அவளது பார்வை ஒருவித தவிப்புடனே சுஷினை அவ்வப் பொழுது தொட்டு மீண்டது.

சுலோ அவளை பக்கத்தில் அமர்த்திக் கொண்டார். ஏதோ சொல்லப் போன ஷிஜியை பார்வையாலேயே அடக்கிவிட்டு, சுஷினிடம் கண்ணசைவில் பொண்ணு பிடிச்சுஇருக்கா எனக் கேட்க , இருக்கையில் இருந்து எழுந்து வந்து சுலோவின் மறுபக்கம் வந்து அமர்ந்து அவரது கையை பிடித்துக் கொண்டான்.

இதைப் பார்த்ததும் சுந்தரம், ஷிஜி யின் கண்கள் மட்டுமல்ல , மீனாட்சியின் கண்களும் கலங்கியது. மினியோ சுஷினை இழந்து விட்டோம், அவன் நமக்கு இல்லை என்ற நினைவில் கலங்கியது.

இப்பொழுது சுலோ பேசத் துவங்கினார். " எங்களுக்கு பொண்ணை ரொம்ப புடிச்சு இருக்கு . உங்களுக்கு சம்மதம்னா இன்னைக்கே மோதிரம் மாத்திக்கலாம். என்ன சொல்லுறிங்க ".

மீனாட்சி மினியைப் பார்த்தார் அவள் சுஷினையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்ததைப் பார்த்தார். அவருக்கு மகிழ்ச்சி கரை புரண்டது. பூஹம்பத்தை எதிர் பார்த்தால் மினியோ சுஷினை, இமைத்தால் எங்கே பார்வையில் இருந்து மறைந்து விடுவானோ என்பதுபோல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவளது பார்வையிலேயே மினியின் மனது புரிந்துவிட, "எங்களுக்கும் பூரண சம்மதம் என்று சொன்னார்".

அவரும் சம்மதம் என்று சொன்னவுடன் சுலோ தனது கைப் பையில் இருந்து இரண்டு மோதிரங்களை எடுத்து ஒன்றை மினியிடமும், மற்றதை சுஷினிடமும் கொடுத்தார்.

அனைவரும் எழுந்து கூடி நிற்க சுஷின் மினியின் வலக் கையை பிடித்து மோதிர விரலில் மோதிரத்தை அணிவித்தான். அவன் செய்தது போலவே சுஷினின் கையிலும் மினி மோதிரத்தை அணிவித்தாள்.

அவள் அணிவித்து முடித்ததும் ஷிஜி "அண்ணி................ " என்று கத்திக் கொண்டு மினியை கட்டிக் கொண்டு கன்னத்தில் முத்தமிட்டாள்.

அவள் அண்ணி என்று அழைத்ததற்க்குப் பின்னர்தான் தன்னை பெண் பார்க்க வந்ததே சுஷின்தான் என்பது அவளுக்கு புரிந்தது.

ஆகாயத் தாமரை நிறைந்த குளத்தைப் போல

அடி ஆழம் வரை விரவி இருக்கும் உன் நினைவு

இது காதலென்றால்...............

பெண் பார்க்க வந்தவர்களே மினியை நிச்சயமும் பண்ணிவிட்டதால் சந்தோஷத்தின் பிடியில் இருந்தார் மீனாட்சி.

மினிக்கு நடந்து முடிந்த சம்பவத்தை நம்பவும் முடியவில்லை நம்பாமல் இருக்கவும் இயலவில்லை. சுஷினை தான் இழக்கவில்லை என்று நினைக்கும்போதே வானத்தில் பறக்கும் உணர்வு தோன்றியது அவளுக்கு.

சுஷினுக்கோ வாழ்க்கையையே வென்ற உணர்வு, இப்பொழுது உடனேயே மினியை காற்று கூட புக முடியாத அளவு இறுக்கி அணைத்துக்கொள்ள வேண்டும் என்று தோன்றிய உணர்வை சுற்றுப் புறம் உணர்ந்து அடக்கிக் கொண்டான்.

அவளுடன் தனிமை எப்பொழுது கிடைக்கும் என ஏங்கத் துவங்கினான்.

சுலோவே சாப்பாட்டிற்கும் ஆடர் செய்து இருந்தார். நிச்சயம் முடிந்ததும் அவர்களை போன் மூலம் மீனாட்சியின் வீட்டிற்கு வரவைத்தார். விருந்து பிரம்மாதமாக இருந்தது. சுஷினே மலைத்துப் போய்விட்டான், தாயைத் தொடர்ந்தது அவனது பார்வை.

சுந்தரம் மெதுவாக சுஷினிடம், " உன் ஆளு கிட்ட இருக்கும்போது என் பொண்டாட்டியை ஏன்டா இப்படி பார்க்குற".

"அம்மாவை நினைத்தால் எனக்கு ரொம்ப பெருமையா இருக்குப்பா. என் மனசை புரிஞ்சுகிட்டு அவ்வளவு ஏற்பாட்டையும் ஒற்றை ஆளா செய்து இருக்காங்களே. என்னால.............." .

அவனது தவிப்பை உணர்ந்து அவனது கையை ஆதரவாக அழுத்தினார். இவர்களின் பாசப் பிணைப்பை கலைத்தது ஷிஜியின் குரல்.

"இங்க என்னதான் நடக்குது, ரெண்டே மணி நேரத்துல எல்லாமே தலை கீழா மாறிடுச்சு. நீ புது மாப்பிள்ளை ஆயிட்ட, அப்பா மாமனார் ஆயிட்டார், அம்மா மாமியார் ஆயிட்டாங்க , நான் நாத்தனார் ஆயிட்டேன்".

"அம்மாவோட சஸ்பென்ஸ் தாங்க முடியலை, சரி இதையாவது பொறுத்துக்கலாம்ன்னா நீங்க ரெண்டுபேரும் ஓரமா நின்னு பாசத்தை பிழியிரிங்க , இவன் என்னன்னா மினியை பார்த்து விடுற ஜொள்ளுல நாம கார்ல போகாம போட்டுலதான் போகணும். அதைவிடக் கொடுமை இன்னும் ஒண்ணு இருக்கு", சிறிது இடைவெளி விட்டாள் ஷிஜி.

"இன்னும் சொல்லதுக்கு மிச்சம் வச்சுருக்கியா என்ன, சொல்லு அதையும் கேட்ப்போம்", சுந்தரம்.

"வீட்டுக்குள்ளயே கண்ணு ரொம்ப கூசுதுப்பா உங்களுக்கு அந்த மாதிரி இல்ல".

"இப்போ சாயங்காலம் வெயில் கூட இல்லை, இப்போ போய் உனக்கு எப்படி அதுவும் வீட்டுக்குள்ள கண் கூசுது".

சுஷின் மினியை ஆள்காட்டிவிரலை தூக்கிக் காட்டி மிரட்டினான். (ஆனாலும் அவனது முகத்தில் இருந்த பொலிவு குறையவே இல்லை ). சிறிது வெக்கம் கூட பட்டான். அவனது பார்வை மினியைத் தேடி அலைந்தது.

"அப்பா அண்ணனோட முகத்தை நல்லா பாருங்க, உங்களால பார்க்கவே முடியாது. இப்போ கூட நம்மகிட்ட வாய்தான் பேசுது கண்ணு ரெண்டும் போக்கஸ் லைட் மாதிரி எதையோ தேடுது பாருங்க".

இவர்களது மாநாட்டை கலைத்தது சுலோவின் குரல். "எல்லோரையும் நான் சாப்பிட தேடினால், இங்கேவந்து

அரட்டை அடிச்சுட்டு இருக்கிங்களா. எங்க போனாலும் என்னதான் பேசுவீங்களோ . சரி வாங்க எல்லோரும் சாப்பிட போகலாம்.

அனைவரும் சாப்பிட அமர்ந்தனர். மினி ,மினியின் இடதுபுறம் சுஷின், சுஷினின் அருகில் ஷிஜி இப்படி அனைவரும் அமர்ந்து இருந்தனர். சுஷின் இலையைப் பார்க்காமல் மினியையே பார்த்துக் கொண்டிருந்தான்.

மினிக்கு அவனது பார்வை என்னமோ செய்தது, ஆனால் என்னவென்று உணர முடியாமல் இருந்தாள். சுஷினோ அவளது அந்த அவஸ்த்தையை ரசித்துக் கொண்டிருந்தான்.

இல்லையின் மீது இருந்த மினியின் இடதுகையை பலகாரம் எடுக்கும் சாக்கில் தனது விரல்களால் மெதுவாக தீண்டினான். சாப்பிட்டுக் கொண்டிருந்த மினிக்கு புரை ஏறியது . இடதுகையால் தண்ணீர் பாட்டிலை எடுத்தபோது, மினியின் சேலை மறைக்காத இடையை சுஷினில் கை நிமிண்டியது. அவனது இந்த செயலால் தண்ணீர் பாட்டிலையும் தவறவிட்டாள் மினி.

உடல் முழுவதும் மின்சாரம் பாய்ந்த உணர்வில் தத்தளித்துதான் போனாள் மினி. அடிவயிற்றில் கிளர்ந்த உணர்வு உடல் முழுவதும் பரவியது. அங்கே இனிமேல் இருக்கவே முடியாது , தன் உணர்வுகளையும் மறைக்க, அடக்க முடியாமல், " எனக்கு போ......போ.... போதும்....... ப... ப... பசிக்கலை............ , நான் அப்புறம்..........".

ஏதோ ஒன்றை உளறிவிட்டு வேகமாக கை கழுவ விரைந்தாள். இதயம் இப்பொழுதுதான் புதிதாக துடிப்பதுபோல் தோன்றியது. முகம் குங்கும நிறத்தை கடன் வாங்கிக் கொண்டது. கையை கழுவ வந்தவளால் அதை செய்ய இயலாமல் கண்ணாடியில் தெரிந்த பிம்பத்தை இமைகள் படபடக்க வெறித்துப் பார்த்தாள்.

அங்கிருந்து ஓடிவிடு என்று மூளை சொன்னதை செயல் படுத்த முடியாமல் கால்களில் இரும்பு குண்டை வைத்து

பிணைத்து விட்டதைப் போல் அங்கேயே அசையாமல் நின்றாள்.

கண்ணாடியில் தெரிந்த சுஷினின் உருவம் நிதானமாக அடி வைத்து மினியின் அருகில் வந்தது. அவனது மூச்சுக் காற்று மினியின் பின்னங் கழுத்தில் சூடாக பாய்ந்தது. வெகு நிதானமாக அவளது வலக் கரத்தை எடுத்து , அவனது கரத்தையும் அவளது கரத்தையும் அவனே கழுவினான்.

இப்பொழுது அவனது உடல் அவளது பின்புறத்தில் நெருங்கி இணைந்தது. தாழ முடியாமல் தன் கண்களை மூடிக் கொண்டாள் மினி. அவளது கருவிழிகள் மூடிய இமைகளுக்குள் இங்கும் அங்கும் ஓடிக் கொண்டிருந்தது.

சுஷினும் அவளைவிட்டு விலக முடியாமல் இன்னும் இழைந்து அவளை இடையுடன் சேர்த்து கட்டிக் கொண்டான். கட்டிக் கொண்டு அவளது காதில் மிக மெதுவாக அழைத்தான், " நிலா.......... நிலா.............".

"அவனது அணைப்பும் நிலா என்ற அழைப்பும் மினியை அடியோடு நிலை குலைத்தது . வேகமாகத் திரும்பி அவனை இறுக்கித் தழுவிக் கொள்ள எழுந்த ஆவலை அடக்க முடியாமல் திரும்பிய அந்தநொடி கேட்டது ஒரு குரல்.

"அண்ணா..................".

அந்த குரலில் பிரிந்தனர் இருவரும். மினி அந்த இடத்தை விட்டு ஓடியே போனாள். அறைக்குள்ளே வந்த பிறகும் சுஷின் தன்னை அணைத்துக் கொண்டிருப்பதுபோல் தோன்ற, தவித்துதான் போனாள்.

'சே........... என்ன செய்யப் பார்த்தேன் நான். ஷிஜி மட்டும் அங்கே வராமல் போய் இருந்தால் என்ன நடந்து இருக்கும்."ஒன்றுமே நடந்து இருக்காது" உரக்கவே தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள். நிஜம்மாவே ஒண்ணுமே நடந்து இருக்காதா உள்மனது கேட்ட கேள்வியை வேகமாக ஒதுக்கினாள் மினி.

கட்டிலில் படுத்து தலகாணியை இறுக்க கட்டிக் கொண்டு கண்களை மூடிக் கொண்டாள். அவளுக்கு மேலே சிந்திக்க பயமாக இருந்தது.

அங்கே ஷிஜியிடம் வசமாக மாட்டிக் கொண்டான் சுஷின்.

"என்னண்ணா கை ரொம்ப காஞ்சிடுச்சோ".

"இல்லையே ஏன் கேக்குற ஷிஜி".

"கை கழுவ ரொம்ம்ம்ம்ம்ம்ம்ம்ம்ம்ப நேரம் ஆச்சே அதான் கேட்டேன்".

"இப்போதானே வந்தோம்............ அதுக்குள்ளே எப்படி..............".

"இப்போதான் வந்திங்களா............ நான் வந்தே பத்து நிமிஷம் ஆச்சு. சரி ஒரு கிஸ்ஸ போட்டு முடிப்பான் நாமளும் கிளம்பலாம்னு பார்த்தா.................", இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே சுலோ, சுந்தரமும் கை கழுவ வந்தார்கள்.

அப்பொழுதுதான் சுஷினுக்கு புரிந்தது ஷிஜி ஏன் அழைத்தாள் என்பது. சுஷின் ஷிஜியை நன்றிப் பார்வை பார்க்க அவளோ, குறும்பாக பார்த்து கண் சிமிட்டினாள்.

" நான் பார்த்ததை அம்மாவும் அப்பாவும் பார்த்திருக்கணும் , எப்படி இருந்து இருக்கும்".

"நீ ஏதாவது பார்த்தியா என்ன", அசடு வழிந்தபடி கேட்டான் சுஷின்.

"நான் நீ மினியை கட்டி புடிச்சதையும் பார்க்கலை அவ சொக்கிப் போய் நின்னாளே அதையும் பார்க்கலை போதுமா". அவள் பாக்கவில்லை என்று சொல்லிக் கொண்டே அனைத்தையும் பார்த்துவிட்டேன் என்று கூற சுஷின் அவளை இப்படியா செய்வ என்று குற்றம் சாட்டும் பார்வையைப் பாக்க அவளோ.

"அண்ணா இங்க நானே இப்போதான் வந்தேன் என் பின்னாடியே எல்லோரும் வந்தாங்க. வேற வழி இல்லாமதான் கூப்பிட்டேன். இல்லன்னா வெளிய நின்னு உனக்கு காவல் காத்திருப்பேன் போதுமா. தங்கச்சியை 'மாமி' வேலை பார்க்க வைக்க உனக்கு ஆசைதான் போ. சரி வா அம்மா வந்து விளக்கம் கேட்டா என்னால சொல்லாம இருக்க முடியாது".

சுஷினின் வயிற்றில் புளியை கரைத்துவிட்டு அவள் கூலாக சென்றாள். சுஷின் இவகிட்ட போய் மாட்டினேனே என்று விதியை நொந்தபடி அவளது பின்னால் சென்றான்.

அவர்கள் கிளம்பும் நேரமும் வந்தது. மீனாட்சியே சுலோவிடம் கேட்டார்,"கல்யாணத்தை எப்போ வச்சுக்கலாம். இன்னைக்கே நிச்சயமும் பண்ணிட்டதால சீக்கிரமா வச்சுட்டா நல்ல இருக்கும்னு நினைக்கிறேன். உங்க அபிப்பிராயம் தெரிஞ்சா......" , அவருக்கு மினியின் மனம் மாறும் முன்னர் முடித்துவிட வேண்டும் என்ற தவிப்பு இருந்தது.

"மினி இன்னும் B.Sc யே முடிக்கலை, இன்னும் ஒரு வருஷப் படிப்பு இருக்கே, அவ முடிச்ச அடுத்த மாசம் கல்யாணத்தை வச்சுக்கலாம்". இப்பொழுது சுஷினின் முகத்தை பார்த்தார் அதில் கொஞ்சம் கவலை தோன்றியதுபோல் இருந்தது. ஆனால் நொடியில் அதை மாற்றிவிட்டு ," எனக்கும் அதுதான் சரின்னு படுத்து , கொஞ்சம் மெச்சூரிட்டியும் வரும்".

இவர்களது பேச்சை உள்ளிருந்து கேட்டுக் கொண்டிருந்த மினி,' இப்போ என்னோட மெச்சூரிட்டிக்கு என்ன குறை வந்துடுச்சாம், சொல்லுறதைப் பாரு இப்போவே கல்யாணத்தை வச்சுப்போம்னு சொல்லாமல்............ மினி இந்த இடத்தில் தன் வாதத்தை நிறுத்தினாள்.

'இப்போ நான் என்ன நினச்சேன். நான் நினைத்ததற்க்கு அர்த்தம் உடனே எனக்கு கல்யாணம் வேண்டும் என்பதா,

அப்படி என்றால் எனக்கு......... நான்.............' . இவளது சிந்தையை கலைத்தார் மீனாட்சி.

"அவங்க கிளம்புறாங்களாம் மினி, வந்து வழி அனுப்பு ".

அனைவரும் சொல்லிக் கொண்டு கிளம்பினர். சுஷின் பார்வையாலேயே விடை பெற்றான்.

அவள் யோசித்து இருந்தால் தெளிந்து இருப்பாளோ. அவர்களது வாழ்வில் விளையாட காத்திருக்கிறேன் என்று விதி சிரித்துக் கொண்டது.

## 18

வானவில்லின் நிறங்களை கடன்வாங்கியதுபோல

வாழ்க்கை உன்னைப்பார்த்தபின் வண்ணமயமாய்

போனதாக தோன்றுகிறதே

இது காதலென்றால்.................

அன்று சுஷின் அலுவலகம் கிளம்பும்போது சுலோ வந்து சுஷினிடம்," அன்னைக்கு நான் ஒரு விஷயம் சொன்னேன் ஞாபகம் இருக்கா..........இல்ல...........".

"ஞாபகம் இருக்கும்மா ஆனா எப்படி ஆரம்பிக்கிறது என்றுதான் புரியலை. நான் கேட்டு அது தப்பா போய்ட்டா".

"முதல்ல முயற்சி செய்யாமலே , இப்படி ஆயிடுமோ, அப்படி ஆயிடுமோன்னு நினைக்கிறதை நிப்பாட்டு. நான் சொல்வதில் உனக்கு நம்பிக்கை இல்லையா".

"ஐயோ அம்மா.......... உங்களை நம்பாமல் வேற யாரை நம்பப் போறேன். இன்று முதல் எனக்கு அதுதான் வேலை போதுமா. சரி எனக்கு ஆபீசுக்கு டைம் ஆச்சு நான் கிளம்புறேன்".

"சரி பார்த்து சந்தேகம் வராத மாதிரி நடந்துக்கோ சரியா. சாயங்காலம் எனக்கு என்ன நடந்தது என்று விவரம் சொல்லு இப்போ நீ கிளம்பு ".

சுலோவிடம் விடை பெற்று ஆபீசுக்கு கிளம்பிச் சென்றான்.

அலுவலகத்தில்...................

"பிரகாஷ் நான்தான் உடனே என் கேபின்க்கு வா, முக்கியமான விஷயம் பேசணும்". சுஷின் அழைத்த அடுத்த பத்தாவது செகண்டில் பிரகாஷ் அவனது முன்பு இருந்தான்.

"என்ன சுஷின் மினியோட உனக்கு நிச்சயம் ஆனாலும் ஆச்சு உன்னை கையிலேயே பிடிக்க முடியலை. தங்கச்சி என்னப்பா சொல்லுறா, போன்ல பேசுனியா. எப்போ கல்யாணம் வச்சு இருக்கீங்க".

"அதைப் பற்றி உன்னிடம் பேசத்தான் கூப்பிட்டேண்டா . அம்மா முதல்ல மினியோட படிப்பு முடியட்டும்னு சொன்னாங்க எனக்கும் அது சரின்னு பட்டுது, ஆனா இப்போ ஷிஜியை வீட்டில் வைத்துக் கொண்டு கல்யாணம் பண்ணுறது சரிவராது என்ற மாதிரி பேசுறாங்க".

இதைச் சொல்லும் போதே பிரகாஷின் முகத்தையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான். அங்கே அவன் எதிர் பார்த்த மாதிரி பிரகாஷின் முகம் ஒருமுறை இருண்டு பின் இயல்புக்கு வந்தது.

பிரகாஷ் மனதிற்குள்ளே குமைய துவங்கினான் , அவனது உள்ளக் கலக்கம் முகத்தில் தெரியாமல் இருக்க அவன் முயன்றாலும் , அது இயலாமல் தோற்றான். சுஷின் மனதிற்குள்ளேயே புன்னகைத்துக் கொண்டான்.

சுஷின் தொடர்ந்து பேசினான், " நானும் இப்போ என்ன அவசரம்மா அவளோட படிப்பு முடிந்ததற்க்கு பிறகு பார்க்கலாம் என்று சொன்னேன்".

"அவ இப்போ சின்னப் பொண்ணுடா, அவளுக்கு என்ன தெரியும், அவளோட படிப்பு முடிஞ்சதுக்கு அப்புறமா பார்க்கலாமே" இதைச் சொல்லும்போதே பிரகாஷின் குரலில் ஒரு சிறிய நடுக்கம் ஓடியது.

சுஷின் அதை தெளிவாக கண்டு கொண்டான்." நானும் அம்மா விடம் அதேதாண்டா சொன்னேன். அதுக்கு அவங்க மினியும் , ஷிஜியும் ஒரே வயசு பொண்ணுங்கதான் , மினியை நீ கல்யாணம் பண்ணிக்கும்போது ஷிஜிக்கு ஏன் மாப்பிள்ளை பார்க்கக் கூடாது என்று திருப்பிக் கேக்குறாங்க".

"மினியை நீ கண்கலங்காமல் பத்திரமா பார்த்துப்பாய் அதே மாதிரி ஷிஜியையும் ஒருத்தன் கண்கலங்காமல் அவளை பூப்போல தங்குறவனா , அவ மனசை புரிஞ்சு நடக்குறவனா , அவ மனசுக்குப் பிடிச்சவனா, அவனோட குடும்பத்துல உள்ளவங்களும் அவளை புரிஞ்சு அவ மனசு கோணாமல் நடந்துக்குறவங்களா இருக்கணுமேடா ".

அவனது குரலிலேயே நான் அவளுக்கு எல்லாமாக இருப்பேன் என்ற உறுதியும், அவளை கண்கலங்காமல் பார்த்துக் கொள்வேன், அவளை என் உயிருக்கும் மேலாக காதலிக்கிறேன் என்ற மறை பொருளும், அவளது வாழ்க்கையில் எந்த துன்பம் வந்தாலும் நான் தாங்கிக் கொள்ள மாட்டேன் என்ற தவிப்பும் சேர்ந்தே இருந்தது.

இவை அனைத்தையும் உணர்ந்தாலும் உணராதவன் போன்று, " அதேதாண்டா என் கவலையும். அதனால்தான் அவளுக்கு ஏற்ற மாப்பிள்ளையா, அவளுக்கு பொருத்தமான மாப்பிள்ளையா, அவளுக்கு புடிச்ச மாப்பிள்ளையா, அந்த பிடித்தவில் அழுத்தம் கொஞ்சம் அதிகமாகவே கொடுத்தான் சுஷின். நீ தான் பார்க்க வேண்டும் என்று உன்னிடம் சொல்லத்தான் கூப்பிட்டேன்.

"நீ எந்த பையனை காட்டினாலும் சரி நானும் என் வீட்டில் உள்ளவங்களும் ஒத்துக் கொள்வோம் சரியா".

"இந்த விஷயம் ஷிஜிக்கு தெரியுமாடா, அவளுக்கு இதில் சம்மதமா", இதைக் கேக்கும்போதே பிரகாஷின் முகம் வெளறியது.

"இதுல அவ சம்மதிக்க என்னடா இருக்கு, நாங்க கேட்டதுக்கு வேண்டாம்னோ, வேணும்னோ எதுவுமே சொல்லலைடா. நான் மேல படிக்கணும்னு சொன்னதையே திரும்ப திரும்ப சொல்லுறா".

"அப்போ அவளுக்கு விருப்பம் இல்லாமல் இருக்கலாமே எதுக்கும் இன்னொரு முறை நீ கேட்டுப் பாரேன்", பிரகாஷ்.

"நான் கேட்டு அவ ஒண்ணுமே சொல்லலைடா.நீ கேட்டுப் பாக்கவே இல்லையே. அவ மனசுல என்ன இருக்குன்னு உனக்கு தெரியாதாடா. மனசாட்சி கேள்வி கேட்டது. நீ வேண்ணா பேசிப் பாரேன்", கலங்கிய குட்டையை இன்னும் கலக்கினான் சுஷின்.

"நான் எப்படிடா ஷிஜிகிட்ட இதைப்பற்றி பேசுவது. என்கிட்டே எப்படி அவ சொல்லுவா". அவனது குரலும் மனமும் இப்பொழுது விரக்தியில் தோய்ந்து வந்தது.

"நீதான் அவளுக்கு மாப்பிள்ளை பாக்கப் போற, அவளுக்கு எந்த மாதிரி மாப்பிள்ளை வேணும்னு நீ கேட்டாதானே சரியாருக்கும்".

'டேய் அவ என்னையதான் வேணும்னு கேப்பாடா. இதை எப்படி நான் உன்னிடம் சொல்லுவேன். இயலாமையால் அவனது மனம் ஊமையாய் அழுதது'.

அவனது சிந்தனையில் உழன்றதால் சுஷினின் பேச்சை அவன் கவனிக்கவில்லை. சுஷின் கடைசியாக சொன்ன " நீ வீட்டுக்கு இப்போவே கிளம்பு சரியா" என்ற வாசகம் மட்டுமே

"யார் வீட்டுக்கு........... என்ன சொன்னடா. நான் கவனிக்கலை".

"ஷிஜிக்கு நாளையோட லீவ் முடியுது. அதனால இன்னைக்கே போய் அவகிட்ட பேசுன்னு சொன்னேன்".

"அப்படின்னா உன்வீட்டுக்கா போக சொன்ன".

"ஷிஜிகிட்ட பேசணும்னா என் வீட்டுக்குதாண்டா போகணும் . என்னமோ புதுசா கேக்குற. என் வீட்டுக்கு இதுக்கு முன்னாடி நீ போனதே இல்லையா ம்ம்". நீ எப்படி என் தங்கச்சிகிட்ட பேசுறன்னு நானும் பார்க்குறேன்.

'மவனே நீ மட்டும், உனக்கு நான்தான் மாப்பிள்ளை பார்க்குறேன்னு சொல்லு, பிறகு இருக்கு உனக்கு கச்சேரி' இப்படி நினைத்துக் கொண்டே சிரித்துக் கொண்டான்.

"நான் சாயங்காலம் போகவாடா".

"ஏன் அப்போதான் நல்லநேரமா? இப்போ நல்ல நேரம் இல்லையா. முதல்ல போடா மற்றதை பிறகு பார்க்கலாம்".

அவன் கிளம்பிச் சென்றதும் வீட்டிற்கு போன் செய்தான். ஷிஜியே போனை எடுக்கவும் " ஷிஜி இப்போ பிரகாஷ் அங்கே வருவான். எதுக்குன்னா உனக்கு மாப்பிள்ளை பாக்கும் பொறுப்பை நான் அவங்கிட்டதான் ஒப்படைச்சுருக்கேன். நீங்க ரெண்டு பேரும் பேசி ஒரு முடிவுக்கு வாங்க சரியா".

பேசிவிட்டு ஷிஜியின் பதிலை எதிர் பார்க்காமல் சிரித்துவிட்டே வைத்துவிட்டான். அவன் பேசியதன் அர்த்தம் அவளுக்கு புரிந்து இருக்கும் என்று எண்ணினான்.

ஆனால் அவனது முதல் பேச்சிலேயே அவள் காது அடைத்துக் கொண்டது அவனுக்கு தெரிந்திருக்கவில்லை. ஷிஜியோ இந்தப் பக்கம் போனை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இந்த காதல் வந்தாலே மூளை வேலை செய்யாதோ. அப்படி செய்து இருந்தால் சுஷினின் பேச்சை ஷிஜி சரியாக

புரிந்துகொண்டிருப்பாள். இப்பொழுது துள்ளிக் குதித்து இருப்பாள் ஆனால்................

'நான் சரியாதான் கேட்டேனா, இல்ல என் காது மந்தம் ஆயிடுச்சா. பிரகாஷ் எனக்கு மாப்பிள்ளை பார்க்குறாரா. அதைப் பற்றி என்கிட்டேயே பேசப் போறாரா. வரட்டும் என்கிட்டே வந்து பேசுற அளவுக்கு அதுவும் மாப்பிள்ளையைப் பற்றி பேசுற அளவுக்கு அவருக்கு தைரியம் இருக்கா , எரிமலையை உள்ளே அடக்கிக் கொண்டு பிரகாஷின் வரவுக்காக காத்திருக்கத் துவங்கினாள்.

காரில் வந்துகொண்டிருந்த பிரகாஷிற்கு ஷிஜியிடம் எப்படி பேச்சை ஆரம்பிப்பது, அவளிடம் உனக்கு எந்த மாதிரி மாப்பிள்ளை வேணும்னு அவளோட முகத்தைப் பார்த்து எப்படி கேட்பது, என்னால் அவளது முகத்தை பார்த்தால் அதை கேட்க முடியுமா என்ற சிந்தனையிலேயே கழிந்தது.

வீட்டின் முன்னாள் கார் வந்து நிற்கும் ஓசை கேட்டதும் ஸோபாவில் இருந்து எழுந்து வாசலை நோக்கிச் சென்றாள் ஷிஜி.

பிரகாஷும் காரில் இருந்து இறங்கி வீட்டிற்குள் வர வாசலில் கால் வைத்தான். இருவரின் பார்வையும் சந்தித்துக் கொண்டன.

குற்றம் சாட்டும் பார்வையை ஷிஜியும், தவிப்பான பார்வையை பிரகாஷும் தாங்கி நின்றனர்.

# 19

என் மனதில் உன்னை உயிராக நினைக்க

என்னை விட்டுக் கொடுக்கத் துணிந்த உன்மனதை

வெறுக்க நினைத்தும் இயலாத என் தவிப்பு

இது காதலென்றால்..................

பிரகாஷ் வீட்டிற்குள் அவளைத்தாண்டி உள்ளே வந்தான். ஷிஜி நின்ற இடத்தில் இருந்து அசையாமல் கதவிலே சாய்ந்துகொண்டு கைகளை மார்புக்கு குறுக்காக கட்டிக் கொண்டு அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

பிரகாஷ் அவளது கூர்மையான பார்வையைப் பார்த்தது,' நான் எதுக்கு வந்திருக்கேன்னு இவளுக்குத் தெரியுமா என்ன. எப்பவும் என்னைப் பார்க்கும்போது என் கண்ணைப் பார்க்காமல் தவிர்ப்பா. இன்னைக்கு என்னை இமைக்காமல் வெறிச்சுப் பார்க்கா, அதுமட்டும் இல்ல பார்வையில ஏதோ வித்தியாசமும் தெரியுதே.

இதை எப்படி கண்டுபிடிக்கிறது. வாங்கன்னுகூட கூப்பிடலை.

இருவரும் எதுவுமே பேசாமல் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டே இருந்தனர் சுலோ வரும்வரை. " அட பிரகாஷா வாப்பா நீதான் வந்ததா, கார் சத்தம் கேட்டமாதிரி இருந்தது, ஆனா பெல் சத்தம் எதுவும் கேட்க்கலை என்னன்னு பார்க்கவந்தா, ஷிஜி இங்கேதான் இருக்காளா. என்ன விஷயமா வந்தப்பா".

அவன் என்னசொல்லப் போகிறான் என்று தெரிந்துகொள்ள ஷிஜியும், அவனது பதிலுக்கு சுலோவும் காத்துக் கொண்டிருக்க அவன், 'ஐயோ வசம்மா மாட்டிகிட்டேனே வீட்டில் அம்மா இருப்பாங்கன்னு ஞாபகமே இல்லாமல் வந்துட்டேன், இப்போ இவங்ககிட்ட உண்மையை சொல்ல முடியாது என்ன சொல்லலாம்' .

"பிரகாஷ் என்ன விஷயமா வந்தன்னு கேட்டேன் நீ என்னமோ என் பொண்ணைகேட்டு வந்த மாதிரி தயக்கமா உக்காந்து இருக்க".

சுலோவின் பேச்சைக்கேட்டு இருவருமே வெலவெலத்துப் போயினர். பிரகாஷ் வேகமாக சொன்னான்," அம்மா சுஷின் ஒரு பைல் எடுத்துட்டு வரச் சொன்னான் .

அதுக்காகத்தான் வந்தேன். நீங்க நினைக்கிறமாதிரி..............".

அவன் இல்லையென்று சொல்லிவிடுவானோ என்ற தவிப்புடன் ஷிஜி பார்க்க, வாக்கியத்தை முடிக்கும் தைரியம் வராமல் வார்த்தையை பாதியிலேயே நிறுத்தினான். பார்வை ஷிஜியை தழுவி மீண்டது.

ஷிஜியின் முகத்தில் படியத் துவங்கிய கவலை சிறிது குறைந்தது. கோபம் அந்த இடத்தை பிடித்துக் கொண்டது. பிரகாஷின் நிலைமைதான் பரிதாபமாக இருந்தது.

ஷிஜியிடம் மனதைத் திறக்கவும் முடியாமல், சுஷினிடம் சொல்லிவந்ததை செயல்படுத்தவும் முடியாமல், சுலோ அம்மாவிடம் பொய் சொல்லவும் முடியாமல் துடித்துக் கொண்டிருந்தான்.

ஆனால் ஷிஜியிடம் இன்று பேசிவிடவேண்டும் என்ற முடிவுமட்டும் மாறாமல் வலுப்படத் துவங்கியது.

அவனது பேச்சைக் கேட்டு மனதுக்குள் சிரித்துக் கொண்டாலும்,' இவனுக்கு என்னைக்குதான் தைரியம் வருதுன்னு பார்க்கலாம். இவ்வளவுதூரம் கேட்க்கிறேன் வாயை திறந்து ஏதாவது சொல்லுறானா பாரு பார்வைமட்டும் நல்லா பார்க்குறான், அவளோட மனசு வருத்தப்படக் கூடாதுன்னும் அக்கறை இருக்கு சரி விட்டுப் பிடிப்போம்'. சுலோ மனதுக்குள்ளே எண்ணிக் கொண்டார்.

"ஓ.......... பைல் எடுக்கத்தான் வந்தியா. நீயேபோய் சுஷினோட ரூம்ல இருந்து எடுத்துக்கோ போ". அவன் போனதும் ஷிஜியிடம் அவனுக்கு காபி கொண்டுபோய் கொடுக்குமாறு சொன்னார்.

ஷிஜியும் காபியை எடுத்துக் கொண்டு அவனைத் தேடிச் சென்றாள். அவன் சுஷினின் ரூமில் இல்லாத பைலை தேடிக் கொண்டிருக்க. ஷிஜி போய் நின்றாள், "எந்த பைல் ன்னு சொன்னிங்கன்னா நானும் சேர்ந்து தேடுவேன்ல".

அவனுக்கே தெரியாத பையிலை அவன் எப்படிச் சொல்லுவான். " அந்த பைல் இங்கேயும் இல்லைன்னு நினைக்கிறேன். காணோம் நான் சுஷினுக்கு போன் பண்ணி கேக்குறேன்".

அவ்வளவுதானா என்பதுபோல் ஷிஜி பார்க்க, அவளது பார்வையில் என்னகண்டானோ. அவளிடம் பேசவேண்டுமென்ற ஆவல் எழுந்தது. தொண்டையை செருமிக் கொண்டு, " ஷிஜி, அன்னைக்கு காலில் அடிபட்டுதே இப்போ சரி ஆயிடுச்சா. பிரச்சனை ஒண்ணுமில்லையே , நடக்கும்போது ஏதாவது வலி இருக்கா".

ஷிஜிக்கு அவன் வாயால் தனது பெயரைக் கேட்டதுமே சந்தோஷப்பட்டுப் போனாள். அவன் இதுவரை அவளை பெயர் சொல்லி அழைத்தது இல்லை. தனிமையில் பார்த்தால் பார்வையாலேயே தழுவுவதோடு சரி. அதைவிட இன்னும் அவளுக்கு அடிபட்டதை ஞாபகம் வைத்துக் கொண்டு கேட்டதும் பேச்சே வரவில்லை.

"என்ன கேட்டிங்க, ரொம்ப சீக்கிரமா விசாரிச்சுட்டிங்க. அது சரியாகி ரொம்ப நாள் ஆச்சு. கால் நகம்தான் பிய்ந்தது இன்னும் வளரவில்லை. அதுமட்டும் கொஞ்சம் வலி இருக்கு".

அவளது குற்றம் சாட்டல் பொறுக்காமல்," நான் சுஷின்கிட்ட கேட்டேன் அவன் சரி ஆயிடுச்சுன்னு சொன்னான் . அதுமட்டும் இல்லை அதுக்கப்புறம் நான் உன்னை இன்றைக்குதான் பார்க்கிறேன்".

"அண்ணன் கிட்டெல்லாம் விசாரிப்பிங்க , என்கிட்டே விசாரிக்கமாட்டிங்க".

"யார்கிட்ட கேட்டா என்ன நீ நல்லா இருக்கன்னு எனக்குத் தெரியணும் அவ்வளவுதானே".

"அவ்வளவுதானா...............".

அவள் எதை கேட்க வருகிறாள் என்பதுபுரிந்தும் புரியாதவன்போல, " சரி அதைவிடு உன் கால் நகம்..................". 'எப்படி இருக்கு நான் பார்க்கலாமா' என்று கேட்கத் துடித்த நாவை அடக்கி, அவளது நீளமான ஸ்கர்ட்டை தாண்டி அவளது கால்களை பார்க்க முயன்றான். எந்த உரிமையில் அதைக் கேட்பது அவளது முகத்தை ஆவலாக பார்த்தான்.

நான் கேட்க வருவது புரிகிறதா என்ற கேள்வி அதில் தொங்கி நின்றது.

அவனது பார்வை சென்ற இடத்தை அவளும் பார்த்துவிட்டு , அவனது முகத்தை 'நீ கேட்க வருவது புரிந்தது ஆனால் காண்பிக்க முடியாது என்ற பிடிவாதத்துடன் நின்றாள். 'நான் கேட்பதை தவிர்ப்பாய் ஆனால் நான்மட்டும் உன்மனமறிந்து நடக்க வேண்டுமா முடியாதுபோடா' என மனதுக்குள் நினைத்துக் கொண்டாள்.

அவளது பிடிவாதம் முகத்தில் தெரிய " நான் கிளம்புறேன், இங்கவந்து ரொம்பநேரம் ஆச்சு அம்மா கீழ தேடப்போறாங்க ". சொல்லிக் கொண்டே வாசலை நோக்கிச் சென்றான்.

அவன் எதுவுமே கேட்காமல் செல்லுவதைப் பார்த்த ஷிஜி அவன் வாசலைத் தாண்டும்போது கேட்டாள், " என்கிட்டே ஏதாவது கேட்கணுமா, அண்ணன் ஏதாவது சொல்லி அனுப்பினானா".

வெளியேறப் போனவன் திரும்பிப் அவளது கண்களை நேருக்கு நேர் பார்த்து சொன்னான், " உன் அண்ணன் கேட்கச் சொன்னதை நான் கேட்டு உன்மனதைக் கொல்லுவதை விட என்னை நானே அழித்துக் கொள்வது எனக்கு சுலபமா இருக்கும்" .

அவனது குரலில் இருந்த தவிப்பு, கண்களில் தெரிந்த வலி ஷிஜியை புரட்டிதான் போட்டது.

"பிரகாஷ்............" என்ற கூவலுடன் ஓடிவந்து காற்றுகூட எங்களை பிரிக்கக் கூடாது என்பதுபோல் இறுக்கக் கட்டிக் கொண்டு அவனது மார்பில் முகம் புதைத்தாள்.

பிரகாஷோ இதற்குமேல் முடியாது என்பதுபோல் அவளைவிட அதிகமாக அவளை தனக்குள்ளே புதைத்து விடுபவன்போல் இறுக்கினான். எவ்வளவுநேரம் அந்த மாயையில் இருந்தார்களோ, பிரகாஷ் முதலில் சுயஉணர்வுக்கு வந்தான்.

அவளை வேகமாக தனது அணைப்பிலிருந்து விலக்கினான். ஏதோ கேட்கப்போன ஷிஜியை எதுவும் சொல்லவேண்டாம் என்பதுபோல் தலையை ஆட்டி மறுத்தான். பிறகு நிதானமாக சொன்னான், " உன்கிட்டே எப்படி சுஷின் சொன்னதை கேட்க முடியாதோ, அதேபோல அவன்கிட்டே உன்னையும் என்னால் கேட்க முடியாது ".

திரும்பிப் பார்க்காமல் வெளியேறிய பிரகாஷை , " நீங்களா கேட்டு என்கழுத்தில் தாலி ஏறும் , அப்படி இல்லைன்னா எனக்கு இந்த ஜென்மத்தில் கல்யாணம் என்ற ஒன்று கிடையாது" என்ற ஷிஜியின் குரல் தொடர்ந்தது.

இது சுலோவின் காதிலும் விழுந்தது.

## 20

தெளிந்த குட்டையில்

கல்லெறிந்து கலைப்பதுபோல

தெளிந்த என் உள்ளத்தில்

சலனங்களை ஏற்படுத்துகிறாயே

இது காதலென்றால்.................

பிரகாஷ் சென்றதும் தன் உள்ளத்தின் சக்திகள் எல்லாம் வடிந்துவிட்டதைப் போல் தனது அறைக்குப் போய்

குமுறி அழுதாள் ஷிஜி. இவளது அழுகையை பொறுக்க முடியாமல் சுஷினுக்கு கால் செய்தார் சுலோ.

"சுஷின் பிரகாஷ்கிட்ட பக்குவமா பேசி விஷயத்தை முடிப்பன்னு பார்த்தா அவனை ஷிஜிகிட்ட பேச அனுப்பி வைத்தாய் சரி அவங்க பேசி ஒரு முடிவெடுப்பாங்கன்னு பார்த்தா, பிரகாஷ் ஷிஜிகிட்ட என்ன சொன்னான்னு தெரியலை இவ இங்க உலகத்துல இல்லாத கஷ்டம் எல்லாம் இவளுக்குத்தான் இருக்கின்ற மாதிரி அழுதே கரையிராடா".

"நான் போகலாம்னு பார்த்தா தன்னோட வருத்தத்தை மறைக்கத்தான் பார்ப்பாளே தவிர என்கிட்டே சொல்லமாட்டா. முதல்ல நீ வீட்டுக்கு கிளம்பிவா. அவளை வந்து சமாதானப் படுத்து மற்றதை பிறகு பார்க்கலாம் ".

"அவகிட்ட ரெண்டுபேரும் பேசி ஒரு முடிவுக்கு வரச் சொல்லிதானே போன் பண்ணினேன். அப்புறம் எதுக்கு அழறா, பிரகாஷ் முடியாதுன்னு சொல்லிட்டானா அவன் அப்படி சொல்ல வாய்ப்பே இல்லையே. இங்க அவளைப் பற்றி பேசும்போது அப்படி உருகுனான் , அங்க வந்து என்ன பண்ணிவச்சானோ. நான் உடனே வாரேன் நீங்க அவளுக்கு காபி குடுங்க".

"எனக்கு நல்ல வேலைடா, அண்ணனும் தங்கச்சிக்கும் லவ் பண்ண மட்டும் தைரியம் இருக்கு, அதை சொல்ல தைரியம் இல்லை. நீங்கெல்லாம் எதுக்குடா லவ் பண்ணுறீங்க" .

"இனிமேல் லவ் பண்ணும்போது சொல்லிட்டே பண்ணுறேம்மா , இப்போ முதல்ல அவளைப்போய் பாருங்க. நான் உடனே வாறேன்".

"ஒருலவ்வ காப்பாற்றவே உனக்கு என்னோட சப்போட் தேவைப்பட்டுது இதுல இன்னொரு லவ்வா , இரு மினிக்கு போன் போட்டு சொல்லுறேன்".

"அம்மா சும்மாவே அவ என்கிட்டே கோபமா இருக்கா, இதுல நீங்கவேற அவளை ஏத்தி விடுங்க. இப்போ நான்

கிளம்பிவரவா வேண்டாமா. பேசிட்டே இருந்தா எப்படி வாறதாம்".

"சரி சரி நான் எதுவுமே பேசலைப்பா , நீ உடனே வா".

"ஆண்டவா ஷிஜிக்கும் அவனுக்கும் பிரச்சனை வேண்டாம்னு ரெண்டுபேரும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வரட்டும்னு நாம நினைச்சா, இவன் அங்கபோய் என்ன சொல்லிவச்சான்னு தெரியலையே. கண்டிப்பா உனக்கு மாப்பிள்ளை பார்க்குறேன்னு சொல்லி இருக்க மாட்டான்.

அப்படி சொல்லி இருந்தான்னா ஷிஜி இப்படி அழுதுட்டு இருக்க மாட்டா, அவனைத்தான் அழ வச்சு இருப்பா. நமக்கு நேரமே சரி இல்லை போல. எடுக்குற எல்லா முயற்சியும் தோல்வியடையுதே சரி வீட்டுக்கு போய் அவளையே கேட்ப்போம்.

வீட்டில்...................

ஷிஜி கட்டிலில் குப்புற படுத்து அழுது கொண்டிருந்தாள். சுஷின் மெதுவாக வந்து அவளது தோளில் கை வைத்ததும் வேகமாக எழுந்து அமர்ந்தாள்.

"ஷிஜி எதுக்கு இப்போ அழுதுட்டு இருக்க. என்ன நடந்துது, பிரகாஷ் வந்து என்ன சொன்னான்".

"நான் அழலையே , கொஞ்சம் கால்வலி அதான்..........." .

"உனக்கு பொய் சொல்லவராது அதை ஏன் ட்ரை பண்ணிக்கிட்டு இருக்க, நீயே மறந்துட்ட கால்வலி இன்னைக்கு வரணும்னா ஏதாவது காரணம் இருக்குமே அப்போ அதைச் சொல்லு".

"அண்ணா அதெல்லாம் ஒண்ணும் இல்லை , நீயே எதுக்கு கற்பனை பண்ணிக்கிற.நீ இன்னைக்கு ஆபீஸ் ல இருந்து சீக்கிரம் வந்துட்டபோல. நான் உனக்கு லஞ்ச் எடுத்து வைக்கிறேன் நீவா".

"ஷிஜி நான் உன்கிட்ட டைரக்டா ஒரு விஷயம் கேட்கிறேன் நீ மறைக்காமல், பொய் சொல்லாமல் உண்மையை மட்டும் சொல்லுறியா ".

"நான் உன்கிட்ட என்னைக்கு பொய் சொல்லி இருக்கேன். நீ இப்படி சொல்லுறதுதான் கஷ்டமாஇருக்கு . நீ என்னன்னு சொல்லு".

"நீ பிரகாஷை லவ் பண்ணுறியா? என் கண்ணைப் பார்த்து சொல்லு , ஆமாவா இல்லையா. இன்னைக்கு அவனை இங்க அனுப்பினதுக்கு காரணமே நீங்க ரெண்டுபேரும் சேர்ந்து பேசி ஒரு முடிவுக்கு வரணும்னுதான். ஆனா அவன் என்ன சொன்னான்னு தெரியலை , நீ இப்படி அழுற அளவுக்குன்னா.........., உன்னை பிடிக்கலைன்னு சொல்லிட்டானா".

சுஷின் இப்படி கேட்பானென்று எதிர்பார்க்காத ஷிஜி தனது அதிர்ச்சியை மறைக்க தலையை கவிழ்த்துக்கொண்டாள் . அவன் மேலும் கேட்க கேட்க கண்ணீர் கட்டுக்கடங்காமல் கன்னத்தில் வழிந்தது.

"அவர் பிடிக்கலைன்னு சொல்லியிருந்தாகூட இவ்வளவு வருத்தப்பட்டிருக்க மாட்டேன். என்னைய அவருக்கு பிடிக்கலைன்னு மனசை தேத்திக்கலாம் , ஆனா அவருக்கு என்னை பிடிச்சுருக்கு. உங்ககிட்டே எல்லாம் எப்படி கேக்குறதுன்னு தயங்குறார். தயங்கினாலும் பரவாயில்லை , என்னை பொண்ணுகேட்க்க மாட்டேன்னு சொல்லிட்டாருண்ணா , என்னால அதைத் தான் தாங்கவே முடியலை".

அவள் பேசி முடித்ததும் சுஷின் சிரிக்கத் துவங்கினான். " ஏய் லூசு அவன் கேட்க்கலைனா என்ன நாங்க மாப்பிள்ளை கேட்டுட்டு போறோம் . அவனுக்கு உன்னை பிடிச்சுருக்குன்னு சொன்னானே அதே பெருசுடா. ஏன்னா அவனோட உணர்வுகளை மத்தவங்ககிட்ட அவன் வெளிப்படுத்தவே மாட்டான்.

நான் டைரக்ட்டா கேட்டா ரொம்ப சங்கடப் படுவான்னுதான் உன்கிட்ட பேசச் சொல்லி அனுப்பினேன். அதுல என்னோட கெஸ் தப்பவே இல்லை. எனக்கு எவ்வளவு சந்தோசமா இருக்கு தெரியுமா. இரு இப்போவே வீட்டில் பேசுறேன்".

அவன் போகப் போகையில் ஷிஜி சொன்னாள், "அவர் வேற விஷயங்களில் தயங்குறது பரவாயில்லை. ஆனா என்னை கல்யாணம் பண்ணிக்கோங்கன்னு நானே சொல்லுறது என்னோட பெண்மைக்கே அசிங்கமா நான் நினைக்கிறேன். அவரே தன்னோட விருப்பத்தை உன்கிட்ட சொல்லி என்னை கல்யாணம் செஞ்சுகிட்டாதான் எனக்கு கௌரவமா இருக்கும்.

அதை விட்டு வலியபோய் நானே என்னை குடுக்குறது............. முடியாதுண்ணா என்னால கற்பனை பண்ணிகூட பார்க்கமுடியலை. அதைவிட கல்யாணமே எனக்கு வேண்டாம் விட்டுடு".

"ஷிஜி அவனைப் பற்றி எல்லாம் தெரிஞ்ச நீயே இப்படி சொன்னா . சரி இதுக்கு என்னதான் முடிவு . அவனால வெளிப்படையா பேச முடியலைன்னு நினைக்கிறேன். உன்னைத்தவிர வேற பொண்ணை அவன் மனதால் கூட நினைக்க மாட்டான். நீயே இவ்வளவு பிடிவாதம் பிடிச்சா அவனை எப்படி சம்மதிக்க வைக்கிறது.

காதல்ல ஈகோ எல்லாம் வரக்கூடாதுடா. இது நான் சொல்லித்தான் உனக்கு தெரியணுமா. அவன்கிட்ட இன்னொருமுறை பேசிப் பாரு அவன் கண்டிப்பா சம்மதிப்பான்".

"என்னன்னு பேசச் சொல்லுற, என்னால் நீங்க இல்லாம வாழ முடியாது என்னை ஏத்துக்கோங்கன்னா. என்னால காதலையும் , பாசத்தையும் வேண்ணா வலியபோய் குடுக்க முடியும் , மறுபடியும் சொல்லுறேன் என்னையவே இல்லை.

ஒரு பொண்ணா இருந்தால்தான் உன்னால என்னோட உணர்வுகளை புரிஞ்சுக்க முடியும். நான்கு வருஷமா

ஒருவார்த்தை கூட பேசாமல் அவரையே மனசுல நினைச்சு வாழ்ந்துகிட்டு இருக்கேன். இது அவருக்குமே தெரியும் அப்படி இருந்தும் அவரால என்னை மறுக்கமுடியுதுன்னா............,

வேண்டாம் இதை இப்படியே விட்டுடலாம் அவருக்கா எப்போ நான் இல்லாம இருக்க முடியாதுன்னு தோணுதோ , எப்போ என்னை கேட்க தைரியம் வருதோ அப்போ மேல பேசிக்கலாம்".

"இதையே திரும்ப திரும்ப பேசுறியே இதுக்கு என்னதான் முடிவு. உறுதியா சொல்லுறேன் அவன் கண்டிப்பா என்கிட்டே இதைப் பற்றி பேசமாட்டான். நீயும் உன்பக்கம் மட்டுமே பேசிட்டு இருக்க. அவனைப் பற்றியும் யோசியேன் . உன்னோட சுயமரியாதையிலும், அவனோட மௌனத்திலும் கருகப் போறது உங்களோட காதல்தான் அதை ஏன் புரிஞ்சுக்க மறுக்குற நீ ".

"இப்போகூட ஆபீஸ்ல வச்சு என் பேரைசொல்லி கூப்பிட மாட்டன். இதுல மச்சான்னு சொல்லுவான்னு எதிர்பாக்குறது முடியாத காரியம். அவனை மாற்றவும் வழி தெரியலை, இப்போ உன்னோட பிடிவாதத்தை மாற்றவும் முடியலை. முடிவா ஒண்ணு சொல்லுறேன் உங்க கல்யாணமும், என் கல்யாணமும் ஒரே நாள் ஒரே மேடைலதான் நடக்கும்.

அது எத்தனை மாசம் ஆனாலும் சரி, எத்தனை வருஷம் ஆனாலும் சரி".

சுஷினின் இந்த முடிவைக் கேட்டதும் ஷிஜி அசந்துதான் போனாள். மினியுடன் நிச்சயம் முடிந்த நாளில் இருந்தே அவளை எப்பொழுது திருமணம் முடித்து வீட்டுக்கு கூட்டிவருவோம் என்று அவன் தவிப்பது அவளுக்கு நன்றாக தெரியும். இப்பொழுது தனக்காக அவனது திருமணத்தையே தள்ளி வைக்கநினைத்த அவனது பாசத்தை எண்ணி கண்கள் கலங்க அவனைப் பார்த்தாள்.

சுஷினுக்காகவாவது தனது பிடிவாதத்தை விட முடிவு செய்தாள். எனவே அவனிடம் கேட்டாள்.

"அண்ணா வேண்ணா ஒண்ணு செய்யலாம்.அவரை அவரோட கூட்டைவிட்டு வெளிய வர வைக்கணும். அதுக்கு நீ ஹெல்ப் பண்ணுறதா இருந்தா என்னோட முடிவை நான் மாத்திக்கிறேன். அதுக்காக அவர்கிட்ட பேசுவேன்னு கனவில்கூட நினைக்காதே. அவரையே உன்கிட்ட பேச வைக்கிறேன். உனக்கு இதுல சம்மதமா".

"அப்படி மட்டும் நீ செஞ்சுட்டா எனக்கு அதைவிட சந்தோஷம் வேற இல்லைடா. எனக்கு உன்னோட சுயமரியாதையும் முக்கியம், அதே மாதிரி அவனோட தயக்கமும் விலகனும் . அதை கொஞ்சம் சீக்கிரம் செய்யப் பாருடா. என்னால ரொம்பநாள் தாக்குபிடிக்க முடியும்னு தோணலை".

கடைசி வார்த்தையை சொல்லும்போதே மினியின் நினைவில் அவனது கண்களில் காதல் வழிந்தது. ஷிஜி அதைப் பார்த்துவிட்டு," இவ்வளவு ஆசையை மனசுல வச்சுகிட்டு என்னமோ எத்தனை வருஷமானாலும் பரவாயில்லை காத்திருக்கிறேன்னு டயலாக் எல்லாம் விட்ட. நீ நடந்துக்கிறதைப் பொறுத்து அது சீக்கிரமா முடியலாம் இல்லை வருஷமும் ஆகலாம்".

குறும்பாக சொல்லி அவனை கலங்கடித்தாள். அவளது முகத்தில் வழிந்த குறும்பில் அவனும் சேர்ந்து சிரித்தான்.

"சரி என்ன ஹெல்ப் ன்னு சொல்லவே இல்லையே".

"முதல்ல வயிற்றை கவனிப்போம், பாவம் அது எவ்வளவுநேரம்தான் பசியோட இருக்கும் வா". ஷிஜியின் பேச்சிலேயே பழைய ஷிஜி திரும்பி விட்டது அவனுக்கு புரிந்தது. சிரித்துக் கொண்டே சாப்பாட்டு அறையை நோக்கிச் சென்றனர்.

'பிரகாஷ் என்னவம்புபண்ணி உன்னை மாத்தப் போறாளோ, நானும் அதுக்கு ஹெல்ப் பண்ணப் போறேன். இனிமேல் உன்பாடு திண்டாட்டம்தான்'. சுஷின்

மனதுக்குள்ளேயே நண்பனுக்காக பரிதாபப் பட்டான். இதை வெளியில சொன்னா ஷிஜி விட்டுவிடுவாளா என்ன.

## 21

உன் விரல் பிடித்து நடக்க

உன் தோளில் சாய

உன் கையணைப்பில் துயில

உயிரினில் உறைய - முடிவாக

உன்னிலே கரைய விரும்பும் என் தவிப்பு

இது காதலென்றால்.............

மினிக்கு நடந்து முடிந்தவற்றை சிந்திக்கவே முடியவில்லை. அது கனவாக இருந்துவிடுமோ என்ற நினைவிலேயே மூடிய கண்களை திறக்கவும் அஞ்சியவளாய், அவ்வாறு கனவாக இருந்தால் அது அவ்வாறே தொடரட்டும் என்ற நினைவிலேயே கண்களை இன்னும் இறுக்க மூடிக் கொண்டாள்.

ஒரு நூறு முறையாவது மகளை சாப்பிட அழைத்தும் பதில் இல்லாமல் போக , வேகமாக அவளது அறைக்குச் சென்று பார்த்த மீனாட்சி , மினி தலகாணியை கட்டிப் பிடித்தவாறு இதழ்களில் புன்னகை மிளிர கண்களை இறுக்க மூடிக் கொண்டு கனவிலே மிதப்பவளைப் போல் படுத்திருந்த மகளைப் பார்க்க , மனதிற்கு நிறைவாக உணர்ந்தார்.

பத்து நாட்களுக்கு முன்னால் பெண்பார்க்கும் படலத்துக்கே ஒத்துக்கொள்ள மாட்டேன் என்று சொன்னதென்ன. சுஷினைப் பார்த்ததும் உலகத்தையே மறந்ததென்ன , அவர்கள் போனதுமுதல் ஏதோ மந்திரித்துவிட்ட கோழி மாதிரி அவள் இருப்பதை பார்த்துக் கொண்டுதானே இருக்கிறார் அவரும்.

அவளுக்கு இந்த திருமணம் பிடித்திருக்கிறது என்று நினைக்கும்போதே மீனாட்சிக்கு ஒரு பெரிய பாரம் விலகியதைப் போல் உணர்ந்தார்.

மகளின் கனவை கலைக்கவும் மனம் இல்லாமல், அவளுக்கு பசிக்குமே என்ற கவலையும் தோன்ற வேறு வழி இல்லாமல் போக அவளது கனவைக் கலைத்தார்.

"மினி சாப்பிட எவ்வளவு நேரமா கூப்பிட்டுகிட்டு இருக்கேன். இங்கே கனவு கண்டுகிட்டு இருக்க".

"அப்போ எல்லாமே கனவுதானாம்மா. எதுவுமே நிஜம் இல்லையா. தேவ் வரவே இல்லையா? நான் கனவுதான் கண்டுட்டு இருக்கேனா ஏதாவது சொல்லுங்கம்மா".

மகளது தவிப்பை புரியாமல் பார்த்தார் மீனாட்சி. அதுவும் தேவ் என்று மகள் யாரைச் சொல்லுகிறாள் என்பதே அவருக்கு புரியவில்லை.

நிச்சயம் முடித்து போன மறுநாள் ஷிஜி மினிக்கு போன் பண்ணி இருந்தாள் அவள்தான் சுஷினின் முழுப் பெயர் சுஷின்தேவ் என்றும் , மினியைப் பார்த்த அந்த நொடிமுதல் அவன் அவளை உருகி உருகி காதலிப்பதாகவும். எப்பொழுதும் அவளது நினைவிலே இருப்பதாகவும் சொல்லி இருந்தாள்.

அதுமட்டுமா மினியையும் எவ்வளவு முடியுமோ அவ்வளவு கிண்டல் செய்தாள். சுஷின் அவளை நிலா என்று சொல்லுவதை கூட , சுஷினுக்கு அவள் ஸ்பெஷல் என்பதை அவனது அழைப்பே நிரூபிப்பதாக கூறினாள்.

அப்போழுதுமுதல் சுஷின் மினிக்கு தேவ் ஆகிப் போனான். மனதுக்குள்ளேயே ஓராயிரம் முறை சொல்லிப் பார்த்துக் கொண்டாள். அவனை அவனது முகத்துக்கு நேராக தன்னால் தேவ் என்று கூப்பிட முடியுமா என கேள்வி எழுப்பிக் கொண்டாள்.

ஏனென்றால் அவளுக்குத்தான் அவனைப் பற்றி நினைத்தாலே , உச்சிமுதல் பாதம்வரை ஒரு சிலிர்ப்பும், இனிய அவஸ்த்தையும் படுவது ஏனென்று புரியாமலே இருந்தாள் .

"மினி நான் கேட்டுக்கொண்டே இருக்கிறேன் . நீ கண்ணை தொறந்துகிட்டே கனவில் மிதக்குற. நான் கேட்டதுக்கு பதில் சொல்லுடி".

மினி மலங்க மலங்க விழித்தாள், "என்னம்மா கேட்டிங்க, நான் ஏதோ யோசனையில் இருந்துட்டேன்".

"சரியா போச்சு போ , என்னமோ கனவுன்னு சொன்ன தேவ் வந்தது கனவான்னு கேட்டியே அது யாரு தேவ்?"

"சுஷினோட முழுப்பேர் சுஷின்தேவ் ம்மா, சுஷின் இங்க வரலையா, எனக்கும் அவருக்கும் நிச்சயம் ஆகலையா நான் கனவா கண்டுகிட்டு இருக்கேன்". மினியின் குரல் அழுகைக்குப் போய் இருந்தது. கண்களில் கண்ணீர் விழவா வேண்டாமா என குளம்கட்டி நின்றது.

"ஓஓ.......... " , மினியின் அருகில் அமர்ந்து கொண்டு அவளை மடியில் சாய்த்துக் கொண்டார்.

"மினி நீ கேட்பது உனக்கே அபத்தமா படல........... முன்னாடிதான் இப்படி இருந்த இப்பவும் அதேமாதிரி இருந்தா கஷ்டம்டா கொஞ்சமாவது புரிஞ்சு நடந்துக்கோ".

"என்னம்மா சொல்ல வாரிங்க கொஞ்சம் புரியிறமாதிரி சொல்லுங்களேன்".

மானசீகமாக தன் தலையிலேயே அடித்துக் கொண்டார். ஆனாலும் மினியின் வருத்தம் பொறுக்க முடியாமல்," மினி முதல்ல தேவ்-ங்குற பேர் உனக்கு எப்படி தெரிஞ்சுது, உனக்கு நிச்சயம் முடிஞ்சு பத்து நாள் ஆகுது இப்போவந்து கனவான்னு கேக்குறியே உன்னை என்ன செய்ய. இது எல்லாத்தையும் விட உன் விரல்ல இருக்கே இந்த மோதிரம் இதைப் பார்த்ததுக்கு அப்புறமாவது புரிய வேண்டாம்.

உன் அம்மா ரொம்ப பாவம்டா விட்டுடேன். நீ கல்யாணக் கனவு காணுறன்னு நான் நினைச்சா, நீ நிச்சயமே நடந்துதா இல்லையான்னு ஆராய்ச்சி பண்ணிட்டு இருந்தியா. இன்னொருமுறை இப்படி அபத்தமா கேட்ட என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது.

ஒழுங்கா எழுந்து சாப்பிட வா. பசியோட இருப்பதால்தான் இப்படி தோணுது வா வா".

மினியை அழைத்துக் கொண்டு சாப்பிடச் சென்றார் . அவர்கள் சாப்பிட்டு முடித்ததும்

என்னை தாலாட்ட வருவாளா,

நெஞ்சில் பூ மஞ்சம் தருவாளா ,

தங்கத் தேராட்டம் வருவாளா,

இல்லை ஏமாற்றம் தருவாளா,

என்ற இனிய பாடல் ஒலித்தது. இது எங்கிருந்து வருகிறது என மினி தாயைப் பார்க்க அவர் வேகமாகச் சென்று ஒரு செல்போனுடன் வந்தார்.

"மினி நேற்று உன்னோட வண்டியை கொண்டுவந்து விட்டவர் இந்த செல்போனை உன்கிட்ட தரச் சொன்னார் நான் மறந்துட்டேன். மாப்பிள்ளைதான் கொடுத்து அனுப்பி இருக்கார். உன்கூட பேசத்தான் போன் பண்ணுறார். நீ போய் பேசு", செல்போனை அவளது கையில் கொடுத்துவிட்டுச் சென்றார்.

போனை எடுக்கவா வேண்டாமா என்று அவள் யோசித்துக் கொண்டிருக்கும் போதே அழைப்பு நின்றது.

'பேச முன்னாடி என்ன அவசரம். அதுக்குள்ளே கட் பண்ணிட்டார். இப்போ நான் திரும்ப கூப்பிடணுமா வேண்டாமா. பேசணும்னா அவரே கூப்பிடட்டும்' என்று நினைத்துக் கொண்டு தனது அறையில் கட்டிலில் அந்த

போனை வைத்துக் கொண்டு இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அரைமணி நேரமாகியும் அழைப்பு வரவே இல்லை. இனிமேல் வராது என்று எண்ணிக் கொண்டு அதை பார்த்தவாறே உறங்கிப் போனாள். அவள் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும்போது பழக்கம் இல்லாத பாட்டுச் சத்தத்தில் விழிப்பு வந்தது.

திரையில் சுஷின் காலிங் என்று மின்னி மறைந்து கொண்டிருந்தது. நேரம் பன்னிரெண்டைக் கடந்திருந்தது. இப்பொழுதும் எடுக்கா விட்டால் அவன் திரும்பவும் பேச மாட்டானோ என்று தோன்ற பச்சை பட்டனை அழுத்தி காதில் வைத்தாள்.

மினிக்கு ஏற்கனவே முயன்று அவள் பேசாததிலும், திரும்ப அழைக்காததிலும் கோபமாக இருந்தான் சுஷின். அவள் அழைப்பை எடுத்த பின்பும் பேசாமல் இருந்ததில் இன்னும் அவனது கோபம் அதிகரித்தது.

"போன் பண்ணுனா எடுக்க மாட்ட , சரி எடுக்க முடியலன்னா திரும்பவாவது கூப்பிடணுமா வேண்டாமா . இப்போ கூட ஹல்லோன்னு சொன்னா குறஞ்சுடுவியா உனக்கு நான் தூங்காமல் போன் பண்ணுனேன் பாரு என்னைச் சொல்லணும். வேற ஒண்ணும் இல்லையே நான் வைக்கிறேன்".

மினிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவனே போன் பண்ணினான் , கோபமாக பேசினான், நான் சொல்லவந்ததையும் கேட்கவில்லை. அப்புறம் அவனே வச்சுட்டான் இதுக்கு எதுக்கு கால் பண்ணனும்.

பண்ணாமலே இருந்து இருக்கலாம். ஏற்க்கனவே இருந்த குழப்பமும் , இப்பொழுது அவனது பேச்சும் மினியை கலங்க வைத்தது. காதில் வைத்த போனை எடுக்கக் கூட தோன்றாமல் அப்படியே அமர்ந்து இருந்தாள்.

கண்களில் கண்ணீர் கட்டிக் கொண்டது. இதோ வழிந்துவிட்டேன் என்று இருந்த போது மினியின் போன் திரும்பவும் ஒலித்தது. எங்கே அவன் கட் பண்ணிவிடுவானோ என்ற பயம் தோன்ற வேகமாக அட்டென் செய்தாள்.

"ஹலோ............" , மினியின் குரல் அவளுக்கே கேட்க வில்லை ஆனால் அவளது குரலின் வித்தியாசம் உணர்ந்து தன்னையே கடிந்துகொண்டான் சுஷின்.

'இன்றைக்குதான் முதல் முறையா பேசுறோம் நமக்கே பதட்டமா இருக்கும் போது அவளுக்கு எவ்வளவு பதட்டமா இருக்கும் இதை புரிஞ்சுக்காமல் சம்மாளிப்போம்' , " நிலா தூங்கிட்டியா தூக்கத்துல எழுப்பிட்டனா குரலே ஒரு மாதிரி இருக்கு............ பேசு என்கிட்டே பேச என்ன தயக்கம்".

"தூங்கிட்டுதான் இருந்தேன் .............. ஆனா இப்போ தூங்கலை".

அவள் சொல்லுவதன் அர்த்தம் புரிந்தும் புரியாததுபோல் காட்டிக் கொண்டு, " நீயாவது இப்போதான் தூங்கலை, நான் தூங்கி பத்து நாள் ஆச்சு. சாப்பிட்டியா எனக்கு பசிக்கவே மாட்டேங்குது. உனக்கு அப்படி இருக்குதா".

அவனது குரலில் ஒலித்த தாபம் மினியை அசைத்துப் பார்த்தது. ஆனாலும் அவன் சொல்லுவதன் பொருள் அவளுக்கு முழுமையாக விளங்க வில்லை.

அவன் கேட்டதுக்கு என்ன பதில் சொல்லுவது என்று தெரியாமல்,"நான் தூங்கிட்டுதான் இருந்தேன், அதேமாதிரி சாப்பிட்டேனே அம்மா தோசை சுட்டு தந்தாங்க. நீங்க சாப்பிடலையா ஏன் உடம்பு சரி இல்லையா, அதனாலதான் சாப்பிட முடியலையா".

மினி வேண்டுமென்றே பேச்சை மாற்றுவதாக நினைத்தான் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டே,"உடம்பு சரியாதான் இருக்கு மனசுதான்..............".

"மனசுக்கு என்ன ஆச்சு இப்போ".

"மனசுக்குள்ள உக்காந்திருக்க பொண்ணு பக்கத்துல இருந்து பரிமாறினாதான் சாப்பாடு தொண்டையை விட்டு இறங்குவேன்னு சொல்லுது , அது மட்டுமா அவளே எனக்கு ஊட்டிவிடணும் ஒரே ப்ளேட்டுல ரெண்டுபேரும் சாப்பிடணும் இன்னும்..............." .

அவன் பேசப் பேச மினியால் பொறுத்துக் கொள்ளவே முடியவில்லை . அவனது குரலில் ஒலித்த நெகிழ்வு அவளை உருக்கியது. தாள முடியாமல் சொன்னால், "போதும்............ தேவ்........... இப்படி எல்லாம் சொல்லாதிங்க என்னால.............." , நாக்கை கடித்து கொண்டாள் மினி.

அவனிடம் என்னவென்று சொல்வது நீ பேசப் பேச எனக்கு என்னமோ பண்ணுகிறது என்றா, பிடிக்கவில்லை என்று பொய் சொல்லவா. உன்னிடம் பேசும்போது மட்டும் நான் நானாக இருப்பதில்லை என்றா.

அவளது தவிப்பை உணர்ந்தவனாக பேச்சை வளர்த்தான், "நான் பேசுவது உனக்கு பிடிக்கலையா நிலா......... , முதல்ல பேசவே இல்லை இப்போ பாதியிலேயே நிப்பாட்டுற , உனக்கு பிடிக்கலைன்னா நான் பேசலை போனை வைக்கிறேன் நீ தூங்கு".

எங்கே அவன் போனை வைத்துவிடுவானோ என்ற அவசரத்தில் சொன்னாள் , "தேவ்.......... அப்படில்லாம் ஒன்னும் இல்லை நீங்க பேசுறது எனக்கு ரொம்ப புடிச்சுருக்கு ஆனா திரும்ப என்ன சொல்லுறதுன்னுதான் தெரியலை".

"நீ இப்போ சொல்லலைன்ன பரவாயில்லை உன்னை எப்படி சொல்ல வைக்கிறதுன்னு எனக்குத் தெரியும். எனக்கே மறந்துட்ட என் பேரைச் சொல்லி கூப்பிடுற. இதுக்கே உன்னை என்னவெல்லாமோ செய்யத் தோணுது. இதுல சொல்ல முடியாத அளவுக்கு உனக்கு தோணுதா.

நல்ல வேளை நீ நேர்ல இல்லை இருந்து இருந்தா தெரிஞ்சுஇருக்கும்".

அவனிடம் இதற்குமேல் எதுவும் பேசமுடியாது என்று தோன்றிவிட" தேவ்.......... எனக்கு தூக்கம்............. நான் போனை............. இல்ல நீங்க போனை வை.........."

வார்த்தைகள் தந்தியடிக்க சொல்லவந்ததை சொல்ல இயலாமல் மௌனமானாள் மினி. அவளை இதற்கும் மேல் தவிக்கவிடவேண்டாம் என்ற முடிவுடன் ,"நாளைக்கு உனக்கு காலேஜ் ஓபன் ஆகுதுல்ல, நாளைக்கு சாயங்காலம் வெளியே போகலாமா".

இப்போதைக்கு தப்பித்தால் போதும் என்ற முடிவுடன் ,"ம்ம்ம்ம்.......... " என்று சொல்லி போனை வைத்தாள்.

அவனைப் பார்த்து விதி சிரித்ததோ............. மினியின் பார்வையில் தான் ஒரு காமுகனாகத் தெரிவோம் என்று அவனுக்கு தெரிந்திருந்தால் அவளை அழைத்திருக்க மாட்டானோ..................

## 22

உனக்காக காத்திருக்கும் எனக்கு

உன் நினைவுகளே துணையாகிப் போகும்

உன்னைச் சேரத் துடிக்கும் எனக்கு

உன் நிழல்கூட சொந்தமில்லை என்று

தெரிந்தும் தவிர்க்கயியலாமல்

துடிக்கும் என் நிலைமை

இது காதலென்றால்...............

ல்லூரிக்கு அவசரமாக கிளம்பிக் கொண்டிருந்தாள் ஷிஜி அவளைத்தேடி அவளது ரூமிர்க்கே வந்தான் சுஷின். "ஷிஜி

க உன்கிட்ட ஒரு ஹெல்ப் கேக்கத்தான் வந்தேன். அது என்னன்னா............". அவனது தயக்கம் புதிதாக இருந்தது ஷிஜிக்கு.

"அண்ணா என்ன இது எப்பவுமே சொல்லவந்ததை பட்டுன்னு தெளிவா சொல்லிடுவ , இப்போ கொஞ்ச நாளா ஏதோ தயக்கமாவே பேசுற, நல்லாவே இல்லண்ணா என்ன சொல்லணுமோ பளிச்சுன்னு சொல்லு, என் அண்ணனோட ஸ்பெசாலிட்டியே அதுதான். எங்க பளிச்சுன்னு சொல்லு பாப்போம்".

"உன்கிட்ட வந்து சொல்லவந்தேன் பாரு என்னை சொல்லணும். அது வேற ஒண்ணும் இல்லை இன்னைக்கு மினியை வெளிய கூட்டிட்டு போகலாம்னு நினைக்கிறேன்".

"ஒருநிமிஷம் இரு நினைக்கிறியா இல்ல பிளான் பண்ணிட்டியா அதை முதல்ல சொல்லு".

"அவசரக் குடுக்கை சொல்ல வந்ததை முழுசா சொல்ல விடுறியா. அவகிட்ட பேசி முடிவு பண்ணிட்டேன் ஆனா அவ இன்னைக்கு வருவான்னு தோணலை. அதனால நீ என்ன செய்வியோ எனக்கு தெரியாது சாயங்காலம் பீச் ரெஸ்டாரென்ட்க்கு அவளை கூட்டிட்டுவாற , எனக்கு அவளை பார்க்கணும்போல இருக்கு".

"ம்ம்ம்............ நீங்க ரெண்டுபேரும் சந்திக்கும்போது நான் எதுக்கு நடுவில . என்னைவச்சு காமெடி எதுவும் பண்ணலாம்னு ட்ரை பண்ணுறியா என்ன".

"சொன்ன புரிஞ்சுக்கோ ஷிஜி அவ கண்டிப்பா வர மாட்டா. நீயா தள்ளிகிட்டு வந்தாதான் உண்டு. நேத்து நான் கேட்டதுக்கு இப்போதைக்கு தப்பிச்சா போதுங்குற மாதிரி சரின்னு சொன்னா.அதனாலதான் சொல்லுறேன்".

"உனக்கு தூது நானா நான் என்ன அன்னப் பறவையா".

"இல்லை உன்னைப் போய் அப்படி சொல்லுவேனா. நீ சரியான கோட்டான். உன்கிட்ட போய் சொன்னேனே

சரிவிடு நானே பார்த்துக்கறேன்".

"ஹையோ அண்ணா அதுக்குள்ளே கோச்சுக்கிறியே இப்போ என்ன மினியை கூட்டிட்டு வரணும் அவ்வளவுதானே அதுக்கு நானாச்சு, ஆனா நீ எனக்கு ஒரு சின்ன ஹெல்ப் பண்ணனுமே".

"என்ன உனக்கு பதிலா நான் ரெகார்ட் நோட் எழுதணுமா".

"சே சே அந்த வேலை இப்போவே இல்லை அதுக்கு இன்னும் ஒரு மாசம் ஆகும் . இது வேற நீ ரெஸ்டாரென்ட் வரும்போது பிரகாஷையும் கூட்டிட்டு வரணும், அது மட்டும் இல்லை ஹேமாவோட அண்ணன் உன் கம்பெனில புதுசா ஜாயின்ட் பண்ணி இருக்கான்ல அவனையும் வரச் சொல்லு".

"ஷிஜி நான் என்ன திருவிழாவுக்கா போறேன் என் வுட்பீ கூட கொஞ்சநேரம் தனியா பேசலாம்னு போறேன் நீ என்னன்னா............".

"டேய் அண்ணா முதல்ல புலம்புறதை நிப்பாட்டு, 'எனக்கு இது' தேவைதான். சுஷின் மனதுக்குள்ளேயே நனைத்துக் கொண்டான். நீ வரும்போதே பிரகாஷை கூட்டிட்டு வா, வந்ததுக்கு அப்புறம் கொஞ்ச நேரம் கழிச்சு போன் பண்ணி ஹேமாவோட அண்ணன் பேர் என்ன...........ம்...... ஹேமந்த் அவனை வரச்சொல்லு மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன்".

"பிரகாஷ் கிட்ட பேச மாட்டேன்னு சொன்ன இப்போ அவனைபார்க்க வரப்போற அதுமட்டும் இல்லை அந்த ஹேமந்த் வேற , ஷிஜீஈஈஈஈஈஈஈஈ................. நீ இப்போ என் காதலுக்கு ஹெல்ப் பண்ண வாறியா இல்ல உன் லவ்வரை கிளப்பிவிட வாறியா எனக்கு தெரிஞ்சாகணும்".

சுஷின் குறும்பாக அவளைப் பார்த்து சிரித்தான். அவனது கேலி சிரிப்பில் ஷிஜிக்கு பொய் கோபம் வந்தது.

"போடா உனக்கு ஹெல்ப் பண்ண வந்தா நீ என்னையே ஆராய்ச்சி பண்ணு , இருந்தாலும் நீ சொல்லுறதும் சரிதான் நான் நினைச்சது மட்டும் நடந்துட்டா உன்கல்யாணம் சீக்கிரமே நடந்துடும் போ".

"என் கல்யாணம் மட்டும்தானா...........". சுஷின் இன்னும் அதிகமாக சிரித்தான்.

"சுஷி........... ", ஷிஜிக்கு கோபம் வந்துவிட்டதை அவளது அழைப்பே உறுதிபடுத்த விளையாட்டை விட்டுவிட்டு சீரியஸாக கேட்டான்.

"ஷிஜி நீ என்னமோ நினைக்கிற தெளிவா சொன்னாதானே எனக்கு புரியும்".

"முதல்ல நான் சொன்னதை செய் அப்புறம் அங்கேவைத்து பிரகாஷ் ஏதாவது உன்கிட்ட கேட்டா, என் தங்கச்சி ரொம்ம்ம்ம்ம்ம்ம்ம்ம்ம்ப நல்லவ அவ அப்படிஎல்லாம் கிடையாதுன்னு உண்மையை உளறாமல் , பிரகாஷோட மனசை புரிஞ்சு அவனை ஏத்தி விடுறமாதிரி பேசு அது போதும்".

சுஷினுக்கு இப்பொழுது நிஜமாகவே ஒன்றும் புரியவில்லை. தலையை சுற்றுவதுபோல் இருந்தது. அவளிடம் இன்னும் தெளிவு படுத்தவேண்டி வாயை திறந்தபோது, " அண்ணா இப்போ விளக்கம் ஒன்னும் கேட்க்காதே , மினியை நான் சாயங்காலம் நாலு மணிக்கு கூட்டிட்டு வாரேன் நீயும் நான் சொன்னமாதிரி செய் எல்லாம் நல்லபடியா நடக்கும்".

சுஷினும் கிளம்பினான் போகும்போதே மனதுக்குள்,'என் லவ்வரை பார்க்கப் போகும்போதுதானா எனக்கு இவ்வளவு சோதனையும் வரணும், ஷிஜி என்னென்னமோ சொல்லுறா பிரகாஷ் கிட்ட உளறாதங்குறா அப்படி என்ன கேட்ப்பான் அவன் . சரி சாயங்காலம் என் நிலாகிட்ட பேசுறதா இவங்க பஞ்சாயத்தைப் பார்க்குறதா' ம்ம்ம் ஒரு பெருமூச்சை விட்டுவிட்டு ஆபீஸ்-க்கு கிளம்பிச் சென்றான்.

கல்லூரிக்குச் சென்ற ஷிஜி மினியை தேடிச் சென்றாள். அவள் அவளது தோழிகள் ஹேமா, வினோ வின் கேலியில் சிக்கி சின்னாபின்னமாகிக் கொண்டிருந்தாள்.

அவர்களைப் பார்த்தவுடன் ,"ஹாய் குட் மார்னிங் , குட் மார்னிங் அண்ணி எப்படி இருக்கீங்க எல்லோரும்".

ஷிஜி அண்ணி என்று சொன்னதும் மினி அவளிடம்,"ஷிஜி என்னை எப்பவும்போல மினின்னே கூப்பிடேன். எதுக்கு இப்படி அண்ணின்னு கூப்பிட்டு என் மானத்தை வாங்குற, இவ்வளவுநேரம் இவளுங்க என்னை ஓட்டிட்டு இருந்தாங்க இதுல நீவேற அண்ணின்னு சொல்லுற என் கிளாஸ் மொத்தமும் என்னை ஒருவழி செஞ்சுடுவாங்க விட்டுடேன்".

"மினி எனக்குமட்டும் உன்னை அண்ணின்னு சொல்ல ஆசையா என்ன என் அம்மா மட்டும் உன்னை மினின்னு சொல்லுறதை கேட்டாங்க அவ்வளவுதான். எனக்கு காதுல ரத்தம் வர வச்சுடுவாங்க".

"அதுக்கும் உன்காதில் ரத்தம் வாரத்துக்கும் என்ன சம்பந்தம்".

"மினி உன்னைப் பத்தி தெரிஞ்சும் அப்படி சொன்னது என் தப்புதான் , உன்னை கட்டிக்கிட்டு என் அண்ணா என்னபண்ணப் போறானோ. எனக்கு சீக்கிரம் அத்தை ஆகணும்னு ஆசையா இருக்கு. நீ போற ஸ்பீடுக்கு அது அவ்வளவு சுலபம்னு தோணலை".

"ஷிஜி இப்போ நீ அத்தை ஆக நான் என்ன செய்யணும்னு கேட்டாலும் கேப்பா அவ. நான் சொல்லுறதை கேளு நீ இவளுக்கு புரிய வைக்கிறதைவிட இவளைப் பற்றி உன் அண்ணன்கிட்ட சொல்லிடு அவர் பார்த்துப்பார்", ஹேமா இவ்வாறு சொன்னதும் மினியைத்தவிர அனைவரும் கொல்லென்று சிரித்தனர்.

அதைப் பற்றி கேட்க நினைத்தமினி அவர்களின் சிரிப்பில் வாயை இறுக்க மூடிக் கொண்டாள். ஹேமாவே ஷிஜியிடம்

கேட்டாள் உன் அண்ணியைப் பார்க்கத்தான் இங்க வந்தியா இல்ல வேற ஏதாவது கேக்கணுமா".

"உங்களை பார்த்ததும் சொல்லவந்ததை மறந்துட்டேன். மினி இன்னைக்கு காலேஜ் முடிஞ்சதும் வீட்டுக்கு போய்டாதே நாம கொஞ்சம் வெளியில போகலாம். நைட் டின்னெர் சாப்பிட்டுட்டு வீட்டுக்கு போகலாம் உன் அம்மாகிட்ட நான் பேசிக்கிறேன் சரியா".

"டின்னர் வேண்டாம் ஷிஜி நாம வேண்ணா வெளிய போயிட்டு கொஞ்சநேரம் கழிச்சு வீட்டுக்கே போய்டலாம் வீட்டில் அம்மா தனியா சாப்பிட மாட்டங்க அதனால", அவள் சொன்னதைக் கேட்டு மனோவும், ஹேமாவும் தலையிலேயே அடித்துக் கொண்டனர்.

அவர்களுக்கு புரிந்தது அழைப்பது சுஷின்தான் என்பது. அவர்களை வேண்டாம் என்பதுபோல் தலையை ஆட்டி மறுத்துவிட்டு மினியிடம் ஒருநாள்தானே மினி நான் போன்பண்ணி இன்போர்ம் பண்ணிடுறேன் அவங்க சாப்பிட எப்படியும் நைட் எட்டு மணியாவது ஆகும் நாம அதுக்கு முன்னாடி போய்டலாம் சரியா, ஒரு வழியாக மினியை சம்மதிக்க வைத்தாள் ஷிஜி.

'அண்ணன் சொன்னது எவ்வளவு சரி இன்னைக்கு நாம கூட்டிட்டு போகலைனா மினி போயே இருக்கமாட்டா போல . மினியை அவளோட குரலை வச்சே சரியா எடை போட்டு வச்சுருக்கானே'. மனதிற்குள்ளேயே நினைத்துக் கொண்டாள்.

ஷிஜி அனைவரிடமும் விடைபெற்றுச் சென்றாள். அவள் சிறிது தூரம் சென்றதும் ஹேமா மூச்சுவாங்க அவளது முன்னாள் நின்றாள். அவள் ஓடி வந்திருப்பது அவளது மூச்சிரைப்பிலேயே தெரிந்தது. தண்ணீர் பாட்டிலை அவளிடம் குடுத்தாள் ஷிஜி. தண்ணீரை வேகமாக குடித்துவிட்டு நன்றி சொல்லி அவளிடம் கொடுத்தாள் ஹேமா.

"தண்ணி குடிக்கவா இவ்வளவு வேகமா வந்த ஹேமா புல் பாட்டிலும் காலி".

"ச்சு விளையாடதே ஷிஜி நான் எதுக்கு வந்தேன்னா உன் அண்ணாகிட்ட அன்னைக்கு என் அண்ணனுக்கு வேலைக்கு ஏதாவது ஹெல்ப் பண்ண முடியுமான்னு கேட்டேன். அவர் அவரோட கம்பெனிலையே மேனேஜர் போஸ்ட் போட்டு குடுத்துட்டார். இதுவரைக்கும் ஒரு சின்ன தாங்க்ஸ் கூட சொல்லலை".

"ஓஓஓ.......... அப்போ என் அண்ணன் கிட்ட நீ சின்ன தாங்க்ஸ் சொன்னதா சொல்லிடுறேன் போதுமா. நானே உன்கிட்ட உன் அண்ணா பத்தி கேக்கணும்னு நினைச்சேன் ஆனா எப்படி கேக்குறதுன்னு தயக்கத்துல விட்டுட்டேன்".

"ஷிஜி உனக்கு தயக்கமா நம்புறமாதிரி பேசேன்".

"இல்ல இப்போ உன் அண்ணா யாரையாவது லவ் பண்ணுறாரான்னு உன்கிட்ட கேட்டா நீ என்னைபத்தி என்ன நினைப்ப , அதான் ஒரே தயக்கம்".

அவளது பேச்சில் முதலில் திகைத்தாலும் பிறகு சிரித்தாள் ஹேமா. " ஷிஜி உன்னை தப்பா நினைக்கவே மாட்டேன். ஏன்னா அன்னைக்கு ஹோஸ்பிடலில் ஒருத்தரை எங்களுக்கு அறிமுகப் படுத்துனியே, உன்னை கூட்டிட்டு போக வந்தாரே அவரைத்தான் நீ விரும்புறன்னு எனக்கு கன்பாமா தெரியும் சோ............".

இப்பொழுது திகைப்பது ஷிஜியின் முறை ஆயிற்று. அவ்வளவு வெளிப்படையா தெரியிறமாதிரியா நாம நடந்துக்குறோம்.

அது எப்படி இவளுக்குத் தெரியும் என்பதுபோல் பார்க்க, அவளது சந்தேகம் புரிந்து ,"ஷிஜி அன்னைக்கு நீ அவரை பார்த்ததும் சரி, அவர் உன்னை பார்த்ததுலையும் சரி காதல் வழிஞ்சது. எனக்கும் மனோக்கும் அன்னைக்கே டவுட் வந்துச்சு. நாங்க என்ன மினியா எங்களை ஏமாத்த முடியாதுடா.

சரி இப்போ என் அண்ணனைப் பத்தி கேக்குறன்னா ஏதாவது காரணம் இருக்கும். நான் தெரிஞ்சுக்கலாம்னா சொல்லேன்".

"இப்போ அதைபத்தி எதுவுமே சொல்லமுடியாத நிலைமையில் நான் இருக்குறேன் ஹேமா, முடிஞ்சா நான் கேட்டதுக்கு ஆன்சர் பண்ணு".

"நீ சொல்ல மாட்ட , நான் நீ கேட்டதை சொல்லுறேன். என் அண்ணனுக்கு எங்க அப்பாவோட தங்கச்சி பொண்ணு ஹேமா மேல ஒரு கண்ணு. எனக்கு தெரிஞ்சு ஒரு பத்து வருஷமா ஜொள்ளு விடுறான். அவளும் அப்படித்தான் இவனுக்கு வேலை இல்லைன்னு கேட்க்க தாங்கிட்டு இருந்தாங்க என் வீட்டில். இப்போ அவனுக்கு நல்ல வேலை கைநிறைய சம்பளம் சோ.......... கூடிய சீக்கிரம் பேச்சு வார்த்தை தொடங்கலாம்".

மினி இடையில் ஏதோ கேட்க வரவும், "என்ன அவ பேரும் ஹேமா வான்னுதானே கேக்க வாற , அவ புல் நேம் ஹேமாவதி, என் புல் நேமே ஹேமா தான் என் அப்பாவோட பரம்பரையில் பிறக்கும் எல்லா பொண்ணுங்களுக்கும் ஹேமாங்குற பேர் பொது அதைப் பற்றி இப்போ பேசுனா கிளாஸ் க்கு டைம் ஆயிடும்.

அப்புறம் இன்னொரு உபயோகமான தகவல் அவனுக்கு ஹெமா வைப் பற்றி பேசணும்னா அலுக்கவே செய்யாது. அதுமட்டும் இல்லை வேற எந்த பொண்ணுங்க கிட்டயும் வழியவும் மாட்டான் கடலை போடவும் மாட்டான் போதுமா".

"நான் உன் அண்ணன் லவ் பண்ணுறானான்னுதானே கேட்டேன் அதுக்குள்ளே இவ்வளவு டீடைல்ஸ் நான் கேக்காமலே சொல்லிட்ட".

"நீ என் அண்ணனைவைத்து ஏதோ ப்ளே பண்ணப் போற சோ அவனை பற்றி கேக்குறன்னு நினைக்கிறேன். கவலையே படாதே நானே என் அண்ணனுக்கு போன்

செய்து உனக்கு ஹெல்ப் பண்ண சொல்லுறேன். அதுவும் உனக்குன்னு சொன்னா தலையவே தருவான்".

"ஹேமா நிப்பாட்டு உன் அண்ணனோட தலையை வாங்கி நான் என்ன செய்யப் போறேன். அது அந்த ஹேமாவுக்கு வேண்டி அங்கேயே இருக்கட்டும் உன்னோட ஹெல்ப்-க்கு நன்றிடா".

"ஷிஜி நீங்க உன் அண்ணன் செஞ்சதை விட இதுஒண்ணும் பெரிய ஹெல்ப் இல்லை. சரி கிளாஸ் தொடங்க பெல் அடிச்சுட்டாங்க நான் கிளம்புறேன். அண்ணனுக்கு மறக்காம போன் பண்ணிடுறேன் சரியா பாய்".

இருவரும் அவர்களது கிளாஸை நோக்கிச் சென்றனர்.

மாலையில்..................

## 23

உன்தேவைகள் என்னவென்று

பட்டியலிடும் எனக்கு

உன் தேவைகளை நிறைவேற்றும்

வேட்கை எழுகிறதே

இது காதலென்றால்...............

சுஷின் ஆபீசில் அவனது வேலையில் மூழ்கி இருக்கும்போது..............

சுபாவின் அலைபேசி அதன் வேலையை சரியாக செய்தது. அழைத்தது யாரென்று பார்த்தாள் . புது நம்பரில் இருந்து அழைப்பு வந்தது. பச்சை பட்டனை அழுத்தி காதில் வைத்தாள்.

அதில் பேசிய சுஷினின் குரலில் ஏகப்பட்ட பதட்டம். அவளை உடனே ஹோட்டல் ரூபாவில் ரூம் நம்பர்- 307க்கு வருமாறு அழைத்து விட்டு அவளது பதிலையும் எதிர் பார்க்காமல் அழைப்பு துண்டிக்கப் பட்டது.

அவனது குரலில் இருந்த பதட்டம் அவளையும் தொற்றிக் கொண்டது. அண்ணன் ஏன் இவ்வளவு பதட்டமாக பேசினான் அவனுக்கு ஏதோ ஆபத்து அதனால்தான் என்னவென்று சொல்ல முடியாமல் உடனே அழைப்பை துண்டித்து விட்டான்போல, இப்போ எப்படி அங்கே போவது அம்மாவிடம் என்ன காரணம் சொல்லுவது.

அவளது மனம் இவ்வாறே சிந்தித்துக் கொண்டிருந்தது. அவள் பதட்டப் படாமல் யோசித்து இருந்தால் புரிந்திருக்கும், சுஷினுக்கு எந்த ஆபத்தாக இருந்தாலும் அவளை அழைத்திருக்க மாட்டான் என்பதும், அதுவும் அவளை பதட்டப் படுத்தும் எந்த விஷயத்தையும் அவளிடம் சொல்லவே மாட்டான் என்பதும், என்ன விஷயமாக இருந்தாலும் அவளை வீட்டில் இருக்கும்போது தொந்தரவு செய்ய மாட்டான் என்பதும் , அதைவிட அவளை ஹோட்டலுக்கு வரவே சொல்லமாட்டான் என்பதும்.

இங்கேதான் விதி இவளது வாழ்வில் விளையாடியதோ. இல்லை இல்லை சுஷினின் வாழ்க்கையை புரட்டிப் போடவே அவளுக்கு இந்த அழைப்பு வந்ததோ யாருக்குத் தெரியும்.

சுபா எதைப் பற்றியும் யோசிக்காமல் உடனே செல்லவேண்டும் என்பது மட்டுமே நினைவில் ஓட , அவளது தோழிக்கு போன் செய்து தனது தாய்க்கு அவள் மூலம் போன் செய்து சுபாவை ஷாப்பின் அனுப்பி வைக்குமாறு சொன்னாள்.

அவளது தோழியும் அவ்வாறே செய்ய சுபாவின் தாய் அவளை தேடி வந்தார். இவை நடந்துமுடிய பத்து நிமிடங்களே ஆகி இருக்கும். ஆனால் சுபாவிற்கு பத்து மணிநேரம் ஆனதுபோல் இருந்தது.

அவளது தாய் வரும்போது தனது பதட்டத்தை மறைத்து இயல்பாக காட்டிக்கொள்ள மிகுந்த சிரமமே பட்டாள்.

"சுபா உன்னோட பிரண்ட் தீபா போன் பண்ணுனா அவளுக்கு ஷாப்பிங் போகணுமாம் உன்னையும் வரச் சொன்னா. நானும் சரின்னு சொல்லிட்டேன் ஆனா உன்னோட அப்பாக்கு தெரிஞ்சா என்ன சொல்லுவாரோ".

"அம்மா நான் அப்பா வரமுன்னாடி வந்துடுவேன்ம்மா. அவகிட்ட சரின்னு சொல்லிட்டு இப்போ நான் போகலன்னா ரொம்ப பீல் பண்ணுவா. இந்த பத்து நாளா வீட்டுக்குள்ளேயே இருந்து ரொம்ப போர் அடிக்கிதும்மா. போயிட்டு சீக்கிரம் வந்துடுறேன்".

அவள் பத்து நாட்களாக வெளியே போகாமல் இருந்ததுதான் இந்த சிக்கல்களுக்கு எல்லாம் காரணம் என்பது பாவம் அவளுக்கே தெரியாதே. அது மட்டுமல்ல தனது வாழ்க்கையையே அழிக்கப் போகும் சம்பவம் அங்கே நடக்கப் போவது தெரிந்திருந்தால் அவள் போயிருக்க மாட்டாளோ.

ஹோட்டல் ரூபா பார்க்கவே மிக பிரம்மாண்டமாக இருந்தது. வெளிநாட்டவர் மிகவும் விரும்பி தங்கும் இடம் அது. பார் வசதி டிஸ்கோ நிகழ்ச்சி என்று எப்பொழுதும் பரபரப்பாகவே இருக்கும்.

அன்று ஏதோ விஐபியின் பிறந்தநாள் நிகழ்ச்சி அங்கே நடப்பதாக ஏற்பாடாகி இருந்தது. அலங்காரங்கள் எல்லாம் வேகமாக நடந்து கொண்டிருந்தன. அந்த பானர்களையாவது அவள் பார்த்திருந்தால் உள்ளே போயிருக்க மாட்டாளோ. விதி வலியது............

சுற்றுப் புறத்தை பார்க்கும் நிலையில் அவள் இல்லை. அவளது கவனம் எல்லாம் ரூம் நம்பர் 307-க்கு செல்லவேண்டும் என்பதே. மின்தூக்கியில் சென்று மூன்றாவது மாடியில் வெளியே வந்தாள்.

கண்கள் அறைஎண் 307ஐ கண்டுகொண்டது மூச்சுவாங்க அதன்முன் நின்றாள் அழைப்புமணியை அழுத்தினாள். உள்ளே செல்ல அனுமதி கிடைத்ததும் உள்ளே சென்று பார்த்தவளின் கண்கள் தெறித்து வெளியே விழுந்துவிடுமோ என்னும் அளவு விரிந்தது.

மூச்சு விடவே மறந்தவள் போல் சிலையென நின்று விட்டாள்.

அவளது கால்கள் தனது பலத்தைஎல்லாம் இளந்ததுபோல் தள்ளாடின. உதடு துடிக்க இதயம் துடித்த வேகத்தில் எங்கே வாய் வழியாக வந்து வெளியே விழுந்துவிடுமோ என்று பயந்து இதழ்களை இறுக்க மூடிக் கொண்டாள்.

ஆனாலும் மனம் அவனதுபெயரை உச்சரித்தது 'ப்ரவீன்........ ப்ரவீன் 'இவன் எங்கே இங்கே,இவ்வளவு நேரம் மரத்துப் போன மூளை இப்பொழுது தன் வேலையை செய்தது.

'இவன் இங்கே இருக்கான்னா , அப்போ எனக்குவந்த போன்........... இவன்தான் பண்ணி இருக்கணும் இந்த இடத்தில் இன்னும் ஒரு நிமிடம்கூட இருக்கக் கூடாது. இங்கேயே இருந்தா என்னோட பெண்மைக்கு எந்த பாதுகாப்பும் கிடையாது.

என்னை அடையணும்னா இவன் என்ன வேணும்னாலும் செய்வான். ஓடு ஓடு சுபா............' அவளது மனம் கட்டளையிட வேகமாக திரும்பி கதவை திறந்தாள். ஆனால் அந்த கதவு ஆட்டோ மேடிக் கதவு அவள் உள்ளே வந்ததும் தானாகவே அடைத்துக் கொண்டது எனவே அவளால் திறக்க இயலவில்லை.

ஆனாலும் விடாமல் முயற்சி செய்து கொண்டிருந்தாள். அவளது கரத்தை ஒரு வலிய கரம் பற்றும்வரை அவளது முயற்சி தொடர்ந்தது. அவளது கரத்தை வலுக்கட்டாயமாக பிடித்து இழுத்துக் கொண்டு கட்டிலில் தள்ளியது.

தனது பெண்மையை காக்கும் பொருட்டு அவனை தனது வலுவனைத்தும் திரட்டி அடித்தாள் சுபா. ஆனால் அந்த

தேக்குமர உடம்பில் அவளது அடிகள் பயனற்றுதான் போயின.

அவளது அடிகளை பெற்றுக் கொண்டே சொன்னான் இன்னைக்கு சாயங்காலம்வரை இந்த ரூமைவிட்டு நீயோ நானோ வெளியே போக முடியாது. உனக்கு விருப்பம் இருந்தாலும் , இல்லையென்றாலும் என்கூடதான் இருந்தாகணும். இரும்புக் குரலில் கர்ஜித்துவிட்டு அங்கிருந்த ஸோபாவில் சென்று அமர்ந்து கொண்டான்.

பார்வையை அவளை விட்டு விலக்கவில்லை. சுபா கால்களை கட்டிக் கொண்டு முகத்தை கால்களுக்கிடையில் புதைத்துக் கொண்டாள். அவளது முதுகு குலுங்கிக் கொண்டிருந்தது. அதிலிருந்து அவள் அழுவதை புரிந்துகொண்டான் ப்ரவீன்.

அவளது அழுகையை நிறுத்தும் வழி தெரியாமல் முகமும் கைகளும் இறுக , சுபா இப்போ நீ அழுகையை நிறுத்தலை என்னோட இருக்கை இந்த ஸோபாவா இருக்காது அங்க உன் பெட்டுலையா இருக்கும்.

உனக்கு அதுதான் இஸ்டம்னா எனக்கு ரொம்ப சந்தோஷம். எப்படி வசதி . அவனது குரலே அவன் சொன்னதை செய்வான் என்பதை சொல்ல அழுகையை தொண்டைக் குழியிலேயே விழுங்கினாள்.

இதயம் முழுவதும் கசந்து வழிந்தது. தனது தலைவிதியை நொந்துகொண்டு, அப்பா இன்னும் கொஞ்ச நேரத்தில் வீட்டுக்கு போய் விடுவார். என்னை காணவில்லை என்றால் என்ன செய்வாரோ. அம்மாவை எப்படியெல்லாம் வதைப்பாரோ.

இவன் என்னை என்ன செய்வானோ. என் வாழ்க்கை இத்தோடு முடிந்தது என்று தன்னிரக்கத்திலேயே மூழ்கினாள்.

மத்தியானம் நெருங்கியதும் சாப்பாடு ஆர்டர் செய்து அறைக்கே வரவழைத்து சுபாவை மிரட்டி சாப்பிட

வைத்தான். நேரம் யாருக்கும் காத்திருக்காமல் விரைந்தது.

சாயங்காலம் பெல் அடித்ததும் ஷிஜி மினியை அழைத்துக் கொண்டு பீச் ரெச்டௌரண்ட் நோக்கிச் சென்றாள். அங்கே அவர்களுக்கு முன்னர் சுஷினும் பிரகாஷும் வந்திருந்தனர்.

ஷிஜி அலைபேசியை எடுத்து சுஷினுக்கு கால் செய்தாள். "நாங்க வந்துட்டோம் நீ எங்க இருக்குற. ஓ........ சரி நாங்க வாரோம்", அலைபேசியை முடக்கிவிட்டு மினியையும் இழுத்துக் கொண்டு உள்ளே சென்றாள்.

உள்ளே செல்லச் செல்ல மினியின் புலம்பலும் அதிகரித்தது. அவளது பேச்சுக்களுக்கு செவி கொடுக்காமல் அவளை இழுத்து சுஷினுக்கு முன்னாள் நிறுத்தினாள்.

"அம்மா தாயே உன்னோட கேள்விக்கெல்லாம் பதில் இதோ இருக்கு நேர்லயே கேட்டுக்கோ . கிளம்புனதுல இருந்து எங்கேபோறோம் எதுக்கு இவ்வளவுதூரம் போறோம். இது என்ன இடம், இங்க யார் இருக்கா?????????? ஹப்பா கேள்விகேட்டே குடைஞ்சுட்டா.

உனக்கு என்ன கேக்கணுமோ இவன்கிட்டே கேளு. சரியான கேள்விக்கு பொறந்தவளா இருக்கா, என் அம்மாகூட இவ்வளவு கேள்வி கேக்க மாட்டாங்க. அண்ணா உடனே எனக்கு ஒரு ப்ரெஷ் ஜூஸ் சொல்லு . இவளை கூட்டிட்டு வரமுன்னாடி என்னோட எனர்ஜி எல்லாம் வடிஞ்சுடுச்சு".

ஒரே மூச்சில் பேசிவிட்டு 4 பேர் அமரும் அந்த மேஜையில் சுஷினுக்கு முன்னாள் மினியை அமரவைத்து, பிரகாஷின் இருக்கைக்கு முன்னாள் இருந்த இருக்கையில் அவளும் அமர்ந்து கொண்டாள்.

பிரகாஷ் அவளை ஆவலுடன் பார்க்க , இவன் யாரோ என்பதுபோல் ஒரு பார்வையை வீசிவிட்டு சுஷின் ஆர்டர் செய்த ஜூஸை ஒரே மூச்சில் குடித்தாள். பிரகாஷிற்கு

ஏமாற்றமாக இருந்தது. அவளது காதல் பார்வைக்காக ஏங்கிக் கொண்டிருந்தான்.

ஷிஜி மனதுக்குள்ளே,'மவனே அண்ணன் கிட்ட இருக்கான்னு ஒரு கவனம் இல்லை பார்க்குறதைப் பாரு பார்வையாலேயே என்னை கபளீகரம் பண்ணிடுவான் போல, இவன் என்னை கேக்கமட்டானாமா, என்னோட பார்வைக்கு வேண்டித்தானே ஏங்குற முடியாது பாக்கவே முடியாது என்ன செய்வன்னு பார்க்குறேன் , இன்னைக்கு உன்னை சுத்த விடல நான் ஷிஜி இல்ல'.

## 24

மினியோ அவஸ்த்தையாக உணர்ந்தாள், ஷிஜி தன்னை சுஷினை பார்க்கத்தான் அழைத்து வருகிறாள் என்பதை அவள் உணரவே இல்லை. எதிர் பார்க்காமல் அவனை பார்த்ததும் என்ன பேசுவது என்று தெரியாமல் ஜூஸை வாயில் வைத்தும் குடிக்க முடியாமல் கீழே குனிந்து கொண்டிருந்தாள்.

சுஷின் அவளை அங்குலம் அங்குலமாக அளவெடுத்துக் கொண்டிருந்தான். பிறை நெற்றி அதில் சின்னதாக ஒரு ஸ்டிக்கர் போட்டு , சின்ன நாசி அதற்க்கு கீழே அளவெடுத்து வைத்ததுபோல் சிவந்த உதடு, அவள் அவன் பார்க்கும்போது தனது நாவை எடுத்து உதட்டை ஈரம் செய்தாள்.

கிறங்கித்தான் போனான் சுஷின். அவளது உதட்டை தான் ஈரம் செய்யவேண்டும்போல் எழுந்த ஆவலை சிரமப்பட்டு அடக்கினான். பார்வையை விலக்கி அவளது கழுத்தில் பதித்தான் சங்குக் கழுத்து அதில் கிடந்த ஒற்றை சங்கிலி, கழுத்துக்கு கீழே............ தலையை வேகமாக உதறிக் கொண்டான்.

மினிக்கு அவனது துளைக்கும் பார்வையை பார்க்காமலேயே உணர முடிந்தது. கைகள் சில்லிட்டன, காதுமடல் சூடானதுபோல் உணர்ந்தாள். முகம் முழுக்க

ரத்தம் பாய்ந்து நிறைத்தது. இருக்கையில் அமரவும் முடியாமல் எழுந்து செல்லவும் முடியாமல் அடிவயிற்றை பிசைவதுபோன்ற உணர்வு ஏற்பட்டது.

பக்கத்தில் இருந்த ஷிஜியின் கையை ஆதரவுக்காக பற்றிக் கொண்டாள்.

"மினி இது என்னோட கை அண்ணன் எதிரில் இருக்கிறான், உன்னோட இந்த பிடியை என்னால தாங்க முடியாதும்மா கை வலிக்குது", மினியின் காதில் மெதுவாக முணுமுணுத்தாள்.

அவளது பேச்சை கேட்டதும் தான் இப்படி செய்துவிட்டோமே என்று தன்னையே நொந்து கொண்டாள்.'இவன் பக்கத்தில் மட்டுமே தான் இவ்வாறெல்லாம் உணர்கிறோம் என்பதை முதன்முதலாக உணர்ந்தாள்.

இப்படியே இருந்தால் மினி எழுந்து ஓடி விடுவாள் என்பதை உணர்ந்த சுஷின் பேச்சை வேறு திசைக்கு மாற்றினான்.

"இன்னைக்கு பஸ்ட் டே காலேஜ் எப்படி போச்சு".

"அண்ணா நாங்க மூன்றாவது வருடம் வந்தாச்சு, என்னமோ +2 முடிச்சு முதல் முதலா காலேஜ் போறமாதிரி விசாரிக்கிற. வேற ஏதாவது கேளுண்ணா ".

இவவேற நேரம் காலம் தெரியாம மாட்டி விடுவா அவன் முறைத்துப் பார்க்க அவனது நிலையை எண்ணி சிரித்தாள் ஷிஜி. ஷிஜியின் பதிலில் மினியும் சிரித்தாள். பிரகாஷ் இவளுக்கு என்ன ஆச்சு என்னை அதுக்குள்ளே மறந்துட்டாளா, என்னமோ சகஜமா இருக்கா, மனதுக்குள்ளேயே குமுறிக் கொண்டிருந்தான்.

ஷிஜி சுஷினிடம் பேசிக் கொண்டிருந்தாலும் பிரகாஷின் முகபாவங்களை கவனித்துக் கொண்டிருந்தாள். மனதுக்குள்ளேயே பிரகாஷின் மேல் பரிதாபம் எழுந்தாலும், இப்பொழுது அவனை பார்த்தால் அவனை

வழிக்கு கொண்டுவர முடியாது என எண்ணிக் கொண்டு சுஷினிடம் வம்பு வளர்த்துக் கொண்டிருந்தாள்.

திடீரென "அண்ணா அது ஹேமந்த் நான் தான் வரச் சொன்னேன் இரு நான் அவன்கூட பேசிட்டு வந்துடுறேன். நீங்க சாப்பிடுங்க என்னோட சாப்பாடை அங்கே அனுப்பிடு சரியா", அவர்களது பதிலை எதிர்பார்க்காமல் எழுந்து சென்றுவிட்டாள்.

சுஷினும், பிரகாஷும் ஒரேநேரத்தில் அதிர்ந்தனர், 'இவ என்ன சொல்லுறா நான்தானே வரச் சொன்னேன் இப்போ கதையவே மாத்திட்டு போறா', திரும்பி பிரகாஷைப் பார்த்தான் அவனது முகம் பேய் அறைந்ததுபோல் இருந்தது.

'ஓ.......... அம்மணி இதுக்குதான் இந்த பிட்டை போட்டுட்டு போறாளா, இன்னும் என்னவெல்லாம் செய்ய காத்திருக்காளோ', சாப்பாடு வரவும் அவள் சொன்னதுபோல் செய்துவிட்டு மினியிடம் பேசிக் கொண்டே சாப்பிட்டான். இப்பொழுது அவளும் கொஞ்சம் இயல்பாகி இருந்தாள்.

பிரகாஷின் நிலைதான் பரிதாபமாக இருந்தது. ஷிஜி சொல்லிவிட்டு போனது அவனது மனதில் புயலை கிளப்பியது.'இவதான் வரச் சொன்னாளா, இவன் ஆபீஸ் வந்தே முழுசா ஒருவாரம் ஆகலை அதுக்குள்ளே இவனை எப்படித் தெரியும். அப்போ இவளுக்கு அவனை முன்னாடியே தெரியுமா. இப்படி சிரிச்சு சிரிச்சு பேசுற அளவுக்கு............', பொறாமையில் வயிறு எரிந்தது அவனுக்கு.

நிஜம்மாவே அப்பொழுது ஷிஜியும் ஹெமந்திடம் சிரித்து பேசிக் கொண்டிருந்தாள். அவனது கையில் செல்லமாக அடிக்கவேறு செய்தாள், பிரகாஷின் பொறுமை பறந்தது.

"டேய் சுஷின் அங்க பாருடா ஷிஜி என்ன செய்யிறான்னு..........".

சுஷின் நிமிர்ந்து ஷிஜியை பார்த்தான் பார்த்துவிட்டு பிரகாஷிடம் சொன்னான் "ஹேமந்த் கிட்ட பேசிகிட்டு இருக்காடா", சொல்லிவிட்டு மினியிடம் பேசிக் கொண்டே சாப்பாட்டை தொடர்ந்தான்.

"அது இல்லடா அவ அவன் கிட்ட சிரிச்சு பேசுறாடா".

"அவன் ஏதாவது ஜோக் சொல்லி இருப்பான்டா அதுக்கு சிரிச்சு இருப்பா", இதெல்லாம் ஒரு விஷயமா என்பதுபோல் சாப்பாட்டை தொடர்ந்தான்.

அடேய் கடன்காரா உன்னை கொல்லாமல் விட்டேனா பார் என்ற கொலைவெறி இப்பொழுது பிரகாஷின் பார்வையில் தெரிந்தது.இதையெல்லாம் கவனிக்கும் நிலையில் சுஷின் இல்லை அவனது கவனம் முழுவதும் மினியின் மீதே இருந்தது.

"சுஷின்..........."ஏறக்குறைய அடிக்குரலில் உறுமினான் பிரகாஷ் , சுஷினோ அதைவிட எரிச்சலில் இருந்தான். பிரகஷிற்கோ மினி, சுஷினுக்கு இடைஞ்சலாக இருக்கிறோம் என்ற உணர்வே இல்லாமல் ஷிஜியின்மீதிருந்து பார்வையை அகற்றாமலே இவனை தொல்லை செய்துகொண்டிருந்தான்.

"சுஷின் அவங்க சும்மா பேசுறமாதிரி இல்லைடா வேற என்னமோ..........".

"அவங்க சும்மா பேசலடா சாப்டுட்டேதான் பேசுறாங்க , இப்போ என்னங்குற".

"ஒரு அண்ணனை மாதிரி பேசுடா என்னமோ அடுத்த வீட்டுக்காரன் மாதிரி கண்டுக்காம இருக்க. அடுத்தவீட்டுக் காரன்கூட இந்தமாதிரி விஷயம்னா உடனே கண்ணு காதை எல்லாம் தொறந்து வச்சுகிட்டு கவனிப்பான். நீ என்னன்னா............".

இவர்கள் அடிக் குரலில் வழக்கடித்துக் கொண்டிருக்க மினி எழுந்து கை கழுவ போனாள். அவள் எழுந்து சென்ற

பின்புதான் பிரகாஷ் சொல்லவருவதே புரிந்தது அவனுக்கு.

இங்கே இவர்கள் சண்டை போட்டுக் கொண்டிருக்க இதற்க்கு காரணமானவளோ அதாங்க ஷிஜி அங்கே என்ன செய்யிறான்னு பார்ப்போமா.

ஷிஜி ஹேமந்தை பார்த்ததும் அங்கிருந்து எழுந்துவந்து அவனிடம்,"ஹலோ அண்ணா நான் ஹேமாவோட பிரன்ட் எனக்காகத்தான் அண்ணனும், ஹேமாவும் உங்களை இங்க வரச் சொல்லி இருக்காங்க.

நீங்க ஹேமாவோட ஜாடையிலேயே இருக்குறனாலத்தான் உங்களை சுலபமா கண்டு புடிச்சுட்டேன். வாங்க உக்காந்துட்டே பேசலாம்".

ஒரு டேபிளில் எதிர் எதிராக அமர்ந்தனர். ஷிஜியின் வலதுபுறம் இரண்டு டேபிள் தள்ளி மற்றவர்கள் அமர்ந்து இருந்தனர். ஆனால் ஒருவர் மற்றவரை அவர்களின் இடத்தில் இருந்தே பார்த்துக்கொள்ள முடிந்தது.

"என்னம்மா ஏதோ ஹெல்ப்ன்னு சொன்னா ஹேமா, சார் என்கிட்டே நீங்க வந்துட்டு போங்கன்னு சொன்னார். இப்போ நான் போய் அவரை பாக்கவா வேண்டாமா. பக்கத்துலவேற GM (பிரகாஷ்) இருக்கார். ஒரு விஷ் பண்ணிட்டு வந்துடவா".

"இப்போ நீங்க அங்கே போனா அடிவிழும் பரவாயில்லையா, நான் சொல்லுறேன் அவங்களை சைடா பாருங்க உங்க GM முகத்துல கொலைவெறி தாண்டவமாடுமே இப்போ".

"ஹையோ மேம்........ கண்ணாலையே என்னை பொசுக்கிடுவார் போல, என்னை சிக்கல்ல மாட்டி விடாதிங்க இங்கவச்சு உங்க காலில் கூட விழ முடியாது. உங்க கையை வேண்ணா காலா நினைச்சு புடிச்சு கேட்டுக்குறேன். இல்லை இல்லை இப்போ உங்க கையை புடிச்சா அது அதைவிட பெரிய தப்பா போய்டும். நான் என்னதான் செய்யட்டும்".

அவனது இந்த பேச்சைக் கேட்டுதான் அவள் கலகலவென்று சிரித்து அவனது கையில் செல்லமாக அடித்தாள். பிரகாஷிற்கு ஆடியோ இல்லாமல் வீடியோ மட்டும் பார்த்ததால்தான் காதில் புகைவந்துகொண்டிருந்தது.

"அண்ணா என்னை எதுக்கு இப்போ மேம் ன்னு சொல்லி வாங்க போங்கன்னு சொல்லிட்டு இருக்கீங்க. அதெல்லாம் ஒன்னும் வேண்டாம் ஷிஜின்னே கூப்பிடுங்க , அதுமட்டும் இல்லை யார் என்ன சொன்னாலும் என்னை அப்படித்தான் சொல்லணும் சரியா. சாப்பாடு வந்துடுச்சு சாப்பிடுங்க".

"சரி உங்க ஹேமா பத்தி சொல்லுங்க அவங்க என்ன செய்யிறாங்க அவங்க கிட்ட பேசுனீங்களா , எப்போ கல்யாணம்".

ஷிஜி ஹேமாவைப் பற்றி கேட்கவும் அவனது முகத்தில் சிறிது வெட்கமும், கண்களில் காதலும் குடிகொண்டது. இதை பார்த்து ஷிஜி ,"அண்ணா என்ன இப்படி வெட்க்கப் படுறீங்க கண்ணுல காதல் ரசம் சொட்டுது. சரி விடுங்க முதல் நாளே எல்லாத்தையும் பேசிவிட முடியாது அதைப் பற்றி உங்ககிட்ட பிறகு கேட்டு தெரிஞ்சுக்கறேன்".

"அப்போ என்னோட ஹெல்ப் இன்னும் தேவைப் படும்னா சொல்லுற, எனக்கு அடிவாங்கித் தராமல் விடமாட்ட நீ".

"அந்த அளவு போகாதுன்னுதான் நினைக்கிறேன் பார்க்கலாம்".

"சுஷின், ஷிஜி அவனோட பேசுறது சரியே இல்லை அவனும் அவனோட மூஞ்சியும், பார்வையே சரியில்லைடா அவளை எப்படி பாக்குறான் பாரு" பிரகாஷ் பொரிந்து கொண்டிருந்தான்.

சுஷினுக்கு தங்கை சொன்னது அப்பொழுதுதான் ஞாபகம் வந்தது பிரகாஷைப் பார்த்து நிதானமாக சொன்னான்,"அவ அன்னைக்கு யாரையோ விரும்புறதா சொன்னாடா , அது இவன்தானா . பாத்தியா எனக்கு

புரியலை உனக்கு புரிஞ்சு இருக்கே. அவளுக்கு இஷ்டம்னா அவனியே பேசி முடிச்சுடலாம்டா".

இவன் என்ன சொல்லுகிறான் என்பதுபோல் புதிதாகப் பார்த்தான் பிரகாஷ்,"என்னடா லூசு மாதிரி பேசுற, அவளோட அழகுக்கும் திறமைக்கும் இவனைப் போய்".

"பிரகாஷ் இதுல அழகு திறமை எல்லாம் வேலைக்கே ஆகாது அவளுக்கு புடிச்சு இருந்தா இவன்னு இல்லை அது யாராக இருந்தாலும் அவளை கட்டிக் கொடுப்பேண்டா ".

"அவன் வேலைக்கு சேர்ந்து ஒரு வாரம் கூட ஆகலை அதுக்குள்ளே எப்படிடா இப்படி ஒரு முடிவுக்கு வந்த".

"காதலிக்க ஒரு நொடி போதும்னு நீதான் அன்னைக்கு சொன்ன . இப்போ அப்படியே மாத்தி சொல்லுறியேடா".

"அதெல்லாம் விடு உன்தங்கச்சி யாரையோ லவ் பண்ணுறதா சொன்னான்னு சொன்னியே அவகிட்ட அது யாருன்னு கேக்கலையா", இதை கேட்க்கும்போது சுஷினின் முகத்தை பார்ப்பதை தவிர்த்தான்.

சுஷினும் 'மாட்டுனியாடா மாப்பிள்ளை ...........', "நானும் கேட்டேன் அதுக்கு அவ அவரே உன்கிட்ட பேசுவார் அப்போ அது யாராக இருந்தாலும் மறுக்காமல் சரின்னு சொல்லுன்னு சொன்னா . இப்போதானே புரியுது இவனை மனசுல வச்சுகிட்டுதான் இப்படி சொல்லி இருக்கான்னு. இன்னைக்கே அம்மாகிட்ட பேசிடுறேன் எனக்கு எவ்வளவு சந்தோசமா இருக்குன்னு தெரியுமா",

பொய்யாக சந்தோஷப் பட்டான்,'இப்போவாவது நீதான் அதுன்னு சொல்லுடா' மனதுக்குள்ளேயே நண்பனை சபித்தான்.

சுஷின் சொன்னதைக் கேட்டு மலைத்துத்தான் போனான் பிரகாஷ், ஷிஜி தன்னை மனதில் வைத்துக் கொண்டுதான் இவனிடம் பேசி இருக்கிறாள் என்பதில் அவனுக்கு கொஞ்சம்கூட சந்தேகமே வரவில்லை. அவளால் தன்னைத்

தவிர வேறு யாரையும் மணந்துகொள்ளமுடியாது என்பதில் அவனுக்கு பெருமையாகவும் இருந்தது.

ஆனால் சுஷின் கடைசியாக பேசியது அவனை அடியோடு கலங்கடித்து விட்டது. இவன் அம்மாவிடம் பேசிவிட்டால் ஷிஜியிடம் கேட்காமலே கல்யாண ஏற்பாடுகளை செய்துவிடுவார்களோ என கவலைப் பட்டான்.

## 25

இவன் அவர்களிடம் ஏதாவது உளறி வைத்தால் இன்னும் கஷ்டமாச்சே என்ன சொல்லுவது. எப்படியும் உடனடியாக எடுத்தோம் கவுத்தோம்னு எதுவும் செய்யமாட்டான் என்ற நம்பிக்கையில் பேசாமல் இருந்தான்.

ஆனாலும் அவனது வாயைத் திறந்து எதுவும் பேசவில்லை. பிரகாஷின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த சுஷினுக்கு அவன் இப்போதைக்கு எதுவும் சொல்லப் போவதில்லை என்பது அவனது இறுகிய முகத்தில் இருந்து புரிந்துகொண்டான்.

ஒரு பெருமூச்சை வெளியேற்றிவிட்டு கைகழுவ சென்றான்.

ஷிஜியும் ஹேமந்த்தும் எழுந்து கை கழுவ சென்றனர். அவர்கள் செல்வதை பார்த்துவிட்டு பிரகாஷும் பாதி சாப்பாட்டில் எழுந்து கை கழுவ சென்றான்.

ஹேமந்த் கைகழுவி வெளியே வந்ததும் ஷிஜியின் வழியை மறித்து நின்றான் பிரகாஷ். அவனை என்ன என்பதுபோல் பார்த்துவிட்டு அவனை தாண்டிச் செல்ல முயற்ச்சிக்கையில் அவளது கையை தனது இடக் கையால் பிடித்தான்.

ஷிஜிக்கு உடலில் மின்சாரம் பாய்ந்ததுபோல் உணர்ந்தாள், பிரகாஷுக்கும் அவ்வாறுதான் இருந்தது அவளது கையை வேகமாக விடுவித்தான்.

ஷிஜி, அவன் கையை விடுவித்ததும் அங்கிருந்து நகர்ந்தாள். அவளது முன்பு கரத்தை நீட்டி அவளது வழியை மறித்தான். பார்வை அவளை துளைத்தது,

அதனை கண்டுகொள்ளாமல் தனது தவிப்பையும் மறைத்துக் கொண்டு கேட்டாள், இப்போ உங்களுக்கு என்னதான் வேணும் , எதுக்கு தேவையில்லாமல் வழியை மறச்சுகிட்டு நிக்கிங்க. நான் போகணும்".

"என்னவேணும்னு கேட்டா தருவியா ஷிஜி", அவனது பேச்சில் இருந்த பொருள் அவளை மேலும் சிவக்க வைத்தது. அவன் தொடர்ந்து சொன்னான் ,"சுஷின் நீ யாரையோ விரும்புறதாவும் அது இந்த ஹேமந்த்தாதான் இருக்கும்னு சொல்லுறான் அப்படியா இதுக்குமட்டும் பதில் சொல்லிட்டு போ".

அவனது இந்த கேள்வியில் ஷிஜிக்கு கோபம் கட்டுக்கடங்காமல் வந்தது,"இதுக்கு உங்களுக்கு எதுக்கு நான் பதில் சொல்லணும், என் விஷயத்தில் தலையிட நீங்க யார். என் அண்ணன் என்ன சொல்லுறானோ அதை நான் கேட்ப்பேன். அவன் இவன்தான் மாப்பிள்ளைன்னு சொன்னா அவனுக்கு மறுபேச்சு பேசாமல் கழுத்தை நீட்டுவேன்",

ஆனால் மனதுக்குள் 'அவன் உன்னைத்தவிர வேறு யாரையும் காட்டமாட்டான். எனக்கு தெரியும் . அந்த நம்பிக்கைலதானே பேசிகிட்டு இருக்கேன். ஆனா இது உனக்கு தெரியாதே இப்போ என்ன செய்வன்னு பாக்குறேன்'.

"அப்போ யாரை உன் அண்ணன் கை காட்டுரானோ அவனை கல்யாணம் செய்துப்பியா".

"என் அண்ணனுக்கு என்னோட மனசு புரியும் சோ.......... என்னோட பதில் ஆமா........ ஆமா.........", அவனை தள்ளிவிட்டு சென்றுவிட்டாள்.

பிரகஷிற்குத்தான் ப்ளட்பிரஷர் எகிறியது.

ஷிஜிக்கு மலைப்பாக இருந்தது. இவன் என்ன சொன்னாலும் வழிக்கு வர மாட்டிக்கானே என்னதான் செய்வது, யோசனையுடன் சென்று சுஷினுடன் அமர்ந்து கொண்டாள்.

அவனிடம் பார்வையாலேயே என்னவென்று கேட்க அவன் கட்டை விரலை தலைகீழாக காட்டினான் அவளும் பதிலுக்கு தலையை ஆட்டிவிட்டு பேசாமல் இருந்தாள்.

பிரகாஷ் வந்ததும் சுஷினிடம் ,"அண்ணா ஹேமந்த் கிளம்பிட்டார் நானும் கிளம்புறேன் நீயே மினியை அவளோட வீட்டில் விட்டுரு சரியா" சொல்லிக் கொண்டே அவள் கிளம்பிச் சென்றாள்.

பிரகாஷ் ஷிஜியையே பார்த்துக் கொண்டிருக்க அவள் அவனது கண்களை சந்திக்காமல் சென்றாள் அவனது பார்வை தொடர்வது புரிந்தும் பேசாமலே சென்றாள், வாசலை கடக்கும் நேரம் எவ்வளவுதான் தன் உணர்வுகளை மறைக்கப் போராடினாலும் முடியாமல் ஒருநிமிடம் தயங்கி திரும்பிப் பார்த்தாள்.

இதற்காகவே காத்துக் கொண்டிருந்ததைப் போல பிரகாஷின் கண்கள் அவளது கண்களை கவ்விக் கொண்டன. கண்கள் மின்ன அவன் பார்த்ததும் அவளது தலை அவளது அனுமதி வாங்காமலேயே போய்வருகிறேன் என்பதுபோல் ஆடியது.

அவனும் சரி என்பதுபோல் செய்கை செய்ய இருவரது மனமும் மகிழ்ச்சியில் நிரம்பி வழிந்தது.

சுஷின் பிரகாஷை அழைக்க அவன் மறுத்துவிட்டு சென்றுவிட்டான். மினியை அழைத்துக் கொண்டு காருக்கு சென்றான்.

சுஷின் மினியை எந்தவித தொல்லையும் செய்யாமல் அழைத்துச் சென்று வீட்டில் விட்டான் . அதற்கு காரணமும் இருந்தது ரெஸ்டாரென்ட்டில் வைத்து அவளிடம் பேசிய

பேச்சுக்களால் அவள் சங்கடமாக உணர்கிறாள் என்பது புரிந்தது அவனுக்கு.

அவளது வீட்டின் முன்னாள் இறங்கும்போது அவளது வலக் கரத்தை பிடித்துக் கொண்டான். அவள் கையை உருவிக்கொள்ள பார்க்கவும் தனது இதழ்களை வேகமாக அவளது உள்ளங்கையில் பதித்துவிட்டு கையை விடுவித்தான்.

அவள் இறங்கி வேகமாக செல்கையில் அவனது குட் நைட் ம் சிரிப்பும் தொடர்ந்தது. அவள் வீட்டில் சென்று உடைமாற்றி சிறிதுநேரம் ஆனபின்பும் தனது தாய் வராததை அப்பொழுதுதான் உணர்ந்தாள்.

ஹோட்டல் ரூபாவில்.............

நேரம் மாலையை நெருங்க நெருங்க சுபாவின் திகில் எல்லை கடந்தது. ப்ரவீனைப் பார்த்தாள் அவன் காபியை வரவைத்து அதை சுவைத்து குடித்துக் கொண்டிருந்தான்.

'இவன் எதுக்கு என்னை வரவைத்தான் இப்பொழுது என்னசெய்யப் போகிறான் சத்தம் போட்டு யாரையாவது கூப்பிடலாம் என்றால் இவன் அதற்குப் பிறகு என்ன செய்வானோவேன்று பயந்து கத்துவதற்க்குக் கூட பயமாக இருக்கிறது' அவள் அவளது சிந்தையில் உழன்று கொண்டிருந்தபோது ப்ரவீன் நிதான நடையுடன் அவளது கட்டிலின் அருகில் வந்தான்.

அவனது கண்களில் தெரிந்த வேட்க்கை சுபாவின் முதுகுத் தண்டை சில்லிட வைத்தது. மெதுவாக நகர்ந்து கட்டிலின் ஓரத்துக்குச் சென்றாள்.

இவ்வளவுநேரம் எதுவும் பேசாதவன் இப்பொழுது பேசினான்,"உன்னால் இந்தரூமை விட்டு வெளியே என்னோட அனுமதி இல்லாமல் போக முடியாது. கத்தி கூச்சல் போடலாம்னு பார்த்தா இந்த ப்ளோர்ல இருக்க எல்லா ரூமையும் நான்தான் இன்னைக்கு ஒருநாள் வாடகைக்கு எடுத்திருக்கேன்.

இது எல்லாத்தையும் விட இந்த பெட்டை என்னோட பகிர்ந்துகிட்டாதான்.......... நான் சொல்லவாறது புரியும்னு நினைக்கிறேன்............

நீயா சம்மதிச்சா உனக்கும் கஷ்டம் இல்லை எனக்கும் கஷ்டம் இல்லை என்ன சொல்லுற".

அவனது பேச்சைக் கேட்டு இன்னும் நடுங்கினாள் ஆனாலும் அவன் நெருங்கி வந்தால் ஒருகை பார்த்துவிடவேண்டும் என்று சிறிது தைரியமாகவே இருந்தாள்.

அவளது முகத்தைப் பார்த்தே அவளது எண்ணத்தை உணர்ந்தவன்போல மெல்லிய புன்னகையுடன் அவளை நெருங்கிச் சென்று அவளது துப்பட்டாவை உருவி வீசி எறிந்தான்.

அவனது இந்த அதிரடிசெயலை எதிர் பார்க்காததால் முதலில் திகைத்தாலும் அவன் அவளது முகம்நோக்கி குனிந்ததும் நகங்களால் அவனது முகத்தை பிராண்டினாள் . அவனது முகத்தில் ரத்தம் வழிந்தது.

வலியில் துடித்தாலும்,"என்னை எதிர்க்கிற அளவுக்கு வந்துட்டியா இனிமேலும் உன்னை சும்மா விடமாட்டேன்", என்று கூறிக் கொண்டே அவளது கன்னத்தில் ஓங்கி அடித்தான்.

அவனது அடியில் காதின் ஜவ்வுகள் அனைத்தும் அற்றுப் போனதுபோல் உணர்ந்தாள் சுபா மயக்கம் வருவதுபோல் இருந்தது அவளுக்கு.

அவனை எதிர்க்க இயலாமல் அவள் சாயத்துவங்கினாள். அவனது இதழ்கள் வன்மத்துடன் அவளது இதழ்களை சுவைத்தன அவளது உதட்டின் ரத்தம் உப்பாக அவனது வாயில் இறங்கியது.

சுபா பலகீனமாக தனது பெண்மையை காக்கும் பொருட்டு அவனுடன் போராடினாள். அவளது போராட்டம்

தோல்வியடைந்து கொண்டிருந்தது.

அவளது பெண்மை பறிபோகப்போன கடைசிநொடி அறையின் கதவு இடிக்கப்படும் ஒலி கேட்டது. கதவை பொறுமை இழந்து யாரோ தட்டிக் கொண்டிருந்தனர்.

ப்ரவீன் சுபாவிடம் இருந்து வேகமாக விலகினான். அவளது துப்பட்டாவை எடுத்து அவளிடம் கொடுத்துவிட்டு தன் ஆடையை சரிசெய்துகொண்டு கதவை திறந்தான்.

அவன் திறப்பதற்காகவே காத்திருந்ததுபோல் நான்கு ஐந்துபேர் தங்களது கேமராவுடன் உள்ளேவந்து அவர்களை படம் பிடித்தனர்.

அவர்களுடன் போலீஸ் ம் இருந்தது. சுபா பெருங்குரலெடுத்து அழத் துவங்கினாள். அவளது அழுகையை சட்டை செய்யாமல் பெண் போலீஸ் அவளை இழுத்துக் கொண்டு சென்றனர்.

அதில் ஒருத்தி சொன்னாள்,"பிராத்தல் பண்ணவரமுன்னாடி யோசிக்கணும் அப்பா அம்மா தாற காசு பத்தலைன்னு இப்படி சீரழிய வாறது. மாட்டிகிட்டா பத்தினி மாதிரி அழ வேண்டியது நட நட , என் சர்வீசில் எத்தனை பார்த்திருப்பேன்.

சுபாவிற்கு தனது பெண்மை காக்கப் பட்டதை நினைத்து சந்தோஷப் படுவதா இல்லை இப்படி ஒருதப்பான நிலைக்கு ஆளாகிவிட்டோமே என்று வருத்தப் படுவதா என்று தெரியவில்லை.

கண்ணீர் வற்றிப் போகும் போகும் அளவுக்கு அழுது கொண்டே இருந்தாள். ஹோட்டலின் வெளியே வந்து கொண்டிருக்கும் போது பிரவீன் சொன்னான் .

## 26

"நீங்க யார்மேல கை வச்சு இருக்கீங்க தெரியுமா , அமைச்சர் சர்குணத்தோட மகன்தான் நான்

இன்னைக்கு என் அப்பாவோட பிறந்தநாள் இங்கேதான் கொண்டாடிட்டு இருக்காங்க ஒரு வார்த்தை சொன்னால் போதும் உங்க வேலை இன்னையோட காலி அது தெரியுமா".

அவன் சொன்னதும் அந்த இன்ஸ்பெக்டர் நிதானமடைந்தான் கீழே விழா நடப்பது அவருக்கும் தெரியும் எனவே நிதானமடைந்தார் சிறு யோசனையுடன் ,"ஓ........... அப்படியா அப்போ நீங்க கிளம்புங்க இவளை விட முடியாது. அப்படி விடணும்னா இவளோட அம்மா அப்பாவை வரச் சொல்லுங்க , கேஸ் பைல் பண்ணிட்டா கோர்ட் ல பரொட்யூஸ் பண்ணாமல் இருக்க முடியாது.

அப்படி இல்லையா உங்க அப்பாவை போன்ல பேசச் சொல்லுங்க. இப்போ வழியை விடுங்க", சுபாவை அழைத்துக் கொண்டு ஜீப் பிற்கு விரைந்தார்.

இதை ப்ரவீனே எதிர்பார்க்கவில்லை அவனுக்குத் தெரியும் அவளது அப்பாவைப் பற்றி, இவனது அப்பாவிடமோ பேசவே முடியாது அவர் முன்கோபி மட்டுமல்ல நேர்மையானவரும் கூட.

இவனது இந்த செயலை கேள்விப் பட்டால் தண்டனை என்னவோ அதை கொடுங்கள் என்று சொல்லிவிடுவார்.

இவர்களது வாதத்தைக் கேட்டுக் கொண்டே சுபா ப்ரவீனை எரித்து விடுபவள்போல் பார்த்தாள். அவனால் அவளது பார்வையை சந்திக்க இயலவில்லை. தலையை கவிழ்த்துக் கொண்டான்.

அவனை விட்டுவிட்டு ஜீப் ஸ்டேஷன் நோக்கி விரைந்தது. அப்பொழுது நேரம் இரவு எட்டு மணி. இவள் போலீஸ் ஜீப்பில் அழுதுகொண்டே போவதை சுபாவின் தோழி தீபா பார்த்தாள்.

அவளுக்கு சுபாவின் தோற்றமும் அழுகையும் ஏதோ சரி யில்லை என்பதை உணர்த்த, வேகமாக சுஷினுக்கு போன் செய்தாள்.

சுபாவின் வாழ்வில் நடந்தது , நடப்பது அனைத்துமே தீபாவிற்க்குத் தெரியும் சுபாவிற்கு இப்பொழுது உதவக் கூடியவன் சுஷின் மட்டுமே என்பது அவளுக்குத் தெரியும். எனவே அவனுக்கு கால் செய்தாள்.

மினியை விட்டு விட்டு காரில் வரும்போது அவனது அலைபேசி அடித்தது யார் என்றும் பார்க்காமல் ,"ஹலோ..........." என்றான்.

அந்தப்பக்கம் தீபா சொன்ன செய்தியை கேட்டு இடிந்தே போனான் சுஷின். தனது கட்டுப் பாட்டை இழந்து சரியப்போன காரை பிரேக் போட்டு நிறுத்தினான்.

தனது முட்டாள் தனத்தை நினைத்து வருந்தினான். சுபாவிற்கு பேசி எவ்வளவு நாட்கள் ஆகி விட்டது. என்னோட சுயநலத்தினால் அவளைப் பற்றி கவலையே படாமல் போயிட்டேனே.

ஐயோ இப்போ எவ்வளவு பெரிய சிக்கல்ல சிக்கி இருக்கான்னு தெரியலையே, அவனது எண்ணத்திலேயே மூழ்கி விட்டவனை கலைத்தது தீபாவின் குரல்.

"அண்ணா அவ அழுதுட்டே போறாண்ணா என்னால எதுவும் செய்ய முடியலை", அழுதபடி சொன்னாள்.

"இங்க பாரும்மா உன்பேர் என்ன", "தீபா" "தீபா நீ உடனே அந்த ஜீப் எந்த ஸ்டேஷன் போகுதுன்னு மட்டும் பார்த்து சொல்லும்மா. நீ இப்போ எந்த ஏரியா வில் இருக்க அதையும் சொல்லு ".

அவள் சொன்னதும் காரை அசுரவேகத்தில் செலுத்தினான் சுஷின். அவனுக்கு புரிந்தது இந்த பிரச்சனைக்கு காரணம் நிச்சயம் ப்ரவீனாகத்தான் இருக்கும் என்பது.

தீபா எந்த ஸ்டேஷன் என்று சொன்னதும் வாயுவேகத்தில் சென்று அந்த ஸ்டேஷன் முன்னால் இறங்கினான் . காரில் இருந்து குதித்து இறங்கி ஓடினான் .

அங்கே அவன் கண்ட காட்சி அவனை பதற வைத்தது, சுபாவை அவள் செய்யாத குற்றத்தை செய்ததாக ஒத்துக் கொள்ளச் சொல்லி அடித்துக் கொண்டிருந்தனர்.

வேகமாக அவர்களிடம் சென்று சுபாவை அவர்களிடம் இருந்து பிரித்து அணைத்துக் கொண்டான். "நீங்களும் பொண்ணுங்கதானே ஒரு சின்னப் பொண்ணை இப்படியா அடிப்பிங்க உங்களுக்கெல்லாம் மனசாட்சியே இல்லையா. இல்ல இந்த டிரஸ்-ஐ போட்டதும் மனசாட்சியவும் கழட்டி வச்சுடுவீங்களா".

"முதல்ல நீ யாருடா இவ கூட டெய்லி போறவனா இவ்வளவு துடிக்கிற".

அவர்களின் பேச்சில்,"அண்ணா..............." கதறலுடன் மயங்கிச் சரிந்தாள் சுபா.

அவளது கதறலில் ஸ்டேஷன் கட்டிடமே குலுங்கியது.

சுஷின் ருத்ர தாண்டவமே ஆடினான், "இன்னும் ஒருவார்த்தை........... இன்னும் ஒரு வார்த்தை என் தங்கச்சியைப் பற்றி பேசுனீங்க இந்த ஸ்டேஷனையே கொழுத்திடுவேன் ".

அவனது பேச்சும் அவனது பார்வையும் அவன் சொன்னதை செய்வான் என்று தோன்றினாலும் , இவனது மிரட்டலுக்கு பணிவதா நமது காக்கிச் சட்டைக்கு இருக்கும் பவர் தெரியாமல் விளையாடுகிறான் . இவனுக்கு அதைப் புரியவைக்கவேண்டும் என்ற எண்ணம் தோன்ற ,

"எங்க ஸ்டேஷன் குள்ளேயே வந்து எங்களையே மிரட்டுனன்னு உன்மேல கேஸ் போட்டு உள்ள தள்ளலை பாருடா".

"முடிஞ்சா செஞ்சுப் பாரு", அவர்களிடம் சொல்லிவிட்டு தொலைப்பேசியை உயிர்ப்பித்து முதலில் டாக்டர்-க்கு போன் செய்து வரச்சொன்னான்.

வக்கீலுக்கும் போன் செய்துவிட்டு அவர்கள் வந்ததும், சுபாவை அவர்களிடம் ஒப்படைத்துவிட்டு , இன்னும் ஒருமணி நேரத்தில் வந்துவிடுவதாக சொல்லிவிட்டு ப்ரவீனின் வீடுநோக்கிச் சென்றான்.

செல்லும் வழியில் அவனது அப்பாவின் பிறந்தநாள் கொண்டாட்டம் ஹோட்டல் ரூபாவில் நடப்பதை அறிந்து அங்கே சென்றான்.

அங்கே அவனது கண்கள் ப்ரவீனைத் தேடின கண்டுகொண்டதும் , கொலைவெறியுடன் அவன்மீது பாயத் துடித்த எண்ணத்தை சுற்றுப்புறம் அறிந்து அடக்கினான் .

சுஷினைப் பார்த்ததும் ப்ரவீன் அவனிடம் வந்து அவனது கைகளைப் பிடித்துக் கொண்டு அழுதான் . இதைப் பார்த்த ப்ரவீனின் தாய் வேகமாக அவர்களின் அருகில் வந்து அவர்கள் இருவரையும் ஹோட்டல் ரூமிற்குள் அழைத்துச் சென்றார்.

இதற்காகவே காத்திருந்தவன் போல சுஷின் ப்ரவீனை முஸ்ட்டி இறுக்கி அடித்து நொறுக்கினான். இவனது அடியையும் வாங்கிக் கொண்டு அவனது காலில் விழுந்து அழுதான் பிரவீன்.

"நான் செஞ்சது மன்னிக்க முடியாத தப்புதான், உங்க தங்கச்சிமேல இருந்த ஆசையில்தான் அப்படி செஞ்சுட்டேன். நான் அவளை உயிருக்கும் மேலா விரும்புறேன். இப்படி நடக்கும்னு நான் கனவுலகூட நினைக்கலை என்னை அடிங்க நல்ல அடிங்க..............", முகத்தில் அறைந்துகொண்டு அழுதான்.

"ப்ரவீன் என்ன நடக்குது இங்க கொஞ்சநேரமா உன்முகமே சரி யில்லை . இன்னைக்கு முழுக்க உன்னை ஆளையே காணோம். நான் என்னன்னு கேட்டதுக்கும் பதில் சொல்லாமல் மழுப்புன . இப்போ இவன் யாருன்னே தெரியலை இவன்கிட்ட அடிவாங்கிட்டே கால்ல விழுற உண்மையை சொல்லப் போறியா இல்லையா".

"அம்மா உங்க பிள்ளையால என் தங்கச்சி இப்போ ஸ்டேஷன்-ல இருக்குறா........ அதை எப்படி............".

"ப்ரவீன் இவன் சொல்லுறது உண்மையா............ . என் கண்ணைப் பார்த்து பதில் சொல்லு...........".

ஆமாம் என்பதுபோல் தலையை ஆட்டினான் பின்பு நடந்தவை அனைத்தையும் சொல்லி முடித்ததும் அன்னத்தின் கரம் இடியென அவனது கன்னத்தில் இறங்கியது.

இந்த பிரச்சனைகள் நடந்து கொண்டிருக்கும் போது சுஷினின் போன் விடாமல் அடித்துக் கொண்டிருந்தது. அது சைலண்ட் மோடில் இருந்ததால் அவனுக்கு கேட்கவில்லை.

அதன் அழைப்பை உணரும் நிலையிலும் அவன் இல்லை.

இவ்வளவு நேரமாகியும் தனது தாயை காணவில்லையே என மினி தேடிச் சென்றாள். அங்கே கிச்சனில் மீனாட்சி மயக்கமுற்று விழுந்து கிடந்தார்.

மினி ஓடிச் சென்று தண்ணீர் எடுத்து தெளித்தும் எந்த மாற்றமும் இல்லாமல் போக பயம் அவளை கவ்விக் கொண்டது.

மூக்கில் விரல் வைத்துப் பார்த்தாள் மினியின் பதட்டத்தில் மீனாட்ச்சியின் மூச்சுக் காற்றை உணரும் நிலையில் அவள் இல்லை.

இன்னும் பதட்டம் கூட அது அழுகையாக வெளிவந்தது. அவளது அழுகை சத்தம் கேட்டு பக்கத்து வீட்டு மாமி வேகமாக வந்தார்.

அங்கே மீனாட்சி மயக்கமாக கிடப்பதும்,,மினி அழுவதையும் பார்த்தவர் அவளிடம் மினி தைரியமா இரு உன் அம்மாவுக்கு எதுவும் இல்லை . முதல்ல ஆம்புலன்ஸ் க்கு போன் பண்ணு அடுத்து உன்னை கட்டிக்கப் போறவனுக்கு போன் பண்ணு .

இப்படியே அழுதுட்டு இருந்தால் வேலைக்கு ஆகுமா சீக்கிரம்". மினி போன் செய்ய போகவும் ஹொாச்பிடலுக்கு தேவையான, ப்ளாஸ்க் , டம்பளர், துணி பெட்ஷீட் அனைத்தையும் எடுத்து வைத்தார்.

மினியிடம் ATM கார்டு மறக்காமல் எடுத்து வைக்கச் சொன்னார். ஆம்புலன்ஸ் வந்ததும் மீனாட்ச்சியை கூட்டிக் கொண்டு விரைந்தனர்.

மினி தொடர்ந்து சுஷினுக்கு முயற்சி செய்துகொண்டே இருந்தாள். ஆனால் அவன் எடுக்கவே இல்லை.............

## 27

உன் உடனிருப்பை நான் உணரும் நேரம்

என்னைவிட்டு நீ நீங்கிச்செல்லும் வேளை

உயிர் பிரியும் வேதனையை தருகிறதே

இது காதலென்றால்................

அன்னத்தின் கை இடியென ப்ரவீனின் கன்னத்தில் இறங்கியதும் அதிர்ச்சியில் நின்றுவிட்டான் ப்ரவீன். இதுவரை அவனை கைநீட்டி அடித்ததே இல்லை அவனது அம்மா.

ஒரே வாரிசென்று மிகுந்த செல்லம் அவனுக்கு. அவன் எதைக் கேட்டாலும் தட்டாமல் செய்து தருவார்கள் . ஆனால் இன்று அதே அம்மா கைநீட்டி தன்னை கன்னத்தில் அடிக்கவும் தனது தவறின் அளவு எவ்வளவு பெரியதென்று உணர்ந்து கொண்டான்.

தன் கன்னத்தை பிடித்துக் கொண்டே அதிர்ச்சி விலகாமல் கூப்பிட்டான்,"அம்மா........... அம்மா......... நீங்களா என்னை..........." அவனது கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

பேச நாவு எழவில்லை. சுஷின் கூட இதை எதிர் பார்க்கவில்லை, அவனது அம்மா கண்டிப்பார்கள் என்று எதிர் பார்த்தான் . ஆனால் தோளிற்கு மேலே வளர்ந்த மகனை தாய் கைநீட்டி அடிப்பதென்றால் அவர்களது மனம் எவ்வளவு காயப் பட்டிருக்கும் என்பது அவனுக்கு புரிந்தது.

"என்னை அப்படி கூப்பிடாதே ப்ரவீன், எனக்கு பிள்ளையா பிறந்துட்டு அதைவிட அப்படிஒரு அப்பாவிற்கு இப்படி ஒரு பிள்ளை. உன்னை நான்தான் பெத்தேனான்னு எனக்கு சந்தேகமா இருக்குடா.

என் பிள்ளை எப்படி ஒரு பொண்ணை.......... ஹோட்டல் ரூமுக்கு வரவழைச்சு............. தப்பா நடந்துக்க எப்படிடா உனக்கு மனசு வந்துச்சு. ஒருதடவை என்னையோ உன் அப்பாவையோ நினைச்சு பாத்திருந்தா இப்படி செஞ்சிருப்பியாடா.

என் மனசெல்லாம் பதறுதே உனக்கு தங்கச்சி இருந்து அவள்கிட்ட ஒருத்தன் இப்படி நடந்துகிட்டா உன்னால பொறுத்துக்க முடியுமா. இவன் உன்னை அடிச்சது தப்பே இல்லை.

இப்போவே நீயா போலீஸ் ஸ்டேஷன் போய் சரணடஞ்சுடு . இல்ல நானே உன்னை பிடிச்சுகுடுக்கவேண்டி வரும். என் கண் முன்னாடி நிக்காதே", முகத்தை திருப்பிக் கொண்டு தன் மகனின் செயலை ஜீரணிக்க முடியாதவராக நின்றுகொண்டார்.

"ஹையோ அம்மா , நான் அவகிட்ட தப்பா நடக்க இங்க வரச் சொல்லலைம்மா சும்மா மிரட்டத்தான்...........".

"விருப்பம் இல்லாத பொண்ணை நினைக்கிறதே பாவம் இதுல விளக்கம் வேற எனக்கு எந்த விளக்கமும் தேவை இல்லை. நீ போ" .

"அம்மா சுபாவை நான் உயிருக்கும் மேலா விரும்புறேன்ம்மா என்னோட விருப்பத்தை

எத்தனையோமுறை அவகிட்ட சொல்லியும் கேக்காததால ஏதோ கோபத்துல".

"நிறுத்துடா............" வெடித்தார் அன்னம். "எனக்கு எந்த விளக்கமும் தேவை இல்லை . நான்தான் நடந்த தப்புக்கு காரணம் அவளை விட்டுடுங்கன்னு சொல்லு போ".

இப்பொழுது இடையிட்டான் சுஷின்,"அம்மா நீங்க சொல்லவாறது எனக்கு புரியிது ஆனா இப்போ இவன் உள்ளே போனாலும் என் தங்கச்சியோட பேரு வெளிய வந்துச்சுன்னா அவளோட எதிர்காலமே பாழாய் போய்டும்.

நான் இங்க வந்ததுக்கு காரணமே ப்ரவீனோட அப்பாகிட்ட சொல்லி கேஸே இல்லாமல் செய்யத்தான். ஆனகூட இந்த பிரச்சனை முடியாது. சுபாவோட அப்பாக்கு என்ன பதில் சொல்லமுடியும்.

அவர் ஏற்க்கனவே கோபக்காரர் சுபாவை என்னவெல்லாம் சொல்லப் போறாரோ. அம்மா உங்க காலில் வேணுமென்றாலும் விழுறேன் என் தங்கச்சியோட வாழ்க்கையை காப்பாத்துங்க ப்ளீஸ்............", குரல் அடைக்க கண்கள் கலங்க அவன் நின்ற கோலம் அன்னத்தையே உலுக்கியது.

ப்ரவீனை தீப்பார்வை பார்த்துவிட்டு ,"நான் என்ன செய்யணும்னு சொல்லுப்பா அதுபடியே செஞ்சிடுறேன். என் பையனால ஒரு பொண்ணோட வாழ்க்கை அழியக் கூடாது. என்னால அதை தாங்க முடியாது".

"உடனே ப்ரவீனோட அப்பாவை ஸ்டேஷன்க்கு போன் பண்ணச்சொல்லி சுபாவை எந்த கேஸும் போடாமல் விட்டுடச் சொன்னா அவளை நான் கூட்டிட்டு போய்டுறேன்.

எனக்கு இப்போதைக்கு அவளை ஸ்டேஷன்ல இருந்தது கூட்டிட்டு போகணும்னுதான் தோணுதே தவிர வேற எதுவும் தெரியலை.

சுபாவை ஸ்டேஷன்ல பார்த்துட்டுதான் வாறேன். இன்னும் கொஞ்சநேரம் அவ அங்க இருந்தாலும் அவளை உயிரோட கொன்னுடுவாங்க அங்க இருக்குறவங்க.

நீங்க எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் இவங்க அப்பாட்ட சொன்னிங்கன்னா நான் போய்டுவேன்".

"உன்பேர் என்னப்பா", "சுஷின்", “சுஷின்......... இப்போ வெளியே பார்ட்டி நடந்துட்டு இருக்கு முடிய எப்படியும் பன்னிரண்டு மணி ஆகும். அதுக்கு பிறகு அவர்கிட்ட சொல்லி...........

அதைவிட இந்தவிஷயத்தை அவர்கிட்ட கொண்டுபோனா விளைவு வேறவிதமாதான் இருக்கும். அதனால நான் ஒண்ணுசெய்யிறேன் உன்கூட கிளம்பி ஸ்டேஷன் வாறேன்".

"அம்மா நீங்க இங்கிருந்து போனீங்கன்னா, அப்பா உங்களை எதுக்காவது தேடுனாங்கன்னா சம்மாளிக்க முடியாது", ப்ரவீன் கலக்கத்துடனே பதிலளித்தான்.

"நீ செய்துவைத்த வேலைக்கு இங்கே இருந்து அவரை கொஞ்சநேரம் சம்மாளி", கோபத்துடனே பதிலளித்துவிட்டு சுஷினுடன் கிளம்ப ஆயத்தமானார்.

அவரை அழைத்துப் போவதைவிட வேறுவழியும் தெரியவில்லை அவனுக்கு ஆனாலும் சிறு முயற்சியாக,"அம்மா உங்களோட நேரத்தை வீணாக்க வேண்டாமே, நீங்க ஒரு போன்செஞ்சு பேசுனீங்கன்னா எனக்கு அதுபோதும், வேற எல்லா நான் பார்த்குறேன்ம்மா".

"சுஷின் நான் சுபாவை பார்க்கவும்தான் வாறேன். எனக்கு அவளை பார்க்கணும் இங்கே என்னால நிம்மதியா இருக்க முடியாது. வா நாம போகலாம்",இதற்குமேல் மறுப்பது சரியல்ல என்று தோன்ற அவரையும் அழைத்துக் கொண்டு விரைந்தான்.

மினி தொடர்ந்து முயற்சி செய்தும் எந்த பலனும் இல்லாமல் போக கண்ணீரை அடக்குவது முடியாத காரியமாகியது அவளுக்கு.

அவளது அழுகையைப் பார்த்த மாமி,"எதுக்குமினி இப்போ அழுதுட்டு இருக்க , அம்மாக்கு எதுவும் ஆகாது நீ தைரியமா இருந்தா தானே உன் அம்மாவை பார்த்துக்க முடியும்".

"அதில்ல மாமி அவருக்கு போன் செஞ்சா எடுக்கவே மாட்டிக்கார். என்ன செய்யன்னும் தெரியலை", கலக்கத்துடன் கண்ணீரும் சேர பதில் சொன்னால் மினி.

மாமிக்கும் வருத்தமாகத்தான் இருந்தது இதை வெளியே சொன்னால் மினி இன்னும் கலங்கி விடுவாள் என்பதை அறிந்து,"நீ அவனோட தங்கச்சிக்கு போன் செஞ்சு பாருமினி அவர் வேலையா இருக்காரோ என்னமோ".

மாமி சொல்லுவதும் சரிஎன்று தோன்ற ஷிஜிக்கு போன் செய்து அம்மாவை ஹோச்பிடலில் சேர்த்திருப்பதாக சொன்னாள்.

மினி சொன்னதும் ஷிஜி சுலோ, சுந்தரத்தை அழைத்துக் கொண்டு விரைந்தாள் மருத்துவமனையை நோக்கி.

ஷிஜியைப் பார்த்ததும் ஓடிவந்து அவளது தோளில் சாய்ந்து அழுதாள் மினி.

"அம்மாவுக்கு என்னன்னு சொல்லவே மாட்டேங்காங்க, அம்மா இன்னும் கண்ணு முழிக்கவே இல்லை எனக்கு ரொம்ப பயமா இருக்கு ஷிஜி".

"நாங்க எல்லாரும் இருக்கோம் மினி கவலைப் படாதே, அண்ணனுக்கு போன் பண்ணுனியா இல்லையா. நானும் செஞ்சுபார்த்தேன் நாட் ரீச்சபிள்னே வருது. அவன் ஏதாவது வேலையா போய் இருக்கலாம். அவனே சீக்கிரம் போன் செய்வான் நீ கவலைபடாதே அப்பா அம்மா பார்த்துப்பாங்க", அவளுக்கு ஆறுதல் சொன்னாலும்

சுஷினின் செயலை அவளாலும் ஒத்துக்கொள்ள இயலவில்லை.

சுலோ மினியின் தலையை ஆறுதலாக வருடிவிட்டு மாமியிடம் என்ன நடந்தது என்று கேட்கச் சென்றார்.

சுந்தரம் இவர்களை விட்டுவிட்டு டாக்டர் யாரென்று நர்ஸ் ஸிடம் கேட்டுவிட்டு அவரது அறையை நோக்கிச் சென்றார்.

டாக்டரின் அறையில்............

"ஹலோ டாக்டர் நான் சுந்தரம் பேசென்ட் மீனாட்சி அவங்களோட சம்பந்தி அவங்களுக்கு இப்போ எப்படி இருக்கு, என்ன ப்ரோப்ளேம் அவங்களுக்கு".

"வாங்க............ மீனாட்சி பேசென்ட்க்கு மயில்டு ஹார்ட் அட்டாக் பயப்படுற மாதிரி எதுவும் இல்லை ஆனால் இனிமேல் கொஞ்சம் கவனமா இருக்கணும் சாப்பாடு முதற்கொண்டு எல்லாத்துலையும் கவனம் அவசியம்.

எதுக்கும் ரொம்ப பதட்டப் படாமல் டென்ஷன் ஆகாமல், மெடிசின் எல்லாம் கரெக்ட் டைம் க்கு சாப்பிட்டு உடம்பை பாத்துகிட்டா போதும். ஒரு இரண்டு நாள் இங்க இருந்துட்டு போங்க", அவரது பேச்சு கவலையளித்தது சுந்தரத்துக்கு.

நன்றி சொல்லி அங்கிருந்து கிளம்பினார். சுலோவை தனியாக அழைத்து டாக்டர் சொன்னதை அவரிடம் சொன்னார்.

ஆனால் யாருக்கு இந்த விஷயம் தெரியவேண்டாம் என்று சுலோவை தனியாக அழைத்தாரோ அவள் அவர்கள் பேசியது அனைத்தையும் கேட்டதை அவர்கள் அறியவில்லை.

மினிக்கு கொஞ்சநேரம் தன் காதையே நம்பமுடியவில்லை. அம்மாவுக்கு ஹார்ட் அட்டாக் என்பதை அறிந்ததுமே தனது உலகமே அஸ்த்தமித்ததைப் போல் உணர்ந்தாள்.

யாரிடமாவது சொல்லியாழவேண்டும் போல் எழுந்த உணர்வை அடக்க முடியாமல் சுஷினுக்கு முயற்சி செய்தாள் .

ரிங் போனதுமே அவளது செல்கள் அவனிடம் தன் வருத்தத்தை கொட்டிவிடவேண்டும் என்ற எண்ணம் வலுப் பெற்றது . ஆனால் சுஷின் எடுக்கவேயில்லை .

திரும்பத் திரும்ப முயற்சி செய்துகொண்டே ஹோஸ்பிவிட்டு வெளியே வந்தாள். வந்த அவளது பார்வையில் விழுந்தது சுஷின் ஒரு பெண்ணை அணைத்தபடி ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்த காட்சியே.

தான் காண்பது கனவா என்று தனது கண்ணீர் வழிந்த கண்களை துடைத்துக் கொண்டு கண்களை கசக்கிக் கொண்டு திரும்பவும் பார்த்தாள்.

சுஷினேதான் அது, அவன் மாலையில் போட்டிருந்த அதே ஷர்ட்............ இமைக்க மறந்து பார்த்துக் கொண்டிருக்கும்போதே அவனது ஷர்ட்டை கழட்டி அவளுக்கு போர்த்திவிட்டு அணைத்தபடியே தனது காரில் ஏறிச் சென்றுவிட்டான்.

அவனை அழைக்க வேண்டும், அவனது காரை மறித்து அவனிடம் கேட்கவேண்டும் என்று எண்ணும்போதே அவன் சென்று விட்டிருந்தான்.

அம்மாவின் உடல்நிலை அறிந்ததுமே காயப் பட்டிருந்த மனது அம்மாவுக்கு ஹார்ட் அட்டாக் என்று தெரிந்ததும் உடைந்துதான் போனது, ஆனாலும் சுஷினின் அணைப்பில் இருந்தாலோ, அவனது குரலைக் கேட்டாலோ கொஞ்சமாவது மனபாரம் இறங்கும் என்று எண்ணியிருந்தாள்.

ஆனால் தனது நம்பிக்கையின் நாயகன் வேறொரு பெண்ணை அணைத்துக்கொண்டு நின்ற காட்சியைப் பார்த்ததும் அவளது மனம் சுக்குநூறாக உடைந்துதான் போனது.

யாரிடம் அடைக்கலம் புகவேண்டும் என்று எண்ணினாளோ அவன் வேறொருபெண்ணை அணைத்துக் கொண்டுநின்ற காட்சி.................. மீண்டும் மீண்டும் தோன்ற தனது நம்பிக்கை, எதிர்பார்ப்பு அனைத்தும் சிதைந்ததுபோல் தோன்ற அது ஹோச்பிடல் வளாகம் என்பதையும் மறந்து மடிந்து அமர்ந்து பெருங்குரலெடுத்து அழுதாள்.

இதுவரை அடக்கிவைத்திருந்த அழுகை வெடித்து வெளியேற தேற்றுவார் யாருமின்றி அழுதுகொண்டிருந்தாள் மினி............ .

## 28

வானில் சிறகடித்துப் பறக்கத்

துடிக்கும் என் மனம்

உன் மனச்சிறையில்

அடைபடத் துடிக்கின்றதே

இது காதலென்றால்...............

சற்றுமுன்பு................ ஸ்டேஷனில்...............

அன்னத்தை அழைத்துக் கொண்டு ஸ்டேஷனுக்கு சென்றான் சுஷின். அன்னத்தைப் பார்த்ததும் இன்ஸ்பெக்டர் எழுந்து நின்றார், "மேடம் நீங்க இங்கே ஒரு போன் செய்திருந்தால் போதுமே, நானே உங்களை தேடி வந்திருப்பேனே . என்னவிஷயமா இங்க வந்திங்கன்னு தெரிஞ்சுக்கலாமா மேடம்".

"அதை சொல்லத்தானே வந்திருக்கிறேன் ",அவரது பார்வை சுபாவை பாசமாக வருடியது பிறகு கோபமாக அவரைப் பார்த்து,

"சபாவை எதற்க்காக ஸ்டேஷன் கூட்டிட்டு வந்திங்கன்னு தெரிஞ்சுக்கலாமா , என்ன கேஸ்", அவரதுகுரல் குற்றம்

சாட்டியது இன்ஸ்பெக்டரை.

"அதுஒரு ப்ராத்தல் கேஸ் மேடம்........ ", மேலே எதுவோ சொல்லப் போனவன் அன்னத்தின் கோபப் பார்வையில் வாக்கியத்தை முடிக்காமலேயே விட்டார்.

"எந்த அடிப்படியில இப்படிஒரு கேஸ்-ன்னு முடிவு செஞ்சிங்க. இவ என் வீட்டுக்கு மருமகளாகப் போறவ இவளோட இருந்தது என் மகன். இன்னைக்கு ஐயாவுக்கு பிறந்தநாள் அந்த ஹோட்டல் லதான் கொண்டாடிட்டு இருக்கோம் தெரியுமா.

அங்க இருந்து நீங்க எப்படி எங்க மருமகளை கூட்டிட்டு வரலாம். அதுவும் இப்படி ஒரு கேஸ்ல , அய்யாவுக்கு தெரிஞ்சா என்ன ஆகும்னு தெரியுமா", அவரது குரல் சிறிதும் பிசகாமல் அதிகாரத்துடன் தொடர்ந்தது.

"உங்களுக்கு வேலை வேண்டாம் போல , யார் என்னான்னு விசாரிக்காமல் உங்க அதிகாரத்தை துஸ் பிரயோகம் செஞ்சு இருக்கீங்க இதுக்கே உங்களை வேலையை விட்டு தூக்கிடுவோம்".

அன்னம் பேசப் பேச மிரண்டது இன்ஸ்பெக்டர் மட்டுமல்ல, சுஷினால் அவர்கள் சொல்லுவதை நம்பமுடியவில்லை ஆனாலும் தன் தங்கையின் வாழ்வு இத்தோடு நாசமாகாமல் நல்ல எதிர்காலம் அமையுமோ என்ற எதிர்பார்ப்பு ஒரு ஓரத்தில் முளைவிடுவதை தவிர்க்க இயலவில்லை.

இன்ஸ்பெக்டரோ அடியோடு ஆட்டம் கண்டுபோனார்,"ஐயோ மேடம் இவங்களை கைது செய்யும்போது உங்கமகன் ஒருவார்த்தை சொல்லியிருந்தால் போதுமே இந்த தவறு நடந்தே இருக்காது.

எங்களுக்கு எப்படிமேடம் அவர் சொல்லாமல் தெரியும், பெரிய இடத்துல இதெல்லாம் சாதாரணம் அதனாலதான் நாங்க அழைச்சுட்டு வந்துட்டோம்.

உங்ககிட்ட நடந்த தவறுக்கு மன்னிப்பு கேட்டுக்குறோம். இப்போவே நீங்க அந்த பொண்ணை அழைச்சுட்டு போங்க".

"நீங்க போட்டோ எல்லாம் எடுத்ததா சொன்னாங்க எந்த பத்திரிகை அது நாளைக்கு அந்த போட்டோஎல்லாம் வெளியவந்தால் உங்களோட மன்னிப்பு சரி செய்யுமா".

"நாங்க அது வெளிவராமல் பார்த்துக்குறோம் அதுமட்டும் இல்லை போட்டோ நெகட்டிவ் எல்லாம் நாளைக்கு உங்க வீட்டில் இருக்கும்".

"என் வீட்டுக்கு கொடுத்து அனுப்ப வேண்டாம் இதோ இந்த பையன் நாளைக்கு வருவான் அவன்கிட்ட கொடுத்து அனுப்புங்க", சுஷினை கை காட்டினார்.

வேறுஎதுவும் பேச இல்லை என்பதுபோல் அவரைவிட்டு சுபாவிடம் சென்றார். வாடிய மலரைப் போல் அங்கிருந்த பெஞ்ச் சில் தனக்கு நடந்த கொடுமையை ஜீரணிக்க இயலாதவளாக படுத்திருந்தாள்.

அன்னம் அருகில் செல்லவும் எழுந்து அமர்ந்தாள். அவளது உதட்டுக் காயம் கன்னத்தில் விரல்களின் அடையாளம், கைகளில் வீக்கம் அனைத்தையுமே ஒருநிமிடத்தில் படம் பிடித்தது அவரது கண்கள்.

நடந்தது என்னவென்று அவருக்கு புரிந்தது. சுபாவின் தலையை ஆதரவாக வருடினார்,"என்னை மன்னிச்சுடும்மா, என் பையன் செய்தது மன்னிக்க முடியாத குற்றம் இதை நானே சரி செய்யிறேன்.

இப்போவே உன்னை என்கூட அழைச்சுட்டு போய்டுவேன் ஆனால் அது தப்பா போய்டும். உனக்கு கௌரவமாகவும் இருக்காது. என்னை உன் அம்மாவா நினைச்சுக்கோ இன்றையிலிருந்து நீ என் பொண்ணு எதுக்கும் கவலை படாதே.

நாளைக்கே உன்வீட்டில் வந்து பேசுறேன். என்னை காணோமுன்னு தேட முன்னாடி நான் அங்கே போகணும்.

வாரேன்ம்மா", நெற்றியில் இதமாக முத்தமிட்டுச் சென்றார்.

அவரை பின்தொடர்ந்து சுஷினும் சென்றான்,"அம்மா நீங்க செஞ்சது மிகப் பெரிய உதவி இதை என்னால மறக்கவே முடியாது. இனிமேல் நான் பார்த்துக்கொள்கிறேன்ம்மா ",

அவரிடம் தைரியமாக பேசிவிட்டாலும் சுபாவின் வீட்டினரை எப்படி சம்மாளிப்பது என்ற கவலை அவனை அரித்துக் கொண்டிருந்ததால் குரலில் அவ்வளவு திடமில்லை.

இதை அன்னமும் கவனித்தார்,"சுஷின் நான் உள்ளேசொன்னது எதிலுமே எந்த மாற்றமும் இல்லை. சுபாதான் என்வீட்டு மருமகள்.

ப்ரவீன் அவள்மேல உள்ள ஆசையில்தான் இப்படியெல்லாம் செஞ்சு இருக்கான் மற்றபடி அவன் ரொம்ப நல்லவன். என் வீட்டுக்கு வந்துட்டா அவ என்னோட மகள் சோ ப்ரவீனால அவளுக்கு எந்தவிதமான கஷ்ட்டமும் வராமல் நான் பார்த்துக்கொள்வேன்.

உனக்கு என்மேல நம்பிக்கை இருந்தால் சுபாவை பற்றிய கவலையை என்னிடம் விடு".

"கொஞ்சநேரம் முன்னாடிவரைக்கும் நம்பிக்கை இல்லை ஆனா இப்போ நீங்க பேசினதுக்குப் பிறகு நம்பிக்கை வந்துடுச்சு. ஆனாலும் சுபாவோட அப்பாவை நினைச்சாதான்...........

சுபாவை இப்போ அவளோட வீட்டுக்கு கூட்டிட்டு போனா இவளை வெட்டி போட்டாலும் போட்டுடுவார். அனுப்பாமல் இருந்தால் அதைவிட பெரிய தப்பா போய்டும் அதைநினைச்சுதான்..........."

"ஒண்ணு செய் ஒரு ரெண்டு நாள் அவளை உன் வீட்டில்......... இல்லை அது சரி வராது எங்க பங்களா ஒண்ணு பக்கத்துல இருக்கு அங்கே சுபாவை தங்க வை இன்னைக்கு நைட் மட்டும் அவகூட இரு.

நாளைக்கு நானே அவளை பார்த்துக்க ஏற்பாடு செய்யிறேன். எந்த பிரச்சனையும் வராமல் சுபாவோட கல்யாணத்தை நான் நடத்துறேன் சரியா".

அவனிடம் மற்ற விவரங்கள், போன் நம்பர் அட்ரெஸ் அனைத்தையும் கொடுத்துவிட்டு ஹோட்டலுக்குச் சென்றார்.

சுஷின் இன்னும் தெளியாதவனாக டாக்டர், வக்கீலின் ஞாபகம் வந்து அவர்களை தேடும்போதே இருவரும் வந்தனர்.

நடந்தசம்பவம் யாருக்குமே தெரியக் கூடாது எனக் கேட்டுக் கொண்டு அவர்களை அனுப்பி வைத்தான் . அவர்களும் சரிஎன்று சொல்லிவிட்டு சென்றனர்.

டாக்டர் மட்டும் போவதக்கு முன்னாள் அவளை கொஞ்சநாட்கள் தனியாக விடவேண்டாம் என்று கேட்டுக் கொண்டு சென்றார்.

சுஷின் ஸ்டேஷன் உள்ளே சென்று அனைவரையும் ஒரு பார்வை பார்த்துவிட்டு சுபாவை அழைத்துக் கொண்டு வெளியே வந்தான்.

இதுவரை அடக்கிவைத்ததே போதும் என்பதுபோல் அழத் துவங்கினாள் சுபா, அவளது கண்ணீர் வற்றாத ஜீவனதிபோல் ஆறாக பெருக்கெடுத்தது, கேவலுடனே அவனது தோளில் சாய்ந்து கொண்டாள்.

கேவலுக்கு இடையில் சுஷினின் முகத்தைப் பார்த்துக் கேட்டாள்,"அண்ணா நீ என்னை நம்புறியாண்ணா............",

அவள் கேட்டது ஒரே கேள்வி அவனை உலுக்கியது எவ்வளவு காயப் பட்டிருந்தால், குழம்பிப் போயிருந்தால் இப்படி கேட்பாள்.

ப்ரவீன் சொன்னதிலேயே முழு விவரமும் தெரிந்ததால் சுபாவின் மேல் எந்த தப்புமே இல்லை என்பது தெரிந்தது.

ஆனாலும் தன் குரலைக் கேட்டு இப்படி ஆபத்தில் சிக்கிக் கொண்ட அவளதுமேல் இருந்த சிறு வருத்தம் கூட அவள் இவ்வாறு கேட்டதும் அடியோடு அகன்றது.

அவன் பதில் சொல்ல எடுத்த அந்த இடைவெளி சுபாவை மேலும் வருத்தியது. தன் அண்ணன் கூட தன்னை நம்பவில்லையே என்று துடித்துப் போனாள்.

"நீ கூட என்னை நம்பலியாண்ணா......... இனி நான் எதுக்கு உயிரோட இருக்கணும் என்னை விடுண்ணா நான் செத்துப் போய்டுறேன்",

அவனை விட்டு விலகி ஓடப் போனவளை இழுத்து அணைத்தான். இதைத்தான் மினி அங்கிருந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

"சுபா உன்னை நான் சந்தேகப் பட்டா ஷிஜியையே சந்தேகப் பட்டது மாதிரிம்மா. நான் பேசாமல் இருந்ததுக்கு காரணம் உன்மனசு எதையெல்லாம் நினைத்து குழம்பிப் போய் யிருக்குன்னுதாம்மா நீ நினைப்பது மாதிரி சந்தேகப் பட்டு இல்லை".

அவளிடம் இன்னும் பேசி சமாதானப் படுத்த ஆசைதான் ஆனால் இருக்கும் சூழல் கண்டு அவளை அழைத்துக் கொண்டு சென்றான்.

செல்லும் முன்பு அவள் குளிரிலோ அல்லது பயத்திலோ நடுங்குவது கண்டு தனது சட்டையை கழற்றி அவளுக்கு போர்த்திவிட்டு காரில் ஏறி விரைந்தான்.

மினி அனைத்தையும் பார்த்துக் கொண்டே இருந்தாள்.

வெளியே சென்ற மினியை இவ்வளவு நேரமாகியும் காணவில்லையே என்று ஷிஜி அவளைத் தேடி வந்தாள்.

வந்தவளை வரவேற்றது மினியின் அழுகுரல் குரல்வந்த திசையிலே வேகமாக சென்று பார்த்தாள் மினி ரோட்டிலே மடிந்து அமர்ந்து அழுது கொண்டிருந்தாள்.

அங்கே அனைவரின் முன்னால் அழமுடியாமல் இங்கே தனிமையில் அழுவதாக நினைத்தாள் ஷிஜி . அவள் அழுத கோலம் தனக்கு யாருமே இல்லையே என்ற களிவிரக்கத்தால் வந்தது என நினைத்து அவளிடம் சென்று, அவளது அருகில் தானும் மண்டியிட்டு அமர்ந்து அவளை கட்டிக் கொண்டாள்.

"மினி இங்கே பாரு உனக்கு நாங்க எல்லோரும் இருக்கும்போது இங்கவந்து தனியா அழுதுட்டு இருக்குறியே உனக்கே நல்லா இருக்கா அப்போ நாங்க யாருமே உன் கண்ணுக்கு தெரியலையா.

முதல்ல நீ உள்ளேவா. மற்றதை எல்லாம் பிறகு பார்க்கலாம்.

மினியை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றாள் ஷிஜி. மினி கொஞ்ச நேரத்துக்குமுன்னால் இருந்ததைவிட ஓய்ந்ததுபோல் தோன்றியது சுலோவிற்கு.

"என்ன ஷிஜி மினி ரொம்ப சோர்ந்துபோய் தெரியிறா, நீங்க ரெண்டு பேரும் வீட்டுக்குபோய் ரெஸ்ட் எடுங்க நாளைக்கு காலையில் வந்தால் போதும். ஷிஜி மினியை நம்ம வீட்டுக்கு கூட்டிட்டு போ".

"இல்லை ஆன்ட்டி அம்மா கண்ணு முழிச்சு பார்க்காமல் நான் எங்கேயும் போக மாட்டேன். எனக்கு எங்க அம்மா வேணும்", பிடிவாதம் பிடிக்கும் குழந்தையாக நின்றாள் மினி.

இதற்குமேல் வற்புறுத்தினால் எங்கே திரும்பவும் அழுது விடுவாளோ என்று தோன்ற, ஷிஜி அம்மாவிடம்"நீங்க வீட்டுக்குபோய் ரெஸ்ட் எடுத்துட்டு வாங்கம்மா நானும் மினியும் இங்கேயே இருக்கிறோம்".

"உங்க ரெண்டு பேரையும் இங்கே விட்டுட்டு நான் அங்க நிம்மதியா இருக்க முடியாது அதனாலே இங்கேயே ஒரு ரூம் உங்க அப்பாவை போட சொல்லி இருக்கேன் அங்கேயே தங்கிக்கலாம்".

பிரச்சனையை சுலோ முடித்துவிட மினியையும் அழைத்துக் கொண்டு அறைக்குச் சென்றனர். மாமி அப்பொழுதே விடைபெற்றுச் சென்றிருந்தார் .

படுக்கையில் விழுந்தபின்பு மினிக்கு சுஷினின் செய்கையே நிழலாடியது கண்களில். ஷிஜியும் நிறையநேரம் வற்ப்புறுத்தி கேட்டுப் பார்த்தாள். எதுக்கு இப்படி அழுதுகொண்டே இருக்கிறாய் அம்மாவின் உடல்நிலையை மட்டும் நினைத்து நீ அழுவதுபோல் தொன்றவில்லைஎன்று.

ஆனாலும் அவளிடம் சுஷினின் செய்கையை சொல்ல மனம் வரவில்லை , இது அவளுக்கும் அவனுக்கும் மட்டுமே உள்ள அந்தரங்கம் என்றே அவள் எண்ணினாள்.

அவள் ஏன் இப்படி எண்ணுகிறாள் என்பதை இப்பொழுதாவது சிந்தித்திருந்தால் சுஷினின் மேல் அவள் தீராத காதல் கொண்டுள்ளாள் என்பதை அவள் உணர்ந்திருப்பாள்.

உணராமல் போனது மினியின் துரதிஷ்டமா அல்லது சுஷினின் கேட்ட நேரமா........... விடைதான் தெரியவில்லை...........

## 29

என் பனிக்கால இரவுகள் உன் போர்வைக்குள்ளும்

என் வெயில்கால வியர்வைகள் உனக்குள்ளும்

கலந்துவிடத் துடிக்கும் என் தேடல்

இது காதலென்றால்.............

இ சுபாவை அழைத்துக் கொண்டு அன்னம் சொன்னவிலாசத்திற்கு வந்து சேர்ந்தான். அங்குள்ள செக்யூரிட்டிக்கு ஏற்கனவே அன்னம் போன்

செய்து இருந்ததால் அவர்களை எந்தகேள்வியும் கேட்காமல் உள்ளே அனுமதித்தான்.

அங்கிருந்த சமையல் கார அம்மாள் அவர்களுக்கு அறைகளை காட்டினாள். ஒரு அறையில் சுபாவை விட்டுவிட்டு அந்த அம்மாவுடன் வெளியே வந்தான்.

"ஐயா ஏதாவது சாப்பிடுறீங்களா எடுத்துட்டு வரவா", இதுவரை நடந்த சம்பவங்களில் களைத்துத்தான் போனான் சுஷின்.

சுபாவை திரும்பிப் பார்த்தான் சூனியத்தை வெறித்துப் பார்த்தபடி நின்றிந்தாள். அவள் எப்பொழுது சாப்பிட்டாளோ தெரியவில்லை. அவரிடம் பிரட்-ம் பாலும் கொண்டுவரச் சொல்லிவிட்டு சுபாவை நோக்கிச் சென்றான்.

"சுபா ஏன் இப்படியே நிக்கிற உக்காரு", கட்டிலில் அவளை அமரவைத்தான். சுபா எதையும் யோசிக்கக் கூட மறந்தவளாய் அசையாமல் இருந்தாள்.

வேலைக்கார அம்மாள் கொண்டுவந்த பிரட் டையும் பாலையும் சுபாவிற்குக் கொடுத்தான். மறுக்கும் எண்ணம் கூட தோன்றாமல் கடனே என்று சாப்பிட்டாள்.

அவள் சாப்பிட்டு முடித்ததும் படுக்கச் சொல்லிவிட்டு அவளது ரூமிற்கு வெளியே ஒரு ஸோபாவை இழுத்துப் போட்டு அதில் படுத்தபடியே சுபாவையே பார்த்துக் கொண்டிருந்தான்.

சுபா எதையுமே யோசிக்கும் துணிவே இல்லாமல் மூளை மரத்துப் போன உணர்வுடன் டாக்டர் தந்த மருந்தின் காரணமோ இல்லை இதுவரை நடந்த சம்பவங்களால் அடைந்த களைப்போ எதனாலோ கண்ணையர்ந்தாள்.

அவள் தூங்கிவிட்டது சீராக ஏறி இறங்கிய அவளது மூச்சுக் காற்றில் சுஷினுக்கு தெரிந்தது.

அவள் உறங்கியதற்குப் பின்புதான் சுஷினிற்கு அம்மா அப்பாவின் ஞாபகம் வந்தது, ஞாபகம் வந்தவுடன் அவனது செல்போனை எடுத்துப் பார்த்தான்.

கிட்டத்தட்ட 100 மிஸ் கால்கள் இத்தனை அழைப்புகளைப் பார்த்தவுடனே ஏதோ ஒன்று சரியில்லை என அவனுக்கு தோன்றியது.

அழைப்புகள் யாரிடமிருந்து வந்திருக்கின்றன எனப் பார்த்தவன், மினியின் அழைப்பும், ஷிஜியின் அழைப்பும் நிறைய இருப்பதைப் பார்த்தான்.

அவனது அப்பாவும் அழைத்திருக்கிறார் கொஞ்சம் குறைந்திருந்த பரபரப்பு தொற்றிக் கொள்ள மினியின் செல்லிற்கு அழைத்தான் அது சுச் ஆப் என்று வரவும் ஷிஜியின் செல்லிற்கு அழைத்தான்.

பின்பு அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டு அவனது அப்பாவிற்கு அழைத்தான் , அழைத்துக் கொண்டே நேரத்தைப் பார்த்தவன் நேரம் நள்ளிரவை தாண்டி சென்றதை அப்பொழுதுதான் அறிந்தான்.

இந்தநேரம் தந்தையை எழுப்புவது சரியாக தோன்றவில்லை எனவே மீண்டும் ஷிஜிக்கே அழைத்தான்.

முதலில் வந்த மிஸ் காலை ஷிஜி அறியவில்லை ஆனால் தூங்காமல் படுத்திருந்த மினிக்கு அந்த அழைப்பு கேட்டது.

சிறிது நேரம் கழித்து மீண்டும் அவளது போன் ஒலிக்க அவளது தூக்கம் கெடுவதற்கு முன்னாள் எடுத்துவிடலாம் என எண்ணும்போதே ஷிஜி எடுத்துவிட்டாள் எடுத்தவுடனே பொரியவும் துவங்கினாள்.

"அண்ணா எங்க இருக்க உனக்கு எவ்வளவு நேரம்தான் கால் பண்ணுறது. போன் பண்ணுனா நாட் ரீச்சபிள் -ன்னு வருது. அப்படி எங்கதான் இன்னிக்கின்னு ஊர் சுத்துறியோ".

"ஷிஜி என்னைபத்தி உனக்கே தெரியும் நான் இங்க ஒரு இக்கட்டான சூழ்நிலையில் சிக்கிக்கிட்டு இருக்கேன், நீ முதல்ல எதுக்கு தேடுனன்னு சொல்லு யாருக்காவது உடம்பு சரியில்லையா முதல்ல அதை சொல்லுடி".

அவனது குரலில் இருந்த தவிப்பு அவளை மேலும் விவாதம் செய்யாமல் தடுத்தது.

"மினியோட அம்மாவை ஜெயா ஹோஸ்பிடலில் சேர்த்துருக்கோம் அவங்களுக்கு........... ", மினியை திரும்பிப் பார்த்தாள் அவள் தூங்கிக் கொண்டிருப்பதை பார்த்து (மினிதான் ஷிஜி அண்ணா என்று சொன்னதுமே காதை தீட்டி வைத்துவிட்டு கண்களை இறுக மூடிக் கொண்டாளே).

"மைல்ட் ஹார்ட் அட்டாக் , நீ அவளை வீட்டில் விட்டுட்டுப்போன கொஞ்ச நேரத்துல ஹோச்பிடல் கொண்டுவந்துட்டோம். பயப்படுறமாதிரி எதுவும் இல்லை ஆனால் மினிதான் உன்னை ரொம்ப தேடுனா.

உன்னை காணாமல் அவள் தவிச்சது , என்னால சொல்ல முடியலடா ஒரே அழுகை இப்போதான் கொஞ்சம் தூங்குறா. எங்கிருந்தாலும் நீ உடனே வா. உன்னை பார்த்தாலே மினிக்கு பாதி பலம் வந்துடும்".

ஷிஜி சொன்ன ஜெயா ஹோச்பிடல் என்ற பெயரைக் கேட்டதுமே சுஷினுக்குள் ஒரு சிறு நடுக்கம் ஓடியது. அதே ஹோச்பிடலின் பக்கவாட்டு கேட் க்கு கொஞ்சம் தள்ளிதான் சுபா இருந்த ஸ்டேஷன் இருந்தது.

யாராவது என்னைப் பார்த்திருந்தால், என்னைவிட சுபாவை பார்த்திருந்தால் என்ன சொல்லி சம்மாளித்திருக்க முடியும்.

சுபா சொல்லுவதை எத்தனை பேர் நம்புவார்கள். அதைவிட பெரியப்பாவின் வீட்டிலுள்ள யாருடனாவது பேசுவது தெரிந்தாலே அம்மா கொன்றே போட்டு விடுவார்களே.

அந்த அளவு பெரியப்பா இவர்களுக்கு துரோகம் செய்திருந்தார். அதை அம்மாவால் மட்டுமல்ல அப்பாவாலுமே மறக்க முடியவில்லை.

அவனது சிந்தனையிலேயே மூழ்கி இருந்தவனை கலைத்தது ஷிஜியின் குரல் ,"அண்ணாஆஆஆ.......... நான் சொல்லிகிட்டே இருக்கேன் நீ இப்போ உடனே கிளம்பி வா ".

சுஷினின் பதிலைக் கேட்க ஷிஜியை விட மினி ஆவலாக இருந்தாள் , அவன் உடனே வந்துவிடமாட்டானா என்ற ஆவல் இன்னும் மேலோங்கியது ஆனால் அவனது பதிலைக் கேட்டதும் அவனதுமேலே வெறுப்பு இன்னும் அதிகரித்தது.

"ஷிஜி இப்போ உடனே வரமுடியாத சூழ்நிலையில் நான் இருக்கிறேன். கொஞ்சநேரத்துக்கு முன்னாடிதான் அந்த ஏரியா விற்கு ஒரு பிரச்சனை காரணமா வந்தேன் . அதுமட்டும் இல்லை அந்த பிரச்சனை முடியாமல் வேற எங்கயும் வரமுடியாது.

அதுவும் இப்போ........... நான் நாளைக்கு காலையில் கண்டிப்பா வாரேன். மினிகிட்ட இப்போ நான் பேசவா".

"அண்ணா மினிக்குதான் இப்போ உன்னோட ஆதரவுதேவை இந்தநேரத்துல வராம............ சரி நீயும் காரணம் இல்லாமல் எதுவும் செய்யமாட்ட நான் மினிகிட்ட நீ போன் பண்ணுனதா சொல்லுறேன்.

அவளே இப்போதான் தூங்குறா நீ நாளைக்கு சீக்கிரமே வந்துடு சரியா".

"கண்டிப்பா நாளைக்கு வந்துடுவேண்டா நீ மினியை பார்த்துக்கோ" , வார்த்தைகள் தந்தியடிக்க மினியிடம் செல்ல முடியாத தனது துரதிஷ்டத்தை நினைத்து நொந்துகொண்டே படுத்திருந்தான்.

'ஆண்டவா என்னோட வாழ்க்கையில் இந்த மாதிரி இன்னொருநாள் வரவே கூடாது. எவ்வளவு சந்தோஷமா

ஆரம்பித்த நாள் எவ்வளவு வேதனையும் , சோதனையுமாக முடியுதே.

சோதனைகள் முடிஞ்சுதான்னும் தெரியலையே. மினி என்னை எவ்வளவு தேடியிருந்தா, இவ்வளவு கால் செய்திருப்பா. அவளோட கஷ்டத்துல அவகூட இருக்கமுடியலையே'.

அவளிடமும் போகமுடியாமல், சுபாவையும் தனியே விடமுடியாமல். என்ன கொடுமையடா இது , உறக்கம் இப்பொழுது தூரமாகிப் போனது.

மினிக்கு சுஷின் பேசியதை கேட்டதுமுதல், இடையில் அது அவனாக இருக்காதோ என்று தனது மனம் ஒரு ஓரத்தில் கொண்டிருந்த எதிர்பார்ப்பு பொய்த்துப் போனதில் இன்னும் அதிகமாக சோர்ந்தாள்.

இந்த இரவு விடியவே விடியாதோ என்று எண்ணிக்கொண்டே விடியலை எதிர்நோக்கியது அந்த ஜீவன்கள்.

விடியலும் யாருக்கும் காத்திருக்காமல் விடிந்தது. ஆனால் மூன்று ஜீவன்களின் மனம் இருட்டிலே தத்தளித்தது.

காலையில் எழுந்ததும் சுபாவிடம் வந்தான் சுஷின். படுக்கையில் இருந்து எழுந்து எந்தவேலையும் செய்யாமல் அமர்ந்திருந்தாள். சுற்றிலும் பார்த்தாள் தான் எங்கே இருக்கிறோம் என்பது அவளுக்கு புரியவில்லை.

சுஷினை கேள்வியாகப் பார்த்தாள். சுஷின் அவளை மேலும் சிந்திக்க விடாமல் போய் குளித்துவரச் சொன்னான்.

அவள் குளித்து வந்ததும் சாப்பாட்டை கட்டாயப் படுத்தி சாப்பிடச் செய்தான் . தானும் சாப்பிட்டு முடித்து அவளை அருகில் அமரச் சொன்னான்.

அவள் அமர்ந்ததும் மென் குரலில்,"சுபா இந்த அண்ணன் உனக்கு நல்லதுதான் செய்வேன் என்ற நம்பிக்கை இருக்காம்மா".

இந்த கேள்வி இப்பொழுது அவசியமா என்பதுபோல் பார்த்துவிட்டு,"இந்த உலகத்துலையே நான் நம்புவது உன்னை மட்டும் தான் அண்ணா".

அவளது குரலில் ஒலித்த நம்பிக்கையில் சுஷின் சொன்னான்,"உனக்கும் ப்ரவீனுக்கும் கல்யாணம் செஞ்சுவைக்கலாம்னு நான் நினைக்கிறேன்ம்மா. உன்னை அவன் ரொம்ப விரும்புறான் உன்னை நல்லா பார்த்துப்பான்குற நம்பிக்கை எனக்கு இருக்கு. நீ என்னம்மா சொல்லுற".

அவளது இதழ்களில் விரக்திப் புன்னகை அரும்பியது அந்த எண்ணத்துடனேயே சொன்னாள், "என்னை விரும்புறானா இல்ல என் உடம்பையாண்ணா. என்னை அடைய முடியலைன்னு இப்போ கல்யாணம் என்ற போர்வையில் அதை செய்யப் போறானா.

அதுக்கு நீங்க கூட்டு சேரப் போறிங்களா. எனக்கு அவனைப் பார்த்தாலே பயம்தான் வருது சொன்னாலும் உங்களுக்கு புரியாது. அவனோட குறி என்னோட உடம்புதான் இதை அடைய அவன் என்ன வேண்ணாலும் சொல்லுவான் செய்வான்".

"சுபா அவன் அப்படிப் பட்டவனா இருந்தால் நானே அவனை கொன்னுட்டு ஜெயில் க்கு போயிருப்பேனே . எங்க நீ கிடைக்காமல் போய்டுவியோங்குற தவிப்புலதான்".

"நீ சொல்லுறதுல இருக்க உள்ளர்த்தம் உனக்கே புரியுதா இல்லையா . நானும் அதேதான் சொல்லுறேன் என்னை அடைய அவன் எதை வேணுமென்றாலும் செய்வான் இப்போ கல்யாணம்.

என்னால ஒத்துக்கவே முடியாதுண்ணா அவனை கல்யாணம் செய்வதைவிட உன்னோட கையாலேயே

என்னை கொன்னுடேன் நான் சந்தோசமா செத்துப் போவேன்".

இவர்கள் பேசியது அனைத்தையுமே ப்ரவீன் வெளியே இருந்து கேட்டுக் கொண்டிருந்தான். இவ்வளவு நாள் சுபா தனது அப்பாவிற்கு பயந்துதான் தன்னை மறுக்கிறான் என்று எண்ணிக் கொண்டிருந்தவன்.

இன்று அவளது வாயாலேயே தன்னை பிடிக்கவில்லை என்றும், தன்னை கல்யாணம் செய்வதை விட செத்துப் போவது நலமென்று சொன்னதும் துடித்துப் போனான்.

அதைவிட அவளது உடம்பின்மேலேதான் அவன் ஆசைப் படுவதாக சொன்னதை கொஞ்சம்கூட ஜீரணிக்கவே முடியவில்லை அவனால்.

காலையில் தாய் இருவருக்கும் திருமணம் என்று சொன்னதும் அவளை காண ஆவலாக வந்தால், அவளது வார்த்தைகள் ஒவ்வொன்றும் ஈட்டி போல் அவனை தாக்கியது.

வந்தசுவடு தெரியாமல் அங்கிருந்து நகர்ந்தான். மனம் பாராங்கல்லாக கனத்தது. அம்மாவிடம் இந்த திருமணத்தை நிறுத்தவும் சொல்ல முடியாது.

சுபாவிற்கு தன்னை பிடிக்கவே பிடிக்காது என்று தெரிந்திருந்தால் இப்படிஒரு முட்டாள்தனத்தை செய்தே இருக்கமாட்டேன்.

ப்ரவீன் சென்ற சிறிது நேரம் களித்து சுஷின் தான் ஹொச்பிடலுக்கு சென்று வருவதாக சொல்லிவிட்டு கிளம்பும் நேரம் அன்னம் வந்தார்.

வந்தவர் உடனடியாக சுபாவின் வீட்டிற்குச் சென்று பேசவேண்டும் என்று சொன்னதும் என்னசொல்லுவது என்றே தெரியவில்லை சுஷினிற்கு.

சுபாவோ முடியாது என்பதாக தலையை அசைத்தாள். அவர்களின் மனநிலை புரிந்தாலும் புரியாதவர் போல, "சுஷின் நீ சுபாவை கூட்டிட்டு முதல்ல அவளோட வீட்டுக்குப் போ நான் பின்னாலேயே பத்து நிமிடத்தில் வந்துவிடுவேன்".

அவர்கள் மறுத்துப் பேச வழி இல்லாமல் அவர்களை அனுப்பியே விட்டார். அப்பா என்னவெல்லாம் சொல்லுவாரோ என்ற தவிப்பிலேயே எதுவும் பேசாமல் நெஞ்சம் அடைக்க அமைதியாக இருந்தாள் சுபா.

சுஷினோ தன்னை அவளுடன் பார்த்தால் பெரியப்பா என்னவெல்லாம் சொல்லுவாரோவென்று அவரவர் சிந்தனையிலேயே உழன்றனர் இருவரும்.

## 30

எவ்வளவுதான் நிதானமாக ஓட்டினாலும் சுபாவின் வீடு வந்தே விட்டது. சுபாவின் முகத்தில் தெரிந்த பீதி சுஷினை தாக்கியது. அவளை பார்த்து "நீ தைரியமா போம்மா நான் பின்னாடியே வாறேன்".

அவள் உள்ளே சென்றதும் ,"ஓடிப் போன உன் பொண்ணு வந்துட்டா பாரு. முழுசா வந்துருக்காளா இல்ல கூட்டிட்டு போனவன் ஆசையை தீத்ததும் விரட்டிட்டானான்னு கேளு".

இவரது சத்தம் கேட்டு அழுது வீங்கிய கண்களுமாய் சுபாவின் தாய் வெளியே வந்தார். "அவளை வெளிய நிக்கவச்சே ஏன் பேசுறிங்க. உள்ளே வரச் சொல்லுங்க".

ஓடுகாலிகளுக்கு எல்லாம் இந்த வீட்டில் இடமில்லை . போடி வெளியே", கர்ஜித்துக் கொண்டு அண்ணன் மார் வந்தனர்.

அவளை அடிக்கப் போன அந்த நொடி சுஷின் இடையில் புகுந்தான். "அவமேல ஒரு அடி விழுந்துது உங்களை எல்லாம் சும்மா விடமாட்டேன்".

"ஓஹோ நீதானே எப்போதும் இந்த ஒடுகாலிக்கு சப்போட் பண்ணுவ , பதினைந்து வயசுலேயே ஓடிப்போக பார்த்தவ , இப்போ வயசுஆனதும் சும்மா இருப்பாளா. அப்படி என்னடி அரிப்பு", நெருப்புத் துண்டங்களாக வார்த்தைகளை வீசினார் சுபாவின் தந்தை.

சுபா தன் காதுகளை பொத்திக் கொண்டு அவரது காலில் விழுந்து கதறினாள். "நான் எந்த தப்புமே செய்யலைப்பா என்னை நம்புங்க, அம்மா நீங்களாவது நான் சொல்லுவதை நம்புங்கம்மா".

"நான் உன்னை நம்புறேண்டா செல்லம் , என் பொண்ணு தப்பான வழிக்கு போகமாட்டான்னு எனக்கு தெரியும்", அவளை தூக்கி அணைத்துக் கொண்டார் அவளது தாய் பவானி.

"என்னடி அந்த ஓடுகாலி கதை விடுறா நீயும் நம்புற", அவரை எதிர்த்துப் பேச வழி இல்லாமல் பவானி நிற்க சுஷின் பேசினான்.

"பெரியப்பா என்ன சொன்னிங்க முதல்ல ஓடுகாலி, கெட்டுப் போய் வந்துருக்கா என்னவெல்லாம் சொன்னிங்க உங்களுக்கு மனசாட்ச்சின்னு ஒண்ணு இருந்தா அதை கேட்டுப் பாருங்க அது சொல்லும்.

என்னைக்காவது சுபாகிட்ட மனசுவிட்டு பேசி இருக்கிங்களா இந்த வீட்டில் உள்ளவங்க . பதினைந்து வயசுல ஓடிபோனான்னு சொன்னிங்களே அதுக்கு காரணம் யாரு நீங்கதான்.

முதல் காரணம் தம்பி சொத்தையும் சேர்த்து அனுபவிக்கணும்னு அவரையே கொல்லப் பார்த்தது நீங்க, அது தெரிஞ்சு உங்களை குடும்பமே விலக்கி வச்சாங்க , அப்போ கூட உங்கபங்கை சரியா பிரிச்சு குடுத்தாங்களா இல்லையா.

அந்த பிரச்சனை நடந்தப்போ பொறந்தாங்குற ஒரே காரணத்துக்காக எல்லோருமே சேர்ந்து அவளை

வெறுத்தீங்க.

உங்ககிட்ட கிடைக்காத பாசம் வெளிய கிடைச்சப்போ அவ தடுமாறிட்டா, சரியான நேரம் நான் பார்த்து கூட்டிட்டு வந்து உங்ககிட்ட சொன்னா அதுக்கு பிறகு கூட நீங்க திருந்தலை ஆனா பெரியம்மா திருந்துனாங்க.

அம்மா பாசம் அவளை மாத்தும்னு நான் நினைச்சது நடத்துது. ஆனா நீங்க உங்க தப்பை மறைக்க அவளை வெறுத்தீங்க.

உங்க பசங்களையாவது தங்கச்சின்னு பாசமா பழக விட்டிங்களா அவங்க மனசுலையும் விஷத்தை விதச்சிங்க . அதனால அவளுக்கு அண்ணன்கள் அரவணைப்புகூட கிடைக்காமல் போச்சு.

அதெப்படி அப்பா அம்மா மதிச்சாதானே பசங்க மதிப்பாங்க".

இந்த இடத்தில் நிறுத்தி சுபாவின் அண்ணன்களிடம் கேட்டான்,"உங்களுக்கு சின்னப் பிள்ளையா இருக்கும்போதுதான் விவரம் இல்லை இப்போகூட இல்லையா.

சுய புத்தின்னு ஒண்ணு இருக்கா இல்ல எல்லாத்தையும் உங்க அப்பாகிட்ட அடகு வச்சுட்டிங்களா . சே........ .

இப்போ சொல்லுறேன் கேளுங்க நேத்து சுபாவுக்கு ஒரு சின்ன அக்சிடேன்ட் நான் தான் பார்த்து ஹோச்பிடல்ல சேர்த்து ட்ரீட்மென்ட் குடுத்து கூட்டிட்டு வாறேன். வேற ஏதாவது தெரியணுமா".

இவன் பேசி முடிக்கவும் சைரன் ஒலியுடன் கார்கள் வந்து நிற்கவும் சரியாக இருந்தது. சுஷின் பவானியிடம் சுபாவை உள்ளே அழைத்துக் கொண்டு செல்லுமாறு சொன்னான்.

உள்ளே வந்தவர்களைப் பார்த்ததும் அனைவரும் மயக்கம் போடாத குறையாக உறைந்து நின்றனர். வந்தவர்களை

சுஷின் வரவேற்று அமரச் சொன்னான்.

அவர்கள் அமர்ந்ததும் சுபாவின் அப்பா, அண்ணன்களை உள்ளே அழைத்துச் சென்று ,"இங்க பாருங்க எல்லோரும் சுபாவை பொண்ணு கேட்டுதான் வந்து இருக்காங்கன்னு நினைக்கிறேன்.

பெரியப்பா ஏதாவது சொல்லி அவங்களை விரட்டுவதா இருந்தாலும் சரி, நல்ல முடிவா எடுத்தாலும் சரி நான் கிளம்புறேன்".

பவானி வேகமாக சொன்னார், சுஷின் நீ அவங்களோட பேசிகிட்டு இரு நாங்க வாரோம்.

"என்னங்க இதுவரை நான் உங்களை எதிர்த்து எதுவுமே சொன்னது இல்லை ஆனால் இப்போ சொல்லுறேன் இந்த கல்யாணம் நடக்கணும் , நீங்க இருந்தாலும் சரி இல்லை என்றாலும் சரி.

டேய் உங்களுக்கும்தாண்டா சொல்லுறேன் முடிஞ்சா நல்லவிதமா பேசுங்க இல்லன்னா ஒதிங்கிடுங்க என் பொண்ணோட வாழ்க்கையை எப்படி அமைச்சு குடுக்கணும்னு எனக்குத் தெரியும்".

அவரது இந்த அவதாரத்தை அவர்கள் யாருமே எதிர்பார்க்கவில்லை. ஏற்க்கனவே சுஷினின் பேச்சில் இளகி இருந்தவர்கள் பவானியின் பேச்சில் இன்னும் இளகினார்.

தங்கச்சியின் கல்யாணத்தை தாங்கள் முன்னின்று நடத்துவதாக வாக்கு கொடுத்தனர்.

சுபாவை அலங்காரம் செய்ய உள்ளேசென்றார் . சுபா காபி கொடுத்துச் சென்றதும் அன்னம் இவன்தான் என் மகன் ப்ரவீன் MBA முடிச்சுருக்கான்.

இவன்தான் உங்கபொண்ணை பார்த்துட்டு கட்டுனா உங்கபொண்ணைத்தான் கட்டுவேன்னு ஒரே பிடிவாதம்

அதனால்தான் உடனே பொண்ணு கேட்டு வந்துட்டோம்.

இன்னொரு விஷயம் இன்னும் இரண்டு நாளில் நல்ல முகூர்த்த நாள் இருக்கு அன்றைக்கே கல்யாணத்தை வைத்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறோம்.

அது ஏன்னா இவனோட ஜாதகப் படி இன்னும் இரண்டு நாள்ல கல்யாணம் வைக்கலைன்னா இன்னும் இரண்டு வருஷம் ஆகுமாம் அதனாலதான்.

கல்யாணத்தை சிம்பிளா கோயில்ல வெச்சுக்கலாம். பிறகு ரிசப்ஷன் பெருசா வச்சுக்கலாம் நீங்க என்ன சொல்லுறிங்க".

"பவானி சொன்னார் நகை புடவை எல்லாமே வாங்கணும் இவ்வளவு சீக்கிரம்".

நீங்க எதுவுமே செய்யவேண்டாம் எல்லாமே நாங்க பார்த்துக்கறோம் சம்மதம்னு மட்டும் சொல்லுங்க. அவர்கள் தட்டை மாற்றிக் கொண்டனர்.

திருமணம் இன்னும் இரண்டு நாட்களில் வைப்பதாக முடிவுசெய்யப் பட்டது.

## 31

ஹோ ச்பிடலில்..................

"ஷிஜி சுஷின் எங்கதான் போனான் நேற்றைக்கே போனவன் இன்னைக்கு இவ்வளவு நேரமாகியும் ஆளையும் காணோம் போனையும் காணோம். உனக்கு தெரியாமல் இருக்காதே சொல்லு".

"அம்மா நேத்து நைட்டே அண்ணன் போன் செஞ்சான்ம்மா ஏதோ ஒரு பிரன்ட்க்கு பிரச்சனை அது தீராமல் வர முடியாது. ஆனால் கண்டிப்பா காலையில் வந்துடுறேன்னு சொன்னான். ஆனால் அவனை இன்னும் காணோம்".

இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே பிரச்சனையின் நாயகனும், நர்ஸ் ஸும் ஒரே நேரம் வந்தனர்.

எனவே சுஷினை விட்டு நர்சை பார்த்தனர். மீனாட்சி கண்விழித்துவிட்டதாக சொல்லவும் அனைவரும் ICU நோக்கிச் சென்றனர்.

மினி கலங்கிய கண்களுடனும், நடுங்கிய கைகளுடனும் மீனாட்சியை நெருங்கினாள். "அம்மா.........", அவளது கன்னத்தில் கண்ணீர் வழிந்தது.

மினி அழுவது பொறுக்காமல் சுஷின் அவளை நெருங்கி நின்றான் மீனாட்சியின் பார்வை இருவரையும் மாறி மாறி பார்த்தது.

"உங்க கல்யாணத்தை பாத்துட்டேன்னா நிம்மதியா கண்ணை மூடுவேன். எங்கே மினியை தனியா விட்டுட்டு போய்டுவனோன்னுதான் கவலையா இருக்கு".

"அத்தை எதுக்கு இப்படிஎல்லாம் பேசுறிங்க உங்களுக்கு ஒண்ணும் இல்லை. நாங்க எல்லோரும் இருக்கும்போது மினியை பார்த்துக்க மாட்டோமா.

இப்போ எதைப் பத்தியும் கவலை படாமல் இருங்க .கவலை பட்டா உடம்பு இன்னும் மோசமாகும். நீங்க என்னமோ கல்யாணத்தை மட்டும் பார்க்கணும்னு சொல்லுரீங்க.

பேரன் பேத்திஎல்லாம் பார்க்காமல் உங்களை போக விடுறதா இல்லை", அவனது பேச்சு அங்கிருந்த இறுக்கத்தை தளர்த்தி அனைவரின் முகத்திலும் புன்னகையை வருவித்தது.

இன்னும் நிறைய பேசி அவரையம், மினியையும் சிரிக்கவைத்து , அவர்களுக்கு நான் இருக்கிறேன் என்ற நம்பிக்கையை கொடுத்தான்.

மீனாட்சி சுலோவை பார்த்து,"அன்னைக்கு நீங்க ஒரு வருஷம் கழிச்சு கல்யாணம் வச்சுக்கலாம்னு சொன்னிங்க

அன்னைக்கு இருந்த சூழ்நிலைல நானும் சரின்னு சொன்னேன்.

ஆனால் இப்போ............".

"உங்களோட மனசு எதிர்பார்க்குறது புரியுது , நீங்க முதல்ல வீட்டுக்கு நல்லபடியா குணமாகி வாங்க. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கல்யாணத்தை முடிச்சுடலாம்".

சுலோவின் பேச்சில் இன்னும் தெளிந்தார் மீனாட்சி. "ரொம்ப சந்தோசம் சம்பந்தியம்மா".

அவர்களின் பேச்சு சுஷினுக்கு மிகுந்த சந்தோசத்தையும், மினிக்கு கவலையையும் கொடுத்தது.

யாரும் அறியாத வண்ணம் மினியின் கையை அழுத்தமாக பற்றினான். மினிக்கு அனைவரின் முன்னால் அவனை எதிர்க்கவும் முடியாமல், அவனை ஏற்றுக் கொள்ளவும் முடியாமல்.

அவனது அருகாமையை விரும்பும் மனதை அடக்கவும் வழி தெரியாமல் அசையாமல் இருந்தாள்.

மினியும் அவன்மேல் இருந்த கோபம் குறைவதைக் கண்டாள். அவளுக்கே அவள் மீது கோபம் வந்தது.

இந்த கல்யாணமே வேண்டாம் என்று அவள் தாயிடம் சொல்ல வந்தால் மீனாட்சியோ திருமணத்தை சீக்கிரம் வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தால் அவளுக்கு கோபம் வராதா.

இவர்களின் இந்த பாசப் போராட்டத்தின் நடுவிலே வந்தார் நர்ஸ், "என்னங்க இது இதென்ன சந்தையா இப்படி கும்பலா இருக்கீங்க.

நீங்க பேசுறது பேசென்ட் க்கு இடைஞ்சலா இருக்காதா. அவங்க அதிகமா பேசக் கூடாது அவங்களை ரெஸ்ட் எடுக்க விடுங்க நீங்க எல்லோரும் வெளியே இருங்க போங்க".

அனைவரும் வெளியே வந்தனர். ICU வில் யாரும் இருக்க முடியாததால் அனைவரையும் கூடிக் கொண்டு சுலோ வீட்டிற்க்குச் சென்றார்.

மினியையும் கட்டாயப் படுத்தி அழைத்துக் கொண்டே சென்றார். அவளது மறுப்பை கண்டுகொள்ளவே இல்லை சுலோ.

வீட்டிற்க்கு வந்ததும் மினி ஷிஜியுடனே இருப்பதாக சொல்லிவிட மறுத்துப் பேசாமல் அவளை விட்டுவிட்டார் சுலோ.

சுஷின் தன்னிடம் பேச விரும்புவதை அறிந்து தவிர்க்கவே அவள் அவ்வாறு செய்தாள். சுஷினுக்கோ ஏமாற்றமாக இருந்தது. அவனது பார்வை மினியை தொடர்வதை கண்ட ஷிஜி அவனைப் பார்த்து கண்ணடித்துவிட்டு சென்றாள்.

ஷிஜியின் இந்த செய்கையில் கோபம் வந்தாலும் அவள் எதையோ சொல்ல வந்திருப்பாளோ என்று தோன்ற, சிறிது நேரம் கழித்து ஷிஜியின் அறைக் கதவை தட்டிவிட்டு கதவை திறந்து உள்ளே சென்றான்.

அறையின் ஜன்னல் அருகில் மினி வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்று கொண்டிருந்தாள். ஷிஜியின் பாத் ரூமில் இருந்து தண்ணீர் விழும் சத்தம் வந்தது.

ஷிஜி குளிப்பதை அறிந்து தைரியமாக மினியை நெருங்கினான். அவளது பின்புறம் சென்று நின்று கொண்டு அவளது காதுக்கு அருகில்,"என்ன பாத்துட்டு இருக்க மினி சொன்னால் நானும் பார்ப்பேன்" என்றான்.

அவனது குரல் காதில் இனிய குறுகுறுப்பை ஏற்ப்படுத்திய பின்பும் அசையாமல் நின்றாள்.

"மினி சாரி டா ...... நேத்து என் ப்ரண்ட் க்கு ஒரு பிரச்சனை அதை கவனிக்க போயிட்டேன் அதனால உன்கிட்ட இருக்க முடியாமல் போச்சு , நீ என்னை ரொம்ப தேடுனியாடா , என் மேல் கோபமா , பேச மாட்டியா ஏதாவது சொல்லுடா" .

அவள் எதற்குமே பதில் சொல்லாமல் போக அவளை தன்புறம் திருப்பினான். அவளது கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

அவள் அழுவது தாங்க முடியாமல் தன் மார்போடு சேர்த்து இறுக்க கட்டிக் கொண்டான். அந்த நிமிடம் அவன் மேல் இருந்த கோபம் முற்றிலும் விலகியதுபோல் உணர்ந்தாள் மினி.

அவன் ஒருவனே ஆதாரம் என்பதுபோல் அவனை சுற்றிக் கொண்டாள் மினி அவளது முதுகு அழுகையால் குலுங்கியது.

அவனிடம் கொட்டிவிடத் துடித்த தன் மன பாரம் நீங்கும் வரை அழுதாள் மினி. அந்தநேரம் உணர்ந்தான் சுஷின் மினி தன்னை முழுவதுமாக ஏற்றுக் கொண்டாள் என்று அவளது துக்கத்தில் தன்னை மட்டுமே அவள் நாடுகிறாள் என்று நினைத்தான்.

அவளது அழுகை சற்றுக் குறைந்ததும் அவளது முகத்தை நிமிர்த்தினான். அழுது சிவந்திருந்த அவளது கண்களில் தன் இதழ்களை பதித்தான்.

கண்ணீர் வழிந்திருந்த கன்னங்களை இதழ்களால் துடைத்தான், கோவை பழமாக சிவந்திருந்த மூக்கிலும் முத்திரையைப் பத்தித்தான், அவளது இதழ்களில் முத்தமிடப் போன அந்த நொடி மினி தான் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதை உணர்ந்தாள்.

நேற்று அவன் ஒரு பெண்ணை அணைத்து நின்ற காட்சி கண்முன் விரிந்தது. இன்று என்னையும் அணைக்கிறான் நேற்று அந்த பெண்ணை. எல்லா பெண்கள் கிட்டேயும் இவன் இப்படித்தான் நடந்து கொள்வானோ.

இவனுக்கு இது பழக்கமாக இருக்கலாம் ஆனால் எனக்கு...........

இந்த எண்ணம் வலுபெற்ற அடுத்தநொடி அவனை அவனது மார்பில் கை வைத்து தள்ளிவிட்டாள். கோபம் அலை அலையாக கிளம்பியது.

நேற்று எங்கே சென்றிருந்தான் என்று சொல்லவும் இல்லை அதையும் மறைக்கிறான்

அவனை குதறிவிடும் எண்ணத்துடன் வாயை திறக்கும் போது ஷிஜி வரும் சத்தம் கேட்டது. சுஷினோ ஷிஜி வருவதை உணர்ந்துதான் மினிதன்னை விலக்கியதாக எண்ணினான்.

அது மட்டுமல்ல மினி நேற்று வராததற்கு காரணம் கேட்டு சண்டை போடுவாள் என எதிர் பாத்தான் ஆனால் அவள் எதுவும் கேட்காததால் அவள் தன்னை முழுதாக புரிந்து கொண்டதாக எண்ணினான்.

மினி அவனை விட்டு தூரமாக போய் நின்றுகொண்டாள். அவனது முகத்தை பார்க்க பிடிக்காதவளாய் முகத்தையும் திருப்பிக் கொண்டாள்.

ஷிஜி வெளியே வந்து இருவரையும் பார்த்துவிட்டு தனது வேலையை பார்க்கச் சென்றாள். சுஷினும் அறைக்குச் சென்றான்.

மினி குளிக்கச் சென்றாள். அனைவரும் சாப்பாட்டு அறைக்கு வந்ததும் சுலோ சுஷினிடம்,"உங்க கல்யாணத்தை பற்றி என்ன முடிவு எடுத்துருக்கிங்க, கல்யாணத்தை உடனே வச்சுக்கலாமா இல்ல..........".

சுஷின் சுலோவிடம் பதில் சொல்லுவதற்கு முன்னாள் ஷிஜியைப் பார்த்தான். அவளோ எனக்குஎன்ன என்பதுபோல் பேசாமல் இருந்தாள். மினியின் முகமோ வேளறியதுபோல் தோன்றியது சுஷினுக்கு.

"நான் யோசித்து சாயங்காலம் சொல்லுறேன்ம்மா".

"இதுல யோசிக்க என்ன இருக்கு சுஷின், சரி யோசிச்சு நல்ல முடிவாவே சொல்லு சரியா", அந்த பேச்சு அத்துடன் முடிந்தது என்பதுபோல் பேசாமல் இருந்தார்.

சாப்பிட்டு முடித்ததும் மினி ஹோச்பிடல் போவதாக சொல்லி கிளம்பிச் சென்றாள் . சுஷினுடன் செல்லும்படி சுலோ சொன்னதை மறுத்து கிளம்பவும் சுந்தரம் அவளை டிரைவருடன் அனுப்பி வைத்தார்.

சுஷின் வற்ப்புறுத்தி தன்னை அழைத்துச் செல்லாதது அவளது கோபத்தைக் கிளறியது ஆனால் சுஷின் அழைத்து செல்லுவதாக இருந்தால் கட்டாயம் போகக் கூடாது என்று அவள் முடிவு செய்து வைத்திருந்தது ஏனோ அப்பொழுது அவளுக்கு ஞாபகம் வரவே இல்லை.

தான் என்ன நினைக்கிறோம், என்ன எதிர் பார்க்கிறோம் என்றே தெரியாமல் சென்று கொண்டிருந்தாள் மினி.

# 32

மினி கிளம்பிச் சென்றதும் ஷிஜியிடம் வந்தான் சுஷின் அவளும் ஏதோ யோசனையில் இருப்பது புரிந்தது சுஷினுக்கு.

"ஷிஜி என்ன யோசனை பலம்மா இருக்கு எதை பற்றி யோசிக்கிறாய்".

"நீ எதைப் பற்றி பேச வந்திருக்கியோ அதைப் பத்திதான்".

"நான் எதைப் பத்தி பேச வந்திருக்கேன்னு உனக்கு எப்படி தெரியும்".

"மினியோட அம்மாவுக்கு உடம்பு சரி இல்லாமல் போனதும் உங்க கல்யாணத்தை உடனே முடிக்கணும்னு யோசிக்கிறாங்க. உனக்கு ஆசைதான்...............

விஷமமாக சிரித்துவிட்டு,"என்னோட கல்யாணமும் சேந்துதான் நடக்கணும்னு சொன்னோமே இப்போ எப்படி

உன் கல்யாணத்தை மட்டும் முடிக்கிறதுன்னு யோசிக்கிற அப்படித்தானே".

"ஷிஜி நீ புத்திசாலின்னு தெரியும் ஆனா இவ்வளவு புத்திசாலின்னு தெரியாமல் போச்சுடா, ம்ம்ம்.......... ஆமா எனக்கு உன் கல்யாணமும் என் கல்யாணமும் சேர்ந்துதான் நடக்கணும்னு இப்பவும் தோணுது.

ஆனா அதுக்கு நீங்க ரெண்டுபேருமே ஒத்துவராம இருக்கீங்களே அதான் ஒரே யோசனையா இருக்கு. நீ என்னடா சொல்லுற நான் பிரகாஷ் கிட்ட பேசட்டுமா".

அவனது ஆவல் முகத்தில் தெரிந்தது, ஆனாலும் தன் நிலையை விட்டுக் கொடுக்க ஷிஜிக்கு மனமில்லை எனவே சொன்னாள்.

நீ ஒண்ணு செய் நான் சொல்லுறமாதிரி செய் கண்டிப்பா அவர் வழிக்கு வருவார். அப்படி முடியலையின்னா இல்லண்ணா முடியும். அவள் தனது திட்டத்தை சொன்னாள்.

அதைக் கேட்டதும் சுஷின் ஷிஜி அம்மாவுக்கு இந்த விஷயம் தெரிஞ்சா என்ன செய்வாங்கன்னு தெரியுமா?

"ஐயோ அண்ணா நீயே பயந்து காட்டிக் குடுத்துடுவ போல அந்த நேரம் அம்மாவை வெளியே எங்கேயாவது கிளப்பி விட்டுடலாம் கவலையே படாதே".

"இருந்தாலும் ஷிஜி பிரகாஷ்க்கு bp ஏத்தாமல் விடமாட்ட, அதைவிட இதை நான் சொன்ன அந்த நிமிஷத்துல இருந்து அவன் சோறு தண்ணி சாப்பிடாமல் வாடி போய்டுவானே ".

ஓஹோ உன் ப்ரண்ட் மேல அவ்வளவு அக்கரையின்னா பேசாமல் உண்மையை சொல்லிடேன்".

"எந்த உண்மையை ஷிஜி, நீ அவனைத்தான் லவ் பண்ணுறங்குற உண்மையாவா", அப்பாவியாக முகத்தை வைத்துக் கொண்டு கேட்டான் சுஷின்.

"ஆமா அந்த உண்மையை சொல்லிட்டு............ , நீ கல்யாணம் செய்யாமல் பிரம்மச்சாரியாவே இருக்க போறியா அப்போ சரி", ஷிஜியும் குறும்பாக சொன்னாள்.

"வேற எந்த உண்மையை சொன்ன நீ".

"நாம அவரை மடக்க ப்ளான் பண்ணுறோகுற உண்மையை சொல்லிடுன்னு சொன்னேன்".

"எனக்கு ஒரு சந்தேகம் ரெண்டு உண்மைக்கும் என்ன வித்தியாசம்".

"அண்ணா இப்போ சொன்னபடி செய்யப் போறியா இல்ல ஆராய்ச்சி செய்யப் போறியா".

"நீ சொன்னபடியே செய்யறேன் தாயே , எனக்கு சீக்கிரம் சம்சாரி ஆகணும்னு ஆசை சோ.........".

பிரகாஷை மடக்க திட்டம் உருவாகி விட்டது.......

ஹோச்பிடலில்...................

மினிக்கு இந்த திருமணத்தை உடனடியாக நிறுத்தவேண்டும் என்ற எண்ணம் நேரம் ஆக ஆக கட்டுக்கடங்காமல் பெருகியது.

தாயை சென்று பார்த்தாள், மீனாட்சி உறங்கிக் கொண்டிருந்தார் . அருகில் சென்று அமர்ந்ததும் கண்களை திறந்து மினியை பார்த்தார்.

கண்கள் கலங்கியது அவருக்கு,"சாப்டியா மினி , என்ன சாப்பிட்ட சுஷின் அவங்க குடும்பம் மட்டும் இல்லையின்னா என்ன ஆகி இருக்கும்.

உனக்கு ஒரு நல்லது நடக்காமலே உன்னை அனாதையா விட்டுட்டு போயிடுவேனோன்னு எனக்கு ரொம்ப பயமா இருக்குடா.

இப்போ கூட அவங்க உனக்கு துணைக்கு இருக்கிறனாலதான் இங்க கொஞ்சமாவது நிம்மதியா இருக்கேன்.

ஹோச்பிடல் பில் எவ்வளவும்மா ஆச்சு, மருந்து மாத்திரை எல்லாம் ரொம்ப செலவு ஆயிருக்குமேடா. என்ன செஞ்ச".

தன் தாயின் நிம்மதி அவளுக்கு நடக்க இருக்கும் திருமணத்தில்தான் இருக்கிறது என்பதை மினி புரிந்து கொண்டாள்.

இது எல்லாவற்றையும் விட மினி இதுவரை ஹொச்பிடலில் பணம் கட்டவே இல்லை என்பதும், மருந்து மாத்திரை கூட தான் வாங்கவில்லை என்பதும்.

தன் தாயிடம் இதை எப்படி சொல்லுவது என்று அவள் யோசித்துக் கொண்டிருக்கும் போதே,"மினி நீ எதுவுமே செய்யலையா இன்னும் , அப்போ இதுவரை வாங்குன மருந்து , ICU வாடகை, ரூம் வாடகை எல்லாம் யார் கட்டினது.

இப்படியா பொறுப்பில்லாமல் இருப்ப, உன்னை என்னதான் சொல்லட்டும்".

இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே நர்ஸ் வந்தார். மீனாட்சி தனது சந்தேகத்தை அவரிடம் கேட்க , சுந்தரம்ங்குரவரு தான் உங்க பில் எல்லாம் கட்டினார்.

டூட்டி நர்ஸ் கிட்ட மெடிசின் வாங்கி வைக்க சொல்லி இருக்கார். அங்கேயும் அவரே பணம் கட்டி வச்சு இருக்கார். உங்க சம்பந்தின்னு சொன்னார்.

நர்ஸ் சென்றதும் மினியிடம், "அவங்க கல்யாணத்தை எப்போ வைக்கலாம்னு சொன்னாங்களாடா சீக்கிரம் வைப்பதில உனக்கு அம்மா மேல கோபமா. உனக்கு சம்மதம் தானேடா".

சம்மதம் இல்லை என்று சொல்லத்தான் மூளை கட்டளை இட்டது. ஆனால் சம்மதம் தானம்மா என்று வாய் வேகமாக

சொன்னது.(இதை கூட மினி உணரவில்லை).

# 33

அடுத்த இரண்டாவது நாள் சுபாவிற்கும் ப்ரவீனிர்க்கும் திருமணம் நடந்தது. அனைத்து தினசரிகளிலும் விளம்பரப் படுத்தப் பட்டு வெகு எளிமையாக நடத்தப் பட்டது.

சர்குணத்திற்க்கு மிகுந்த வருத்தம் தான் ஆனால் அன்னமும், ப்ரவீனும் உடனடியாக திருமணம் நடக்க வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்தது அவரை யோசிக்க வைத்தது.

அதுவும் அன்னம் தன் பிறந்தநாள் அன்று இரவு ப்ரவீனிர்க்கு தான் பெண் பார்த்திருப்பதாகவும் நாளைக்கே சென்று பேசி முடிக்கவேண்டும் என்று சொன்னதுமே ஆச்சரியம்தான்.

இதுவரை அவரை கேட்காமல் எந்தஒரு முடிவுமே அவர் எடுத்ததில்லை, அதைவிட திருமணம் உடனே நடக்கவேண்டும் என்று சொன்னதுமே சந்தேகம் முளை விட்டது.

என்னவென்று தெரியாமல் என்ன சொல்ல முடியும், அதுவும் ப்ரவீன் க்கு இதில் விருப்பமா என்று கேட்டதற்கு அவன் கட்டினால் அவளைத்தான் கட்டுவேன் என்று சொன்னது அதைவிட வியப்பாக இருந்தது.

அவரது வியப்பிற்கு காரணம் ஒரு மாதம் முன்பு திருமணத்திற்கு பெண் பார்க்கவா என்று கேட்டதற்கு இன்னும் 2 வருடம் திருமணமே வேண்டாம் என்று சொன்னவன் இப்பொழுது காதல், அதுவும் அவளைத்தான் உடனே கட்டவேண்டும் என்று தாயும் மகனும் ஒருசேர சொன்னபோது நம்பவே முடியவில்லை அவரால்.

ப்ரவீன் தவறான முடிவு எடுக்கமாட்டான், அன்னமும் அதற்க்கு உடந்தையாக இருக்கமாட்டாள் என்ற

நம்பிக்கையில் தான் அவர் எளிமையாக திருமணம் செய்ய ஒத்துக் கொண்டதே.

ஆனாலும் ரிசப்ஷன் பெரிதாக வைக்க வேண்டும் என்று சொன்னதற்கு கூட ப்ரவீன் மறுத்ததை அவரால் சரியென்று ஒத்துக் கொள்ள முடியவில்லை.

அன்னம் கொஞ்ச நாள் கழித்து வைத்துக் கொள்ளலாம் என அவரை சமாதானம் செய்து வைத்தார்.

சர்குணத்திற்கு அவர்கள் தன்னிடம் எதையோ மறைக்கிறார்கள் என்பது தெளிவாக புரிந்தது. ஆனாலும் எதுவாக இருந்தாலும் தன் மகனது சந்தோஷமே முக்கியம் என்று அந்த சிந்தனைக்கு அத்துடன் முற்றுப் புள்ளி வைத்தார்.

சுபா-ப்ரவீன் திருமணத்தில் சுஷின் முன்னாள் நின்று அனைத்து வேலைகளையும் செய்தான். அண்ணன் இடத்தில் சுபாவின் அண்ணன்மார் செய்ய வேண்டிய அனைத்தையுமே சுஷினை செய்ய வைத்தனர்.

அவன் எவ்வளவோ மறுத்தும் சுபாவின் கண்ணீரும், பெரியப்பா பெரியம்மாவின் வேண்டுதலும் அவனை பணிய வைத்தது.

பெரியப்பா மகன்களின் சம்மதத்தை கேட்டு அவர்களும் சம்மதம் சொன்ன பின்னரே இதற்க்கு முழு மனதுடன் சம்மதம் சொன்னான் அவன்.

இவர்களின் திருமணத்திற்கு சுஷினின் பெற்றோரை சுபாவின் அப்பவே நேரடியாக சென்று அழைப்பு விடுத்தார்.

தன் தம்பியின் காலில் விழுந்து சுதர்சனம் மன்னிப்பு வேண்டியபோது பதறித்தான் போனார் சுந்தரம். ஆனாலும் ஏதோ ஒன்று அவர்களை வரவிட வில்லை , அது மட்டுமல்ல மீனாட்சி வீட்டிக்குப் போவது ஒரு காரணமாகிப் போனது.

சுஷினை அவர்கள் தடை செய்யவில்லை , எனவே அவன் சுபாவின் திருமணத்தில் எந்தவித தயக்கமும் இல்லாமல் எல்லாவேலையையும் முன்னின்று செய்தான்.

இந்த திருமணத்தில் இணைந்த இரண்டு மனங்களைத் தவிர மற்ற அனைவருமே மகிழ்ச்சியாக இருந்தனர்.

சுபாவின் கழுத்தில் தாலியைக் கட்டும்போதுகூட அவளது முகத்தைப் பாராமல் , மனதளவில் இறுகிப் பொய் வெளியில் முகத்தை மலர்ச்சியாக வைத்துக்கொண்டு இருந்தான் ப்ரவீன் .

சுபாவோ இனி தனது வாழ்வு எப்படி இருக்கும் இவனது விருப்பப் படி ஆடும் ஒரு களிமண் பொம்மையாகத்தான் ஆவோமா, என் உணர்வுகளை இவன் மதிப்பானா, காலில் போட்டு மிதிப்பானா என்ற சிந்தனையிலேயே உழன்று கொண்டிருந்தாள்.

என்னதான் யோசித்தாலும் ப்ரவீன் தாலிகட்டிய அந்தநொடி அவளது உடல் சிலிர்க்கத்தான் செய்தது. இந்த உணர்வையும் பயம் என்று புரிந்து கொண்டதுதான் சுபா செய்த தவறோ.

கோயிலில் சாமி தரிசனம் முடித்து நேரே சுபாவின் வீட்டிற்க்குச் சென்றனர். பால் பழம் எல்லாம் பாதி பாதி இருவரையும் சாப்பிட சொன்ன போது ப்ரவீன் இயல்பாகவும், சுபா இந்த தொந்தரவு இன்னும் எவ்வளவு நேரம் தொடரும் என்ற உணர்வுடனும் இருந்தாள்.

அவளது முகத்தில் இருந்தே அவளுக்கு பிடிக்கவில்லை என்பதை புரிந்துகொண்ட ப்ரவீன் மேலும் இறுகிப் போனான். ஆனாலும் மற்றவர்களின் கேலி கிண்டலுக்கும் பதில் சொல்லாமல் விடவில்லை.

சுபாவோ வெட்கம் என்ற போர்வையில் தலையை குனிந்தவண்ணம் பேசாமல் இருந்தாள். 'இவனுக்கு மட்டும் எப்படித்தான் தயக்கமே இல்லாமல் பேச முடியுதோ, அதான்

தான் நினைச்சதை அடைந்து விட்டானே அந்த சந்தோஷமா இருக்கும்.

சுபாவிற்கு ஒன்று உதைத்தது, மூன்று நாட்களுக்கு முன்புவரை சுபாவை எங்கே பார்த்தாலும் விழுங்கி விடுவதுபோல் பார்ப்பவன், இந்த இரண்டு நாட்களில் தன் முகத்தை பார்க்கவே இல்லை என்பதும்,

சாப்பிடும் இடத்தில் போட்டோ கிராபர் அவளுக்கு ஊட்டிவிட சொன்னபோதுகூட விளையாட்டாய் சொன்ன போதும் முடியாது என்பதை மிக அழுத்தமாகவே சொல்லி அதை தவிர்த்ததும்,

மேலும் போட்டோக்களுக்கு ஒரு அளவுக்குமேல் போஸ் கொடுக்க மறுத்ததும் மின்னலென மனத்திரையில் வந்து போனது.

இவன் என்ன உரிமை இல்லாத போது எல்லாம் அப்படி நடந்து கொண்டான். ஆனால் உரிமை வந்த பிறகு ஒரு பார்வைக்குக் கூட பஞ்சமாகி விட்டதா.

இவன் என்ன பெரிய மன்மதனா பார்க்க மாட்டானா தனது சிந்தனையிலேயே அவனை நிமிர்ந்து பார்த்தாள் . அவனது பக்கவாட்டுத் தோற்றம் அவளுக்குள் ஏதோ ஒரு மாற்றத்தை உருவாக்கியது.

அவனது சிரிப்பு மனதுக்குள் இதமாக பரவுவதுபோல் தோன்றியது. இவளது பார்வையை பக்கத்தில் இருந்த அவனது தோழன் பார்த்துவிட்டு,"சிஸ்டர் நாங்க எல்லோரும் இங்கே இருக்கிறோம் நீங்க மட்டும் இருக்குறமாதிரி உங்க ஆளை அப்படி பாக்குறிங்க.

இன்னும் கொஞ்சநேரம் வெயிட் பண்ணுங்க நாங்க எல்லோரும் கிளம்பிடுவோம், நீங்க ஆசைதீர இவனைப் பாக்கலாம்".

அவன் அப்படி சொன்னதற்குப் பிறகுதான் சுபாவிற்கு தான் ப்ரவீனைப் பற்றி நினைத்ததும், அவனை ரசித்ததும்

புரிந்தது.

அவளாலே நம்ப முடியவில்லை அவனது முந்தைய பார்வையைப் பற்றி நினைத்தது, உரிமை என்று நினைத்தது , தாலி கட்டியபோது சிலிர்த்தது (சீக்கிரமே புரிஞ்சுகிட்டடா), இது அனைத்தையும் விட அவனது அந்த காந்தப் பார்வைக்காக தான் ஏங்குவதுகூட அவளுக்குப் புரிந்தது.

நான் என்னதான் எதிர் பார்க்கிறேன் அவனிடமிருந்து, எனக்கு இப்படி எல்லாம் தோணுதே இது காதலா............ , அப்படின்னா நான் ப்ரவீனை காதலிக்க ஆரம்பிச்சுட்டனா.

எப்போ இருந்து............ இப்போ இந்த நிமிஷத்துல இருந்தா, ப்ரவீனிடம் பேசியே ஆகவேண்டும் என்ற ஆர்வமும், எனக்கு ஏன் இப்படி எல்லாம் தோணுது என்று அவனிடமே கேட்க்க வேண்டும் என்ற வேட்கையும் எழுந்தது சுபாவினுள்.

நண்பன் சொன்னதைக் கேட்டு சிறு நம்பிக்கை ஒளி தோன்ற சுபாவை திரும்பிப் பார்த்த ப்ரவீனிர்க்கு ஏமாற்றமே மிஞ்சியது.

ப்ரவீன் பார்க்கும் போதுதான் சுபா கால் நகத்தை ஆராய்ந்து கொண்டிருந்தாளே.

சுபாவின் வீட்டில் சாந்தி முஹூர்த்தம் வைக்க வேண்டும் என்று சொல்ல ப்ரவீன் தன் தாயிடம் ஏதோ முறையிட ப்ரவீனின் வீட்டிலேயே வைப்பதாக முடிவானது.

இரவும் வந்தது..................

தன் அறையின் பால்கனியில் நின்று கொண்டு நிலாவை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் மனம் அதன் வேலையை சரியாக செய்து கொண்டிருந்தது,

'விரும்புனவளையே கல்யாணம் செய்தது பெரிய பாக்கியம், ஆனா அவளுக்கு என்னை பிடிக்காமல் போனது............. , பசியோட இருப்பவன் முன்னாள்

விருந்தை வைத்துவிட்டு அவனை சாப்பிடக் கூடாதுன்னு சொல்லுவது பசித்தவனுக்கு எப்படி இருக்குமோ அப்படி இருந்தது ப்ரவீனின் நிலை.

அவளை தூரத்தில் பார்த்தாலே என்னால் என் உணர்வுகளை அடக்குவது கஷ்டம், இதுல என்னோட ரூம்ல என்னோட பெட்ல...........' , தலையை வேகமாக உதறிக் கொண்டான்.

சுபா சொன்னது போல் எனக்கு அவளோட.......... , இல்லை நான் அவளைத்தான் விரும்புகிறேன் என்னால் அவளை தொடாமல் இருக்க முடியும். அவ என்னோட மனைவியாக இந்த வீட்டில் என் பார்வையிலேயே இருந்தால் போதும்.

வேறு எதுவுமே வேண்டாம். வேற எதுவுமே வேண்டாமா ராசா.......... மனசாட்சி கேட்ட கேள்விக்கு ஆமாம் என்று அழுத்திச் சொல்லத்தான் அவனுக்கும் ஆசை ஆனால் அவனும் உணர்ச்சிகள் அதிகம் உள்ள ஒரு சராசரி மனிதன் தானே.

ஆனாலும் சுபாவை பார்த்தால் தானே இந்த எண்ணம் எல்லாம் எழும், அவளை பார்க்காமலே இருந்தால்............ ஆமா இதுதான் சரி என்று முடிவு எடுத்தபின் தெளிவானதுபோல் இருந்தது.

ஆனால் இந்த தெளிவ எல்லாம் சுபா அறையில் நுழையும் வரை மட்டுமே. சுபா உள்ளே வந்து கதவை அடைத்ததும் அவளிடம் செல்லத் துடித்த கால்களையும்,

அவளை அணைக்கத் துடித்த கைகளையும், முத்தமிடத் துடித்த இதழ்களையும் அடக்கும் வழி தெரியாமல் புயலென அவளை நெருங்கினான்.

இங்கு சுபாவோ அவனிடம் தன் மன மாற்றத்தை எப்படி சொல்லுவது, அவன் எப்படி எடுத்துக் கொள்வான். சந்தோஷப் படுவானா இல்லை................, ம்ஹூம்........... அவளால் இல்லை என்றே நினைக்க முடியவில்லை.

இந்த சிந்தனையில் இருந்தவள் புயலென அவன் நெருங்கியதும் அனிச்சை செயலாய் இரண்டடி வேகமாக பின் வாங்கினாள். அதை அவள் உணரக்கூட இல்லை ஆனால் ப்ரவீன் அந்த செயலால் முற்றிலும் நொறுங்கிப் போனான்.

சுபாவோ தலை நிமிரவே இல்லை. வந்தவன் ஏன் ஒன்றுமே??? செய்யவில்லை. என்ன ஆயிற்று என்று நிமிர்ந்து பார்த்தாள்.

அவள் நிமிர்ந்து பார்ப்பதற்குள் கிடைத்த இடை வெளியில் தன் மொத்த தாபம், வலி , ஏமாற்றம் அனைத்தையும் மறைத்தவன் அவளது முகம் பாராமல் சொன்னான், "நீ கட்டிலில் படுத்துக்கோ என்னால் உனக்கு எந்த தொந்தரவும் இருக்காது".

சொல்லிவிட்டு அவளை நிமிர்ந்து கூட பார்க்காமல் , (அவளை பார்த்திருந்தால் சுபாவின் கண்களில் வழிந்த காதலும், சிறு ஏமாற்றமும் அவனுக்கு தெரிந்திருக்குமே.) அவனது அறைக்கு முன்பிருந்த ஹாலில் இருந்த ஸோபாவில் படுத்துக் கொண்டான்.

கண்களை மூடிக் கொண்டான் மூடிய இமைகளுக்குள் சுபாவின் அதிர்ந்த தோற்றமே வந்து போனது. சிறிது நேரத்துக்கு முன்னாள் எழும்பிய உணர்வுகள் அடங்க முடியாமல் வேதனையில் முகம் இறுக இடதுகையை இமைகளுக்கு மேல் அரணாக்கி, சிந்திக்ககூட இயலாதவனாய் படுத்திருந்தான் ப்ரவீன்.

சுபாவோ அவனால எனக்கு எந்த தொந்தரவும் இருக்காதாம்............ யாருக்குவேணும் இந்த பெட் பெரிய கர்ணன் பரம்பரை அவரோட பெட்டை விட்டு குடுத்துட்டு போறாரு.

என் முகத்தை பார்க்க மாட்டாராமா அதென்ன சுவத்துகிட்ட சொல்லிட்டு போறாரு. பொருமிக் கொண்டே உறங்காமல் விழித்திருந்தாள் சுபாவும்.

# 34

மீனாட்சி வீட்டிற்கு வந்து விட்டார் . சுலோவும் சுந்தரமும் வந்திருந்தனர். ஷிஜியும் சுஷினும் வரவில்லை.

சுஷின் சுபாவின் திருமணத்திற்கு சென்றிருந்தான். சுலோ, சுஷின் ஒரு திருமணத்திற்க்காக சென்றிருப்பதாக சொன்னார். இதை கேட்டது முதல் மினி இன்னும் அவனை வெறுத்தாள்.

அவனுக்கு தன்னைவிட திருமணத்திற்கு செல்லுவது முக்கியமோ என கோபப் பட்டாள். ஆனால் சுலோ அவன் சென்றது அவனது பெரியப்பா மகளின் திருமணத்திற்குதான் என்பதை சொல்லாமல் விட்டு விட்டார்.

அவர் அதை சொல்லி இருந்தால் மினியின் கோபம் குறைந்து இருக்குமோ.

அவர்கள் அனைவரும் சென்றதும் மீனாட்சி மினியிடம், "மினி ரெண்டு நாளா நீ சரியாவே இல்லைடா உன்னோட மனசில் ஏதோ ஒண்ணு அழுத்திட்டே இருக்கிற மாதிரி இருக்கு என்னன்னு சொன்னாதானே தெரியும் சொல்லு".

"அம்மா நான் ஒன்று சொன்னால் நீங்க கேப்பீங்களா.......... எனக்கு இப்போ இந்த கல்யாணம் வேண்டாம். என்னால உங்களை விட்டுட்டு இருக்க முடியாதும்மா. அது மட்டும் இல்லை உங்களை தனியா, ஒரு துணையும் இல்லாமல் இந்த நிலைமையில் ..........." .

"மினி நான் என்ன சின்ன குழந்தையா என்னால தனியா இருக்க முடியாதா . என்னோட ஹெல்த் இருக்குற நிலைமையில் , எப்போ என்ன ஆகும்னு தெரியாமல் உன்னை தனியா விட்டு போய்டுவனோன்னுதான் எனக்கு கவலையா இருக்குடா.

உன்னை ஒரு பொறுப்பானவன் கையில்தான் ஒப்படைக்கப் போறேன்னு எனக்கு தெரியும். நான் இல்லை

என்றாலும் உன்னை அவன் கைவிட மாட்டான். ஆனால் உன்னோட கல்யாணத்தையாவது பார்க்கணும்னு ஆசையா இருக்கு.

நீ இந்த கல்யாணம் வேண்டாம் என்று சொல்ல நான்தான் காரணமாடா. உன்முகமே சரி இல்லையே உண்மையை என் முகத்தை பார்த்து சொல்லு மினி".

மீனாட்சியின் பார்வை கூர்மையாக மினியை ஆராய்ந்தது. அவரது முகத்தில் கவலையின் ரேகை தெரியவும் மினி தன்னை மீட்டுக் கொண்டாள்.

"வேற எந்த காரணமும் இல்லைம்மா. உங்களுக்கு ஏன் இப்படி தோணுது".

"சுஷின் உன்னை பார்க்க வரலைன்னு உனக்கு கோபமா. என் முகத்தை பார்த்து பேசு நானும் ரெண்டு நாளா பார்க்குறேன், உன் கண்ணு யாரையோ தேடுது அவனை பார்க்க முடியலையேன்னு ஏமாற்றம் தெரியுது.

நான் நினைகிறேன் அந்த கோபத்துலதான் நீ கல்யாணத்தை தள்ளி போட நினைக்கலை, இந்த கல்யாணமே வேண்டாம்னு நினைக்கிற. ஆனா என் உடல் நிலையை மனசுல நினைச்சு பூசி மொழுகுறன்னு.

என்ன நான் சொல்லுறது சரிதானே", மீனாட்சி சொன்னதை கேட்டதும் தாய் தன் மனதை புரிந்து கொண்டதை நினைத்ததும் கண்கள் கலங்கியது.

ஆனால் தான் அழுதால் தாய் இன்னும் கலங்கி விடுவார்களோ அதனால் இன்னும் உடல்நிலை மோசமாகி விடுமோ என்ற பயத்தில் தனது கலக்கத்தை மறைக்க நினைத்தாள்.

ஆனால் மீனாட்சி, மினியை அருகில் அழைத்து மடியில் சாய்த்துக் கொண்டார். தனது மடி ஈரமாவதை உணர்ந்தார்.

மினி புரியாமல் கலங்குகிறாள் என்பதை புரிந்து கொண்டார். அவளது கலக்கத்தை போக்கவில்லை என்றால் அவளது வாழ்க்கை சந்தோஷமாக அமையாது என்பதும் அவருக்கு புரிந்தது.

எனவே அவளது இந்த தேவையற்ற பயத்தை கலக்கத்தை விலக்க முயன்றார். "இங்கபார் மினி இந்த இரண்டு நாளை வைத்து முடிவு செய்யிறது தப்புடா. சுஷினுக்கு நிஜம்மாவே அவசர வேலை ஏதாவது இருந்து இருக்கலாம்.

இன்னைக்குகூட வராதது உனக்கு வருத்தமாத்தான் இருக்கும் ஆனால் கல்யாணத்துக்கு போறதா போன் செஞ்சானா இல்லையா.

நீ தேடுவங்குற அக்கறை இருப்பதால் தானே சொல்லிட்டு போனான். உன்னை அவன் புரிஞ்சு வச்சு இருக்கும் போது நீ அவனை புரிஞ்சுக்கணுமா இல்லையா.

தேவை இல்லாமல் கலங்குவதை விட்டு சந்தோஷமா இருக்க வழியை பாரு. உன்னையும் வருத்தி சுஷினையும் வருத்தாதே, உனக்கு ஏதாவது வருத்தம்ன்னா அவன்கிட்ட மனசு விட்டு பேசு அதுதான் நல்லது சரியா".

மினியைப் பற்றி நன்கு புரிந்தவராகையால் அவளுக்கு புரியவைக்க முயன்றார்.

ஆனால் பரிதாபம் அவளது சந்தேகத்தை அன்னையிடம் கூட அவள் சொல்லவில்லை. சொல்லி இருந்தால் அல்லது தாயின் அறிவுரையை கேட்டிருந்தால் பின்பு வர இருந்த எல்லா பிரச்சனைகளையும், மன வருத்தத்தையும் தவிர்த்து இருக்கலாம்.

மீனாட்சி மருத்துவமனையில் இருந்ததால் மினி தினசரிகளையும் பார்க்கவில்லை. சுபா – ப்ரவீனின் திருமணமும் அவளுக்கு தெரியாமலே போனது.

இது விதியின் விளையாட்டா............... .

சுஷின் ஆபீஸ் சென்றதும் பிரகாஷிற்கு கால் செய்தான் . அவன் எடுத்ததும் ஷிஜியை நிச்சையம் செய்ய மாப்பிள்ளை வீட்டார் நாளை வருவதாக சொன்னான்.

எனவே அவனும் வரவேண்டும் என்று அழைப்பு விடுத்துவிட்டு வெளி வேலைகளை கவனிக்க சென்று விட்டான்.

அவனிடம் யார் என்னவென்ற விவரங்களை கேட்க பிரகாஷ் போன் செய்தால் அந்த அழைப்புகளை சுஷின் எடுக்கவே இல்லை.

பிரகாஷோ முள்ளின் மேல் நிற்பதை போல் உணர்ந்தான். ஷிஜிக்கு போன் செய்தால் அவளும் இவனது அழைப்புகளை எடுக்கவில்லை.

மறுநாள் விடிந்ததும் விடியாததுமாக ஷிஜியின் வீட்டிற்க்குச் சென்றான். சுஷின் அவனை வரவேற்றான்.

பிரகாஷின் கண்களோ ஷிஜியை தேடியது , இதை அறிந்தும் அறியாததுபோல் இருந்தான் சுஷின். என்ன பேசுவது எப்படி துவங்குவது என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தான் பிரகாஷ்.

அவனது அவஸ்த்தையைப் பார்த்து சுஷின் ஷிஜியிடம் சென்று,"ஏய் ஷிஜி பையன் ரொம்ப பரிதாபமா உட்க்கார்ந்து இருக்காண்டி, நேத்துல இருந்து பட்டினி கிடப்பான் போல இருக்கு.

கொஞ்சம் தரிசனமாவது குடுக்க கூடாதா , ராத்திரி தூங்கிகூட இருக்க மாட்டான்போல விடிய முன்னாடி வந்து நிக்கிறான். இப்போ வரப் போறியா இல்லையா", கேலியில் துவங்கி ஆதங்கத்தில் முடித்தான் சுஷின்.

"அண்ணா இப்போ கூட வாயை தொறக்காம கமுக்கமா இருக்கான்னா என்ன அர்த்தம். இதுக்கெல்லாம் இது வழிக்கு வாற மாதிரி இல்லை.

அடுத்த அட்டாக்குக்கு நான் ரெடி. நீ முதல்ல ஹெமந்த்க்கு போன் பண்ணி வர சொல்லு . யார் என்ன கேட்டாலும் உண்மையை மட்டும் சொல்லச் சொல்லு . நீ இப்போ போ".

"ஷிஜி அங்க ஒருத்தன் ஹால்ல அவஸ்த்தையா உக்காந்து இருக்கான்னு சொல்லிட்டு இருக்கேன் . நீ அவனுக்கு வெடி வைக்கிறதுலயே குறியா இருக்க.

பாவம்டா அவன் இதுக்கு மேல தாங்க மாட்டான் விட்டுடு அவனை".

"நான் சொன்ன மாதிரி செய்யிறியா இல்ல நீ பிரம்மச் சாரியா இருக்குறியான்னு முடிவு பண்ணிக்கோ. நான் இன்னும் மூணு வருஷம் கூட காத்திருக்க ரெடி",சொல்லிவிட்டு யாருக்கு வந்த விருந்தோ என்பதுபோல் பேசாமல் இருந்தாள்.

சுஷின் தான் கலங்கிப் போனான். வேறு வழி இல்லாமல் ஷிஜி சொல்லியதை செய்துவிட்டு அதாங்க ஹெமந்த்க்கு போன் செய்துவிட்டு கீழே சென்றான்.

அங்கு பிரகாஷை முதலில் எப்படி பார்த்தானோ அதே நிலைமையில் கொஞ்சம்கூட மாறாமல் இருந்தான். அவன்மேல் அனுதாபம் எழுந்தாலும் அதை விரட்டியது மினியின் முகம்.

ஹேமந்த் வரும் வரை அவனுடன் அமர்ந்து டிபன் சாப்பிட்டுவிட்டு பேசிக் கொண்டிருந்தான் சுஷின். இடையில் பிரகாஷ் ஷிஜியைப் பற்றியும் , மாப்பிள்ளையைப் பற்றியும் ஜாடையாக கேட்டுப் பார்த்தும் சுஷின் அதை காதில் வாங்காதவன் போல பேசிக் கொண்டே இருந்தான் சுஷின்.

பிரகாஷிர்க்கோ மனமும் உடலும் சேர்ந்து எரிந்தது. நான் வந்து இவ்வளவு நேரம் ஆச்சு வெளிய வாறாளா பாரு. இதுல இன்னைக்கு நிச்சயம் வேறயாம் அலங்காரம் பண்ணிக்கிறதுல பிஸி யா இருக்காளா இருக்கும்.

வாறவன் எவனா இருந்தாலும் சரி ஓட ஓட விரட்டுறேன். என்னைய தவிர வேற யாரையாவது கல்யாணம் பண்ணிடுவாளா அவ, நான்தான் விட்டுடுவனா.

ஆனாலும் எப்படி இதை சுஷின் கிட்ட சொல்லுறது, இப்படி பண்ணிட்டியேடான்னு சொல்லிடுவானோ. என்னோட ப்ரண்ட்ஷிப்பே வேண்டாம்னு சொல்லிடுவானோ.

இன்னொருமனம் கடிந்து கொண்டது. இவனது சிந்தனையில் உழன்றதால் ஹேமந்த் வந்ததையோ சுஷின் அவனிடம் பேசுவதையோ கவனிக்கவே இல்லை.

பேச்சு சத்தம் கேட்டு சிந்தனையிலிருந்து விடுபட்டவன், தன் முன்னால் டிப் டாப்பாக உடையணிந்து நின்ற ஹெமந்தை கண்டதும் (பாவம் அவன் ஆபீஸ் கிளம்பி வந்து இருக்கான் நீயேண்டா) , கோபம் தலைக்கேற ஆத்திரமாக எழுந்து வந்தான்.

## 35

பிரகாஷின் கோபம் புரியாமலோ, அல்லது தெரியாமலோ ஹேமந்த் சொன்னான் .

"குட் மோர்னிங் சார் ...........", ஹேமந்த் .

(இன்னைக்கு உனக்கு பேட் மோர்னிங் தாண்டா)

விஷ் பண்ணியவனை கொலைவெறியுடன் நோக்கினான் பிரகாஷ். ஹேமந்த் மட்டுமல்ல சுஷின் கூட பயந்துதான் போனான்.

'இன்னைக்கு அடிவாங்காம கிளம்ப மாட்டேன்போல இருக்கே. இந்த சுஷின் சார்-ம் எதுக்கு இப்படி வெறிச்சு பாத்துகிட்டு இருக்கார். போன் பண்ணி என்னை வர சொல்லிட்டு வில்லன் கிட்ட கொர்த்துவிடுற அடியாள் மாதிரியே முழிச்சுட்டு இருக்காரே.

ஆண்டவா விழுற அடிய படாத இடத்துல படக்கூடாத மாதிரி பாத்துக்கப்பா', மனதிற்குள்ளேயே ஆண்டவனுக்கு மனு போட்டான் ஹேமந்த்.

அவனது மனு உடனே பரிசீலிக்கப் பட்டது. சுஷின் அங்கு இருந்த நிலையை ஒரு நிமிடத்தில் புரிந்து கொண்டான்.

இப்பொழுது தான் குறுக்கே பாயவில்லை என்றால் ஹெமாந்தின் நிலைமை மோசமாகிவிடும் என்பதை புரிந்துகொண்டு நிலைமையை சம்மாளித்தான்.

"பிரகாஷ் ஹேமந்தை உனக்கு தெரியுமே", ஏதோ சொல்லவேண்டுமே என்று சொல்லி வைத்தான் சுஷின். அதுவே வினையாகி போனது.

"நீ எங்க இங்க வந்த, உன்னை யார் வீட்டுக்கெல்லாம் வரச் சொன்னா", பிரகாஷின் கேள்வியில் புயல் ஒளிந்திருந்தது.

"பிரகாஷ் நான்தான் வரச் சொன்னேன். உள்ளவா ஹேமந்த் உட்க்கார் . ஷிஜி ஹேமந்த் வந்து இருக்கான் காபி கொண்டுவாம்மா", பிரகாஷை விலக்கிவிட்டு ஹெமந்த்துடன் உள்ளே வந்தான் சுஷின்.

பிரகாஷிற்கு பொறுமை பறந்தது , எங்கே தான் ஷிஜியை இழந்துவிடுவோமோ என்ற பயமும் தோன்ற , இதற்கெல்லாம் சுஷின்தான் காரணம் என்று தோன்ற வார்த்தைகள் அவனை அறியாமலே வெளிவரத் துவங்கின.

"நீ எதுக்கு இவனை வரச் சொன்ன, ஏன்டா நீ லவ் பண்ணுரியாடா", சுஷின், ஹெமந்தை பார்த்து கேட்டான் பிரகாஷ்.

சுஷின் பதில் சொல்லும் முன்னர் ஹேமந்த் சொன்னான். ஆமா லவ் பண்ணுறேன் ஹேமந்த் ஹேமாவை நினைத்து சொல்ல, பிரகாஷ் அவன் ஷிஜியை சொல்லுவதாக நினைத்துக் கொண்டான்.

"பொய் சொல்லாதேடா அவ உன்னை லவ் பண்ணுறாளா " வெட்கப் பட்டுக் கொண்டே சொன்னான் "ஆமா சார் எனக்கு தெரியும் நானும் அவளும்..............", அவன் முழுதாக பேசி முடிக்கும் முன்னர் அவன் மேல் பாய்ந்தான்.

"இப்போ நீயா எழுந்து வெளியே போகல நான் கழுத்தை புடிச்சு வெளிய தள்ளுவேன்".

"பிரகாஷ் நீ எதுக்கு கோபப் படுற நானும் ஷிஜிகிட்ட லவ் பண்ணுறியான்னு கேட்டேன் அவளும் ஆமான்னு சொன்னா , இதுல நீ தலையிடாதே".

"அவளை என் முன்னாடி கூப்பிட்டு கேளுடா அப்போ தெரியும்".

சுஷின் மனதிற்குள் ,'சிக்குனியாடா உன் வாயாலேயே சொல்ல வைக்கிறேன்'.

"உன் முன்னாடி எதுக்குடா கேக்கணும்", அவனது விழியை ஊடுருவிப் பார்த்தான் சுஷின்.

சுஷினின் கேள்வியில் தான் சிக்கியது புரிந்தாலும் திமிறிக் கொண்டு, "அது இல்லைடா நம்ம முன்னாடி கேட்டுட்டா, நமக்கும் தெளிவாயிடும் இல்ல".

இந்த பதிலைக் கேட்ட ஷிஜிக்கு ஆயாசமாக இருந்தது. உள்ளறையில் இருந்து இங்கே நடந்து கொண்டிருப்பதை அவளும் கேட்டுக் கொண்டுதானே இருந்தாள்.

இனியும் பொறுக்க முடியாது என்று தோன்ற அறையை விட்டு வேகமாக வெளியேறி அவர்கள் முன்னால் நின்றாள்.

"வா ஷிஜி நானே உன்னை கூப்பிடணும்னு நினைச்சேன் நீயே வந்துட்ட, உன் வாயால சொல்லும்மா பிரகாஷ்க்கு உன் வாயால கேட்டால்தான் நிம்மதியாம். சொல்லு லவ் பண்ணுறதானே ".

ஷிஜி என்னபதில் சொல்லப் போகிறாள் என்று அறிய படபடக்கும் நெஞ்சுடன் பிரகாஷ் காத்திருக்க, ஷிஜி

பிரகாஷின் விழியுடன் தன் விழியைக் கலந்து கண்கள் கலங்க அழுத்தமாக சொன்னாள் ,"நான் காதலிக்கிறேண்ணா " ஒற்றை வரியில் தன் பதிலை சொல்லிவிட்டு ஓடி மறைந்தாள் ஷிஜி.

பிரகஷிர்க்கோ ஷிஜியின் பார்வையும் பதிலும் தனக்காக, தன்னை காதலிப்பதாக சொல்லப் பட்டது என்பது தெளிவாக புரிந்தது. இவை எல்லாம் விட அவளது அழுகை அவனது உயிரையே கரைத்தது, என்ன ஆனாலும் சரி யார் எதிர்த்தாலும் சரி.

சுஷின் தவறாக நினைத்தாலும் பரவாயில்லை. ஷிஜியை விரும்புவதை சொல்லிவிட வேண்டும். அவனது முடிவு எதுவாக இருந்தாலும் ஷிஜியுடனே சேர்ந்து எதிர் கொள்ளவேண்டும் என்ற உறுதியும் பிறந்தது.

அவனுக்கு மட்டுமா ஹேமந்த்-க்கும் கூட ஷிஜி பிரகாஷை காதலிப்பது இன்னும் அதிகமாக புரிந்தது.

ஆனால் சுஷின் மட்டும் புரியாதவன் போல,"பாத்தியாடா உன் முன்னாடியே சொல்லிவிட்டு போய்ட்டா இப்போ என்ன சொல்லுற".

சுஷினை புரியாத பார்வை பார்த்துவிட்டு அவனிடம் தெளிவாகவும் திடமாகவும் சொன்னான்.

"சுஷின், நானும் ஷிஜியும் தான் விரும்புறோம், அவ இப்போ காதலிக்கிறேன்னு சொல்லிட்டு போனதும் என்னைத்தான். அவளை யாருக்காகவும் எதுக்காகவும் விட்டுக் கொடுக்க நான் தயாராக இல்லை".

இந்த வார்த்தை அவனது வாயில் இருந்து காத்திருந்ததை போல சுஷினும், ஹேமந்தும் சொன்னார்கள் "அதுதான் எங்களுக்கு தெரியுமே".

சுஷின் ஓடிவந்து பிரகாஷை கட்டிக் கொண்டு சொன்னான்,"இதை சொல்ல உனக்கு இவ்வளவு நாள் தேவைப் பட்டுதாடா.

நல்லவேளை இப்போவாவது சொன்னியே இல்லையின்னா இன்னும் என்ன என்ன செய்ய வேண்டி இருந்து இருக்குமோ. ஹப்பா இப்பதான் எனக்கு நிம்மதியா இருக்கு".

சுஷின் சொன்னதைக் கேட்டதும் பிரகாஷிற்கு தலையே சுற்றுவதைபோல் இருந்தது. அப்பொழுதான் வீட்டைப் பார்த்தான் எந்தவித பரபரப்பும் இல்லை.

அதைவிட சுலோ, சுந்தரம் சொந்தங்கள் யாருமே இருக்க வில்லை. ஹேமந்த் கூட ஆபீஸ் க்கு கிளம்பி வந்ததுபோல்தான் இருந்தான்.

அசடு வழிய சுஷினைப் பார்த்தான் . இவர்களுக்கு இடையில் தான் அதிகப்படி என்று தோன்ற விடைபெற்று ஆபீஸ் செல்லுவதாக சொல்லிச் சென்றான்.

அவன் சென்றதும் சுஷின் ஷிஜியை போய் பார்க்குமாறு சொன்னான். மற்ற விஷயங்களை தான் பிறகு சொல்லுவதாக சொல்லிச் சென்று விட்டான்.

பிரகாஷிற்கு எப்படி ஷிஜியை எதிர் கொள்வது என்ற தயக்கம் இருந்தாலும் அவளை சமாதானம் செய்வது அவசியம் என்று உணர்ந்து அவளது அறைக்குச் சென்றான்.

ஷிஜி கட்டிலில் திரும்பி அமர்ந்திருந்தாள் . கதவு திறக்கும் ஒலியிலேயே பிரகாஷ் வருவதை உணர்ந்தாலும் திரும்பிப் பார்க்காமல் இருந்தாள்.

அவள் பார்க்காததே அவளது கோபத்தை பிரகாஷிற்கு உணர்த்தியது. அவளது அருகில் சென்று எதுவும் சொல்லாமல் அமர்ந்தான். அவள் எழுந்து வெளியே செல்லப் பார்த்தாள்.

அதை உணர்ந்து அவளது கையைப் பிடித்து தடுத்தான். அவளும் கையை விடுவித்துக் கொள்ள போராடினாள் அவனது பிடி இரும்பாக இறுகியது.

அந்த அழுத்தத்தில் போராட்டத்தை நிறுத்தி முகத்தை மட்டும் திருப்பிக் கொண்டாள். இருவருமே பேசவில்லை.

அவள் சண்டையாவது போடுவாள் சமாதானம் செய்யலாம் என்று எண்ணி வந்தது பொய்த்துப் போக, பிடித்திருந்த அவளது கரத்தில் தன் முகத்தைப் புதைத்தான்.

ஆனாலும் அவள் திரும்பவும் இல்லை கையை உருவிக் கொள்ளவும் முயலவில்லை. ஆனால் கைகளில் ஈரம் படுவதை உணர்த்து வேகமாக திரும்பினாள்.

அவளது அசைவில் அவள் திரும்பியதை உணர்ந்து , "என்னை மன்னிச்சுடு ஷிஜி, என்னோட தயக்கத்தினால் உன்னோட மனதை ரொம்ப காயப் படுத்திட்டேன்.

ஆனால் இந்த ரெண்டு நாளில் உன்னை யாருக்காகவும் எதுக்காகவும் விட்டுக் கொடுக்க முடியாதுஎன்று தெளிவா புரிஞ்சுகிட்டேன்.

ஆனாலும் ஏதோ ஒண்ணு என் கூட்டைவிட்டு வெளியவராமல், வர விடாமல் தடுத்து விட்டது.

அது என்னன்னா............. எனக்கு யாருமே இல்லை, உறவு, சொந்தம், நட்புன்னு சொல்லிக்க எனக்கு இருந்தது உன்னோட அண்ணன் மட்டும்தான் எங்கே நம்மோட காதலால் அதையும் இழந்து விடுவேனோங்குற பயம்தான் அதற்குக் காரணம்.

ஆனால் இப்போ இந்த நிமிஷம் நான் உணர்ந்தேன்டா நீ இல்லைன்னா எனக்கு வாழ்க்கையே இல்லை.

உன்னோட அன்பு எனக்கு வேணும், உன்னோட காதல் எனக்கு வேணும், உன்னோட அணைப்பு எனக்கு வேணும், உன்னோட கோபம் எனக்கு வேணும், இது எல்லாம் வேணும்னா நீயே எனக்கு வேணும்டா.

என்னை புரிஞ்சுப்பியா........... " , அவளது பதிலுக்காக இடைவெளி விட்டான். அவள் பதில் சொல்லவில்லை.

# 36

உன் கேலியை ரசிக்கும் மனது

உன் கோபத்தையும் ரசிக்கிறதே

இது காதலென்றால்................

காலையில் கண்விழித்த சுபாவிற்கு முதலில் தான் எங்கு இருக்கிறோம் என்ற நினைவே இல்லை. கண்ணை கசக்கிக் கொண்டு சுற்றியும் பார்த்தாள் . ப்ரவீனை அவளது கண்கள் தேடின.

நேற்று அவன் புகுந்துகொண்ட ஹாலைப் போய் பார்த்தாள். அவன் ஸோபாவில் சுருண்டு படுத்திருப்பது தெரிந்தது.

அவனது உயரத்திற்கு அது குட்டையாக இருந்தது. பார்க்க கஷ்ட்டமாக இருந்தது சுபாவிற்கு. ஏதோ ஒரு சிந்தனையில் அவனது அருகில் சென்று , "ப்ரவீன் " என்று அழித்ததற்குப் பிறகுதான் ஏன் அவனை எழுப்பினோம் என்று எண்ணிக் கொண்டாள்.

அவன் கண் முழிக்கும் முன்னர் அங்கிருந்து விலகி விடுவோம் என்று எண்ணும் போதே அவன் ஸோபாவில் இருந்து எழுந்து அமர்ந்து விட்டான்.

"என்ன ஆச்சு சுபா ஏதாவது வேணுமா".

மனதுக்குள்ளேயே சொல்லிக் கொண்டாள்,'ஆமா நீதான் வேணும்'. ஆனால் வெளியே சொன்னாள், “ இங்க கஷ்ட்டப் பட்டு படுத்து இருக்கிறமாதிரி இருந்தது அதான்...............

நீங்க பெட்ல போய் படுங்க", அவள் சொல்லி முடித்ததும் அவனது முகத்தை பார்க்கும் துணிவு இல்லாதவளாய் கீழே இறங்கிச் சென்றாள்.

சுபா சொன்னது புரிந்தும் புரியாமலும் விழித்துக் கொண்டிருந்தான் ப்ரவீன். என்னதான் சொல்ல வாரா

இனிமேல் பெட்லையே படுன்னா இல்லை நான் எழுந்ததும் நீ படுத்துக்கலாம்னு சொல்ல வாராளா.

சிந்தனையை ஒதுக்கிவிட்டு குளிக்கச் சென்றான். அங்கு பாத்ரூம் ஈரம் இல்லாமல் இருப்பதைப் பார்த்து இவள் குளிக்காமல் கீழே போய் விட்டாளா என்ற பதைப்புடன் வெளியே வரும்போதே சுபாவிடம் அன்னம் பேசுவது கேட்டது.

சுபா நேற்று பார்த்த அலங்காரத்திலே எந்தவித மாறுபாடும் இல்லாமல் வந்ததை அன்னத்தின் பார்வை சுபாவின் முகத்தை ஆராய்ந்தது.

அன்னத்தின் பார்வை தன்னை தேவைக்கும் அதிகமாக பார்ப்பதை உணர்ந்த பின்புதான் தான் செய்த மிகப்பெரும் தவறு அவளுக்கு புரிந்தது.

பார்வையை தரையில் பதித்து பேசாமல் நின்றாள். அன்னத்திற்கு ஒரு நொடியில் அனைத்தும் விளங்கியது.

சுபாவின் தலையை பரிவுடன் தடவினார். "என் பையனை ஏத்துக்க முடியலையா சுபா , என்னால உன்னோட உணர்வுகளை புரிந்துகொள்ள முடியுது . ஆனாலும் முடிஞ்சா மன்னிச்சு ஏத்துக்கோடா............ இல்லை என்றாலும்................", அவரால் மேலே சொல்ல இயலவில்லை.

தன் ஒரே செல்ல மகன்செய்த பிழை பெரியதுதான் ஆனாலும் அவனும் சந்தோசமாக வாழவேண்டும் என்று அந்த தாயுள்ளம் தவித்தது.

தான் பெற்ற மகன் இவளது மேல் உள்ள ஆசையில்தான் சிறிது பிசகிவிட்டானே தவிர அவன் நல்லவந்தான் என்பதில் அவருக்கு சந்தேகம் இல்லை.

அவன்மீது நிறைய கோபம் இருந்தது. ஆனாலும் அன்று இரவு தான் ஸ்டேஷன் கிளம்பும் போது தனக்கு திருமணம் என்று ஒன்று நடந்தால் அது சுபாவுடன் மட்டும்தான்

என்பதை அவன் அழுந்த சொன்னவிதமே அவரை யோசிக்க வைத்தது.

எனவேதான் சுபாவை எந்தவித தயக்கமும் இல்லாமல் ஏற்றுக் கொள்ள முடிந்தது. ஆனால் சுபாவின் மனநிலைமையும் அவர் யோசித்தார், எனவேதான் இன்று இவ்வாறு சுபாவிடம் பேசினார்.

சுபாவிற்கு அவர் தவறாக நினைக்கக் கூடாதே என்ற எண்ணத்தில் தனக்கு ப்ரவீனை பிடித்திருக்கிறது அவர் கவலைப் பட வேண்டாம் , இன்னும் சிறிது நாளில் எல்லாம் சரியாகிப் போகும் என்று சொல்ல வாயைத் திறந்த அந்த வேளையில் ப்ரவீன் அவள் முன் நின்றான்.

அவனது முகத்துக்கு நேராக இதைசொல்ல வெட்கம் தடுக்க முகசிவப்பை தடுக்க முயன்று படியேறி சென்று விட்டாள்.

ப்ரவீன் வந்ததர்க்குக் காரணமே அவளது வாயால் திரும்பவும் தன்னை பிடிக்கவில்லையென்று தன் தாயின் முன்னாள் கேட்கும் சக்தி இல்லாததாலேயே.

அவன் இந்த பதட்டத்தில் இருந்ததால் அவளது வேட்கத்தையோ, முக சிவப்பையோ கவனிக்கவில்லை.

ஆனால் சுபாவின் முகத்தையே ஆராய்ந்து கொண்டிருந்த அன்னத்தின் பார்வையில் இது பட தவறவில்லை.

இந்த நிறைவுடனேயே ப்ரவீனிடம், "சீக்கிரம் நல்ல முடிவா சொல்லுடா கண்ணா" , என்று சொல்லிவிட்டு , சிரித்துக் கொண்டே சென்றார்.

அவர் சொன்னது தனக்கு பேரனோ பேத்தியோ சீக்கிரம் வேண்டும் என்ற அர்த்தத்தில்.ஆனால் அவன் புரிந்து கொண்டதோ சுபாவை விட்டு விலக சொல்லுகிறார் என்று.

பிரகாஷ் தாயிடம் கெஞ்சும் பிள்ளையாக ஷிஜியிடம் மன்னிப்பை வேண்டி நின்று கொண்டிருந்தான்.

ஷிஜிக்கு அவன்மேல் அதிகமான கோபம் இருந்தது உண்மைதான் ஆனால் அவனது கண்ணீரை உணர்ந்த அந்த நொடி அவளது கோபம் பாதி குறைந்தது.

அவன் தனக்கு யாரும் இல்லை சுஷினை இழக்க விரும்பவில்லை, ஆனால் இப்பொழுது ஷிஜியை எதற்காகவும் இழக்க தயார் இல்லை என்று சொன்னதும் அவளது கோபம் முற்றிலும் வடிந்தது.

அவனது பேச்சு நெஞ்சை கனமாக்க என்ன சொல்லுவது எப்படி சொல்லுவது என்று தெரியாமல் நின்று கொண்டிருந்தாள்.

அவளது மௌனம் தொடரவும்,"ஷிஜி என்மேல் உனக்கு ரொம்ப கோபம் இருக்கும் என்று தெரியும் ஆனாலும் நான் என் மனதை உன்கிட்டே திறந்த பிறகும் மன்னிப்பு கேட்ட பிறகும் உன்னால் மன்னிக்க முடியவில்லையா.

சரி உனக்கு எப்பொழுது மன்னிக்க முடியுதோ அப்பொழுது எனக்கு போன் செய் நான் ஓடி வருவேன்.

அதுவரை உன்கண்ணில் படாமலே இருந்து கொள்கிறேன்", அவளது பதிலை எதிர் பார்க்காமல் வெளியேற முயன்றான்.

ஷிஜி என்ற சிலைக்கு அப்பொழுதுதான் உயிர் வந்தது. வேகமாக அவனையும் தாண்டிச் சென்று கதவில் சாய்ந்துகொண்டு அவனைப் பார்த்து நிதானமாக கேட்டாள்.

"என் பதில் தெரிய வேண்டாமா, நீங்க பாட்டுக்கு வந்தீங்க சொன்னீங்க போயிட்டே இருக்கீங்க", ஒற்றைப் புருவத்தை தூக்கி தலையை சரித்து அவள் கேட்ட விதம் பிரகாஷிற்கு அனைத்தையும் புரியவைக்க போதுமானதாக இருந்தது.

புரிந்த பிறகு விலகிநிற்க அவன் என்ன முட்டாளா. இரண்டு எட்டில் அடையவேண்டிய ஷிஜியை ஒரே எட்டில் அடைந்து

கதவில் சாய்ந்து இருந்த அவளின் இரண்டு பக்கமும் கைகளை ஊன்றி சிறை வைத்தான்.

ஷிஜி இதை முற்றிலும் எதிர் பார்க்கவில்லை பிரகாஷ் இதுவரை அவளை பார்வையில் தொடர்ந்திருக்கிறான் அந்த பார்வையில் கூட கண்ணியம் இருக்கும்.

அவளை நெருங்கி நிற்கும் சந்தர்ப்பங்கள் கிடைத்தால் கூட விலகியே நிற்பான். ஆனால் இன்று அவனது மூச்சுக் கற்று அவளது நெற்றியில் தீண்டும் தூரத்தில் நின்றான்.

ஷிஜி சிறு அதிர்ச்சியில் அவனிடம் ஏதோ கேட்கவேண்டும் என்பதற்காக கேட்டாள்,என்ன இது".

அவன் புரியாத மாதிரி கேட்டான்,"எது".

ஷிஜி தனது உணர்ச்சிகளை மறைக்க முயன்றபடி கேட்டாள் ,"இப்படி நின்னா என்ன அர்த்தம், விலகுங்க அண்ணன் வெளியே இருக்கான் தேடுவான் . நாம போகலாம்".

"போகலாமே கதவை திற", எதுவும் அறியாதவன் போல் அவன் கேட்டது அவளுக்கு பொய் கோபத்தை வர வைத்தது.

அந்த கதவு உள்பக்கமாக திறக்கக் கூடியது பிரகாஷ் விலகினால்தான் அவள் கதவை திறக்க முடியும் ஆனால் அவன் விலகும் எண்ணமே இல்லாமல் ஷிஜியின் அவஸ்த்தையை ரசித்துக் கொண்டிருந்தான்

"நீங்க விலகினால்தான் கதவை திறக்கமுடியும்", பற்களை கடித்தவாறு அவள் சொல்ல, அவனோ "நான் விலகிதானே நிற்கிறேன்.

என் உடம்பு எங்கேயாவது உன்னை தொடுகிறதாபார்" அவளைஇன்னும் சீண்டினான்..

'ராஸ்க்கல் எப்படி சொல்லுறான் பாரு , இப்போ நான் கைவைத்து தள்ளினால் நீதான் தொட்டன்னு சொல்லுவான் . இப்படி நிற்ப்பதுவேற அவஸ்த்தையா

இருக்கே என்னதான் செய்ய', மனதுக்குள்ளேயே செல்லமாக கடிந்து கொண்டிருந்தாள் அவனை.

இருவருமே விலகாமல் எவ்வளவு நேரம்தான் நின்றனரோ , ஷிஜி கண்களை உயர்த்தி பிரகாஷைப் பார்த்தாள் . அவனது பார்வையில் தெரிந்த வேறுபாடு ஷிஜிக்கு புரிந்தது.

அவள் பார்த்ததும் ஆழ்ந்த குரலில் சொன்னான்,"ஷிஜி ஐ........... லவ்.................. யூ....................."

அந்த மந்திர வார்த்தையோ அவனது பார்வையோ ஏதோ ஒன்று அவளை விழி மூட வைத்தது.

கதவில் சாய்ந்து விழி மூடி நின்ற அவளது கோலம் பிரகாஷை தடுமாற செய்தது. இன்னும் நெருங்கி............ அவன் நெருங்குவது அவனது மூச்சுக் காற்றின் தீண்டலில் உணர்ந்த பின்பும் விழிகளை திறவாமல் அசையாது நின்றாள் ஷிஜி..

அவளது மூடிய இம்மைகளில் இதழ் பதித்தவன் சற்று விலகினான். அவன் கன்னத்தில் இதழ் பதிப்பான் என்று எண்ணியிருந்த ஷிஜி சற்றும் எதிர் பார்க்காத வண்ணம் அவளது இதழ்களை தன் இதழ்களால் மூடினான்.

கண்களை அகலத் திறந்தவள் அடுத்த நிமிடம் அந்த முத்தத்தில் கரைந்தாள். அவளது கைகள் அவனது சட்டையின் மார்புப் பகுதியை கசக்கியது , பின்பு உயர்ந்து சட்டையின் காலரை பிடித்தது.

அவன் ஷிஜியின் இடுப்பில் கை கோர்த்து தன்னுடன் அணைத்துக் கொண்டான். இதழ்களில் இருந்து பிரிந்து அவளது கழுத்தில் முகம் புதைத்துக் கொண்டான்.

மேலும் முன்னேறப் போன அவனை, இயல்பான பெண்ணின் குணம் தலை தூக்க தள்ளினாள் ஷிஜி.

அவனை ஒரே நிமிடத்தில் விலக்கி விட்டு வேகமாக சொன்னாள்,"வெளியே போங்க, இனிமேல் என் அனுமதி இல்லாமல் என் ரூமுக்குள்ளே வரக் கூடாது போய்டுங்க", அவனது முகத்தை பார்க்கவும் வெட்கம் தடுத்தது.

அவள் சொல்ல ஒரே காரணம், தன்னால் இனிமேலும் அவனது முன்னாள் திடமாக இருக்க முடியாது என்பதே.

ஆனால் பிரகாஷோ,"ஷிஜி ஏன் இப்படி சொல்லுகிறாய், இவ்வளவுநாள் நான் உன்கிட்டே பார்வையாவது வேறுமாதிரி பார்த்து இருக்கிறேனா.

ஆனால் இன்றைக்கு உன்னிடம் காதல் சொல்லிவிட்டேன் அந்த உரிமையில் தான்............... கொஞ்சம்".

"முதல்ல வாயை மூடுங்க, வெளியே போங்க பேசுறதை பாரு", அவளது குரல் அவஸ்த்தையாய் குழைந்து வந்தது. நடந்து முடிந்த சம்பவத்தை நினைக்கவும் அடிவாயிற்றை பிசைவது போன்ற உணர்வு எழுந்தது.

முதல் முத்தம், முதல் அணைப்பு எவ்வாறு தன் உணர்வுகளை அடக்குவது என்று அவள் சிந்தித்துக் கொண்டிருந்தால் , அவனோ விளக்கிக் கொண்டிருந்தது அதைவிட அவஸ்த்தையாய் இருந்தது.

ஆனால் பிரகாஷோ அவளது உணர்வுகளை கோபம் என்று புரிந்து கொண்டதுதான் விந்தை , அவள் தள்ளியதுமே அவன் நனவுலகம் வந்து விட்டான்.

ஆனால் ஷிஜி முகத்தை காட்டாமல் சொன்னதுதான் தவறாகிப் போனது. அவளது முகத்தை பார்த்திருந்தாலோ, அல்லது அவளது குரலில் இருந்த குழைவை கவனித்ருந்தாலோ அவனதுமனது காயப் பட்டிருக்கிறதோ.

ஷிஜி திரும்பிப் பார்த்தபோது பிரகாஷ் அங்கு இல்லை.

நாட்கள் நகர்வது நரகமாக இருக்கிறது

நிமிடங்கள் தவறுவதும் நிலைக்காமல் இருக்கிறது

ஆனால் உன் நினைவு மட்டும் நிலைத்து இருக்கிறதே

இது காதலென்றால்.............

சுஷின் கொஞ்சம் ப்ரீ யாக உணர்ந்தான். கொஞ்ச நாட்களாக சுபாவின் கல்யாணம், ஷிஜியின் பிரச்சனைக்கு முடிவு என்று ஒரு இறுக்கமாகவே உணர்ந்தான்.

மினியை பார்க்கவேண்டும் பேச வேண்டும் என்ற ஆவல் அதிகமாகவே எழுந்தது இப்பொழுது. ஷிஜி-பிரகாஷ் கல்யாணமும் முடிவாகி விட்டதால் இரண்டு திருமணங்களையுமே ஒரே நாள் வைப்பதாக முடிவு செய்யப் பட்டு விட்டது.

திருமணத்திற்கு இன்னும் இரண்டு வாரங்களே இருந்தன. சுபாவை பார்த்தும் நிறைய நாள் ஆகி விட்டது. அவளையும் பார்க்க வேண்டும் சிந்தனையில் இருந்தவன் உடனே சுபாவை போய் பார்த்திருந்தால்............. .

மினியிடம் இன்னும் வெறுப்பை சேர்த்திருக்க நேர்ந்திருக்காது. நினைப்பதெல்லாம் நடக்குமா என்ன.

மினிக்கு உடனடியாக போன் செய்தான். முதலில் வர முடியாது என்று மறுத்தவள் தன் தாயின் முக வாட்டத்தை கவனித்து வருவதாக சொல்லிவிட்டு வைத்தாள்.

சுஷினே சென்று வீட்டில் இருந்து அவளை பிக்கப் செய்து கொண்டான். சுஷின் மினியின் வாடிய முகத்தைப் பார்த்தான்.

தான் அவளை பார்க்காததால் தான் அவள் கோபமாக இருக்கிறாள் என்பது புரிந்தது அவனுக்கு. நேராக பீச் ரெஸ்டாரென்ட் க்கு சென்று ஒதுக்குபுறமாக இருந்த டேபிள் ளில் அமர்ந்தனர்.

மினி சுஷினுடன் இருக்கும் போது தன் மனம் அமைதி அடைவதை ஒருவித இயலாமையுடன் உணர்ந்தாள்.

அவனை விட்டு தூரமாய் இருக்கும்போது மனம் தேவை இல்லாமல் யோசிப்பதும், அவன் மீது கோபம் பெருகுவதையும் தடுக்க இயலவில்லை.

ஆனால் அவன் அருகில் இருக்கும்போது அவனைத் தவிர எதுவுமே ஞாபகம் இருப்பதில்லை , கோபத்தை கட்டி வைக்க வேண்டியதாக இருந்தது.

அவனை நல்லவன் என்று ஒத்துக்கொள்ளவும் முடியவில்லை . கெட்டவன் என்று விலகவும் முடியவில்லை இதற்கு இந்த அலை பாய்தலுக்கு ஒரு முடிவு கட்டியே ஆகவேண்டும் என்று தோன்ற,

தனது சந்தேகத்தை அவனிடம் கேட்டு விடலாம் என்று முடிவு செய்து நிமிர்ந்த போது , சுஷின் அவளது கையை தனது கைகளுக்குள் எடுத்து வைத்துக் கொண்டு அவளையே இமைக்காமல் ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

சுஷினின் பார்வையால் அவளது முகம் வெட்கத்தால் சிவந்தது. கேட்க வேவேண்டியது தொண்டைக் குழியிலேயே சிக்கிக் கொண்டது.

"மினி உனக்கு என்மேல ஏதாவது கோபமா, இல்ல வருத்தமா. ஏன் உன்முகம் வாடி போய் இருக்கு . என்னால கொஞ்சநாளா உன்கூட பேசவே முடியலைடாகொஞ்சம் பர்சனல் ப்ரோப்ளம்

அதனால்தான்............... ஆனா எனக்கு எப்பவுமே நீ ஸ்பெஷல் தான். என்னோட நினைப்பு எப்பவுமே உன்னை சுத்திதான் இருக்கும் சரியா. அதை மட்டும் நீ புரிஞ்சுகிட்டா போதும்டா"

அவனது பேச்சு அவளது மனதில் சிறிது தெம்பை ஊட்டியது. அவனை காதலுடன் பார்த்தாள்.

அவளது பார்வையில் தெளிவு பிறக்கவும் புன்னகை விரிய, "இப்போதான் என் மினி முகத்தில் வெளிச்சமே வருது. சரி என்ன சாப்பிடுற",

பேரர் வந்ததும் தங்களுக்கு வேண்டியதை ஆர்டர் செய்தனர். சாப்பாடு வந்தவுடன் சாப்பிடு மினி என்றான்.

அவளோ அவனை முறைக்க முயன்று கொண்டே ,"கையை விட்டால்தான் சாப்பிட முடியும்" என்றாள்.

சிரித்துக் கொண்டே அவளது புறங்கையில் இதழ்களை பதித்துவிட்டு விடுவித்தான். ஒருநிமிடம் கையில் உணர்ந்த குறுகுறுப்பை ரசித்தவள் பேசாமல் சாப்பிடத் துவங்கினாள்.

பேசிக் கொண்டே நேரம் போவது தெரியாமல் தங்கள் உலகத்தில் இருந்தனர். அவர்களை கலைத்தது சுஷினின் அலை பேசி.

அழைத்தது சுபா அவனது முகம் குழப்பத்தை கடன் வாங்கியது. புருவம் மத்தியில் முடிச்சு விழ கொஞ்சம் பதட்டமாகவே ஆன் செய்தான்.

மினி அவனது முக பாவங்களை கவனித்துக் கொண்டிருந்தாள். காரணம் இல்லாமலே அவளது மனம் படபடத்தது

மினியின் முகத்தை கவனிக்காமலே ஆன் செய்த வேகத்தில் சொன்னான் ,"சுபா, என்ன சொல்லு ஏதாவது பிரச்சனையா".

ஆனால் பேசியது ப்ரவீன் வன் பேசியது இரண்டே வார்த்தைகள் "உடனே வீட்டுக்கு வாங்க பேசணும்".

அவனது குரலில் ஒலித்த உறுதி வேறு எதையும் சிந்திக்க விடவில்லை. மினியிடம் எதுவும் சொல்லாமலே அவனது சிந்தனையில் உழன்றவனாக மினியை அழைத்துக் கொண்டு கிளம்பினான். மினியோ சுபா என்ற அவனது

கனிந்த அழைப்பிலேயே அதிர்ச்சியானவள் , அவனிடம் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கேட்டாள்.

"அன்னைக்கு ஹோச்பிடலில் பாத்தேனே அவளா",

அவனோ மினியின் மனநிலை புரியாமல், அன்று சுபாவை ஹோச்பிடலில் பார்த்ததை இவள் எப்படி பார்த்தாள் என்பதை கூட யோசிக்காமல் "ஆமா அவளேதான் என்னை கூப்பிடுறா" அவனது நினைவு எல்லாம் சுபாவிடம் இருக்க யோசிக்காமல் வாய் பதில் சொன்னது.

அவனது பதிலில் தலையில் இடி இறங்கியதுபோல் உணர்ந்தாள் மினி.

கண்களில் அருவி வழிய முற்ப்பட்டது. இவனது முன்பு அழுவதா வீராப்பு தடுத்தது. வீடு வந்ததும் மினி தன் போக்கில் இறங்கி போனதோ அவனை திரும்பிப் பார்த்ததோ சுஷின் கருத்தில் பதியவே இல்லை.

காரை கிளப்பிக் கொண்டு சென்றே விட்டான். மினியோ சுபாவின் நினைவில் தன்னை கூட அவன் மறந்துவிட்டதாகவே நினைத்தாள்.

தன்னை விட அவனுக்கு அந்த சுபா முக்கியமாகிப் போனாள் என்று குமுறினாள். சுஷின் கொஞ்சநேரம்முன்பு பேசிய அனைத்தும் மூளையில் இருந்து அழிக்கப் பட்டது.

சுஷினின் கார் சுபாவின் வீட்டின் முன்னால் நின்றது. 'இன்னைக்குதான் கொஞ்சம் நிம்மதியா இருந்தேன் அது இந்த ஆண்டவனுக்கு பொறுக்கலையா ஆண்டவா' , யோசனையை கலைத்தது ப்ரவீனின் அழைப்பு.

"வாங்க சுஷின் நாம இங்க இருந்து பேசலாம்".

"பேசலாம் சுபாவை எங்கே நீங்க அவளோட நம்பர்ல இருந்து கூப்டிங்க அவளுக்கு உடம்பு சரி இல்லையா".

"அவ நல்லாதான் இருக்கா ............... இருக்கணும்னு நான் நினைக்கிறேன்........... அதனால்தான் உங்களை கூப்பிட

வேண்டியதா போச்சு".

"ப்ரவீன் நீங்க சொல்ல வாறது எனக்கு புரியலை", சுஷினுக்கு ஏதோ பூதம் கிளம்பப் போவது புரிந்தது.

"அதை எப்படி சொல்லுவது என்றுதான் எனக்கு புரியவில்லை. ஆனால் சொல்லித்தான் ஆகணும்".

"சுத்தி வளைக்காமல் நேரடியா விஷயத்துக்கு வாங்க , எனக்கு என்னமோ நீங்க குழப்பத்துல இருக்கிற மாதிரி இருக்கு. சரி சுபா எங்கே".

"அவள் ரூம்ல இருப்பான்னு நினைகிறேன்", இந்த பதிலே சுஷினுக்கு இன்னும் அதிர்ச்சியாக இருந்தது.

"நினைக்கிறிங்களா.......... என்ன பதில் இது பிரவீன்.......... அப்போ என் தங்கச்சிகூட நீங்க வாழலையா. உங்களை நம்பிகல்யானம் செஞ்சு வச்சேனே அப்போ நான் முட்டாளா............

அன்னைக்கே என் தங்கச்சி சொன்னா உங்களை பற்றி நான்தான் அதை நம்பவில்லை. அவளை சமாதானம் செய்தேன் ஆனால் நீங்க இப்போ சொல்லுவதைப் பார்த்தால்............ ", அவனது பார்வையில் உஷ்ணம் ஏறியது.

ப்ரவீனை அடித்திப் போட்டுவிடும் எண்ணம் தோன்றியது. ப்ரவீன் மௌனம் சாதித்தான்.

இந்த பிரச்சனையின் நாயகியோ அறையில் அமர்ந்து ப்ரவீனைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

அன்றைய பேச்சுக்கு பிறகு சுபா அறையில் இருக்கும்போது ப்ரவீன் அறைக்கு வருவதே இல்லை.

பகல் வேளை முழுவதும் பிசினஸ் ஆரம்பிப்பதற்காக தனது நண்பர்களை பார்க்கப் போவதாகவும், அவர்கள் ஆரம்பிக்கப் போகும் ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் கட்டிட

வேலையை பார்க்கப் போவதாகவும் சொல்லி சென்று விடுவான்.

காலை சாப்பாடு கூட வெளியேதான், லஞ்ச் ம் நண்பர்களுடன் சாப்பிட்டு விடுவதாக போன் செய்து விடுவான்.

அவனுடன் சாப்பிட வேண்டும் என்று சுபா எவ்வளவு நேரம் காத்திருந்தாலும் வரவே மாட்டான். அவளை நேருக்கு நேர் பார்ப்பதையே அறவே தவிர்த்தான்.

இரவில் சீக்கிரம் வீட்டுக்கு வந்தாலும் சுபா உறங்கும் வரை அறைக்குள் வருவது இல்லை. இவளும் வெட்கத்தை விட்டு எப்படி அழைப்பது என்று விட்டு விடுவாள்.

சில நேரம் தன் தாயுடன் பேசிக் கொண்டிருப்பான். நேரம் பத்து ஆனதும் அன்னம் அவனை தூங்க போக சொன்னால் தனக்கு ஒரு போன் வரவேண்டும், நண்பன் பேசுவான், இல்லையென்றால் மெயில் அனுப்பவேண்டும் இப்படி ஏதாவது சொல்லிவிட்டு ஹாலிலேயே உட்க்கார்ந்து கொள்வான்.

இல்லையென்றால் தன் லேப்டாப்பில் மூழ்கி விடுவான். சுபா தண்ணீர் எடுக்கும் சாக்கிலும் வேறு ஏதாவது ஒதுக்கி வைக்கும் சாக்கிலும் அவனை பார்த்துக் கொண்டே செல்வாள்.

ஆனாலும் எந்தவித மாற்றமும் இல்லாமல் இருப்பான் ப்ரவீன்.

அவளுக்கே தெரியாது அவளது தரிசனம் அறைக்குள் சென்றால் கிடைக்காது என்பதாலேயே அங்கேயே உட்க்கார்ந்து அவளை ஜாடையாக ரசித்துக் கொண்டிருப்பான்.

ஆனால் சுபா அங்கே ஏன் நடமாடுகிறாள் என்பதைத்தான் ப்ரவீன் புரிந்து கொள்ளவில்லை.

ஒருநாள் ப்ரவீன் வரும்வரை விழித்திருக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் சுபா கட்டிலில் அமர்ந்து இருந்தாள்.

நேரம் ஒருமணியை நெருங்கும் நேரம் கதவு திறக்கும் ஒலி கேட்டது. சுபா கண்களை மூடி தூங்குவதைப் போல் படுத்துக் கொண்டாள்.

உள்ளேவந்த ப்ரவீன் நேராக அவளது அருகில் சென்று மண்டியிட்டு அமர்ந்து அவளது முகத்தையே பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

சுபாவின் நிலைமைதான் இப்பொழுது பரிதாபமாக இருந்தது. அந்த AC குளிருக்கும் வேர்த்தது, அதுவும் அவன் அருகில் அமர்ந்து தன்னையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தது இன்பமா துன்பமா என்று அறியாத நிலையில் இருந்தாள்.

ஒருமணி நேரம் கடந்ததும் எழுந்து அவளுக்கு எட்டாதவகையில் குட் நைட் சொல்லிவிட்டு அந்தபக்கம் இருந்த ஹால் ஸோபாவில் படுத்துக் கொண்டான்.

சுபாவிற்கு அவன் ஏன் தன்னை நெருங்காமல் தவிர்க்கிறான் என்ற விந்தை புரியவே இல்லை . தான் பார்க்காத போது தன்னை வெறித்துப் பார்ப்பதும் புரிந்துதான் இருந்தாள் .

ஆனால் அவனிடம் எப்படி துவங்குவது என்றுதான் புரியவில்லை. ஏன் என்னை தவிர்க்கிறாய் என்றா, என்னை பிடிக்கவில்லையா என்றா, அதற்க்கு அவன் என்ன சொல்லுவான்.

எதை வைத்து இந்த முடிவுக்கு வந்தாய் என்று கேட்டால் என்ன செய்வது. நீ என்னிடம் பேசாமல், தொடாமல்.................. ', சீ........... இதை எப்படி அவனது முகத்துக்கு நேராக கேட்பது.

ஆனாலும் ஒரு முடிவுடன் கீழே இறங்கி வந்தாள். பக்கத்து அறையில் சுஷினின் கோபமான குரல் கேட்பதுபோல்

தோன்ற அறைக்கு அருகில் சென்றாள்.

"சொல்லுங்க ப்ரவீன் என்ன எண்ணத்துல நீங்க இப்படிஎல்லாம் நடந்து கொள்கிறீர்கள். அவ வாழ்க்கையவே வீணாக்கணும்னு முடிவுல இருக்கிங்களா. இல்ல............. இவளைவிட வேற எவளையாவது பிடிச்சுட்டிங்களா.

என் தங்கச்சிக்கு துரோகம் செய்யணும்னு நீங்க கனவில் நினைச்சா கூட உங்களை விட மாட்டேன். என் தங்கச்சி பயந்தது மாதிரியே ஆயிடுச்சே...............".

"இதான் நீங்க சொன்னிங்களே இதுதான் இந்த பயம்தான்................ சுபா கிட்ட என்னை நெருங்க விடாமல் செய்யிது.

அன்று நான் அவள்மேல் ஆசிட் வீசியதன் காரணம் , எனக்கு கிடைக்காத அவள் யாருக்கும் கிடைக்கக் கூடாது என்ற எண்ணமில்லை. அப்படியாவது அவள் எனக்கு கிடைக்க மாட்டாளா என்ற எண்ணம்தான்.

சுஷின் புரியாமல் பார்க்கவும், “அதாவது ஆசிட் பட்டு முகம் கோரமானால் அவளை வேறு யாரும் திருமணம் செய்ய மாட்டார்கள், அவள் எனக்கே கிடைப்பாள் என்ற சுயநலம்தான்”, இதை சொல்லும் பொழுதே தயக்கத்தில் குரல் உள்ளே போய்விட்டது அவனுக்கு.

அதைவிட அவள்மேல் நான் ஆசிட் வீச நினைக்கவே இல்லை. அவளை மிரட்டுவது மட்டுமே என் எண்ணமாக இருந்தது. ஆனால் அவள் என்னைப் பார்த்த பயத்திலேயே என் கையை தட்டி விட்டாள். அதில்தான் அவள் கையில் பட்டது.

மற்றபடி அவளுக்கு என்னை இவ்வளவுதூரம் பிடிக்காது என்று தெரிந்திருந்தால் நான் எதுவுமே செய்து இருக்க மாட்டேன். பிடிக்காத பெண்ணை தொடும் அளவுக்கோ, அவளை கட்டாயப் படுத்தும் அளவுக்கோ நான் முரடனோ, மனசாட்சி இல்லாதவனோ இல்லை.

அவளுக்கு என்னை பாத்தாலே பயமா இருக்குன்னு உங்ககிட்ட அன்னைக்கு சொன்னதை நான் கேட்டேன். ஆனாலும் என்னோட காதல் அதை மாற்றும்னு நினைச்சேன் ஆனா.........

அப்போகூட அதை நான் நம்பவில்லை ஆனால் அவளை நெருங்கின அப்போ அவ கண்ணில் பயம் தெரிஞ்ச அப்போதான் நான் நொறுங்கி போயிட்டேன்.

அவகூட வாழவும் முடியாமல், தள்ளிவச்சு பார்க்கவும் முடியாமல் அவளோட பயத்தை எப்படி போக்கன்னும் தெரியாமல், அவ சந்தோசமா இருக்காளா என்னன்னு தெரிஞ்சுக்கவும் முடியாமல்,

அவ சந்தோஷம்தான் முக்கியம்னு விலக்கி வைக்கவும் முடியாமல்.............. நரகமா இருக்கு சுஷின் ஒவ்வொரு நாளும் எனக்கு ஏன் விடியுது, ஏன் இரவுன்னு ஒன்று வருதுன்னு................", மேலே பேச முடியாமல் முகத்தை மூடி விம்மினான்.

சுஷின் மட்டுமல்ல , வெளியே நின்ற சுபாவால் நிற்கக் கூட முடியவில்லை, அன்றைக்கு நான் தெரியாமல் ஏதோ பேசினேன் ஆனால் இப்போ மனசுல ப்ரவீனைத் தவிர வேறு நினைப்பே இல்லையே.

என் பேச்சும் செயலும் எவ்வளவு காயப்படுத்தி இருந்தா இப்படி அழுவார். என்னை எவ்வளவு காதலிச்சா இப்படி கஷ்டப்படுவார்.

சுஷின் அவனை தேற்றும் வழிதெரியாமல் நின்றான்."ப்ரவீன் நீங்க கல்யாணத்துக்கு முன்னாடி இருந்த நிலைமையை வச்சு பேசுறிங்க . கல்யாணத்துக்கு அப்புறம் சுபா கிட்ட மனசுவிட்டு பேசி இருந்தா இந்த குழப்பம் வந்தே இருக்காது.

இப்போகூட சுபா உங்களை............", அவனது பேச்சை தடை செய்தது சுபாவின் வருகை. சுஷினை கண்ணசைவில் வெளியே போக சொன்னாள்.

ப்ரவீன் எதையும் உணரும் நிலையில் இல்லை. சுபாவின் கலங்கிய கண்களே சுஷினுக்கு அனைத்தையும் உணர்த்த கதவை மூடிவிட்டு சென்றுவிட்டான்.

சுபா ப்ரவீனின் டீ-ஷர்ட் டை பிடித்து இழுத்து திருப்பினாள். அவன் திரும்பும் முன்னர் அவனது முகத்தை பிடித்து தன்னை நோக்கி இழுத்து அவனது இதழ்களில் தன் இதழ்களைப் பொருத்தி தன் மன மாற்றத்தை , காதலை அவனுக்கு உணர்த்தினாள்.

ப்ரவீனின் நாடி நரபுகளில் மின்சாரம் பாய்ந்தது. பூட்டிவைத்த உணர்வுகள் வெடித்துக் கிளம்பியது .

அந்த முத்தத்தில் இருந்து விடுபட இருவருமே முயலவில்லை. மூச்சுக் காற்றின் தேவையின் போதுகூட விலகாமல். ஒருவரின் மூச்சு மற்றவரில் கலந்தது.

சுபா சிறிது நேரம் சென்று வெட்கம் மேலிட என்ன செய்தோம் என்பது அப்பொழுதுதான் உறைக்க அவனை விட்டு பிரிந்தாள்.

ஆனால் ப்ரவீன் அவள் விலகுவதை உணர்ந்து இன்னும் இறுக்கி அவளது இதழ்களுக்கு விடுதலை அளித்து, அவளது முகம் முழுக்க ஒருவித வேகத்துடன் இதழ்களால் ஊர்வலம் நடத்தினான்.

அவனது கைகள் இரண்டும் சுபாவின் மேனியில் ஊர்வலம் நடத்தின. அவனது கைகள் தன் மேனியில் எல்லை மீறுவதை உணர்ந்தும் அதை தடுக்காமல். அவனது தீண்டல்களில் கரைந்தாள் சுபா.

எவ்வளவு நேரம் சென்றதோ இருவருக்கும் தெரியாது. சுஷினின் ஞாபகம் வந்தவனாக "சுபா சுஷின்..........", "அண்ணா அப்போவே போயாச்சு" .

இந்த பதில் அவனுக்கு போதுமானதாக இருந்தது அவளை கைகளில் ஏந்தியவாறு அறைக்குச் சென்றான்.

"ஹையோ என்னங்க இது பட்டப் பகல்ல, அதுவும் வேலைக்காரங்க முன்னாடி தூக்கிகிட்டு என்ன நினைப்பாங்க".

அவளது பேச்சை கேட்கும் நிலையில் அவன் இல்லை. கதவை பூட்டிவிட்டு கட்டிலில் அவளை தள்ளி அவள்மேல் படர்ந்தான். கைகளும் இதழ்களும் அவளது மேனியில் ஆவேசத்துடன் பதிந்து நெரித்தன அவளை.

"முரடா........... ஏன்டா இவ்வளவு வேகம்.............", சுபாவின் பேச்சு காற்றில் கரைந்தது.

அவனது தேவையையும், காதலையும் உணர்ந்த சுபா அவனை தடுக்க முயலவில்லை . அவனை தன்னுடன் இறுக்கிக் கொண்டாள்.

முத்தத்தின் ஓசைகளும், மூச்சுக்காற்றின் ஓசைகளும் அந்த அறையை நிரப்பியது. ஒரு இனிய உதயம் அங்கே துவங்கியது.

## 38

மினியின் நிலைமை இன்னும் மோசமாகியது. சுஷின் தன்னை விரும்புவதாக சொல்லுகிறான் ஆனால் வேறு பெண்ணுடனும் சரசமாடுகிறான். அவளால் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை.

தன் சந்தேகம் இன்று இன்னும் உறுதியாவதை தடுக்க அவளால் இயலவில்லை. தான் சரியாக கேட்டோமா.

இல்லை அவன் தவறாக சொன்னானா என்பதும் புரியவில்லை. அவனை நம்பவும் முடியாமல். இந்த திருமணத்தை நிறுத்தும் வழியும் தெரியாமல்.

அதைவிட நிறுத்தும் தைரியமும் இல்லாமல், என்ன செய்ய இந்த குழப்பத்தை எப்படி நீக்க அவனை தன் ஆத்திரம் தீரும்வரை அடிக்கவேண்டும் திட்ட வேண்டும் என்ற வன்மம் கூடியது அவளுள்.

அவனை இழக்க மனம் துணியவும் இல்லை, இது அவளது பலவீனம் என்று உணர்ந்தாள். ஆனால் அவள் அறியாதது ஒன்று உண்டு.

மினி சுஷினை அதிகமாக நேசித்தாள், அதனாலேயே அவன் மேல் கோபமும் வந்தது அவனை விட்டுக் கொடுக்கவும் முடியவில்லை.

காதலை அவள் பலவீனம் என்று புரிந்து கொண்டதுதான் விந்தை.

மினியின் முகம் வாடி இருப்பதை மீனாட்சியும் கவனித்தார் ஆனால் எதுவும் சொல்லவில்லை. திருமணம் முடிந்தால் எல்லாம் சரியாகிவிடும் என்று எண்ணினார் அவர்.

மீனாட்சி தன்னை ஆராய்வதை உணர்ந்து தன் வருத்தம் குழப்பம் அனைத்தையுமே தனக்குள் பூட்ட முயன்றாள் மினி.

ஆனாலும் அவளையும் அறியாமல் சிந்தனை வசப்பட்டு அமர்ந்து விடுவது, சுஷினின் அழைப்பு வந்தால் எடுக்காமல் தவிர்ப்பது என்று தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருந்தாள் மினி.

கல்யாண நாளும் நெருங்க நெருங்க மினியின் பொறுமையும், கோபமும் எல்லை மீறியது.

இங்கு பிரகாஷின் நிலைமையோ அதைவிட திண்டாட்டமாக இருந்தது. அன்றைய நிகழ்ச்சிக்கு பிறகு ஷிஜி அவனை நிமிர்ந்தும் பார்ப்பது இல்லை.

அவளை காண வீட்டிற்குப் போனாலும் அவளது அறையிலேயே முடங்கிக் கிடந்தாள். எதிர் பாராத விதமாக சந்தித்தாலோ முகத்தில் செம்மை பரவ விலகிச் சென்றாள்.

அவளது செம்மைக்குக் காரணம் கோபம் என்று அவன் நினைத்தான். ஆனால் அவள் வெட்கத்தில் சிவந்தாள் என்பது அவனுக்கு புரியவில்லை.

என்ன ஆனாலும் சரி இன்று அவளை சந்தித்து பேசிவிடவேண்டும் என்ற முடிவுடன் ஷிஜியின் வீட்டிற்கு சென்றான்

அங்கே சுலோ அவனை வரவேற்றார்."வாங்க மாப்பிள்ளை என்ன கொஞ்சநாளா ஆளையே காணோம். மாப்பிள்ளை முறுக்கா".

அவனை கேலிசெய்தார் சுலோ,"அம்மா கிட்ட எப்படி மாப்பிள்ளை முறுக்கை காட்ட முடியும் ஆபீஸ்ல் கொஞ்சம் வேலை ஜாஸ்த்தி அவ்வளவுதான்.

அவன் சுலோவிடம் பேசினாலும் பார்வை மாடியையே நாடியது. அவனது தவிப்பை புரிந்து கொண்டு , ஷிஜி ரூம்லதான் இருக்கா போய் பாரு பிரகாஷ்".

வேண்டாம் ஆன்ட்டி நீங்க அவளை கூப்பிடுங்க , 'மேலே போனாலும் அவள் அறைக்குப் போவதில்லை என்று முடிவு செய்திருந்தான் அவன்'.

சரி இரு என்று சொல்லி ஷிஜியை அழைத்தார். சுலோ எதற்கோ அழைக்கிறார் என்று லாங் ஸ்கர்ட் , பனியனில் வந்தவள் அங்கு பிரகாஷைப் பார்த்ததும் வெட்கம் மேலிட எதிர் ஸோபாவில் அமர்ந்தாள்.

சுலோ "நான் காபி கொண்டுவாரேன் பேசிக்கொண்டு இருங்கள்", என்று சொல்லி எழுந்து சென்றார்.

அவர் போனதும் கேட்க வந்தது அனைத்தும் மறந்து போக ஷிஜியையே ஆராய்ந்து கொண்டிருந்தான் பிரகாஷ்.

அவளது அந்த லாங் ஸ்கர்ட் , உடலோடு ஒட்டிய பனியன் தலை கலைந்து எந்தவித அலங்காரமும் இல்லாமல் இருந்தபோதும் அவளது இந்த தோற்றத்திலும் ஒரு அழகு இருப்பதை உணர்ந்தான்.

அவனது பார்வை சுவாரசியமாக தன்னை மேய்வதை இன்ப அவஸ்த்தையுடன் உணர்ந்தே இருந்தாள் ஷிஜி.

ஆனாலும் அவனிடம் எதுவும் பேசாமல் வேறுபுறம் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் வேறுபுறம் திரும்பி இருந்ததை பார்த்த பிரகாஷ் ,"ஷிஜி என்னை ஏன் அவாயிட் பண்ணுற பாத்தா பாக்க மாட்டேன் என்கிறாய்.

பேசினால் பேச மாட்டேன் என்கிறாய். இப்போ கூட என்னை பார்த்து பேசலை ஏன்".

"பேச மாட்டேன்னு யார் சொன்னா, உங்ககிட்ட பேசுவேனே. ஆனால் சிறிது இடைவெளி விட்டாள்,'உன்னை பார்க்க முடியலைடா, உன்னோட பார்வை ஏதோ செய்யிது அதைவிட நீ சின்ன பையன் மாதிரி இப்படி கெஞ்சுறது,

உன்னை இப்படி தேவை இல்லாமல் வருத்தப் படாதேன்னு சொல்லி கட்டிக்கணும்னு தோணுதேடா நான் என்ன செய்ய.

இப்போ கூட உன் முகத்தை பாக்கும்போது வளர்ந்த குழந்தை ஏக்கமா பார்ப்பதுபோல் தான் இருக்கு . உன்கிட்டவந்து உக்காந்து உன் தலை கோதி உன்னை மார்போட'.

சிந்தனையின் போக்கை எண்ணி நடுங்கியவளாய் பாதி பேச்சில் எழுந்துவிட்டாள்.

இதற்கும் மேல் தாமதித்தால் ஏதாவது உளறிக் கொட்டிவிடுவோம் என்று தோன்ற எண்ணத்தை தடுக்கும் வழியும் அறியாமல் எழுந்து அறைக்கு போகப் போனாள்.

அவள் பாதி பேச்சிலேயே எழவும் மேலும் குழம்பியவனாய் அவளது கையைப் பிடித்து நிறுத்தினான்.

"ஏதாவது பதில் சொல்லிவிட்டு போ , இப்படி எதுவுமே சொல்லாமல் போனால் நான் என்னவென்று நினைத்துக் கொள்வது".

அவனது பிடி தீயாய் எரிந்தபிறகும் இனிமையாகவே உணர்ந்தாள் ஷிஜி. கையை உருவ போராடிக் கொண்டே

"கையை விடுங்க பிரகாஷ்" என்று சொல்லிக் கொண்டிருந்தாள்.

அந்தநேரம் சுலோ வரவும் அவன் பிடியை தளர்த்தினான் . அவள் விடுபட்ட பட்டாம் பூச்சியாய் பறந்தாள் அறைக்கு.

முகம் கூம்ப சுலோ அளித்த காபி யை ஒரே மூச்சில், அந்த சூடையும் பொருட்படுத்தாமல் குடித்துவிட்டு விடைபெற்றுச் சென்றான்.

அவன் காபி யை குடித்த விதத்திலேயே அவன் அதைவிட சூடாக இருப்பதை புரிந்து கொண்டார்.

அவரது முகத்தில் கவலை அரும்பியது. ஏனென்றால் சுஷினிடம் பழைய மலர்ச்சி இல்லை . இப்பொழுது ஷிஜிக்கும் பிரகாஷ்-க்கும் ஏதோ பிரச்சனை இருப்பதுபோல் தோன்றியதே அதற்குக் காரணம்.

நேராக ஷிஜியின் அறைக்கு அவளைத் தேடிச் சென்றார். ஷிஜி மலர்ந்த முகத்துடன் படுத்திருந்தாள்.

நாம் நினைத்தது தவறோ என்று நினைத்தவர், அப்படியென்றால் பிரகாஷ் ஏன் அவ்வளவு கோபமாக போகவேண்டும் என்று எண்ணினார்.எதற்கும் ஷிஜியிடம் கேட்டுவிடலாம் என்ற முடிவுடன், ஷிஜி என்று அழைத்தார்.

தன் தாய் அறைக்கே வந்ததும் என்னவென்று புரியாமல் எழுந்து அமர்ந்தாள் ஷிஜி.

"ஷிஜி உனக்கும் பிரகாஷ்க்கும் ஏதாவது சண்டையா".

என்னவென்று புரியா விட்டாலும்,"அப்படி எல்லாம் எதுவும் இல்லையேம்மா, ஏன் கேட்டிங்க".

"பிரகாஷ் கோபமாக போனது மாதிரி இருந்தது அதனால்தான் கேட்டேன். நீயும் சரியாக பேசவில்லை போல. அவனை உன் ரூமுக்கு வர சொன்னதுக்கு முடியாதுன்னு ஹால் லயே உட்க்கார்ந்துட்டான்".

அவரது குரலில் சிறு கண்டிப்பு ஓடியது. ஷிஜிக்கு அது புரிந்தது, பிரகாஷ் அறைக்கு வராததன் காரணமும் புரிந்தது.

ஆனால் இதை எப்படி அம்மாவிடம் சொல்ல முடியும். தயக்கம் வந்தது ஷிஜிக்கு.

"உங்களுக்குளே இருக்கும் பெர்சனல் விஷயங்கள் எனக்கு தெரிய வேண்டாம். அது அவசியமும் இல்லை ஆனால் நீ அவனுக்கு போன் செய்து பேசு".

"அம்மா எனக்கு..".

"சொல்லு ஷிஜி என்ன ஏன் தயங்குற".

"அம்மா என் மனசில் நினைப்பதை எப்படி சொல்லுவது என்று புரியவில்லை. அதனால் தான்".

"அம்மா கிட்ட சொல்ல முடியவில்லை என்றால் உன் பிரண்ட்ஸ் கிட்ட பேசு குழப்பத்தோட இருக்காதே".

சுலோ இப்படி சொன்னதும் ஒருவித தயக்கத்துடன் தன் எண்ண ஓட்டத்தைபற்றி கோடிகாட்டினாள் ஷிஜி.

சுலோ அதைக் கேட்டதும் சிரித்துவிட்டார். "தாய்க்கு பின் தாரம்னு சொல்லுவாங்க நீ இப்போவே அவனோட அம்மா ஆயிட்ட".

ஆனா உன்னோட பாராமுகத்தை அவன் வேறுவிதமா புரிந்து கொண்டான் என்று நான் நினைக்கிறேன். முதல் கோணல் முற்றிலும் கோணல் என்று நீ கேள்வி பட்டது இல்லையா.

அவன் தாய் இல்லாமல் வளர்ந்தவன் புரியும் தன்மையும், உணர்ச்சி வசப்படும் தன்மையும் அதிகமாத்தான் இருக்கும்.

நீதான் அவனை மாற்ற வேண்டும். முதலில் அவனுக்கு போன் செய்து பேசு. அவன் ஏதாவது பேசினால் அதை புரியவை.

நீ பேசாமலே தவிர்ப்பதுதான் பெரிய பிழை. முதலில் பேசு".

சொல்லிவிட்டு சென்று விட்டார். தன் தாய் தேவை இல்லாமல் கவலை படுகிறாரோ என்று தோன்றியது. ஆனாலும் தாய் தன் காதலை தான் சொல்லாமலே கண்டுபிடித்தது அவளை யோசிக்க வைத்தது.

பழைய சம்பவங்களை மனம் அசை போட்டது. அன்று பிரகாஷ் தன் காதலை வெளிப்படுத்திவிட்டு சென்றதும் ஷிஜி சுஷினை தேடிச் சென்றாள்.

அவள் தயங்குவதைப் பார்த்து சுஷின்,"என்ன ஷிஜி எதையோ கேக்க வந்துட்டு பேசாமலே நிற்கிறாய் என்ன விஷயம் ம்ம் ம் ".

"அண்ணா பிரகாஷை எப்படியோ சம்மதிக்க வச்சுட்டோம் ஆனால் அம்மாகிட்ட எப்படி விஷயத்தை சொல்லுவது",அவளது குரலில் கலக்கம் குடி கொண்டிருந்தது.

ஆனால் சுஷின் "இந்த விஷயம் தெரிஞ்சா அம்மா சந்தோசம்தான் படுவாங்க. ஏன்னா மினி வந்த முதல் நாளைக்கு அப்புறம் ஒரு மாநாடு நடந்துதே நம்ம வீட்டில்.

நீ கூட நான் படிக்கதான் போறேன்னு வீராப்பா பேசிவிட்டு போனியே அன்னைக்கு நைட் அம்மா என்னை கூப்பிட்டு ,"சுஷின் ஷிஜிக்கு பிரகாஷ் மேல விருப்பம் இருக்குறமாதிரி இருக்கு. ஆனா பிரகாஷ் அவாயிட் பண்ணுற மாதிரி இருக்கு.

நீ பிரகாஷ் கிட்ட பேசிப் பாருன்னு அவங்கதான் சொன்னாங்க. அன்னைக்கு நைட் அதனால்தான் நான் உன் ரூம்க்கு வந்து ஆறுதல் சொன்னேன் . அம்மணிக்கு ஞாபகம் இருக்கா".

ஷிஜியால் தன் காதுகளையே நம்ப முடியவில்லை . கண்ணீர் துளிர்க்க சுலோவின் வரவுக்காய் காத்திருந்தாள்.

சுலோ வரவும் பேச்சு வராமல் அவரை கட்டிக் கொண்டு அழுதாள். சுலோ என்னவென்று கேட்டதற்கும் பதில் சொல்லவில்லை.

கஷ்டப் பட்டு தொண்டையை செருமிக் கொண்டு ,"அம்மா பிரகாஷை நான் விரும்புறதால், உங்ககிட்ட சொல்லாததால் உங்களுக்கு கோபம் இல்லையே. என்னை மன்னிச்சுடுங்கம்மா பிரகாஷ் என்னை விரும்புறதை இன்னைக்குதான் சொன்னார் அதனால்தான்,

அவர் முடிவை தெரிஞ்சுக்காமல் உங்ககிட்ட சொல்ல முடியலை", குற்ற உணர்வுடன் பேசியவளை அணைத்துக் கொண்டார் சுலோ.

"இதுல நீ சாரி சொல்ல ஒண்ணும் இல்லைடா. அவனுக்கு விருப்பம் இருக்கணுமேன்னுதான் நான் வேண்டிகிட்டு இருந்தேன்.

என் பசங்க விருப்பம் தானே என் விருப்பம். உங்க சந்தோசம்தாண்டா எனக்கு முக்கியம் ".

சுலோவுக்கு தெரிந்ததும் உடனே கல்யாணத்துக்கு நாள் குறித்ததும். இன்னும் இரண்டு வாரங்களே இருப்பதும் புரிந்தது.

எனவே சுலோ சொன்னபடி பிரகாஷ்க்கு போன் செய்தாள் . ஆனால் அது எடுக்கப் படவே இல்லை.

முதல் முறையாக நெஞ்சில் பயம் முளைத்தது. அன்று முழுவதும் தொடர்புகொள்ள முயன்றும் எந்த பலனுமே இல்லை.

கல்யாண நாளும் நெருங்க , இன்னும் மூன்று நாளே இருக்கும் போது அனைவரும் துணி வாங்க சென்றனர்.

ஷிஜியும், சுஷினும் மிகுந்த ஆவலுடன் இருக்க, அதற்கு விரோதமாக மினியும், பிரகாஷும் கோபத்துடனே இருந்தனர்.

மினி தன் தாயை முன்னிட்டு சிறிது மலர்ச்சியை முகத்தில் தவழ விட்டும், பிரகாஷ் சுலோ, மீனாட்சியுடனே இருந்தான்.

சுஷின் பேசினால் மினி எந்தவித பாவனையையும் முகத்தில் காட்டாமல் பதில் சொல்லியபடி இருந்தாள்.

அதனால் அவளது கோபம் அவனுக்கு புரியாமலே போனது. ஷிஜி பிரகாஷிடம் பேச முயன்று தோல்வியையே தழுவிக் கொண்டிருந்தாள்.

ஒரு அளவுக்குமேல் பேசவும் சந்தர்ப்பம் அமையவில்லை. என்ன பேசினார்கள் என்ன கலர் டிரஸ் எடுத்தார்கள் எதுவுமே அவர்களின் கருத்தில் பதியவில்லை.

பிரகாஷோ ஷிஜியிடம் பேசினால் அனைவர் முன்பும் கோபப் பட்டு விடுவோமோ என்ற பயத்திலேயே பேசாமல் இருந்தான்.

துணி எடுத்து முடித்ததும் அனைவரும் ஹோட்டல் லுக்குச் சென்றனர். ஹோட்டலில் மினியின் அருகில் அமர சுஷினும், ஷிஜி, பிரகாஷ் பக்கத்தில் அமரவும் போட்டியே நடந்தது.

கடைசியில் நால்வரும் ரவுண்டு டேபிளில் தனியாக அமர மற்றவர்கள் தனியாகவும் அமர்ந்தனர்.

ஒரு ஜோடி மற்ற ஜோடியிடம் பேசிக் கொண்டு இருந்தாலும் , தங்களது பிணக்கு மற்றவருக்கு தெரியாமல் பார்த்துக் கொண்டனர்.

ஷிஜி ஒரு கட்டத்தில் பிரகாஷ் காலை எட்டி உதைக்க, மினி அதிர்ந்து விழித்தாள். ஆனால் பிரகாஷ் சலனமே இல்லாமல் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

ஷிஜி ஏதும் தெரியாதவள் போல் சாப்பிட துவங்கினாள்.

எதார்த்தத்தில் என்ன நடந்தது என்றால் , ஷிஜி பிரகாஷை உதைத்த அந்த நேரம், சுஷின் மினியின் காலை தன் காலால் வருடினான்.

பிரகாஷ் உதையை வாங்கிக் கொண்டு பேசாமல் இருக்க. மினி சுஷினின் வருடலை எதிர் பார்க்காததால் அதிர்ந்து விழித்தாள்.

கடைசியில் அனைவரும் பிரிந்து வீட்டிற்க்குச் சென்றனர். சுஷின் மினி, மீனாட்சியை அவர்கள் வீட்டில் விட்டு வர சென்றான்.

காரில் மீனாட்சியும் சுஷினுமே பேசிக் கொண்டிருந்தனர். மினி தூங்கும் சாக்கில் கண்களை மூடிக் கொண்டு பேசாமல் இருந்தாள்.

அவர்கள் வீட்டிற்குள் அடி எடுத்து வைக்கும் போது அங்கே இருந்தான் மீனாட்சியின் தம்பி விவேக். மீனாட்சிக்கு ஒரே சந்தோஷம் தன் தம்பி கல்யாண வேலையில் உதவியாக இருப்பான் என்று, ஆனால் அவனது பார்வை விகாரமாக மினியை மேய்ந்தது.

இதை இருவருமே கவனிக்கவில்லை. அன்று இரவு மீனாட்சி அனைத்து விஷயங்களையும் விவேக்கிடம் கூறினார்.

அவனுக்கு பொறாமையாக இருந்தது, தான் இருக்கும்போது மினியை வேறு ஒருவனுக்கு கட்டிக் கொடுப்பதை அவனால் ஜீரணிக்க முடியவில்லை.

எல்லோரும் உறங்கியதும் மினியின் அறைக்குள் திருட்டுத்தனமாக நுழைவதை மீனாட்சி பார்த்தார். ஆனால் அவரால் தவறாக நினைக்க முடியவில்லை.

அவன் உள்ளே சென்றதும் மீனாட்சி,"என்ன வேணும் விவேக் , மினியை பாக்க போறியா அவள் தூங்கிட்டா போல இருக்கு நீ நாளைக்கு பாரேன்".

என்று சொல்லி அவனை அனுப்பி விட்டார். மறுநாள் முதல் வீட்டிற்கு விருந்தினர் வர துவங்கியதால் அவனால் மினியை நெருங்க முடியவில்லை.

ஆனால் அவனது பார்வை மினியை ஆவேசமாய் தொடர்ந்தபடி இருந்தது.

## 39

கல்யாண நாளும் வந்தது. இரண்டு ஜோடிகளுமே ஒருவித ஆனந்த படபடப்புடன் இருந்தனர்.

மேடையில் முதலில் பிரகாஷ் ஷிஜியின் கழுத்தில் தாலி கட்டினான். அதற்குப் பிறகே பொறுப்புள்ள அண்ணன் கடமையை முடித்த பின்பு மினியின் கழுத்தில் தாலி கட்டினான்.

மினிக்கு அண்ணனாக பிரகாஷ் செயல் பட்டான். மீனாட்சிக்கு இதைப் பார்த்து ஆனந்தக் கண்ணீர் துளிர்த்தது.

அனைத்து சடங்குகளும் முடிந்ததும். விருந்து பரிமாறப் பட்டது. அன்று மாலையே ரிசப்சன் வைத்து இருந்ததால் , அனைவருமே சுஷினின் வீட்டிற்குச் சென்று விட்டனர்.

மினியும், ஷிஜியும் ஒரு அறையிலும் அது சுஷினின் அறை. சுஷினும், பிரகாஷும் ஷிஜியின் அறையிலும் ஓய்வு எடுத்தனர்.

மாலை நெருங்கவும் அழகு நிலையத்தில் இருந்து வந்தவர் இருவரையுமே ஒரே போல் அலங்கரித்து , ஒரே டிசைனில் வேறு வேறு கலர் புடவையில், ஒரே டிசைன் நகைகளில் இருவருமே ஜொலித்தனர்.

சுஷினும், பிரகாஷும் கோட் சூட் -டில் அவர்களுக்கே உரிய கம்பீரத்துடன் கிளம்பினர். அனைவரும் கிளம்பியதும் கார்கள் வரவேற்ப்பு நடக்கும் ஹோட்டலுக்கு சென்றது.

இரண்டு ஜோடிகளுமே தங்களது இணையைப் பார்த்து அசந்து விட்டனர். சுஷின் மினியை இடை இடையே சீண்டிக் கொண்டும் வருபவர்களை அறிமுகப் படுத்திய வண்ணமும் இருந்தான்.

அவன் சீண்ட சீண்ட மினியின் கோபமும் அதிகரித்தது, இனம் புரியாத ஒரு உணர்வும் எழுந்தது. சுஷின் மினியை சீண்டுவதாக எண்ணிக் கொண்டு அவன் சூடாகிக் கொண்டிருந்தான்.

எப்பொழுது மினியின் வீட்டிற்க்குச் செல்வோம் என எண்ணத் துவங்கினான்.

ஷிஜியோ வருபவர்களை அறிமுகப் படுத்தும் சாக்கில் பிரகாஷுடன் பேச முயன்று தோற்றுக் கொண்டிருந்தாள்.

அவளது செய்கையை தடுக்கவும் முடியாமல், அவளது சீண்டல்களில் தன்னிலை இழப்பதை தவிர்க்கவும் முடியாமல்.

ஷிஜியின் மீது கோபமாகிக் கொண்டிருந்தான் பிரகாஷ்.

ஒருவழியாக அனைத்தும் முடிந்து சுஷின்-மினி மினியின் வீட்டிற்கும், பிரகாஷ்-ஷிஜி ஷிஜியின் வீட்டிற்கும் சென்றனர்.

இரவும் வந்தது...

அவரவர் அறையில் நுழைந்ததும் சுஷினும் , ஷிஜியும் ஒரே செயலைத்தான் செய்தனர்.

அறையினுள் நுழைந்த மினியை பார்வையில் வருடியவன் அவளை எதுவும் பேச விடாமல் தன்னுடன் இறுக்கிக் கொண்டான்.

சுஷின் பெண்களிடம் மிகவும் கண்ணியமானவன்தான் ஆனால் அவனும் சாதாரண மனிதன் தானே கல்யாணக் கனவுகள், முதல் இரவுக்கான எதிர் பார்ப்பு அவனிடமும் நிறையவே இருந்தது.

அதுவும் மினியை கண்ட நாள் முதல் அவளிடம் காதல் கொண்டு அவளையே கைப்பிடித்த உற்ச்சாகம் அவனை சுற்றுப் புறத்தை மறக்கச் செய்தது.

அவளும் தன்னை உயிருக்கும் மேலாக விரும்புவது அவனுக்கு புரிந்திருந்தது.

அதனாலேயே இந்த இரவை இன்னும் ஆவலாக எதிர் பார்த்தான். அவளது வருத்தம் கலக்கம் அனைத்தையும் இன்றே போக்கிவிட வேண்டும் என்ற வேகமும் அவனை சிந்திக்க விடவில்லை.

அவன் கொஞ்சம் கவனித்து இருந்தாலும் தெரிந்திருக்கும் அவளை அணைத்த உடனே அவள் உடல் விறைத்ததும், அவளது எதிர்ப்பும்.

அவனது அவசரமே மினியின் கோபத்தை இன்னும் அதிகரித்தது. ஆனாலும் அவனது அணைப்பும் தழுவல்களும் இதழ் தீண்டல்களும் மினியையும் நெகிழத்தான் வைத்தது.

அவனுள்ளே தன்னை மறந்து கரையும் நேரம், அவன் சொன்ன வார்த்தை அடியோடு அவளை அவனை தன்னை விட்டு உதற வைத்தது.

உதறியதும் திகைத்தது அவன் மட்டுமல்ல அவளும்தான், ஆனால் அதை ஆராயும் நிலையில் அவள் இல்லை .

தன்னை மீறி அவளது வாய் சொன்னது."சீஈஈஈஈ "

இந்த ஒற்றை வார்த்தையில் இன்னும் அதிர்ந்தான் சுஷின்.

பேச்சற்ற மௌனம் அங்கே சூழ்ந்தது இருவருமே என்ன நடந்தது என்று ஒருநிமிடம் திகைத்தனர், நடந்ததை அசை போட்டனர்.

சுஷின் மினியை ஆசையுடன் தழுவி அவளது முகம் எங்கும் முத்திரையைப் பதித்து முடித்ததும், மேலும் முன்னேறி அவளது கழுத்து வளைவில் முகம் புதைத்தான்.

சற்று நிதானத்துக்கு வந்ததும் அவளது காதில் ரகசியமாக சொன்னான்,"எப்படிடீ என்னை மயக்கினாய். உன்னை

மட்டும் பார்த்த உடனே கட்டிக்கணும்னு தோணுச்சே ஏன் , வேற யார் கிட்டயுமே தோணாதது உன்கிட்ட மட்டும்".

வார்த்தைகள் முடியும் முன்பு மினி என்ற சிலைக்கு உயிர் வந்தது.

இதுவரை அவனது அணைப்பில் கரைந்தவள். அவன் சொல்லவந்ததன் பொருளை முழுதாக புரிந்து கொள்ளாமல், தவறாக புரிந்து கொண்டு அதாவது அவன் வேறு பெண்ணையும் அவளையும் கம்பேர் செய்வதாக நினைத்தாள்.

நினைத்த வேகத்தில் அவனை தன்னிடமிருந்து பிடித்து தள்ளினாள், சீஈஈஈஈஈஈஈஈ என்ற வார்த்தை அவளை அறியாமல் வந்தது.

மௌனத்தை யார் உடைப்பது என்று இருவருமே பேசாமல் நின்றனர். இருவரின் மனமும் உலைக்களமாக கொதித்துக் கொண்டிருந்தது.

பிரகாஷின் அறைக்குள் நுழைந்த ஷிஜி பிரகாஷை தேடினாள் . அவன் கட்டிலின் ஒரு ஓரத்தில் கண்களை மூடி படுத்திருந்தான்.

அவனது முகம் பாறைபோல் இறுகி இருந்தது. அவன் தூங்கவில்லை என்பது அவனது விழிகளுக்குள் கருவிழி ஓடுவதில் இருந்து புரிந்தது.

சுலோ சொன்னது நினைவில் வந்ததான் அவனுக்கு இப்பொழுது தாயாகவேண்டியதன் அவசியம் புரிந்தது.

கட்டிலில் நெருங்கி அவனது அருகில் அமர்ந்து அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவனது இதழ் நோக்கி குனிந்ததும் அவன் கட்டிலில் இருந்து எழுவது புரிந்தது.

அவனது கோபம் புரிந்தாலும் விடாமல் அவனை தன்னுடன் இறுக்கிக் கொண்டாள். அவனது தலை அவளது மார்புக்கு மத்தியில் புரண்டது.

இந்த அதிரடி தாக்குதலை எதிர் பார்க்காத பிரகாஷ் அவளிடமிருந்து விலகும் வேகம் இருந்தாலும் முடியாதவனாய் கட்டுண்டான்.

ஆனாலும் கோபம் தலை தூக்க அவளிடமிருந்து விடுபட போராடினான். அவனது காதில் தன் இதழ்களை கொண்டு சென்று சொன்னாள் ,"என் குழந்தைக்கு என்ன கோபம் என் மேல் . இப்போ பேசாமல் இருக்க போறியா இல்லையா".

ஷிஜியின் இந்த பேச்சைக் கேட்டதும் பிரகாஷின் எதிர்ப்பு அடங்கியது. அவளது மார்பகங்களுக்கு மத்தியில் இன்னும் புதைந்தான்.

அவனது கண்களுக்குள் பழைய பதினைந்து வயது ஷிஜி சொன்ன வார்த்தை ஒலித்தது. அவள் தன்னிடம் சொன்ன முதல் வார்த்தை, "உங்களை நான் வேண்ணா மார்போடு அணைத்துக் கொள்ளவா".

இப்பொழுதும் ஒலிப்பதாக தோன்ற இன்பமாக கண்களை மூடினான். ஷிஜியின் இடுப்பைச் சுற்றி கைகளை கோர்த்துக் கொண்டான்.

அவன் உறங்கிவிட்டது அவளது மார்பின்மீது எழுந்த அவனது தலையின் கனம் உணர்த்த அவனை அணைத்தவாறே தானும் படுத்துக் கொண்டாள் ஷிஜி.

அந்த இரவு காமம் கடந்த இரவாக நாழிகைகள் நகர்ந்து கொண்டிருந்தன. ஷிஜியும் அவனது பிடரி முடியை கோதியவண்ணம் கண்களை மூடிக் கொண்டாள்.

மினியும் சுஷினும் எவ்வளவு நேரம் மௌனமாக நின்றார்களோ அவர்களுக்கே தெரியாது, அந்த மௌனத்தை கலைத்தாள் மினி.

"இப்போ சொன்னதோட அர்த்தம் உங்களுக்கு நிறைய பொண்ணுங்களை தெரியும் என்பதா".

அவள் சீ என்று சொன்னதிலேயே அதிர்ந்தவன் அவளது இந்த கேள்வியில் இன்னும் குழம்பினான் ஆனாலும் அவளுக்கு பொறாமையோ என்று எண்ணிக் கொண்டு.

"எனக்கு எத்தனை பேரை தெரிந்தாலும் நீதானே முக்கியம். நீதான் என் உயிர் மினி", அவளுக்கு புரியவைக்க முயன்றான் சுஷின்.

"எல்லா பொண்ணுங்க கிட்டையும் இதே டயலாக் தான் பேசுவீங்களா. அதனால்தான் சரளமா வருதோ", அவனை குதறிவிடும் நோக்கில் கேட்டாள் அவள்.

"எனக்கு தெரிந்து நான் யாரிடமும் சொன்னது இல்லை", சிறிது உஷ்ணம் எட்டிப் பார்த்தது அவனது குரலில்.

மினிக்கோ அவன் பொய் சொல்லுவதாக தோன்றியது. எனவே ஆவேசமாக வார்த்தையை வெளியிட்டாள் , "உங்களைப் பற்றி எனக்கு நன்றாக தெரியும்".

"என்ன தெரியும்"

"எனக்கு தெரிந்தே இரண்டு பெண்களுடன் உங்களைப் பார்த்திருக்கிறேன் அதுவும்..".

"அதுவும் சொல்லு ஏன் பாதியிலேயே நிறுத்தி விட்டாய்".

"எனக்கென்ன பயமா தப்பு செய்த நீங்களே தைரியமாக நிற்கும் போது நான் ஏன் நிப்பாட்ட வேண்டும். அன்றைக்கு ஹோச்பிடளில் ஒரு பொண்ணை கட்டி பிடிச்சுட்டு இருந்திங்க.

அதுமட்டுமா முத்தம் வேற, அடுத்து அன்றைக்கு என் அம்மாவை ஹோச்பிடலில் சேர்த்திருந்த அன்று நாடு ரோட்டில் அந்த பெண்ணை,

அது ரோடு என்றும் பாராமல் உங்கள் சட்டையை கழற்றி அவளுக்கு கொடுத்தீர்கள். நான் போன் செய்தும் எடுக்கவில்லை.

அன்றைக்கு இரவு அவளோடதானே தங்குனீங்க, என் முகத்தைப் பார்த்து உண்மையா பதில் சொல்லுங்க பார்ப்போம்.

அவள் பேசப் பேச கோபமும் ஆற்றாமையும் போட்டி போட்டது சுஷினுக்கு. ஆனாலும் அவளுக்கு புரியவைக்கும் முயற்ச்சியில், "நீ சொன்னது சரிதான் ஆனால் இரண்டு பொண்ணு இல்லை ரெண்டுமே ஒரே பொண்ணுதான்.

நீ சொன்னதுமாதிரி அவளோடதான் அன்றைக்கு தங்கினேன், ஆனால்-------".

அவன் முழுதாக சொல்லி முடிக்கும் முன்னர் ஆவேசப் பட்டாள் மினி."ஒரு பொண்ணுகிட்ட என்றால் மட்டும் தப்பு இல்லை என்று ஆகிவிடுமா".

"அதுமட்டும் இல்லை அவள் என்னோட________".

"என்ன கதை சொல்லப் போறீங்க அவள் உங்க தங்கை என்றா", ஏளனமாக சொல்லி சிரித்தாள் மினி.

தன் பொறுமை எல்லை கடப்பதை புரிந்தும் நிதானமாக சொன்னான்,"நீ நம்பினாலும் இல்லைஎன்றாலும் அவள் என் தங்கை சுபா தான்".

அந்த பெயரைக் கேட்டதும் தங்கை என்ற உடன்தான் காதலி அருகில் இருந்தும் அவளை மறந்து உங்கள் 'தங்கையை' பார்க்க சென்றீர்களா",

"சரி அந்த தங்கை இன்று எங்கே சென்று ஒளிந்து கொண்டாள்". ", தங்கையில் அழுத்தமும் குரலில் கேலியும் மிகுதியாக இருந்தது.

சுபா தேனிலவு கொண்டாட வெளிநாடு சென்றதால் அவள் வர முடியவில்லை என்பதை அவளிடம் சொல்ல மனமில்லாமல் பேசாமல் இருந்தான் சுஷின்.

"இவை எல்லாம் விட இன்று இந்த இரவு பாழாகிவிடக் கூடாது என்று நீங்கள் சொல்லுகிற பொய் இருக்கிறதே,

இதுவரை நடந்ததை விட அதுதான் என்னால் நினைத்துப் பார்க்க முடியாதவண்ணம் அதிர்ச்சியாக இருக்கிறது".

சுஷினின் கோபம் எல்லை கடந்தது "வாயை மூடுறியா இல்லையா" கர்ஜித்தான் சுஷின். இதுவரை அவனது கோபமான முகத்தை கூட பார்த்திராத மினிக்கு அவனது கோபக் குரலும் முகமும் நடுக்கத்தை ஏற்படுத்தியது.

"இன்னும் ஒருவார்த்தை , ஒரு வார்த்தை பேசினாலும் உன்னை அடித்தாலும் அடித்து விடுவேன்".

"அந்த பொண்ணை கட்டி பிடித்தேன் என்று சொன்னியே எப்படி உன்னை இப்பொழுது அணைத்தது போலா", அவளது பதிலை எதிர் பார்க்காமல் தொடர்ந்தான்.

"முத்தம் கொடுத்ததாக சொன்னியே எப்படி உனக்கு இப்பொழுது கொடுத்தேனே அதே போலா, அண்ணன் தங்கையின் அணைப்புக்கும் பாசத்துக்கும் வித்தியாசம் தெரியாத உன்னிடம் அதை சொல்லி புரியவைக்க நான் விரும்பவில்லை.

அடுத்து என்ன சொன்ன இந்த இரவு வேஸ்ட் பண்ண கூடாதுன்னு நான் நினைகிறேனா , இப்போ சொல்லுகிறேன் இந்த இரவு மட்டுமல்ல இனிமேல் வரும் எந்த இரவு கூட என் விரல் நகம் கூட உன்மேல் படாது.

இந்த நிமிடமே இந்த அறையை விட்டு வெளியே போய்டுவேன். ஆனால் வெளியே உன் அம்மா இருப்பாங்க அவங்களுக்கு எந்தவிதமான அதிர்ச்சியையும் கொடுக்க நான் விரும்ப வில்லை.

ஆவேசமாக வார்த்தைகளை உதிர்த்துவிட்டு மெத்தைமேல் விரித்திருந்த போர்வையை உருவி அதில் கிடந்த பூக்களை உதிர்த்துவிட்டு தரையில் விரித்து படுத்துக் கொண்டான்.

மினியின் மனமோ அவன் கேட்ட கேள்வியையே சுற்றி வந்தது. அவன் சுபாவை அணைத்ததை பார்த்திருக்கிறாள் ஆனால் தோளோடே அணைத்திருக்கிறான் .

முத்தமும் நெற்றியில் தான் பதித்து இருக்கிறான். முன்பு தவறாக தெரிந்தவை இப்பொழுது சரியாக தோன்றியது அவளுக்கு. அதைவிட தன் தாயைப் பற்றி கவலைப் பட்டதும் அவளை அசைத்தது தான் தவறாக நினைத்துவிட்டோமோ என்று முதல் முறையாக சரியாக சிந்தித்தாள் மினி.

## 40

அதிகாலை நான்குமணிக்கு விழித்தான் பிரகாஷ். தான் ஷிஜியின் மார்பிலேயே தூங்கிவிட்டது புரிந்தது.

அவனிடம் அசைவை உணர்ந்து ஷிஜியும் விழித்தாள். நேரம் நான்குமணியை காட்டியதும்," இவ்வளவு சீக்கிரம் முளிச்சுட்டிங்க. தூங்குங்க", என்று சொல்லிவிட்டு திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

அவள் திரும்பிப் படுக்கவும் பிரகாஷ் அவளை வேகமாக தன்புறம் திருப்பினான். "உன்மேல் நான் ரொம்ப கோபமாக இருக்கிறேன்", வீம்புக்காக பேசினான் பிரகாஷ்.

"நீங்கள் செய்யும் வேலையிலேயே தெரியுது",பரிகாசம் செய்தாள் ஷிஜி. அதற்கு காரணம் அவனது கைகள் ஷிஜியின் இடையில் தவழ்ந்து கொண்டிருந்ததுதான் .

அவன் கோபமாக எழப் போகவும் அவனை கையைப் பிடித்து தடுத்தாள்."உங்களுக்கு என்ன கோபம்சொன்னால் தானே புரியும் .

அதைவிட்டு பேசாமல் இருந்தால் எப்படி தெரியும்".

"நான் ஏன் பேசாமல் இருந்தேன் என்று உனக்கு தெரியாதா".

"முதலில் தெரியவில்லை , ஆனால் இப்பொழுது தெரியும். ஆனால் அன்று நான் பேசியதை நீங்கள் தவறாக புரிந்து கொண்டது எப்படி எனக்குத் தெரியும்".

"நான் தப்பா புரிந்து கொண்டேனா. ரூமை விட்டு வெளியே போ, இனிமேல் என் ரூமுக்குள்ளே என் அனுமதி இல்லாமல் வரக் கூடாதுன்னு சொன்னது நீதானே.

இதை நான் சரியாக புரிந்து கொண்டேன். அன்னைக்கு ஏதோ கொஞ்சம் அவசரப் பட்டு________", அவனது வாயை மூடினாள்.

"முதல்ல வாயை மூடுங்க , பேசாமல் வெளியே போங்க________",

அன்று சொன்ன அதே வார்த்தைகளை இன்றும் சொன்னாள் ஷிஜி.

ஆனால் அவளது முகத்தில் தெரிந்த வெட்கமும், குழைவும் முகச் சிவப்பும் அவனுக்கு அனைத்தையும் புரிய வைத்தது.

அன்று அவள் திரும்பி இருந்ததால் அவளது முக பாவங்களை பார்க்கவில்லை என்பதும் புரிந்தது.

"ஷிஜி அப்போ அன்னைக்கு கோபத்தில் சொல்லலையா, உனக்கும் பிடிச்சுதா அந்த____".

அவனை தள்ளிவிட்டு கட்டிலில் இருந்து எழுந்தாள் ஷிஜி. ஆனால் அவனது கரம் அவளை எழ அனுமதிக்கவில்லை.

"ஹையோ விடுங்க டைம் ஆச்சு, நான் குளிச்சுட்டு கீழே போய் காபி எடுத்துட்டு வாறேன். லேட் ஆனா அம்மா திட்டுவாங்க".

"நைட் தான் என்னை ஏமாத்திட்ட இப்போ முடியாது".

"நீங்க தூங்குனதுக்கு நான் பழியா",சொல்லிவிட்டு நாக்கை கடித்துக் கொண்டாள்.

"அப்படியா இப்போ பார்", அவளை கட்டிலில் தள்ளி அவள்மீது படர்ந்தான்.

"பிரகாஷ்........... சொன்னா.............." , அவளது கெஞ்சல்கள் காற்றில் கரைந்தன.

"நீ எனக்கு வேணுன்டீ---------இப்போ வேணும்----------- ".சொல்லிக் கொண்டே அவள் மேனியில் முன்னேறினான்.

"பிரகாஷ்----------மேலே எதுவும் சொல்ல முடியாமல் மௌனமானாள் ஷிஜி. விடிந்து நேரமானபின்பு அவளை விட மனமில்லாமல் விலகினான் பிரகாஷ்.

மினி கட்டிலில் படுக்காமல் அமர்ந்து கொண்டாள். சுஷினை திரும்பிப் பார்த்தாள் அவன் சலனமில்லாமல் உறங்குவது பார்வையில் பட்டது.

தவறு செய்தவனால் கண்டிப்பாக இப்படி உறங்க முடியாது என்றே தோன்றியது. ஆனாலும் ஏதோவொரு தயக்கம் அவளை மேலே யோசிக்கவிடாமல் செய்தது.

சுஷின் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருக்கும் பொழுது அவனது அலை பேசி அழைத்தது.

அவனது உறக்கம் கலையும் முன்னர் அதை எடுத்துவிடுவோம் என்று அவனது அருகில் குனியவும் , அவனே அதை எடுத்துவிட்டான். மினியின் முகம் அவனுக்கு வெகு அருகில் இருந்தது.

ஆனாலும் எந்த சலனமும் இல்லாமல் அலைபேசியை எடுத்து அழைப்பது யார் என்று பார்த்தான். அது சர்வதேச அழைப்பு இந்தநேரம் என்ன என்ற குழப்பத்துடனே எடுத்தான்.

மினிக்குதான் அவனது நெருங்கிய முகம் மனதில் ஆழமாக பதிவது போன்ற பிரம்மை ஏற்ப்பட்டது. கட்டிலில் அமர்ந்து யோசிக்கத் துவங்கினாள்,'அவன் போன் எடுத்தால் என்ன எடுக்கவில்லையென்றால் என்ன, அவனது தூக்கம் கெட்டுவிடக் கூடாதே என்று நான் ஏன் எண்ணினேன்.

யோசிக்க யோசிக்க குழப்பமே மிஞ்சியது. சுஷின் பேசுவதை கவனிக்கத் துவங்கினாள். ஆனால் அந்த நேரத்திலும் சுஷினின் பார்வையில் தெரிந்த அன்னியத் தன்மை அவளை உலுக்கியது.

தன்னை அவன் விலக்கி நிறுத்துவது சிறு வேதனையும், வலியையும் தருவதை உணர்ந்தாள்.

அந்தபக்கம் சொன்னதைக் கேட்டதும் தான் உடனே கிளம்பி வருவதாக சொல்லிவிட்டு வைத்தான். பிரகாஷையும் அழைக்க முடியாது என்ற யோசனையுடனே,

அவனே ஏர்போர்ட் போன் செய்து கனடாவிற்கு விமான டிக்கெட் இருப்பதாகக் கேட்டான். நேரடி விமானம் இல்லை என்ற பதில் கிடைக்கவும், தனக்கு நேரடி விமான டிக்கெட் இல்லை என்றாலும் பரவாயில்லை,

ஆனால் டிக்கெட் வேண்டும் என்று சொல்ல மறுநாள் பன்னிரண்டு மணிக்கு விமான டிக்கெட் இருப்பதாக கூறவும், புக் செய்துவிட்டு உறங்கச் சென்றான்.

மினி உறங்காமலே இருப்பது தெரிந்தது அவளிடம் பேச ஆவல் எழுந்தாலும், அதற்கும் அவள் ஏதாவது சொல்லுவாள் என்பது புரிய பேசாமல் படுத்து கண்களை மூடிக் கொண்டான்.

உறக்கம் இருவரையும் விட்டு விலகிச் சென்று விட்டது.

காலையில் எழுந்தவுடன் சுஷின் மீனாட்சியிடம் சென்று, "அத்தை நான் அவசரமா கனடா போகணும் அங்கே அனுப்பிய கிரானைட் லோடுல ஏதோ பிரச்சனை.

நான் போகவில்லை என்றால் கோடிக்கணக்கில் நஷ்டம் ஆயிடும் அதனால் நான் இன்னைக்கு பத்து மணிக்கெல்லாம் கிளம்ப வேண்டும்.மினி இங்கேயே இருக்கட்டும். நான் ஒரு வாரத்தில் வந்தஉடன் அழைத்துப் போகிறேன்".

"என்ன சுஷின் இப்படி சொல்லுகிறாய் அவளை உன்வீட்டில் விட்டுவிட்டு செல்லேன். அதுவும் இல்லாமல் அவள் இங்கேயே இருக்க முடியாதே. உன் அம்மா அப்பா ஏதாவது தவறாக நினைத்துக் கொள்ளப் போகிறார்கள்.

வேறு யாரையும் அனுப்ப முடியாதா", அவரது குரலில் வருத்தம் இருந்தது.

"அதெல்லாம் நினைக்க மாட்டார்கள். இந்த வேலைக்கு நான் போகவில்லை என்றால் பிரகாஷ் போகணும், ஆனால் அவனையும் இந்த சூழ்நிலையில் அனுப்புவது சரியாக இருக்காது.

நான் மினியை இங்கே விடக் காரணம் அது மட்டுமல்ல, அங்கே புது இடம் நானும் இருக்க மாட்டேன். மினி தனியா பீல் பண்ணுவா இங்கேன்னா அம்மா வீடு சந்தோசமா இருப்பா.

நான் எப்படியும் மூன்று நாள் தங்குவதாக இருந்தது அது இப்போ ஏழு நாள் ஆகி இருக்கு அவ்வளவுதானே. கொஞ்சம் மினியோட நிலைமையையும் யோசிங்க அத்தை".

அவன் சொல்லுவதில் இருந்த நியாயம் மீனாட்சியை தலையாட்ட வைத்தது. இவர்களின் பேச்சை விவேக் ஒருவித மகிழ்ச்சியுடன் கேட்டுக் கொண்டிருந்தான்.

பேசிவிட்டு ஹால் ஸோபாவில் அமர்ந்து கொண்டான். அவனது விழிகள் மினியை தேடியது ஆனால் அவள் தன் தாயுடன் பேசிக் கொண்டிருந்தாள்.

மீனாட்சி சுஷின் மினியை கண்களால் தேடுவதை உணர்ந்தார். ஆனால் அவனது பார்வையில் புது மாப்பிளைக்கே உரிய பூரிப்போ, எதுவும் இல்லாமல் இருப்பதை பார்த்தார்.

மினியிடம் அவனுக்கு காபி கொடுக்க சொன்னதற்கு வேண்டா வெறுப்பாக சென்றாள். மினியின் பாராமுகமும்

அவருக்கு புரிந்தது.

மனதில் பயம் பரவுவதை தடுக்க முடியவில்லை அவரால். மீனாட்சியின் பார்வை இருவரையும் ஆராயத் துவங்கியது.

இதை சுஷின் உணர்ந்து கொண்டான் எனவே மினியிடம் சகஜமாக இருக்க முயன்றான். அவன் நெருங்க முயலவும் கொஞ்சம் யோசிக்கத் துவங்கி இருந்த மினி முற்றிலும் குழம்பி அவனை நெருங்க விடாமல் முற்றிலும் தவிர்க்கத் துவங்கினாள்.

மினியிடம் தவறு இருப்பதை புரிந்துகொண்டார் மீனாட்சி. சுஷின் மறைக்க முயன்ற விஷயங்களை மினி வெளிச்சம் போட துவங்கினாள்.

ஓய்ந்து போனான் சுஷின் நேரமாவதை உணர்ந்து கிளம்பச் சென்றான். அவன் சென்றதும் மீனாட்சி மினியை பிடித்துக் கொண்டார்.

"இங்க என்ன நடக்குது மினி. மாப்பிள்ளையின் பார்வையும் சரி இல்லை, உன்னுடைய நடவடிக்கையும் சரி இல்லை.

நீதான் தப்பு செய்யிறமாதிரி இருக்கு. அவர் உன்னை நெருங்க வரும்போது நீதான் அவரை தவிர்க்கிற ஏன்".

யாரிடமாவது தன் தவிப்பை கொட்டவேண்டும் என்று எண்ணியவள் மீனாட்சி கேட்டதும். என்ன சொல்லுகிறோம் என்பதை உணராமலேயே உளறத்துவங்கினாள்.

"உங்களுக்கே தெரியுதில்லமா அவனோட பார்வையே சரியில்லை. அது மட்டுமா அவனே சரியில்லை. நேத்து நைட் என்னமோ என்னை தொடவே மாட்டேன் என்று சொன்னான்.

ஆனால் இன்னைக்கு காலையில் என்கூட இழையப் பாக்குறான். நான் எப்படி ஒத்துப்பேன் அதான் அவனை அவாய்ட் பண்ணுனேன்".

அவள் சொல்லி முடிக்கும் முன்னர் மினியின் கன்னத்தில் இடியென இறங்கியது மீனாட்சியின் கரம்.

தன் கன்னம் எரிவதை உணர்ந்த பின்புதான் தாய் தன்னை அடித்ததையே உணர்ந்தாள் மினி.

"அம்மா..............".

"என்னடி அம்மா உன்தலையில் நீயே மண்ணை வாரி போட்டுவிட்டு அதை வெளியில் சொல்ல உனக்கு எவ்வளவு தைரியம் வேணும்.

நானும் நீ வாழ்க்கையை இன்றைக்கு புரிந்துகொள்வாய், நாளைக்கு புரிந்துகொள்வாய் என்று பார்த்தால் இப்படி புரியாமலேயே கண்ணை மூடிகிட்டு இருக்கியே.

அவர்மேல் எந்த தப்பு இருந்தாலுமே பொறுமையாக அதை கையாளாமல் இப்படி போட்டு உடைத்துவிட்டு நிக்கிறியே.

அவன் அவன் என்று சொல்லுகிறாயே இதுதான் நீ உன் கணவனுக்கு கொடுக்கும் மரியாதையா.

அப்போ அவர் உன்னை இங்கேயே விட்டுவிட்டு போகிறேன் என்று சொன்ன காரணம் இதுதானா. என்னால் நினைத்துகூட பார்க்க முடியவில்லையே.

அவர் முகத்தை பார்த்தால் தப்பு செய்வது போலா இருக்கிறது. இல்லை உன்னை இங்கேயே விட்டுவிட்டு போகமாட்டார்.

இன்று காலையில் உன்னுடன் பேச முயன்றதற்கு நான்தான் காரணமாக இருப்பேன், என் மனம் கஷ்டப் படக் கூடாது என்பதற்காகத்தான் இருக்கும்", தனக்குத் தானே சமாதானம் செய்து கொண்டார்.

மீனாட்சி சொன்ன பிறகுதான் மினிக்கே அவன் அப்படி நடந்துகொண்டதற்கான காரணம் புரிந்தது. புரிந்தவுடன் அவன் மேல் இருந்த கோபம் அனைத்தும் வடிந்ததுபோல் உணர்ந்தாள் மினி.

அவனை பார்க்கவேண்டும் என்ற ஆவல் எழுந்ததும் அவனைக் காண அறைக்குச் செல்ல போனாள். ஆனால் சுஷினே தான் நேற்று கொண்டுவந்த பெட்டியுடன் வெளியில் வந்தான்.

அவனை பெட்டியுடன் பார்க்கவும் மினி மிரட்ச்சியுடன் அவனைப் பார்த்தான். அவளை பார்க்காமல் மீனாட்சியிடம் சென்று வருவதாக கூறியவன்.

அவருக்காக என்று எண்ணிக் கொண்டே மினியின் அருகில் சென்று அவளது நெற்றியில் இதழ் பதித்து,"போயிட்டு வாறேன் மினி", என்று சொல்லிச் சென்றான்.

அவனது செய்கையில் மீனாட்சி மகிழ்ந்தார். ஆனால் மினி அவன் தன்னை மினி என்று அழைத்ததை எண்ணி வருந்தினாள்.

இவை அனைத்தையுமே விவேக் ஒளிந்திருந்து கவனித்துக் கொண்டிருந்தான். அவனது மூளையில் விபரீத எண்ணங்கள் உதயமாகியது.

## 41

மீனாட்சி எதுவும் பேசாமல் உள்ளே சென்றார். அவரைத் தொடர்ந்தாள் மினி. "அம்மா அவர் எங்கே போகிறார் என்று சொன்னாரா, என்றைக்கு வருவாராம்", அவளது குரல் உள்ளே சென்று விட்டது.

“அவர் எங்கே போகிறார் எப்பொழுது வருவார் என்று என்னை கேட்க்கிறாயே, உனக்கு கொஞ்சமாவது அறிவிருக்கா. நான் உன்னை கேட்டு தெரிந்துகொள்ள வேண்டியதை நீ என்னை கேட்டு தெரிந்துகொள்ளும் நிலையில் இருக்கிறாய்.

சரி அவர் எங்கே போனால் உனக்கு என்ன, எப்பொழுது வந்தால் உனக்கென்ன. நான் உன்கிட்ட கடைசியா ஒரு விஷயம் சொல்லுகிறேன், இனிமேல் என்கிட்டே பேசாதே.

என்னைக்கு சுஷின் கூட நீ வாழத் துவங்குகிறாயோ அன்னைக்கு பேசு", சொன்னதை செய்பவரைப் போல் மினி அடுத்து கேட்ட எந்த கேள்விக்கும், எந்த சமாதானத்தையும் மீனாட்சி கேட்கவே இல்லை.

மினி தன் அறைக்குச் செல்ல திரும்பினாள். எதிரில் வந்தான் விவேக் மினியைப் பார்த்து ஒருமாதிரியாக சிரித்தான்.

அவனது பார்வையும், சிரிப்பும் மினிக்கு சுத்தமாக பிடிக்கவில்லை. ஆனாலும் தன் மாமா என்ற எண்ணத்தில், "என்ன மாமா எதுக்கு இப்படி வழியை மறித்துக் கொண்டு நிக்கிங்க. வழியை விடுங்க நான் போகணும்".

"போ மினி உன்னை யார் போக வேண்டாம் என்று சொன்னது. பாத்தியா உங்க அம்மா நான் இருக்கும் போது உனக்கு பிடிக்காத அவனை கல்யாணம் பண்ணி வெச்சு உன் சந்தோசத்தையே அழிச்சுட்டாங்க.

இப்பவும் ஒன்னும் கேட்டுப் போகலை, இன்னும் உங்களுக்குள்ளே எதுவும் நடக்கலை, அதனால.....", சொல்லிக் கொண்டே அவளது கையை எட்டிப் பிடித்தான்.

அவனது பார்வையில் காமம் வழிந்தது. அவனது பார்வை மினியின் மேனியை ஒருவித தாகத்துடன் மேய்ந்தது.

மினிக்கு மேனி முழுவதும் அருவருப்பு ஓடியது. கையை உதறி அவனது கன்னத்தில் ஓங்கி அடித்துவிட்டு "என்ன சொன்ன எனக்கு பிடிக்காதவரா, அவர் என்னோட உயிர் என் வாழ்க்கையே அவர்தான் .

இன்னும் ஒருமுறை என்னிடம் இப்படி நடந்துகொண்டால் நானே உன்னை போலீஸில் பிடித்து கொடுத்து விடுவேன். உனக்கு ஒன்றும் அது புதில்லையே ஞாபகம் இருக்கட்டும்", அவனிடம் கர்ஜித்துவிட்டு அங்கிருந்து அகன்று அவளது அறையில் புகுந்து கொண்டாள்.

அவன் சிலையென நின்றான்.

உடலெல்லாம் எறிவது போல் இருந்தது. என்ன மனிதன் இவன் அவனோட பார்வையும் அவனும். என் தேவ் கூட வேற பொண்ணுங்களோட பார்த்த அப்போ கூட அவரோட பார்வை எவ்வளவு கண்ணியமா இருந்தது.

அவரோட பார்வையில் எப்பவுமே இந்த மாதிரி இருந்தது இல்லையே. என்னை பார்க்கும் போதுகூட, அவரோட பார்வை எவ்வளவு இதமா வருடும்.

அவர் பார்த்தாலே அடிவயிற்றில் பட்டாம்ம்பூச்சி பறக்கும் உணர்வு வருமே, அவர் லேசா தொட்டாகூட உடல் முழுக்க ஒரு சிலிர்ப்பு ஓடுமே".

இந்த உணர்வு வேற யார் பார்த்தாலும் வராதே. அன்றைக்கு ஹோட்டல்ல, அவர்மேல் எவ்வளவு கோபமா இருந்தேன் அப்போ கூட அவர் காலை வருடியதும் ,ஹப்பா என்ன உணர்வு அது,

நேற்று அவரோட முகத்தை அவ்வளவு அருகில் பார்க்கும் பொது அவரை கட்டிக்கணும்னு தோணிச்சே இது காதலென்றால்.................,

இது காதலென்றால்--------------, நான் தேவ்வை காதலிக்கிறேனா. எப்போ இருந்து அன்றைக்கு ஹோச்பிடலில் சுபா கூட பார்த்தேனே அப்போ இருந்தா.

அதனால்தான் எனக்கு கோபம் வந்துதா. அவரை விட்டு கொடுக்க முடியாமல்தான் கல்யாணத்தை நிறுத்தும் தைரியம் வர வில்லையா.

எனக்கு மட்டுமே அவர் சொந்தம் என்பதால்தான் வேற பொண்ணுகளோட பார்த்தால் அப்போ கோபம் வந்துதா.

தேவ் ஐ லவ் யு இரைந்தே சொன்னாள். அவனை பார்க்க வேண்டும் அவனிடம் பேசவேண்டும் என்ற எண்ணம் கட்டுக் கடங்காமல் பெருகியது.

அவளிடம் அறை வாங்கிய விவேக், மினியின் வாழ்வை நாசம் செய்ய நேரம் பார்த்துக் கொண்டிருந்தான்.

அதற்கான சந்தற்ப்பம் போன் மூலம் சீக்கிரமே கிடைத்தது அவனுக்கு.

சுஷின் காரில் செல்லும் போது மினியை முத்தமிட்டதையே எண்ணினான்.'நான் அவங்க அம்மாவிற்காக என்று சமாத்தானம் சொல்லிக் கொண்டு அவளை ஏன் முத்தமிட்டேன். என்னால் அவளை விட்டு இருக்க முடியாதா.

இந்த பிரிவும் நல்லதற்குத்தான் , என்னை நிலை நிறுத்திக் கொள்ள கொஞ்சம் அவகாசம் கிடைக்கும்'.

வீட்டில் உள்ளவர்களுக்கும் எந்த சந்தேகமும் வராது. கெட்டதிலும் ஒரு நல்லது என்று சொல்லுவார்களே அது இதுதானா'.

கண்களை மூடிக் கொண்டான். வீட்டில் சொன்னபொழுது தாயின் கண்டிப்பு, தந்தையின் வருத்தம், தங்கையின் புலம்பல், நண்பனின் தவிப்பு அனைத்தையும் பெற்றுக் கொண்டான் .

அனைவரும் மினியை பார்த்துக் கொள்வதாக சொன்னது அவனுக்கு ஆறுதலாக இருந்தது. ஆனாலும் மினியின் மேல் கோபத்திற்குப் பதிலாக வருத்தமே மேலோங்கியது.

தன்னிடம் நிதானமாக கேட்டிருந்தால் தான் சொல்லாமலா இருந்திருப்போம். அவளது அவசரப் புத்தியால், அவள் இன்னும் மனதளவில் வளராதது புரிந்தது.

இந்த பிரிவு அவளை மாற்ற வேண்டுமே என்ற கவலையும் எழுந்தது. விமானம் பிடித்து அங்கே சென்று தன் வேலையின் அவசரத்திலும் இரண்டு வீட்டிற்கும் தகவல் சொல்ல மறக்கவில்லை.

மினியின் வீட்டிற்க்கு போன் செய்து தான் நல்லபடியாக வந்து சேர்ந்ததாக சொன்னான். மினியிடம் கொடுக்கவா

என்று மீனாட்சி கேட்டதற்கு, அவளது அலை பேசியில் தொடர்பு கொள்வதாக சொல்லி வைத்துவிட்டான்.

மினிதான் தவித்துப் போனாள். தன் காதலை உணர்ந்த அந்த நொடி முதல் அவனிடம் பேசவேண்டும் என்று தவித்துக் கொண்டிருந்தாள்.

மீனட்சிக்காகவாவது தன்னிடம் பேசுவான் என்று நம்பியிருக்க அதுவும் பொய்த்துப் போனது. மினியின் வாடிய முகத்தைப் பார்த்து

மீனாட்சிக்கும் வருத்தமாகத்தான் இருந்தது.

ஆனாலும் அவள் செய்த தவறை அவள் உணரவேண்டும் என்ற உணர்வில் அவளை சமாதானம் செய்ய முயலாமல் தன் வேலையைப் பார்க்கச் சென்றார்.

சுஷினின் மேல் மதிப்பு இன்னும் கூடியது அவருக்கு.

ஷிஜியின் வீட்டில் இருந்து அனைவரும் மினியைப் பார்க்க சென்றனர். மினியின் முகம் வாடி இருப்பதை பார்த்த ஷிஜி, "என்ன மினி அண்ணனை பார்க்காத ஏக்கமா, முகமே வாடி போய் இருக்கு".

"அதெல்லாம் எதுவும் இல்லை ஷிஜி".

"அப்போ தொல்லை விட்டது என்று சந்தோசமா இருக்கியா".

"ஷிஜி நான் உன்கூட இருப்பது உனக்கு தொல்லையா இருக்கா. அதைதான் இப்படி மறைமுகமா சொல்லுறியா".

"அதை இப்படி பப்ளிக் கா கேட்டா எப்படி சொல்லுவது. மனசுல நினைப்பதை எல்லாம் சொல்ல முடியுமா என்ன".

அவளது பேச்சைக் கேட்டு அனைவரும் சிரித்தனர். பிரகாஷ் யாரும் அறியாமல் அவளது இடையில் கிள்ளி ரகசியமாக, "உனக்கு நான் தொல்லையா".

"இப்படி எல்லாம் செஞ்சா அப்படித்தான் சொல்லுவேன்".

"இதுக்கே இப்படின்னா---------------", முகம் சிவக்க அவனைவிட்டு விலகிச் சென்றாள் ஷிஜி. இந்த ஊடலை பெரியவர்கள் கண்டும் காணாததுபோல் இருக்க,

மினிக்குள் சிறு ஏக்கம் எட்டிப் பார்த்தது. பிரகாஷ் மினிக்கு அண்ணனாகவே மாறிப் போனான். மீனாட்சியும் பிரகாஷை தன்னை அம்மா என்று அழைக்கும் படி சொல்லி விட்டார்.

இவர்கள் அனைவர் முன்னும் விவேக் மினியை பார்த்துக் கொண்டே இங்கும் அங்கும் நடந்தான். மினிக்கு கலக்கமாக இருந்தாலும் வெளியில் காட்டவில்லை.

அவனை யார் என்று கேட்டதும் மீனாட்சி, "என் தம்பிதான் இவ்வளவுநாள் பாம்பேயில் இருந்தான். கல்யாணத்துக்கு இரண்டு நாள் முன்னாடிதான் வந்தான்".

'பார்த்தால் ஜெயில்ல இருந்து வாறவன் மாதிரி இருக்கான். மினியையும் ஒரு மாதிரி பாக்குறானே . மினியும் சங்கடமா இருக்கிற மாதிரி இருக்கிறாளே. இங்கே ஏதோ சரியில்லை' என்று எண்ணினான் பிரகாஷ்.

இதை உணர்ந்து பிரகாஷ் சுலோ விடம் பேச, அவர் மீனாட்சியிடம் மினியை அழைத்துச் செல்லுவதாக சொல்லவும், மீனாட்சி "நீங்க அழைத்துச் செல்வதில் எனக்கு மறுப்பு எதுவும் இல்லை.

ஆனாலும் அவள் புருஷன் கூட வாறதுதான் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன்", அவரது மறுப்பை சுற்றி வளைத்து சொன்னார்.

மீனாட்சி சொல்லுவதில் இருந்த நியாயம் அனைவரையும் மௌனமாக்கியது. பிரகாஷிற்கு மினியை அங்கே விட்டுச் செல்வதில் விருப்பம் இல்லை.

ஆனாலும் அனைவரின் கருத்தையும் மதித்து பேசாமல் சென்றான். செல்லும் முன்னர் மினியிடம் ஏதாவது பிரச்சனையா என்று கேட்க அவள் எதுவும் இல்லை என்றாள்.

விவேக்கை முறைத்தவறே சென்றான் பிரகாஷ். விவேக்கிற்கு மினியை ஏதாவது செய்தால் இவன் தீர்த்து விடுவான் என்ற எண்ணம் தோன்றியதும்.

மினியை நெருங்காமல் அவளை வாழவிடாமல் செய்ய வேண்டும் என்று எண்ணினான். அதற்கு ஆதரவு அளிப்பதுபோல் அன்று மினியும், மீனாட்சியும் கோவிலுக்கு சென்றிருக்கும் பொழுது சுஷினின் அழைப்பு வந்தது.

"ஹல்லோ நான் சுஷின் பேசுறேன், அத்தை இருக்காங்களா".

"நான் மினியோட மாமாதான் பேசுறேன். அவங்க வெளியே போய் இருக்காங்க. மினி உள்ளே குளிக்கிறா கூப்பிடவா".

அவனது பதிலைக் கேட்டதும் சுஷின் துணுக்குற்றான். மினியை தனியே விட்டுவிட்டு போய் இருக்காங்களா, ஆனாலும் அவனிடம் எதுவும் சொல்லாமல்.

"நான் பிறகு போன் செய்யிறேன்", அழைப்பை வைக்கப் போனவனை இடை மறித்தான் விவேக்.

"நான் உங்ககிட்ட ஒரு விஷயம் சொல்லணும் ", போலியாக தயங்கினான்.

"எதுவாக இருந்தாலும் பரவாயில்லை சொல்லுங்க".

"எனக்கும் மினிக்கும் நடுவில் வராதிங்க. சின்ன பிள்ளையில் இருந்தே மினிக்கு நான் என்றால் உயிர். என்னை மனதில் வைத்துக் கொண்டுதான் அவள் உங்களுடன் வாழவில்லை".

"இப்ப கூட எதுவும் கைமீறவில்லை, நீங்க விவாகரத்து பண்ணிவிட்டிங்க என்றால் நாங்க சேர்ந்து வாழ்வோம்",

கொஞ்சம் கொஞ்சமாக நஞ்சை விதைத்தான் விவேக்.

அவன் சொன்னதைக் கேட்ட சுஷின் குழம்பித்தான் போனான். தங்களது அந்தரங்க விஷயம் மினி சொல்லாமல் அவனுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்றே எண்ணினான்.மினி அவள் அம்மாவிடம் உளறியது தெரிந்திருந்தால் குழம்பியிருக்க மாட்டானோ.

## 42

அவனது பேச்சில் கோபம் கொண்டாலும் எதையும் ஆராயும் முன்பு முடிவு எடுக்க வேண்டாம் என்று தன் பிரச்சனையை ஒதுக்கிவிட்டு தான் வந்த வேலையைப் பார்த்தான்.

சுஷின் ஊருக்கு திரும்பும் முன்னர் அனைவருக்கும் பரிசுப் பொருட்கள் வாங்கினான். மினிக்கும் தனக்கு பிடித்த டிசைனில் அழகிய வைர நகை செட் ஒன்று வாங்கிக் கொண்டான்.

தான் இந்தியா வருவதாக வீட்டிற்குத் தெரிவித்தான். இவனது வருகைக்காக பிரகாஷ் காத்துக் கொண்டிருந்தான்.

ஆனால் அவன் விவேக் பற்றிய சந்தேகத்தை கூறும் முன்னர் விவேக் முந்திக் கொண்டது அவனுக்குத் தெரியாது.

மீனாட்சிக்கோ , மினிக்கோ தெரிவிக்க வேண்டாம் என்றும் அவர்களுக்கு சர்ப்ரைஸ் கொடுக்க போவதாக சொல்லி தன் வீட்டினரை அடக்கினான்.

ஏர்போர்டில் இருந்து தன் வீட்டிற்கு சென்றான். அவன் வந்தவுடன் எதையும் சொல்லவேண்டாம் என்று அமைதியாக இருந்தான் பிரகாஷ்.

சுஷின் மாலைவரை ஓய்வு எடுத்துவிட்டு மாலை கிளம்பி மினியின் வீட்டிற்குச் சென்றான். மினியின் முன்னால் சென்று அவள் ரியாக்சனை பார்க்கவேண்டும் என்ற ஆவல் மனதுள் ஓடியது.

அவளது கோபம் போய் இருக்குமா, தன்னை பார்ப்பாளா இல்லை முகத்தை திருப்பிக் கொள்வாளா இன்னொருமனது குடைந்து கொண்டிருந்தது.

இன்னும் கொஞ்ச நேரத்தில் தெரிந்துவிடப் போகிறது என்று அமைதியாக இருந்தான்.

மினியின் வீட்டின் முன் காரை நிறுத்தியதும், அதற்காகவே காத்திருந்தவள் போல் ஓடி வந்தாள் மினி.

மூச்சுவாங்க அவன் முன்னால் நின்றாள். அவனைத் தழுவும் வேகம் இருந்தபோதும் சுற்றுப்புறம் உணர்ந்து அடக்கிக் கொண்டாள்.

அவளது கண்களில் தெரிந்த காதலை ஒரு நொடியில் உணர்ந்து கொண்டான் சுஷின். அவள் கண்களில் குளம் கட்டியிருந்த கண்ணீர் அவனை ஏதோ செய்தது.

அவளை அணைக்கத் துடித்த கரங்களை அடக்கி நிமிர்ந்த பொழுது மீனாட்சி வந்தார். சுஷினின் வரவைக் கண்டு மகிழ்ந்தார். மகளது மனமாற்றமும் அவருக்கு புரிந்தது.

ஆனால் சுஷின் இனிமேல் என்ன செய்வான் என்பது அவருக்கு புரியவில்லை. ஆனாலும் அவன் மினியை வெறுக்கவில்லை என்பதை அவனது வருகை அவருக்கு உணர்த்தியது.

சுஷினின் வருகையை எதிர்பார்க்காதது விவேக் மட்டுமே. தான் சொன்னதை நம்பி அவன் விவாகரத்து செய்வான் என்று அவனும் எண்ணவில்லை.

ஆனால் வீட்டிற்கு வராமல் தவிர்ப்பான் என்று எண்ணினான். ஆனால் சுஷினின் வருகை அவனுக்கு

ஆத்திரத்தை அதிகப் படுத்தியது.

அதைவிட இருவரும் ஒருவரை ஒருவர் பார்வையாலேயே தங்கள் காதலை பறை சாற்றியது அவனுக்கு சுத்தமாக பொறுக்கவில்லை.

மினி அவனை அடித்ததையும் மறக்க முடியவில்லை. பெண்களிடம் அடி வாங்குவது புதிதில்லை அவனுக்கு. ஆனால் இவன் பார்க்க வளர்ந்த பெண் தன்னை கைநீட்டி அடித்ததை மிகப்பெரிய அவமானமாக உணர்ந்தான். சுஷினும் விவேக்கை கண்டுகொண்டான். அவன் பார்வையில் தெரிந்த வன்மத்தையும் குறித்துக் கொண்டான்.ஆனாலும் எதுவும் அறியாதவன் போல் நடக்க முடிவு செய்தான்.

இவை எல்லாம் விட , மினியை அவனது கண்ணிலிருந்து அகற்றிவிட்டாலும் அவனது வன்மம் வளரும், எனவே அவன் என்னதான் செய்கிறான், எவ்வளவு தூரம் போகிறான் என்பதை இப்பொழுதே இங்கேயே முடித்துவிட்டால், தன் வீட்டினர் முன்பு தேவையில்லாத சிக்கல் எதுவும் வரவேண்டாம் என்றும் முடிவு செய்தான்.

அன்று இரவு அங்கே தங்குவதாக முடிவு செய்தான். மினிக்கும் அது மகிழ்ச்சியாகவே இருந்தது.

தன் வீட்டில் தடைபட்ட அவர்களது வாழ்க்கைச் சிக்கலை அங்கேயே தீர்க்க அவள் விரும்பினாள். தன் மன மாற்றத்தை அவனுக்கு உணர்த்திவிடவும் எண்ணினாள்.

மீனாட்சி சுஷின் அங்கேயே தங்குவதாக சொன்னதும், அன்று செய்ய முடியாமல் போன மாப்பிள்ளை விருந்தை அன்று இரவு வெகு தடபுடலாக தயார் செய்தார்.

மினியும் தன்னால் ஆன உதவிகளை செய்தாள். ஆனாலும் மீனாட்சி மினியிடம் பேசமட்டும் மறுத்துவிட்டார்.

மினி அன்று மிகவும் அழுது அடம் பிடித்ததும், தான் பாட்டி ஆகப் போகிறேன் என்ற நல்ல செய்தியை எப்பொழுது

சொல்லுகிறாளோ அன்று பேசுவதாக சொல்லி முற்றுப்புள்ளி வைத்து விட்டார்.

விருந்து சாப்பாட்டை மினியே பரிமாறினாள் அவனுக்கு. அப்பளம் பொரிப்பதாக பெயர் பண்ணிக் கொண்டு கிச்சனிலேயே நின்று கொண்டார் மீனாட்சி.

என்றும் சாப்பிடுவதைவிட அதிகமாகவே சாப்பிட்டான் சுஷின். மினியும் அளவுக்கு அதிகமாக அவனுடன் இணைந்து நின்றாள்.

அவளது அருகாமையும், முகத்துக்கு வெகுஅருகில் தெரிந்த அவளது எடுப்பான அழகும் அவனை உன்மத்தம் கொள்ள செய்தன.

இந்த நிலைமையில் அறையின் உள்ளே சென்றால் தன்னால் கட்டுப் பட்டுடன் இருக்க முடியும் என்று தோன்ற வில்லை.

அவளை தள்ளி நிற்கச் சொல்லவும் மனம் வரவில்லை. அதற்குக் காரணம் அவளது நெருக்கத்தை அவன் வெகுவாக ரசித்ததே.

சாப்பிட்டு முடித்ததும் மினியை அமரச் சொல்லி தானே அவளுக்கு பரிமாறினான். அவளது பார்வை அவனையே தொடர்வது புரிந்தும், புரியாதவன்போல் நடந்து கொண்டான்.

அவளை சாப்பிட சொல்லிவிட்டு, மீனாட்சியிடம் சாப்பாடு மிகப் பிரம்மாதம் என்று சொல்லி அவரிடம் பேசிக் கொண்டிருந்தான்.

மினியின் பார்வை சுஷினின் பேச்சிலும், சிரிப்பிலும் லயித்திருந்தது. இதை வன்மத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான் விவேக்.

இதுக்கு இன்றே ஒரு முடிவு கட்டுகிறேன் என்று கறுவிக் கொண்டான்.

மினி சாப்பிட்டு முடித்ததும், சாப்பாட்டு அறையை ஒழுங்கு செய்வதைப் பார்த்தவர் , அதை தான் பார்த்துக் கொள்வதாக வேறுபுறம் பார்த்தவாறே சொன்னார்.

இதைக் கேட்டதும், தன் பழைய குறும்பு தலை தூக்க, அவரை கட்டி பிடித்து கன்னத்தில் முத்தமிட்டு, “உன்னை சீக்கிரமே பாட்டி ஆக்கிடுறேன் பாரு”, என்று சொல்லிக்கொண்டே தன் அறைக்குள் ஓடி மறைந்தாள்.

மீனாட்சி உள்ளம் பூரித்துப் போனார் . அதன் ஆயுள் கம்மி என்று தெரியாமலேயே.

சாப்பாடு அதிகமாக சாப்பிட்டு விட்டதால் சுஷின் கொஞ்சநேரம் காலார நடக்கச் சென்றிருந்தான். இந்த சந்தர்ப்பத்தை விவேக் பயன்படுத்திக்கொண்டான்.

மினி அவளது அறைக்குள் சென்று சிறிது நேரம் ஆனதும் அவளது அறைக்குள் புகுந்து தாளிட்டுக் கொண்டான்.

மினி சுஷின்தான் வந்திருக்கிறான் என்று ஆவலாக திரும்பினால் அங்கே விவேக் நிற்பதைப் பார்த்தாள்.

இவன் ஏன் அறைக்குள் வந்தான், பழைய மினியாக இருந்தால் உணர நேரம் ஆகி இருக்கும் ஆனால் இப்பொழுது இருப்பது புது மினி ஆயிற்றே.

அவனது நோக்கம் உடனே புரிந்தது அவளுக்கு. சுஷினிடம் தன்னை மாட்டிவிடவே அவன் வந்திருக்கிறான் என்று.

எனவே சுஷின் வருவதற்கு முன்னர் அவனை வெளியேற்ற முயன்றாள். அந்தோ பரிதாபம் அவள் நினைக்கும் முன்னர் கதவு தட்டப்படும் ஒலி கேட்டது.

மினி தன் மொத்த சக்தியும் வடிந்ததுபோல் உணர்ந்தாள். ஆனால் விவேக் நிதானமாக கதவைத் திறந்து வெளியில் வந்தான்.

சுஷின் தன் கோபத்தை கட்டுப்படுத்த கண்களை மூடி கைகளை இறுக்க மூடிக் கொண்டான். அவன் எதுவும்

பேசாததைப் பார்த்து விவேக்கே பேசினான், "நான் வேண்டாம் என்றுதான் சொன்னேன்.

மினிதான் கேக்கலை", எதுவோ சொல்லப் போன மினியை கையைக் காட்டி நிறுத்தினான் சுஷின்.

சுஷின் தான் சொல்லுவதை நம்புகிறான் என்று குஷியாகி இன்னும் கதை புனைந்தான். ஆனால் அவன் அறியவில்லை, விவேக் எவ்வளவுதூரம் போகிறான் என்று அறியவே அவனை பேசவிட்டான் என்று.

மேலே சொல் என்பதுபோல் சுஷின் செய்கை செய்ய, “நீங்க இல்லாத அப்போ பரவாயில்லை, ஆனால் இப்பொழுது, நான் வேண்டாம் என்றுதான் சொன்னேன். இவள்தான் கேட்கவில்லை”.

நடித்தான் விவேக், "எல்லாத்தையும் சொல்லி முடிச்சுட்டியா, என் மினியைப் பத்தியும் எனக்கு தெரியும் , உன்னைப் பத்தியும் எனக்கு தெரியும்.

நாளைக்கு காலையில் உன்னை நான் இந்த வீட்டில் பார்த்தேன் என்றால் கொன்று புதைத்துவிடுவேன்.

அப்படியும் ஏதாவது உன் அக்கா கிட்ட சொல்லி ப்ளே பண்ணலாம் என்று நினைச்சாலே இந்த உலகத்தில் எந்த மூலைக்குப் போனாலும் உன்னை துரத்திவந்து அழிச்சுடுவேன்.

உனக்கு அக்கா வீடு இன்னையோட, இல்லை இப்போவோட லாஸ்ட் கிளம்பு”. சுஷினின் குரலே கிலியை மூட்ட, எதுவும் சொல்லாமல் கிளம்பினான்.

“ஒரு நிமிஷம், இப்போ உன்னை உதைக்காமல் விடுவதற்கு ஒரே காரணம்தான். என் அத்தைக்கு எதுவும் தெரியவேண்டாம் என்பதால்தான்.அதனால் நான் கையாலாகாதவன் என்ற எண்ணம் வேண்டாம்".

அவன் தலை தப்பினால் போதும் என்று கிளம்பினான்.

அவன் சென்றதும் அறைக்குள் நுழைந்து கதவை தாளிட்டான். மினி நின்ற இடத்தில் மடிந்து அமர்ந்துவிசும்பினாள்.

அவளது கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. சுஷின் எதுவும் சொல்லாமல், பெட்ஷீட்டை எடுத்து தரையில் போட்டு படுத்துக் கொண்டான்.

மினியால் அவனது செய்கையை புரிந்துகொள்ள முடியவில்லை.அவன் ஏதாவது கேட்டால் அவனிடம் பதில் சொல்ல அவள் தயார்தான். ஆனால் அவனது மௌனம் அவளை மிகவும் தவிக்க வைத்தது.

தான் இருந்த இடத்தில் இருந்து எழுந்து அவன் அருகில் சென்றாள். அவள் வருவது தெரிந்தும் கண்களை திறவாமல் இருந்தான் சுஷின்.

"தேவ் ..............அவளது அழைப்பில் சந்தோஷம் உள்ளே குமிழியிட, வெளியில் சலனமில்லாமல் கண்களைத் திறந்து பார்த்தான்.

அவனுக்கே தனது தேவ் என்ற பெயர் மறந்து விட்டிருந்தது. அவனது பார்வை தன்னை சலனமில்லாமல் நோக்குவதை உணர்ந்து.

எப்படி ஆரம்பிப்பது என்று தெரியாமல் ஒரு நிமிடம் விழித்தவள், தைரியத்தை வரவழைத்துக் கொண்டு , "நான் எந்ததப்பும் செய்யலைங்க , நீங்க என்னிடம் எதுவுமே கேட்கவில்லையே ".

"எதுக்கு கேட்கணும், உன்மேல் நம்பிக்கை இல்லை என்றால்தான் என்ன நடந்தது என்று கேட்கணும். ஆனால் உன்னை சந்தேகப் பட்டால் நான் என்னையே சந்தேகப் படுவதுபோல்.

போ போய் நிம்மதியா தூங்கு. நாளைக்கு காலையில் நம்ம வீட்டுக்கு போகணும். இதற்குமேல் ஒன்றுமில்லை என்பதுபோல் திரும்பிப் படுத்துக் கொண்டான்.

அவனிடம் தன் மனமாற்றத்தைதெருவிக்க வேண்டும் என்று எண்ணியவள் , மனதை திறக்க வழி தெரியாமல் கட்டிலுக்கு திரும்பினாள்.

கட்டிலில் அமர்ந்தவள் உறக்கம் பிடிக்காமல் அமர்ந்திருந்தாள். அவன் சொன்ன வார்த்தை காதில் ரீங்காரமிட, பெருமிதமும், துக்கமும் போட்டி போட்டது.

"நான் உன்னை சந்தேகப் பட்டால் என்னையே சந்தேகப் படுவது போல்", என் மேல் எவ்வளவு நம்பிக்கை இருந்தால் இப்படி ஒரு வார்த்தையை சொல்லி இருப்பான்.

அவனது வார்த்தையில் பெருமிதப் பட்ட மனம், தனது செய்கையில் வெட்கப்பட்டது. அவன் என்மேல் வைத்த நம்பிக்கையை நான் அவன்மேல் வைக்கவில்லையே.

இப்பொழுது என் மனதை அவனிடம் திறந்தால் இந்த சம்பவத்தால்தான் நான் மனம் மாறினேன் என்று நினைப்பான்.

என்னால் அந்த வார்த்தையை தாங்கிக்கொள்ள முடியாது. என் மனதை நான் மறைக்கத்தான் போகிறேன்.

முடிவை எடுத்துவிட்டு, நாளை நம் வீட்டுக்கு செல்லவேண்டும் என்று அவன் சொன்னதை எண்ணியவாறு உறங்கினாள் மினி.

## 43

மறுநாள் காலையில் எழுந்ததும் சுஷினும், மினியும் தங்கள் வீட்டிற்குச் செல்ல கிளம்பினர். காலை டிபன்னை வேகமாக சமைத்துக் கொண்டிருந்தார் மீனாட்சி.

அனைவரும் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் பொழுது மீனாட்சி விவேக்கைத் தேடினார். "இந்த பையன் எங்கே சென்றான் என்றே தெரியவில்லை, காலையில்

எழுந்தவுடனே காபி குடிக்க வந்துவிடுவான் ஆனால் இன்று காணவில்லை".

தன் போக்கில் சொல்லிக் கொண்டு வேலையைப் பார்க்கச் சென்றார்.சுஷினும் மினியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். ஆனால் எதுவும் சொல்லவில்லை.

சுஷின் அவரிடம், "அத்தை உடம்பு சரியில்லாமல் ரூமிலேயே இருக்கிறாரோ என்னமோ எதற்கும் ஒருமுறை பார்த்துவிட்டு வாங்களேன்".

சொல்லிவிட்டானே தவிர அவன் சென்று விட்டதை அறிந்து என்ன செய்வரோ என்ற கவலை மனதை வாட்டியது.

மினியால் சாப்பிடவே முடியவில்லை. மீனாட்சி போய் பார்த்துவிட்டு நிதானமாக வந்தார். "பழையபடி சொல்லாமலே போய்விட்டான் போல, முன்பாவது பொறுப்பு இல்லாமல் இருந்தான்.

இப்பொழுது பொறுப்பு வந்திருக்கும் அவனுக்கு ஒரு பெண்ணைப் பார்த்து திருமணம் செய்துவைத்து என்னுடனே வைத்துக் கொள்ளலாம் என்று எண்ணினேன் ஆனால்.......... ",

'நாம் நினைப்பது எல்லாம் நடந்துவிடுமா என்ன.முன்பு மினி இருந்தாள் எனக்கு தனிமை தெரியாது. இனிமேல் அதற்கும் பழகிக் கொள்ள வேண்டியதுதான்', மனதிற்குள்ளேயே இதை நினைத்துக் கொண்டார். ஆனால் வெளியில் சொல்லவில்லை.

"நீங்கள் சாப்பிடுங்கள், அவனுக்கு இது பழக்கம்தான். அவனது போக்கு எனக்கும் பழக்கம்தான்" , மீனாட்சி தைரியமாக சொல்லிவிட்டாலும் அதில் புதைந்திருந்த வருத்தம் சுஷினுக்குப் புரிந்தது.

மினிக்கு மீனாட்சியின் பேச்சை கேட்ட பின்பு சாப்பாடே செல்லவில்லை. தன் தாயைப் பற்றி நாம் சிந்திக்கவே இல்லையே.

எனக்கு ஒரு அண்ணன் இல்லையே என்ற வருத்தம் புதிதாக முளைப்பதை உணர்ந்தாள் மினி. என்னதான் ஆணும் பெண்ணும் சரிசமம் என்று சொன்னாலும் திருமணத்திற்கு பிறகு பெண்ணின் பெற்றோரை பார்க்கும் பொறுப்பை பெண்மகள்கள் ஏற்க முடியாதே.

தன்னுடன் அம்மாவை கூட்டிக் கொண்டு போகவும் முடியாது.தனியாக விட்டு செல்லவும் மனமில்லாமல் உள்ளுக்குள்ளே மருகினாள் மினி.

சுஷினுக்குப் புரிந்தாலும் மீனாட்சி தங்களுடன் ஒரே வீட்டிற்கு வர மாட்டார் என்று உறுதியாக நம்பினான்.

அதற்க்குக் காரணம் தன் கணவன் ராம் இறந்த பிறகு சொந்த பந்தங்களின் உதவியை நாடாமல், அவர்களின் நிழலில் ஒதுங்காமல் தனித்து நின்று வாழ்ந்து காட்டியவர் அவர்.

ஆனாலும் தனியாகவும் விட முடியாது , இதற்கு ஒரு முடிவு சீக்கிரமாக எடுக்கவேண்டும் என்று தோன்றியது.

மினி சாப்பிடாமல் இருப்பதைப் பார்த்தவன். தன் இடக் கையால் அவளது கரத்தை அழுத்தினான். சாப்பிடு என்று சொல்லிவிட்டு எழுந்து சென்றான்.

யாரும் எதுவும் சொல்லவில்லை, மௌனம் மட்டுமே ஆட்சி செய்ய மினி தாயை கட்டிக் கொண்டு அழுதாள்.

மீனாட்சியும் கண் கலங்கினார். ஆனாலும் அவளிடம் பேச வில்லை. ஏனென்றால் நேற்றைய இரவின் உற்ச்சாகம் மினியிடம் இல்லை என்பதை அவளது முகமே காட்டிக் கொடுத்தது.

அவர்கள் இன்னும் கணவன் மனைவியாக மாறவில்லை என்பதும் புரிந்தது. மீனாட்சி பேசாமல் இருந்ததன் காரணத்தை உணர்ந்து கொண்டாள் மினி..

ஆனாலும் மினி தன் தாயிடம் எதுவும் சொல்லாமல் சென்று காரில் ஏறி அமர்ந்தாள். அவள் சென்றதும் மீனாட்சியிடம் "அத்தை நீங்க எதற்கும் வருத்தப் படாதிங்க. மினியை நான் கண்கலங்காமல் பார்த்துக் கொள்வேன்.

அதனால் அவளது கவலை உங்களுக்கு வேண்டாம். அதுமட்டும் இல்லை நீங்கள் தனியாக இருப்பதாக எண்ண வேண்டாம் கூடிய சீக்கிரமே அதற்கு ஒரு முடிவு செய்கிறேன். நான் போயிட்டு வாறேன்".

அவன் கிளம்பும் முன்னர் மீனாட்சிக்கு சுஷினிடம் பேச வேண்டி இருந்தது, "சுஷின் நான் சொல்லுகிறேன் என்று தவறாக நினைக்காதே, மினி அப்பா இல்லாமல் வளர்ந்தவள்.

பாசத்தை கொட்டி வளர்க்க முடிந்த என்னால், கண்டிப்பு காட்ட முடியவில்லை.அதனாலோ என்னமோ இன்னும் குழந்தையாகவே இருக்கிறாள்.

கொஞ்சம் பிடிவாதமும் உண்டு, ஆனால் மற்றபடி அவள் தங்கம்தான் மாப்பிள்ளை.அவள் என்ன செய்தாலும் அவளை வெறுத்து விடாதே

அவரது பேச்சில் இருந்து ஏதோ புரிவதுபோல் தோன்றியது அவனுக்கு. ஆனாலும் அதை வெளியில் காட்டாமல் ,

"என் மினியைப் பற்றி எனக்கு தெரியாதா அத்தை, அவள் என்ன செய்தாலும் இந்த ஜென்மத்தில் அவள்தான் என் மனைவி இதில் எந்தவிதமான மாற்றமும் இல்லை சரியா".

உறுதியாக சொல்லிச் செல்லும் அவனை தன் மகள் புரிந்துகொண்டு வாழவேண்டுமே என்று ஆண்டவனிடம் வேண்டுவதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை அவருக்கு.

வீட்டிற்கு வந்த மினியையும் சுஷினையும் அனைவரும் வரவேற்று பேசிக் கொண்டிருந்தனர்.

அவர்களின் பேச்சு மினியின் தயக்கத்தை சிறிது போக்கியது. அவளை அறைக்கு கூட்டிச் செல்லுமாறு சுலோ சொல்ல,

"இல்லை அம்மா நீங்க அவளுக்கு ரூமை காட்டுங்க, எனக்கு கொஞ்சம் வேலை இருக்கிறது. நான் ஆபீஸ் போகிறேன்", என்று சொல்லி கிளம்பினான்.

மினியின் முகம் வெளறி விட்டது . வந்த முதல் நாளே தன்னை தனியாக விட்டுச் செல்கிறானே என்று எண்ணினாள் .

"ஷிஜி உங்க காலேஜ் க்கு எத்தனை நாள் லீவ் போட்டு இருக்க".

"ஏன் திடீரென்று கேட்க்கிறாய், இரண்டு வாரம் விடுமுறை போட்டு இருந்தோம், நானும்மினியும்".

"அப்படியா இன்னும் மூன்று நாள் இருக்கா, சரி நான் சும்மாதான் கேட்டேன் . நீங்க இருங்க எனக்கு அவசர வேலை இருக்கிறது. நான் போயிட்டு முடிந்தால் லஞ்ச்-க்கு வருவேன்.

இல்லை என்றாலும் எனக்கு காத்திருக்காமல் நீங்கள் சாப்பிடுங்கள் சரியா", அனைவரிடமும் பொதுவாக சொல்லிவிட்டு கிளம்பினான்.

பிரகாஷும் உடன் வருவதாக சொல்லவே, "டேய் புது மாப்பிள்ளை என் தங்கை என்னை சும்மாவே புகழுவாள் . இந்த லட்சணத்தில் உன்னை கூட்டிக் கொண்டு போனால்என்னை ஒருவழி செய்து விடுவாள்.

சிறியவர்களின் குறும்புத் தனம் தலை தூக்க அவர்களை விட்டு சுலோவும், சுந்தரமும் கழன்று கொண்டனர்.

அதனால் நீ வர வேண்டாம். நான் மட்டும் போகிறேன் சரியா".

"அண்ணா உங்கள் இரண்டுபேருக்கு நடுவில் என்னை ஏன் இழுக்கிறாய். கூட்டி போக முடியாது என்று நேரடியாகவே சொல்ல வேண்டியது தானே",ஷிஜி குறுக்கே பாய்ந்தாள்.

"பிரகாஷ் பாத்தியா இதற்கு மேலும் உன்னை கூட்டிக் கொண்டுபோக எனக்கு தைரியம் வருமா என்ன", சுஷின் ஷிஜியைப் பார்த்து சிரித்தான்.

"போடா நான் அப்படியா சொன்னேன்"

"கொஞ்சம் இருந்த மரியாதையும் போச்சா, நான் கிளம்புகிறேன் நீ யாச்சு உன் பொண்டாட்டி ஆச்சு என்னை விடு".

"சுஷின் நான் மட்டும்தான் புது மாப்பிள்ளையா, நீ.......... , நானாவது ஒரு வாரமாக இங்கேயேஇருக்கின்றேன். . நீ இப்பொழுதுதான் வெளிநாடு போய்விட்டு வருகிறாய்

நீயே ஆபீஸ் போகும்போது நான் வீட்டில் இருந்தால் சரிவராது நானும் வருகிறேன்.“ஷிஜி மினியைப் பார்த்து கத்துக்கோ, புருஷன் வெளியே போகிறேன் என்று சொன்னதற்கு மறு வார்த்தை பேசவில்லை. நீ எதற்கு இப்படி சொல்லுகிறாய்”.

"உங்களுக்கும் ஆபீஸ் போகவேண்டும் என்றால் போங்களேன். யாரும் உங்கள் கையை பிடித்துக் கொண்டு இருக்கவில்லை", சொல்லிவிட்டு எழுந்து அறைக்குச் செல்ல திரும்பினாள்.

அவளை செல்ல விடாமல் பிரகாஷ் வழி மறித்தான் . அவனை மார்பில் கையை வைத்து தள்ளிவிட்டு அறைக்குச் சென்றே விட்டாள்.

பிரகாஷ் சுஷினிடம் நீ போ நான் பின்னால் வருகிறேன் என்று சொல்லி அவனது பதிலை எதிர் பார்க்காமல் ஷிஜியைத் தொடர்ந்தான்.

அவர்களது அறையில் இருந்து ஷிஜி பிரகாஷின் குரல் மட்டும் கேட்டது. "டேய் தொடாதே ஆபீஸ் போகணும்னு சொன்னியே அங்கேயே போ”.

இப்போ மட்டும் எதற்கு பின்னாலேயே வந்தாய் . .இன்னும் என்ன சொல்லப் போனாளோ அவளது வாயின் வார்த்தையை தடை செய்தான் பிரகாஷ்

மினியோ ஷிஜி சொல்லுவதை எல்லாம் ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள். அங்கிருந்து செல்லவேண்டும் என்று மூளை கட்டளை இட்டாலும் கால்கள் நகர மறுத்தன .

பிரகாஷ் ஷிஜியைப் போல் தாங்கள் எப்பொழுது மாறுவோம் என்று எண்ணினாள். அவளது பார்வை சுஷினை பார்த்தது.

அவளது விழிகளில் தெரிந்த ஏக்கம் சுஷினையும் பாதித்தது. ஆனாலும் எதுவும் சொல்லாமலும் அங்கிருந்து கிளம்ப மனமில்லாமலும் நின்றான்.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தபடியே நின்றனர் . அவர்களது பார்வையை வேறு இரு ஜோடி விழிகளும் கவனித்தன

"ஷிஜி போயிட்டு வாறேன் சரியா , லஞ்ச்க்கு நானும் சுஷினும் வீட்டிற்கு வருவோம்", என்ற சொல்லில் கலைந்தனர் இருவரும்.

பிரகாஷும் , சுஷினும் விடைபெற்றுச் செல்ல , மினியை அழைத்துக் கொண்டு சுஷினின் அறைக்குச் சென்றாள் ஷிஜி.

அறைக்குள் சென்றதும் ஷிஜி கேட்ட கேள்வியில் அதிர்ந்து விழித்தாள் மினி.

அலுவலகத்திற்கு சென்ற சுஷினிற்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. மினியை விட்டு வந்தது தவிப்பாகவே இருந்தது.

எதையுமே செய்யத் தோன்றாமல் அமர்ந்திருந்தான். பிரகாஷ் சுஷினைத் தேடி வந்தான். வந்தவன் எதுவும் சொல்லாமல் சுஷினையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அதை உணரும் நிலையிலும் சுஷின் இல்லை. சுஷின் மனதில் எதையோ வைத்து குழம்புவது அவனுக்கு புரிந்தது.

பிரகாஷ் அவனைப் பார்த்து , ஷிஜி மினியிடம் எந்த கேள்வியைக் கேட்டாளோ அதே கேள்வியை சுஷினைப் பார்த்து கேட்டான்.

சுஷினும் அதிர்ந்து போய் பார்த்தான்.

## 44

அறைக்குள் நுழைந்த மினியை கையைப் பிடித்து நிறுத்தினாள் ஷிஜி. அவளையே கூர்ந்து பார்த்தாள்.

"மினி நான் ஒன்று கேட்கவா", மினி, "என்ன அனுமதி எல்லாம் கேட்டுட்டு இருக்க. என்னன்னு சொல்லு".

"நீயும் அண்ணனும் சந்தோசமா இருக்கிங்களா".

ஷிஜியின் கேள்வியில் அதிர்ந்தாலும் அதை மறைத்துக் கொண்டு, "அப்படியெல்லாம் எதுவும் இல்லையே ஷிஜி உனக்கு ஏன் இப்படி ஒரு சந்தேகம் வந்தது".

"ஹையோ மினி எனக்கு ஒரு சந்தேகமும் இல்லை. சும்மா உன்னை கிண்டல் பண்ணினேன். சரி நீ ரெஸ்ட் எடு நான் கீழே போகிறேன்".

ஷிஜி சென்றதும் மினி எதற்கு ஷிஜிக்கு இப்படி ஒரு சந்தேகம் வந்தது. வந்த கொஞ்ச நேரத்திலேயே இப்படி கேட்க்கிறாள் என்றால், நாங்கள் அனைவருக்கும் தெரியுமாறு நடந்து கொண்டு இருக்கிறோம்.

இனிமேல் இப்படி நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்து கொண்டாள். ஆனால் அது அவ்வளவு சுலபமில்லை என்பது நடைமுறையில் வரும்போதுதான் தெரிந்தது.

மினி தனக்குத் தானே சமாதானம் செய்து கொண்டாலும் , சுஷினின் நினைவு அவளை மிகவும் அலைக்கழித்தது.

அறையிலேயே அடைந்து கிடந்தால் தேவை இல்லாத சிந்தனைகள்தான் வரும் என்பதை அறிந்து கீழே இறங்கி கிட்சென் னுக்குள் சென்றாள்.

அங்கே சுலோ சமையலில் ஈடுபட்டிருக்க, அவருக்கு அருகில் சென்று, "அம்மா நான் ஏதாவது செய்யவா", என்று கேட்டாள்.

"சமையல் நானே பார்த்துக் கொள்வேன் மினி. நீ கொஞ்சநேரம் தூங்கு. இல்லையென்றால் காலேஜ் பாடம் ஏதாவது எடுத்து படிம்மா. எதுக்கு இப்பவே கஷ்டப் படுற".

"மினி உனக்கு தேவையா இது அதெல்லாம் அவங்களே பார்த்து கொள்வார்கள். நீ என்கூட வா, உன்னோட கபோட் எல்லாம் நாம அடுக்கலாம்", மினியை இழுத்துக் கொண்டு சென்றாள் ஷிஜி.

அறையில் மினியின் திங்க்ஸ் அனைத்தையும் அடுக்கி வைத்தனர். மினியின் புக்ஸ் அனைத்தையும் டேபிளில் அடுக்கினர்.

அறை முழுவதையும் அடுக்கி வைத்தனர். ஆனாலும் சுஷினின் துணி, பைல்ஸ் அனைத்தும் ஒரு ஒழுங்குடன் இருப்பதை பார்த்தாள்.

அவளது பார்வையை உணர்ந்து ஷிஜி கூறினாள், "அண்ணன் எல்லாவற்றிலும் ஒரு ஒழுக்கத்துடனே இருப்பான்.

அவன் ரூம் டிரஸ் அனைத்தையுமே அவனே ஒழுங்கு படுத்திக் கொள்வான். நம்மளை எதிர் பார்க்கவே மாட்டான் அவன் ஒரு அதிசயப் பிறவி.

அதைவிட காலேஜ் படிக்கும் போது எவ்வளவு பெண்களுடன் பழகுவான். ஆனால் அனைவரையுமே பார்வையிலேயே தள்ளி நிற்க வைத்து விடுவான்.

அவன் ஒருபெண்ணை லவ் பண்ணுவான் என்று நான் நம்பியதே கிடையாது. அவனோட பார்வையில் சின்னதா சலனம் வந்தது உன்னை பார்த்ததற்கு பிறகுதான்".

சுஷினை பற்றி தெரிந்துகொள்ள, தெரிந்துகொள்ள மினியின் குற்ற உணர்வும் அதிகரித்தது. ஷிஜி எதையும் கவனிக்காமல் அண்ணனைப் பற்றி சொல்லிக் கொண்டே இருந்தாள்.

ஒரு கட்டத்தில் மினியின் கவனம் தன்னிடம் இல்லை என்று அறிந்த பின்புதான் நிறுத்தினாள்.

பின்னர் காலேஜ் செல்வதை பற்றி பேசிவிட்டு இருவருமே தங்களது கணவனுக்காக காத்திருக்கத் துவங்கினர்.

சுஷின் எதுவும் சொல்லாமல் பிரகஷையே பார்த்தான். "நீ என்ன கேட்ட பிரகாஷ் எனக்கு சரியாக கேட்கவில்லை என்று நினைக்கிறேன். திரும்ப கேள்".

"உனக்கு சரியாகத்தான் கேட்டது சுஷின். ஆனால் என்ன பதில் சொல்லுவது என்று தெரியாமல் மழுப்புகிறாய். நான் கேட்டதற்கு மறைக்காமல் உண்மையை மட்டும் சொல்லு".

"நீ இந்த கேள்வியைக் கேட்க காரணம் என்ன".

"காரணம் எல்லாம் எதுவும் இல்லை சுஷின். உன்னிடம் கேட்க வேண்டும் என்று தோன்றியது அவ்வளவுதான். இப்போ நேரடியா பதில் சொல்லப் போகிறாயா இல்லையா".

"இதில் பதில் சொல்ல என்ன இருக்கிறது பிரகாஷ். எனக்கும் மினிக்கும் எந்த பிரச்சனையுமே இல்லையே. நான் இன்றைக்கு ஆபீஸ் வரவேண்டாம் என்று அவள் சொன்னாள்.

நான் கேட்காமல் வந்துவிட்டேன் அந்த கோபம்தான் அவளுக்கு , மற்றபடி எதுவும் இல்லை சரியா".

"நீ சொல்லுகிறாய் நானும் நம்புகிறேன். நானும் உன்னிடம் ஒரு விஷயம் பேசவேண்டும் என்று எண்ணினேன். ஆனால் அதை எப்படி சொல்லுவது சொன்னால் நீ எப்படி எடுத்துக் கொள்வாய் என்றுதான் தெரியவில்லை.

ஆனாலும் சொல்லாமல் இருக்க முடியவில்லை".

"இந்த பீடிகை எல்லாம் இல்லாமல் முதலில் என்ன விஷயம் என்று சொல்லு".

"நானும் ஷிஜியும் தனியாக வீடு பார்த்து செல்லலாம் என்று இருக்கிறோம். நீதான் எப்படியாவது உன் அம்மா , அப்பாவிடம் பேசி சம்மதம் வாங்க வேண்டும்".

"இருக்கிறோம், அப்படிஎன்றால் இதற்க்கு ஷிஜி சம்மதம் சொல்லி விட்டாளா".

"இது முழுக்க முழுக்க என்னோட முடிவு, என்னோட முடிவிற்கு என் மனைவி கட்டுப் பட்டாள் அவ்வளவுதான்".

"பிரகாஷ் அவள் இன்னும் காலேஜ் படிப்பையே முடிக்கவில்லை. இந்த நிலைமையில் தனிக் குடித்தனம் என்றால், அவளால் சம்மாளிக்க முடியாது. சொன்னால் கேளு அவள் காலேஜ் படிப்பையாவது முடிக்கட்டுமே".

"எனக்கு எந்த விதத்தடங்கலும் இல்லை. ஆனால் நான் தனியாக போகிறேன். ஷிஜி படிப்பு முடித்துவிட்டு வரட்டும்.

நான் கோபத்தில் சொல்லுகிறேன் என்று எண்ணாதே. என் இடத்தில் இருந்து யோசித்தால் உனக்கு புரியும். சரி வா

சாப்பிட போகலாம் , அவங்க நமக்காக காத்துக் கொண்டிருப்பார்கள்".

சுஷினிற்கு தலையை வலிப்பது போல் இருந்தது. தன் தங்கையை தனியே அனுப்பவும் மனமில்லை, அனுப்பாமல் இருக்கவும் முடியாது.

என்னதான் செய்வது. இந்த யோசனையுடனே பிரகாஷைத் தொடர்ந்தான் சுஷின்.

வீட்டிற்கு வந்தவர்கள் பேசாமலே சாப்பிட்டனர். சுஷினும் பிரகாஷும் எதையும் பேசிக் கொள்ளவில்லை.தங்களது சிந்தனையிலேயே உழன்றனர்.

பிரகாஷிடம், "நான் கொஞ்சநேரம் ரெஸ்ட் எடுத்துவிட்டு ஆபீஸ் வருகிறேன். கொஞ்சம் தலைவலியா இருக்கிறது. என்று சொல்லிவிட்டு சென்றான்.

அவன் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்தான் பிரகாஷ். "என்ன பிரகாஷ் அண்ணன் முகமே சரியில்லை. நீங்களும் ஏதாவது கேடீர்களா அவனிடம்".

"நீங்களும் கேட்டீங்களா என்றால், நீயும் மினியிடம் பேசினாயா. என்ன சொன்னாள்".

"உங்ககிட்ட அண்ணா என்ன பதிலை சொன்னானோ அதே பதிலைத்தான் என்னிடம் மினி சொன்னாள். ஆனாலும் எனக்கு என்னமோ இன்னும் மனசு சமாதானமே ஆகவில்லை".

"ஷிஜி, அப்படியே அவர்களுக்குள் பிரச்சனை என்றாலும் நாம் கணவன் மனைவிக்கு நடுவில் போக முடியாது. என் நண்பனைவிட உன் அண்ணனை உனக்கு நன்றாகவே தெரியும். எந்த பிரச்சனையாக இருந்தாலும் அவன் சம்மாளித்து விடுவான்".

"நீங்கள் சொல்லுவதைப் பார்த்தால் அவர்களுக்குள் பிரச்சனை இருக்கிறது அப்படித்தானே".

"இருக்கு என்றும் சொல்ல முடியாது இல்லை என்றும் சொல்ல முடியாது.

ஆனாலும் அவர்களுக்குள் ஏதோ சரியில்லை என்பது மட்டும் தெளிவாக தெரியுது.நம்மால் முடிந்ததை அவர்களுக்கு நடுவில் செல்லாமல் சரிசெய்யமுடிந்தால் செய்யலாம்.

ஆனால் அதற்கு அவசியம் இருக்காது என்றுதான் எண்ணுகிறேன். சுஷினே எல்லாம் பார்த்துக் கொள்வான்.

அப்படி அவனுக்கு குழப்பம் என்றான் நம்மிடம் வருவான். அப்படி வந்தால் நாம் பார்த்துக் கொள்ளலாம் சரியா".

சரி அதை விடு இன்று சுஷினிடம் நாம் தனியாக போவதைப் பற்றி பேசினேன்".

"அதற்கு அண்ணன் என்ன சொன்னான்", இதை கேட்க்கும்போதே அவன் என்ன சொல்லி இருப்பான் என்பது புரிந்துதான் இருந்தது அவளுக்கு.

ஆனாலும் அவனிடம், "அண்ணன் சரி என்று சொன்னானா..........." .

"சரி என்று சொல்லி விடுவானா. ஆனாலும் என்னால் இங்கேயே இருக்க முடியாது ஷிஜி. எனக்குஎன்று ஒரு சுயகௌரவம் வேண்டும் என்று நினைக்கின்றேன்.

ஆனாலும் உன்னை வருத்தப் பட வைக்கவும் மனமில்லை. நீ வேண்டுமென்றால் காலேஜ் முடியும் வரை இங்கு இருந்து கொள்.

நான் தினமும் வந்து உன்னை பார்த்துக் கொள்கிறேன். உன் படிப்பு முடிந்ததும் நாம் தனியாக போய்விடலாம் என்ன சொல்லுகிறாய்".

"நீங்களும் உங்க யோசனையும், அதை தூக்கி உடப்பில் போடுங்க. யோசனையைப் பாரு, நீங்க என்னை விட்டு

இருந்து கொள்வீர்களா, என் முகத்தைப் பார்த்து சொல்லுங்கள்".

முடியாது என்பதுபோல் தலையை ஆட்டி, தலையை கவிழ்த்துக் கொண்டான். அவனது கண்கள் கலங்கியது, இதை ஷிஜிக்கு காட்டாமல் முகத்தை திருப்பிக் கொண்டான்.

அவனது மனநிலை ஷிஜிக்குப் புரிந்தது. அவனது அருகில் சென்று அவனது தலையைத் திருப்பினாள். அவன் கண்கள் கலங்கியதற்கு அடையாளமாக சிவந்திருந்தது.

அவனை கட்டிலில் அமர்த்தி மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டாள். "பிரகாஷ், இத்தனை நாள் நீங்கள் தனிமையில் இருந்தீர்கள், அந்த தனிமையை என்னால் போக்க முடியாது ஆனால் நான் இருக்கும் வரை உங்களை தனியாக விட மாட்டேன்.

எங்கே சென்றாலும் உங்களுடன் நானும் வருவேன். தயவுசெய்து இப்படி பேசாதீங்க சரியா".

தன் மார்பில் ஈரம் படிவத்தை உணர்ந்தாள் ஷிஜி. அவனது தலையை நிமிர்த்த செய்த முயற்ச்சிகள் பலிக்கவில்லை.

எனவே எதுவும் பேசாமல் அவனது தலையை கோதிக் கொண்டு பேசாமல் நின்றாள். அவளது கண்களும் கலங்கின.

சிறிது நேரம் சென்றதும் அவனே பேசினான், "ஷிஜி நீ இப்படித்தான் சொல்வாய் என்று தெரியும். ஆனாலும் எங்கே இங்கேயே இருந்து கொள்கிறேன் என்று சொல்லிவிடுவாயோ என்று மனதின் ஓரத்தில் ஒரு எண்ணம் என்னை அலைக் கழித்துக் கொண்டே இருந்தது.

ஆனால் இப்போ............ " , அவளது இடையை இறுக்க கட்டிக் கொண்டு அவளுள்ளே புதைந்தான்.

அவனது நிலை புரிந்து ஷிஜியும் அவனை அணைத்துக் கொண்டாள்.

அறைக்குள் நுழைந்த சுஷினிற்கு என்ன முடிவு எடுப்பது என்பதில் குழப்பம் மேலோங்கியது. தாயிடம் சொன்னதற்கு அது முறைதான் என்று சொல்லிவிட்டார்.

பிரகாஷின் தன்மானத்தையும், கௌரவத்தையும் நாம் மதிக்கவேண்டும் என்றும் சொல்லிவிட்டார். ஷிஜிக்கு வேலைக்கு வேண்டுமானால் ஆட்களை அமர்த்தி விடலாம் என்றும் சொல்லி அந்த பிரச்சனையை சுலபம் போல் சொல்லிவிட்டார்.

ஆனாலும் அவனது மனம் ஊசலாடியது. அறை முழுவதையும் அளந்தவன் சோர்ந்துபோய் கட்டிலில் அமர்ந்தான்.

கட்டிலில் படுத்து கண்களை மூடிக் கொண்டான். தன் நெற்றியை யாரோ வருடும் உணர்வு தோன்ற கண்களை திறந்தான்.

மினி அவனுக்கு தலைவலி தைலம் தடவிக் கொண்டிருந்தாள். அவளது பார்வையும் கையும் தைலம் தடவுவதிலே நிலைத்து இருந்தன.

அவன் தூங்கி விட்டான் என்று எண்ணியே அவள் தைலம் தடவினாள். பாவம் அவளுக்கு தெரியாதே அவன் இவ்வளவு நேரம் அறையை அளந்து கொண்டிருந்தது.

அவன் கண்களைத் திறந்ததும் மினியின் கை அசைவற்று அங்கேயே தங்கி விட்டது. பார்வைகள் ஒன்றை ஒன்று கவ்விக் கொண்டன.

இருவரும் பார்வையை விலக்கவில்லை, விலக்க இயலவில்லை. விலக்க மனமும் இன்றி இருந்தனர்.

சுஷினே சுய நிலைக்கு வந்து, "என்ன செய்யிற மினி".

தான் பிடிபட்ட உணர்வில் முதலில் விழித்தாலும், அவன் தன் கணவன்தானே என்ற உண்மை விளங்கவும் சற்று தைரியமாகவே அவனது கண்களை ஏறிட்டாள்.

அந்த நிமிர்வுடனே, "ஏன் பார்த்தால் தெரியலையா".

அவளது பார்வையில், பேச்சில் கண்கள் மின்ன, "அது தெரியுது. நீ ஏன் செய்யிறன்னுதான் கேட்க்கிறேன்".

"நான் செய்யாமல் வேறு யார் செய்வா".

'இதை மட்டும் சரியா செய் செய்ய வேண்டியதை செய்யாதே. நீ மட்டும் ஐ லவ் யு ன்னு ஒரு வார்த்தை சொல்லுடி. நீ செய்யிற எதுக்காவது காரணம் கேட்ப்பேனா என்ன.

உனக்கு விருப்பம் இல்லாமல், தாலிகட்டிய ஒரே காரணத்துக்காக இதை எல்லாம் நீ ஏன் செய்யவேண்டும்.

இவை எல்லாவற்றையும் விட பெரிய விஷயம், நீ தள்ளி இருக்கும்போதே உன்கிட்ட எல்லை மீறவேண்டும் என்று தோன்றும்.

இதில் நீ இப்படி நெருங்கி வந்து இழைந்தால் நான் என்னதான் செய்ய. வாயை தொறந்து எதுவும் சொல்லாதே ஆனால் இதையெல்லாம் நல்லா செய்'.

அவன் மனதுக்குள்ளேயே பொருமிக் கொண்டிருக்க, அதற்கு காரணமானவளோ கருமமே கண்ணாக தைலம் தடவிக் கொண்டிருந்தாள்.

மினிக்கு நெஞ்சின் ஓரத்தில் அந்த பெண் யாராக இருக்கும் என்ற எண்ணம் இல்லாமல் இல்லை. ஆனால் இன்றைய மனநிலையில் சுஷினை தவறாக நினைக்க முடியவில்லை.

ஆனாலும் இரவில் ஒரு பெண்ணுடன் இருந்தேன் என்பதை அவனே சொன்னானே. இவை அனைத்தும் மனதில் உழன்றாலும்,

அவனை அப்படியே ஏற்றுக்கொள்ள மனம் இப்பொழுது பக்குவப் பட்டிருந்தது. அவனது மேலுள்ள காதல் அதை இரண்டாம் பட்ச்சமாக்கியது.

(அவளது உள்ளக் கிடக்கையை சுஷின் அறிந்து வைத்திருந்ததுதான் விந்தை. ஆனால் இதை மினி அறியவில்லை. அவளை நெருங்காததற்கும் அதுவே காரணம்.)

ஆனால் மனமோ, 'என்னோட மன மாற்றத்தை இப்படி உனக்கு உணர்த்தத்தான் முடியும், என்னால் சொல்ல முடியாது சொல்லும் தகுதியும் எனக்கு இல்லை. ஆனால் நீ என்னை இப்பொழுது எடுத்துக் கொள்வதாக இருந்தால் நான் தடுக்க மாட்டேன்.

இப்பொழுது மட்டுமல்ல எந்த நிமிடம் உனக்கு நான் வேண்டமென்று தோன்றுகிறதோ என் அனுமதி இல்லாமலே என்னை எடுத்துக்கொள் நான் தடுக்கமாட்டேன்.

ஆனால் அதை யாசிக்கும் தகுதி இன்னும் எனக்கு இருக்கிறதா என்பதுதான் எனக்கு புரியவில்லை.

ஒருவரின் மனம் மற்றவருக்காக உருகுவது தெரியாமலேயே, இருவரும் இந்த நிலையை கலைக்க விரும்பாமல் மௌனமாக இருந்தனர்.

## 45

எவ்வளவு நேரம் சென்றதோ இருவருமே அறியவில்லை. சுஷினே பேசத் துவங்கினான். "நாளையில் இருந்து காலேஜ் போகப் போகின்றீர்களா. இல்லை நீயும் ஷிஜியோடே இன்னும் மூன்று நாள் கழித்தே போகப் போகின்றாயா".

"நாளையில் இருந்து போக சொல்லுகிறீர்களா".

"நான் எப்போ அப்படிச் சொன்னேன்".

"பிறகு நீங்க கேட்டதற்கு என்ன அர்த்தம்".

"ஒரு அர்த்தமும் இல்லை. ஷிஜி வேறு வீட்டிற்கு சென்று விட்டால் நீ தனியாகத்தான் காலேஜ் போகவேண்டி இருக்கும். அதனால் இப்பொழுதே தனியாக போய் பழகிக் கொண்டால் நன்றாக இருக்கும் என்று கேட்டேன்".

"மினி எங்கே போகப் போகிறாள். சொல்லுவதை கொஞ்சம் தெளிவாகத்தான் சொல்லுங்களேன்".

கொஞ்ச நேரம் எதுவும் சொல்லவில்லை சுஷின் . பிறகு நிதானமாக, "பிரகாஷ் தனியாக போகவேண்டும் என்று பிடிவாதமாக இருக்கின்றான்.

அம்மாவும் அதுதான் சரி என்று சொல்லுகின்றார்கள். ஆனால் இருவருமே சின்னவங்க ஷிஜி காலேஜே இன்னும் முடிக்கவில்லை.

அதற்கும் முன்னாள் குடும்பம், படிப்பு இந்த இரண்டையுமே எப்படி சம்மாளிப்பாள் அவள். அதுதான் ஒரே கவலையாக இருக்கு.

தனிமை அவங்களுக்கு சுதந்திரத்தை கொடுக்கும் அதே நேரம் தனிமையையும் கொடுக்கும். பிரகாஷ் ஆபீஸ் முடிச்சு வீட்டுக்கு போக எட்டு மணியாவது ஆகும்.

அதுவரை அவள் எப்படி தனியாக இருப்பாள். இதுவரை அவள் தனியாக இருந்ததே இல்லை, இப்படி ஒரே குழப்பமா இருக்கு எனக்கு".

மினிக்கு சிரிப்பாக வந்தது. அதே நேரம் பொறாமையாகவும். "ஏன் நான் என் அம்மாவை விட்டு உங்களுடன் தனியாக வரவில்லையா. பெண்கள் நாற்று மாதிரி வளர்ந்ததும் ஒரு இடத்தில் இருந்து பிடுங்கி மறு இடத்தில் நட்டால்தான் பலன்.

பிறந்த வீடு எப்பொழுதும் நிரந்தரம் இல்லை".

"நீ சொல்லுவது சரிதான், உனக்கு இங்கே உன்னுடன் என் அம்மா, அப்பா இருப்பார்களே ஷிஜி அங்கே யாரும் இல்லாமல் தனியாக இருப்பா. உனக்கு அது புரியவில்லையா".

"நீங்க தான் புரியாமல் பேசுறீங்க. பிரகாஷ் அண்ணாக்கு அம்மா அப்பா கிடையாது. இது தெரிந்துதானே ஷிஜியை கல்யாணம் செய்து கொடுத்தீங்க.

இப்போ புதுசா பேசினால். பிரகாஷ் அண்ணனும் எத்தனை நாள்தான் பொண்டாட்டி வீட்டிலேயே இருக்க முடியும்.

ரோஷம் உள்ள எந்த ஆண்மகனும் இதற்கு சம்மதிக்க மாட்டான்".

மினி பேசியதைக் கேட்டதும் சுஷினின் முகம் பளிச்சிட எழுந்து அமர்ந்தான். அமர்ந்தவன் எழுந்த வேகத்தில் தன் கரங்களால் மினியின் கன்னத்தை தாங்கிக் கொண்டான்.

அவனது செய்கையின் அர்த்தம் புரியாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் மினி. "மினி இப்போ சொன்னியே அதை திரும்ப சொல்லு".

எதற்கு கேட்க்கிறான் என்று புரியாவிட்டாலும் அவள் சொல்லுவதை சொல்லும் கிளிப்பிளை போல் திரும்பச் சொன்னாள்.

சுஷின் "யுரேகா............ " என்று கத்திக் கொண்டு அவளது கன்னத்தில் அழுந்த முத்தமிட்டுவிட்டு அதை உணரக் கூட இல்லாமல் சென்றுவிட்டான்.

மினி தான் சிலையென இருந்துவிட்டாள். முதல் இரவின் பிரச்சனைகளுக்குப் பிறகு தீண்டிய அவனது அணைப்புமுத்தம். அதை அவன் உணர்ந்து செய்யவில்லை என்பது அவளுக்குப் புரிந்தது.

ஆனால் அவள் உணர்ந்தாளே, அவனது பார்வை, பேச்சு, தொடுகை இறுதியில் கன்னத்தில் பதிந்த அவனது

இதழ்கள்.

இன்னும் அதன் வெப்பம் மிச்சம் இருப்பதுபோல் தோன்றியது அவளுக்கு. கன்னத்தில் கைவைத்து அதிலேயே படுத்துக் கொண்டாள்.

படுத்த பின்பு நினைத்தாள், அவன் எதை கண்டுபிடித்தான். எதற்கு அப்படி குதித்துக் கொண்டு ஓடினான் எதுவும் புரியாமலேயே கண்ணயர்ந்தாள்.

சுஷினின் மனமோ பிரச்சனைக்கு தீர்வு கண்டுவிட்ட திருப்தியில் குதித்துக் கொண்டிருந்தது. ஆனாலும் தனது தீர்வு அனைவருக்கும் பிடிக்குமா.

ஒத்துக் கொள்வார்களா யோசனையாகவே இருந்தது. ஆனாலும் முயற்சித்துப் பார்க்காமல் விடக் கூடாது என்று முடிவு செய்தான்.

முதலில் தன் முடிவு ஷிஜிக்கும் பிரகஷிர்க்கும் விருப்பமா என்று கேட்டு விடலாம் என எண்ணினான்.

அதற்கான சந்தர்ப்பமும் சீக்கிரமே கிடைத்தது.

மினியும், ஷிஜியும் காலேஜ் செல்ல துவங்கி ஒரு வாரம் ஓடி விட்டது. அன்று ஞாயிறு அனைவரும் வெளியே செல்லலாம் என முடிவு செய்தனர்.

முதலில் பீச் போகலாம் என்று கிளம்பிச் சென்றனர். சுலோவும் சுந்தரமும் கரையில் அமர்ந்து கொள்ள, ஷிஜி - பிரகாஷ் ஒருவரை ஒருவர் நீரில் தள்ளிவிட்டு விளையாடிக் கொண்டிருந்தனர்.

மினியும் நீரில் தனியாக விளையாடிக் கொண்டிருந்தாள், சுஷின் அவளது அருகில் நின்று கொண்டிருந்தான்.

நீரில் விளையாடும் அவசரத்தில் பெரிய அலை வந்ததை கவனிக்காமல் தடுமாறி விழப் போனவளை இடையில் கைகொடுத்து தாங்கிக் கொண்டான்.

ஆனாலும் அலையின் நீர் அவளை முழுவதுமாய் நனைத்தது. அவள் போட்டிருந்த லைட் ப்ளூ கலர் சுடிதார் அவளது மேனியின் உள்ளழகை மறைக்கமுயன்று தோற்றது.

அவளது மேனியில் சுடிதார் ஒட்டிக் கொண்டது. சுஷினின் பார்வை அவளை தழுவியது. அவள் நின்ற கோலம் அவனுள் தீ மூட்டினாலும் அது கடற்க்கரை என்பதால் தன்னை கட்டுப் படுத்திக் கொண்டான்.

அவர்கள் ஒதுக்குப் புறமான இடத்தில் இருந்ததால் அங்கே அவர்களைத் தவிர யாரும் இல்லை.

சுஷின் அவளை ,"மினி நீ அம்மா கிட்ட போய் உக்காந்துக்கோ, காற்றில் சீக்கிரம் துணி காய்ந்துவிடும் போ".

அவள் இந்த சுடிதார் போட்டதற்காக முதல் முறையாக வருந்தினாள். எப்பொழுதும் அவள் காலை மட்டுமே நனைப்பாள். ஆனால் இன்று சுஷின் இருந்த திடத்தில் இன்னும் கொஞ்சம் இறங்கி நின்றாள்.

ஆனால் அலையின் வேலையில் முழுவதுமாக நனைந்து விட்டாள். இதே கோலத்தில் அனைவர் முன்பும் நிற்ப்பது சங்கடத்தை அளிக்க,

ஆனாலும் யாரும் இவர்களைப் பார்க்கவில்லை. முடியாது என்பதுபோல் தலையை ஆட்டி அவனது முதுகின் பின்னால் ஒண்டினாள்.

அவளது சங்கடம் உணர்ந்து அவளை அழைத்துக் கொண்டு சுமோவிற்கு விரைந்தான். சுமோவில் இன்ஜினை ஆன் செய்து AC யை ஹீட் க்கு மாற்றினான்.

ஒரு டவல் லையும் எடுத்துக் கொடுத்தான். தலையை பிரித்து டவலால் துடைத்துக் கொண்டாள்.

தலையை பிரித்துவிட்டு அவள் அமர்ந்து இருந்த கோலம் சுஷினை உன்மத்தம் கொள்ளச் செய்தது.

முகத்தில் இருந்த ஒன்றிரண்டு நீர்த்துளிகள், உடலுடன் ஒட்டிய அவளது ஆடை தன் உணர்வுகள் தன் கட்டுப்பாட்டை மீறுவதை உணர்ந்தான்.

அருகில் இருப்பவள் தன் காதல் மனைவி, அவளை தொட ஏன் தயங்கவேண்டும் என்று ஒருமனம் கேள்வி எழுப்ப அவளை அணைக்க அவனது கை எழுந்து மினியின் பக்கம் நீண்டது.

சுஷின் தன்னை உடுருவிப் பார்ப்பதை உணர்ந்தே இருந்தாள் மினி. அவனது தோள் சாய்ந்துகொள்ள துடித்தாள் ஆனாலும் தயக்கம் தடுத்தது.

அவனது பார்வையில் உடம்பின் ஒவ்வொரு அணுவும் சிலிர்ப்பதை உணர்ந்தாள். தன்னை கட்டுப் படுத்தும் வழி தெரியாமல் கீழ் உதட்டை அழுந்த தன் பற்களால் கடித்துக் கொண்டாள்.

அவளது இதழ்களில் சுஷினின் பார்வை நிலைத்தது. அவனது கைகள் தன்னை நோக்கி வருவதை உணர்ந்து என்ன நடக்குமோ என்ற எதிர் பார்ப்பில் கண்களை அழுந்த மூடிக் கொண்டாள்.

அவளது மூடிய இம்மைகளைப் பார்த்தவன், தன் தலையை வேகமாக உலுக்கிக் கொண்டு சுமோவை விட்டு இறங்கி , ஷிஜி, பிரகாஷைத் தேடிச் சென்றான்.

அனைவரும் இப்பொழுது ஒரே இடத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தான். தன்னை நிதானப் படுத்த பெரிய மூச்சுக்களை எடுத்து விட்டான்.

அங்கே மினியோ அடிபட்ட உணர்வுடன் அமர்ந்திருந்தாள். அவனது நிராகரிப்பு தாங்க முடியாததாக இருந்தது.

அவனுக்கும் அன்று இப்படித்தானே இருந்து இருக்கும் என்றும், அவனது உணர்வு இப்படித்தானே காயப் பட்டிருக்கும் என்றும்,

தான் இப்பொழுது அவனிடம் எதிர்பார்ப்பது நியாயம் இல்லை, என்றும் அழுது கரைந்தாள்.

இப்பொழுது அங்கே போனால் தன்னால் இயல்பாக இருக்கமுடியாது என்று தோன்ற தலை கவிழ்ந்து அழுதாள்.

அங்கே சென்ற சுஷின் பேசுவதற்கு இதுதான் சரியான சந்தர்ப்பம் என்பதை புரிந்துகொண்டு அவர்களிடம் பேசினான்.

பிரகாஷிற்கும் ஷிஜிக்கும் மிகுந்த சந்தோஷம். சுலோவும் சுந்தரமும் கூட ஆதரவு தந்தார்கள்.

தன் வேலை இவ்வளவு சுலபமாகவும், சீக்கிரமாகவும் முடியும் என்று எண்ணவில்லை அவன்.

ஆனாலும் தன் தாயிடம், "அம்மா நான் செய்வதில் ஏதாவது தவறு இருக்காம்மா. உங்களுக்கு இதில் ஏதாவது கோபமா, வருத்தாமோ இருந்தால் சொல்லுங்க".

"இதுல கோபப் படவோ வருத்தப் படவோ எதுவும் இல்லை சுஷின். பெருமைதான் படுகிறேன் என் பசங்களை நான் நல்லா வளர்த்து இருக்கேனே என்று".

"ஷிஜி நீ எதுவுமே சொல்லலையே".

"என் அண்ணன் எனக்கு நல்லதுதான் செய்வான் என்ற நம்பிக்கை எனக்கு நிறையவே இருக்கிறது. அதைவிட நீ சொன்ன யோசனை கரும்புதின்ன கூலி தருவது போல் சோ எனக்கு ரொம்ப சந்தோசம் போதுமா".

"பிரகாஷ் நீ................ ".

பிரகாஷ் எதுவும் சொல்லாமல் நண்பனை தழுவிக் கொண்டான். கண்கள் கலங்க, "உனக்கு எப்படி நன்றி

சொல்லுவது என்றே தெரியவில்லை. எப்பவுமே என் நண்பன் கிரேட் தான்".

"பிரகாஷ் சொல்லுவதை தள்ளி இருந்தே சொல்லுடா. பாரு நீ என்னை கட்டிப் பிடித்ததும் என் தங்கை காதில் புகை வருதுபார்".

"என் தங்கைக்கு பிடிக்காது என்பதை இப்படி மாத்தி சொல்லுறியா சுஷின்".

"அடேங்கப்பா பொண்டாட்டிக்கு ரொம்பதான் சப்போட் பண்ணுற".

"என் பொண்டாட்டிக்கு நான் பண்ணுறேன், நீயும் செய்யேன் யார் வேண்டாம் என்று சொன்னது'.

"அதுவும் சரிதான்".

"சுஷின் மினி எங்கே , அவ கிட்ட சொல்லிட்டியா", சுலோ.

"அம்மா அண்ணி கிட்டதான் முதலில் சொல்லி இருப்பான் அப்படித்தானே அண்ணா".

"இன்னும் சொல்லவில்லை அம்மா. உங்க எல்லோர் கிட்டேயும் முதலில் சொல்லி முடிவை தெரிந்த பிறகு பேசலாம் என்று இருந்தேன்.

அவ கார் ல ஹீட்டர் ஆன் பண்ணிட்டு உக்காந்து இருக்கா. வாங்க நாம போகலாம்.

அனைவரும் வருவதை பார்த்ததும் முகத்தை அழுந்த துடைத்துக் கொண்டு மலர்ந்த முகமாக இருந்தாள் மினி.

எல்லோரும் ஹோட்டல் போய் சாப்பிட்டுவிட்டு வீட்டிற்க்குச் சென்றனர். அனைவர் மனமும் நிறைந்து இருந்தது.

மினியைத் தவிர..............

சுஷினும் தான் துவங்கிய விஷயம் பாதிதான் முடிந்திருக்கின்றது மீதியும் சுபமாக முடியவேண்டுமே என்ற எண்ணத்திலும் இருந்தான்.

## 46

நாட்கள் விரைவது புரியாமலேயே போய்க்கொண்டிருந்தது. மினியும் ஷிஜியும் கல்லூரிக்கு போய்க்கொண்டு இருந்தனர்.

சுஷினும் பிரகாஷும் ஆபீஸ் வேலையில் மூழ்கி இருந்தனர். பிரகாஷின் முடிவுக்கு தான் ஒத்துக்கொண்டு விட்டோம். அதன்பிறகும் அதற்க்கான முயற்ச்சியில் முதல் படியைத்தான் தாண்டி இருக்கிறோம் என்பது புரிந்தே இருந்தது.

அன்று பிரகாஷை அழைத்துக் கொண்டு மீனட்சியை பார்க்கச் சென்றான் சுஷின். நலம் விசாரிப்புக்குப் பிறகு சுஷின் எதையோ சொல்லவந்து தயங்குவது புரிய,

"என்ன சுஷின் பேச வந்துட்டு பேசாமல் இருக்க. என் கிட்ட ஏதாவது கேட்கணுமா, மினி ஏதாவது தப்பு செஞ்சுட்டாளா இல்லை உன்னை புரிந்துகொள்ளாமல் நடந்து கொள்கிறாளா.

எதுவாக இருந்தாலும் வெளிப்படியாக பேசு ஏன் தயங்குகிறாய். "ஐயோ அத்தை மினியைப் பற்றி நான் பேச வரவில்லை.

அவளும் நானும் நன்றாகவே இருக்கிறோம். நீங்க அதைப் பற்றி வருத்தப் படவேண்டாம். நான் பேச வந்ததே............ ," தயக்கத்துடன் பேச்சை பாதியில் நிறுத்தி பிரகாஷைப் பார்த்தான்.

அவனும் புரிந்துகொண்டு, "அம்மா நீங்க என்னை மகனாக நினைப்பது உண்மை தானே, இல்லை வெறும் வாய் வார்த்தைக்காகத்தான் அப்படி சொல்லுகிறீர்களா".

"நீ என்று மினிக்கு அண்ணன் ஸ்த்தானத்தில் இருந்து சுஷினுக்கு தாரை வார்த்து கொடுத்தாயோ அன்று முதல் நான் உன்னை என் மகனாகத்தான் எண்ணுகிறேன். ஆனாலும் அதற்கும் நீங்கள் பேச வந்ததற்கும் என்ன சம்பந்தம்".

"அப்போ இந்த மகன் என்ன சொன்னாலும், என்ன கேட்டாலும் செய்வீங்களா".

"என்ன பிரகாஷ் என் சொத்தையா கேட்கப் போகிறாய். எதற்கு இவ்வளவு தயக்கம் நேரடியாக கேளேன்".

"அம்மா உங்க சொத்தை கேட்கவர வில்லை. ஆனால் மகன் என்ற உரிமையை கோர வந்திருக்கிறேன்".

"நீ சொல்ல வருவது எனக்கு புரியவில்லை பிரகாஷ். நேரடியாக பேசேன்".

" நீங்க எனக்கு அம்மாவாக என்னுடனே வரவேண்டும் . அதைக் கேக்கத்தான் வந்தோம். நீங்க கேக்க சொன்னிங்க , நான் கேட்டுட்டேன் நீங்கள் மறுக்கக் கூடாது".

மீனாட்சியால் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. தான் கேட்டது நிஜம்தானா இது சரிவருமா என்பதுபோல் அவனைப் பார்க்க, "அத்தை நீங்க தயங்குவது புரியுது. ஆனால் இந்தமுடிவு நாங்கள் மட்டுமே எடுத்த முடிவு இல்லை.

என் அம்மா, அப்பா, ஷிஜி அனைவருக்குமே இது மிகப் பெரிய சந்தோஷம். இதில் ஒரு சுயநலமும் ஒளிந்து இருக்கிறது.

பிரகாஷும் ஷிஜியும் தனியாக இருக்கப் போகிறார்கள். அவர்களுக்கு துணை வேண்டுமே என்றுதான் உங்களை கேட்கிறோம்.

நீங்கள் மறுக்கக் கூடாது", அவன் சொல்லுவது பாதிதான் உண்மை என்பது மீனாட்சிகா புரியாது. தான் தனியாக

கஷ்டப் படக் கூடாது என்பதற்காகவும்தான் இந்த முடிவு என்பதை புரிந்து கொண்டார்.

முதலில் தயங்கினாலும் பிரகாஷின் முகம் அவரை ஒத்துகொள்ள செய்தது. மிகுந்த மகிழ்ச்சியுடனே வீடுபார்க்கும் படலமும் துவங்கியது.

காலேஜில் கரண்ட் இஸ்யு(issue) பற்றி ஒரு ப்ராஜெக்ட் செய்து பயில் சப்மிட் செய்ய சொல்லவும், ஷிஜியும் மினியும் தினசரிகளை ஆராயத் துவங்கினர்.

அன்றைய தினங்களில் எதுவும் இல்லாமல் போக, பழைய பேப்பர் களை சுலோவிடம் கேட்டனர். அவர் பரண் மீது இருந்து எடுத்துப் போடவும் அதை ஆராயத் துவங்கினர்.

அவர்களின் ஆராய்சியின் போது ஷிஜியின் கையில் கிடைத்தது சுபா-ப்ரவீனின் திருமண அழைப்பிதழ் விளம்பரம்.

அவர்களது திருமணம் அவசரத் திருமணம் என்பது மட்டுமே ஷிஜிக்கு தெரியும் எனவே இதை ஆச்சரியத்துடன் நோக்கி மினியிடம் காண்பித்தாள்.

"மினி இவதான் என் பெரியப்பா பொண்ணு, எங்க குடும்பத்துக்கும் அவங்க குடும்பத்துக்கும் பகை, அதுவுமில்லாமல் இரண்டே நாளில் முடிவான கல்யாணமாம். அவளோட கல்யாணத்துக்கு கூட நாங்க யாரும் போகவில்லை.

அண்ணன் மட்டும்தான் போனான். அது கூட உன் அம்மா டிச்சார்ஜ் ஆனாங்களே அன்றைக்குத்தான்.

இதுவரை சுவாரசியம் இல்லாமல் கேட்டவள் கடைசி வாக்கியத்தில் பரபரப்பு தோன்ற, அந்த தினசரியை வாங்கிப் பார்த்தாள்.

அவளால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. அன்று ஹோச்பிடலில் சுஷினின் அணைப்பில் இருந்த அவள்

சுஷினின் பெரியப்பா மகள் , அதாவது அவனது தங்கை.

அவன் அன்று சொன்னது இன்று காதில் ஒலித்தது, "அண்ணன் தங்கை பாசம் புரியாதவளிடம் பேசி பயன் இல்லை". என்று.

அந்த தினசரியையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். மினியால் எதுவும் பேச இயலவில்லை.

ஷிஜி சொன்ன அவசரக் கல்யாணம் என்பதும் உறுத்தியது. அதைவிட இரண்டே நாளில் ஏற்ப்பாடான கல்யாணம் என்றால், அதற்கும் முன் சுஷினை ஒரு பெண்ணுடன் இரவில் பார்த்தது,

அவளுடன் அவன் தங்கியது............... அப்படி என்றால், கண்கள் அந்த பேப்பரில் மணமகளின் பெயரைப் பார்த்தன.

'சுபா' 'சுபா' மனம் முணுமுணுத்தது. சுபாவிற்கு ஏதோ பெரிய பிரச்சனை இருந்திருக்கும் இவர்கள் குடும்பத்துக்கும் அவர்கள் குடும்பத்துக்கும் பகை இருந்த காரணத்தால் சுஷின் இவர்களிடம் சொல்லவில்லை போல.

அதனால்தான் இவர்களுக்கும் தெரியாமல் எல்லா உதவியும் அவளுக்கு செய்திருக்கிறான்.

அதைப்போய் நான் தவறாக நினைத்து............. ச்சே............ எனக்கே என் நினைப்பை எண்ணி அருவருப்பா இருக்கு.

அதுவும் அவளுடன் தங்கினாயா என்று கேட்டேனே. அவனும் ஆமாம் என்று சொன்னதும் எப்படி கற்பனை செய்தோம். அண்ணனும் தங்கையும்............. ஆண்டவா............ என்புத்தி ஏன் அவ்வளவு தரம் கெட்டு போயிற்று.

இந்த நாட்களில் மனம் மாறினாலும் ஒரு உறுத்தல் இருந்ததே அதுகூட அவசியம் இல்லாததே. என் சுஷின்

எவ்வளவு நல்லவன்.

அவன்கிட்ட மன்னிப்பு கேட்க வேண்டும். இதுவரை கேட்கவில்லை ஆனால் இனிமேலாவது கேட்கவேண்டும் என்று முடிவு செய்தாள்.

ஷிஜி மினியை கவனிக்காமல் பேப்பரை புரட்டுவதிலேயே இருந்தாள். அந்த நேரம் ஷிஜியின் தேடலையும், மினியின் சிந்தனையையும் கலைத்தது சுலோவின் குரல்.

"ஷிஜி, சுபா வந்திருக்கிறா பாரு".

ஷிஜி ஆச்சரியமாக பார்த்தாள். "அம்மா நீங்க சரியாதான் பாத்தீங்களா. அவள் ஏன் இங்கே வரப் போறா".

"அதுதாண்டி எனக்கும் புரியவில்லை, நாம அவளை விருந்துக்கு கூட இதுவரை கூப்பிடவில்லை. உங்க கல்யாண வேலையிலேயே இருந்துட்டோம்.

ஆனா பாரு அவளோட புருஷன் அதையெல்லாம் பார்க்காமல் சுபா கேட்ட உடன் அவளை கூட்டிக் கொண்டு வந்து இருக்கிறான்.

நீங்க ரெண்டு பேரும் அவங்க கிட்ட பேசிகிட்டு இருங்க நான் சமையல் வேலையை கவனிக்கிறேன்.

ஷிஜி நீ அவங்களுக்கு ஜூஸ் கொண்டு போ முதலில், மினி அதுவரை நீ பேசும்மா போ முதலிலேயே எங்க கிட்ட பேச அவளுக்கு தயக்கமா இருக்கலாம்".

சுலோ சொன்னதும் ஹாலுக்கு விரைந்தாள் மினி. சுபாவும் ப்ரவீனும் பார்வையாலேயே பேசியபடி அமர்ந்து இருந்தனர்.

மினி வருவதைப் பார்த்ததும் சுபா எழுந்துவந்து மினியின் கைகளைப் பிடித்துக் கொண்டாள். "எப்படி இருக்கின்றீர்கள் அண்ணீ, உங்க கல்யாணத்திற்கு வர முடியாமல் போய் விட்டது.

அண்ணன் செய்த உதவிக்கு நாங்க நிறைய கடமைப் பட்டிருக்கிறோம் . இந்த வாழ்க்கையே அண்ணன் அமைத்துக் கொடுத்ததுதான்.

உங்கள் கல்யாணத்திற்கு வரமுடியாததன் காரணம், அப்பொழுது நாங்கள் வெளிநாட்டிற்கு சென்றிருந்தோம். சொல்லும் பொழுதே சுபாவின் கன்னத்தில் ரோஜாக்கள் பூத்தது.

அவள் சொல்லவந்ததை புரிந்துகொண்டாள் மினி. 'அப்படியென்றால் சுபா தேனிலவிற்கு வெளிநாடு சென்றதால்தான் திருமணத்திற்கு வரவில்லையா, இது அவருக்கு தெரிந்தும் என்னிடம் சொல்லாமல் இருந்திருக்கிறார்.

ஒரே நாளில் எத்தனை அதிர்ச்சிகளைத்தான் தாங்குவாள் மினி. கை கால்கள் நடுங்க மயங்கிச் சரிந்தாள்.

இதை எதிர் பார்க்காததால் அலறினாள் சுபா. சுபாவில் அலறல் சத்தம் கேட்டு ஷிஜியும் சுலோவும் வேகமாக வந்தனர்.

அந்தநேரம் மீனாட்சியின் வீட்டில் இருந்து சுஷினும் பிரகாஷும் வீட்டிற்குள் வந்தனர். மினியின் நிலைமையையும், சுபாவையும் கண்ட நொடியிலேயே அனைத்தும் விளங்கியது சுஷினுக்கு.

சுலோ மினியின் முகத்தில் தண்ணீர் தெளிக்க, கண்விழித்தவளின் பார்வையில் பட்டவன் சுஷினே.

என்ன நடந்தது என்ன செய்கிறோம் எங்கு இருக்கிறோம் என்று அறியாமலேயே சுஷினின் கைகளைப் பிடித்துக் கொண்டு சொன்னாள், "சாரி என்னை மன்னிச்சுடுங்க தெரியாமல்..........".

அவள் அனைவர் முன்பும் உண்மையை உளறுவதை எப்படி சம்மாளிக்க என்று யோசித்தவன், "என்ன மினி காலையில்

சாப்பிட வில்லையா , மயக்கம் போட்டு விழுந்துவிட்டு எங்களிடமே சாரி கேட்கிறாய் எதுக்கு".

அவன் சொன்ன பின்புதான் சுய உணர்வுக்கு வந்தாள். அனைவரையும் பார்த்து சாரி என்று உதிர்த்தாள்.

தன்னையே மானசீகமாக குட்டிக் கொண்டாள். எல்லார் முன்பும் இப்படி உளறி கொட்டி வைத்து விட்டேனே.

"சுஷின் நீங்கவேற சுபாவின் முகத்தை இவ்வளவு கிட்ட பார்த்தாங்க இல்ல அதனால்தான் மயங்கி விட்டாங்கபோல", ப்ரவீன் சூழ்நிலையை எளிதாக்க சுபாவை கலாய்த்தான்.

அது நன்றாகவே வேலை செய்தது. "அப்போ நீங்க எப்படி ஸ்டெடியா இருக்கீங்க", சுஷின்.

"முதலில் நானும் மயக்கம் போட்டுதான் விழுந்தேன். இப்போதான் கொஞ்சம் தெளிஞ்சு இருக்கேன்".

"இப்போகூட தெளிஞ்ச மாதிரி இல்லையே ப்ரவீன்", சுஷின்.

"போச்சு நீங்களும் கண்டு புடிச்சுட்டின்களா".

"நீங்களும் கண்டு புடிச்சுட்டிங்களான்னா, வேற யார் கண்டு பிடிச்சா".

"உங்க தங்கச்சிதான். மனுசனை தெளிய விடுறதே இல்லை", அவனது பேச்சை கேட்டு அனைவரும் கொல்லென்று சிரித்தனர்.

சுபா ப்ரவீனை பாசமாக பார்த்தாள். ஆனால் அவளது பார்வையை ப்ரவீன் பார்க்க அவன் என்ன முட்டாளா.

பேச்சு சுவாரசியமாக திரும்பியது. சுபா கொண்டுவந்த கிப்ட் டை ஷிஜியிடமும் சுஷினிடமும் கொடுத்தாள்.

அங்கு சுலோ அனைவருக்கும் ஜூஸ் கொண்டுவந்து கொடுக்கவும் அனைவரும் பேசியவண்ணமே எடுத்துக் கொண்டனர்.

சுபா யாருக்கும் கேட்க்காத வண்ணம் ப்ரவீனை திட்டிக் கொண்டிருந்தாள். "உங்களுக்கு என் முகத்தை கிட்ட பார்த்தா மயக்கம் வருமா".

"கிட்ட பார்த்தா மட்டுமா, தூரத்துல பார்த்தா கூட மயக்கம் வருதுடீ", அவனது குரலில் இருந்த கிறக்கம் சுபாவையும் தொற்றிக் கொண்டது.

ஆனாலும் அவனிடம் வெளிக் காட்டாமல், "அப்போ பார்க்காதிங்க உங்களை யார் பார்க்க சொன்னது ".

"நான் பார்க்காமல் இருந்தால் உனக்கு சம்மதமா", அவளது மனம் அறிந்து சவால் விட்டான்.

"கொன்னுடுவேன் ராஸ்கல், வர வர உங்களுக்கு ரொம்ப தைரியம். இருங்க உங்களை கவனிச்சுக்கறேன்".

"இப்போவே கவனிக்கிறியாடா , நான் வேண்ணா வீட்டுக்கு கிளம்புறோம்னு அவங்க கிட்ட சொல்லவா".

அவன் விட்டால் சொல்லிவிடுவான் என்று தோன்ற, "கொஞ்சநேரம் சும்மா இருங்க. உங்களை............ ".

"என்னை..............".

சுபா மேலே எதுவும் பேசாமல் அமைதியானாள்.

அங்கே ஷிஜியும்-பிரகாஷும் மினி மயங்கி விழுந்ததும், சுஷினிடம் மன்னிப்பு வேண்டியதைப் பற்றியுமே பேசிக் கொண்டனர்.

"பிரகாஷ் , மினியும் அண்ணாவும் எதையோ மறைக்கிறாங்க. அவங்களுக்குள் எதுவோ சரி இல்லை. எனக்கு ரொம்ப கவலையா இருக்கு".

"ஷிஜி ஏற்கனவே உனக்கு நான் சொன்னதுதான், அவங்க பிரச்சனையை எவ்வளவு அழகா யாரும் அறியாமல் மறைத்தான் சுஷின்.

அப்போ நாமளும் அது தெரியாத மாதிரி நடந்து கொள்ளவேண்டும். அதை விட்டு பிரச்சனையை சரிபண்ண போகிறேன் என்று அவங்களுக்குள் விரிசலை உருவாக்க கூடாது சரியா.

அங்கே பார் அவர்கள் இருவரும் இப்பொழுது நார்மலாக தானே நடந்து கொள்கிறார்கள். அப்படியே ஏதாவது மனக் கசப்பு இருந்தால் அவர்களே பேசி சரிபண்ணிக் கொள்வார்கள்.

இப்போகூட மினி மன்னிப்பு கேட்டாளே, சிலநேரம் இதன்மூலமே அவர்கள் பிணக்கு சரி ஆகலாம்.

நடப்பதை கவனி. எல்லாம் நன்மைக்கே மனதை குழப்பிக் கொள்ளாதே", அவளுக்கு ஆறுதல் சொன்னானே தவிர அவனுக்கும் மனம் குழம்பித்தான் போனது.

எந்த சூழ்நிலையிலும் நிலைமை கைமீறி செல்ல சுஷின் விடமாட்டான் என்ற நம்பிக்கை இருந்ததால் அதை ஒதுக்கி வைத்தான்.

ஆனால் மினி- சுஷின் வெளியே சிரித்துக் கொண்டும் பேசிக் கொண்டும் இருந்தாலும் சுஷின் மனதுக்குள் எரிமலையாக இருந்தான்.

'இவ மனசுல என்னதான் நினைத்துக் கொண்டு இருக்கிறாள், எல்லோர் முன்பும் எங்களுக்குள் பிரச்சனை என்று வெளிச்சம் போட்டு காட்டுகிறாளே .

அம்மாவும் ஷிஜியும் கண்டிப்பாக கண்டு பிடித்திருப்பார்கள். ஆனாலும் ஒரு வார்த்தை கூட கேக்க மாட்டங்க.

மனதிற்குள்ளேயே வருத்தப் படுவார்கள். இவளால் எனக்குதான் நிம்மதி இல்லை என்றால் வீட்டில் இருப்பவர்கள் கூட நிம்மதியாக இருக்க முடியாது போல.

இதை இப்படியே விட்டால் சரிவராது. இதற்கு ஒரு முடிவு எடுத்தே ஆகவேண்டும். முடிவு செய்தவுடன், அனைவரிடமும் தான் முகம் கழுவிவிட்டு வருவதாக சொல்லிவிட்டு மினிக்கு வருமாறு ஜாடை காட்டிவிட்டு அறைக்குச் சென்றான்.

அவன் சென்றதும் எப்படி செல்வது என்று யோசித்துக் கொண்டிருக்கும் போதே சுலோ அவளுக்கு உதவிக்கு வந்தார். "மினி நீயும் போய் கொஞ்சம் படுத்துக்கோ , சாப்பிடும்போது உன்னை கூப்பிடுகிறோம்" .

"சரி அத்தை", என்று நன்றியுடன் உதிர்த்துவிட்டு அறைக்கு விரைந்தாள்.

சுலோவின் முகத்தில் கவலைக் கோடுகள் உற்பத்தி ஆயின. ஆனாலும் அதுவும் சொல்லாமல் சமையலை கவனிக்கச் சென்றார்.

அறையில் சுஷின் கோபத்துடன் உலவிக் கொண்டிருந்தான். மினி உள்ளே வந்ததும் கதவை மெதுவாக சாத்தினான்.

ஆனால் அவனைத் கோபம் மொத்தமும் மினியிடம் பாய்ந்தது. "நீ உன் மனசுல என்னதான் நினைச்சுகிட்டு இருக்க.

அங்கே உன் அம்மாவின் நிம்மதியை குழிதோண்டி புதைச்சாச்சு, என் நிம்மதியும்தான். அதாவது போகட்டும் என்று பார்த்தால் இப்போ என் வீட்டில் உள்ளவர்களின் நிம்மதியையும் குழிதோண்டி புதைக்க வேண்டும் என்று முடிவு செய்து விட்டாயா.

சரி இப்போ எதுக்கு மயக்கம் போட்டு விழுந்த, உண்மை உனக்கு அவ்வளவு பெரிய அதிர்ச்சியா இருந்ததா.

அப்போ நீ இதுவரை என்னை நம்பவே இல்லை அப்படித்தானே. நான்தான் நீ மனசு மாறிவிட்டாய் என்று பயித்தியக் காரன்மாதிரி நம்பிக்கொண்டு இருந்து இருக்கிறேன்.

இடையில் பேச வந்த மினியை பேச விடாமல் தடுத்தான்.

இன்று ஒன்று சொல்லுகிறேன் நினைவில் வைத்துகொள். இந்த அறைக்குள் நீ எப்படி வேண்டும் என்றாலும் இருந்துகொள், ஆனால் அறைக்கு வெளியே சுஷினின் மனைவி என்பதை மறந்து விடாதே.

உன் கடமை அறைக்கு வெளியே சரியாக இருக்க வேண்டும். நானும் நீயும் காதல் திருமணம் முடித்தவர்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

அவர்களுக்கு நீ விரும்பாதது தெரியாது . அவர்களுக்கு என்ன எனக்கே தெரியாது. விரக்தியாக சிரித்துக் கொண்டான்.

மினியின் மனம் ஊமையாக அழுதது. தன் மனதை அவனிடம் திறக்க வேண்டும் அவனிடம் மன்னிப்பு கேட்க்க வேண்டும் என்று எண்ணிய இந்த நேரத்தில் இப்படி நடந்ததை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அவளது கண்களில் கண்ணீர் வழிந்தது. இதை பார்த்தவுடன் அவனது கோபம் இன்னும் அதிகரித்தது.

ஆத்திரமாக அவளது புறம் சென்று,"இப்போ இந்த அழுகையை நிறுத்தப் போறியா இல்லையா. இன்னும் ஒருதரம் உன் கண்ணில் இருந்து கண்ணீர் வந்தது நான் பொல்லாதவனாக மாறி விடுவேன்.

எல்லோரையும் அழவைக்கும் உனக்கு எதுக்கு கண்ணீர் வருது. என் முன்னாள் இனிமேல் அழுததைப் பார்த்தேன்............. ".

வார்த்தையை முடிக்காமல் விட்டான். மினிக்கு அதிர்ச்சியில் கண்ணீர் கூட நின்று விட்டது.

கீழே இருந்து சாப்பிட அழைப்பது கேட்டது. செல்லப் போன அவளை தடுத்தான். "மறுபடியும் சொல்லுகிறேன் அனைவர் முன்பும் காதல் மனைவியாக ஒழுங்காக நடந்துகொள்,

அவர்களுக்கு சந்தேகம் வராதபடி நட, சரியாக நடிக்கவாவது செய் உன்னால் என்னை விரும்ப முடியாதே. ஓவர் ஆக்ட் செய்து சுதப்பியும் விடாதே புரிந்ததா போ".

மினியால் அவன் சொன்னதை ஜீரணிக்கவே முடியவில்லை. நடிக்கவா நானா உன்னை இப்போ உயிரா நினைக்கிறேண்டா என்னை பார்த்து என்னவெல்லாம் சொல்லிவிட்டாய்'.

ஊமையாக அழுதது அவள் மனம்.

இனி......................

## 47

மினி கிளம்பி கீழே செல்லும் முன்னர் முகத்தை கழுவி அழுந்த துடைத்துக் கொண்டு சென்றாள்.

அவள் சென்றதும் சுஷினின் முகம் வேதனையில் சுருங்கியது. மனம் அவனை பார்த்து கேள்வி கேட்டது. 'என் நிலாவை நானே என்னவெல்லாம் சொல்லிவிட்டேன்.

எதற்கு எனக்கு அவ்வளவு கோபம் வந்தது. எங்களது பிரச்சனையை மற்றவர்களுக்கு தெரிய படுத்தி விட்டாள் என்றா.

இல்லை அவள் மன்னிப்பு முன்பே கேட்கவில்லை என்றா, இல்லையென்றால் அவள் என்னை புரிந்துகொள்ள வில்லை என்றா,

இவைதான் காரணம் என்றால் அவர்கள் முன்பு ஏன் மனைவியாக நடந்துகொள்ள வேண்டும் என்று சொன்னேன்.

நடிக்கவாவது செய் என்றேனே, ஏன் அப்படியாவது அவள் என்னை நெருங்க வேண்டும் என்றா, அப்படி என்றால்.............. அப்படி என்றால்............... அவள் விலகி இருப்பதுதான் என் கோபத்துக்கு காரணமா.

அவள் என்னிடம் பேசாததுதான் என் கோபத்திற்கு காரணமா. இப்போ கூட எதுவுமே சொல்லாமல் போகிறாளே வாயைத் திறந்து என்னை உண்மையாகவே விரும்புகிறேன் என்று சொன்னால் குறைந்தா விடுவாள்.

அவள் இவனது பேச்சின் நடுவே பேசவந்தது மறக்கப் பட்டது அவனது மெமொரியில்.

அவளது அழுதமுகமே கண்ணின் முன்னாள் நின்றது. அவளது கண்ணீரை நிறுத்த சொன்னதன் காரணம் கூட அவள் அழுவதை தாங்க முடியாததால்தான் என்பது இப்பொழுது புரிந்தது.

அவளது கண்களில் கொஞ்ச நாட்களாக காதல் தெரிந்ததே அது பொய்யா............ இல்லை இன்று சுபாவைப் பார்த்து ஏன் மயங்கினாள்.

குற்ற உணர்விலா, இல்லையென்றால் என்னை தவறாக நினைத்தோமே என்ற களிவிரக்கத்தாலா.

ஆனாலும் அவள் தன்னிடம் வாயைத் திறந்து பேசாதவரை தன்னால் எதுவும் செய்ய முடியாது என்பது புரிந்தது.

அவளை எப்படி பேச வைப்பது என்ற வித்தையும் அவனுக்கு புரியவில்லை. இந்த பொண்ணுங்க ஏன்தான் மனசில் ஒன்று வைத்து வெளியே ஒன்று பேசுகிறார்களோ என்று இருந்தது அவனுக்கு.

அனைவரும் சாப்பாட்டு மேசையின் முன்பு இருக்க சுஷின் மட்டும் வரவில்லை. மினியும் அவன் ஏன் இன்னும் வரவில்லை என்று யோசித்துக் கொண்டிருக்க சுலோ அவளிடம், "என்ன மினி சுஷின் தூங்குகிறானா என்ன, சாப்பிடாமல் தூங்க மாட்டானே போய் பாரு", என்றார்.

அறைக்கு மினி திரும்பி வந்த போது அவன் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தான். அவனது சிந்தனையை கலைத்தது மினியின் குரல்.

"அத்தை சாப்பிட கூப்பிட்டார்கள். அங்கே எல்லோரும் சாப்பிட உட்கார்ந்து விட்டார்கள்".

எதுவும் பேசாமல் அவளை பின்தொடர்ந்தான். அனைவரும் பேசியபடியே சாப்பிட்டனர். சாப்பிட்டு முடித்ததும் சுபாவும் பிரவீனும் விடை பெற்றுச் சென்றனர்.

மீனாட்சி சம்மதம் கொடுத்து விட்டதால் ஷிஜிக்கு வீடு பார்க்கும் படலம் ஜரூராக நடந்தது. அவர்கள் ஆபீஸ் அருகில் ஒரு வீடு விலைக்கு வருவதாக தகவல் கிடைக்கவும் சுஷின் சென்று பார்த்து அவனுக்கு திருப்தி என்று பட்டதால் அந்த வீட்டை ஷிஜி பிரகாஷின் பெயரில் வாங்க முடிவு செய்தான்.

அதைப் பற்றி பிரகாஷிடம் பேச விலைக்கு வாங்க வேண்டாம் என்றும் வாடகைக்கே வீடு பார்க்கச் சொன்னான்.

ஆனால் சுஷின் அவனது பேச்சை கேட்காமல் முன்பணம் கொடுத்துவிட, அந்த வீட்டை ஷிஜியின் பெயருக்கு வேண்டுமானால் வாங்குமாறு இறங்கி வந்தான்.

ஆனால் ஷிஜி பிரகாஷின் பெயருக்கு வாங்கச் சொல்ல இவர்களின் பாசப் போராட்டத்தின் முடிவில் இருவரின் பெயரிலேயே வாங்கப் பட்டது.

வீட்டிற்கு தேவையான அனைத்துப் பொருட்களையும் தானே வாங்குவதாக சொல்லிவிட்டான் பிரகாஷ்.

இந்த நிலையில் மினி சிஜியின் மூன்றாம் ஆண்டு முதல் செமஸ்ட்டர் எக்ஸாமும் துவங்கவே , அவர்கள் குடிபோகும் நாள் தள்ளிப் போனது.

காதல் மனைவியாக நடந்துகொள்ள வேண்டும் என்று சொன்னதற்குப் பிறகு அனைவரின் முன்பு சுஷினும் மினியும் காதல் கணவன் மனைவியாகவே நடிப்பதாக எண்ணி தங்களை ஒருவர் அறியாமல் மற்றவர் காதலித்துக் கொண்டிருந்தனர்.

சாப்பாட்டு அறையில் ஷிஜியும்- பிரகாஷும் ஒருவருக்கு ஒருவர் ஊட்டிவிட்டுசாப்பிடுவதை எதிர் பாராத விதமாக பார்த்த மினி அங்கிருந்து சத்தமில்லாமல் நழுவினாள்.

மினி தயக்கமாக செல்லுவதைப் பார்த்த சுஷின் என்னவென்று பார்க்க அங்கே அவன் கண்ட காட்சியில் சிரித்துக் கொண்டே அங்கிருந்து அவனும் சென்றான்.

ஆனால் அவர்கள் அமர்ந்து சாப்பிடும் பொழுது மினியின் கையில் இருந்த சாப்பாட்டை சாப்பிட்டுவிட்டே அடங்கினான் அவன்.

அவனது செய்கையை எதிர் பார்க்காத மினி பாதி சாப்பாட்டில் எழுந்து கை கழுவ சென்றாள். அவளது பின்னாடியே சென்றவன் அங்கே கண்டது வெட்கத்தில் சிவந்த மினியின் முகத்தையே.

கையைக் கூட கழுவாமல் அங்கே நின்றவள் நிமிர்ந்து பார்க்கும் போது கண்ணாடியில் அவனது பிம்பம் தன் முதுகின் பின்னால் இணைந்து நின்றதே.

இருவருக்குமே தங்களது நிச்சயதார்த்த நாள் அன்று நடந்தது நினைவிற்கு வந்தது. மந்திரத்திற்கு கட்டுப் பட்டவர்கள் போல் இருவரும் அசையாமல் நின்றனர்.

சுஷின் அவளது முதுகின் மீது சாய்ந்து இழைந்தான் . மினி கண்களை மூடிக் கொண்டாள். மினியின் கையையும் அவனே கழுவினான்.

அவளது கழுத்து வளைவில் அவனது சூடான மூச்சுக் காற்றை உணர்ந்தாள் மினி. தானும் அவனுடன் ஒன்றினாள்.

அவளது இடுப்பு வளைவை அவனது கைகள் சோதித்தன . இருவரின் உடலும் சூடேறியது தாளமுடியாமல் அவன்புறம் திரும்பினாள்.

அன்று ஷிஜியின்தலையீடால் முற்றுப் பெறாமல் போனது இன்று நடந்தேறியது. அவளது இடையை இறுக்கி தன்னுடன் இணைத்துக் கொண்டான்.

அவளது முகம் நோக்கி குனிந்து அவளது இதழ்களை தன் இதழ்களால் மெதுவாக தீண்டினான்.

மினியின் கை அவனது பிடரி முடியைப் பிடித்து இறுக்கி தன் இதழ்களை அவனது இதழ்களுடன் அழுந்தப் புதைத்தாள்.

இருவரின் வேகமும் அவனது இடையின் அணைப்பு இறுகியதிலும் அவன் பிடரி முடி நேரிந்ததிலும் இருவருக்கும் புரிந்தது.

இவர்களின் வேகத்தை தடுத்தது அந்த அழைப்பு.

மினியைத் தேடி வந்தவள் அவர்கள் நின்ற கோலத்தில் பேசாமல் போகத்தான் நினைத்தாள். ஆனால் அவர்களுக்குள் பிணக்கு சரியாகி விட்டதோ என்றுஎண்ணியவள் சந்தோஷ மிகுதியில் “மினீ............ “ என்று கத்திவிட்டாள்.

"மினீஈஈஈஈஈஈ................. ".அந்த அழைப்பில் கலைந்தனர் இருவரும். மினிக்குவெட்கம் பிடிங்கித் தின்றது.

தன் முகத்தை அவளுக்குக் காட்டாமல் திரும்பிக் கொண்டாள். ஆனால் சுஷின்ஷிஜி வந்ததைப் பார்த்ததால்தான் அவள் முத்தமிட்டாள் என்று நினைத்துக் கொண்டான்.

அவனுக்கு இப்பொழுது அந்த முத்தம் தொண்டை வரை கசந்து வழிந்தது. ஷிஜி மேலேஎதுவும் சொல்லாமல் போய்விட்டாள்.

அவள் சென்றதும் மினியின் புறம் தன் பார்வையை செலுத்தினான். அவளது வெட்கம் அவன் கண்களில் படவில்லை, அவளது தவிப்பு அவன் கண்களில் படவில்லை.

அனைத்தையும் கோபம் மறைத்திருந்ததே.

"ஷிஜி வந்ததை பார்த்ததால்தான் இப்படி நடித்தாயா. நானும் என்னவெல்லாமோ கற்பனை செய்துவிட்டேன் ஒரு நொடியில்.

அவளுக்காக என் உணர்வுகளுடன் விளையாடி இருக்க வேண்டாம் நீ", சொல்லிவிட்டு சென்றுவிட்டான்.

தீயை வாரி இறைத்ததுபோல் உணர்ந்தாள் மினி. என்ன சொல்லிவிட்டான், என்ன வார்த்தை ஷிஜிக்காக நான் நடித்தேனா.

கொஞ்சம் நேரம் முன்பு நடந்ததை அவனால் எப்படி நடிப்பு என்று எண்ண முடிந்தது. அதுவும் அந்த முத்தத்தில் அவனுக்கும் சரிபாதி பங்கு இருக்கும்போது.

அவன் முன்பு தொட்டபோது தித்தித்த இடமெல்லாம் எரிந்தது இப்பொழுது. இதயத்தில்விழுந்த இடி கண்களில் மழையை தோற்றுவித்தது.

நெஞ்சம் விம்ம தங்கள் அறைக்கு ஓடிச் சென்று கட்டிலில் விழுந்து குமுறி அழுதாள் மினி. என் வாழ்வில் மகிழ்ச்சியே நிலைக்காதோ, என் மன உணர்வுகளை என்றுதான் புரிந்து கொள்வான். என் சந்தேகம் கொஞ்சநாள் கூட நிலைக்கவில்லை ஆனால் சுஷினின் பேச்சு ஆறிய புண்ணை மீண்டும் சீண்டிப் பார்ப்பதுபோல் வலித்தது.

அதன் வலியும் தாள முடியாததாக இருந்தது. இனிமேல் எந்த சூழ்நிலையிலும் மனதை அலைபாய விடக் கூடாது என்று முடிவு செய்தாள்.

ஆனாலும் இந்த உறுதி நிலைக்குமா என்பதுதான் அவளுக்கே புரியாததாக இருந்தது. அவன் என்ன சொன்னாலும் அவன் மீது இருந்த காதல் அதிகரித்ததே தவிர குறையவில்லை.

மினி ஷிஜியின் பரீட்ச்சைகளும் முடிந்தன. ஷிஜிக்கு எக்ஸாம் நடக்கும் பொழுதே பிரகாஷ் தங்களது வீட்டை அழகு படுத்த துவங்கினான்.

பெட் ரூம் , ஹால் அனைத்திலும் அழகான பெயிண்டிங் களை வாங்கி வைத்தான். அவற்றில் நிறைய குழந்தைகளின் சித்திரம் இடம்பெற்றதாகவே இருந்தது.

நாள் நெருங்க நெருங்க வேலைகள் முழு மூச்சில் நடந்தன.ஆனால் சுஷின் , மினி இடையே மெல்லிய இடைவெளி விழுந்ததை யாரும் அறியவில்லை.

சுஷின் அன்றைய சம்பவத்திற்குப் பிறகு மினியிடம் விலகியே நின்றான். மினியும் தன் பரீட்ச்சைக்கு படிக்கும் மும்முரத்தில் இருந்ததால் இதை கவனிக்கவில்லை.

அவள் இரவில் கண்விழித்து படிக்கும் பொழுது சுஷின் அவளை அசையாமல் பார்த்துக் கொண்டிருப்பான். ஏதாவது பேசுவாளா என்ற ஏக்கம் அதில் தொங்கி நிற்கும்.

ஆனால் மினி அவனை நிமிர்ந்து பார்த்தால் தானே, அவள் புத்தகத்தின் உள்ளேயே மூழ்கி விடுவாள். சுஷின் என்ற ஒருவன் அந்த அறையில் இருப்பதே அவளுக்கு நினைவில் இருக்காது.

அவளது இந்த பாராமுகம் சுஷினை அவளிடம் இருந்து இன்னும் விலக்கியது. அவளது முகத்தை பார்ப்பதால் தானே ஏக்கம் வருகிறது பார்க்காமலே இருந்து விடலாம் என்று முடிவு செய்து அவளை பார்ப்பதை தவிர்த்தான்.

சேர்ந்தே சாப்பிட்டாலும், அவளை அவனே கல்லூரிக்கு அழைத்துச் சென்றாலும், ஒரே அறையில் இருந்தாலும் இருவருமே ஒருவரின் பேச்சை, ஒருவரின் பரிவை, பாசத்தை, அணைப்பை எதிர் பார்த்தாலும் எதையுமே வெளியிடாமல் தனித்தனி தீவுகளாகவே மாறிப் போயினர்.

இதன் உச்சமே மினியின் தாய் மீனாட்சி ஷிஜியுடன் ஒரே வீட்டில் வசிக்கப் போகிறார் என்பது, மினிக்கு தெரியாமலே போனதுதான் கொடுமை. மினியிடம் சுஷின் சொல்லியிருப்பான் என்ற எண்ணத்தில் யாரும் அதை அவளிடம் தெரிவிக்க வில்லை.

சுஷினுக்குமே அவளிடம் சொல்லவேண்டும் என்று தோன்றவில்லை. எதையாவது பேசினால்தானே சொல்லத் தோன்றும்.

மினியும் தாயை தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினாள்தான், மீனாட்சியும் மினிக்கு தெரியும் என்ற எண்ணத்திலே மினி கேட்பதற்கு மட்டுமே பதில் சொல்லி வைத்து விடுவார்.

மீனாட்சிக்கு மினியிடம் இருந்த கோபமும் அவளிடம் மனம்விட்டு பேச விடவில்லை. சுஷினோ மீனாட்சி சொல்லி இருப்பார் என்று எண்ணினான்.

தன் தாய்க்காக இப்படிஒரு ஏற்பாட்டை செய்து இருக்கின்றேனே , அதற்காகவாவது மினி தன்னிடம் பேசுவாள் என்று எண்ணி எண்ணி ஏமாந்துபோனான் சுஷின்.

இதுவும் அவனது பாரமுகத்துக்கு ஒரு காரணம். சுஷினுக்கு, மீனாட்சி மினியிடம் பேசாமல் இருப்பது தெரியாதே. தெரிந்திருந்தால் மினியை இந்த அளவு வருந்த விட்டிருக்க மாட்டானோ.

ஷிஜி பிரகாஷ் புதுவீட்டிற்கு குடிபுகும் நாளும் வந்தது. அனைவரும் மகிழ்ச்சியுடன் நடமாடினர். மினி கூட எந்தவித சிந்தனைக்கும் இடம் கொடாமல் மகிழ்ச்சியுடனே வலம்

வந்தாள். தன் சந்தோஷம் இன்னும் கொஞ்சநேரத்தில் பறி போவது தெரியாமலேயே.

அங்கு ஹோமம் வளர்த்து ஐயர் மந்திரங்கள் ஓத அதை ஷிஜியும் பிரகாஷும் பக்தியுடன் திரும்ப சொல்லிக் கொண்டும் செய்துகொண்டும் இருந்தனர்.

தன் தாய் அனைத்திலும் பங்குகொண்டு வளைய வருவதைப் பார்த்தாள். பிரகாஷின் அன்னை என்ற முறையில் அனைத்தையும் அவரே செய்தார்.

அப்பொழுதுகூட மினிக்கு சந்தேகம் எழவில்லை. பிரகாஷ் தன் தாயை அம்மா என்று அழைக்கும் பொழுதும் அவனை தானும் அண்ணா என்று அழைக்கிறோமே அதுபோல் என்றே எண்ணினாள்.

அவளுக்கு மகிழ்ச்சியாகவும் இருந்தது. அதுவும் மீனாட்சி அன்று மிகுந்த பூரிப்புடன் இருப்பதுபோல் தோன்றியது அவளுக்கு.

அனைவரும் வந்தவர்களை வரவேற்று சாப்பிட அழைத்துச் சென்று அவர்கள் சாப்பிட்டதும் முகமலர்ச்சியுடன் அனுப்பிவைத்து என பம்பரமாக சுழன்று கொண்டிருந்தனர்.

விருந்தினர் அனைவரும் சென்றவுடன் வீட்டில் இருந்த அனைவரும் சாப்பிட அமர்ந்தனர். மினி சுஷினுக்கு கூட தங்களது இடைவெளி மறைந்ததுபோல் இருந்தது.

அனைவரும் சாப்பிட்டு முடித்ததும் பிரகாஷ் மீனாட்சியிடம், "அம்மா இன்னைக்கு ரொம்ப வேலை செய்து உங்க உடம்பை அலைத்து விட்டிங்க , உங்க ரூம்ல போய் ரெஸ்ட் எடுங்க. மீதி வேலையை நாங்க பார்த்துக்குறோம்".

அவனது பேச்சு புரியவில்லை மினிக்கு. "என்ன அண்ணா அம்மாவுக்கு இங்கே தனி அறையே கொடுத்துட்டிங்களா, விட்டா இங்கேயே தங்க வச்சுப்பீங்க போல".

மினியின் பேச்சை கேட்ட அனைவருமே திகைத்தனர். அனைவரின் முகத்தையும் புரியாமல் பார்த்தாள் மினி.

மீனாட்சியின் முகம் அன்று கொண்டிருந்த மகிழ்ச்சிக்கு விரோதமாக கவலையில் கூம்பியது. தன் மகள் இன்னும் வாழத் துவங்கவில்லை என்ற உண்மை முகத்தில் அறைந்தது.

ஷிஜி- பிரகாஷ் கூட திகைத்து விட்டனர். அவர்களுக்குள் இருந்த ஊடல் தீர்ந்துவிட்டது என்று எண்ணினால், தீரவில்லையா. கவலை அவர்களையும் வாட்டியது.

சுலோ- சுந்தரத்தின் நிலையோ இன்னும் மோசமாக இருந்தது. சுந்தரம் ஆபீஸ் விஷயம் முதல் அனைத்தையுமே சுலோவிடம் பகிர்ந்து கொள்வார்.

வீட்டு விஷயம் கலந்து ஆலோசிக்காமல் எந்த முடிவுமே எடுத்ததில்லை. ஆனால் தங்கள் மகன் அவனது மனைவியின் தாய் சம்பந்தப்பட்ட மிகப் பெரிய முடிவை அவளுக்கு தெரிவிக்காமலே இருந்து இருக்கிறான்.

அவர்களால் நம்பவே முடியவில்லை. முடிவு எடுக்கும் முன்னரே அவளிடம் கேட்கவேண்டிய விஷயம், ஒரு தகவாலாக கூட அவளுக்கு அளிக்கப் படவில்லை என்பதை ஏற்பதற்கே முடியவில்லை அவர்களால்.

பார்வை சுஷினை துளைத்தது. சுஷினுக்குமே இது பெரிய அதிர்ச்சிதான். வேறு யார் சொல்லவில்லை என்றாலும் தான் சொல்லாதது மிகப் பெரும் தவறு என்பது அவனுக்கு புரிந்தது.

ஆனால் நடந்து முடிந்ததை மாற்ற முடியாதே. இப்பொழுது என்ன சொல்ல என்று யோசிக்கும் பொழுதே, சுயநிலையை முதலில் அடைந்த பிரகாஷ் பேசினான்.

"என்ன மினி விளையாடுறியா, அம்மா இனிமேல் எங்க கூடத்தான் இருக்கப் போறாங்க. அங்கே அம்மா

தனியாகத்தானே இருக்க வேண்டும், சுஷின் செய்த ஏற்பாடுதான் இது. உனக்கு தெரியாதா".

பிரகாஷின் முதல் வார்த்தையிலேயே நொறுங்கிப் போனாள் மினி. அடுத்து அவன் சொன்ன எதுவுமே அவளது காதில் விழ வில்லை.

## 48

பிரகாஷ் என்ன சொன்னான் அம்மா இவங்க கூடவே தங்கப் போறதாவா. இதை முடிவு செய்தது சுஷினா. என்னிடம் ஒரு வார்த்தை கேட்கவே இல்லை, செய்ய வேண்டாமா உனக்கு சம்மதமா என்று கேட்கக் கூட வேண்டாம்.

அட்லீஸ்ட் இப்படி ஒரு ஏற்பாடு செய்து இருக்கிறேன் என்று சொல்லக் கூடவா முடியவில்லை. அந்த அளவு வேண்டாதவள் ஆகிப் போனேனா நான். அம்மா அம்மா கூட ஒரு வார்த்தை சொல்லவில்லையே.

யாருமே என்னிடம் சொல்லவில்லையே, அதுசரி கட்டியவனும், பெற்ற அன்னையுமே சொல்லவில்லை பிறகுஅல்லவா மற்றவர்.

தன் வலியை தனக்குள் விழுங்கினாள். சுஷினின் காதல் மனைவியாக நடந்துகொள்ளவேண்டும் என்ற வார்த்தை காதில் ஒலிக்க,

முகத்தில் வலிந்து ஒரு புன்னகையை தவழ விட்டு , "அவர் சொன்னால் போதுமா என்னிடம் ஒரு வார்த்தை கேட்க வேண்டாமா ம்ம்ம்........ " கண்களை சிமிட்டி சிரித்தாள் மினி.

ஆனால் அவளது புன்னகை கண்களையோ, உள்ளத்தையோ எட்டவில்லை. அது அங்கிருந்த யாருக்கு புரிந்ததோ இல்லையோ, சுஷினுக்கும், மீனாட்சிக்கும் நன்றாகவே புரிந்தது.

அதுவும் மினியின் மனம் என்ன பாடுபடும் என்பதை சுஷின் நன்றாகவே அறிந்தான். மினியால் அங்கே இன்னும் ஒரு நிமிடம் கூட இருக்க முடியாது என்று தோன்றியது.

வெடித்து அழவேண்டும் என்ற உணர்வை அடக்க பெரும்பாடு பட்டாள். அதைவிட முகம் மாறாமல் காப்பது இன்னும் பெருந் துன்பமாக இருந்தது.

இதயம் பாரமாக தொண்டைக் குழியில் ஏதோ அடைப்பதுபோல் ஒரு உணர்வு. வெளியில் புன்னகை மாறாமல் காத்துக் கொள்ளும் போராட்டம்.

எங்கே அனைவர் முன்பும் அழுது விடுவோமோ என்று தோன்ற அதை அடக்க விரல்களை அழுந்த மடக்கவும், அவளது நகம் உள்ளங் கையில் கீறி பதம் பார்த்தது.

அவளது நிலை உணர்ந்து அவளது கைகளோடு தன் கையை கோர்த்துக் கொண்டான். அவள் விலக்க முயலவில்லை மாறாக அவனது விரல் நொறுங்கும் அளவுக்கு அழுத்திப் பிடித்தாள் மினி.

தன் கைவிரல் நெரிபடுவதில் இருந்து அவளது போராட்டம் புரிய தானும் அவளது கையை இறுக்கினான்.

அந்தநேரம் அவனது கை அவளுக்கு தேவையாக இருந்தது. ஆனால் வெளியில் பிரகாஷுடன் வாயாடிக் கொண்டிருந்தாள்.

"ஹப்பா உன் கிட்டே நான் கேட்க்காததுதான் கோபமா ".

"ஆமா பின்ன இல்லையா அவங்க என் அம்மா ".

"யார் சொன்னது அவங்க என் அம்மா, என் அம்மாவை உடன் வைத்துக் கொள்ள தங்கையின் அனுமதி எனக்கு வேண்டுமா".

"தங்கைன்னு சொல்லிட்டிங்க அதனால் உங்களை விடுறேன் பிழைத்துப் போங்க".

"என் தங்கைக்கு எவ்வளவு பெரிய மனசு பார்த்தீங்களா எல்லோரும்", கேலியாக சொல்லி சிரித்தான்.

நேரம் ஆகா ஆகா தன் கைவிரல் உடையும் அளவுக்கு செல்லவும் இதற்கும் மேல் தாங்காது என்பது தோன்ற அவர்களின் பேச்சின் நடுவில் புகுந்தான் சுஷின்.

"போதுமே அண்ணன் தங்கை போராட்டம். நேரம் ஆகிறது எல்லோரும் கொஞ்சம் ரெஸ்ட் எடுப்போம் . அம்மா , அப்பா வீட்டுக்கு வாரீங்களா".

"இல்லை சுஷின் நீ போ நாங்கள் நைட் வாரோம்" , சுலோ.

"சரிம்மா நாங்க போயிட்டு வாரோம்".

"நீங்க போங்க நான் வரவில்லை, நான் கொஞ்சநேரம் இங்கேயே இருக்கிறேன். நைட் அத்தை வரும்போது அவர்கள் கூட வருகிறேன்".

"பேச்சுதானே விட்டா விடிய விடிய பேசுவ, இப்போ நீயே வாறியா இல்ல தூக்கிட்டு போகவா".

மினி ,"ப்ளீஸ் நீங்க போறதா இருந்தா போங்க நான் அம்மா கூட இருந்துட்டு வாறேனே".

மற்றவருக்கு கொஞ்சலாக தோன்றும் மறுப்பு அவனுடன் வரமுடியாது என்ற அவளது முடிவான மறுப்பு என்பது சுஷினிற்கு புரிந்தது.

"நீ இப்படி சொன்னால் கேட்க்க மாட்ட , உன்னை............" , கைகளில் அள்ளிக் கொண்டான் மினியை.

அனைவர் முன்பும் இப்படி செய்வான் என்பதை எதிர் பார்க்காத மினி திமிறி இறங்க முயன்றும் அவனது இரும்புப் பிடிக்கு முன்னர் முடியாமல் போனது.

பிறகு சமாதானத்திற்கு வந்தாள், "சரி விடுங்க நானே வருகிறேன்".

"ஒன்றும் வேண்டாம் பேசாமல் இரு" , அனைவரிடமும் சொல்லிவிட்டு அவளை காருக்கு தூக்கிவந்து உள்ளே ஏற்றினான்.

காரினுள் ஏறியதும் மினியின் முகம் அழுகையில் துடித்தது. மூக்கு நுனிகள் விடைக்க, நடுங்கும் உதடுகளை பற்களால் அழுந்த கடித்துக் கொண்டு தன் விம்மலை தொண்டையில் இருந்து வெளியில் வராமல் அடக்கினாள்.

காரை வேகமாக வீட்டிற்கு திருப்பினான். பதினைந்து நிமிடங்களில் வீட்டை அடைய கார் நிற்கும் முன்பே இறங்கி அறைக்குள் ஓடினாள் மினி.

அறையை மூடும் முன்பு சுஷின் அவளை தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்து கதவை தாளிட்டான். இதுவரை அடக்கிவைத்திருந்த துக்கம் வெளியேற வெடித்து அழுதாள் மினி.

அவளது அழுகையை எதிர் பார்த்தான், ஆனால் அவளது பெருங்குரல் அவனை கலக்கமுறச் செய்தது.

அவளை தேற்றும் வழி அறியாமல் திகைத்து நின்றான். அவள் அழுவது தாளாமல் அருகில் சென்று தன்னுடன் அணைத்துக் கொண்டான்.

அவனிடம் இருந்து விலக போராடி முடியாமல் தோற்று அதற்கும் சேர்த்து அழுதாள் மினி. அவள் அழ அழ அவளை தன்னுடன் மேலும் மேலும் இறுக்கிக் கொண்டான்.

அவளது அழுகை குறையும் வரை காத்திருப்பதை தவிர வேறு வழி இருக்கவில்லை அவனுக்கு. அவளது பெருங்குரல் சிறிது குறைந்து, விம்மலாக கேவலாக மாறும்வரை அவளை அணைத்து முதுகை வருடியபடி இருந்தான்.

அவளது அழுகை ஓரளவு கட்டுக்குள் வந்ததும் பேசத் துவங்கினான். ஆனால் அவனை முந்திக் கொண்டாள் மினி.

"சாரி என் அம்மாவுக்கு எவ்வளவு பெரிய நன்மையை செய்து இருக்கீங்க , நான் உங்களுக்கு ஒரு நன்றி கூட சொல்லவில்லை பாருங்கள்.

என் அம்மா தனியாக இருக்க வேண்டுமே என்று யோசித்து அவங்களுக்கு ஒரு வழி காட்டி இருக்கீங்க ரொம்ப நன்றி தேவ்.".

அவளது பேச்சிலும் நன்றி சொல்லிலும் அடி பட்டவன் அவளது தேவ் என்ற அழைப்பில் ஆறுதல் அடைந்தான்.

அவள் தன்னை விரும்புகிறாள் என்பது இந்த அழைப்பில் புரிந்தது அவனுக்கு. அவளுடன் மனம் விட்டு பேச வேண்டும் ஆனால் அதற்கு இது நேரமல்ல என்பது புரிந்து பேசாமல் இருந்தான்.

ஆனாலும் தான் செய்தது தவறு என்று தோன்ற ,"என்னை மன்னித்துவிடு மினி , நான் சொல்லாதது பெரிய தப்புதான். ஏதோ நினைவில் மறந்துவிட்டேன்".

"இந்த முடிவு நேற்றுதான் எடுத்தீர்களா".

அவளது கேள்வியில் இருந்த உண்மை அவனை மௌனமாக்கியது. ஆனாலும் என்ன சொல்லி அவளுக்கு புரியவைக்க ,"சாரி மன்னித்துவிடு" , இதையே திரும்ப திரும்ப சொன்னான்.

அவனிடம் இருந்து விலகினாள் அவனது கண்களைப் பார்த்து சொன்னாள், "நீங்கள் அனைத்தையும் பகிர்ந்துகொள்ள நான் யார் , இந்த அறையில் இருக்கும் கட்டில் டேபிள் ளிடம் எல்லாம் சொல்லிவிட்டா செய்கிறீர்கள் அதைப் போல்தானே நானும் உங்களுக்கு".

அவளது பேச்சில் அடிவாங்கினாலும் " நீ சொல்லுவதுபோல் இல்லை மினி, நீ எனக்கு................".

"தயவுசெய்து இதற்கும் மேல் எதுவும் பேச வேண்டாம் எனக்கு தூக்கம் வருகிறது", சொல்லிவிட்டு கண்களை மூடி

படுத்துக் கொண்டாள்.

சுஷினை பேச விட்டிருந்தால் அவர்களின் வாழ்வு இன்றே மலர்ந்திருக்குமோ............ .

மினியின் ஆதங்கத்தை புரிந்துகொள்ள முடிந்த அவனால் அவளின் பேச்சின் அர்த்தத்தை புரிந்துகொள்ள முடியவில்லை. முடிந்து இருந்தால் என்னை மனைவியாக நடத்தாமல் அறையில் இருக்கும் ஒரு பொருளாக நடத்துகிறாய் என்ற மினியின் குற்றச் சாட்டு புரிந்திருக்குமோ.

அவனுக்கு புரிந்திருந்தால் மினியை விட்டு விலகி சென்றிருக்க மாட்டானோ. சுஷின் மினி கட்டிலில் படுத்தும் தூங்க முடியாமல் போராடுவது புரிந்துதான் இருந்தது.

ஆனாலும் எதுவும் சொல்லாமல் அவள் அருகில் அமர்ந்து கொண்டான். அவளை மடிசாய்க்க எழுந்த ஆவலை அடக்கிக் கொண்டு இமைக்க மறந்து அவளை பார்த்துக் கொண்டிருந்தான்.

மினிக்கு அவன் அருகில் அமர்ந்திருப்பது புரிந்தும் கண்களை திறக்காமல் படுத்திருந்தாள். இன்னுமே அவளுக்கு மனம் ஆறவில்லை . தன்னை அவன் ஒதுக்கி விட்டதாகவே எண்ணினாள்.

தான் தன் ஆதங்கத்தை கொட்டிய பின்பும் அவன் மௌனம் காப்பது கொடுமையாக இருந்தது. தான்தான் அவனை பேசவிடவில்லை என்பது மறந்து போனது. சிந்தனையிலேயே தூங்கினாள் மினி.

பிரகாஷின் வீட்டில் மீனாட்சியாலும் தூங்க முடியவில்லை. தான் பிரகாஷுடன் தங்கப் போவதை மினியிடம் சொல்லாததை எண்ணி வருந்தினார்.

இவ்வளவு பெரிய முடிவு எடுத்த சுஷின் கண்டிப்பாக மினியிடம் கேட்டுதான் முடிவு செய்திருப்பான் என்று தான் நினைத்தது எவ்வளவு பெரிய பிசகு.

என் மகள் அங்கே என்ன கஷ்டப் படுறாளோ தெரியலையே. தனியாக அழுது கரையப் போறா. அவளுக்கு ஆறுதல் சொல்லக் கூட யாரும் இல்லையே அங்கே.

திருமணத்துக்கு பிறகு என் மகள் மாறுவாள், அவளது விளையாட்டு குணம் போய் பொறுப்பு வரும் என்று எதிர்பார்த்தேன் ஆனால் அவளது வருத்தத்தை கூட என்ன அழகாக மறைத்துக் கொண்டு சிரித்துக் கொண்டே வாயாடினாளே.

துக்கத்திலும் ஒரு மகிழ்ச்சி என்றால் என் மகள் மனதளவில் கொஞ்சம் முதிர்ச்சி அடைந்து இருக்கிறாள் என்பதுதான்.

ஆனாலும் என்னிடம் கூட நடித்துவிட்டு போனாளே', மனம் ஆறவே இல்லை மீனாட்சிக்கு. எங்கே அறியிலேயே இருந்து யோசித்து திரும்பவும் அட்டாக் வந்துவிடுமோ என்று பயந்தே போனார் மீனாட்சி.

எனவே அறையில் இருந்து எழுந்து வெளியில் வந்து வீட்டை ஒதுக்க முடிவு செய்தார். அவர் வெளியில் வந்ததும் பார்வையில் பட்டது அங்கே இருந்த பெயண்டிங்க்ஸ் தான்.

முதலில் சாதாரணமாக பார்த்தவர் பின்பு அதில் லயித்துவிட்டார். அனைத்து படங்களிலும் ஏதோஒரு செய்தி ஒளிந்திருப்பதுபோல் அவருக்கு தோன்றியது.

இதை யார் இங்கே வாங்கி மாட்டியது என்பதை முதலில் அறியவேண்டும் என்று எண்ணினார். அவரது எண்ண ஓட்டத்தை தடை செய்தது ஷிஜியின் வருகை.

மீனாட்சி பெயிண்டிங்களையே பார்த்துக் கொண்டிருப்பதை பார்த்தவள் அவர் அருகில் வந்தாள். "அத்தை உங்களுக்கு இந்த படம் எல்லாம் பிடிச்சுருக்கா, எல்லாத்தையுமே உங்க பிள்ளைதான் பாத்து பாத்து வாங்கி மாட்டி இருக்கார்".

"இதுல என்னதான் இருக்கோ, என்னையும் கூப்பிட்டு இந்த படத்தை எல்லாம் பார்க்கும் போது உனக்கு என்ன தோணுதுன்னு ஒரே கேள்விவேற.

படத்தை பாத்தா நல்லா இருக்குன்னு சொன்னேன் . அதை தவிர வேறு என்ன தோணுதுன்னு கேட்டார்".

"அதுக்கு நீ என்னம்மா சொன்ன" , மீனாட்சி ஆவலாக கேட்டார்.

"எனக்கு ஒண்ணும் தோணலைன்னு சொல்லிட்டு போயிட்டேன். அவர் இங்கேயே நின்னு அசையாமல் பார்த்துட்டே இருந்தார். உங்களுக்கும் ஏதாவது தோணுதா என்ன" , சிரிப்பாக, கேலியாக வினவினாள்.

மீனாட்சியின் புருவம் யோசனையில் சுருங்கியது. இதைப் பார்த்ததும் ஷிஜிக்கு அதில் ஏதோ மர்மம் இருப்பது புரிந்தது.

ஆனால் அது என்னவென்றுதான் புரியவில்லை. மறுபடியும் பார்த்தாள். சின்னக் குழந்தைகள் பார்க்கில் விளையாடுவது.

பள்ளி செல்லும் பிள்ளைகள், மரத்தில் ஒளிந்து விளையாடுவது, தாய் சேயின் பின்னணியில் சூரிய உதயம் இப்படி பலவிதமான பெயிண்டிங்கள் இருந்தன.

ஆனாலும் வேறு எதுவும் தோன்றவில்லை அவளுக்கு. மீனாட்சிக்கும் அவளது முகபாவங்களில் இருந்தே அவளுக்கு எதுவும் புரியவில்லை என்பது புரிந்தது.

அவளுக்கு எப்படி புரியவைக்க என்பதுபோல் பார்த்தவர், "ஷிஜி இந்த படங்களில் எல்லாம் யார் இருக்காங்க ".

"யார் இருக்காங்கன்ன............ , அம்மா கூட குழந்தை, பார்க்கில் பசங்க விளையாடுறாங்க, மரம் மேலயும் பசங்க, பாட்டி தாத்தா கையை பிடிச்சு பசங்க நடக்குறது............ " சொல்லிக் கொண்டே வந்தவளின் பேச்சு உள்ளே போனது.

"இப்போ புரிஞ்சதா ஷிஜி".

"புரிஞ்ச மாதிரியும் இருக்கு புரியாத மாதிரியும் இருக்கு. ஆனா புரிந்தது சரிதானா என்பதுதான் புரியவில்லை ".

" நான் புரியவைக்கவா" , ஆம் என்பதுபோல் தலையை ஆட்ட. "என்னை எப்போ பாட்டி ஆக்கப்போற ஷிஜி" , என்று கேட்டார்.

ஷிஜிக்கு அனைத்தும் புரிந்தது. திருமணம் ஆனா உடனேயே எதிர்கால திட்டம் பற்றி பிரகாஷ் கேட்டதும், அவள் B.Sc முடித்து MBA படிக்க வேண்டும் , நம் ஆபஸில் வேலைக்கு போகவேண்டும் என்று சொன்னதும்,

அதற்கு பிரகாஷ் நம் எதிர்காலம் பற்றி என்ன யோசித்து இருக்கிறாய் என்று கேட்டதற்கு, இவ்வளவு நேரம் அதைத்தானே சொல்லிக் கொண்டிருந்தேன் என்று சொல்லி சிரித்ததும்,

பிரகாஷ் மேற்கொண்டு எதுவும் பேசாமல் சிறிது நேரம் அமைதி காத்ததும். இப்பொழுது மனக் கண்முன் விரிந்தது.

அவளது குழப்பத்தைப் பார்த்து மீனாட்சி "என்ன ஷிஜி குழந்தையா என்று யோசிக்கின்றாயா, இதுவரை அதைப் பற்றி நீ யோசிக்கவே இல்லையா" .

இல்லை என்பதுபோல் தலையை ஆட்ட , "நீ பெத்துமட்டும் குடுடா நான் வளர்க்குறேன். உன் படிப்பும் கெடாது , யோசித்து நல்ல முடிவா எடுடா".

சொல்லிவிட்டு சென்று விட்டார். ஷிஜிக்கும் யோசிக்கவேண்டி இருந்தது. அறைக்குச் சென்று கட்டிலில் விழுந்தாள்.

மீனாட்சியின் பேச்சை சுலோவும் கேட்டார். அவரது கண்களில் கண்ணீர் துளிர்த்தது. மீனாட்சி ஷிஜிக்கு இன்னொரு அம்மா என்பதை புரிந்து கொண்டார்.

மகள் கண்டிப்பாக குழப்பத்தில் இருப்பாள் என்பது புரிந்தது. அவளது அறைக்கு அவரும் விரைந்தார்.

ஷிஜியால் பிரகாஷின் ஆசையை புரிந்துகொள்ள முடிந்தது. ஆனாலும் தன் படிப்பு, அதை எப்படி பாதியில் நிறுத்த முடியும்.

அம்மாவிடம் நான் சொன்ன உறுதி என்ன ஆவது.படிப்பு மிகவும் முக்கியம் என்று அம்மா சொல்லி இருக்காங்களே. இப்போ நான் அம்மா ஆகணும் என்று சொன்னால்.

அம்மா என்ன நினைப்பார்கள். என் பிரகாஷின் ஆசையை எப்படி இவ்வளவு நாள் புரிந்து கொள்ளாமல் போனேன்.

## 49

ஷிஜிக்கு யோசிக்க யோசிக்க தலையை வலிப்பதுபோல் இருந்தது. என்ன முடிவு எடுக்க இன்னும் காலேஜ் முடியவே ஆறு மாதம் இருக்கிறது.

அடுத்து MBA நுழைவுத் தேர்வு அட்மிஷன் எப்படியும் MBA சேர மேலும் ஒரு நான்கு மாதமாவது ஆகும்.

MBA மூன்று வருடம் படிக்கணும். முழுசா இன்னும் நான்கு வருடம் இருக்கு. அதுவரை பிரகாஷை காக்க வைப்பது சரியாக தோன்றவில்லை.

என்ன செய்ய தன் யோசனையில் மூழ்கி இருந்தவள் சுலோவின் வருகையை கவனிக்கவில்லை. சுலோ ஷிஜியின் அருகில் சென்று அவள் தோளில் கை வைத்தார்.

தன் நினைவில் இருந்து கலைந்தாள் ஷிஜி. "அம்மா வாங்க ஏதாவது வேணுமா, கூப்பிட்டு இருந்தால் நானே வந்திருப்பேனே".

"உன் யோசனையை கலைக்க வேண்டாமே என்றுதான் நானே வந்துவிட்டேன். மீனாட்சி சொன்னதை நானும்

கேட்டேன்..........." , வார்த்தையை முடிக்காமல் விட்டார். ஷிஜி தலையை கவிழ்ந்து கொண்டாள்.

தன் தாயிடம் என்னவென்று சொல்ல. சொன்னால் என்ன நினைப்பார் என்ற சிந்தனை அவளை அலைக்கழித்தது. எதுவும் பேசாமலே இருந்தாள். அவளது குழப்பத்தை புரிந்துகொண்டார்.

"உனக்கு இப்போ என்ன செய்ய என்ற குழப்பம் இருக்கு இல்ல" , சுலோ.

"அம்மா படிப்பா இல்ல................ ".

"படிப்பு முக்கியம்தான் ஷிஜி , அதைவிட வாழ்க்கை ரொம்ப முக்கியம் இல்லையா. நீ MBA படிக்க ஒருவருடம் தாமதம் ஆனால் பரவாயில்லை. பிரகாஷின் உணர்வுகளுக்கும் நீ மதிப்பு கொடுக்கவேண்டும்.

அவனுக்கு தன் மனைவி , குழந்தை இப்படி வாழவேண்டும் என்று ஆசைப் படுவது தவறே இல்லை. அதுவும் நீ தான் அவனது முதல் உறவு இப்போ. அதனால்.......... புரிந்து நடந்துகொள் ஷிஜி . நாங்க எல்லோரும் உனக்கு துணையாக இருக்கிறோம்.

ஆனால் அவனுக்கு உன்னால் வரும் உறவுதான் உலகத்திலேயே ரொம்ப முக்கியம் ". சொல்லிவிட்டு சென்று விட்டார் சுலோ.

ஷிஜி ஒரு முடிவிற்கு வந்துவிட்டாள். இரவு அனைவரும் சென்று விட்டனர். மினியும் சுஷினும் வரவே இல்லை.

மீனாட்சி சாப்பிட்டுவிட்டு தூங்க சென்று விட்டார். அறையில் ஷிஜியும் பிரகாஷும் இருந்தனர். ஷிஜிக்கு அவனிடம் இதைப் பற்றி பேச தயக்கமாக இருந்தது.

கையில் ஒரு க்ளாக்கை வைத்துக் கொண்டு எங்கே மாட்டலாம் என இடம் தேடிக் கொண்டிருந்தான். ஷிஜியும் கொஞ்ச நேரமாக அதை கவனித்துக் கொண்டிருந்தாள்.

"ஷிஜி இதை எங்கே மாட்டலாம் சொல்லேன். நானும் இடம் தேடித் தேடி அலுத்துவிட்டேன்".

தன் கேள்விக்கு அவளிடம் இருந்து பதில் வராமல் போகவே அவளை திரும்பிப் பார்த்தான். அவள் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பது புரிந்தது.

ஆனாலும் அவளது சிந்தை இங்கே இல்லை என்பதை புரிந்து கொண்டான். அருகில் சென்று அவளது தோளைத் தொட்டான்.

"என்ன யோசனை ஷிஜி. சொன்னால் நானும் சேர்ந்து யோசிப்பேன்".

எதுவும் சொல்லாமல் தலையை குனிந்து கொண்டாள். அவளது செய்கையின் காரணம் புரியாமல் அவளது நாடியைப் பிடித்து தூக்கி முகத்தைப் பார்த்தான்.

அவள் விழிகளை மூடிக் கொண்டாள். ஏதோ புரிவதுபோல் இருக்க அருகில் அமர்ந்து அணைத்துக் கொண்டான்.

"என்னடா எதுவும் பேசாமல் இருந்தால் எனக்கு என்ன புரியும். என்னவென்று சொல்லு".

"எனக்கு நீ வேணுண்டா இப்போ வேணும்" , அன்று அவன் சொன்னதை திரும்பப் படித்தாள். அவளது கண்ணசைவிலேயே மயங்குபவன் அவளது வார்த்தைகளை கேட்டால்.

கட்டவிழ்ந்த காளையாக மனம் அலைபாய அதுவும் சொல்லாமல் அவளை திருடத் துவங்கினான். அன்றுதான் முதலிரவை கொண்டாடும் மணமக்கள் ஆயினர் இருவரும்.

அவன் விலக முயன்றாலும் அவள் விலக அனுமதிக்கவில்லை. "இன்னைக்கு என்னடா இவ்வளவு.............. " அவனை பேச அனுமதிக்கவில்லை ஷிஜி. விடியும் வரை கவி படைத்தனர் இருவரும்.

புதிய உயிரின் ஜனனம் விதைக்கப் பட்டது அன்று.

நாட்கள் வாரங்கள் ஆக மினி ஷிஜியின் செமஸ்டர் லீவ் முடிந்து கல்லூரிக்கு செல்லத் துவங்கினர்.

லீவ் புல்லாக ஷிஜியும் பிரகாஷும் எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தார்களோ, மினியும் சுஷினும் அவ்வளவு விலகியே இருந்தனர்.

வீட்டில் உள்ள அனைவருக்குமே அவர்களின் விலகல் புரிந்தே இருந்தது. சுலோ சுஷினிடம் என்னவென்று கேட்க அவன் விரைவில் சரியாகி விடும் என்று சொல்லி அவரை சம்மாளித்தான்.

இதற்கும் மேல் என்னவென்று கேட்கவும் முடியவில்லை அவரால். ஆனால் மினி நாளுக்கு நாள் தன் சந்தோஷத்தையும், நிம்மதியையும் தொலைத்தவளாகவே மாறிப் போனாள்.

சுஷின் இல்லாத வேளைகளில் கண்ணீர் கட்டுக் கடங்காமல் பெருகியது. சில வேளைகளில் சுஷினும் கவனித்தான்.

என்னவென்று கேட்டால் எதுவும் சொல்லாமல் விலகிப் போனாள். அவளது வாடிய முகமும், அழுகையும் சுஷினை நிம்மதி இழக்கச் செய்தன.

அன்றைய அழுகைக்குப் பிறகு நிறையவே மாறிப் போனாள் மினி. அனைவருடன் இருந்தாலும் பேச்சு குறைந்து போனது.

சுஷினிடம் இருந்து விலகியே இருந்தாள். அவளது விலகல் அவனுக்கு மிகுந்த வருத்தத்தை அளித்தது.

அவளிடம் சுஷின் பேசப் போனாலோ நெருங்கினாலோ ஏதோ அன்னியனைப் பார்ப்பதுபோல் பார்த்து அவனை விலக்கினாள்.

சுஷின் அவளை நெருங்க முடியாமல் தவிக்க, மினியோ அனைவரும் தன்னை ஒதுக்கியதாகவே நினைத்தாள்.

அதுவும் சுஷின் தன்னை முழுதாக விலக்கிவிட்டதாகவே எண்ணினாள்.

அவனை பார்த்தால் அவனது கையணைப்பில் இருக்கவேண்டும் , அவனுடன் கலக்க வேண்டும் என்ற உணர்வு அவளை வாட்டியது.

அவன் நெருங்கி வந்தாலோ வெட்கத்தை விட்டு அவனிடம் ஒன்ற தோன்றியது. எங்கே தான் நெருங்கி அவன் விலகினால் அந்த நிலையை எண்ணவும் முடியவில்லை அவளால்.

அவன் உறங்கிய பின்னர் அவனது முகத்தை நெருக்கத்தில் பார்த்துக் கொண்டு படுத்திருப்பது பிடித்திருந்தது அவளுக்கு.

அவன் அறியாமல் அவனது ஆடைகளில் நுழைந்துகொள்வது, அவன் அறியாமல் அவனை ரசிப்பது, அவன் அறியாமல் அவன் உறங்கும்போது முடி கோதுவது எல்லாமே அவன் இன்றி அவன் நிழலுடன் வாழ்ந்தாள் அவள்.

இதில் சுகமும் காணத்துவங்கினாள். அனைத்தும் அவன் அறியாமல் அவன் மயம் ஆகிப் போனது அவளுக்கு. ஆனால் இவை அனைத்தையுமே அவன் அறியாமல் செய்ததுதான் அவள் செய்த பிழை.

அவன் தன்னை ஒதுக்கினாலும் அவனை ஒதுக்க அவளால் முடியவில்லை. அவனின்றி எதுவும் இல்லை இப்பொழுது அவளுக்கு.

சுஷினோ அவள் தன்னுடன் நிழல் வாழ்க்கை வாழ்கிறாள் என்பதை உணராமலே போனான். அவள் தன்னை வெறுப்பதாகவும் அவளுக்கு தன் தேவை இல்லை என்றும் எண்ணினான்.

நாட்கள் இவ்வாறே செல்ல அன்று ஷிஜியின் வீட்டிற்கு சென்றனர் மினியும் சுஷினும்.

ஷிஜியின் வீட்டிற்குச் சென்றால் அனைவருடனும் பேச முடியாமல் தவித்தாள். ஷிஜி பிரகாஷின் கொஞ்சல் சீண்டல்களை வெறுமையாக கவனித்தாள்.

மீனாட்சியிடம் பேசாமல் அவரது மடியில் படுத்து கண்ணீர் உகுத்தாள். தன் மகளிடம் கோபம் இருந்தாலும் அமைதியாக மடியில் படுத்து கண்ணீர் வடிப்பவளிடம் கோபம் காட்ட முடியவில்லை அவரால்.

தன் மகளை மடியுடன் சேர்த்து அணைத்துக் கொள்வார் மீனாட்சி. ஏன் அழுகிறாய், எதற்கு அழுகிறாய், உனக்கும் சுஷினுக்கும் சண்டையா, இன்னும் அவனை பிடிக்கவில்லையா என்ன கேள்வியை விதம் விதமாக கேட்டாலும் மினியின் பதில் என்னமோ மௌனமும் கண்ணீரும் மட்டுமே.

ஒருநாள் அவளது அழுகை தாங்க முடியாமல் மீனாட்சி கேட்டார். "மினி உனக்கும் சுஷினுக்கும் என்னமோ சரி வரவே இல்லை, வேண்டுமென்றால்............ ", அவளிடம் ஒரு தாயாக இருந்துகொண்டு எப்படி சொல்லுவது என்பது புரியவில்லை.

"சொல்லுங்க அம்மா".

"நீ கொஞ்சநாள் அம்மா கூட இருந்துக்கறியாடா . உன்னோட நிம்மதியும் சந்தோசமும் எனக்கு முக்கியம். அதைவிட என் பொண்ணு எனக்கு வேணுன்டா. எப்பவும் அழுதுட்டே இருக்க, உன்னோட அழுகையை என்னால் தாங்க முடியலடா.

உனக்கு சுஷினோட வாழ பிடிக்கவில்லை என்றால்............ ".

"என்னால் அவர் இல்லாமல் , அவரை பார்க்காமல் ஒருநாள் கூட இருக்க முடியாதும்மா. புரிஞ்சுக்கோங்க ", இதை சொல்லிவிட்டும் அழுகையைத் தொடர்ந்தாள்.

மீனாட்சிக்கு மினியின் மனநிலை புரிந்தது. "மினி அம்மாவை பார்த்து சொல்லு, நீ சுஷினை லவ்

பண்ணுறியாடா அதுவும் ரொம்ப".

எதுவும் சொல்லாமல் தலையை குனிந்துகொண்டாள். மீனாட்சியே தொடர்ந்தார். "நீ உன்னோட லவ் வை சுஷின்கிட்ட சொல்ல வேண்டியதுதானே.

இதில் என்ன தயக்கம் உனக்கு. சுஷினும் உன்னை ரொம்ப லவ் பண்ணுராண்டா நீ அவனை வெறுக்கிறியோன்னுதான் அவன் விலகி இருக்கிறான் என்று நினைக்கிறேன்.

அவன்கிட்ட மனசுவிட்டு பேசுடா. கணவன் மனைவிக்குள் ஈகோ எந்த சூழ்நிலையிலும் வரவே கூடாது புரியுதா".

"எனக்கு ஈகோ இல்லையம்மா, ஆனால் நான் கேட்டு அவர் மறுத்துவிட்டால் என்னால் தாங்க முடியாது. அதுமட்டும் இல்லை அவருக்கு என்னை பிடிக்கவில்லை போல.

என்கிட்டே நெருங்கவோ, என்னிடம் பேசவோ மாட்டேன் என்கிறார். இந்த நிலையில் எப்படி அவரிடம் நான் பேச முடியும்".

"மினி நான் சொல்லுவதை கேள் . அவன் உன் கணவன் உன்னை நான் விரும்புகிறேன் என்று சொல்ல எதற்கு தயங்க வேண்டும். கண்டிப்பாக அவன் உன்னை விரும்புகிறான் அவன் கண்ணில் காதல் இருக்குடா.

நீதான் புரியாமல் தவிக்கிறாய். எப்பொழுதோ முடிந்திருக்கவேண்டிய பிரச்சனையை உன்னோட தயக்கத்தால் நீயும் கஷ்டப் பட்டு, சுஷினையும் கஷ்டப் படுத்துறியேடா. உன்னால் பேச முடியவில்லை என்றால் உன் செய்கையாலாவது புரியவை சரியா".

சரி என்பதுபோல் தலையை ஆட்டினாள் மினி. ஆனாலும் அவளது தலையாட்டல் சொல்லுவது சந்தேகமே என்ற தோரணையை மீனாட்சிக்கு உணர்த்தியது.

தான் தலையிட வேண்டியதன் அவசியத்தை புரிந்தார் மீனாட்சி. ஆனாலும் தன் மகளின் மனமாற்றத்தை எப்படி சுஷினுக்கு புரியவைக்க என்று யோசிக்கத் துவங்கினார் அவர்.

யோசனையின் முடிவில் ஒரு முடிவுக்கு வந்தவராய் , அவர்கள் கிளம்பும் முன்னர் சுஷினிடம் தனியாக பேசவேண்டுமே என்ற யோசனையுடனேயே அலைந்தார்.

ஆனால் அவர்கள் கிளம்பும் வரை அந்த சந்தர்ப்பம் அமையவே இல்லை. மினியும் சுஷினும் கிளம்பி காருக்கு சென்றதும், ஷிஜியும் பிரகாஷும் உள்ளே சென்று விட்டனர்.

மீனாட்சி கார் கிளம்பும்வரை அங்கேயே நின்றார். கார் கிளம்பவே இல்லை என்னவென்று அருகில் செல்லும் முன்னர் சுஷின் வேகமாக இறங்கி வந்தான்.

வந்த வேகத்தில் கேட்டான், "என்கிட்டே என்ன அத்தை சொல்லணும்".

மீனாட்சிக்கு ஆச்சரியமாக இருந்தாலும் மறைத்துக் கொண்டு, "இப்போ எதுவும் விளக்கமா சொல்ல முடியாது சுஷின். ஒன்றே ஒன்று மட்டும் சொல்லுகிறேன்" , தயக்கமாக நிறுத்தினார்.

"எதுவாக இருந்தாலும் சொல்லுங்க அத்தை. என்னிடம் என்ன தயக்கம். மினி ஏதாவது சொன்னாளா", அவனது குரலில் நடுக்கம் ஓடியது.

அவனது தயக்கமும் நடுக்கமும் புரிந்து சிரித்துக் கொண்டே, "உங்களிடம் சொல்லவேண்டியதை என்னிடம் சொன்னாள். ஆனால் நான் உங்களிடம் ஒரே ஒரு விஷயம் சொல்லுகிறேன் அதை மட்டும் செய் சரியா".

அவரது சொல்லில் முகம் பிரகாசம் ஆக, "சொல்லுங்க அத்தை என்ன செய்யணும்".

"மினியை ஒரு ரெண்டுநாள் அவளை நீங்கள் கவனிக்காத மாதிரி க்ளோஸா அவளோட நடவடிக்கையை கவனிங்க உங்களுக்கே புரியும்".

புரிந்தும் புரியாமலும் தலையை ஆட்டிவிட்டு சந்தோஷமாக சென்றான் சுஷின்.

## 50

வீட்டிற்கு வந்த பின்பு சுஷினிர்க்கு இருப்பே கொள்ளவில்லை. மினி தன்னை விரும்புகிறாள் என்பது மீனாட்சியின் பேச்சில் இருந்து அவன் புரிந்துகொண்ட உண்மை.

ஆனாலும் அவனுக்கு மினி தன்னை விரும்புகிறாள் என்பதை அவள் வாயாலேயே கேட்க வேண்டும் என்று ஆசையாக இருந்தது.

எனவே அவளை நெருங்காமல் விலகியே இருந்து கவனித்தான். மினியின் காலேஜ் துவங்கி விட்டாலும் அவளது வாரக் கடைசி நாட்கள் அவனுக்கு துணை புரிந்தன.

அவனும் அலுவலகம் செல்லாமல் வாரக் கடைசி நாட்களை அவளுக்கு தெரியாமலே அவளுக்காக மாற்றி வைத்தான்.

மினிக்கு அவன் வீட்டில் இருப்பதே போதும் என்று எண்ணினாள். வார நாட்களில் அவள் கல்லூரிக்கும் அவன் அலுவலகம் செல்லவுமே சரியாக இருந்தது.

கல்லூரிக்கு செல்வதால் தன் கவலைகளை கொஞ்சம் மறந்து இருந்தாள் மினி. ஆனாலும் சாயங்காலம் வந்ததுமுதல் அவன் வீட்டிற்கு வரும்வரை அவன் நினைவாகவே இருக்கும்.

அவன் வந்துவிட்டாலோ அவன் முகத்தை பார்க்காவிட்டாலும் அந்த அறையில் அவனுடன், அவன் வாசனையை நுகர்ந்தபடி இருப்பதே அவளுக்கு பிடிக்கும்.

அன்று சனிக் கிழமை கல்லூரி விடுமுறை ஆகையால் தாமதமாக எழுந்தாள். அருகில் சுஷின் இருக்கிறானா என்று பார்த்தாள் இடம் வெறுமையாக இருந்தது.

கண்கள் எழுந்தவுடன் அவனைத் தேடியது. தினமும் அவன் முகத்தில் விழித்து பழகியதால் இன்று காணாமல் அலை பாய்ந்தது.

சுஷின் வீட்டிற்கு வந்த உடன் செய்த முதல் வேலை தரையில் படுக்கப் போன அவளை கட்டிலில் தன்னுடன் படுக்க சொன்னதுதான்.

தயங்கிய அவளை , "என்மேல் நம்பிக்கை இல்லையென்றால் படுக்கவேண்டாம்" என்று ஒரே வார்த்தையில் சொல்லிவிட்டு சென்றுவிட்டான்.

நேரம் கழித்து வந்து பார்த்தால் கட்டிலின் ஒரு ஓரத்தில் மினி முடங்கிப் படுத்திருப்பதைப் பார்த்தான். முதலில் மிகுந்த தயக்கமாக படுத்தவள் பின்பு, அவனுடன் சாப்பிடுவது பேசுவதுபோல் வழக்கமான ஒன்றாகிப் போனது அவளுக்கு.

மினி எதையோ தேடுவதுபோல் தோன்ற பாத்ரூம் கண்ணாடி வழியே பார்த்துக் கொண்டிருந்தான் சுஷின்.

அவளது பார்வை அறை முழுவதும் அலைந்து , பாத்ரூம் கண்ணாடியில் தெரிந்த சுஷினின் உருவத்தை பார்த்ததும் பார்வை நிலைத்தது.

சுஷினிர்க்கு தான் எவ்வாறு உணர்கிறோம் என்றே தெரியவில்லை. தானும் அவளைப் பார்த்தால் அவள் பார்வையை திருப்பிக் கொள்வாள் என்று தோன்ற, அவளது பார்வையை சந்திக்காமல் தவிர்க்க நிறையவே பாடுபட்டான்.

அவன் நிதானமாக ஷேவ் செய்து ஆப்டர் ஷேவ் லோஷன் போட்டுக் கொண்டான். அந்த வாசனை மினியை தீண்ட கண்களை மூடி அந்த வாசனையை நுகர்ந்தாள்.

என்றுமே சுஷினிடமிருந்து வரும் அந்த வாசனை அவளுக்கு பிடிக்கும். ஆனால் காலைவேளை பரபரப்பில் இருப்பதால் நிதானமாக அனுபவிக்க முடிவதில்லை.

இன்று வீட்டில் இருப்பதால் அந்த வாசனையை அனுபவித்து நுகர்ந்தாள். சுஷின் அவளது செய்கையின் காரணம் புரியாமல் முதலில் திகைத்தவன் பின்பு அவளது ஆழ்ந்த மூச்சில், மூளையில் ப்ளாஷ் அடித்தது அவனுக்கு.

அவள் கண்களை திறக்காமல் இருக்கவும் சுஷின் சத்தம் போடாமல் அவளை நெருங்கினான். வாசனை அதிகமாவது புரிந்ததும் கண்களைத் திறந்தாள்.

அவளது அருகில் வரும்வரை கிறக்கப் பார்வையில் வந்தவன் அவள் கண்களை திறந்ததும் தன் முகபாவத்தை மாற்றிக் கொண்டு, அவள் அருகில் நெருங்கி எதுவும் புரியாதவனைப் போல் அவளது நெற்றியில் கையை வைத்து,

"என்னடா உடம்பு சரி இல்லையா. வேண்டுமென்றால் இன்னும் கொஞ்சநேரம் படுத்துக்கோ".

அவன் நெருங்கி வந்ததும் தன்னை கண்டு கொண்டானோ என்று பயந்தவள் அவனது கேள்வியில் தெளிந்தாள். அவனது நெருக்கமும் அவனுக்கே உரிய மணமும் அவளை என்னவோ செய்தது.

"அதெல்லாம் எதுவும் இல்லை. சும்மா............ எழுந்தது சோம்பேறியா............. காலையில் லேட் ஆச்சு........... . நான் குளிச்சுட்டு வாறேன்".

தன் படபடப்பை மறைக்க முயன்று தோற்று, பாத்ரூமில் புகுந்துகொண்டாள். இன்னுமே அவனது கை நெற்றியில் இருப்பதுபோல் இருந்தது அவளுக்கு.

என்றைக்கும் விட அன்று அவன் தன்னை நெருங்கி நின்றதுபோல் இருந்தது அவளுக்கு. தன் மன பிரம்மையாக இருக்கும் என்று அதை ஒதுக்கினாள்.

'என் தடுமாற்றத்தை கண்டு கொண்டிருப்பானோ. என்ன நினைத்திருப்பான். இல்லை புரிந்திருக்காது புரிந்திருந்தால் ஏளனமாக ஏதாவது சொல்லி இருப்பான்' என்று எண்ணிக் கொண்டே குளித்துவிட்டு வந்தாள்.

சுஷின் மினியைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தான். 'அவ என்னை காலையிலேயே தேடுறா, மெய் மறந்து என் வாசனையை அனுபவிக்கிறா, இது ஒருநாள் பழக்கம்போல் இல்லையே.

அப்படியென்றால் தினமும் இப்படித்தான் செய்கிறாளா. நான்தான் கவனிக்கவில்லையா. என் மினி என்னை தேடுறாளா நிஜமா, எழுந்த கொஞ்ச நேரத்தில் என்னால் இவ்வளவு உணர முடியிது என்றால்.

நான் மினியை புரிந்துகொள்ளாமலே நடந்து கொண்டிருக்கின்றேனா. தப்பு செய்து விட்டேனா தலையில் கைவைத்து அமர்ந்துவிட்டான்.

மினி குளித்துவிட்டு வந்ததும் சுஷினும் குளிக்கச் சென்றான். மினி டிபன் எடுத்துவைக்க கீழே சென்றாள். அங்கே சுலோ அனைத்தையும் எடுத்து வைத்திருந்தார்.

சுந்தரம் சாப்பிட சுலோ பரிமாறிக் கொண்டிருந்தார். "சாரி அத்தை இன்னைக்கு லேட் ஆயிடுச்சு".

"நானா செய்யிறேன் வேலைக் காரங்க செய்யிறாங்க நான் மேற்ப்பார்வை இடுறேன். இதில் நீ செய்ய எதுவும் இல்லை. போய் சுஷினை கூட்டிட்டு வந்து சேர்ந்து சாப்பிடுங்க ".

அவரது வார்த்தையை மறுக்க முடியாமல், அங்கேயே நின்றால் இன்னும் ஏதாவது கேள்விவரும் என்று பயந்து மாடி ஏறினாள்.

அங்கே சுஷின் அப்பொழுதுதான் குளித்துமுடித்து ஈரம் சொட்ட சொட்ட ஒரு துண்டை மட்டும் கட்டிக் கொண்டு கண்ணாடியின் முன்னாள் நின்றான்.

அவனது பரந்த முதுகையே வெறித்தபடி நின்றிருந்தாள். அவள் வந்ததை கவனித்தவன் அவளது பார்வையில் சுவாரசியம் தோன்ற அவளை பார்த்தபடி பேசாமல் நின்றான். மினியும் எதுவும் சொல்லாமல் அங்கிருந்த ஸோபாவில் அமர்ந்து கொண்டாள்.

அவன் மீதிருந்து பார்வையை விலக்கவும் முடியவில்லை, பார்க்கவும் முடியாமல் தலையை குனிந்துகொண்டாள். அவளது தயக்கம் புரிந்து அவளை சீண்டிப் பார்க்கும் எண்ணம் தோன்ற,

தலையை துவட்ட துவங்கியவன் "அம்மா" என்று அலறினான். அவனது அலறலில் நிமிர்ந்து பார்த்தவள் அவன் கையை உதறிக் கொண்டிருப்பதை பார்த்தாள்.

அதுமட்டும் அல்லாமல் வலியில் முகத்தை சுருக்கிக் கொண்டான். மினியால் அங்கே அமர்ந்திருக்க முடியவில்லை.

"தேவ் என்ன ஆச்சு ஏன் கத்துனீங்க, கை வலிக்கா என்ன", பதட்டமாக வினவினாள். அவளது தவிப்பை மனதுக்குள் ரசித்துக் கொண்டே, 'வலிக்காமல்தாண்டி கத்தினேன் இப்போ என்னங்குற' .

வெளியில் அவளிடம் "நேற்று கார் கதவில் இடித்துக் கொண்டேன். நேற்று வலி தெரியவில்லை ஆனால் இப்போ கையை தூக்க முடியாவில்லை வலி உயிர் போகுது".

"நான் தைலம் தேய்ச்சு விடவா". அவள் அப்பாவியாக வினவ, 'ஏண்டி தலையை துடைச்சுவிடவான்னு கேப்பன்னு பாத்தா. இது வேலைக்கு ஆகாது நாமளே ஏதாவது செய்தால்தான் உண்டு' ,

"தைலம் பிறகு தடவலாம். முதலில் தலையை துடைக்கணும் எவ்வளவு நேரம்தான் ஈரத்தோடேயே இருப்பது".

அவன் இப்படி சொன்னதும் மினிக்கு தயக்கமாக இருந்தது. அவளாக இதுவரை சுஷினை தொட்டது இல்லை. தயக்கமும் வேட்க்கமும் போட்டிபோட எதுவும் சொல்லாமல் நின்றாள்.

அவளது தயக்கம் புரிந்தவன் , "சரி விடு ஒருநாள் துவட்டவில்லையென்றால் ஒன்றும் ஆகாது. சளி மட்டும்தான் பிடிக்கும் , அது மருந்து சாப்பிட்டால் ஒரு வாரத்தில் சரிஆகிவிடும். மருந்து சாப்பிட வில்லையென்றால் ஏழு நாளில் சரியாகிப் போகும்.

நான் டிரஸ் மாற்றிவிட்டு வரேன். சொல்லிவிட்டு விலகப் போனவனை தடுத்தாள் மினி. அவனை நெருங்கி அவன்கையில் இருந்த துண்டை வாங்கி தலையை துவட்டிவிட்டாள். அவனது ஆறு அடி இரண்டு அங்குல உயரத்தை பிரமிப்புடன் பார்த்தாள்.

அவனது உயரத்திற்கு துடைக்க அவனை நெருங்கி உரசியபடிதான் துவட்ட முடிந்தது. முதலில் சாதாரணமாக துடைத்தாலும் , அவனது நெருக்கமும் , அவனது வாசனையும் அவளை தடுமாற வைத்தது.

"நீங்க ஸோபாவில் உக்காருங்க நான் துவட்டி விடுறேன்". எதுவும் சொல்லாமல் அமர்ந்துகொண்டான். ஸோபாவில் அமர்ந்த பிறகு அவனது உயரம் குறைந்துவிட்டாலும் அவனை நெருங்கி துவட்டும் போது அவனது மூச்சுக் காற்று சூடாக அவளது மார்பகங்களை தீண்டியது.

சுஷினுக்கோ எங்கே அவள் மீது தன் கட்டுப்பாட்டையும் மீறி பாய்ந்து விடுவோமோ என்று எண்ணினான். கண்களை இறுக்க மூடி தன் உணர்வுகளை அடக்க போராடி கொண்டிருந்தான்.

மினி அவனிடமிருந்து வேகமாக விலகினாள். இதற்குமேல் முடியாது என்று தோன்ற, "துவட்டி முடித்து விட்டேன் எழுந்து சாப்பிட வாங்க அத்தை வரச் சொன்னாங்க". அவனது கண்களை பார்க்காமல் பதிலுரைத்தாள்.

"என்ன துவட்டி முடிச்சுட்டியா, இங்கே பின்னாடி இன்னும் துடைக்கவே இல்லை . இப்படி பாதியிலே விடுவதற்கு நீ துவட்டாமலே இருந்திருக்கலாம். உனக்கு கஷ்ட்டமா இருந்தா போ நான் அம்மா கிட்ட துடைச்சுக்கிறேன்" , அவளை சோதனைக்கு உள்ளாக்கினான்.

'க்ராதகா, உனக்கு என்னடா கல்லுமாதிரி உக்காந்து இருக்க , எனக்குதான் உன்னை நெருங்கினாலே என்வசம் நான் இருக்க மாட்டேங்கேனே. இதுல அம்மாகிட்ட துடைப்பானாம். எப்படி என் பொண்டாட்டி துடைச்சு விடலை நீங்க துடைங்கன்னா சொல்லுவ. க்ராதகா......... அரக்கா'.

மனதுக்குள் அவனை வசை பாடியபடி அவன் சொன்னதை செய்தாள். அவளது இடையில் புரளத்துடித்த கைகளை அடக்கியபடி அவளது நெருக்கத்தை ஆழ்ந்து அனுபவித்தான் சுஷின்.

அன்று முழுவதுமே அவனுக்கு அவனது கையால் சாப்பிட முடியவில்லை. பைல் எடுக்க முடியவில்லை , காபி கப்பில் குடிக்க முடியவில்லை, சூ லேஸ் கட்டக் கூட முடியவில்லை.

மினிக்கு அவனது செய்கையில் சந்தேகம் எழுந்தாலும் அவனது தேவைகளை கவனிப்பதில் அலாதி இன்பம் கண்டாள்.

சந்தேகமாக ஏதோ கேட்கவந்த சுலோவை கண்ணை காட்டி எதுவும் சொல்லாதீர்கள் என்று சொல்லி அவரையும் அடக்கி விட்டான்.

சுலோவும் சிரித்துக் கொண்டே அவர்களுக்குள் நடக்கும் ஊடல் முடிவுக்கு வந்தால் சரிதான் என்பதுபோல் ஒதுங்கிக் கொண்டார்.

இரவு சாப்பாடிற்கு பின் அறையில் ஒரு பயிலில் மூழ்கி இருந்தான் சுஷின். அங்கு வந்த மினி அவனது கையைப் பிடித்தாள்.

சுஷின் செய்த அடாவடிகளில் மினியின் தயக்கம் வெகுவாக காணாமல் போய் இருந்தது. வலிக்காத கையில் அவளாகவே சென்று மருந்து போடும் அளவுக்கு முன்னேறி இருந்தாள் மினி.

அவள் தன் கையில் அயொடேக்ஸ் தடவுவதைப் பார்த்தவன் , "மினி எதற்கு இதைவந்து கையில் பூசுகிறாய்" என்று தெரியாமல் கேட்டு விட்டான். ஆனால் கட்டதற்க்குப் பின்புதான் தான் போடும் நாடகமே நினைவிற்கு வந்தது.

இப்பொழுது என்ன சொல்லி அவளை சம்மாளிக்க என்று எண்ணியவன் , "கைவலிக்கு அயோடெக்ஸ் தான் நாங்க போடுவோம் நீங்க வேற மருந்து வச்சு இருக்கீங்களா" , என அப்பாவிகாக கேட்டு அவனை குளிர வைத்தாள்.

"வேறு மருந்து இல்லை நீ இதையே போடு" , என்று சொல்லி கண்களை மூடி படுத்துக் கொண்டான்.

எதுவும் சொல்லாமல் அவன் கையில் மருந்தை தடவிவிட்டு மறுபுறம் சென்று படுத்துக் கொண்டாள். இன்றைய நாள் இனியநாளாக சென்றதுபோல் தோன்றியது அவளுக்கு.

நீண்ட நாட்களுக்குப் பிறகு நிம்மதியாக இருப்பதுபோல் உணர்ந்தாள் மினி. பக்கத்தில் படுத்திருக்கும் சுஷினைப் பார்த்தாள் அவன் தூங்கிவிட்டது சீராக எழுந்து தாழ்ந்த அவன் மார்பில் தெரிந்தது.

இரவு விளக்கின் ஒளியில் சுஷினின் முகத்தை பார்த்தாள். சலனமில்லாத பிள்ளையின் முகம்போல் இருந்தது. AC காற்றில் அவனது தலைமுடி அசைவதை ரசனையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவனது கூந்தலை கலைத்து விளையாட ஆவல் எழுந்தது. என்றும் அவன் அறியாமல் பட்டும் படாமல் செய்யும் செயல் , இன்று அவனது நெருக்கத்தால் தயக்கம் நீங்கி ஒருவித எதிர்பாப்புடன் அவனது முன்னுச்சி முடியை கோதினாள்.

உறக்கத்தில் இருந்த சுஷின் இனிய கனவு காணும் உணர்வுடன் , "நிலா........ ம் நிலா........", என்று சொல்லி மினியின் புறம் திரும்பிப் படுத்தான்.

மினிக்கு கண்களில் கண்ணீர் வழிந்தது. திருமணம் முடித்து ஆறு மாதங்களுக்குப் பின்னர் கேட்க்கும் அவனது நிலா என்ற அழைப்பு மினியை தன்னிலை இழக்க வைத்தது.

தன்னிடம் கோபம் கொண்டு பேசாமல் விலகியே இருந்தாலும் கனவில்கூட தன்னை தன் பெயரைச் சொல்லி அவன் புலம்புவதை கேட்டபின்பும் அவனைவிட்டு விலகி இருக்க முடியாது என்று தோன்ற அவனை நெருங்கிப் படுத்து அவனது முடியை கோதி "தேவ்......." , என மெதுவாக அழைத்தாள்.

ஏதோ ஒரு வேகத்தில் அழைத்து விட்டவள் அவன் எழுந்து என்னவென்று கேட்டால் என்ன சொல்வது என்ற கேள்வி மனதில் எழவும் அவனைவிட்டு விலகிப் படுக்கப் போனாள்.

ஆனால் விலக முடியாமல் சுஷினின் கரம் அவளை தடுத்தது. அவன் தன்னை தடுத்ததும் அவனது கண்களை சந்தித்தவள் எதுவும் சொல்லாமல் அவனது மார்புக்கு அருகில் ஒன்றினாள்.

அவளது அடைக்கலம் புரிந்தும் எல்லை மீறாமல் அவளை தன்னுடன் புதைத்துக் கொள்பவன்போல் இறுக்கிக் கொண்டான்.

அவனது இதழ்கள் மினியின் உச்சியில் பதிந்து அங்கேயே நிலைத்தது. மினி உணர்ச்சி வேகத்தில் அவனது மார்பில் புரண்டாள். அவளது தேவையும் எதிர்பார்ப்பும் புரிந்தும் எதுவும் செய்யாமல் , "என்னடா தூக்கம் வரலையா, நான் இருக்கேன் எதுக்கும் கவலைப் படாமல் எதைப் பற்றியும் யோசிக்காமல் தூங்குடா. ஐ லவ் யு நிலா........... ஐ லவ் யு ".

அவனது பேச்சில் ஏமாற்றம் அடைந்தாலும் அவன் காதல் சொன்ன நிம்மதியில் கண்களை மூடினாள் மினி. தான்

அவனிடம் அடைக்கலம் ஆனா பின்பும் தன்னை எடுத்துக் கொள்ளாதது கவலையை அளித்தது மினிக்கு.

ஆனால் பதிலுக்கு அவளிடமிருந்து அந்த வார்த்தையை எதிர்பார்த்த சுஷின் ஏமாந்துபோனான். தன்னை அவள் இன்னும் முழு மனதுடன் ஏற்க்கவில்லையோ என்று எண்ணினான்.

## 51

அடுத்தநாள் ஞாயிற்றுக் கிழமை காலை எழுவதே சோம்பேறித் தனமாக இருக்கும் சுஷினுக்கு எப்பொழுதுமே. ஆனால் அன்று மிகவும் உற்சாகமாக இருந்தான் ஐந்து மணிக்கே எழுந்தும் விட்டான். ஆனால் படுக்கையை விட்டு எழாமல் தன் கையணைப்பில் உறங்கும் மினியை பார்த்த வண்ணம் இருந்தான்.

உறக்கம் சுத்தமாக கலைந்து போனது. நேற்று இரவில் அவள் தன்னை ஒண்டியது நினைவில் வந்து இம்சித்தது. நேற்று விலகியிருக்கக் கூடாதோ

அவள் கண்களில் எதிர்பார்ப்பு தெரிந்ததே, அது நிஜம்தானா. வாயைத் தொறந்து உன்னை எனக்கு பிடிச்சுருக்குடா மடையான்னு சொன்னால் குறைந்தா போய்விடுவாள்.

நாய்க்குட்டி மாதிரி உரசமட்டும் தெரியும். ஐ லவ் யு ன்னு சொல்லுறேன் ஏதாவது ரியாக்சன் செஞ்சாளா நல்ல உரசிகிட்டே தூங்குது. என்னை சூடாக்கி விட்டுட்டு AC ல கதகதப்பா தூங்குறதைப் பாரு.

மினியின் முகத்தை பார்த்தவாறே புலம்பிக் கொண்டிருந்தான் மனதுக்குள். அவன் மனதின் குரல் அவளுக்கு எட்டியதோ என்னமோ விழிகளை திறந்து அவனைப் பார்த்தாள். பார்வையை விலக்கிக் கொள்ள முயலவில்லை இருவரும்.

ஆனால் மினியின் மனம் இப்பொழுது புலம்பியது. பார்வைக்குமட்டும் குறைச்சல் இல்லை. ஒருத்தி வெக்கத்தை விட்டு ஒண்டினால், கொஞ்சம்கூட உணர்ச்சியே இல்லாமல் ஐ லவ் யுன்னு சொல்லிட்டு படுத்து தூங்க சொல்லுது ஜடம் ஜடம்

இப்போகூட மூச்சு விடமுடியாதமாதிரி இறுக்கி கட்டிக்க மட்டும் தெரியுது. பெரிய சூரிய பகவான்னு நினைப்பு பார்வையிலேயே கர்ப்பம் ஆக்கிடுவான்போல , தன் எண்ண ஓட்டத்தை இந்த இடத்தில் நிறுத்தினாள்.

இப்பொழுது அவனது முகத்தை பார்க்கவே முடியவில்லை அவளால். பார்வையை விலக்கிக் கொண்டு , "நான் போகவா" 'இருக்கவா'. முதல் வார்த்தையை சத்தமாகவும் இரண்டாம் வார்த்தையை வாய் குள்ளும் முனகிக் கொண்டாள்.

சுஷினுக்கு அவளது பேச்சைக் கேட்டதும் கோபம் வந்தது. காலையில் எழுந்து எதையோ எதிர்பார்த்து ஏமாந்த உணர்வு எழுந்தது அவனுக்குள். எனவே சொன்னான் , "போயேன் உன்னை யார் பிடிச்சு வச்சு இருக்கா".

வேண்டாம் என்று சொல்லுவான் என எதிர்பார்த்த மினிக்கு ஏமாற்றமாக இருந்தது. எந்த உணர்வையும் வெளிக்காட்டாமல் அவன் கையணைப்பில் இருந்து விலகினாள்.

இருவருக்குமே விலகல் மிகத் துன்பமாக இருந்தது. அவனுடனே இருந்துவிடுவோமா என்று ஒருநிமிடம் எண்ணியவள் அவனுக்கே தேவையில்லாத போது நான்மட்டும் ஏன் போகவேண்டும் என்ற எண்ணம் தோன்ற விலகிசென்று பாத்ரூமில் புகுந்து கொண்டாள். ஏன் என்று புரியாமலேயே கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

சுஷினிற்கு என்ன செய்வது என்ன சொல்லுவது ஒன்றுமே புரியவில்லை. அவளை போஎன்று ஜம்பமாக சொல்லிவிட்டாலும் அவள் இன்னும் கொஞ்சநேரம்

இருக்கட்டுமா என்று கேட்பாள் என்று எண்ணினான். அதையே நீ சொல்லவேண்டியது தானே என்று கேள்விகேட்ட மனசாட்ச்சியை ஓங்கி மிதித்து அடக்கினான்.

காரணம் இல்லாமலேயே கோபம் பெருகியது அவனுக்கு. மினி குளித்துவிட்டு வெளியில் வந்தாள் அவளது கண்கள் அழுததற்கு அடையாளமாக சிவந்து இருந்தது.

சுஷினும் அதை கவனித்தான். 'என்னை இம்சை படுத்திட்டு இவளுக்கு என்ன அழுகை வேண்டி இருக்கு. இருவரும் ஒருவர் மீது ஒருவர் கோபமாகவும், வருத்தமாகவும் இருந்தனர்.

மினி குளித்துவிட்டு கீழே இறங்கி வரும் பொழுதே ஷிஜியின் குரல் கேட்டது. ஷிஜி வந்திருக்கிறாள் என்றால் அம்மாவும் வந்திருப்பார்களே என்ற உற்சாகம் தோன்ற வேகமாக இறங்கி வந்தாள்.

ஷிஜி மினியை எழுந்துவந்து கட்டிக் கொண்டாள். "என்ன மினி சீக்கிரம் எழுந்து வந்துட்ட, அம்மா இன்னும் லேட் ஆகும்னு சொன்னாங்க".

மீனாட்சியின் கண்டன விழிகளை சந்தித்துக் கொண்டே , "அதெல்லாம் ஒன்றும் இல்லை ஷிஜி ஞாயிற்றுக் கிழமை மட்டும் கொஞ்சம் லேட் ஆகும் மற்ற நாட்களில் சீக்கிரமே எழுந்து விடுவேன்".

"பின்ன அன்னைக்கும் இழுத்து போர்த்தி தூங்கினால் காலேஜ் க்கு போக முடியாதே", மீனாட்சி.

"இங்க என்ன மினியை பேட்டி எடுக்கவா வந்திருக்கிறோம். அவளையே எல்லோரும் குறை சொல்லுரீங்க", பிரகாஷ்.

"அப்படி சொல்லுங்க அண்ணா , நீங்களாவது எனக்கு சப்போட் பண்ணுறிங்களே. வாங்க அண்ணா எப்படி இருக்கீங்க".

"அம்மா நாமளுந்தான் வந்திருக்கிறோம், அண்ணனுக்கு மட்டும் வரவேற்பு . இதை என்னன்னு கேளுங்க நீங்க" , ஷிஜி மீனாட்சியை தூண்டினாள்.

"வந்தவுடனே மினிகிட்ட பேட்டி எடுத்தால்.......... இந்த வரவேற்புதான் கிடைக்கும்" , சந்தடியில் ஷிஜியின் காலை வாரினான் பிரகாஷ்.

அதற்கு அவனிடம் , "தங்கச்சிக்கு இப்படி சப்போட் பண்ணித்தான் வரவேற்பு வேணும்னா எங்களுக்கு வேண்டாம்". முகத்தை திருப்பிக் கொண்டாள்.

அவளது பொய்கோபம்கூட தாங்காமல் எழுந்து அவளிடம்வந்து அமர்ந்து , "மினி என்ன இருந்தாலும் என் ஷிஜியை வரவேற்க்காதது ரொம்ப தப்பு , அவளையும் ஒருவார்த்தை வாஎன்று சொல்லு" , கண்ணை சிமிட்டி ஜாடை செய்தவாறு மினியிடம் கூறினான் அவன்.

மினிக்கு அவர்களின் செல்ல நாடகம் பிடித்திருந்தது. அவள் பேசத் துவங்கும் முன்னர் , "என் தங்கையை நான் வரவேற்கிறேன் இதில் என்ன இருக்கு, மினி நானும் வரட்டும் என்று எதிர்பார்த்து இருந்திருப்பாள் அப்படித்தானே மினி".

சொல்லியவாறே மினி அமர்ந்து இருந்த ஸோபாவில் அவளை நெருங்கி அமர்ந்துகொண்டான். மினி இதை எதிர் பார்க்கவில்லை. நெருங்கி அமர்ந்தது மட்டுமல்லாமல் அவள் தோளிலும் கையை போட்டுக் கொண்டான்.

மினிக்கு கோபம் ஏறியது. பெட்ரூமில் விஷ்வாமித்திரன் மாதிரி இருக்க வேண்டியது வெளியில் வந்து உரச வேண்டியது. யாருக்காக மற்றவர்களுக்காகவா இது எனக்கு வேண்டாம்.

முடிவு செய்த வேகத்தில் அவனிடமிருந்து எழுந்தாள். "அம்மா நான் எல்லோருக்கும் டிபன் எடுத்து வைக்கிறேன் . நீங்க பேசிட்டு இருங்க". சொல்லிவிட்டு அங்கிருந்து நகர்ந்தாள்.

பெட்ரூமில்தான் நெருங்க முடியவில்லை. இங்கே அனைவர் முன்பும் அவளை நெருங்கினால் மற்றவர்களுக்காகவாவது பேசாமல் இருப்பாள் என்று எண்ணினால் இதற்கும் முடியாமல் போயிற்றே.

அவனுக்கும் கோபம் வந்தது. அவளை ஒருவழி செய்யவேண்டும் என்ற ஆத்திரம் வந்தது. ஆனாலும் அவளை சீண்டாமல் விடுவதில்லை என்ற முடிவில் அவன் இருந்தான்.

சாப்பாட்டு அறையிலும் அது தொடர்ந்தது. யாரும் பார்க்காத போது மினியின் கையில் இருந்து சாப்பாட்டை பிடிங்கித் தின்றது, மினியின் ப்ளேட்டில் இட்லிகளை அடுக்கியது இப்படி அவளை சீண்டிக் கொண்டே இருந்தான்.

கை கழுவும் இடத்திலும் கையை கழுவிவிட்டு அவளது துப்பட்டாவில் துடைத்தான். அவள் சீறியதற்கு முடிந்தால் உன் துப்பட்டாவை என்னிடமிருந்து வாங்கிக்கொள் என்று சொல்லிவிட்டு அறைக்குச் சென்று விட்டான்.

அது ரெடிமேட் சுடிதார் எனவே அதன் கழுத்து இறங்கி அபாயகரமாக இருந்தது. துப்பட்டா இல்லாமல் அதை போடவும் முடியாது. வேறு துப்பட்டா போடலாம் என்றால் இந்த கலர் க்கு மேட்ச் ஆகாது.

வேறு வழி இல்லாமல் அவனை தேடிச் சென்றாள். அனைவரும் இருக்கும்போது அறைக்குச் செல்லவே தயக்கமாக இருந்தது அவளுக்கு. அனைவரும் கிட்செனில் பேசிக் கொண்டிருக்க அறைக்குச் சென்றாள்.

அவளது துப்பட்டாவை கழுத்தில் சுற்றி போட்டுக் கொண்டு கட்டிலில் படுத்திருந்தான் சுஷின். வேகமாக அவனிடம் சென்று அவனது கழுத்தில் இருந்து துப்பட்டாவை பிரிக்க முயற்சி செய்தாள்.

ஆனால் அவனிடமிருந்து பிரிக்க முடியவில்லை. தன் முயற்சியிலேயே கவனமாக இருந்தவள் சுஷினின் பார்வை

மாற்றத்தை கவனிக்கவில்லை.

அவன் அவளது முயற்சியை தடுக்கவும் இல்லை அதே வேளை துப்பட்டா வரவும் இல்லை. சுஷினை என்ன செய்ய என்று கோபமாக பார்த்தவள் அவனது பார்வை மாற்றத்தை அப்பொழுதுதான் பார்த்தாள்.

அவனது பார்வை பதிந்த இடத்தை அவள் பார்க்காமலேயே உணர முடிந்தது. கை சுடிதாரை சரிசெய்ய எழுந்தது ஆனால் அவளது முயற்சியை தடை செய்தது சுஷினின் கரங்கள்.

அவன் பார்வையை விலக்கிக் கொள்ளவும் இல்லை, அவளது கைகளை விடவும் இல்லை. மினிக்கு அவனது பார்வை மேனியை சிலிர்க்க வைத்தது. விலகு என்று மூளை கட்டளையிட அதை செயல்படுத்த கால்கள் ஒத்துழைக்க மறுத்தது.

அவளது கைகளுக்கு சுதந்திரம் அளித்தவன் அவளது இடையை வளைத்து தன்னை நோக்கி இழுத்தான். அவனது இதழ் தீண்டலை எதிர்நோக்கி கண்களை மூடிக் கொண்டாள் மினி.

அவள் எதிர்பார்ப்பு பொய்க்கவில்லை ஆனால் அவன் இதழ் பதிந்த இடம்தான் மினியை கலவரப் படுத்தியது. மினியின் சுடிதார் கழுத்து இறங்கி இருந்த இடத்தில் அவனது சூடான இதழ்கள் புரண்டன.

உடம்பில் உள்ள மொத்த ரத்தமும் முகத்தில் பாய தாள முடியாமல் அவன்மேல் சரிந்தாள் மினி அவளை தன்னுடன் சேர்த்து புதைத்துக் கொண்டு கட்டிலில் சரிந்தான் சுஷின். அவனது இதழ்கள் மேலும் முன்னேறின அவளது மேனியில்.

மினியின் கைகள் சுஷினின் முதுகில் பிடிப்பில்லாமல் அலைந்தது. சுஷினின் கைகள் மினியின் மேனியின் மென்மையை பரிசோதித்தன. இருவருமே தங்களை மறந்த

நிலை, இந்தநிலை நீடித்திருந்தால் என்ன நடந்திருக்குமோ ஆனால்.............

"அண்ணா............. " என்ற அழைப்பில் மினியை நனவுலகம் மீட்டாள். ஆனால் சுஷின் மீள விரும்பாதவனாய் மினியிடம் கட்டுண்டிருந்தான்.

மினியின் உணர்ச்சி வேகம் ஷிஜியின் அழைப்பில் அறுந்தது. ஆனால் சுஷின் கலைய விரும்பாதவனாய் தன் தேவை தீராத மோகத்தில் இருந்தான்.

தன்மேல் படர்ந்திருந்த சுஷினை விலக்க போராடினாள் மினி. ஆனால் அவன் இதையெல்லாம் கவனிக்கும் நிலையில் இல்லை. ஷிஜி படியேறி வரும் அரவம் கேட்டது மினிக்கு.

அறையின் கதவும் திறந்தே இருந்தது. இந்த நிலையில் ஷிஜி பார்த்தால் என்ன ஆவது , "தேவ்.......... தேவ்.......... ஷிஜி கூப்பிடுறா பாருங்க". அவளது தேவ் என்ற அழைப்பே அவனுக்கு போதையேற்றியது.

"அவ கூப்பிடட்டும் நீ சும்மா இரு" , அவனது தேவை இவ்வாறு பேச வைத்தது. ஆனால் ஷிஜியின் வருகை நெருங்கிவிட்டதை அறிந்து, "தேவ்........ தேவ்.......... ஷிஜி படியேறி வந்துட்டா. ப்ளீஸ் எந்திரிங்க ரூம் கதவுவேற தாழ்போடவில்லை" , அவஸ்த்தையாக முணுமுணுத்தாள்.

"அவ மாடிக்கு வரமாட்டா நீ பேசாமல் இரு", அவனது இதழ்கள் அவளது இதழ்களை மூடியது. அவனது தேவை புரிந்தாலும் பகல் வேளையில், அதுவும் ஷிஜி மேலே வந்துவிட்ட நிலையில் அவளால் அவனுக்கு அடங்க முடியவில்லை.

தன் பலம் முழுவதும் திரட்டி அவனை உருட்டி தள்ளி விட்டாள். தள்ளிய வேகத்தில் அவனிடம் இருந்து உருவி கட்டிலில் இருந்து இறங்கி தன் சுடிதாரையும் துப்பட்டாவையும் எடுத்துக்கொண்டு பாத்ரூமில் புகுந்து ஷவரின் அடியில் நின்றாள்.

தன் ஏமாற்றம் முழுவதும் வார்த்தையாக வந்தது சுஷினுக்கு. "என்னை தள்ளி விட்டுட்டு போய்ட்ட இல்ல. இது இரண்டாவது முறை, உன்னிடம் நெருங்கும் என்னைப் பார்த்தால் பயித்தியக் காரன் மாதிரி இருக்கா. இனிமேல் நீயே வரும் வரை நான் உன்னை நெருங்க மாட்டேன் போ போய்டு என் கண் முன்பே நிற்காதே".

சுஷினால் தூண்டப்பட்ட உணர்வுகள் அடங்க மறுத்தன. தனக்குமட்டும் ஏன் இப்படி ஆகவேண்டும் என்ற எண்ணமும் அவளை வாட்டியது. ஷவரின் அடியில் பச்சைதண்ணீரின் அடியில் தன் எண்ணப் போக்கில் நின்றாள் மினி.

சுஷினின் பேச்சு அதைவிட நெஞ்சை சுட்டது. நான் மட்டும் விரும்பியா விலகினேன் , இப்படி புரிந்துகொள்ளாமல் பேசுகிறாரே. என்ன செய்ய.

அறையில் சுஷினின் நிலையோ அதைவிட மோசமாக இருந்தது. முழுமை பெறாத உறவு தணலாய் எரிந்தது உடல் முழுவதும். மினி வேண்டும் என்று உடலின் ஒவ்வொரு செல்லும் துடித்தது. அவளால் மட்டுமே தன் தகிப்பை அடக்கமுடியும் என்று தோன்ற, உதறித் தள்ளிவிட்டு அவள் போனது கடுங் கோபத்தை அவள்மேல் வர வைத்தது.

இனிமேல் அவளே நெருங்காமல் தான் நெருங்கவே கூடாது என்ற வீராப்பையும் விதைத்தது. இது முதல் முறை அல்ல அவள் உதறுவது, அவளை நெருங்கும் போது எல்லாம் என் உணர்வுகளை கொல்லுவதே அவள் வேலையாகிப் போனது.

இவனது சிந்தனை ஓட்டத்தை கலைத்தது ஷிஜியின் குரல் , "என்னண்ணா எவ்வளவு நேரமா கூப்பிட்டுக் கொண்டு இருக்கிறேன். ஏதாவது வேலையாக இருப்பியோ என்று கூப்பிட்டுவிட்டு பாதிபடி ஏறி வந்து வெயிட் பண்ணுனா உன்னை காணோம் அதனால்தான் தேடி வந்தேன்.

ரூம் கதவு திறந்தே இருந்தது அதனால்தான் தைரியமா ரூம்க்கே வந்துட்டேன். உன்னை தொந்தரவு செஞ்சுட்டனா".

# 52

சுஷின் ஷிஜியின் பேச்சில் தன்னிலைக்கு வந்துவிட்டான். மினி சொன்னது உண்மை என்று புரிந்தது. கதவை தாழ் போட்டிருந்தால் இந்த நிலை வந்தே இருக்காதே. வார்த்தையில் வேறு அவளை நோகடித்து விட்டேன். இப்பொழுது எந்த முகத்தை வைத்து அவளிடம் பேசுவது. தன் எண்ணப் போக்கில் உழன்றான்.

அவனது சிந்தனை ஓட்டத்தை கலைத்தது ஷிஜியின் பேச்சு , "அண்ணா யாரோ ஒமேக ட்ரான்ஸ்போட்டாம் அதில் அனுப்பிய க்ரானைட் எல்லாம் டைம் க்கு டெலிவரி ஆகலை என்று பெங்களூர் ல இருந்து கால்.

இது முதல் முறை இல்லையாம், எப்பவும் அவங்க லேட்டா தான் டெலிவரி செய்யிறாங்களாம் உனக்கு இதைப் பற்றி தெரியுமா என்ன என்று பிரகாஷ் கேட்க்கச் சொன்னார்.

இதை தள்ளிப் போட முடியாதாம் அதனால் உடனடியா நடவடிக்கை எடுக்கச் சொல்ல உன்னை கூப்பிட்டார் வாறியா இல்லையா.

இல்லை ஏதாவது சொன்னால் நான் சொல்லி விடுகிறேன்".

"இல்லை இது நான் நேரடியா பேசினால்தான் சரி வரும். இன்னைக்கே அந்த ட்ரான்ஸ்போட் ஆபீஸ் க்கு போன் பண்ணுறேன். நீ வா பிரகாஷ் கிட்ட வேறு ஏதாவது தகவல் தெரியுமான்னு கேட்க்கலாம் வா".

அவளையும் அழைத்துக் கொண்டு வெளியில் சென்றான். அதற்கு காரணமும் இருந்தது. பாத்ரூம் சென்ற மினி இன்னும் வெளியில் வரவில்லை. இவனை பார்க்க தயங்கி உள்ளேயே இருக்கிறாளோ என்ற காரணமே அது.

அவனாலும் இப்பொழுது மினியை எதிர்கொள்ள முடியாது எனவே சென்றுவிட்டான். அவர்கள் பேச்சு சத்தம் நின்றதும் தான் ஷவரின் அடியில் இருந்து விலகினாள் மினி. உடலும் மனமும் சோர்ந்து போனதுபோல் இருந்தது அவளுக்கு.

டவல் லை கட்டிக் கொண்டு தலையை கூட துவட்டாமல் கட்டிலில் விழுந்தாள். எதையும் யோசிக்கக் கூட முடியவில்லை. சுஷின் புரிந்துகொள்ளாமல் பேசியது மனதை வருத்தியது.

எவ்வளவு நேரம் யோசனையில் இருந்தாளோ தெரியாது. யாரோ படியில் வரும் சத்தம் கேட்கவும் கதவை தாழ் போட்டுவிட்டு ஆடைகளை அணியத் துவங்கினாள்.

சுஷின் வந்து கதவை தள்ளிப் பார்த்தான் தாழ் போட்டிருக்கவும் எதுவும் சொல்லாமல் திரும்பிச் சென்று ஷிஜியை அனுப்பினான்.

ஏன் என்று கேட்ட ஷிஜியிடம் எதுவும் சொல்லாமல் விலகிச் சென்றான். அண்ணனின் செய்கைக்கு ஏதாவது காரணம் இருக்கும் என்று தோன்ற மினியை அழைக்க சென்றாள்.

மினியையும் அழைத்து வரவும் அனைவரும் அமர்ந்து சிறிதுநேரம் பேசிக் கொண்டிருந்தனர். சாப்பாடு தயாராகவும் அனைவரும் அமர்ந்து சாப்பிட்டுவிட்டு சிறிதுநேரம் ஓய்வெடுக்கச் சென்றனர்.

சுஷின் அறைக்குச் செல்லவும் மினி தன் தாயுடன் சிறிதுநேரம் பேசிவிட்டு அவருக்கு சந்தேகம் வரும் முன்னர் அறைக்குச் சென்றாள்.

சுஷின் ஏற்கனவே தூங்கி விட்டிருந்தான். எதுவும் செய்யாமல் மறுபுறம் படுத்து கண்களை மூடிக் கொண்டாள்.

ஆனால் அவள் அந்தபக்கம் திரும்பிப் படுத்ததும் சுஷின் கண்களைத் திறந்து பார்த்தான். அவள் விலகி

படுத்திருப்பதை பார்த்து சத்தமில்லாமல் ஒரு பெருமூச்சை வெளியேற்றிவிட்டு கண்களை மூடிக் கொண்டான்.

இருவரையும் உறக்கம் தழுவ நிறைய நேரமானது.

மாலை ஐந்து மணி ஆனதுமே அனைவரும் தோட்டத்தில் கூடினர். சிரிப்பும் கும்மாளமுமாக நேரம் போவதே தெரியாமல் பேசிக் கொண்டிருந்தனர்.

சுலோ காபி கொண்டுவரவும் அனைவரும் அருந்தியவாறு பேச்சை தொடர்ந்தனர்.சுலோ அருகில் அமரவும் சுஷின் தாயின் மடியில் தலை வைத்து படுத்துக் கொண்டான்.

இதை பார்த்ததும் அனைவரும் சிரித்தனர். சுந்தரம் சுஷினிடம் , "ஏண்டா உனக்குத்தான் வேற ஒரு மடி காத்துகிட்டு இருக்கே , என் பொண்டாட்டி மடியில் நீ எதுக்குடா படுக்குற".

ஷிஜி அதற்கு , "அப்பா நீங்க அம்மா மடியில் படுத்து நான் பார்த்ததே இல்லையே பிறகு ஏன் இந்த பொறாமை".

"இப்போ உன் அம்மா ம் ன்னு ஒரு வார்த்தை சொல்லட்டும் உடனே படுத்துக் கொள்கிறேன்".

"பிள்ளை இல்லாத வீட்டில் கிழவன் துள்ளி விளையாண்ட கதைதான். பசங்க முன்னாடி பேசுற பேச்சைப் பாரு, இப்போ பேசாமல் இருக்கப் போறிங்களா இல்லையா".

"அம்மா அப்பாவை ஏன் திட்டுறிங்க ஏதோ ஒரு ஆதங்கத்தில் சொல்லிட்டார். விடுங்க அப்பா நான் எழுந்து எனக்கு சொந்தமான மடியில் படுத்துக்கறேன் . நீங்க முடிஞ்சா அம்மா மடியில் படுங்க", சொல்லிவிட்டு மறுபுறம் அமர்ந்திருந்த மினியின் மடியில் படுத்துக் கொண்டான்.

மினியால் அமர்ந்து இருக்கவும் முடியவில்லை, எழுந்து செல்லவும் முடியவில்லை. காலையில் பேசிய பேச்சென்ன இப்பொழுது செய்யும் செயல் என்ன. படுத்து இருந்தவன்

சும்மா இல்லாமல் தலையை ஆட்டியவாறு பேசிக் கொண்டே படுத்திருந்தான்.

அவனது தலை மாடியிலிருந்து ஏறி அவளது வயிற்றின் மீது உராய்ந்தது.அதுவேறு அவஸ்த்தையாய் இருந்தது. ஆனாலும் எதுவும் சொல்லாமலே அமர்ந்து இருந்தாள்.

"ஷிஜிக்கு நாளைக்கு காலேஜ் லீவ் தானே பிரகாஷ், இன்னைக்கு இங்கேயே தங்கிவிட்டு நாளைக்கு நீ ஆபீஸ் போயிட்டு வந்து ஷிஜியை கூட்டிட்டு போறியா", ஒரு எதிர் பார்ப்புடன் கேட்டார் சுலோ.

பிரகாஷ் ஷிஜியைப் பார்க்க அவள் எனக்கு என்ன என்பதுபோல் அமர்ந்து இருந்தாள்.அவளது இந்த செய்கையிலேயே தங்க ஆர்வமாக இருக்கிறாள் என்பது புரிய சரி என்று சொன்னான்.

ஷிஜியின் முகம் பிரகாசமானது. பிரகாஷைப் பார்த்து கண்ணடித்து ஒரு பறக்கும் முத்தத்தை பார்சல் செய்தாள். நீ உள்ளே வா உன்னை கவனித்து கொள்கிறேன் என்று கண்களாலேயே சொன்னான் பிரகாஷ்.

நான் ரெடி என்று ஷிஜி உதட்டசைவில் சொல்ல கிறங்கித்தான் போனான் பிரகாஷ்.பேச்சு அவர்களின் பிசினஸ் பற்றி திரும்பியது. சுஷின் அதைப் பற்றி சொல்லிக் கொண்டே கையை தலைக்கு அடியில் வைத்து படுக்கப் போனான்.

அவனது கையை தடுத்தாள் மினி. "இப்போ ஒழுங்கா தள்ளி படுக்கலை நான் எழுந்து போய்டுவேன்", அவனுக்கு மட்டும் கேட்குமாறு முணுமுணுத்தாள்.

அவனது பார்வையில் சுவாரசியம் கூட இன்னும் அவளது வயிறை ஒட்டி படுத்துக் கொண்டான்.அனைவர் முன்பும் எதுவும் செய்யயியலாமல் பேசாமல் இருந்தாள்.

ஒருவழியாக பேச்சு முடிந்து அனைவரும் தூங்கச் சென்றனர். மினியும் சுஷினும் நேற்றைய இரவின்

இனிமையை எதிர் பார்த்தாலும் , இன்றை காலையில் நடந்த நிகழ்ச்சிக்கு பின்னர் ஒருவரை ஒருவர் நெருங்க தயக்கம் காட்டினர்.

மினிக்கு அவனது பேச்சில் மனம் காயப்பட்டிருந்தது. சுஷினுக்கோ என்னவென்றே புரியாத தயக்கம் அவனை ஆட்டிப் படைத்தது. காலையில் அவளிடம் அப்படி பேசிவிட்டு இப்பொழுது உறவாட தயக்கமாக இருந்தது.

எனவே இருவருமே தங்களது சிந்தனைவசமே இருந்ததால் பேசாமல் படுத்துக் கொண்டனர்.இந்த அமைதி காலைவரைதான் என்பதை அறியாமலேயே.

காலை எழுந்தவுடன் சுஷின் வழக்கம்போல் ஆபீஸ் செல்ல கிளம்பும் முன்னர் தன் அப்பாவுடன் காலை ஓட்டத்திற்குச் சென்று விட்டான்.

மினி எழுந்து கீழே சென்றாள். அங்கே ஒரே குழப்பமாக இருப்பதுபோல் தோன்றியது. என்னவென்று தெரிந்துகொள்ள வேகமாக சென்றால் அங்கே மீனாட்சி, சுலோ, ஷிஜி அனைவரும் மிகுந்த சந்தோசமாக ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டிருந்தனர்.

ஷிஜி மீனாட்சியின் தோளில் சாய்ந்து வெட்கப் பட்டு நின்றவள் போல நின்றுகொண்டிருந்தாள்.சுலோ மீனாட்சியின் வாயில் சர்க்கரை போட்டுக் கொண்டிருந்தார்.

"அம்மா என்ன காலையிலேயே சர்க்கரை சாப்பிடுறீங்க அப்படி என்ன குட் நியூஸ் எனக்கும் சொன்னா நானும் சந்தோஷப் படுவேன் இல்ல".

"நீ அத்தை ஆகப் போற ,இந்தா நீயும் சர்க்கரை வாயில் போட்டுக்கோ",சொல்லியபடி சுலோ மினியின் வாயில் இனிப்பை போட்டார்.

மினிக்கு ஷிஜி அம்மா ஆகப் போகிறாள் என்பதைக் கேட்டதுமே ஒரே சந்தோசம்.அவளை இறுக்க கட்டிக்கொண்டு தன் வாழ்த்துக்களைச் சொன்னாள்.

பிரகாஷ் இந்த செய்தியை நம்ப முடியாதவனாய் சிலையென நின்று கொண்டிருந்தான்.அவனுக்கு தெரியும் ஷிஜி படிக்க வேண்டும் என்று சொன்னது.இப்பொழுது குழந்தை வேண்டாம் என்று சொல்லிவிடுவாளோ என்று பயத்துடனேயே நின்று கொண்டிருந்தான்.

"அண்ணா கங்க்ராட்ஸ் அப்பா ஆயிட்டிங்க. எனக்கு ட்ரீட் வேணும் எப்போ தரப் போறீங்க"மினியின் பேச்சில் கலைந்தான்.

"ட்ரீட் என்ன ட்ரீட் என்ன வேணும்னு கேளுடா உடனே செஞ்சுடுவோம்.ஆனா பதிலுக்கு நீ என்ன செய்வ".

"அண்ணா நீங்கதான் அப்பா ஆகப் போறீங்க , அதனால் நீங்க ட்ரீட் தாறது நியாயம் . சரி என்ன ஆனாலும் நீங்க கேட்டுட்டிங்க பதிலுக்கு நானும் ஏதாவது ஒரு ஹோட்டல்ல ட்ரீட் தாறேன் ஓகேயா".

ஷிஜி இருந்த சந்தோஷத்தில் என்ன கேட்க்கிறோம் என்று தெரியாமலேயே, "மினி அப்போ நீயும் அம்மா ஆனத்துக்கு அப்புறம்தான் ட்ரீட் தருவியா, அப்போ இன்னும் நாங்க எவ்வளவு நாள் காத்து இருக்கணும்", கேட்டதற்குப் பின்புதான் என்ன உளறினோம் என்பதே புரிந்தது அவளுக்கு.

"இது நல்லா இருக்கே உனக்கு ட்ரீட் தரதுக்கு வேண்டி நான் அம்மா ஆகா முடியுமா. அநியாயம் போ ஷிஜி ", நிலைமையை அழகாக சம்மாளித்தாள்.

ஆனாலும் ஷிஜி கேட்டது மனதை அரித்தது.முகம் மாறாமலேயே சிரித்தே சம்மாளித்தாள். இவர்களின் பேச்சை ஆராயும் முன்னர் ஷிஜி வேகமாக வாந்தி எடுக்க துவங்கினாள்.

அனைவரின் கவனமும் ஷிஜியிடம் திரும்பியது எனவே மினியின் மேல் யாரின் கவனமும் பதியவில்லை.

மினி அங்கிருந்து தங்கள் அறைக்கு வந்தாள் . அவள் அனுமதி இல்லாமலே கண்கள் கலங்கியது. "இன்னும் எவ்வளவுநாள் காத்திருக்கணும்"ஷிஜி கேட்டதே காதில் ஒலித்தது.

குழந்தை செல்வம் அனைவருக்கும் மகிழ்ச்சியை கொடுக்கும். ஆனால் எனக்கு எதுவும் நடக்காமலேயே அதை எதிர்பார்ப்பது...........' தன் மனதையே சமாதானம் செய்யும் வழி அறியாமல் கண்ணீர் வடித்தாள் மினி.

கீழே ஷிஜியிடம் மீனாட்சி , " ஷிஜி என் பிள்ளை ரோம்ப நேரமா உனக்காக வெயிட் பண்ணிட்டு இருக்கான் முதல்ல போய் பேசிட்டு வா".

ஷிஜி பிரகாஷைப் பார்க்க, அவன் தங்கள் அறைக்கு சென்று விட்டிருந்தான். ஷிஜி அறைக்குள் செல்ல அங்கே அவனைக் காணவில்லை. திரும்பும் வேளையில் பின்னால் இருந்து ஷிஜியை அணைத்துக் கொண்டான்.

எதுவும் பேசாமலே நின்றான். அவன் சந்தோஷத்தில் துள்ளிக் குதிப்பான் என்று ஷிஜி எதிர்பார்த்தாள்.ஆனால் அவனது மௌனத்தின் காரணம் புரியவில்லை.

"பிரகாஷ் உங்களுக்கு சந்தோசம் இல்லையா. ஏன் அமைதியா இருக்கீங்க. ஏதாவது பேசுங்க".

"ஷிஜி......... உனக்கு........... ஷிஜி .......... எனக்கு நாம............", வார்த்தைகள் தந்தியடித்தது அவனுக்கு. அவனை விட்டு விலகி நின்றாள்.

"பிரகாஷ் என்ன சொல்ல வாறிங்க புரியிற மாதிரி பேசுங்க".

"ஷிஜி உனக்கு இது சம்மதமா. எனக்கு நம்ம குழந்தை வேணுண்டா. உன் படிப்புக்கு வேண்டி நம்ம குழந்தையை வேண்டாம் என்று சொல்ல மாட்டியே" , ஒருவழியாக கேட்டு முடித்தான்.

எங்கே வேண்டாம் என்று சொல்லிவிடுவாளோ என்று பயந்து அவளை இறுக்க தழுவிக் கொண்டான்.அவன் கைகள் நடுங்குவது ஷிஜிக்கு புரிந்தது.

அவனது தவிப்பு ஷிஜிக்கு சிரிப்பையும், கோபத்தையும் ஒருங்கே அளித்தது. "பிரகாஷ் என்னை பாருங்க இது என்னோட பிரகாஷ்க்கு என்னோட முதல் பரிசு. இங்க இருக்கிறது என் பிரகாஷோட உயிர்.

இதை எப்படி நான்............ . உங்களுக்கு எப்படி இப்படி ஒரு சந்தேகம் வரலாம். என்னை நீங்க இவ்வளவுதான் புரிஞ்சுகிட்டிங்களா".

"நான் அவ்வளவு பெரிய கல்நெஞ்சக் காரியா என்ன. எனக்கு படிப்பு எவ்வளவு முக்கியமோ அதைவிட என் பிரகாஷோட ஆசை முக்கியம்.

நீங்க உங்க மனசு துறந்து சொல்லவில்லை என்றால் எனக்கு தெரியாதா. இப்போ சொல்லுங்க உங்களுக்கு சந்தோசமா".

"எனக்கு சந்தோசமா என்றா கேக்க , சந்தோசம் என்பது ரொம்ப சின்ன வார்த்தைடா. நான் வானத்தில் பறந்துட்டு இருக்கேன். என் ரத்தம் , என் உயிர் உன் வயிற்றில், நமக்குன்னு வாற முதல் சொந்தம்.

உன்னை மாதிரி எனக்கு ஒரு குட்டி ஷிஜி வேணும். எனக்கு அம்மாவா, தோழியா , காதலியா நீ இருக்கிறமாதிரி , எனக்கு மகளா இருக்க குட்டி ஷிஜி. அவளை தரையில் விடாமல் என் மார்பில் வைத்து வளர்ப்பேண்டா".

கனவில் மிதந்தான் பிரகாஷ். கண்களில் கனவு மின்ன ஷிஜியின் வயிற்றில் மென்மையாக இதழ் பதித்தான்.

நிமிர்ந்து பார்த்து கேட்டான்."பாப்பாக்கு வலிக்குமாடா". "பிரகாஷ் உங்கள........... இன்னும் பிறக்கவே இல்லை அதுக்குள்ளே பொண்ணுன்னு சொல்லுறிங்க . அதுவும்

பட்டும் படாமல் முத்தம் கொடுத்துட்டு பாப்பாக்கு வலிக்குமான்னு கேக்கிங்களே.

அப்போ இனிமேல் நான் ரெண்டாம் பட்ச்சமா".

"என்ன சொல்லிட்ட ஷிஜி நீ தான் என் உயிர்டா நீ இல்லாமல் எனக்கு எப்படி பாப்பா" , தவிப்பாய் பதிலளித்தான் பிரகாஷ்.

"என் பிரகாஷைப் பற்றி எனக்கு தெரியாதா" அவனது நெற்றியில் இதழ் பதித்தாள். பிரகாஷின் பார்வையில் கிறக்கம் கூடியது.

"எனக்கு ட்ரீட் எதுவும் இல்லையா".

"ட்ரீட் தானே மினிக்கு ஹோட்டல்ல குடுக்கும்போது உங்களுக்கு நான் பில் பே பண்ணுறேன் சரியா".

"நீ தரவில்லையென்றால் போ நானே எடுத்துக் கொள்கிறேன்" , சொல்லியபடி அவளை நோக்கி குனிந்தான்.

"பிரகாஷ் இந்த நேரத்தில் என்ன விளையாட்டு இது. தள்ளுங்க........... நான் போகணும்" , குரல் வெளியில் வரவே இல்லை ஷிஜிக்கு.

"தாராளமா போ ஆனால் என்னை கவனித்துவிட்டு போ சரியா".

"பிரகாஷ் சொன்னா............ ம்....... டேய்.......... " . பிரகாஷின் இதழ்கள் மேலே எதுவும் பேசவிடவில்லை அவளை.

தன் தேவை முடிந்ததும் கேட்டான், "ஷிஜி பாப்பாக்கு எதுவும் இதனால்............", அவனது வாயை மூடினாள்.

"இது கொஞ்சநேரத்துக்கு முன்னாடி தெரியலையா . காரியம் முடிஞ்சதும் பொண்ணுமேல அக்கறை பொங்கி வழியுது", தன் ஆடைகளை சரி செய்தபடி கேட்டாள்.

"முதல்ல அம்மாவை கவனிக்கணும் அப்புறம் தானே பொண்ணு", ஷிஜி அவனை அடிக்கத்துவங்கினாள்.

"காரியம் ஆகணும்னா என்ன வேண்ணா சொல்லுவீங்களா நீங்க". அசடு வழிந்தான் பிரகாஷ். அவனது முகத்தைப் பார்த்து தன்னுடன் அணைத்துக் கொண்டு சேர்ந்து சிரித்தாள் ஷிஜி.

## 53

மினியின் அறையில் அவள் கலங்கிய கண்களை துடைத்தபடி அமர்ந்து இருந்தாள். சுஷின் காலை ஓட்டம் முடிந்து அறைக்குள் வந்த பொழுது மினி கண்கலங்கி அமர்ந்து இருப்பதைப் பார்த்தான்.

'இப்போ எதுக்கு இவ தேவையில்லாமல் அழுதுட்டு இருக்கா. என்னதான் ஆச்சு இவளுக்கு கேட்டாலும் சொல்ல மாட்டா. சரி நாம குளிச்சுட்டு கிளம்புவோம் இவளைப் பார்த்தால் வேலைக்கு ஆகாது'.

அவன் குளிக்கச் சென்றான். மினிக்கு இதைப் பார்த்ததும் இன்னும் கோபமும் , வருத்தமும் அதிகரித்தது. 'ஒருத்தி இங்க அழுதுட்டு இருக்கேன் என்ன ஏதுன்னு கேக்குறாரா பாரு , எனக்கு என்னன்னு பேசாமல் போறதை. வெளியே வரட்டும்'.

சுஷின் குளித்து விட்டு வந்து நிதானமாக கிளம்பினான். அதுவரையும் மினி இருந்த இடத்தில் இருந்து நகரவும் இல்லை. அழுத முகத்தை மாற்றவும் இல்லை.

சுஷினும் கிளம்பிச் செல்லத்தான் நினைத்தான். ஆனாலும் முடியவில்லை. வேகமாக அவளிடம் சென்றான்."இப்போ எதுக்கு அழுதுட்டு இருக்க".

அவளிடமிருந்து பதில் எதுவும் இல்லை. 'வாயை தொறந்து பதில் பேசுறாளா பாரு'. "கேக்குறது காதில் விழுதா இல்லையா".

"எதுக்கு அழுறேன்னு சொன்னா உடனே தீத்து வச்சுடுவீங்களா".

"அது நீ சொல்லுற விஷயத்தை பொறுத்தது".

"ஏற்கனவே உள்ள பிரச்சனையவே இங்க தீக்க முடியலை இதுல புதுப் பிரச்சனைக்கு வந்துட்டார்".

"உன்கிட்ட என்ன சொல்லலை என்று இப்போ சொல்லுற".

"எதை சொன்னிங்க".

"நீ வேற எதையோ மனசில் வச்சுட்டு பேசுறமாதிரி இருக்கு".

"குற்றமுள்ள நெஞ்சுதான் குறுகுறுக்கும் நான் எதார்த்தமாதான் சொன்னேன்".

"நான் என்ன குற்றம் செஞ்சேன் குறுகுறுக்க . உனக்குத்தான் சந்தேகம் அண்ணன் தங்கை பாசத்தை கூட கொச்சை படுத்த உன்னால் மட்டும்தான் முடியும்".

"நாங்க அண்ணன் தங்கை என்று எப்போ சொன்னிங்க என்கிட்டே. அன்னைக்கு முதல்நாள் விடுங்க ஆனால் இரண்டாம் முறை நடு ராத்திரி ஒரு பெண்ணுடன் உங்களை பார்த்தால் யாராக இருந்தாலும் என்ன நினைப்பார்களோ அதைத்தான் நானும் நினைத்தேன்.

அன்று என் அம்மா ஹோசப்பிடலில் இருந்தாங்க , உங்களோட அருகாமைக்கும் ஆறுதலுக்கும் நான் எப்படி ஏங்கினேன் என்பது உங்களுக்கு தெரியுமா.

ஒரு போன்........... ஒரே ஒரு போன் செய்து என்கிட்டே பேசி இருந்திங்க என்றால், நான் இப்படி ஒரு இக்கட்டில் இருக்கிறேன் என்று சொல்லி இருந்தால் எனக்கு புரிந்திருக்கும்.

பிறகு அம்மா டிஸ்சார்ஜ் ஆனா அன்றும் நீங்க வரவில்லை. நான் என்ன நினைக்கட்டும். இது எல்லாம் விட என்னை ஹோட்டல் க்கு வர சொல்லிவிட்டு பாதியில் ஒரு போன்

வந்தவுடன் என்னிடம் எதுவும் சொல்லக்கூட இல்லாமல் வீட்டில் விட்டு போனீங்களே",

இடையில் பேசவந்த சுஷினை பேசவிடவில்லை அவள்.

"போன் செய்தவள் என் தங்கை அவளுக்கு ஒரு பிரச்சனை நான் போய் வரேன்னு ஒரு வார்த்தை சொல்லி இருந்தால் போதுமே.

இதில் எதையுமே நீங்கள் சொல்லாத போது நான் என்ன நினைக்கட்டும். முதல் இரவில் சொன்னீங்களே எனக்கு அண்ணன் தங்கை பாசம் புரியாதவளிடம் பேசி பயன் இல்லை என்று,

ஆமா எனக்கு அண்ணன் தங்கை பாசத்தைப் பற்றி தெரியாதுதான். எனக்கு தெரிந்தது எல்லாம் என் அம்மா............. அடுத்து ........... அடுத்து நீங்க நீங்க மட்டும்தான்.

அவள் பேசப் பேச தான் செய்த பிழை அவனுக்கு புரிந்தது. ஆனால் இப்பொழுது அதை நினைத்து என்ன செய்யமுடியும். அதுவும் மினி அழுவது தாங்க முடியாததாக இருந்தது.

"மினி இங்க பார் , நான் செய்தது தப்புதான். உனக்கு என்னோட ஆறுதல் தேவையான நேரத்தில் உன்னுடன் இல்லாமல், உன்னை வேதனைப் படுத்திவிட்டேன்.

அதுமட்டும் இல்லை உன்னோட மனநிலை புரியாமல் , நீ என்னை புரிந்து கொள்ளவேண்டும் என்று நினைத்தது தப்புதான். இதையெல்லாம் மறந்துவிடுடா".

"உங்களால் முடிந்ததா மறக்க, என்னை மன்னிக்க. என்னை தள்ளி வைத்து.............".

"மினி உன்னை நான் தள்ளி வைத்ததே இல்லைடா . நீ ஏன் இப்படியெல்லாம் நினைக்கிறாய்".

"தள்ளி வைக்காமல்தான் என் அம்மா பிரகாஷ் அண்ணனுடன் தங்கப் போகும் விஷயத்தை என்னை கேட்டு செய்தீர்களா".

"ஹையோ மினி உன்கிட்ட கேட்க்காதது தப்புதான். உன் அம்மா சொல்லி இருப்பாங்க என்று எண்ணினேன். அதுமட்டும் இல்லை அப்போநீ என் முகத்தைகூட பார்க்காமல் , பேசாமல், உன்னோட செமஸ்டர் எக்ஸாம்க்கு படிச்சுட்டு இருந்த.

உன்னிடம் பேசவேண்டும் என்று எண்ணிவரும் விஷயங்கள் கூட அறைக்குள் நுழைந்ததும் உன்னை பார்த்ததும் மறந்து போய்டும். அதனால்தான் சொல்லாமல் விட்டுட்டேன்.

ஆனால் அன்றே உன்னிடம் மன்னிப்பு கேட்டுவிட்டேனே. நீ இன்னும் அதையே மனதில் வைத்துக்கொண்டிருந்தால் நான் என்ன செய்யட்டும்".

அதுமட்டுமா அன்னைக்கு டைனிங் ஹால்ல நடந்ததுக்கு ஷிஜியைப் பார்த்து நடித்தேன் என்று சொன்னிங்களே, ஏன் அவளைப் பார்த்து நடிக்கவேண்டிய அவசியம் எனக்கு இல்லை.

உங்களுக்கு வேண்டுமானால் நான் இந்த அறையில் இருக்கும் அனைத்து பொருளை மாதிரி இன்னொரு பொருளாக இருக்கலாம். ஆனால் எனக்கு நீங்க அப்படி இல்லை முதலில் அதை புரிந்து கொள்ளுங்கள்".

"நீ என்னென்னமோ பேசுற கொஞ்சம் எனக்கு புரியிற மாதிரி பேசேன். ரூம்ங்குற பொருள்ங்குற, எனக்கு எதுவும் விளங்கவில்லை. உன் மனசில் எதையோ வைத்துக் கொண்டு வெளியில் வேற பேசுற. மனசை திறந்து சொல்லு. ஒன்று மட்டும் சொல்லுகிறேன் நான் உன்னை மனமார விரும்புகிறேன்.

இதை சொல்ல எனக்கு எந்த தயக்கமும் இல்லை.". 'வாயைதுறந்து எனக்கும் உன்னை பிடித்து இருக்குன்னு

ஒரு வார்த்தை சொல்லுடி' , அவளது பதிலுக்காக காத்திருந்தான்.

"விரும்புறேன்னு சொல்லுறது வாய் வார்த்தையில் மட்டும் இருந்தால் போதாது",

சலித்துப் போனது சுஷினுக்கு. நேரடியா நான் உன்னை விரும்புறேன்னு சொல்லுறேன் அதுக்கு பதில் சொல்லாமல் என்னவோ பேசுறாளே. "வாய் வார்த்தையில் சொல்லாமல் நான் என்னதான் செய்யட்டும்".

"அது எனக்கு எப்படித் தெரியும்".

"உனக்கு வேற என்னதான்டீ தெரியும். மன்னிப்பு கேட்டாச்சு. விளக்கம் சொல்லியாச்சு. உன் காலில் விழுந்து மன்னிப்பு கேக்கவா. இனிமேல் இப்படி நடக்காது என்று உறுதிதான் தரமுடியும். எப்படி என்று இப்பொழுதே நெஞ்சை பிளந்து காட்ட முடியாது".

'இவன் காலில் விழுறானாம் யாருக்குவேண்டும் அது. என் மனசை புரிஞ்சுக்காமல் என்ன பேச்சு பேசுறான்' யோசனையில் கண்கள் கலங்கியது மினிக்கு.

சுஷின் அவள் அழுவதை பார்த்து அவளை நெருங்கினான். கோபத்தில் விலகினாள் மினி. "இப்போ எதுக்கு இப்படி ஆபீஸ் கிளம்புற நேரத்தில் அழுதுட்டு இருக்க".

"அப்போ நான் அழுவது பெருசில்லை நீங்க ஆபீஸ் போற நேரத்துல அழுறதுதான் பெருசா போச்சா".

"இப்படி விதண்டா வாதம் செஞ்சா நான் எதுவும் செய்ய முடியாது".

"ஆமா உங்களால எதுவும் செய்ய முடியாது, எதுவுமே ஏன்னா..............." அழுகையில் விம்மி மேலே எதுவும் சொல்ல முடியவில்லை.

"என்னால் செய்ய முடிவதைதான் நான் செய்ய முடியும். இப்போ நீ எது முடியவில்லை என்று சொல்லுகிறாய்.

சொல்லுவதை தெளிவாகவும் சொல்லாதே. 'பிடிச்சுருக்கான்னும் சொல்லாதே' இதை மனதுக்குள்ளே சொல்லிக் கொண்டான்.

நீ இங்கே இருந்து நல்லா அழு நான் கிளம்புறேன். முடியாதாம், பொருளாம், விலக்கி வைத்திருக்கேனாம் இன்னும் என்னென்ன இருக்கோ எல்லாம் சொல்லி என்னை குழப்பு தெளிவா எதுவும் சொல்லாதே" , சொல்லிவிட்டு ஆத்திரமாக கிளம்பினான்.

"எல்லாம் சரி இப்போ எதுக்கு அழுறன்னுமட்டும் காரணம் சொல்லுவியா இல்லை மாட்டியா".

"அப்போ இவ்வளவுநேரம் நான் சொன்னது காரணமாக தெரியவில்லையா. சொல்லுறேன் கேட்டுக்கோங்க ஷிஜி வாந்தி எடுக்குறா. ஆனால் இங்கே........... போதுமா. காரணம் போதுமா" , சொல்லிவிட்டு நாக்கை கடித்துக் கொண்டாள். ஹையோ என்ன வார்த்தை சொல்லிவிட்டேன். இப்போ என்ன கேட்டு திணறவைக்கப் போறானோ என்று அவனைப் பார்த்தாள். ஆனால் அவன்,

"மினீஈஈஈ........... உன்னை என்ன செய்தால் தகும். அவள் வாந்தி எடுத்தால் நீ எதுக்கு அழணும். உனக்கும் வாந்தி எடுக்கணும்னு ஆசையா இருந்தால், அவள் என்ன சாப்பிட்டான்னு கேட்டு வாங்கி நீயும் சாப்பிட்டு வாந்தி எடு . நான் கிளம்புறேன்".

மினி தலையில் கைவைத்து அமர்ந்துவிட்டாள். இவ்வளவு வெளிப்படியாக சொல்லியும் புரிந்துகொள்ளாமல் செல்கிறானே என்று வேதனைப் பட்டாள்.

ஆனாலும் அவனுடன் மனதில் இருப்பதைஎல்லாம் கொட்டியபின்பு மனம் அமைதியடைந்தது அவளுக்கு.

சே.......... மனுஷன் அவஸ்த்தை புரியாமல் அவ வாந்தி எடுக்குறாளாம். ரெண்டுநாள் நல்லா போனதுமாதிரி இருந்தது இப்போ அழுறதுக்கு இன்னொரு காரணம் கிடைத்து விட்டது. நல்லா அழட்டும். ஆனால் இதில்

அழுவதற்கு என்ன இருக்கிறது என்றுதான் புரியவில்லை அவனுக்கு.

கீழே இறங்கி யாரிடமும் எதுவும் சொல்லாமல், டிபனும் சாப்பிடாமல் அலுவலகம் விரைந்தான். பாதிவழியில் அலைபேசி அழைக்க யார் என்று பார்த்தான்.

பிரகாஷ் அழைக்கவும் ஏதாவது முக்கியமான விஷயமாக இருக்குமென்று காரை ஓரமாக நிறுத்தி பேசினான்.

"ஹல்லோ........... பிரகாஷ் சொல்லுடா ஏதாவது அவசர செய்தியா".

"அதெல்லாம் எதுவுமில்லை சுஷின்............. ஷிஜிக்கு ஒரே வாந்தி , அவளை ஹோச்பிடல் கூட்டி போகணும் அதான் இன்னைக்கு ஆபீஸ்க்கு மதியம் வாறேன் சரியா".

"ஷிஜிக்கு பூட்(food) பாய்சன் ஆயிடுச்சா என்ன காலையில் மினியும் சொன்னா 'சண்டைபோட்டு அழுதா' மனதுக்குள் சொல்லிக்கொண்டு, ரொம்ப முடியலையா நானும் வரவா".

அவனது பேச்சில் குழம்பினான் பிரகாஷ், "சுஷின் உனக்கு விஷயமே தெரியாதா, இது அந்த வாந்தி இல்லை".

"பிரகாஷ் என்கிட்டே அடி வாங்கப் போற, வாந்தியில் என்ன அந்தவாந்தி வேற வாந்தி , பேசுனதில் எனக்கு வாந்திவரும் போல இருக்கு. ஒழுங்கா சொல்லுடா".

"சுஷின், நான் அப்பா ஆகபோறேன்............ ஷிஜி அம்மா ஆகப் போறா........... அந்த வாந்திதான் இது புரியுதா".

சுஷினுக்கு தன் காதுகளையே நம்ப முடியவில்லை. "பிரகாஷ்.......... பிரகாஷ்........... கன்க்ராட்ஸ்டா........... நீ இன்னைக்கு ஆபீஸ் வரவே வேண்டாம். லீவ் போட்டு வெளியே போ. ஹோச்பிடல் போற அம்மா வாறாங்களா. தனியா போகாதே அம்மாவையும் அழைத்துப் போ.

வேற.........." . "சுஷின் நான் பாத்துக்கறேன் நீ ரொம்ப எக்சைட் ஆகாமல் பாத்து போ. சுலோ அம்மா வறாங்க

நாங்க இன்னும் கொஞ்ச நேரத்தில் கிளம்பிடுவோம்.

அப்புறம் அம்மா ஏதோ கோவில்ல வேண்டுதல் வச்சாங்களாம் அதனால் எல்லோரும் சேர்ந்து போயிட்டு சாயங்காலம்தான் வருவோம் சரியா".

"அப்போ மதியம் ஆபீஸ் வாரேன்னு சொன்னது பொய்யா. சரி பார்த்து போயிட்டு வாங்க". சொல்லிவிட்டு அழைப்பை துண்டித்தான்.

காரை எடுத்துக் கொண்டு கிளம்பினான். காலையில் மினி சொன்ன "ஷிஜி வாந்தி எடுக்குறாள் . ஆனால் இங்கே............" என்ற வாசகம் காதில் ஒலித்தது.

காரை ஒரே அழுத்தில் பிரேக் போட்டு நிறுத்தினான். பின்னால் வந்தவன் திட்டிவிட்டு போனது காதில் விழவில்லை.

அவள் சொன்னதின் அர்த்தம் நொடியில் விளங்கியது. சே இப்படிஒரு முட்டாளா இருந்து இருக்கின்றேனே. உடனே மினியிடம் போக துடித்தான். ஆனால் இன்று பிரகாஷும் இல்லை எனவே வேறு வழியில்லாமல் ஆபீஸ் சென்றான்.

ஒருமணிநேரம் தேவையான முக்கிய கோப்புக்களில் செக் களில் சைன் செய்தான். ஆனால் சிந்தனை மினியை சுற்றியே இருந்தது.

நேரம் 10.30 தை தாண்டியதும் இன்னும் முடியாது என்று தோன்ற, ஹேமந்திடம் சில பொறுப்புகளை கொடுத்துவிட்டு ஆபீஸை பார்த்துக்கொள்ளவும் சொல்லிவிட்டு வீட்டிற்கு விரைந்தான்.

சுஷின் செல்லும் வேகம் பார்த்து சுந்தரமே மிரண்டுபோனார். அடுத்த பதினைந்தாவது நிமிடம் வீட்டில் இருந்தான்.

அனைவரும் வெளியில் சென்றிருந்தனர். வேலைக் காரர்கள் வேலை செய்து கொண்டிருந்தனர். அவன் காரின்

வேகம் பார்த்து மிரண்டு பார்த்த அவர்களை அலட்ச்சியம் செய்து அறையின் முன் மூச்சுவாங்க நின்றான்.

அறை உள்பக்கம் தாழ் போட்டிருக்குமோ என்று தோன்ற மெதுவாக தள்ளினான். தாழிடாத கதவு உடனே திறந்து கொண்டது.

உள்ளே நுழைந்து கதவை தாழிட்டான். மினியை கண்கள் தேடின, அவள் நின்ற கோலத்தில் அவனது ஆண்மை முறுக்கேறியது. மினி அவனது வரவை பார்க்கவில்லை. தன் போக்கில் கண்ணாடியின் முன்பு நின்று தலையை துவட்டிக் கொண்டிருந்தாள்.

அவளது உடலை சுற்றி பிங்க் நிற பூ துவாலை சுற்றிக் கொண்டிருந்தது. மார்பில் இருந்து தொடை வரையே இருந்தது . கண்ணாடியில் நிழலாடுவது தெரிய யார் என்று கண்ணாடி வழியே பார்த்தாள்.

முதலில் கனவாக இருக்கும் என்று எண்ணியவள். அந்த உருவம் நெருங்கி வருவதை உணர்ந்தாள். தான் நிற்கும் கோலம் புரிய மனம் வேகமாக அடித்துக் கொண்டது.

அம்மா வீட்டில் இருந்த பழக்கம் இங்குவந்ததும் மாறிப் போனது. ஆனால் இன்று யாரும் இல்லை வேலைக் காரர்கள் மாடிக்கு வருவதே இல்லை என்ற தைரியத்தில் தான் செய்த முட்டாள்தனம் புரிந்தது.

சுஷின் தன் கோட்டையும் , டை யையும் நிதானமாக களட்டி வீசிவிட்டு சட்டையின் காலர் பட்டனையும், கை பட்டனையும் கழற்றியவண்ணம் அவளை நெருங்கினான்.

மினி அசையவும் இல்லை அவன் புறம் திரும்பவும் இல்லை. சுஷின் நெருங்கிவந்து அவள் ஈரக் கூந்தலில் வாசம் பிடித்தான். கைகள் அவள் வயிற்றைச் சுற்றி படர்ந்தன. மினி அவனுடன் இழைந்தாள் . அவனது சூடான இதழ்கள் அவளது கழுத்தில் புதைந்தது.

கைகள் அவள் மேனியில் அலைய முற்ப்பட்டது. அவன் கைகளை முன்னேறவிடாமல் தடுத்தாள் மினி. ஆனால் தடுக்க இயலாமல் அவனது செய்கைகளுக்கு துணை போனது கைகள்.

இருவரின் உணர்வுகளும் கொந்தளித்தன. மினி அவன்புறம் திரும்பி அவன் மார்புடன் ஒன்றினாள். அவளை இறுக்கத் தழுவிக் கொண்டான்.

அவனது இதழ்கள் அவளது முகத்தில் ஒரு வேகத்துடன் ஊர்வலம் நடத்தின. குளிரில் நடுங்கிய அவள் இதழ்களை தன் இதழ்களால் சுடேற்றினான் . மெதுவாக அவளை விலக்கினான்.

மினியின் முகம் தாமரை என சிவந்திருந்தது. சுஷினின் பார்வை அவள் மேனியில் புரண்டது. "நான் டிரஸ் மாத்திட்டு வாறேன்". அவனிடமிருந்து தப்ப வழி கண்டாள் மினி.

"நாம் செய்யபோகும் வேலைக்கு இந்த டிரஸ் ஸே அதிகம்" , அவள் காதில் ரகசியம் ஓதினான். மினி மிரண்டு பின்வாங்கினாள். கைகள் டவல்லின் முடிச்சில் பதிந்தது.

"பாதுகாப்பு பலம்மா இருக்கே", கேலிசெய்தபடி நெருங்கினான் சுஷின். "தேவ்........... வேண்டாம்........ நான் இப்போதான் குளித்தேன்".

"பாத்தாலே தெரியுதே, இப்போதான் குளிச்சன்னு........... வாசனைவேற தூக்குது. அவளது கழுத்துவளைவில் மீண்டும் முகம் புதைத்தான்.

இப்பொழுது அவனது செய்கையில் வேகம் கூடி இருந்தது. அவளது கைகள் டவல் லின் முடிச்சை கெட்டியாக பிடித்துக் கொண்டன. அவளது கைகள் நடுங்குவது அவன் கைகளில் உணர்ந்தான்.

அவளது நடுக்கம் அவனுக்கு கலக்கத்தை கொடுத்தது. அவளது காதில் மெதுவாக கேட்டான். "வேண்டாமா.............."

, அவனது குரலில் வழிந்த ஏக்கம் , கண்களில் தெரிந்த தாபம் மினியின் எதிர்ப்பை நடுக்கத்தை நீக்கியது.

அவளது கலக்கமும் நடுக்கமும் புரிந்து ஒரு பூவை கையாளும் விதத்தில் அவளை கையாண்டான். மினியின் தயக்கமும் கலக்கமும் மெதுவாக விலகியது. அவனுடன் இரண்டறக் கலந்தால் அவள்.

தன் கணவனின் ஆண்மையை மென்மையை ஆழ்ந்து அனுபவித்தாள் மினி. தன்னவளின் மென்மையை, காதலை உணர்ந்தான் சுஷின்.

தன் தேவை முடிந்ததும் சுஷினுக்கு நிறைய சந்தேகங்கள் எழுந்தன. மினியை தன் மார்பில் அணைத்துக் கொண்டு கேட்டான்.

"மின் நான் உங்க அம்மாகூட உன்கிட்ட பிரகாஷ் வீட்டில் அவனுடனே தங்கப் போவதா சொல்லலையா ஏன்".

"அது............. ", சொல்லாமல் தயங்கினாள் மினி.

"என்ன சொல்லு எதுக்கு தயங்குற".

"இல்ல அன்னைக்கு அம்மா வீட்டில் முதல்ராத்திரி நடக்காததை அம்மா கண்டுபுடிச்சுட்டாங்க என்கிட்டே கேட்டாங்க நான் துடுக்குத்தனமா தெரியாமல் உளறிட்டேன். ஒரே அறை ".

"என்னது உன்னை அடிச்சாங்களா", என்னமோ அவள் இப்பொழுதுதான் அடி வாங்கியதைப் போல அவளது கன்னத்தில் இதழ் பதித்தான்.

"அது நடந்து ஆறு மாசம் ஆகுது இப்போ இதுதான் சாக்குன்னு.......... , அதுமட்டும் இல்லை . என்னைக்கு உன் புருசன்கூட வாழுறியோ அன்னைக்கு என்கிட்டே பேசு அதுவரை என்கிட்டே பேசக் கூடாதுன்னு சொல்லிட்டாங்க.

நான் பேசினாலும் பேசவே இல்லை . அதனால்தான் எனக்கு தெரியாது".

"அப்போவே அத்தைக்கு தெரியுமா. அதை வைத்துதான் அந்த விவேக் விளையாடப் பாத்தானா. நானும் நமக்குள் நடந்தது எப்படி அவனுக்கு தெரியும் என்று நினைச்சேன்.

அவனெல்லாம் உன் மாமன், அவன் உன் மாமாங்குற ஒரே காரணத்துக்காகதான் அவனை உயிரோட விட்டேன்".

"அப்படியெல்லாம் சொல்லாதீங்க , அவரால்தான் நான் உங்களை விரும்பியதையும் என்னோட காதலையும் புரிந்துகொண்டேன்".

"என்ன சொல்லுற நிலா".

அன்று அவன் நடந்துகொண்டது தான் அவனை அடித்தது. அந்தநிமிடம் சுஷினை விரும்பியதை புரிந்துகொண்டது என அனைத்தையுமே சொன்னாள்.

ஆனாலும் தன் தாய் ஹோச்பிடலில் இருந்தபோது அவனை, அவனது அருகாமையை எதிர் பார்த்தது , ஏங்கியது என அனைத்தையுமே சொன்னாள். அன்று அவனை சுபாவுடன் பார்த்தபோது தான் உடைந்து போனது என அனைத்தையுமே சொன்னாள்.

சுஷின் , மினியை இறுக்க அணைத்துக் கொண்டான். "என் செல்லத்தை ரொம்ப தவிக்க விட்டுட்டேனா. இனிமேல் எதையுமே உன்னிடம் இருந்து மறைக்க விருப்பம் இல்லை.

அன்று என்ன நடந்தது என்று உனக்கு சொல்லுகிறேன். அனைத்தையும் சொல்லி முடித்தான் அவன் சொல்லி முடித்ததும் மினி, "உங்க இடத்தில் யார் இருந்தாலும் இவ்வளவுதூரம் செய்து இருப்பாங்களான்னு சொல்லியிருக்க முடியாது.

நீங்கதான் சுபாவின் வாழ்க்கையை காப்பாற்றி விட்டிங்க. என் தேவ் எதை செய்தாலும் அதில் ஒரு காரணம் இருக்கும் என்று நான் இப்போ புரிஞ்சுகிட்டேங்க.

"ஆனாலும் மினி என்னைநீ அப்போவே லவ் பண்ணி இருக்க இதுதெரியாமல் இவ்வளவுநாள் வேஸ்ட் பண்ணிட்டோமே.

இப்போ அதையெல்லாம் ஈடுகட்டணும்".

"நீங்க என்னை வெறுத்துட்டிங்க இல்ல. கொஞ்ச நாள்".

"யாரு சொன்னா, என்னைக்கு உன்னை பார்த்தேனோ அன்று முதல் இந்த நிமிடம் வரை உன்னை காதலிக்கிறேன். அந்த காதல் குறையவே இல்லை.

நடுவில் கொஞ்சநாள் விலக காரணம் என்னை கட்டுப்படுத்த முடியாமல்தான். எங்கே நெருங்கினால் உன் அனுமதி இல்லாமலேயே உன்னை ஆண்டுவிடுவேனோ என்ற தவிப்புதான் காரணம்.

எப்போ உன்னோட காதலை சொல்லுவியோ அந்த நிமிடம் என் காதலை வெளிப்படுத்தலாம் என்று எண்ணினேன்டா".

"நான் எப்போ என் காதலை உணர்ந்தேனோ அப்போவே.............".

"அப்போவே சொல்லு..............".

"நீங்க நெருங்கினால் விலகக் கூடாதுன்னு முடிவு செஞ்சு இருந்தேன்", சொல்லிவிட்டு அவனுள் புதைந்தாள்.

"நிலா............. நிலா............. இவ்வளவுநாள் வீணாக்கிட்டனே............ இனிமேல் நீ சொல்லவே வேண்டாம். நானே............

சிரித்தபடி அவளை அணைத்தான். அவர்களின் தேவைகள் இன்னும் துவங்கியது.

இனிய உதயம் துவங்கியது அவர்கள் வாழ்வில்.

சரியாக ஷிஜிக்கு ஒன்பது மாதம் முடியும் அன்று காலையில், "அம்மா......." என்ற அலறலில் சுஷினின் வீடே

குலுங்கியது.

மினியின் காதை அந்த சத்தம் தீண்டியதும் திடுக்கிட்டு விழித்தாள். "என்னங்க ஷிஜியோட சத்தம் கேக்குதுங்க எழுந்துபோய் என்னன்னு பாருங்க".

"கதவு பூட்டிதானே இருக்கு யாரும் வர மாட்டாங்க. நீ பேசாமல் இரு", அவனது வேலையை துவங்கினான் அவன்.

அந்தவேளையில் கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. மினி, "போச்சு நீங்க போய் கதவை திறங்க".

"ஏன் நீ போய் திற".

"என் டிரஸ்ஸை கலைச்சு குட்டி சுவர் ஆக்கிட்டு பேசுறதைப் பார்". துணிகளை எடுத்துக் கொண்டு பாத்ரூமில் புகுந்துகொண்டாள். எழுந்து செல்லும்போதே தலை சுற்றியது. அதை கவனிக்காமல் போனாள் மினி.

சுஷின் அவள் சென்றதும் எழுந்து கதவைத் திறந்தான். சுலோ ஷிஜிக்கு வலி வந்துவிட்டதாக சொல்ல, அனைவரும் வேகமாக கிளம்பி ஹோச்பிடல் சென்றனர்.

அங்கு அவளுக்கு பிரகாஷின் விருப்பப்படி அழகான தேவதை பிறந்தாள். ஷிஜியை அறைக்கு மாற்றும்வரை யாரும் எதுவும் சாப்பிடவில்லை.

எனவே சுந்தரம் சென்று காபி வாங்கிவந்தார். அனைவரும் அருந்தினர். மினிக்கு காபி குடித்தவுடன் வயிற்றைப் புரட்டிக் கொண்டு வாந்தி வந்தது.

ஓடிப்போய் பாத்ரூமில் வாந்தி எடுத்தாள். சுஷின் அவளை தாங்கிக் கொண்டான். "என்ன மினி காபி பிடிக்கலையா. நல்லாதானே இருக்கு அப்புறம் ஏன்".

மீனாட்சி மினியின் அருகில் சென்று, "நாள் தள்ளி போய் இருக்கா" என்று கேட்க மினி ஆம் என்று தலை அசைத்தாள்.

உடனே மீனாட்சி, "சுஷின் உங்க பொண்டாட்டிக்கு பிடிச்சுருக்கு, ஆனா உங்க புள்ளைக்குதான் பிடிக்கலை போல".

அவர் சொன்னதும் அனைவரும் சுஷினுக்கும் மினிக்கும் வாழ்த்து சொல்ல, மினி சுஷினைப் பார்க்க, சுஷினின் உதடுகள் அவளிடம் முணுமுணுத்தன , "ஐ லவ் யு டா ".

மினி வெட்கத்துடன் திரும்பச் சொன்னாள்............ "நானும்..............".

அவர்களுக்கும் ஒரு குட்டி சுஷினோ, குட்டி மினியோ வந்து அவர்கள் வாழ்வை மேலும் அழகாக்குவாள்.

நாமும் நம் வாழ்த்துக்களை சொல்வோம்.

சுபம்.

நன்றிகளுடன்,

உங்கள் அன்புத் தோழி,